அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

# கலைஞரின் சட்டமன்ற உரைகள்

## (பாகம் - 1)



அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

# கலைஞரின் சட்டமன்ற உரைகள்

(பாகம் - 1)

வெளியீடு :
**தமிழ்க்கனி பதிப்பகம்**
சென்னை - 600 004

விற்பனை உரிமை :
**பூம்புகார் பதிப்பகம்**
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

C100238
C014002

விலை ரூ. 300/-

894.8115
TAM

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

# என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !'' என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்'' என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது

நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான ''திருக்குவளை'' உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை ''குளித்தலை தொகுதி''யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றி பெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர்

திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் ''அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி''யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர்!

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் -

இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங்களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



# பதிப்புரை

**கா**லத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

**பொன்னர் சங்கர்**

**தொல்காப்பியப் பூங்கா**

**தாய் காவியம்**

**முத்துக்குளியல்**

**சிந்தனையும் செயலும்**

**காலப்பேழையும் கவிதைச் சாவியும்**

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

**ஆளுநர் உரைமீது உரைகள்**

**தொழில்துறை பற்றி உரைகள்**

**காவல்துறை பற்றி உரைகள்**

**நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்**

**காவிரி பிரச்சினை மீது உரைகள்**

**ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்**

**தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்**

**அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்**

**மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்**

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும்

கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

**– தமிழ்க்கனி பதிப்பகத்தார்**

# பொருளடக்கம்


| உரை எண். | தேதி | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | 29.10.1962 | சீன ஆக்கிரமிப்பு | 17 |
| 2 | 30.30.1963 | தமிழ் மொழி பரப்புதல் | 28 |
| 3. | 08.08.1963 | மொழிசட்டம், இந்தி ஆதிக்கம் | 31 |
| 4. | 20.11.1963 | உள்ளாட்சித் தேர்தல்கள் | 40 |
| 5. | 21.11.1963 | திருவள்ளுவர் தினம் அரசு விடுமுறை | 45 |
| 6. | 29.07.1965 | கல்லூரிகளில் தமிழை பாடமொழியாக்குதல் | 52 |
| 7. | 50.08.1965 | அரசியலில் மாணவர்கள் ஈடுபடுவது குறித்து | 57 |
| 8. | 31.03.1969 | மத்திய அரசிடம் இருந்து கோதுமை பெறுதல் | 61 |
| 9. | 03.04.1971 | கிழக்கு பாகிஸ்தான் கிளர்ச்சி | 81 |
| 10. | 06.12.1971 | இந்தியா - பாகிஸ்தான் போர் | 84 |
| 11. | 06.12.1971 | பங்களா தேசம் அங்கீகரிப்பு | 91 |
| 12. | 17.12.1971 | வங்க தேசம் பாகிஸ்தான் யுத்தம் | 98 |
| 13. | 11.08.1973 | விலைவாசி உயர்வு | 108 |
| 14. | 19.11.1973 | நெய்வேலி 2வது சுரங்கத் திட்டம் | 115 |
| 15. | 15.04.1974 | அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டத்திருத்தம் | 119 |
| 16. | 16.04.1974 | கூட்டாட்சி பற்றிய சட்டத் திருத்தம் | 124 |

| | | | |
|---|---|---|---|
| 17. | 20.04.1974 | மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி | 136 |
| 18. | 21.08.1974 | கச்சத் தீவு பிரச்சினை | 190 |
| 19. | 28.08.1974 | குதிரைப் பந்தயம் | 206 |
| 20. | 11.08.1980 | பினாமி நில ஒழிப்பு | 211 |
| 21. | 21.08.1981 | இலங்கைத் தமிழர் பிரச்சினை | 222 |
| 22. | 29.03.1983 | மாநில சுயாட்சித் தீர்மானம் | 226 |
| 23. | 13.05.1986 | சட்டமன்ற மேலவை | 248 |
| 24. | 12.05.1989 | பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு | 258 |
| 25. | 25.04.1990 | காவிரி நதி நீர் பங்கீடு பிரச்சினை | 271 |
| 26. | 21.08.1990 | மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அமல் | 278 |
| 27. | 26.07.1996 | சட்டமன்ற மேலவை கொண்டு வருதல் | 298 |
| 28. | 31.08.1996 | மதராஸ் என்பதற்கு சென்னை என பெயர் மாற்றம் | 310 |
| 29. | 22.02.1999 | நாடாளுமன்ற தொகுதிகள் குறைக்காமலிருக்க சட்டத் திருத்தம் தேவை | 314 |
| 30. | 14.11.1957 | கை ஏர் வாரம், மாட்டு ஏர் வாரம் | 323 |
| 31. | 14.11.1957 | துறைமுகங்களை வளர்த்தல் | 328 |
| 32. | 29.08.1961 | நில உச்ச வரம்பு | 331 |
| 33. | 04.05.1962 | வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டம் | 338 |
| 34. | 01.11.1962 | உள்ளாட்சித் தேர்தல் | 340 |
| 35. | 27.02.1963 | நிலவரி, நீர் வரி உயர்த்தும் மசோதா | 342 |

| | | | |
|---|---|---|---|
| 36. | 27.02.1963 | விவசாயிகளுக்கு வரி விலக்கு | 346 |
| 37. | 07.08.1963 | அரசியல் சட்டத் திருத்தம் | 349 |
| 38. | 22.01.1964 | உள்ளாட்சி உறுப்பினர்கள் ஏற்கவேண்டிய உறுதிமொழி | 364 |
| 39. | 17.10.1964 | ஆட்சி மொழி தமிழ் | 367 |
| 40. | 04.08.1965 | மாநகராட்சி சட்டத் திருத்த மசோதா | 374 |
| 41. | 01.02.1966 | கல்லூரிகளில் தமிழ் பாட மொழி | 381 |
| 42. | 28.06.1967 | மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு மசோதா | 384 |
| 43. | 09.04.1970 | நில உச்ச வரம்பு மசோதா | 395 |
| 44. | 23.10.1971 | மது விலக்குப் பிரச்சனை | 402 |
| 45. | 16.04.1975 | தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு | 405 |
| 46. | 07.11.1975 | ஓய்வூதியத் திட்டம் | 411 |
| 47. | 13.03.1978 | 44வது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஒப்புதல் | 415 |
| 48. | 27.04.1983 | நுழைவு வரி | 425 |
| 49. | 02.11.1989 | உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் | 442 |
| 50. | 06.05.1989 | பெண்களுக்குச் சொத்துரிமை மசோதா | 458 |
| 51. | 01.11.1989 | திரைப்படங்களுக்கான கேளிக்கை வரி | 464 |
| 52. | 17.05.1999 | உள்ளாட்சிகளில் நியமனங்கள் | 473 |

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

# கலைஞரின்
# சட்டமன்ற உரைகள்

# அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது கலைஞரின் சட்டமன்ற உரைகள்

## அரசு தீர்மானங்கள்

### சீனஆக்கிரமிப்பு

**உரை : 1** **நாள் : 29 .10.1962**

**கலைஞர் மு. கருணாநிதி :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வெளியிடுவதற்கு நான் விரும்புகிறேன். இன்றையதினம் எழுந்துள்ள பிரச்சனையில் இந்திய துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையிலே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் இணைந்து நின்று, இந்த துணைகண்டத்தைப் பாதுகாப்பதற்கு, கட்சி மாச்சரியங்களை மறந்து தோளோடு தோள் நின்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்கின்ற அளவிற்கு எழுச்சி பொங்கி நிற்கிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில், எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளரும், எங்களுடைய அருமைத் தலைவருமான அண்ணா அவர்கள் சென்ற 24-ம் தேதியன்று வேலூர் சிறையிலிருந்து மீண்டு வந்த அன்றைய தினத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சீன நாடு இந்திய துணைக் கண்டத்திலே ஆக்கிரமிப்பு நடத்துவதுபற்றியும், அதை

அகற்றுவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஒத்துழைப்பு எப்படியிருக்கும் என்பதைப் பற்றியும், கம்யூனிஸ்டு சீனாவினுடைய போக்கிலே இருக்கிற விபரீதங்கள் குறித்தும், கழகத்தினர் மாத்திரமல்ல, நாட்டிற்குரியவர் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டிய தன்மையைக் குறித்தும் விளக்கமாக பேசியதோடு அல்லாமல், நீண்டதோர் அறிக்கையும் கழகத்தின் சார்பில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் நம்முடைய விரோதிகளாகத் தங்களை ஆக்கிக் கொண்ட சீன கம்யூனிஸ்டுகள் ஒரு காலத்திலே நம்மால் சதோதரர்களாகக் கருதப்பட்டவர்கள், நம்முடைய நட்புக்கு ஏற்றவர்கள் என்று நம்பப்பட்டவர்கள். 1954-ம் ஆண்டு நடைபெற்ற பாண்டுங் மகாநாட்டில் எழுந்த ஒப்பந்தங்களை அந்தப் பண்பாட்டை நிறைவேற்றும் வகையிலே, இந்தியத் துணைக்கண்டம் திபெத்தின் மீது உள்ள தனது உரிமைகளை யெல்லாம் பெருந்தன்மையோடு சீன சர்க்காருக்கு விட்டுக் கொடுத்தது. இந்தப் பெருந்தன்மைக்குக் கிடைத்த பரிசு என்ன வென்றால், அடுத்த சில நாட்களில் ஏறத்தாழ 3,000 மைல்களுக்கு மேல் சீனர்கள் தம்முடைய எல்லைக் கோட்டைத் தாண்டி பிரவேசித்ததும், அந்த நேரத்திலே இந்திய போலீஸ் படைக் குழு ஒன்று படுகொலை செய்யப்பட்டதும்தான். அதற்குப்பின்கூட, திபெத்தை சீனாவுக்குத் தருவதற்கு சம்மதித்து, கம்யூனிஸ்டு சீன சர்க்காருடைய போர்ப்படைகள் நம்முடைய எல்லையிலே எந்த நேரத்திலும் தங்களுடைய தாக்குதலை தொடங்குமோ என்று அச்சுறுத்தப்பட்ட காலத்திலும் கூட, இந்திய துணைக்கண்டத்து சர்க்கார் சார்பில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தான் உலகத்திற்கு போதித்து வந்த இந்திய துணைக்கண்ட வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் , சமாதானம், சமாதானம் என்ற முறையில், அமைதி வழியில், இந்த நிலைமையை சமாளிப்பதற்கு உள்ள எல்லா கண்யமான வழிகளையும் கையாண்டு பார்த்து முடிந்த பிறகுதான், இன்றையதினம் இந்த நிலைமையை நாம் சமாளித்தே தீருவது, அதற்கு இந்திய துணைக்கண்டத்தில் உள்ள எல்லா மக்களின் ஆதரவைப் பெறுவது என்ற கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

எல்லைத் தகராறின் தோற்றம், உணர்ச்சி, அவர்களுடைய நம்ப வைத்து கழுத்தை அறுத்த தன்மை, இவைகளையெல்லாம்

விரித்தால் பெருகும். ஆனால், இந்த நேரத்தில் ஒன்றிரண்டை மாத்திரம் நாம் ஞாபகம் வைத்துக் கொள்ளுவது நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால், சீனர்கள் இந்திய துணைக் கண்டத்தில் ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கிறார்களா அல்லவா என்ற கருத்துகூட நாட்டிலே பரப்பப்படுகிற நேரத்தில் நாமெல்லாம் அதில் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். முதன்முதலாக 1951-ஆம் ஆண்டிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய சர்க்காரின் சார்பாக கீழ்க்கண்ட பிரச்சினை ஒன்றை சீன சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பரம்பரை இந்தியப் பகுதிகள் பலவற்றை சீனப் பகுதிகளாகக் குறிப்பிட்டு சீன நாட்டில் வெளியாகியிருக்கும் தேசப் படங்கள் காட்டுகின்றன என்கின்ற அந்தச் செய்தியை சீன சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். ஆனால், உறுதியான விளக்கம் என்னவென்றால், ''பழைய ஏற்பாட்டிலே அமைந்த ஆட்சியாளர்கள் அப்படி ஒரு தவறான படத்தை பிரசுரித் திருக்கக்கூடும். எங்களுக்கு இருக்கிற அவசர அவசியமான வேலைகள் முடிந்த பிறகு அந்த தேசப் படத்தை நாங்கள் சரிசெய்து, ஒழுங்கான எல்லைக்கோட்டை வகுக்கிறோம்'' என்பதுதான். ஆனால், இப்பொழுது நிலைமை வளர்ந்தி ருப்பதை எண்ணிப்பார்த்தோமானால், அந்தத் தேசப்படம்பற்றி இந்திய துணைக்கண்டத்து சர்க்காரின் 'ரீ-ஆக்ஷன்' எதிரொலி எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக முன்னேற்பாடாக செய்யப்பட்ட திட்டமோ அது என்று ஐயுறும் அளவுக்கு இருக்கிறது. அன்றையதினம் தவறான தேசப்படம் என்று இந்திய சர்க்காரினால் சுட்டிக்காட்டப்பட்ட அந்தப் படத்தில் குறிப்பிட்டிருக்கிற பகுதிகளையெல்லாம் ஆக்கிரமிக்கிற வேலையில் சீன நாட்டினர் இன்றையதினம் முழு மூச்சாக, மூர்க்கத்தனத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த தேசப்படத்தை நாம் உற்றுப் பார்த்தால், ஏறத்தாழ 40,000 சதுரமைல் இந்தியப் பகுதிகளுக்கு கம்யூனிஸ்டு சீனா உரிமை கொண்டாடுகிறது என்று அர்த்தம். அஸாமில் ''டாரங் டிவிஷன்'' என்று அழைக்கப்படுகிற இடம் அவர்கள் வெளியிட்டிருக்கிற தேசப் படத்தில் அவர்களுக்கு உரிமையாகிறது. உத்திரப் பிரதேசத்தில் சுமார் 220 மைல் நீளம் அவர்களுடைய வசத்திலே இருக்கிற திபெத் பகுதியின் எல்லையை ஒட்டியிருக்கிறது. அதிலேகூட பல

சதுர மைல்களை சீனா தனக்கு உரிமை கொண்டாடுகிறது என்று அர்த்தம், அந்தத் தேசப்படத்தை அங்கீகரித்தால் பஞ்சாபில் சுமார் 70 மைல் நீளம் திபெத் எல்லையை ஒட்டியிருக்கிறது. சீனர்கள் இங்கும் ஒரு கிராமத்திற்கு உரிமை கொண்டாடுவதாக ஆகிறது. அந்த தேசப் படத்தை ஆதரித்தால், காஷ்மீரில் வட பகுதியிலும் சீனா உரிமை கொண்டாடுவதாக அமைகிறது. அப்படிப்பட்ட தேசப்படம், அதைத் திருத்தப் போகிறோம் என்று சொல்லப்பட்ட அந்த தேசப்படம், இன்றையதினம் அவர்களுடைய ஆக்கிரமிப்பை விளக்குவதற்கான படமாக அமைந்திருக்கிறது. சீன படையெடுப்பு, அதனுடைய வேகம், இவைகளை உற்று நோக்கினால், அவர்கள் உரிமை கொண்டாடும் அந்தப் பகுதிகளையெல்லாம் அவர்கள் ஆக்கிரமிக்கிற நிலை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தப் படையெடுப்பின் நோக்கம் என்ன? ஹிமாசலப் பிரதேசம் அத்தனையும் தங்கள் வசத்திலே வைத்துக்கொள்ளலாம் என்று நோக்கமா? ஒரு வேளை இருக்கலாம். ஆனால், அதுமாத்திரம் நோக்கம் அல்ல என்று இந்த மன்றத்தில் நான் குறிப்பிடுகிறேன். ஒரு கம்யூனிஸ்டு நாடு இன்னொரு கம்யூனிஸ்டு அல்லாத ஒரு நாட்டை நேரடியாக நெருக்கமாக அணுகி அமர்ந்திருந்தால்தான், அந்த நாட்டில் கம்யூனிஸத்தை பரப்ப முடியும் என்று சீன நாட்டுத் தலைவர் மா-சே-துங் தத்துவம் கூறுகிறது. இந்திய துணைக் கண்டத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டி நேரடியாக நெருக்கத்தை இந்த துணைக் கண்டத்தோடு ஏற்படுத்திக் கொள்ளுகிற தற்போதைய நிலைமையையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சர்வாதிகாரக் கொள்கையை ஒரு பெரிய ஜனநாயக நாட்டில் வலியுறுத்துவதற்காக மூர்த்தண்யத்துடன் முயற்சி நடைபெறுகிறது என்றுதான் நாம் கருதவேண்டும். இந்தப் போராட்டம் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் நடைபெறுகிற ஆக்கிரமிப்புப் போராட்டம் அல்ல. இது எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் நேற்று கடற்கரை கூட்டத்தில் அறிவித்ததுபோல் ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் நடைபெறுகிற போராட்டம். குற்றம் குறைகள் இருந்தாலும், தவறுகள் இருந்தாலும் அவைகளைத் திருத்திக்கொள்கிற உரிமை ஜனநாயகத்தில் உண்டு. ஆனால், சர்வாதிகாரத்தில் எந்தக் குற்றம் குறைகளை எடுத்துச் சொன்னாலும், சொன்னவர் தலை தப்பாது என்கின்ற அளவுக்கு வன்முறை உலகத்திலே பல நாடுகளில்

நிறைவேற்றப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அப்படிப்பட்ட சர்வாதிகாரத்திற்கும், ஜனநாயகத்திற்கும், திருத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலையிலே அமைந்திருக்கிற ஜனநாயகத்திற்கும் நடைபெறக்கூடிய போராட்டம் இது. பல அரசியல் கட்சிகளின் கொள்கை ரீதியிலே பார்க்கிற நேரத்தில் இன்னென்ன உரிமைகள் இந்திய துணைக் கண்டத்திலே பறிக்கப் படுகின்றன என்று நாம் சொன்னாலும், ஜனநாயகப் போர்வையிலே, அப்படிப் பறிக்கின்றவர்கள் அந்த இடத்திலிருந்து மாற்றப்பட்டு மக்களுக்குத் தேவையான மற்றவர்கள் அமரக்கூடிய சூழ்நிலை ஜனநாயகத்தில் அமைந்திருக்கிறது. ஆனால் சர்வாதிகாரத்தில் அப்படி இல்லை. தனிப்பட்டவர்களுடைய இஷ்டப்படி நடைபெறும் ஆட்சி அப்படிப்பட்ட ஆட்சிக்கும், ஒரு ஜனநாயக நாட்டு ஆட்சிக்கும் நடைபெறுகிற போராட்டம் என்று நாம் இதை கருதுவோமானால், ஜனநாயகம் தோற்றுப்போனால் என்ன நிலைமை ஆகும் என்று நாம் ஐயம்திரிபுற எண்ணிப் பார்க்க வேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் ஏற்பட்டிருக்கிற பெரிய போராட்டத்தில், ஜனநாயகம் இறுதியிலே வெல்லும் என்ற நம்பிக்கையோடுதான் இன்றையதினம் நமக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புகளைப்பற்றிக் கூட ஆறுதல் அடையவேண்டும். அன்றைய தினம் அடால்ப் ஹிட்லரும், முஸோலினியும் அகில உலகத்தை கபளீகரம் செய்த தங்களுடைய அகண்ட வாய்க்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு துப்பாக்கி எடுத்துப் புறப்பட்ட நேரத்தில் ''முன்னேறுகிறார்கள், முன்னேறுகிறார்கள்'' என்று உலகத்துச் செய்திகள் அலறிக் கொண்டிருந்தன. ஆனால், இறுதி வெற்றி ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். இறுதி வெற்றி ஹிட்லர், முஸோலினியைக்கூட வீழ்த்தக்கூடிய வெற்றியாக அமைந்தது என்ற நம்பிக்கையோடு, இன்றைய தினம் நம்மை எதிர்த்துவருகிற, நம்முடைய எல்லைக் கோட்டைத் தாண்டி வருகிற, இந்திய துணைக்கண்டத்தை விழுங்கிக்கொள்ள ஓடோடி வருகிற கம்யூனிஸ்டு சீனாவுக்கு பெரிய தோல்வியை, இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்போடு நிச்சயம் தரும், தரும் என்ற நம்பிக்கையை நாம் இந்த மன்றத்தில் பெறுவோமாக. (ஆரவாரம்). சீன சர்க்கார் சமாதான முறையில் இந்த

நிலைமையை தவிர்க்கலாம் என்ற கட்டம் போய், போர், படைக்கலங்கள் மூலமாகத்தான் தீர்த்துக் கொள்வோம் என்ற நிலைமைக்கு வந்தபிறகு இந்தப் பகுதியிலுள்ள இந்த நாட்டிலுள்ள, இந்த துணைக்கண்டத்தின் முதல்வர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எல்லாக் கட்சியினரையும் வருமாறு அழைத்த நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணா அவர்கள் விடுத்த அறிக்கையிலே உள்ள ஒரு சில வாசகங்களை மாத்திரம் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

''தி.மு. கழகத்தின் சார்பாகவும், அதன் பொதுச் செயலாளர் என்கிற முறையிலும், சீன ஆக்கிரமிப்பை நசுக்கி ஒடுக்குவதற்கு, இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் எனது கட்சியின் உடனடி, முழு ஆதரவுக்கான உறுதியை இந்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கிறேன்.

இந்த ஆக்கிரமிப்பு நமது எல்லாப் பிரச்சினைகளையும், வேற்றுமைகளையும், விரோதங்களையும் இயற்கையாகவே உதறிவிட்டது. அதனால் எல்லா ஜனநாயகவாதிகளும், சீன ஆக்ரமிப்புக்கு எதிராக ஒரு பலமான அணியாகத் திரண்டிருக்கிறார்கள். தி.மு.கழகம் பிரதமர் நேரு தெரிவித்த உறுதியைப் பாராட்டுகிறது. வரவேற்கிறது. இறுதி வெற்றி குறித்து அவர் தெரிவித்த கருத்தை அவரோடு பகிர்ந்து கொள்கிறது என்று அந்த அறிக்கையிலே எங்கள் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று, நேற்று அல்ல, 1961-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13, 14, 15, 16-ம் தேதிகளில் மதுரைத் திருநகரில் நடந்த கழகத்தின் பொது மாநாட்டிலே நாங்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறை வேற்றியிருக்கிறோம்.

ஐ.நா. மன்றத்தில் செஞ்சீனாவுக்காகப் பலமுறை வாதாடி வரும் இந்தியா, எந்த வல்லரசுகளுடனும் கூட்டுச் சேராமல், உலக அரசியலில் நடுநிலைமை வகித்து வந்தும், இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கும் வகையில் இந்தியாவின் வட எல்லையில் சில பகுதிகளில் செஞ்சீனா புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது, இரு நாடுகளுக் கிடையே உள்ள நட்புறவு கெடுவதற்குக் காரணமவதால்,

அச்செயலை இப்பொழுது மாநாடு வன்மையாகக் கண்டிப் பதுடன், இச்சிக்கல் தீர நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் விரைவில் வெற்றி பெறும் வகையில் சீன அரசு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று இந்தப் பொது மாநாடு விரும்புகிறது.

இப்பொழுதுகூட, நாங்கள் எல்லோரும் அண்மையில் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்திற்குப் பிறகு சிறைச் சாலையிலிருந்து வெளியே வருகிற நேரத்தில், எங்களுடைய கருத்துக்களை எங்களுடைய கழகத்திற்குத் தெரிவிக்கும்போது, நாங்கள் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு-ஆளுக்கு ஒரு கருத்து என்றில்லாமல், ஆளுக்கு ஒரு எண்ணம் என்று இல்லாமல் - ''சீன ஆக்ரமிப்பை முறியடிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழுமூச்சுடன் ஒத்துழைக்க வேண்டும்'' என்று எங்கள் தலைவர் அவர்களிடத்தில் நாங்கள் தெரிவித்திருக் கிறோம். இது உபதேசித்து வரவேண்டிய ஒரு கொள்கை அல்ல உள்ளத்திலே பிறக்க வேண்டிய ஒரு உணர்வு. அந்த உணர்வு இந்தத் துணைக்கண்டத்திலே இருக்கக் கூடிய எல்லா நல்ல; மக்களுக்கும் எற்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் கழகத்தின் செயற்குழு மூலமாக முடிவை தெரிவிப்பதற்கு முன்னதாகவே ஏங்களுடைய கழகத்தை சேர்ந்த புரட்சி நடிகர் திரு.எம்.ஜி. ராமச்சந்திரன் ரூ. 75,000 தருவதாக வாக்களித்து, ரூ. 25,000-ஐ நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார். இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஒட்டி அமைச்சர்கள் அவர்களது ஒரு மாதத்திய ஊதியத்தை யுத்த நிவாரணத்திற்குத் தர வாக்களித்திருப்பது போல தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் 50 பேரும் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு சித்தமாக இருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலைமையில் எல்லா விதமான உதவிகளையும் தி. மு. கழகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராயிருக்கிறது.

இன்றைய தினம் தமிழகத்திலேயிருந்து சென்ற மாவீரன், தூத்துக்குடியிலே பிறந்தவன், செல்வராஜன் என்ற வீரன் எல்லைப் போராட்டத்தில் இறந்துவிட்டான் என்ற செய்தியை நாம் கேட்டோம். அப்படிப்பட்ட வீரம் செறிந்த தமிழ்நாடு,

மறவர் பிறந்த தமிழ்நாடு, நமது நாட்டை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க விரும்பாத இந்த நாட்டு மக்கள் இறுதி வரையிலும் போராடுவார்கள் என்ற உறுதி நாடெங்கிலும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சித் தலைவர் குறிப்பிட்டார் - ஒரு வேளை பொடி வைத்துப் பேசினாரோ என்று நான் கருதுகிறேன். திடீரென்று அவர் பொடி வைத்து விடுவார், எங்கே குத்தினார் என்பதே தெரியாது. அப்படி ஊசியால் குத்துவதில் அவர் வல்லவர் (சிரிப்பு). அவர், இந்த நேரத்திலே பிரிவினைப் பேச்சு என்பதே கூடாது என்று குறிப்பிட்டார். ஆனால், தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது நாங்கள் திட்டவட்டமாகக் கூறுகிறோம், பிரதமர் நேருவின் கையை இந்த ஒரு விஷயத்தில் நாங்கள் பலப்படுத்துவதாக இருக்கிறோம். நேருவின் கை இறங்குவதற்கு நாங்கள் விடமாட்டோம். ''ஒரே ஒரு விஷயத்தில்'' என்று அழுத்தம் திருத்தமாக நாங்கள் கூறுவதை கவனிக்கவேண்டும். இந்தத் தாயகத்தின் விடுதலை எங்களுடைய உயிர், மூச்சு எல்லாம்! ஆனால் அதை இந்தச் சீனர்களிடமிருந்து நாங்கள் பெற விரும்பமாட்டோம். இந்தியத் துணைக் கண்டத்தின் சர்க்காரிடத்திலிருந்து பெறுவதைத்தான் நாங்கள் உள்ளபடியே பெருமையாகக் கருதுவோம். அதையும் காலத்திலே தருவதுதான் நேருவுக்கும் பெருமை, அவரது ஜனநாயகத்திற்கும் பெருமை! திராவிட நாடுப் பிரச்சினை எங்களுடைய உயிர் பிரச்சினை என்கிற நிலைமையிலிருந்து எந்தக் காரணத்தினாலும் நாங்கள் நழுவமாட்டோம், வழுவமாட்டோம்,ஆனால் கட்சி, சர்க்கார், நாடு என்ற மூன்றும் தனித்தனியானது. கட்சிகள் இன்று இருக்கும். நாளையதினம், தலைவர்கள் - தடுமாறும் காரணத்தினாலோ தலைவர் களுடைய வேறு தவறுகளினாலோ, தொண்டர்களுடைய நிலைமையினாலோ, அல்லது அமைப்பு முறைகளாலோ, கட்சிகள் இல்லாமல் போய்விடும். ஆனால் சர்க்கார் என்றென்றும் இருக்கும். ஆனால் அது மாறக்கூடும், நிர்வாக இயந்திரத்தை ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சி வைத்துக் கொள்ளும், இன்னொரு காலத்திலே வேறொரு கட்சி வைத்துக்

கொள்ளும். சர்க்கார் மாறக்கூடியது, ஆனால் நாடு இந்த திராவிட நாடு, இந்தியத் துணைக் கண்டத்தோடு இணைந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்துக்கு ஏற்படுகிற அபாயம் திராவிட நாட்டுக்கும் ஏற்படும் என்கிற எண்ணம், உணர்ச்சி, எங்கள் கழகத்தில் இருக்கிற அத்தனை பேருக்கும் இருக்கிறது. சிறைச் சாலையிலிருந்து வெளி வந்த பிறகு 4, 5 நாட்களாக எங்கள் தலைவர் அண்ணா, பல கூட்டங்களிலே வெளியிட்டிருக்கிறார்; ஒற்றர்கள் குறிப்பெடுத்து அரசாங்கத்திற்குத் தந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கூட்டங்களில் கழகம் நடத்திய போராட்டத்தைப்பற்றிய விளக்கங்களையோ, போராட்டத் திற்குப் பிறகு ஏற்பட்ட விளைவுகளையோ, அல்லது அமைச்சர்களைப் பற்றிய கண்டனங்களையோ பற்றி நாங்கள் அதிகம் பேசவில்லை. இந்தக் கூட்டங்கள் எல்லாம் சீன எதிர்ப்பு யுத்தப் பிரசாரக் கூட்டங்களாக இருக்கின்றன என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டிருக்கலாம்.

''இடைத் தேர்தல்களையும், முனிசிபல் தேர்தல்களையும் ஒத்திவைக்க வேண்டுமென்று நேற்று கடற்கரைக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். ஒருவேளை அமைச்சர்கள் காதில் விழுந்ததோ, விழ வில்லையோ, ஆனால் நமது நிதி அமைச்சர் அவர்கள் ''நாங்கள் முன்பே முடிவு செய்து விட்டோம்'' என்று கூறினார்கள். எப்படியோ, தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக் கின்றன என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் சமயத்தில் மனமாச்சரியங்களும், எரிச்சல்களும் ஏற்படக்கூடும். என்னதான் துணைக்கண்டம் பூராவுமே போராட்டத்திற்காகத் திரண்டு இருந்தாலும் நம்முடைய நாட்டில் நடைபெறுகிற இடைத்தேர்தல், நகராட்சி மன்றத் தேர்தல்களிலே ஒருவரை யொருவர் மீண்டும் விரோதிகளாக சிருஷ்டிக்கும் நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால் எங்களுடைய தலைவர் அவர்களால் அந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நாங்கள் மகிழத்தக்க விதத்திலும், நாடு பூரிக்கத்தக்க விதத்திலும், நம்முடைய உணர்ச்சிகள் சிதறாத விதத்திலும், மாசு வந்து சேராத விதத்திலும், நல்ல பலமும், திடமும், பொலிவும் வரக்கூடிய விதத்திலும் ஒரு நல்ல செய்தியை இந்த அவையில் நமது

அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு எங்கள் கழகத்தின் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, இப்படிப்பட்ட நேரத்தில் ஆடம்பரமான ஊர்வலங்கள் கூடாது என்று ஆளும் சட்டசித்தலைவர் இங்கே குறிப்பிட்டார். எந்த ஊர்வலம் என்று அவர் சொல்லவில்லை, ஆனால் அவர் எதைப்பற்றிச் சொல்லியிருப்பார் என்பது எனக்குத் தெரியும். (சிரிப்பு) நான் என் உரையின் நடுவிலே சொன்னேன். நிதி அமைச்சர் அவர்கள் பொடி வைப்பதில் வல்லவர் என்று - போடுவதில் அல்ல. ஆடம்பர ஊர்வலங்கள் நடத்தப்படமாட்டாது என்று கழகத்தின் சார்பாக நான் உறுதி கூறுகிறேன். இப்பொழுது உள்ள நிலைமை வேண்டாமென்று யோசனை கூறினால், நாங்கள் பொதுக்கூட்டங்களைக்கூட விடத் தயாராயிருக்கிறோம். ஆனால் நாங்கள் நடத்தும் பொதுக் கூட்டங்கள் யுத்தப் பிரசாரக்கூட்டங்களாக இருப்பதனால், இந்த யோசனையை சர்க்கார் கூறமாட்டார் என்று நினைக்கிறேன். தி.மு. கழகம் எடுத்துக்காட்டாக அவைகளை நிறுத்திவிடத் தயாராக இருக்கிறது. இப்பொழுது நிலைமை அவ்வளவு மோசமாக இல்லாத காரணத்தினால், அவ்வளவு பயங்கரமாக இல்லாத காரணத்தினால், பீதி அடையத்தக்க அளவுக்கு நிலைமை இல்லாத காரணத்தினால், இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகை எங்கும் கொண்டாடப்பட்டது. தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டது மாத்திரமல்ல, மந்திரிகளுடைய சுற்றுப் பிரயாணமும் திறப்பு விழாக்களும் வெகு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அத்துடன் எங்கள் கட்சி ஊர்வலத்தையும் நடத்தினோம்; அவ்வளவுதான்! ஊர்வலங்களை கட்சியைப் பலப்படுத்துவதற்காக நடத்துகிறோம் என்று சொல்லப்படுகிறது. அந்த முறையில் அல்ல. ஆனால் பண்டித நேரு அவர்களுடைய கரத்தை பலப்படுத்தக்கூடிய அளவில் காரியங்களைச் செய்யத் தயாராக இருக்கிறோம். அந்த முறையில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் பேசி வருகிறது. இப்படி நான் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் ஒரு துண்டுத் தாளை என்னிடம் கொடுத்திருக்கிறார். அதில் இலட்சிய நடிகர்

திரு. ராஜேந்திரன் அவர்களும் பத்தாயிரம் ரூபாய் தருவதாக வாக்களித்திருக்கிறார் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவில் ஆளும் கட்சித் தலைவர் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நான் முழுமனதுடன் வழிமொழிகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.



# தமிழ்மொழி பரப்புதல்

**உரை : 2** **நாள் : 30.03.1963**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தமிழ் மொழி பிரசாரக் குழு வேறு மாநிலங்களிலும் அமைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. செல்வ ராஜன் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இந்திபிரசார சபை என்ற பெயரில் நடைபெறும் நிறுவனம் இந்தியை தமிழகத்தில் திணிக்க வேண்டும் என்று நடைபெறும் முயற்சிக்கு ஆதரவாக நடைபெறுவதுபோல் இல்லாமல், தமிழை வேறு மாநிலங்களில் பரப்ப வேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்து வேறு மாநிலங்களில் மக்கள் மீது தமிழைத் திணிக்க வேண்டும் என்கிற தீய நோக்கோடு அல்ல என்பதை நாம் உணரவேண்டும். திரு. நண்பர் செல்வராஜன் எடுத்துக் காட்டியதுபோல, தமிழிலேயே நிறைய இலக்கியங்கள் உண்டு. சொல்வளம் உண்டு, கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த குடியினரின் மொழி தமிழ் மொழி. இலக்கியச் செறிவும், பண்பாட்டுச் செறிவும் மிக்க மொழி ஆகும் தமிழ் மொழி. மக்களை வாழ்வித்த மொழி, நல்ல பண்பாட்டை உலகத்திற்கு அறிவித்த மொழி தமிழ் மொழி ஆகும். அப்படிப்பட்ட மொழி நிலவும் பகுதிகளிலும், தமிழகத்திலேயும் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளிலும் மாநிலங்களிலும், அந்த மொழியைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கோடு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு இலக்கியத்தை, துளசி தாஸ் இராமாயணம் ஒன்றை மட்டும் தன்னகத்தே கொண்டிருக்கும்

இந்திக்கு இந்த துணைக்கண்டம் பூராவும் பிரச்சாரசபைகள் இருக்கும் போது, வளையாபதியும், சீவக சிந்தாமணியும், குண்டலகேசியும், மணிமேகலையும், சிலப்பதிகாரமும், அகமும், புறமும், கலித் தொகையும் இன்னோரன்ன பிறவும் இலக்கிய வளம் பெற்றிருக்கிற நம் தமிழை, அனைத்துக்கும் மேலாக திருக்குறளைப் பெற்றிருக்கும் தமிழை பரப்பும் பிரசார சங்கங்கள் வேறு மாநிலங்களில் இல்லாதது பெரும் குறை. அந்தக் குறையைச் சுட்டிக்காட்டுவது இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் நம்முடைய தமிழகத்தில் இந்தியினுடைய தன்மையை, வளத்தை அந்த மொழியில் ஆர்வத்தை தமிழரும் பெறவேண்டும் என்று இந்தி பிரச்சாரசபை பணிகளில் தமிழர்களும் ஈடுபடுகிறார்கள். ஆனால், வேறு எந்த மாநிலங்களிலும் தமிழை வளர்த்துக் கொள்வோர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. நம் மாநிலத்திலிருந்து பிழைப்பிற்காக, வேலைக்காக, பம்பாய், கல்கத்தா ஆமதாபாத், டெல்லி போன்ற இடங்களிலே நம் மாநிலத் தமிழர்கள் ஆங்காங்கே தங்களுக்கு இருக்கக்கூடிய தமிழ் ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ளவென்று அந்த தமிழ் சங்கங்களை உருவாக்கி இருக்கிறார்கள். பிரசாரம் செய்யும் சங்கங்களாக உருவாக்கிப் பணிபுரியவில்லை. இன்னும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லவேண்டுமானால் நான் கொஞ்சம் சினிமா துறையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதுபற்றி யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நம்பிக்கையோடு கூறுகிறேன். இந்திப் படங்களை தமிழ் நாட்டில் எல்லோரும் பார்க்கிறார்கள். இந்தி படித்தவர்கள் அல்லது இந்தி மொழியை உணர்ந்தவர்கள் தான் அந்தப் படங்களை பார்க்கிறார்கள் என்று இல்லாமல் இந்தித் திரைத் துறையிலே நல்ல நடிகர்கள் நடித்த படமாக இருந்தால், இந்தியில் நல்ல இசைவாணர்கள், பாடகர்கள் இசை அமைத்த படங்களாக இருந்தால், தமிழகத்தில் தமிழர்கள் அந்தப் படங்களை ஆர்வத்தோடு சென்று பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் படங்கள், தமிழ் நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி வழங்குகின்ற பகுதிகளில் அல்லது வேறு மாநிலங்களில் நடக்கின்றனவா என்றால், பம்பாய், ஆமதாபாத் போன்ற தமிழர்கள் இருக்கின்ற இடங்களில் ஒரு நாள் காலைக்

காட்சியாகவோ அல்லது ஒரு வாரக் காட்சியாகவோ தான் அந்தப் படங்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ் நடிகர்கள், உயர்ந்த நடிகர்கள், நட்சத்திர மதிப்புப் பெற்றிருக்கிற நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி மொழி பேசப்படுகிற பிராந்தியங்களில் ஓடுவதற்கு வழிவகை செய்யப்பட்டிராத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையிலே மாற்றம் காணவேண்டும். இந்த அரசினர் சிபார்சு செய்தாவது தமிழ் நாட்டில் வெற்றிகரமாக ஓடுகிற தமிழ் படங்கள் அந்தப் பகுதிகளில் வேறு மாநிலங்களில் ஓடுவதற்கும், அந்த வகையிலே தமிழ் ஒலியையும், ஒலியில் கிளம்புகின்ற வீரத்தையும், அதனால் கிடைக்கின்ற கனிவையும் தமிழ் இனிமையையும் மற்றவர்கள் உணர்கின்ற அளவுக்குஅந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற காரியத்தில் ஈடுபடலாம். இப்படிப்பல கோணங்களில் தமிழைப் பிரசாரம் செய்ததற்காக நல்ல பல நிறுவனங்களை வேறு மாநிலங்களில் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்ற அளவிலே நம்முடைய நண்பர் திரு. செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து, இதை நிறை வேற்றித்தரவேண்டும் என்று ஆளும் கட்சியினரைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.



# மொழி சட்டம், இந்தி ஆதிக்கம்

**உரை : 3** நாள் : 08.08.1963

**கலைஞர் மு. கருணாநிதி :** அன்புமிக்க சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து, எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற குறைந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களை இங்கே கூறுவதற்கு நான் விழைகிறேன். நாங்கள் மொழிப் பிரச்சினையைப் பற்றி பேசுகிற நேரத்திலும், தமிழ் மொழிக்கு நாங்கள் காட்டுகிற அன்பையும், மரியாதையையும் செலுத்துகின்ற வேளையிலும், தமிழ் அன்னையின் பால் நாங்கள் செலுத்துகிற நன்றி உணர்ச்சியை விளக்குகின்ற நேரத்திலும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு, அவர்களையும் அறியாமல் உத்வேகத்தில் அவர்களையும் மறந்து, தமிழையும் தமிழ் அன்னையையும், தமிழ் அன்னை நமக்குத் தந்திருக்கிற பல்வேறு இலக்கியங்களையும், காப்பியங்களையும் இழித்துக் கூறுகிற அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணி நான் மனம் உடைந்துள்ளேன். நேற்றைய தினம் புலவர் படிப்புப் படித்த அம்மையார் திருமதி குழந்தையம்மாள்கூட சேரர் காலத்திலும், பாண்டியர்காலத்திலும், சோழர் காலத்திலும் நிலையற்ற ஆட்சி இருந்தது. அவர்கள் மண்ணுக்கும், பெண்ணுக்கும், பொன்னுக்கும் போராடினவர்கள் அல்லவா, அப்படிப்பட்ட கொடிய மிருகத்தனமாக ஆட்சியா நமக்கு வேண்டும் என்று கேட்டு, அவர்கள் பேச்சைத் துவக்கினார்கள். நான் இன்று காலை சர்க்கார் அங்கீகாரம் பெற்ற ஒரு

பள்ளிக்கூடப் புத்தகத்தைப் படித்தேன். ''அண்மையில் எழுதப் பட்டது. அதிலே ஒரு அழகான குறிப்பு என்னுடைய உள்ளத்தைத் தொட்டது. அதிலே ஒரு இடத்திலே பொற்கைப் பாண்டியனின் நீதி நெறியைக் கண்டு மக்கள் அவனைப் போற்றினார்கள். இயற்கைக் கையைத் துண்டித்துக் கொண்ட பாண்டியன் பொன்னால் கை செய்து வைத்துக் கொண்டான். அதனால் அம்மன்னன் பொற்கைப் பாண்டியன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றான் என்றும், இன்னொரு இடத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள் என்றும் அந்த மன்னர்கள் வழி வந்த பேகன் வீரம் மிகுந்த மன்னனாக விளங்கினான் என்றும், அவன் சிறந்த படைகளைப் பெற்று வீரத்திற் சிறந்தவன் என்றும், மயிலுக்குப் போர்வைப் போர்த்தினான் என்ற சம்பவத்தைக் குறிப்பிட்டு, அவன் ஈகையினும் சிறந்து விளங்கினான், புலவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் என்றால், நேற்றைய தினம் சேரன் காலமும், பாண்டிய மன்னன் காலமும், சோழ மன்னன் காலமும் மிருகத்தனமான காலம் என்று சொன்ன அதே குழந்தை அம்மாள் தான் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் பெயர் ''திராவிட மணி மலர்'' அம்மையார் அவர்கள் இதைப் படித்துப் பார்த்தால், முன்னுக்குப் பின் முரணான வாசகங்களை எடுத்துக் கூறுகிறார்கள் என்பதை அவர்களே உணர முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நண்பர் மதியழகன் தந்திருக்கிற தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தை அவர் முன் மொழிந்த நேரத்திலும், அதை ஒட்டி பின்னர் பேசிய நண்பர்களும், அந்தத் தீர்மானத்தை ஆதரித்து நல்ல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள், மொழிப் போராட்டம் தமிழகத்திலே 1938-ம் ஆண்டு தொடங்கியது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த மாமன்றத்திலே அமைச்சராக வீற்றிருந்த காலை, கட்டாய இந்தியை தமிழ் சிறார்கள் மீது திணித்த காலத்திலே அதனை எதிர்த்து 1,300 பேர்கள் சிறைச்சாலைக்குச் செல்லவும், நான் இல்லையென்றால் காங்கிரஸ்காரர்கள் ஜெயிக்க முடியாது என்று வெற்றிக் களிப்படையும் பெரியார் ராமசாமி அன்றையதினம் இந்தியை எதிர்த்து பெல்லாரிச் சிறைச்சாலைக்குச் செல்லவும்,

கருக்கொண்ட தாய்மார்கள் காராக்கிருகங்களில் அடைபடவும், இரு இளம் வாலிபர்கள் பிணமாக தள்ளப்படவும் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன, அதற்குப் பிறகு கட்டாய இந்தி திரும்பப் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1948-ல் கல்வி அமைச்சராக திரு. அவினாசிலிங்கனார் வீற்றிருந்த காலை மீண்டும் கட்டாய இந்தி திணிக்கப்பட்டு, அதனை எதிர்த்து தமிழகம் போர்க் கோலம் பூண்டதும், மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க.அவர்கள், நாவலர் சோம. சுந்திர பாரதி, உமாமகேஸ்வரன் பிள்ளை, இவர்கள், ஈடுபட்டு நாட்டிற்கு ஒரு பொதுமொழி தேவையென்றால் அது ஆங்கிலமாக இருக்கட்டும் என்று அப்படிப்பட்ட சான்றோர்கள்கூட தங்களுடைய பொன் மொழிகளை தந்திருக்கிறார்கள். அதன் பின்னர் 1950-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைக் கூடிய இந்தியாவின் ஆட்சி மொழியாக எதை அமைத்துக் கொள்வது என்ற எண்ணம் எழுந்த காலை, ஆங்கிலேயர்கள் வெளியே இருந்த நேரத்திலே ஆங்கில மொழியின் மீது அப்பொழுது ஏற்பட்டிருந்த வெறுப்பின் காரணமாக ''அவசரக்கோலம் அள்ளி தெளி'' என்பதுபோல், இந்தி தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். பதினைந்து ஆண்டுக்காலத்திற்கு ஆங்கிலம் இருக்கலாம். அதற்குப் பிறகு அந்த இடத்தை இந்தி மொழி ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் என்று அரசியல் சட்டத்தை வகுத்தார்கள். அதுகண்டு தமிழகம் கொந்தளிப்பு அடைந்த நேரத்தில் மொழிப் பிரச்சினைப்பற்றி ஏற்படுகின்ற குழப்பங்களைத் தீர்ப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்களும், வங்கத்தைச் சேர்ந்த சுநீத்குமார் சாட்டர்ஜி அவர்களும் இருந்தார்கள். அந்தக் குழுவின் அபிப்பிராயங்களைக்கூட எதிர்த்து அவர்கள் தங்களுடைய மறுப்புரைகளை எழுதி உள்ளார்கள். காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் நம்முடைய மரியாதைக் குரியவர்கள். சுநீத்குமார் சாட்டர்ஜி வங்கத்துப் பெரியார். அவர்கள் மறுப்புக் குறிப்பு எழுதும் பொழுது ஒன்றை வெளியிட்டார்கள். மொழியைப் பொறுத்த வரையில் இந்த அரசியல் அமைப்புப் பிரிவையோ மாற்றி அமைக்க வேண்டும் என்று மாநில சர்க்காரிடமிருந்து தமக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாக டாக்டர் சுப்பராயன் அந்தக் குறிப்பிலே

கூறியிருக்கிறார். இதைத் தொடர்ந்துதான் மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் ஒரு வாக்குறுதி தந்தார்கள். ''இந்தி விரும்பாத மக்கள்மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது'' என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். இது திருப்தி அளிக்காததால், 1956-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள் , 28-ம் நாள், சென்னை நகரத்தில், திரு. ராஜகோபாலாச்சாரியார், பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், திரு. பி.டி. ராஜன், ராஜா முத்தையா செட்டியார், திரு. ம. பொ. சிவஞானம், திரு. விஸ்வ நாதன், ரா.பி.சேதுப்பிள்ளை, மு. வரதராசனார், தியாகராஜ முதலியார் ஆகியவர்கள் அடங்கிய குழு, ''இந்த நாட்டுக்கு ஆட்சி மொழி ஆங்கிலமாகவே இருக்கட்டும், இந்தி தேவையில்லை'' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு, 1959-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், நாலாம் நாள், பாராளுமன்றத்திலே, இந்திய பிரதமர் நேரு இன்னொரு அழுத்தம் திருத்தமான வாக்குறுதியை, நம்பிக்கைக்கு பொருத்தமான வகையில் தந்தார்கள். ''1965-க்குப் பிறகும் ஆங்கிலம் கூட்டு ஆட்சி மொழியாக (Associate Official Language) இருக்கும். எவ்வளவு காலம் ஆங்கிலம் இருக்கவேண்டுமென்பதை இந்தி தெரியாத மக்களே தீர்மானிக்க வேண்டும்'' என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனாலும் அந்த உறுதி பட்டுப்போய் விடுமோ என்ற அச்சமும் இருந்தது. 1960-ம் ஆண்டு இந்திய ஜனாதிபதி மறைந்த டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள், மாநில சட்சகார்களுக்கு ஒரு தாக்கீதினைக் கொடுத்திருந்தார்கள். தாக்கீதில் குறிப்பிட்டிருந்தது என்ன? ''1965-க்குப் பிறகு இந்தி ஆட்சி மொழியாக, அதிக வேகமாக இந்தி பிரசாரம் நடைபெற்றாக வேண்டும்'' என்பது தான். அதைக் கண்டு தமிழகம் கொதிப்படைந்தது. நான் சேர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் போர்க் கொடி உயர்த்தி, தாக்கீது அனுப்பிய டாக்டர் பிரசாத் தமிழகத்தில் ஆகஸ்ட் 15-ம் நாள் உலா வரும்பொழுது, கருங்கொடி காட்டுவது என்று தீர்மானம் எடுத்தது. இதற்கிடையில் பிரசாத் ஹைதராபாத்தில், இந்தி பிரசார கூட்டத்தில் குறிப்பிட்டார். ''எதிர் காலத்தில் மொழிக் கொள்கை விவாதிக்கப் படும்போது, பரிசீலிக்கப்படும் போதும், இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளையும், கஷ்டங்களையும் நாங்கள் மனதில்

கொள்வோம். அசட்டை செய்ய மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்'' என்று, ஆகஸ்ட் திங்கள் மூன்றாம் நாள் வெளியிட்டார்கள். இந்த உறுதிமொழி பிரகடனப்படுத்தப் பட்டது. அதன் பின்னர் பாராளுமன்றத்திலே, ப்ராங்க் அந்தோணி அவர்கள் கேட்டார், தலைமை அமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதி குடியரசுத் தலைவரின் உத்தரவில் இருக்கிறதா என்று. அதற்கு மறைந்த மாவீரர் கோவிந்தபல்லப்பந்த் அவர்கள், ''பிரதமர் வாக்குறுதியிலிருந்து மாறுபடும் எண்ணம் சிறிதும் இல்லை. அந்த உறுதி மொழிகளுக்கேற்பவே அரசின் நடவடிக்கைகளும் இருக்கும் என்று குடியரசுத் தலைவரின் உத்தரவின் குறிப்பிடப்பட்டிருக்கிறது'' என்று பதிலுறைத்தார்கள். அதைத் தொடர்ந்து, பத்திரிக்கை நிருபர்களுக்கு மதிப்பிற்குரிய, முன்னாள் நிதி அமைச்சர், திரு. சுப்ரமணியம் அவர்கள் அளித்த பேட்டியில், நிருபர்களிடம், ''இப்போது ஆங்கிலம் இருந்து வருகிறது. 1965-க்குப் பிறகு ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி வரவேண்டும் என்று இருந்தது. இங்குள்ள கட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு 1965-ஆம் ஆண்டு வரைதான் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற தேதி நிர்ணயம் போக வேண்டும். அதற்குப் பிறகும் ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டும் என்பதுடன் தேதி நிர்ணயமின்றி இந்திய சர்க்காரில் இரு மொழிகளும் இருக்க வேண்டும் என்று நாம் சொன்னோம். கௌஹத்தி காங்கிரசில் அதை நான் வற்புறுத்தினேன். இந்தக் கருத்தை மத்திய அரசும், பிரதமரும், பார்லிமென்டரி கமிட்டியிலுள்ள அங்கத்தினர் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்'' என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இவைகளுக்கு எல்லாம் பிறகு, இந்திய மண்ணை கம்யூனிஸ்ட் சீன வெறியர்கள் ஆக்ரமித்த நேரத்தில், பண்டித நேரு அவர்கள் தான் கொடுத்த உறுதி மொழிகள் போதாது என்றோ என்னவோ, ஒரு விளம்பரத்தை, இந்தி பேசாத மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிற வகையில் எல்லா ஏடுகளுக்கும், பணம் தந்து எந்த விளம்பரத்தையும் அளிக்காத வர்கள், இந்த விளம்பரத்தை எதிர்க்கட்சி ஏடுகளுக்கும் தந்து இருக்கிறார்கள். ஆட்சி மொழி சட்டத்தின் கீழ் என்ன ஆகிறது? பண்டித நேரு அவர்களே தெரிவித்திருக்கிறார்கள், நான்

கொடுத்த உறுதி மொழிகள் இந்த சட்டத்திலே இணைக்கப்பட முடியவில்லை என்று. ஆனாலும், நம் அமைச்சரவர்கள், கடற்கரைக் கூட்டத்தில், ''இந்த சட்டம் இல்லாவிட்டால் இந்தி அல்லவா ஆட்சி மொழியாகி விடும்; ஆங்கிலத்தை நீடிக்கச் செய்யவே இந்த சட்டத்தை பாராளுமன்றத்திலே செய்திருக்கிறார்கள்'' என்று கூறி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் சந்தேகம் தீருவதற்காகக் கேட்க விரும்புகிறேன். இதுவரையிலும் ஆங்கிலம் தான் காரியாம்சத்தில் ஆட்சி மொழியாக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இந்தி இருக்கலாம் என்று இருப்பதால், இதுவரை இருந்த தன்மை தொடர்ந்து ஆங்கிலத்திற்கு நீடிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த நிலை இருக்கிறதா? இல்லை இந்தி தான் ஆட்சி மொழியாக இருக்கும். உபகரணமாக, உதவியாக ஆங்கிலம் இருக்கலாம் என்பதுதான் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஆங்கிலம் போய் இருக்கிறது என்பதைப் பற்றி பேசும் நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆங்கிலத்தின் மேல் மோகம் ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். குறிப்பாக, திரு. செல்வராஜ் அவ்காகள், ஆங்கிலம் கற்பது கடினம், இந்தி கற்பது சுலபம், அதனால்தான் ஆங்கிலத்தை விட இந்தி வெகு வேகமாக பரவுகிறது என்று சொல்லுகிறார்கள். கனம் நிதி அமைச்சரே அதை மறுக்கிறார்கள். நிதி அமைச்சர் ''பயிற்சி மொழிப் பிரச்சினை'' என்ற நூலில் ''பல மொழிகள் பேசப்படுகின்ற நம் நாட்டில், மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுள்ள இந்தி மொழியைத் தென்னிந்தியாவில் உள்ளவர்கள் பல வருஷங்களாகக் கற்றுக் கொண்டு வந்திருந் தாலும், இன்று கூட அந்த மொழியை நம்மால் சரியாகக் கையாள முடியவில்லை. அதற்குப் பதிலாக, ஆங்கிலத்தைத்தான் நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும். வேறுவழி எதுவும் கிடையாது. தேச ஒற்றுமையிலும், ஒன்று பட்டமுன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட எல்லா அறிஞர்களும் இதை ஒப்புக் கொண்டிருக் கிறார்கள்'' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அந்த நூலில் தெரிவித்திருக் கிறார்கள். அதோடு இணைந்து நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள். ''இந்தி மொழியின் உற்சாகிகளுக்கு ஆங்கிலத்தின் மீது

அறியாமையினால் ஏற்பட்ட வெறுப்பினால் போர் தொடுக்கிறார்கள் என்றால், நம்மிலே சிலரும் அவர்களுடன் சேர்ந்து கொள்வது விவேகம் அல்ல'' என்று.

நேற்றையதினம் கனம் நிதி அமைச்சர், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் உபதேசம் செய்த யோசனையைக் கேளுங்கள் என்று எங்களுக்குச் சொன்னார்கள். நேற்று இரவெல்லாம், ''கேட்கலாமா, கேட்கலாமா'' என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன், ஏதோ ஒரு குறிப்பைப் பார்க்கப் போன சமயத்தில், இந்த நூலில் நிதி அமைச்சரவர்களே சொல்கிறார்கள், கம்யூனிஸ்ட்கள் ஆபத்தானவர்கள் என்று. ''கம்யூனிஸ்ட் கட்சியினரின் நாட்டுப் பற்றை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர்களுக்கு மொழிப் பற்றும் கிடையாது. நாட்டுப் பற்றும் கிடையாது'' என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது கேட்கிறேன்; நிதி மந்திரியாரே! நிதி மந்திரியாரே! அப்படிப்பட்டவர்களின் யோசனையையா எங்களைக் கேட்கச் சொல்கிறீர்கள்.

**கனம் திரு. எம். பக்தவச்சலம் :** அவர்களுக்கு அரசியல் அறிவு அதிகமாக உண்டு என்பதற்காகச் சொன்னேன்.

**கலைஞர் மு. கருணாநிதி :** இது இல்லாத காரணத்தினாலோ என்னவோ அப்படிச் சொல்லியிருக்கிறீர்கள் அல்லது கம்யூனிஸ்டுகளைப் பற்றி கூறி இருக்கிறீர்கள்.

மொழிச் சட்டம் பற்றிய இந்த நிலை 1975-ம் ஆண்டு மேலும் புனராலோசனை செய்யப்படும். பாராளுமன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் இருந்து 30 பேர்கள் கொண்ட ஒரு குழு மறுபடியும் மொழியைப் பற்றி கூறி உட்கார்ந்து பிரச்சினைகளை ஆராய்ந்து, புனராலோசனை செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற ஜனநாயகவாதிகளும், நல்ல நீதிமான்களும் இருக்கிற இந்த நேரத்திலேயே பெற வேண்டிய நீதியைப் பெறவில்லை யென்றால், 1975-ம் ஆண்டுக்குப் பிறகும் நேரு அவர்கள் வாழட்டும், வாழவேண்டும் என்று வேண்டுகிறேன். ஒருவேளை இயற்கை கொடுமை செய்து விட்டால் நான் மிக உருக்கத்தோடு, தமிழ்த்தாயின் மீது உள்ள அக்கறை காரணமாக, நம் நாட்டின்

மீது வைத்திருக்கிற விஸ்வாசம் காரணமாகக் கேட்கிறேன். இப்போதே பண்டித நேரு அவர்களால் இந்தி வெறியர்களின் கூச்சல் காரணமாக தன்னுடைய வாக்கையே காப்பாற்ற முடியவில்லையானால், அவருக்குப் பிறகு நாதி யார்? 1975-ல் இதைவிட இந்தி வெறியர்கள் அதிகமாகி, இன்னும் அவர்கள் பலம் பெற்று, வலிவு பெற்று, மூர்க்கத்தனமாக அந்த வெறியர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவார்களானால் இந்த நாட்டுக்கு நாதி யார்? நம் அமைச்சர் அவர்கள் அந்தக் குழு எல்லோரையும் கலந்து தான் எந்த முடிவினையும் எடுக்கும் என்று சொல்லக் கூடும். ஒருமைப்பாட்டுக் குழு ஏன் எங்களை அழைத்துக் கேட்கவில்லை என்று நேற்று கேட்டேன். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள், சூதாட்டத்தைத் தடுக்கிற சட்டம் கொண்டுவரும்போது சூதாடிகளைக் கேட்டுக்கொண்டு செய்வதா, விபசாரத்தை ஒழிப்பதற்காகச் சட்டம் கொண்டு வரும் போது விபசாரிகளைக் கேட்டுத்தான் செய்வதா என்று கேட்டார்கள். ஆனால் செய்தி பார்த்தேன், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே விபசாரத் தடையினால் பாதிக்கப்பட்ட விபசாரிகளை பேட்டி கண்டார் என்று நானும் படித்திருக்கிறேன். ஒருவேளை பண்டிதருக்கு உள்ள பெருத்தன்மை நம் மாநிலத்தில் உள்ள மந்திரிகளுக்கு இல்லையோ என்னவோ. . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெருந்தன்மை பற்றியது அல்ல. அது வேறு விஷயம். வேறு ஒன்றும் சரியான உதாரணம் இல்லாததால் அதை விளக்குகிற முறையில் தான் சொன்னேன்.

**கலைஞர் மு. கருணாநிதி :** அப்படியா? அந்தோ தமிழே! உன் மீது அனுதாபப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** விபசாரத்தடைச் சட்டம் பற்றி அவர்களைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்று எதிர் கட்சி உதவித் தலைவர் சொன்னால் நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வேறு யாரையும் இழுக்க வேண்டியதில்லை. நேரு அவர்களையும் இழுக்க வேண்டியதில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி :** நான் அவர்களைக் கேட்டுத் தான் ஆக வேண்டும் என்றால் கேட்கத் தயாராக இருக்கிறேன் என்று நம் நிதி அமைச்சர் கூறுகிறார். யாரைக் கேட்டுத்தான்

ஆகவேண்டும் என்று அவர்கள் விளக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களை நிச்சயமாகக் கேட்கத்தான் வேண்டும். அதைவிட வேறு உதாரணம் தெரியவில்லை என்று சொல்லும்போது, உள்ளபடியே தமிழின் மீது அனுதாபம் காட்ட வேண்டுமே தவிர வேறு இல்லை. நல்ல அருமையான முதிர்த்த உதாரணங்களை அமைச்சரிடத்தில் எதிர் பார்த்தேன். மற்றவர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொண்டு நடந்து கொள்ளக் கூடிய முறையில் இந்தச் சபையை நடத்திச் செல்ல வேண்டியவர் இப்படிப்பட்ட உதாரணத்தைக் கையாண்டார் என்பது உள்ளபடியே என் மனத்தை உறுத்தியது. அப்படிப் பட்டவர்களைத் தான் அமைச்சர்கள் சந்திப்பார்கள் என்றால் சந்திக்கட்டும. அதைப் பற்றிக் கவலை இல்லை. அமைச்சர் அவர்கள் கட்சிக் கூட்டத்தில் பேசிய பேச்சு ஒன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி புத்தகத்தில் வெளி வந்திருக்கிறது. 'காமராஜ் இங்கே அமைச்சராக இருக்கிற வரையில் எந்த விதமான ஆபத்தும் வராது, ஆகவே ஹிந்தி ஆதிக்கம் பற்றி கவலை வேண்டாம்' என்று பேசியிருக்கிறார். இதைத் தெரிந்துதானோ என்னவோ ஹிந்தி வெறியர்கள் காமராஜரை இங்கே இருந்தாலே எங்கே ஒரு வேளை தங்களுடைய முயற்சிக்குத் தடை ஏற்படுமோ என்று அங்கே இழுக்கப் பார்க்கிறார்கள் போதும்! ஒரு வேளை அப்படிப் போய் விட்டால் அந்த இடத்தை அலங்கரிக்க எல்லாத் தகுதிகளையும் பெற்றுப், பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய அமைச்சர், பக்தவத்சலம் அவர்கள் என்று கூறப்படுகிறது. காமராஜர் எப்படி தமிழைக் காக்க, ஹிந்தியை ஒழிக்கப் பாடுபடுவார் என்று கனம் அமைச்சர் அவர்கள் பக்தவத்சலம் நம்புகிறோரோ, அதில் பாதியாவது பக்தவத்சலம் பாடுபடுவார் என்று நம்பிக்கை ஏற்படத் தக்க விதத்தில் கனம் மதியழகன் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும. ஆளும் கட்சியில் இருக்கிற அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டு, ஒரு முகமாக அங்கங்கே அனுப்பி வைத்து நம் மொழியைக் காப்பாற்ற, நம் வருங்கால உரிமைகளைக் காப்பாற்ற, தமிழகம் இருள் அடைந்து போகாமல் ஒளி பெற்றுத் திகழ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

# உள்ளாட்சித் தேர்தல்கள்

**உரை : 4** **நாள் : 20.11.1963**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நகர சபை தேர்தல்களை விரைவிலே நடத்தவேண்டுமென்று வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தினை யொட்டி என்னுடைய கருத்துக்களை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

1951-ம் ஆண்டு இருக்கிற நிலைகளை வைத்து, இந்த நகர சபைத் தேர்தல்களை நடத்துவது சரி அல்ல என்கின்ற வாதத்தை எதிர் கட்சியிலேயே இருக்கிற எல்லா கனம் உறுப்பினர் களும் இங்கே மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தேர்தல்களை நடத்துவதா, இல்லையா என்கிற பிரச்சனை எழுகிற நேரத்தில், தேர்தல் தேவையில்லை என்றோ, அல்லது தேர்தல் இப்போது நடத்த வேண்டாம் என்றோ, அந்தப் பிரச்சனையில் நாங்கள் யாரும் மாறுபாடான கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. தேர்தலை இப்போது நடத்துவதற்கு இந்த அரசினர் முன் வருவது ஒன்றே, நெருக்கடி நிலை அவ்வளவு மோசமாக நாட்டில் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிற தன்மையில் அமைந்திருக்கிறது. என்பதனை நான் மறுக்கவில்லை. நெருக்கடி நிலை, நெருக்கடி நிலை என்று எல்லா சூழ்நிலைக்கும் அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிற அரசினர், நெருக்கடி நிலை எதிர்ப்பார்க்கிற அளவுக்கு, அல்லது சொல்லுகிற அளவுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிற அளவிலேதான் இந்தத் தேர்தலை அவசரமாக நடத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள். தேர்தலை நடத்துவதா இல்லையா என்கிற அடிப்படை கேள்வியைவிட, நடத்துகிற தேர்தல் செம்மையான முறையில் நடைபெறவேண்டுமா வேண்டாமா என்கிற அந்தப் பிரச்சனைக்கு

முதல் இடம் தரவேண்டும். 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கைத் தயாரித்து வைத்து விட்டு 1961-ம் ஆண்டுதயாரிக்கப்பட்ட இந்திய மக்கள் தொகை கணக்கை நம் நூல் நிலையத்தில் 1962-ம் ஆண்டு, நவம்பர் திங்களில் கொண்டு வந்து பொருத்தி வைத்து விட்டு, இத்தனை காலமாக அந்த மக்கள் தொகை அடிப்படையில் நகர சபைகளிலே தொகுதிகளைப் பிரிக்கவோ, அல்லது தேர்தல்களுக்கான காரியங்களில் ஈடுபடவோ அத்தகைய காரியங்களில் கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டு 1961-ம் ஆண்டு மக்கள் தொகையை கையில் வைத்துக்கொண்டு 1951-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்ட வார்டு கணக்கிலேயேதான் தேர்தல் நடத்துவோம் என்று சொல்வது 20 வயது நிரம்பிய வாலிபனுக்கு புதிதாக தைக்கப்பட்ட சட்டையை பெட்டியில் பத்திரமாக வைத்து விட்டு, 10-வது வயதில் தைக்கப்பட்ட சட்டையை இப்போது மாட்டிவிட்டு, அப்படி மாட்டப்பட்ட சட்டையும் கிழிந்து, சதையும் பிதுங்கி, அவஸ்தைப்படும் பரிதாபக் காட்சியைத்தான் ஜனநாயக உலகத்திற்குக் காட்டிக்கொண்டிருக்கிறோம் என்று கூற விரும்புகிறேன். 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கில் பிரிக்கப்பட்ட அந்த வார்டுகள் இன்றைய தினம் 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கில் சிந்தித்துப் பார்த்தால் எந்த அளவுக்கு இன்னும் விரிவு அடையவும், ஒவ்வொரு நகரத்திலும் அத்தகைய டிவிஷன்கள், வார்டுகள் அதிகம் ஆகவும், ஜனநாயகம் பரவலாகவும் ஆக்கப்படுகிற சூழ்நிலை என்பதையும் அத்தகைய சூழ்நிலையை இன்றைய தினம் புறக்கணிக்கிறோம் என்பதையும் யாரும் மறந்து விடலாகாது. இன்றைய பல நகரங்களில் இருக்கிற ஆணையாளர்கள் அந்தந்த வார்டுகளை இப்போது எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாம் அறியாமல் இல்லை. அந்த சூழ்நிலையைக் கூட பயன்படுத்திக் கொள்ளாமல் 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் தான் இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லுவது முறையல்ல. நடைபெறுகிற காரியம் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற காரணத்தினால், அவகாசம் கொடுத்தாவது 1961-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தேர்தல்களை நடத்துங்கள் என்று நாங்கள் கூறுகிறோமே தவிர ஏதோ ஆளும் கட்சிக்கு திடீரென்று

அபாரமாக செல்வாக்கு வளர்ந்துவிட்டது, ஆகவே எதிர்க்கட்சிகள் நகரசபை தேர்தலில் முறியடிக்கப்படும் என்கிற அச்சத்தினால் இம்மாதிரி சொல்லப்படுகின்றது என்ற வாதத்தை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மதுரை நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாகும் என்ற சந்தோஷகரமான செய்தி இந்தச் சபையில் தெரிவிக்கப்பட்டது. மேடையிலே அதை அமைச்சர்கள் சிலரே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மதுரை மக்கள் தங்களுடைய நகரம் ம□நகரமாக பாவிக்கப்பட்டு, மாநகராட்சி மன்றம் உருவாகும் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், உடனே அது இப்போது மாநகராட்சி மன்றமாகாது நாங்கள் அந்த பழைய கணக்கின் அடிப்படையில்தான் தேர்தல் நடத்தப்போகிறோம் என்று சொல்லுவது மதுரை நகர மக்களுக்கும், இன்னும் தங்களுடைய நகரம் விரிவாகி பிரிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்க வேண்டும். நிர்வாக வசதி பெருக வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிற பல நகரங்களுடைய மக்களுக்கு கவலை தரக் கூடிய செய்தியாகும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நகர சபை தேர்தல்கள் மரபாக நவம்பர் திங்களில் நடைபெறுவதாக இருக்கிறது. மரபு என்பதை விட்டுவிட்டாலும் வசதியை கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது நவம்பர் திங்களில் இந்தத் தேர்தல்கள் முறையாக நடைபெறுவதால், பொதுதேர்தல் வேலைகளுக்கும் நகராட்சிமன்ற தேர்தல் வேலைகளுக்கும் ஒன்றோடொன்று மோதல் ஏற்படாமல், சர்க்கார் நிர்வாகமும், நிர்வாக சக்கரமும் ஒழுங்காக சுற்ற இயலும். இப்பொழுது நவம்பர் திங்களுக்கு முன்பாக இந்தத் தேர்தல்களை மார்ச் மாதத்தில் நடத்துவோமானால், பொதுத் தேர்தல் நடைபெறுகிற காலத்தில் பொதுத்தேர்தல் வேலைகளும், நகரசபை தேர்தல் வேலைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளகூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். இந்த முக்கியமான ஒரு பிரச்சனையை கனம் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது பாராளுமன்ற தேர்தல்களுக்கும், சட்டமன்ற தேர்தல்களுக்கும் தொகுதிகள் பிரிக்கப்படுகிற நிலைமையில் சட்ட அமைப்பிலே ஒரு புதிய மாறுதலை நாம் மேற்கொண்டிருக் கிறோம். முன்பெல்லாம் இரட்டை உறுப்பினர் தொகுதி என்ற

தொகுதிகள் பாராளுமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்றத் தொகுதிகளிலும்,இருந்தன. இப்பொழுது அந்த இரட்டை உறுப்பினர் தொகுதி முறை தேவையில்லை என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நகராட்சி தேர்தல்களில் அப்படிப்பட்ட மாற்றப்பட்ட முறை அமுலாக்கப்பட முடியுமா? அவசரம் அவசரமாக 1954-ம் ஆண்டில் உள்ள நிலைமையின் அடிப்படையில் தேர்தல்களை நடத்துவோமானால் நாம் இப்பொழுது மேற்கொண்டிருக்கின்ற, பாராளுமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்றதொகுதிகளிலும் இரட்டை உறுப்பினர் தொகுதி கிடையாது என்று நாம் மாற்றியிருக்கிற அந்த முறையை இப்பொழுது நகரசபைத் தேர்தல்களில் அமுலாக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி முடியாது போனால், பாராளுமன்றத் தொகுதிகளுக்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும், இரட்டை உறுப்பினர் தொகுதி முறை இல்லை. ஆனால் நகரசபைகளுக்கு மாத்திரம் இரட்டை உறுப்பினர் தொகுதி முறை உண்டு என்று சொன்னால், அது நாம் வகுத்திருக்கிற சட்டத்திற்கு முரணானது ஆகாதா என்கின்ற ஐயம் எழுகின்றது. அந்த ஐயப்பாட்டினை கனம் அமைச்சர் அவர்கள் தீர யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, மிக அவசரம் அவரசமாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற தீர்மானமும்,இப்படி தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கு எவ்வளவு அவசரப்படுகிறார்களோ அவ்வளவு அவசரமாக இந்த சபையில் கொண்டு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும் அவசரமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டுப்போயிருக்கிறார்கள். ஆகவே, அவசரக் கோலம் அள்ளித் தெளி என்ற முறையில் இது இருக்க வேண்டாம் என்று எதிர் வரிசையில் இருந்துக் கொண்டிருக்கும் நாங்கள் விரும்பு கின்றோமே தவிர, தேர்தலுக்கு பயந்தோ, அல்லது தேர்தலில் ஆளும் கட்சியை சந்திக்க இயலாது என்ற அச்சத்தினாலோ நாங்கள் இதை எதிர்க்கிறோம் என்று நீங்கள் தயவுசெய்து மனதில் வைத்துக்கொள்ளவேண்டாம். திரு மாதா கவுடர் அவர்கள் பேசும்பொழுது 'நாங்கள் உடனே நாங்கள்

பயந்துக்கொண்டு தேர்தலை நடத்தவில்லை என்று கெட்ட பெயர் எங்களுக்கு வராதா?' என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் எதிர்க்கட்சி சார்பில் உறுதியளிக்கத்தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட வாதத்தின் காரணமாக நீங்கள் தேர்தலை ஒத்தி வைத்தீர்கள் என்று யாரும் சொல்லபோவதில்லை. ஆகவே, தயவுசெய்து அந்த வாதத்தை ஆளும் கட்சியினர் விட்டுவிட்டு, இதை சீர்தூக்கி பார்த்து, நடை பெறுகின்ற தேர்தல் செம்மையாக நடைபெறவேண்டும். 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை கையில் வைத்துக்கொண்டு 1951-ம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொல்லுவது ஜனநாயகத்திற்கு முற்றிலும் புறம்பானது, முற்றிலும் முரணானது, அதில் ஈடுபடவேண்டாம், ஈடுபடவேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## திருவள்ளுவர் தினம் - அரசு விடுமுறை

**உரை : 5** நாள் : 21.11.1963

**கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, என் கட்சியைச் சார்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் பேசத்தொடங்கும் போது திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் இந்த மன்றத்தில் எல்லா கட்சிகளினுடைய பெரும் பான்மையான ஆதரவோடு நிறைவேற இருக்கின்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி இந்த மன்றத்திலே எதிர்கட்சியினரைப்பற்றிச் சுட்டிக் காட்டுகிற நேரத்திலே, நீங்கள் கொண்டு வருகிற நல்ல திட்டங்களை நாங்கள் வேண்டாமென்றா சொல்கிறோம்? நீங்கள் சொல்கிற நல்ல கொள்கைகளை நிறைவேற்ற முடியாது என்றா மறுக்கிறோம்?'' என மிகத் தெளிவாக எதிர்க்கட்சியினரைப் பார்த்து கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முழுக்க முழுக்க உடன்பாடான, எவ்வளவு வேறுபாடும் தெரிவிக்காத தீர்மானம் இப்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால், நிச்சயமாக இந்த நன்னாளில் இந்தத் தீர்மானம் நிறைவேறி இந்த நன்னாளே தமிழகத்தின் புனித நாளாகப் போகிறது என்ற நம்பிக்கையோடு நான் பேசிக்கொண்டிருக் கிறேன்.

திருவள்ளுவருடைய நினைவை விடுமுறை நாளாக ஆக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சொந்தக்காரர்கள் திராவிட

முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்று நான் எடுத்துக் கூற விரும்பவில்லை. அப்படிப்பட்ட நல்ல கருத்தை காங்கிரஸ் இயக்கத்தில் உள்ளவர்களும் கூடப் பரப்பி வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் குறிப்பாக அடையாளமாகச் சொல்ல வேண்டுமென்றால் காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமிழக மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றம் சென்று அங்கே டில்லி அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றபோது அஞ்சல் தலையின் மீது திருவள்ளுவருடைய உருவத்தைப் பொறிக்க வேண்டுமென்ற கருத்தினுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அதைச் செயல்படுத்தியும் வைத்திருக்கிறார்கள் என்பதை என்றென்றும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அந்த நல்ல செயலை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. அந்த அடிப்படையில் மேலும் நம்பிக்கையோடு இந்தத் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேறும் என்ற கருத்தோடு நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் திருவள்ளுவருடைய நாள் ஒன்றினை அரசாங்கத்தார் குறித்து அதை விடுமுறையாக ஆக்க வேண்டும் என்ற தீர்மானம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் நான் மற்றொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த சட்ட மன்றத்தில் ஒரு நாள் விவாதத்தின்போது திருவள்ளுவர் படம் ஒன்றினை இந்த மாமன்றத்தில் வைக்கவேண்டுமென்ற கருத்தை நான் வெளியிட்டேன். அந்தப் படத்தை நானே வாங்கித் தருவதாக இருந்தால், என்னுடைய அன்பளிப்பாக தருவதாக இருந்தால், அதை அந்த மன்றத்தில் வைப்பதற்கு ஆட்சேபனை இல்லை என மறைந்த மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணா ராவ் அவர்கள் தெரிவித்தார்கள். திருவள்ளுவர் படத்தை அன்பளிப்பாக தருவதற்கு நான் இசைந்தபோது அந்தப் படத்தை இந்த மாமன்றத்தில் வைக்கும் பிரச்சினை பற்றி அவர்கள் ஆராய்ந்தபோது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இந்த மன்றத்திற்குள் அந்தப் படத்தை மாட்டுவது என்பது இயலாது. இந்த மன்றத்தை ஒட்டி வெளியில் இருக்கிற தாழ்வாரத்தில்தான் மாட்ட முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கான காரணத்தை நான் கேட்ட நேரத்தில், இப்போது நான்

திருவள்ளுவர் படத்தை இந்த மண்டபத்துக்குள் வைத்தால் பின்னர் வேறு ஒருவர் கம்பரின் படம் வைக்கவேண்டுமென்று சொல்கிறார், இன்னொருவர் காளமேகத்தின் படத்தை வைக்க வேண்டுமென்று சொல்கிறார். இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடி உரிமைப் பிரச்சினையை எழுப்புவார்கள் என்று சொல்லப்பட்டது. இந்த மன்றத்தில் உத்தமர் காந்தியின் படமும், திரு. இராசகோபாலாசாரியாரின் படமும் மாட்டப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன. எத்தனையோ அரசியல் கட்சிக்காரர்கள் இங்கே இருந்திருக் கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் இருந்திருக்கிறார்கள். இங்கே காந்தி படம் இல்லையா, இராசாசி படம் இல்லையா, படேல் படத்தை மாட்டவேண்டும் என்றோ அல்லது வேறு ஒரு கட்சித் தலைவர் படத்தை மாட்ட வேண்டுமென்றோ இதுவரை ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பவில்லை. ஆகவே இந்தத் தீர்மானம் இந்த சபையில் ஏகமனதாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு பேசிக்கொண்டிருக்கிற நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் காந்தியார் படத்தைப் போல, இராஜகோபாலாசாரி யார் படத்தைப் போல, திருவள்ளுவர் படமும், இந்த மன்றத்தில் வைக்கப்பட்டு, இந்த மன்றத்தை அலங்கரிக்க வேண்டும் என்று நான் அவர்களை மிகமிகப் பணிவன்புடன், தமிழ் உணர்ச்சியுடன் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''திருவள்ளுவருடைய நாள் என்று எந்த நாளை அனுஷ்டிப்பது? அதிலே புலவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறதே'' என்ற காரணத்தைக் காட்டி அந்த முறையில் தட்டிக் கழிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயலலாம். விடுதலைப் போராட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்ட நேரத்தில் வெள்ளைக்காரன் அப்படித் தான் ஒரு காரணத்தைக் காட்டி, ''உங்களுக்குள் ஒற்றுமை இல்லையே. நீங்கள் ஒற்றுமையாக வந்தால் சுயராஜ்யம் தந்துவிடுகிறேன்'' என்று சொல்லி தட்டிக் கழித்து வந்தான் என்பதை காங்கிரஸ் கட்சி அமைச்சர்களே பல மேடைகளில் பேசி கேலி செய்தது உண்டு அப்படி ''புலவர்களே, நீங்கள் எல்லாம் ஒற்றுமையாக, ஒருமுகப்பட்டு திருவள்ளுவர்

தினம் என்று எந்த நாளைக் குறிப்பிடலாம் என்று சொல்லுங்கள், அதற்குப் பிறகு அந்த நாளை அரசாங்கம் விடுமுறை தினமாக அனுஷ்டிப்பது பற்றி பரிசீலனை செய்யும்'' என்று சமாதானம் சொல்வதிலே கனம் முதல் அமைச்சர் அவர்கள் கைதேர்ந்த வர்கள் என்று நாம் உணர்ந்திருக்கிறோம். அத்தகைய சமாதானத்தை முதல் அமைச்சர் அவர்கள் தமக்கு கேடயமாக ஆக்கிக் கொள்ளலாம். புலவர் குழுவைக் கூட்டியோ அல்லது புலவர்களுடைய ஒருமுகப்பட்ட கருத்தைத் தெரிந்துக் கொண்டோ ஒரு நாளைக் குறிப்பிடுவது என்பது இயலாத காரியமானால், புலவர்களுக்குள் ஒருமனப்பட்ட கருத்து வராவிட்டாலும் புலவர்கள் ஒன்று கூடிய நாளையே திருவள்ளு வருடைய நாளாகக் குறிப்பிட்டு அதை அரசாங்க விடுமுறை தினமாக அனுஷ்டிக்கலாம். அல்லது அந்த வம்பே வேண்டாம் என்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற இந்த நாளையே திருவள்ளுவருடைய நாள், இதுவே விடுமுறை நாளாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் செய்யலாம் இன்னும் கொஞ்சம் சுவையாகச் சொல்லப் போனால் - திருவள்ளுவருடைய நாளாக, விடுமுறை தினமாக விடுவதற்கு ஏற்ற நாள் முதல் அமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள். அந்த நாளையேகூட திருவள்ளுவருடைய நாளாகக் கொண்டாடலாம். ஆகவே திருவள்ளுவருடைய நாள் என்று ஒரு தினத்தை விடுமுறை நாளாக வைத்துக் கொண்டாடுவதற்கு, எந்த நாளை அப்படி அனுஷ்டிப்பது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறதே என்று மயங்காமல், புலவர்களிடையே ஒற்றுமை இல்லையே என்று ஏங்காமல் - அதன் காரணமாக இந்தப்பிரச்சினையைத் தட்டிக் கழிக்காமல், சமாதானம் சொல்லி இந்தத் தீர்மானத்தை ஏற்காமல் விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட நாளையேகூட கொண்டாடலாம் என்று கனம் அங்கத்தினர் கருதவில்லையா?

**கலைஞர். மு. கருணாநிதி :** இந்த உறுதியை கனம் அங்கத்தினரிடமிருந்து நான் எதிர்ப்பார்க்கவில்லை. இந்த உறுதியை கனம் அமைச்சர் அவர்கள் தருவார்களானால்

அதுபற்றி யோசிக்கத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் கூறிய குறளுக்கு ஏற்ற இலக்கணம் பொருந்தியவர். சுருக்கமாகச் சொல்லப்போனால் திருவள்ளுவர், ஒரு ஆட்சியாளரிடத்தில் மூன்று குணங்கள் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும் என்று வரையறுக்கிறார்.

தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு

என்று வள்ளுவர் கூறினார். அந்த மூன்றும் முழுக்க முழுக்க கைவரப்பெற்ற ஒருவரை இந்தத் தமிழகம் தவம் கிடந்து முதல் அமைச்சராகப் பெற்றிருக்கிறது என்று தயங்காமல் கூறலாம். திரு. பக்தவத்சலம் அவர்கள், தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று குணங்களும் நிரம்பப் பெற்ற முதல் அமைச்சராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வயதான காலத்திலும் இப்படிப்பட்ட முதிய பருவத்திலும் அவர்கள் உற்சாகம் குன்றாமல் ஓடியாடி வள்ளுவர் யாத்த குறளுக்கு ஏற்றபடி தூங்காமல் பணியாற்றி வருகிறார்கள். கல்வியைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதில்லை. நிரம்பக் கற்றவர். நன்றாகக் கற்றுத் தெளிந்தவர். அதுபற்றி எடுத்துச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். துணிவுடைமை என்று எடுத்துக் கொண்டால், டெல்லி சர்க்காரிடத்திலே சென்று நம்முடைய உரிமைகளுக்காகப் போராடுவதில் வேண்டுமானால் கொஞ்சம் குறைச்சலாக இருப்பார்களே தவிர, எதிர்க்கட்சிக் காரர்களே மிரட்டுவதில் அவர்களுக்கு இருக்கிற துணிவுடைமை வேறு யாருக்கும் கிடையாது என்பது நிச்சயமாகத் தெரியும். தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்று இந்த மூன்று அழகான குணங்களையும் பெற்றிருக்கிற நமது முதல் அமைச்சர் அவர்களுடைய காலத்திலேயே இந்தத் திருவள்ளுவருடைய நாளை விடுமுறை நாளாகக் கொண்டாடுவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் எதிர்கால சந்ததிகள் அவர்களை என்றென்றும் வாழ்த்தத் தயாராய் இருப்பார்கள். நான் இன்னும் ஒரு உண்மையை இந்தச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்ட

விழைகிறேன். மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைவிடுமுறை தினமாக விட்டு வருகிறோம். ஒரு திங்களில், ஒரு இரண்டாம் சனிக்கிழமையைக் கூட திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் கொண்டாட விடுமுறை தினம் என்று அறிவிக்கலாம் - இரண்டாம் சனிக்கிழமையன்று என அமையாது திங்கள்கிழமை, அல்லது செவ்வாய்க்கிழமை என்று வருமானால் அந்த திங்களில் - இரண்டாம் சனிக்கிழமையை வேலை நாளாகக் கொண்டுவிட்டு - திருவள்ளுவருடைய நினைவு நாள் என்று குறிக்கப்பட்ட தினம் என்று வருகிறதோ அன்றைக்கு விடுமுறை அளிக்க அரசாங்கம் முன்வரலாம். திருவள்ளுவருடைய தினத்தை நவம்பர் மாதம் கொண்டாடுவது என்றால் - நவம்பர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை விடுவதற்கு பதிலாக அந்தத் திங்களில் திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் குறித்ததினத்திற்கு விடுமுறை அளிக்கும்படியாக இந்தத் தீர்மானத்தின் மூலம் அமைத்துக் கொள்ளலாம்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ கனவுகளைக் கண்டிருப்பார்கள் அந்தக் கனவுகள் நனவாகிக்கொண்டு வருவதையும் கண்டிருப் பார்கள். காரணம் சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்து நாட்டுப் பணி செய்து வருகிற முதுபெரும் தலைவர் ஆவர். அதில் ஐயம் இல்லை. அது போல விடுதலை பெற்ற இந்த நாட்டில் சிலபல ஆண்டுகளாகவே அவர் தொடர்ந்து பொறுப்பான பதவிகளில் இருந்து வருகிறார்கள். எல்லோருக்கும் ஓர் ஆசை இருந்து வந்தது. அவர் எப்போது முதல் அமைச்சராக வருவார் என்கிற அந்த ஆசையும் கூட இப்போது நிறைவேறி இருக்கிறது. அவருக்கும் நன்றாகத் தெரியும், ஒருவர் எத்தனைதான் உயர்ந்த உயர்ந்த பொறுப்புமிக்க பதவிகளை வகித்தாலும்கூட அந்தப் பதவிகளே அவருக்குப் பெயரை நிரந்தரமாக அளிப்பது இல்லை. எதிர் காலத்தில் மனிதனது கல்லறையின் மீது பொறிக்கப்படுவது அவனது சிறப்பான சாதனைகளே. அவைதான் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களாக மிளிரும். ஒருவர் வகித்த பதவிகளையே அவருக்குப் புகழாகச்

சூட்டுவதில்லை, ஆகவே, நமது முதல் அமைச்சர் அவர்களுடைய சாதனையாக பொன்னெழுத்துக்களில் என்றென்றும் பொறிக்கப்படத்தக்க புகழாக அமைய இருக்கும் ஒரு காரியத்தைச் செய்யும் ஒரு சந்தர்ப்பத்தைதான் புலவர் கோவிந்தன் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தம் தீர்மானத்தின் மூலம் தந்திருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, திருவள்ளுவர் நாள் என்று ஒரு தினத்தைக் குறிப்பிட்டு விடுமுறை அளித்து, அந்தத் தினத்தில் மக்கள் திருவள்ளுவரை நினைத்து விழா எடுக்கச் சந்தர்ப்பம் அளித்தால் - அந்த விழாவில் திறப்புரையாளர் முதல் அத்தனைபேரும் - இந்த நாள் திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று தம்முடைய முகவுரையாக, சிறப்புரையாகச் சொல்லி திரு. பக்தவத்சலம் அவர்களுக்குச் சிறப்புப் பாயிரம் பாடத் தவற மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு அரிய சந்தர்ப்பத்தை ஒரு எதிர்க்கட்சி இதுவரையிலும் எந்த முதல் அமைச்சருக்கும் தரவில்லை. இப்படிப்பட்ட பொன்னான சந்தர்ப்பம், மற்ற சந்தர்ப்பங்கள் அவரை நாடி வந்தது போலவே, அவரை நாடி வந்திருக்கிறது. நாங்கள் அதை அவருக்கு அளித்திருக்கிறோம். நல்ல சமயம் இதை நழுவ விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



## கல்லூரிகளில் தமிழை பாடமொழியாக்குதல்

**உரை : 6** **நாள் : 29.07.1965**

**கலைஞர் மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் செயலாளர் நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின் மீது என்னுடைய ஆதரவுக் கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகிறேன். அவர்கள் தன்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டது போல, இந்தத் தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கட்சிச் செயற்குழுவிலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்காக பாராட்டுதலையும் நண்பர் மதியழகன் எடுத்து கூறினார்கள். அதே நேரத்திலே, நிலைமைகளைச் சமாளிக்க, ஏற்பட்டுவிட்ட கொந்தளிப்புக்களிலிருந்து மீண்டுகொள்ள, இப்படிப்பட்ட தீர்மானங்கள் பயன்பட வில்லை என்றால், அந்த அளவிலே பாராட்டுக்கள் பயனற்றுப்போகும் என்பதையும் யாரும் உணராமல் இல்லை.

யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளுக்கு, வட்டார மொழிகள் அத்தனையும் இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் செயற்குழு முடிவு எடுத்திருந்தாலும், அதற்கான வழிவகைகளை இன்னும் செயல்படுத்தவில்லை என்பதை நாம் எல்லோரும் உணருகிறோம் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். பொதுவாக, திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த நாங்கள் இந்தியினுடைய ஆதிக்கத்தை எதிர்க்கும் நேரத்தில், திசை திருப்பிவிடும் வகையில் 'இவர்கள் ஆங்கில மோகம் பிடித்த காரணத்தினால் ஆங்கில மோகிகளாக இருப்பதால், இந்தியை எதிர்க்கிறார்கள்' என்று திசை திருப்பிவிடும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உள்ளபடியே ஆங்கில மோகம் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு இல்லை. 1968-ம் ஆண்டிலிருந்தே.

தமிழ் நாட்டில் இந்தியினுடைய ஆதிக்கம் நுழைந்தால், எத்தகைய கொடுமைகள் ஏற்பட்டு விடும், எத்தகைய வகையில் தமிழருடைய எதிர்காலம் இருண்டு விடும் என்று அஞ்சி, 1938-லிருந்து, தமிழகத்தினுடைய தமிழர் இயக்கமாகிய இந்தி எதிர்ப்பில் பல்வேறு புலவர்களும், தமிழ் அறிஞர்களும், ஈடுபட்டு இந்தி எதிர்ப்பு இயக்கம் இதுவரையில் தொடர்ந்து நடந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தார் முன்னின்று நடத்துகின்ற ஒரு இயக்கம் என்று அரசியல் ரீதியில் சொல்லப்பட்டாலும், இந்த உணர்வு ஆளும் கட்சியில் உள்ளவர்களுடைய உள்ளத்திலேயும் ஊசல் ஆடாமல் இல்லை. ஆனாலும் பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால், மனத்தில் உள்ள அந்த உண்மையை வெளியிட முடியவில்லை. அப்படி பூட்டப்படுகிறதே தவிர, தவிர்க்கிறார்களே தவிர அவர்களும் தமிழர்களுக்கு ஏற்படவிருக்கும் கேடுபாடுகளை உணராமல் இல்லை, அந்தக் காரணத்தினால்தான். சிலபல நேரங்களில் இப்படிப்பட்ட நாடு போற்றுகின்ற நல்ல தீர்மானங்கள், காங்கிரசினுடைய தலைமையிலிருந்து வெளியிடப்படுகின்றன.

ஆகவே, பொதுவாக ஆங்கிலத்தின் மீது உள்ள மோகம் என்பது ஆதாரம் அற்றது. இதை ஆளும் கட்சியினர் உண்மையாகவே உணர்ந்தால் இந்தியை எதிர்க்கும் எங்களுடைய நல்ல நோக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாக எதிர்க்கும் நோக்கத்தை நிச்சயமாகப் புரிந்து கொள்ளுவார்கள். மறுக்கமாட்டார்கள். ஆங்கில மொழி அவமானச் சின்னம், வெள்ளையன் மொழி அன்னியன் மொழி, அது நாட்டின் மொழியாக இருத்தல் ஆகாது என்று பெரும் தலைவர்கள் இந்தி எதிர்ப்புக்கு பதில் சொல்லும்போது சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். இந்த அவமானச் சின்னம், 1950-ல் அரசியல் நிர்ணய சபை கூடிய நேரத்தில், அரசியல் சட்டத்தைத் தீர்மானித்த நேரத்தில், இன்னும் இந்த மொழி 15 ஆண்டுகள் இருக்கட்டும் என்று, இந்த அவமானச் சின்னத்திற்கு தவணைபோட்டுக் கொடுத்தார்கள். இவர்களே இன்றையதினம், ஆங்கில மோகிகள் என்றும் அது அவமானச் சின்னம் என்றும், இந்தியை எதிர்க்கிறவர்களைப் பார்த்துக் கூறுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் ஆங்கில மோகம் பிடித்தவர்கள் அல்ல. ஆனால் அதே நேரத்தில், ஒரு அன்னிய மொழி தமிழ் மொழியைத்

தாக்கிடவும், தகர்த்திடவும், உருக்குலைத்திடவும், திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதிக்காது. ஆகவே இந்தத் தீர்மானத்தை இந்த சட்ட மன்றம் ஒரு நிலையில் நின்று, ஏகமனதாக நிறை வேற்றி, மத்திய சர்க்காருக்கு நம் உணர்ச்சிகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. எந்த அளவில் தீர்மானம் நிறைவேறினாலும், காங்கிரஸ் செயற் குழுவில் முடிவு எடுத்தாலும், யூனியன் சர்வீஸ் கமிஷன் தேர்வு களில் இடம் பெறமுடியுமா என்றால் இல்லை. சமீபத்தில் ஒரு பத்திரிக்கைக்குக் குறிப்புப் பார்த்தேன். குஜராத்தி, மராத்தி இந்த மொழிகள் பட்டியலில் கூட தமிழ் மொழியை இன்னும் காணவில்லை. தமிழ் மொழி இன்னும் அந்தத் தகுதி பெறாதற்குக் காரணம், தமிழகத்தில் எல்லா கல்லூரிகளிலும் போதனா மொழியாக, பாட மொழியாக, அந்த அளவுக்கு பக்குவம் பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படிக் கல்லூரிகளில் பாட மொழியாக இருக்கும் பக்குவத்தைப் பெறாமல் இருப்பதால், தேர்வு மொழிகளில் ஒன்றாக அது இன்றைக்கு எடுக்கப் படவில்லை, காலப் போக்கில் சேர்க்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆகட்டும் பார்க்கலாம், விரையில் வரும் என்று சொல்லுவது, உள்ளபடியே, தமிழகத்திலே இருக்கிறவர்களை ஏமாற்றும் பதில்களே தவிர, வேறொன்றும் இல்லை. இன்றைக்கு தமிழ் பாடமொழியாகக் கல்லூரிகளில் இல்லை என்கின்ற காரணம், சமாதானம், சரியா இல்லையா? அப்படிக் கல்லூரிகளில் அது பாடமொழியாக செய்யப்படாததற்கு காரணமும் பொறுப்பும், நாட்டை ஆளும் காங்கிரஸ் அமைச்சரவையைச் சார்ந்ததுதானே? கல்வி மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் திரு. சுப்பிரமணியம் இருந்த காலத்தில் தமிழைப் பாட மொழியாக்க அவர்கள் எடுத்த முயற்சிகளெல்லாம் ஏன் பயன்தராமல் போய்விட்டன? அது ஏன் நீடித்து நடைபெறவில்லை? அப்படி திரு. சுப்பிரமணியம் எடுத்துக் கொண்ட முயற்சிகளைச் செயல் படுத்தாததால்தானே இன்றைக்கு யூனியன் கமிஷன் தேர்வுகளுக்கு தமிழ் மொழியும் இடம் பெறமுடியவில்லை? வட்டார மொழிகள் இடம் பெறவேண்டும் என்று சொல்லும்போது, தமிழ் இடம் பெறமுடியாத காரணம் அது தானே. குஜராத்தியும், மற்ற மொழிகளும் அடைந்த தகுதி, தமிழுக்கு வராததற்குக் காரணம், அது கல்லூரிகளில் பாடமொழியாக இருக்கவில்லை என்பதுதானா? ஆகவே, அது சர்க்காருடைய அசிரத்தையைக் காட்டுகிறது. மேற்கொண்டு நல்ல

முயற்சிகளை இந்த சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகிறார்கள். இதையே சமாதானமாக தமிழகத்தைத் தடைப்படுத்த விரும்புகிறவர்கள் கையாளுகிறார்கள். இதைக் கண்டு நாம் உண்மையிலேயே வெட்கப்படவேண்டியவர்களாக இருக்கிறோம்.

'தமிழ் பாட மொழியாக ஆவதற்கு மாணவர்களிடத்தில் உற்சாகம் இல்லை, மாணவர்களிடத்திலே உற்சாகமும் அக்கறையும் இல்லாத காரணத்தால் சர்க்கார் எவ்வளவோ முயன்றும் அதைப் பாட மொழியாக ஆக்க முடியவில்லை' என்ற சமாதானத்தை அடிக்கடி முதல் அமைச்சர் சட்ட மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஒரு நல்ல முயற்சியிலே ஈடுபடத்தான் மதுரைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள், ''ஆட்சியினுடைய எண்ணமோ, காங்கிரஸ்காரர்களுடைய எண்ணமோ தமிழைப் பாட மொழியாக ஆக்கவேண்டும் என்று இருக்கிறது. தமிழைப் பாட மொழியாகக் கல்லூரிகளில் கொண்டு வருவதற்கேற்ற அளவுக்கு மாணவர்களிடத்தில் உற்சாகம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் ஆசைக்கு அனுசரணையாக மாணவர்களை உற்சாகப்படுத்தவேண்டும் என்கிற புனிதமான நோக்கோடு மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டும் என்கிற பிரசாரத்திலே அவர்களை ஈடுபடுத்தி, அந்த மாணவர்களுக்கு அக்கறையும் உற்சாகமும் அளிப்பதற்காகத்தான் மதுரைக் கல்லூரியினுடைய பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் ஒரு வழிநடைப் பயணத்தை மதுரையிலிருந்து சென்னை நகரம் வரையில் மேற்கொண்டு எங்கெங்கே கல்லூரி இருக்கிறதோ அந்தக் கல்லூரி இருக்கின்ற நகரங்களுக்கெல்லாம் வந்து, அவரோடு ஐம்பது புலவர்களும் கால்நடையாக வந்து, மாணவர்களைச் சந்தித்து அவர்களிடம் 'ஆட்சியினர் தமிழைக் கல்லூரிகளிலே பாட மொழியாக ஆக்குவதற்கான அக்கறை காட்டுகிறார்கள். மாணவர்கள்தான் அதிலே சரியானபடி உற்சாகம் காட்டவில்லை என்று குறைப்பட்டுக்கொள்கிறார்கள். ஆகவே மாணவர்கள் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக்கும் முயற்சியில் அரசாங்கத்திற்கு ஆதரவு தரவேண்டும். என்று கேட்டுக்

கொள்வதற்காக அவர் எடுத்த முயற்சியும் அரசாங்கத்தாரால் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. அவர் கைது செய்யப்பட்டு இன்றையதினம் பரோலில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்களைச் சந்தித்து அவர்களுக்கு நல்லூரை கூறவேண்டிய ஒரு பேராசிரியர் அனுதினமும் அங்கேயிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கையெழுத்துப் போடவேண்டியிருக்கிற ஒரு அவல நிலையைத் தமிழ் தாய் சார்பாக, தமிழக மக்கள் சார்பாக நாம் அவர்களுக்கு அளித்திருக்கிறோம். அங்கே மாணவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்துவதற்குப் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் எடுத்த முயற்சியைப் போன்ற நல்ல முயற்சிகளை ஆங்காங்கு இருக்கும் பேராசிரியர்கள் எடுப்பதற்கு இந்தச் சர்க்கார் அனுசரணையாக இருக்க வேண்டும். இதை ஏன் வலியுறுத்திச் சொல்கிறேன் என்றால், கல்லூரிகளிலே தமிழ்ப் பாடமொழியாக இல்லாத காரணத்தால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தை இயற்றியதற்குப் பிறகு கூட, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களின் எண்ணம் அது என்று தெரிந்த பிறகும் கூட, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் தேர்வில் தமிழுக்கு உடனடியாக இடம் தர முடியாது என்றும் தமிழ் அந்தத் தகுதியைப் பெறவில்லை என்றும் பதில் தரப்பட்டிருக்கிறது ஆகவே, உடனடியாகச் செய்யவேண்டியது என்னவென்றால், தமிழைக் கல்லூரிகளில் பாட மொழியாக ஆக்கும் முயற்சிகள் வெற்றிபெற்றாக வேண்டும், அதற்கு மாணவர்களைத் தயாரித்தாகவேண்டும், அந்த முயற்சியில் ஈடுபடுகிற பேராசிரியர்களைத் தடுக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முறையை வேண்டுமானால் மாற்றிக் கொள்ளுங்கள் அல்லது அவர்களுக்கு அறிவித்து, அந்த வகையிலே தமிழைக் கல்லூரிகளில் பாட மொழி ஆக்குகின்ற முயற்சியை வெற்றிகரமாக ஆக்கி, அதன்மூலம் இன்றையதினம் மத்திய சர்க்கார் தமிழுக்கு உடனடியாக இடம் அளிக்க முடியாததற்கு இதுதான் காரணம் என்று சொல்கிற நொண்டிச் சமாதானத்தை இனியும் சொல்வதற்கு இடமளிக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு, நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

# அரசியலில் மாணவர்கள் ஈடுபடுவது குறித்து

**உரை : 7** **நாள் : 5.08.1965**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் தலைவரவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கு நான் கூற விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் ஆங்கிலத்திலேயும், தமிழிலேயும் மொழி பெயர்க்கப்பட்டு இந்த மன்றத்திலே வைக்கப் பட்டிருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பிலே இருக்கின்ற ஒரு சிறு குழப்பத்தை நான் இந்த மன்றத்திலே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கு மென்று கருதுகிறேன். ஆங்கிலத்தில் இருக்கும் தீர்மானத்தில் கவுன்சில் என்று குறிப்பிட்டிருக்கிறது. தமிழில் இருப்பதில் சட்டமன்றம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களிடம்கூட நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அவர்களும் அதனை ஓரளவு ஒத்துக் கொண்டார்கள் என்றே கருதுகிறேன். எற்கனவே இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அழைப்பது இன்றைய தினம் வழக்கத்திலே இருந்துவரும் ஒன்றாகிவிட்டது. ஆகவே இந்தமன்றம் சட்ட மன்றம் என்று அழைக்கப்படுகிற நேரத்தில் கவுன்சிலை மேல் சபையை சட்டமன்றம் என்று அழைப்பதால் ஒரு புதிய குழப்பம் ஏற்பட ஏதுவாகிறது. நம்முடைய அரசாங்க புத்தகங்களில் சட்ட மன்றம் மேல் சபையையும், சட்டசபை கீழ்சபையையும் குறிக்கும்படி இருக்கிறது. மேல் சபை, கீழ் சபை என்று இருப்பதுகூட அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. ஆகவே, நமது மன்றமே சட்டமன்றம் என்று நாட்டிலே வழங்கப்படுகின்ற காரணத்தால் இதனைத் தொடர்ந்து சட்ட மன்றம் என்று அழைப்பதற்கும், மேல் சபைக்கு வேறு ஒரு

பெயரை வைத்துக் கொள்வதற்கும் இந்த மன்றமும், முதலமைச்சர் அவர்களும் தக்க முடிவினை மேற்கொள்ளவேண்டுமென்று நான்கேட்டுக்கொள்கிறேன். அந்த முடிவை மேற்கொள்ளுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சித்தலைவர் அவர்களை கலந்து ஆலோசிப்பார்கள் என்று கருதுகிறேன். எங்களுடைய தலைவரால் தெரிவிக்கப்படுகின்ற கொள்கையைப் பொறுத்த வேறுபாடான கொள்கை இருக்கலாமே தவிர, அவருடைய தமிழ் அறிவிலும் தமிழ்ப் பயிற்சியிலும் கனம் முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக நம்பிக்கை இருக்குமென்ற காரணத்தால் அவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பெயர்த்திருத்தத்தை நிச்சயமாகக் கொண்டு வரவேண்டும். சட்ட மன்றம் எது, சட்ட சபை எது என்ற குழப்பம் மேலும் மேலும் முற்றாமல் இருக்க இது வழி கோலுவதாக அமையும் என்று கருதுகிறேன். நண்பர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியிலிருந்து திரு. செல்வராஜன் அவர்களும் ஆதரித்திருக்கிறார்கள். அவர் ஆதரித்ததைப் போலவே ஆளுங்கட்சியிலுள்ள மற்றவர்களும் அதை ஆதரிப்பார்கள் என்று நம்பினோம் . ஆனால் அதை எதிர்த்து ஆளுங்கட்சித்தரப்பைச் சார்ந்தவர்கள் பேசினார்கள். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காகத்தான் இதை எதிர்க்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாது மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாது. என்று ஆளுங்கட்சியினர் கூறுகின்ற நேரத்தில் அவர்கள் கூறுகின்ற 'அரசியலுக்கு' முன்பு தொக்கி இருக்கும் வார்த்தைகள் 'திராவிட முன்னேற்றக் கழக அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதுதான். ஆசிரியர்கள், மாணவர்கள் காங்கிரஸ் தரப்பிலே அரசியலில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் அதை மனதார எதிர்ப்பார்களா? இல்லையென்பதைத் தான் பல நிகழ்ச்சிகள் தெளிவாகக் காட்டுகின்றன. எத்தனையோ மேடைகளில், அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற அரசியல் மேடைகளில் காங்கிரஸ் சார்பாக ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டு பேசியிருப்பதற்கான பல ஆதாரங்களை என்னால் காட்ட முடியும். என்னுடைய தொகுதியில் இருந்தே கூடப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும்.

மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது கருத்து என்ற இதே மன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டு, எங்களுடைய

தலைவர் அண்ணா அவர்கள் இங்கு இருந்த நேரத்திலே, நிதியமைச்சராக கனம் சுப்பிரமணியம் அவர்கள் இருந்த நேரத்திலே 'மாணவர்களை அரசியலிலே ஈடுபடுத்தக்கூடாது' என்பதிலே ஒரு ஒருமைப்பாடான கருத்து மேற்கொள்ளப் பட்டது. அது எல்லாக் கட்சிக்காரர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்தக் கருத்து அடுத்த எட்டாவது மாதம் மீறப்பட்டது. தஞ்சையில் நடைப்பெற்ற காங்கிரஸ் மாணவர்கள் மாநாட்டில் அப்போது நிதியமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் பங்கு பெற்று அந்த மாநாட்டை நடத்தி வைத்தார்கள். இப்போது மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று தீவிரமாகப் பேசப்படுகின்ற நேரம் அந்த மாணவர்கள் திராவிட முன்னேற்ற கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டால் அது அரசியலாகும். அதே நேரத்திலே அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களுடைய ஜோதியைத் தூக்கிக் கொண்டு ஓடியது 63 மாணவர்கள்தான் என்று பத்திரிக்கையில் போட்டிருக்கிறார்கள், எதிர்க்கட்சி அரசியலில் கலந்துக் கொள்ளக் கூடாது, காங்கிரஸ் அரசியலிலே கலந்து கொள்ளலாம் என்பதை மனதிலே வைத்துத்தான் பேசப்படுகிறது என்ற காரணத்தால்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : மாணவர்கள் தனி ஹோதாவிலே அரசியல் ஞானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதிலே ஒன்றும் ஆட்சேபம் இல்லை. தனி ஹோதாவில் அரசியலில் அக்கறை செலுத்துவதிலே தவறில்லை. ஒரு கட்சிக்கு அவர்களைப் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து கொள்ளக்கூடாது என்பதுதான் பொதுவான கருத்து. எப்போது இந்த உடன்பாடு ஏற்பட்டதோ, எப்போது இந்த மன்றத்திலே பேசப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதோ அதற்கு சில மாதங்களுக்குப் பிறகு நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் போயிருந்தேன். அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அப்போது என்னிடம் சில காகிதங்களை மாணவர்கள் கொடுத்தார்கள். அவற்றோடு தவறுதலாக ஒரு காகிதத்தையும் என்னிடம் கொடுத்து விட்டார்கள். அந்த காகிதத்தை அப்போதைய கல்வியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பினேன். அது ஒரு ரசீது. சிதம்பரம் திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளை மன்றத்திற்கு சந்தாவாக 25 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதற்காக அந்த மாணவன் ரசீதைப் பெற்றிருக்கிறான். அதைத் தான் நான் கல்வியமைச்சருடைய கவனத்திற்கு அனுப்பினேன்.

**கலைஞர் மு. கருணாநிதி** : 25 ரூபாய் சந்தா வசூலிக்கின்ற அளவுக்கு உள்ள அவ்வளவு பணக்கார இயக்கம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். மெம்பராகச் சேர எட்டணாக் கொடுக்கவே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். நான் சொல்ல வந்தது-இந்த மன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, திரு. சுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸ் மாணவர்கள் மாநாட்டை நடத்திய மாணவர்களை அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு ஊக்குவித்தார்கள் என்பதைத்தான் குறிப்பிட விரும்பினேன். மாணவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடாமல் அரசியல் அறிவு பெறலாமென்ற அமைச்சர் அவர்களுடைய வாதத்தை நாங்கள் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மாணவர்கள் காமராஜர் ஜோதியை எடுத்துக் கொண்டு சென்றதைப் போல் வேறு ஒரு எதிர் கட்சியைச் சேர்ந்த தலைவருடைய ஜோதியை எடுத்துக்கொண்டு சென்றிருந்தால் அவர்கள் இன்று பள்ளிக் கூடத்திலா இருப்பார்கள்? பாளையங்கோட்டை சிறையில் அல்லவா இருப்பார்கள். ஆகவேதான் அதைப் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு வந்தேனேயல்லாமல் வேறு அல்ல. மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது என்பது பொதுவான கருத்து எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்புடைய கருத்து, ஆனால் ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகுதியின் சார்பாக அவர்கள் மேலவையிலே இடம் பெற்றுத் தங்களுடைய பல்வேறு நிலைமைகளுக்காக, ஊதிய உயர்வு வாழ்க்கை வசதிகளுக்காக, அவர்களுக்குத் தரப்படவேண்டிய வாய்ப்புகளுக்காக வாதாடவும், சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லவும் பெறுகின்ற உரிமை அறுக்கப்படாமல் மேலும் அந்த உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வைத்திருக்கிறார்கள். தங்களுடைய உரிமைகளுக்காக வாதாடவும், தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லவும் வழி வகுக்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியினர் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

894.8115
TAM



CO14002
CO02286

## மத்திய அரசிடம் இருந்து கோதுமை பெறுதல்

**உரை : 8** **நாள் : 31.03.1969**

**மாண்புமிகு திரு.மு.கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே இன்று இந்த மாமன்றத்தின் முன்னால் நான் வைத்துள்ள தீர்மானத்தினையொட்டி எதிர்க்கட்சித் தலைவரும், தோழமைக் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய சீரிய நற்கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை எதிர்கட்சித்தலைவர் அவர்கள், ''ஆதரிக்கிறேன்'' என்று முடித்த அந்த சொற்றொடரைத் தமிழ் நாட்டினுடைய நன்மைக்காக நான் பயன்படுத்திக் கொள்வதில் தவறு இல்லை யென்று கருதுகிறேன். ''ஆதரிக்கிறேன்'' என்ற வார்த்தைக்கு முன்னதாக அவர்கள் பேசிய நீண்டநேரப் பேச்சில் முன்னேற்றக் கழக அரசை எந்த அளவுக்கு அவர் தாக்கிவிட வேண்டுமோ, அந்த அளவுக்குத் தாக்குதல்களையெல்லாம் நடத்தி முடித்திருக்கிறார்கள். இதை அவர் உள்ளபடியே கருதிச் செய்தாரா என்பது என்னைப் பொருத்தவரையிலும் ஐயப்பட்டிற் குரிய ஒன்று. மற்றவர்கள் கேட்பார்களே, என்று அவர்களுக்காக வாவது அவர் அதையெல்லாம் பேச வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே, இந்த மாமன்றத்தைக் கூட்டிப் பொதுவாக இந்தத் தீர்மானத்தைப் போடவேண்டு மென்று நானும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் அவர்களும் கூடிப் பேசித்தான் இன்றைய தினம் இந்த மாமன்றம் கூட்டப் பட்டிருக்கிறது ஆகவே கூட்டப்பட்டு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கும்போது, இந்தத் தீர்மானத்தை யொட்டியே அவர் நமக்கு ஆதரவாகவும், மத்திய அரசை மேலும் வலியுறுத்துகின்ற முறையிலும் பேசுவார் என்று எதிர்

பார்த்தேன். ஆனால் அவர் மிகுந்த சந்தோஷப்பட்டார். ''உங்கள் ஜகஜீவன்ராம் அவர்கள் 3 லட்சம் டன் இல்லையென்று சொல்லி கைவிரித்து விட்டார்'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னார். நல்ல வேளையாக இந்த மன்றத்திலே உள்ள குறிப்பெழுதுகின்ற அலுவலாளர்களும், பத்திரிகை நிருபர்களும் வார்த்தைகளைத் தான் எழுதிக் கொள்கிறார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவருடைய முகபாவத்தை எழுதிக்கொள்ள மாட்டார்கள்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:** இவர்கள் 1 லட்சம் டன்தான் கேட்டார்கள், திடீரென்று மூன்று லட்சம் ஆகிவிட்டது. ஜகஜீவன் ராம் அவர்கள் எங்களுடைய அமைச்சராக இருந்தாலும், உங்களுடன் நட்பும் தோழமையும் உள்ளவர்கள். 1 லட்சம் இல்லை, 10 ஆயிரம் டன்தான் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள்கூட இல்லையென்று சொல்லிவிட்டாரே என்றுதான் சொன்னேன். அவர்கள் அதிகமாகக் கொடுத்தால் எனக்கு அதிலே ஒன்றும் வருத்தம் கிடையாது. அவ்வாறு மனதில் வைத்துப் பேசுவதாகக் கருதவேண்டாம். முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு தூரம் பொறுப்பும் அக்கறையும் இருக்கிறதோ அதைவிட அதிகமான பொறுப்பும், அக்கறையும் எனக்கு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது உள்ள நிலை, மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்ல. உண்மையான நிலையை விளக்கி இருக்கிறார்கள். உலகத்திலே கிடைக்காததைக் கேட்டிருக்கிறார்கள். உலகத்திலே கிடைக்காததைக் கேட்டால் அவர்கள் எப்படிக் கொடுப்பார்கள்?

**மாண்புமிகு திரு. மு.கருணாநிதி:** நாங்கள் ஒன்றும் பாரிஜாத மலரைக் கேட்கவில்லை. உலகத்தில் கிடைக்காததைக் கேட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். புராணகாலத்திலே, கிடைக்காத ஒன்றைப் பெற்றுவா என்று சொல்லி, அப்படிப் பெற்று வந்தால்தான் ராஜகுமாரியைத் திரு மணம் செய்து வைப்பேன் என்பது புராணகாலத்துக் கதைகள். கிடைக்கக் கூடியதைத்தான், தரக்கூடியதைத்தான் தமிழ்நாடு அரசின் சார்பாக நாங்கள் மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு.ஜகஜீவன்ராம் அவர்களைக் கேட்டிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள்- ''முன்பு ஒரு லட்சம் டன் கேட்டீர்கள், இப்போது 3 லட்சம் டன்

கேட்கிறீர்களே'' என்றார்கள். ''இரண்டு லட்சம் டன்னைப் பதுக்கி வைக்கப் போகிறீர்களா'' என்றும் கேட்டார்கள். நான் மிகவும் வருத்தப்படுகிறேன். பதுக்கல்காரர்களோடு தமிழக அரசையும் இணைத்துப் பேசியதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் இவைகளைப் பற்றிய விமர்சனங்களில் ஈடுபடுவது நல்லதல்ல. எதிர்க்கட்சியின் சார்பில் நம்முடைய நண்பர் திரு.கருத்திருமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார் என்பதை மாத்திரம் இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற வலிவாக ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுக்குக் கொடுக்கிற கோரிக்கைக்கான வலிவாக ஏற்றுக்கொண்டு அதற்காகப் பெருமைப்படுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே வான் பொய்த்ததன் காரணமாக, சென்ற ஆண்டு தென்மேற்குப் பருவமழை இல்லாததால் 17.7 சதவிகிதமும், வட மேற்குப் பருவ மழை சரியாக இல்லாததால் 30.2 சதவிகிதமும் நமக்கு மழை அளவில் போய்விட்டது. தஞ்சை மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் வறட்சி நிலைமை ஏற்பட்டது. நாங்கள், மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது செங்கற்பட்டு, வட ஆற்காடு என்று சொல்லிக் கொண்டிருந்த நேரத்திலே அதோடு தென்னாற்காடும் இணைந்து கொண்டது. இராமநாதபுரம் மாவட்டமும் சேர்ந்து கொண்டது, கோயம்புத்தூர்மாவட்டமும் சேர்ந்து கொண்டது. இப்படி ஒவ்வொரு மாவட்டமாக வறட்சி நிலை மாவட்டங்களோடு நாளுக்குநாள் சேருகின்ற நிலைமை வளர்ந்துவிட்ட காரணத்தால்தான் இந்த வறட்சி நிலையிலிருந்து, உணவுத்துறையைப் பொறுத்தவரை, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக முதலிலே நாம் ஒரு லட்சம் டன் என்று கணக்கிட்டாலும்கூட, அது போதுமானதாக இருக்காது. அதிகமாக மேலும் இரண்டு லட்சம் டன் தேவைப்படும் என்ற அளவிலே மத்திய அரசிடத்திலே இந்தத் தீர்மானத்தின் மூலமாக மொத்தம் மூன்று லட்சம் டன் உணவுப்பொருள் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டிலே பாசன வசதி பெறுகிற நிலங்கள் 40 சதவிகிதம் ஆகும். பாசன வசதி பெறாமல் ஏரி, குளங்களை

மாத்திரம் நம்பியிருக்கிற வான் பார்த்திருக்கிற பகுதிகள் 60 சதவிகிதமாகும். இந்தக் கணக்கை நாம் மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட இந்த 60 சதவிகிதத்தில் வறட்சி நிலையின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்தப் பஞ்ச நிலை சிறிது சிறிதாகத் தலைநீட்டி வருகிறது என்று தமிழரசுக் கழகத்தலைவர் திரு.ம.பொ.சி.அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பையா முதலியார் அவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைநீட்டியது என்றாலும், கடந்த சில மாதங்களிலே மிகுந்த அபாயகரமான அளவுக்கு விரிவடையத்தொடங்கி, அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபிறகு இந்த அரசுப் பொறுப்பை, குறிப்பாக முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டு மற்ற நண்பர்களோடு பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில், நெருக்கடி மிகுந்தது. வறட்சி நிலை பல்வேறு மாவட்டங்களுக்குப் பரவியது. ஆகவே, உடனடியாக பிப்ரவரி திங்கள் 17-ம் நாள் அவசர அவசரமாக அதிகாரிகள் மட்டத்தில் ஒரு மாநாட்டினைக் கூட்டி இந்த மாவட்டங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாகத் துயர் தணிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டுமென்று திட்டமிட்டு அதற்காக ரூ.1,57,00,000 ஒதுக்கினோம். அப்படி ஒதுக்கப்பட்டதில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது ரூ.44,43,000 ஆகும். அதிலே ரூ.28,23,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கிய தொகை ரூ.38 லட்சம். அதிலே 21 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 40 லட்சம் ரூபாய். அதிலே செலவழிக்கப்பட்டது இதுவரை 35 லட்சம் ரூபாய். தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி தாலூக்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 15 லட்சம் ரூபாய். அதில் இதுவரை 14 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக் கிறது திருநெல்வேலி மாவட்டத்திலே தென்காசிக்குச் செலவழித்து விட்டோம் என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்டதே இப்போதுதான். ஒட்டைப்பிடாரம், விளாத்திகுளம், சங்கரன் கோவில், ஆலங்குளம், கடையநல்லூர் போன்ற பகுதிகளுக்காக

ஒதுக்கப்பட்ட தொகை 10 லட்சம் ரூபாய். செலவழிக்கப்பட்டது இதுவரை 8 லட்சம் ரூபாயாகும். சேலத்திற்கு 20 லட்சம் ரூபாய் குடிதண்ணீர்க் கிணறு வெட்ட ஒதுக்கப்பட்டு முழுத் தொகையும் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் அதாவது இன்றோடு செலவழிக்கப்பட்டு முடிகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் ஹொசூர் தாலூகா அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இதுவரை 7 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக் கிறது. மதுரையில் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.75 லட்சம் ரூபாய்; முழுவதும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு என்ன நிவாரணம் அளிக்கலாம் என்பது பரிசீலனையில் உள்ளது. கோவை மாவட்டத்தில் தாராபுரம், பல்லடம், அவனாசி தாலுக்காக்கள் அதிகமாகப் பாதிக்கப் பட்டுள்ளன. கால்நடைகளுக்குத் தீவனம்கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, அங்கே கால்நடைத் தீவனங் களுக்காக 10 லட்சம் ரூபாயும், குடி தண்ணீருக்காக 28 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு கோடி அறுபது லட்சத்திற்கு மேற்பட்ட தொகை இதுவரை செலவழிக்கத் திட்டமிட்டாலும் தற்போது அது இரண்டுகோடி ரூபாய் வரை செலவழிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தமிழ்நாடு அரசின் சார்பாக. பாதிக்கப்பட்ட பகுதிகளிலே செலவழிப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். நாம் மத்திய அரசிடத்திலே உடனடி நிவாரணமாக, ''நீங்கள் இந்தத் தொகையை அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருக் கிறோம். மேலும் அதிகத் தொகை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குத் தீர்மானத்தை நிறைவேற்ற இருக் கிறோம். இந்தப் பணத்தைக் கொடுத்தால் தமிழக அரசு இந்த வேலகளை உடனடியாக மேற்கொள்ளலாம் என்று நம்முடைய நிதியமைச்சர் சட்டமன்றத்தில் விடுத்த வேண்டுகோளுக் கிணங்கவும், நானும் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் டெல்லியில் தலைமை அமைச்சரையும், துணைப் பிரதம அமைச்சர் திரு.மொரார்ஜி தேசாய் அவர்களையும் கண்டு பேசிய நேரத்திலே விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவும் அவர்கள்,

''உடனடியாக வேலைகளைத் தொடங்குங்கள், பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்'' என்று உறுதிமொழிக்கேற்ப வேலை தொடங்கி நடைபெற்றிருக்கிறது. இன்று 12 மணிக்குக் கிடைத்த தகவலின்படி இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கும் பணத்திற்காக ரூ.1,25,00,000 தர மத்திய அரசு சம்மதித் திருக்கிறது என்றநல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்) மற்றும், இன்னும் தேவைப்படுகின்ற தொகையைப் பற்றியும் யோசிக்கிறோம். பரிசீலிக்கின்றோம் என்ற தகவலையும் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ரூபாயைக் கடனாகத் தருவது கூடாது, மானியமாக வழங்க வேண்டும் என்பது நம்முடைய மாநில அரசின் கோரிக்கையாகும். அதையும் மத்தியப் பேரரசு கவனிக்கும் என்று திடமாக நம்புகின்றோம். இப்போது அவர்கள் அனுப்பிவைத்த குழு, சில பகுதிகளைப் பார்வை யிட்டுத் திரும்பியிருக்கிறது. அவர்களுடைய அறிக்கையை மத்திய அரசினிடத்திலே தருவார்கள் அல்லது தந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அறிக்கைக்குப் பிறகுதான் இன்று பகல் 12 மணிக்கு இந்தச் செய்தி கிடைத்திருக்கக்கூடும் என்றும் கருதுகிறேன். நிவாரண வேலைகளுக்காக என்னென்ன திட்டங் களை மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம் அந்தக் குழுவினிடத்திலே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். 1,060 புதிய குழாய்க்கிணறுகளைத் தோண்ட வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதற்காகவே தான் இவைகளைச் சொல்லுகிறேன். தீர்மானத்திலேயே என்னென்ன திட்டங்கள் என்று போடமுடியாது. தீர்மானம், மத்திய அரசு மாநில அரசுக்கு உதவிட வேண்டுமென்ற அந்த வாசகத்தை மையமாகக்கொண்டுதான் நிறைவேற்ற வேண்டும். எப்படி எப்படித் திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம், எங் கெங்கே நிறைவேற்றப் போகிறோம், எந்தெந்த குக்கிராமத்திலே எந்தெந்த ஏரிகளை, எந்தெந்த வடிகால்களை எடுத்து

நிறைவேற்றப் போகிறோம் என்பதற்கான புள்ளி விவரங்களை எல்லாம் தீர்மானத்திலே நாம் சொல்ல முடியாது.

அதற்காகத்தான் அந்தத் தீர்மானத்தையொட்டி இங்கு ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்தோம். அந்த விவாதத்தில் அதைப் பற்றிய திட்டங்கள் எப்படி இருக்கவேண்டுமென்று நீங்கள் கூறவும், அந்தத் திட்டங்கள் இப்படி இப்படி இருக்கும் என்று சமாதானம் நாங்கள் கூறவும்தான் அந்தத் தீர்மானத்தை அடிப் படையாக வைத்து இந்த ஒரு நாளை அந்த விவாதத்திற்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம், 1,060 புது குழாய்க்கிணறுகள் தோண்டுவதற்கும், 1,525 கிணறுகளை ஆழப்படுத்தவும் அந்த வேலைகளுக்காக 38 பவர் ட்ரில்களும், 40, ஹாண்ட்போரிங் செட்ஸும் 180 பாறை உடைக்கிற கருவிகளும், சாதனங்களும், தேவைப்படும் என்று இவைகளுக்கான மொத்தச்செலவு ரூ.3,84,00,000 ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

88,000 ஏக்கர்களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு 70 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் அந்த மத்திய குழுவினிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். தீவிர உரம் இடும் திட்டம், விதைகளை சலுகை விலையில் விநியோகித்தல் இவைகளுக்காக நான்கு கோடி ரூபாய் தேவைப்படலாம். என்றும் நாங்கள் அவர்களிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் நாம் மத்திய அரசிடத்தில் நிதி உதவி கோருகிறோம். அப்படி அவர்கள் தருகிற அந்த நிதி உதவியை, கடனாக அல்லாமல் மானியமாகவே வழங்கவேண்டும் என்று கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அதைத்தான் நமது தமிழரசுக் கழகத் தலைவர் திரு.ம.பொ.சி. அவர்கள் இதற்கு நன்றி கூறவேண்டுமா என்று கேட்டார்கள். கடமை இருக்கிற தல்லவா என்று சொன்னார்கள்: கடமையை அவர்கள் நிறை வேற்றினாலும் நன்றி கூறுவது என்பது ஒரு பண்பாட்டின் அடிப்படையில் நன்றி தெரிவிக்கிறோம். நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில் நாங்கள் இவைகளுக்காக நன்றி தெரிவிக் கிறோம். இன்னும் அதிகப்படியாக செய்தால் அதிகமாக நன்றியை தமிழக அரசிடமிருந்து எதிர்பார்க்கலாம் என்பதற் காகவும் நாம் ஒரு அடையாள பூர்வமாக, முன்னோடியாக அந்த

நன்றியைக் கூறியிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவைப் பொறுத்த வரையில், நான் ஏற்கனவே சொன்னேன். ஒரு லட்சம் டன் முதலில் கேட்டோம். இப்போது மூன்று லட்சம் டன் கேட்கிறோம் என்றால், நிலைமை போகிற போக்கைப் பார்த்தால் எப்படி ஆங்காங்கு இந்த வறட்சி நிலைமை நாட்டில் பல பகுதிகளில் பரவி வருகிறதோ அதே போல் உணவுப் பற்றாக்குறையும் ஏற்பட்டு விடக்கூடும், இங்கு நிலைமை நன்றாக இருந்த நேரத்தில் மத்திய அரசின் பரிந்துரை யின்படி கேரளா போன்ற மாநிலங்களுக்கு நாம் அரிசி வழங்கி யிருக்கிறோம். இலட்சக்கணக்கான டன்கள் தந்திருக்கிறோம். கடைசியாகக் கூட சென்ற ஆண்டு என்று கருதுகிறேன். நமது இன்றைய நிதி அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு மதியழகன் அவர்கள் உணவு அமைச்சராக இருந்த நேரத்தில், 40,000 டன் கேரள மாநிலத்திற்குத் தந்திருக்கிறார்கள். நாம் நன்றாகயிருந்தபோது கொடுத்தோம். மத்திய அரசு பரிந்துரை செய்தது. ஆகவே, அந்த உரிமையோடுதான் இன்று மத்திய அரசைப் பார்த்துக் கேட்கிறோம். அப்படிக் கேட்கிற அதே நேரத்தில் கோதுமையையும் நாம் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

கோதுமை விஷயத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கோதுமைக்கு எதிரிகளாயிற்றே நீங்கள், நீங்கள் கோதுமையை வரவேற்கிறீர்களே, அதற்கு மாலை போட்டு வரவேற்கிறீர்களே என்று பேசினார்கள். நாங்கள் என்றைக்குக் கோதுமைக்கு எதிரிகள்? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் போல் கோதுமை எதிர்ப்புப் போராட்டம் நடத்தினோமா என்றால் இல்லை. கோதுமை தமிழகத்திற்குப் பழக்கப்படாத உணவாக இருக்கிறது. அது மலிவான உணவாக இல்லை. கிராமத்திலுள்ள சாதாரண ஏழை எளிய மக்கள் அரிசியை வாங்கி, சமைத்து, கொஞ்சம் தண்ணீரை ஊற்றி வெறும் சோறாகக் கூட சாப்பிட்டு விட்டுப்போகக் கூடிய அளவிற்கு அவர்களை பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை இரவில் சமைத்து, சோற்றில் தண்ணீரை ஊற்றி, காலையில்

பழைய சோறு என்று சாப்பிட்டு விட்டுப் போகக்கூடிய அள விற்குத் தமிழ் நாட்டிலுள்ள கிராம மக்கள் பழகிக் கொண்டிருக் கிறார்கள். ஆனால், கோதுமையைப் பொறுத்த வரையில் அதை பூரியாகச் சாப்பிட வேண்டும். அல்லது சப்பாத்தியாக அதைப் பக்குவப்படுத்த வேண்டும் என்று ஏதாவது ஒரு பலகார உருவில் கோதுமை இருந்தால்தான் சாப்பிடமுடியும் என்ற அளவிற்குத்தான் கிராம மக்கள் பழக்கப்பட்டிருக்கிறார்கள். வெறும் பூரி சாப்பிட முடியுமா? அதற்குக் கொஞ்சம் உருளைக் கிழங்கு மசாலா இருக்க வேண்டும். திரு கருத்திருமன் அவர்கள் சொல்கிறார்கள், கொஞ்சம் கோழிக் குருமாவும் இருக்க வேண்டும் என்று. அது அவர்களைப் போன்ற வீர சைவர் களுக்குப் பொருத்தமுடையதாக இருக்கலாம்! (சிரிப்பு). அப்படிக் கிராம மக்கள் கோதுமையை பலகாரமாகச் சாப்பிடுவதற்கு முனைந்தால் அது மலிவான விலைக்குக் கிடைக்கக்கூடிய உணவுப் பொருளாக அவர்களுக்கு இருக்க முடியாது. ஆகவேதான், கோதுமையையும் அரிசியைப்போல் சமைப்பதற்கு அவர்கள் கற்றுக் கொண்டாக வேண்டும். நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நான் டெல்லிக்குப் போயிருந்தபோது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு.கே.எஸ்.ராவ் அவர்கள் வீட்டில் ஒரு விருந்து வைத்தார்கள். அந்த விருந்தில் எங் களுக்கு பரிமாரியது கோதுமை உணவு. கோதுமை, அரிசியைப் போல் இரண்டாக உடைக்கப்பட்டு, அரிசியை நாம் வேக வைப்பது போலவே உலையில் இட்டு வேக வைத்து அதை இலையில் சோறு பரிமாறுவது போல் பரிமாறி அதற்கு சாம்பார், பிறகு ரசம், தயிர் இவைகளையெல்லாம் ஊற்றி நாம் அரிசியைச் சாப்பிடுவது போலவே அதை சாப்பிடுவதற்கு அவர்கள் பழகிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன். இப்போதுதான் இந்தப் புதுமுறை எங்களுக்குத் தெரிகிறது. இதைத் தமிழ்நாட்டிற்குச் சென்று தமிழ் நாட்டு மக்களிடத்தில் அறிமுகப்படுத்த முன்னேற்றக் கழக அரசு சார்பாக முயற்சி எடுத்துக் கொள்வேன் என்று குறிப்பிட்டேன். நமது உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அதைப் பற்றிக் கூறிவிட்டு கோதுமையை கிராம மக்கள் ஏற்றுக் கொள்கிற

அளவிற்கு நாம் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்குள்ளாக நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ''பார்த்தீர்களா?'' கோதுமை விரோதிகள் கோதுமைக்கு மாலையிட ஆரம்பித்துவிட்டார்கள்'' என்று சொல்லி, அந்தப் பிரச்சாரத்தின் வேகத்தைக் கெடுத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு.பி.ஜி. கருத்திருமன்:** நானே கோதுமைதான் சாப்பிடுகிறேன். அரிசி சாப்பிடுவது இல்லை. 10 சதவிகிதம் பேர்கள் கோதுமை சாப்பிடத்தான் செய்கிறார்கள். எதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். இப்போது அந்த சூழ்நிலை வந்திருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு.மு.கருணாநிதி:** கோதுமை சர்க்கரை வியாதிக்குக் சிலாக்கியமானதுகூட, அந்த முறையில் கோதுமையைத் தமிழ் நாட்டிலுள்ள கிராம மக்கள் அரிசிச் சோற்றைப் போல் சாப்பிடுவதற்குப் பழகிக் கொள்வதற்கு ஆங்காங்கு கிராமங்களில் இருப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தப் பயிற்சியை ஆங்காங்குள்ள உள்ளாட்சித் துறை அலுவலகத்தில் அலுவல் பார்க்கும் அலுவலர் ஒரு பிரச்சாரமாக ஆக்குவதற்கு இன்று திட்டமிடப் பட்டிருக்கிறது. நல்ல விளம்பரங்களை அரசு சார்பில் பத்திரிகைகளிலே கொடுப்பது, எப்படி கோதுமையைச் சமைப்பது, எப்படி மலிவான விலையில் அதை ஒரு உணவுத் தானியமாகக் கொள்வது என்ற பிரச்சாரங்களில் தமிழக அரசு நிச்சயமாக ஈடுபட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது. இப்போது கோதுமையின் விலை கிலோ 83 காசாக இருக்கிறது. அந்த விலையைக் குறைத்து 65 காசுக்குக் கொடுப்பது என்றதொரு முடிவு எடுப்போமானால் கிராம மக்கள் கோதுமையை வாங்கக் கவரப் படுவார்கள், ஈர்க்கப்படுவார்கள், அப்படி 65 காசுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் மானியம் தந்தாகவேண்டும். அப்படி மானியம் தருவதாகயிருந்தால் ஒரு டன்னுக்கு 180 ரூபாய்

மானியம் ஆகும். இரண்டு லட்சம் டன் கோதுமையைத் தமிழ் நாட்டில் விநியோகிக்கிறோம். என்றால், 3¼ கோடி ரூபாய் கோதுமைக்காக மானியமாகத் தரவேண்டியிருக்கும். அந்த மானியத்தை மத்திய அரசு தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஏனென்றால் கோதுமை சாப்பிட்டுப் பழக்கப்பட்ட வட மாநிலங் களுக்கே கோதுமைக்கு மானியம் கொடுத்து வழங்கியிருப்பது மத்திய அரசு. முன்பு கொடுத்திருக்கிறார்கள். இப்போது இல்லா விட்டாலும் முன்பு கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு சார்பில் அவர்கள் கோதுமைக்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள். கோதுமை சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களுக்கே மானியம் கொடுத்திருக்கும்போது இங்கே நாம் மானியமாக ரூ.3¼ கோடிதான் கேட்கிறோம். கோதுமை சாப்பிட்டுப் பழக்கப் பட்டிருக்கும் வடபுலத்து மாநிலங்களுக்கு ரூ.100 கோடி மானிய மாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 32-ல் ஒரு பங்குதான் நாம் மானியமாக அவர்களிடமிருந்து கேட்கிறோம். அதுவும் இங் கிருக்கிற தமிழ்நாட்டு கிராம மக்கள் கோதுமையைப் பழக்கிக் கொள்ளாதவர்கள் பழக்கிக்கொள்ளவும், அதைச் சமைக்கிற பயிற்சி பெறவும், கோதுமைக்கு அவர்கள் ஈர்க்கப்படவுமான நிலைமைக்கு இந்த மானியத்தை மத்திய அரசு தரவேண்டு மென்று இம்மாமன்றத்தின் சார்பாக அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர், குடிதண்ணீர்ப் பஞ்சம், வேலையின்மை இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், தோழமைக் கட்சித் தலைவர்களும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் களம்பூரில் ரேஷன் கார்ட் கொடுத்துத் தண்ணீர் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். தங்கள் ஆட்சியில் தர்மவான்களே, தண்ணீருக்குக் கூட ரேஷன் கார்டா? என்று கேட்டார்கள். அவர்கள் எங்களை தர்மவான்கள் என்று கூறுவது எந்தப் பொருளில் இருந்தாலும், நான் அதை ஒத்துக் கொள்ளத் தயாராகயிருக்கிறேன். ஆனால் களம்பூரில் தண்ணீர் ஏன் ரேஷன் கார்ட் மூலம் கொடுக்கப்படுகிறது? யாரால் கொடுக்கப்படுகிறது என்றால், களம்பூரில் பஞ்சாயத்து மூலம் தரப்படுகிறது. அந்தப்

பஞ்சாயத்தின் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்தான். அங்கே பல கிணறுகள் இருக்கின்றன, எல்லாக் கிணறுகளிலும் தண்ணீர் தாராளமாக இருக்கிறது. ஒரேவொரு கிணற்று நீரை அந்த ஊரிலே மக்கள் விரும்புகிறார்கள். காரணம், அந்தத் தண்ணீரை ஊற்றி சமைத்தால்தான் பருப்பு வேகுமாம். பருப்பு வேக வைக்கப்பட வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட கிணற்றிலேயுள்ள தண்ணீரைப் பயன்படுத்தினால்தான் அது வேகும் என்ற காரணத்தினாலே அந்த ஊரிலேயுள்ள எல்லா மக்களும் அந்தக் கிணற்று நீரை விரும்புகிறார்கள். அப்படி விரும்புகின்ற காரணத்தினால், அதற்கு ரேஷன் கார்டு முறையை, அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர், தர்மவான், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர், அந்த முறையை அமல் படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு.கே.வினாயகம்:** விருதுநகர் முனிசிபாலிட்டியிலே அதிகாரியாக இருப்பவர், கமிஷனர் அவர்கள், அட்டை வைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பானை தண்ணீர்தான் தரப்படும் என்று விநியோகம் செய்திருந்த அந்த அட்டைகள் உங்களுக்கும் வந்திருக்கிறது, எனக்கும் காப்பி அனுப்பியிருக்கிறார்கள். அது மாத்திரம் எந்த தர்மவான்?

**மாண்புமிகு திரு.மு.கருணாநிதி:** அங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகக்காரர் நகரசபைத் தலைவராக இல்லை.

**திரு.கே. வினாயகம்:** கமிஷனர்?

**மாண்புமிகு திரு.மு.கருணாநிதி:** நகரசபைத் தலைவர் சொல்லி கமிஷனர் செய்திருப்பார்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:** இருக்கும்படியான நிலைமை களை எடுத்துச் சொல்வதே தவிர, அவர்கள் எண்ணும்படியான நிலை இல்லை. எந்த இடத்திலேயிருந்தாலும், தண்ணீருக்குக் கூட பஞ்சம் இருப்பதைச் சொல்லும்படியான நிலை. தண்ணீருக்குக் கூட ரேஷன் ஏற்பட்டிருக்கிறதே. ஆகவே, யார் ஆட்சிக்கு வந்தா லும் கஷ்டத்தைத் தவிர்க்க முடியாது என்பதற்கு உதாரணமாக

எடுத்துக்காட்டப்பட்டதே தவிர, வேறொன்றும் இல்லை, அதைத்தவிர வேறு இடத்திலே தண்ணீர்ப் பஞ்சம் இல்லையா? இன்னொன்றும் சொல்கிறேன், இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு.மு.கருணாநிதி:** ஒரு நிலைமைபற்றி சொல்வது என்று அடிக்கடி நிலைமைக்காகச் சொல்வார்கள். பதில் சொன்ன பிறகு நிலைமைக்கு ஏற்ப சொல்லுவார்கள்.

பஞ்ச நிலையை உத்தேசித்து, கடன் வசூல்களைத் தள்ளிப்போட வேண்டுமென்று இங்கே ஒரு கருத்து கூறப் பட்டது. ஆனால் இப்பொழுது அரசு இந்தக் கடன் வசூல்களைத் தள்ளிப் போடுவதிலே, ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்ப நடந்து கொண்டு வருகிறது. எங்கெங்கே பாதிக்கப்பட்டிருக் கிறதோ அங்கே அதைத் தள்ளிப் போடவும், ஒத்தி வைக்கவும், தாமதமாக வசூலிக்கவும் இப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டு வருகிறது. எங்கேயாவது அதிகாரிகள் அரசினுடைய இந்த ஆணையை மீறி, தவறாக நடந்துகொள்வார்களேயானால் அது உடனடியாக, தொடர்புடைய இலாக்காவிற்குத் தெரிவிக்கப் படுமேயானால் நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். ஆனால், கடன் வசூல் முழுவதையுமே தள்ளிப் போட்டு விடுகிறோம் என்றால், அப்படித் தள்ளிவிடுவதால் மாத்திரம் விஷயம் முடிவது அல்ல. அதைத் தள்ளிப்போட வேண்டும் என்றும் அதேசமயத்தில், கடன் விநியோகிப்பதையும் தொடர்ந்து நடத்தவேண்டும், சொஸைட்டிகளின் பங்குத்தொகை அதற்காக அதிகப்படுத்த வேண்டியிருக்கும். அப்படி, நில அடமான பாங்கு மூலம் கடன் தரும் தொகை அதிகப்படுத்தலாம் என்றால் அதற்கு 27 கோடி ரூபாய் நிச்சயமாக வேண்டும். இந்த 27 கோடி ரூபாயை நாம் மத்திய சர்க்காரிடமிருந்துதான் கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கடன் தொகை வசூலை அறவே தள்ளிப் போட்டுவிட்டு, தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன் தருகின்ற முயற்சிக்கு வங்கிகளோடு தொடர்பு கொள்ள 27 கோடி ரூபாயை மத்திய அரசிடம் கேட்பதா? என்பது அரசினு டைய பரிசீலனையிலே இருக்கிறது.

இந்தத் தீர்மானத்தையொட்டி மூன்று திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்திருக்கிறார்கள். நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்களும், நண்பர் திரு. கோதண்டராமன் அவர்களும், நண்பர் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் மூன்று திருத்தங்களை அளித்திருக்கிறார்கள். அதில், திரு. இராமமூர்த்தி அவர்கள் அளித்திருக்கும் அந்தத் திருத்தத்தை இந்தத் தீர்மானத்தோடு எந்த வகையிலேயும் இணைக்க முடியாது. ஏனென்றால், தீர்மானம், மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப் பரிந்துரை செய்கிற தீர்மானம். மத்திய அரசைப் பார்த்து, ''நீங்கள் எங்கள் ஊரிலேயுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைச் சேர்த்து கமிட்டி போடுங்கள்'' என்று மத்திய அரசிடம் பரிந்துரை செய்கின்ற ஒரு திருத்தத்தை இந்தத் தீர்மானத்தோடு நிச்சயமாக இணைக்க முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களும் உணர்வார்கள். அவர் அறிந்து, திருத்தம் கொடுக்கப்பட்டிருந் தாலும்கூட, தீர்மானத்தோடு இணைய வேண்டுமென்று கருதி யிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த நிலையில் நாம் செயல்பட வேண்டுமென்ற கருத்தினை இந்த அரசுக்குத் தெரிவிப்பதற்காகவே இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருப்பார்கள் என்றே நான் நம்புகிறேன்.

கலெக்டர்களுடைய மாநாடு ஒன்றினை ஏப்ரல் 9-ம் தேதி நாம் நடத்த விருக்கிறோம். அந்த மாநாட்டில் அவர்களுக்கு, எப்படியெப்படி மாவட்டங்களில் இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கலெக் டர்கள் அளவில், தமிழக அரசின் சார்பில் சில யோசனைகளைச் சொல்ல இருக்கிறோம். மாவட்டங்களுக்கு ஏற்றவாறு இந்தத் துயர்தணிப்புப் பணி நடைபெற வேண்டியிருக்கிறது. சில இடங்களில் கால்வாயை அகலப்படுத்துவது, ஏரிகளைத் தூர் எடுப்பது என்ற முறையிலே துயர் தணிப்புப் பணி நடைபெறலாம். சில இடங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சனையை முக்கியமாகக் கருதி, அந்த வேலைகளிலே அங்குள்ளவர்கள் ஈடுபடுத்தப்படலாம். இன்னும் சில இடங்களில் சாலை வசதிகளைப் பெருக்குவது முக்கியமாக, இன்றியமையாததாகக் கொள்ளப்பட்டு அந்தத் துயர் தணிப்புப் பணிகளில் அங்கிருப்ப

வர்கள் ஈடுபடுத்தப்படலாம். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் இதுபற்றி யோசிக்கப்படும். இங்கு பேசிய தலைவர்களுடைய பேச்சுக்களை, அதிலே சொல்லப் பட்ட முக்கியமான கருத்துகளைக் குறிப்பெடுத்து, வரவிருக்கும் கலெக்டர்களுக்கு அனுப்பிவிடுங்கள் என்று நான் சாம்பந்தப் பட்ட துறையினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தையொட்டி விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு தலைவர்களுடைய அபிப்பிராயங்களைக் கலெக்டர்களுக்கு அனுப்பி வைத்து விடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைப் படித்து ஏட்டு மாநாட்டிற்கு வரும் நேரத்தில் அதுபற்றி யோசனை கூற எதுவாக இருக்கும் என்று, உங்களுடைய யோசனைகளை அவர்களுக்கு அனுப்பச் சொல்லி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்திற்கேற்ப, மாவட்ட நிலையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், யூனியன் தலை வர்கள் இவர்களைச் சந்திப்பதற்கு ஏற்ற இடமாக மாவட்ட வளர்ச்சிக்கு குழு இருக்கிறது. அங்கே இதைப்பற்றி விவாதிக்கலாம், என்னென்ன நடந்திருக்கிறது என்பதைப்பற்றி விவாதிக்கலாம். இதற்கிடையில் அமைச்சர்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுப் பயணம் செய்யவிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள்-அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யக் கூடாது என்று ஒரு வாக்கியத்தில் சொல்லிவிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பஞ்ச நிலையை அறிய வேண்டும் என்று சொன்னார்கள். சுற்றுப் பயணத்தை மேற் கொள்ளாமல் அந்தக் காரியத்தை எங்களால் செய்ய முடியாது. ஆகவே, நாளைய தினம் நாங்கள், அமைச்சர்கள் கூடி எந்தெந்த அமைச்சர்கள் எந்தெந்த மாவட்டத்திற்குச் செல்வது, அதுவும் ஒரு குறிப்பிட்ட நாளிலே சென்று வருவது மட்டும் அல்ல, அவ்வப்போது, அடிக்கடி அந்த மாவட்டங்களுக்கு, குறிப்பிட்ட மாவட்டங்களை, குறிப்பிட்ட அமைச்சர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அங்கிருக்கின்ற அதிகாரிகளைச் சந்தித்து, நாடாளு

மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள், மக்கள் பிரதி நிதிகள் அத்தனை பேரையும் சந்தித்து, அங்கே திட்டமிடப் பட்டிருக்கும் வேலைகள் சரிவர நடக்கின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவருடனும், ஏனைய அதிகாரிகளுடனும் கலந்து ஆவன செய்யும் முயற்சியிலே இந்த அமைச்சரவை தொடர்ந்து ஈடுபடும். இரவு நேரங்களிலே, 6 மணி, 7 மணிக்கு மேல், அங்குச் செல்லும் அமைச்சர்கள் வேறு நிகழ்ச்சிகளுக்கோ, கூட்ட நிகழ்ச்சிகளுக்கோ போகக்கூடிய சூழ்நிலைகள் இருந்தாலும்கூட, பகலெல்லாம், நல்ல வெய்யில் என்றாலும், பெரும் கோடை என்றாலும், பெரும் வறண்ட இடம் என்றாலும் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஏனென்றால் அப்படிப் பழக்கப்பட்டுவிட்ட, சாதாரணமான, சாமானிய மாணவர்கள்தான் இந்த அமைச்சரவையில் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் நிச்சயமாக அந்த முடிவு மேற்கொள்ளப் படும், நல்ல வகையில் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படு கின்றனவா என்று அதிகாரிகள் மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும் ஆராயப்படும் என்ற உறுதியினை நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நீர்த்தேக்கங்களைக் கட்டிமுடிப்பதற்காகவும், அதைப் போலவே, இந்த உரத்தின் மீதும், பம்பு செட் மீதும் விதித்துள்ள வரிகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவும் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை இதிலே இணைக்க முடியாவிட்டாலும், அவர் தந்திருக்கும் கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. என்னுடைய நண்பர், நிதியமைச்சர் மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில், இப்படி பம்பு செட் மீதும், உரத்தின் மீதும் போடப் பட்டுள்ள வரிகளால் தமிழ் நாட்டு விவசாயப் பெருமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதையும், அதை உடனடி யாக ரத்து செய்ய வேண்டுமென்றும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்ற காரணத்தினால், வெளியிலேயுள்ள காங்கிரஸ்

கட்சியின் பெருந்தலைவர்கள், தவறாக எடுத்து விமர்சிக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு பேசுகின்ற நேரத்தில், அவர் மத்திய சர்க்காரை, ''உன்னால் என்ன செய்ய முடியும், என்னை உங்களால் எதிர்க்க முடியுமா? ஒரு கை பார்க்கிறேன், ஜாக்கிரதை, எச்சரிக்கிறேன்'' என்ற தோரணையிலே சொல்ல வில்லை. நாட்டினுடைய நிலையை உணருங்கள், மாநிலங்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழும் காட்சியைக் காணுங்கள், மக்கள் உள்ளத்திலே உள்ள புது எழுச்சியைப் புரிந்து கொள்ளுங்கள் என்ற கருத்திலே, நல்லெண்ணத்தோடு குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த வார்த்தையினுடைய உண்மையைப் புரிந்துகொள்ளாமல், ''மதியழகன் எச்சரிக்கை செய்கிறார்'' என்று காங்கிரஸ் கட்சியினுடைய பெருந்தலைவர் நேற்றையதினம் பேசியதாகப் பத்திரிகையிலே நான் படித்துப் பார்த்தேன். எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பது நல்லெண்ணத்தோடு சொல்லப்பட்டது. ''நான் யார் தெரியுமா? ஆகவே, ஜாக்கிரதை, எச்சரிக்கை'' என்கின்ற அர்த்தத்திலே சொல்லப்பட்டது அல்ல.

அதைப்போலவேதான் இன்றையதினம் இந்தத் தொடர்க் கூட்டத்திலே கடைசி நாளாக இருக்கிற காரணத்தால் இன்னொரு விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். யாரோ ஒரு காங்கிரஸ் கட்சி நண்பரைப்பார்த்து நான் ரௌடி என்று சட்டசபையிலே குறிப்பிட்டதாக மதிப்பிற்குரிய திரு.காமராஜ் அவர்கள் பேசி, பத்திரிகையிலே வந்திருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள். ''நானும் இங்கிருந்து காதால் கேட்டேன். முதலமைச்சர் கூறியபோது அப்படிப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தவே இல்லை. நான் இன்னும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக குறிப்புகளைப் பார்த்தேன். அதிலேயும் இல்லை. அவர் அப்படி சொல்லவே இல்லை. நான் அப்படி கேட்கவே இல்லை'' என்று திரு கருத்திருமன் அவர்களே கூடச் சொன்னார்கள். ஆகவே, திரு. காமராஜ் அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, கருத்திருமனுக்குத்தான் இருக்கிறது என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் சட்ட

சபை நிகழ்ச்சிகள் வெளியிலே இப்படி திரித்துக்கூறப்படுகிறது. அதற்காகத்தான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டேன். ஏனென்றால், ஒரு முதலமைச்சர் மீதும், நிதி அமைச்சர் மீதும், நாங்கள் எச்சரிக்கை செய்தோம், அல்லது ரௌடிகள் என்று சொன்னார் என்றெல்லாம் திரித்த வார்த்தைகளை, இங்கே பேசியதாகத் தெரிவித்துக் கொள்வது, இந்த மாமன்றத்தை இந்த மாநில அரசைப் பற்றி மற்ற மாநிலங்களிலே இருக்கிற அரசுகளும், குறிப்பாக மத்திய அரசும் வெகுத் தவறாகக் கருதிக் கொள்வதற்கு இடம் ஏற்படுத்தும், அரசியல் நாகரிகம் கற்ற வர்கள் மத்தியில் தவறான நிலை ஏற்படுத்தும் என்பதற்காகத் தான் இந்த விளக்கத்தைச் சொன்னேன்.

திரு. கோதண்டராமன் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத் தைப் பொறுத்தவரையில் உரம், பம்ப் செட் இவைகள் மீதுள்ள வரிகளை நீக்க வேண்டுமென்று நிதி அமைச்சரும் இங்கே கூறி யிருக்கிறார். நானும் நண்பர் மாதவன் அவர்களும் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, நாங்களும் மொரார்ஜி தேசாய் அவர் களிடத்திலே வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இந்தக் கருத்து இந்த அரசுக்கு ஏற்புடைய கருத்து என்பதால் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே இந்தத் தீர்மானத்திலே அந்த திருத்தத்தை இணைத்துக்கொள்ளத் தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்திருக்கிற திருத்தத்தில், முன்பு சென்னை மாநிலத்தில் ஆந்திராவும் சேர்ந் திருந்தபோது ராயல் சீமா பஞ்சத்திற்குத் தரப்பட்ட அந்தக் கடன் தொகையையும் நம்முடைய கணக்கிலே எழுதி வைத்திருக் கிறார்கள். அதை 'ரைட் ஆஃப்'' செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக நாம் போராடி வருகிறோம். இந்தக் கருத்தையெல்லாம் நாம் அடிக்கடி மத்திய அரசோடு பேசி வருகின்றோம். ஆகவே, அதுவும் ஏற்புடைய கருத்து என்ற காரணத்தினாலும் நாம் அவர்களிடத்திலே நிதி உதவி கேட்கின்ற இந்த அளவில் வாய் அளவில் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற காரணத்தினாலும், இந்தத் தீர்மானத்திலே அதை நுழைக்காமல் கடிதப் போக்குவரத்துக்களின் மூலமாக அதற்கு நிவாரணம் காண முடியும் என்ற காரணத்தினாலேயும்,

அவைகளை இதிலே நுழைக்க வேண்டிய அவசியம் இல்லை யென்று தெரிவிக்கிறேன். இதை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு நிரம்ப வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஏனைய கட்சித் தலைவர்களும் வெகு விளக்கமாகச் சொன்னார்கள். அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் நாம் எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்தாலும் அது மக்க ளுக்குப் போய்ச்சேரும். மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய பலன்களை ஏழை எளியவர்கள் அனுபவிக்கவில்லையென்றால், ஏழை எளியவர்களுடைய வீட்டுக் கதவைப்போய், செலவழித்த பணம் தட்டவில்லை. அவர்களுடைய வீட்டுப் படிக்கட்டை அரசாங்கத்தினுடைய பணம் போய்ச் சந்திக்கவில்லை என்ற இதே கருத்துக்களை காங்கிரஸ் கட்சியினுடைய பெருந் தலைவர்களே கூறிக் கவலைப்பட்டார்கள். ஆகையினாலேதான் இங்கே எதிர்க்கட்சியிலே அப்பொழுதிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு பனிக்கட்டியை எடுத்து ஒருவனுடைய கையிலே கொடுத்து, அது 10 பேருடைய கையிலே மாறி, கடைசியிலே கொடுத்தவனுடைய கைக்குத் திரும்புகிற நேரத்தில் பனிக்கட்டி வராது, ஒரு சொட்டுத் தண்ணீர்தான் மிச்சமாக வரும், என்று சொன்னார்கள். அதேபோல் பலபேருடைய கையிலே மாறுகிற பனிக்கட்டி திரும்ப வருகிற போது ஒரு துளித் தண்ணீராக மாறிவிடக் கூடும். ஆனால், அந்தப் பணி பல பேர் கையிலே போகும்போது நல்ல மரத்தூள்களையெல்லாம் வைத்து, நல்ல அடக்கம் செய்த பெட்டியிலே வைத்து, அது போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு நிச்சயமாகச் சேரச் செய்வதிலே மிகுந்த அக்கறையோடு இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபடும் என்று எடுத்துக் கூறி இந்தத் தீர்மானத்தை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு நான் உங்கள் அத்தனை பேருக்கும் என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துத் திருத்தங்களைக் கொடுத்தவர்கள் உள்ளத்திலே பதிய வைக்கவேண்டுமென்பதற்காகக் கொடுத்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட காரணத்தால், அந்தத் திருத்தங்களை எல்லாம்

திரும்பப் பெற்று, இந்த மாமன்றம் ஒரு மனதாக இந்தத் தீர் மானத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அந்தத் திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டு மென்று கேட்டு, இந்த அளவோடு அமர்கின்றேன். வணக்கம்.



# கிழக்கு பாகிஸ்தான் கிளர்ச்சி

**உரை : 9** **நாள் : 03.04.1971**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதித்ததோடு ஒரு சிறு இணைப்பைச் சேர்த்து தீர்மானத்தைப் படிக்கிறேன்:

"கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பகுதி மக்கள் செய்துள்ள சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்து நசுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையின் காரணமாக லட்சக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டது கண்டு இந்த மன்றம் தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு, வங்க தேஷ் மக்களின் உரிமை முழக்கம் வெற்றிபெற தமிழ்ப் பெருங்குடி மக்களின் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதிலே இணைத்திருப்பது "கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும், பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து" என்பதாகும்.

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். கிழக்குப் பாகிஸ்தானத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ரத்த வெறியும் அதன் காரணமாக விழுகின்ற பிணங்களும், இந்தியாவில் மாத்திரமல்ல, அனைத்துலகத்தில் இருக்கின்ற எல்லா நாட்டு மக்களும் கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவமாகும். இந்தச் சம்பவம் எவ்வாறு எழுந்தது என்பதை எண்ணினால், நடந்து முடிந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில், நீண்ட நெடுங்காலமாக கிழக்குப் பாகிஸ்தானத்தில்

அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மொழித் துறையிலும் உரிமைகள் முடக்கப்பட்டு, உரிமைகள் தடைப்படுத்தப்பட்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்த மக்களின் பிரதிநிதியாக அவாமி லீக் கட்சி தேர்தலில் ஈடுபட்டு அந்த அடிப்படையில் தங்களுடைய எண்ணங்களை மக்களின் முன் வைத்து வாக்குகளைக் கேட்டது. அவாமி லீக் கட்சியின் கொள்கைக்கேற்பப் பொதுத் தேர்தலில் அந்தக் கட்சிக்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைத்தன.

ஆனால் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்குப் பிறகு அந்தத் தீர்ப்பை லட்சியம் செய்யாமல் பாகிஸ்தான் நடந்து கொண்ட காரணத்தால் கிழக்குப் பாகிஸ்தானத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சியைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்று பாகிஸ்தானத்தினுடைய ஜனாதிபதி யாகியாகான் அவர்கள் கிழக்குப் பாகிஸ்தான் டாக்கா நகரத்திற்கு வந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார் அந்தப் பேச்சு அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர் கிழக்குப் பாகிஸ்தானத்தில் முதலமைச்சர் பொறுப்பை ஏற்பார் என்பதற்கு சம்மதித்து விட்டார் என்றும் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது ஏடுகளில் வந்த செய்தி மேற்கு-கிழக்குப் பாகிஸ்தானுக்குப் பொதுவான கூட்டாட்சியை நிறுவ யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும் தேர்தலில் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடம் பெற்றிருப்பதால் அந்தக் கூட்டாட்சிக்கு முஜ்பீர் ரஹ்மான் அவர்கள் பிரதமராக இருக்க யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும் செய்திகள் வந்தன. இந்தப் பேச்சுவார்த்தைகள் முடிந்த அதே நேரத்தில் மத்தியக் கூட்டாட்சிக்குப் பிரதமராக ரஹ்மான் வரப்போகிறார், மாநிலத்திற்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் அலட்சியப்படுத்தப்படாமல் நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற இந்தச் செய்திகள் வந்துகொண்டிருந்த நேரத்தில் யாகியாகான் கராச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். கராச்சியிலிருந்து போர்ப் பிரகடனம் செய்தார். கிழக்குப் பாகிஸ்தான்மீது படைகள் ஏவி விடப்பட்டன. அந்த நேரத்தில் ரஹ்மான் பாகிஸ்தானத்தின் விரோதி என்றும், தேசத் துரோகி என்றும் பாகிஸ்தானத்தைத் துண்டு போடப் புறப்பட்டவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டு யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள், ரஹ்மான் அவர்கள் பிரகடனம் செய்திருப்பது போல் வங்கதேச

மக்கள் லட்சக்கணக்கில் உயிர் விட்டிருக்கிறார்கள். ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இதுவரை பலியிடப்பட்டிருக் கிறார்கள். இயற்கையின் கொடுமையான, ஆவேசமான தாக்குதலின் காரணமாகப் பல லட்சக்கணக்கான மக்களை இழந்த கிழக்குப் பாகிஸ்தான், போரின் விளைவாக இலட்சக்கணக்கானவர்களை இழந்து கொண்டிருக்கிறது. ரஹ்மான் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தங்களுடைய உரிமைகளுக்காக பொதுமக்கள் அளித்த தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டுமென்று எழுப்பிய கோஷத்திற்காக அந்த நாட்டு மக்கள், அந்த நாட்டு மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் பழி வாங்கப்படும் பரிதாபகரமான காட்சி அகில உலகத்தையும் திடுக்கிட வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தியாவின் தலைமையமைச்சர் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றி யிருக்கிறார்கள். கேரள சட்டமன்றத்திலும், அஸ்ஸாம் போன்ற வேறு பல சட்டமன்றங்களிலும் இரங்கலைத் தெரிவிக்கும் வகையிலும், கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையிலும் கருத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நான் முன் வைத்திருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டது போல் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் பேசியதற்கிணங்க எல்லாக் கட்சியினரும் ஒரு சேர இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வங்க தேசத்தில், கிழக்குப் பாகிஸ்தானத்தில் அல்லலுறும் மக்களுக்கும், உயிரைவிட்டுக்கொண்டிருக்கும் லட்சோப லட்சம் மக்கள் குடும்பத்திற்கும் மற்றும் அனைவருக்கும் நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு நம்முடைய நல்லெண்ணம் அவர்கள்பால் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

# இந்தியா - பாகிஸ்தான் போர்

**உரை : 10** **நாள் : 06.12.1971**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பேரவைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு பின்வரும் தீர்மானத்தை இந்தப் பேரவையின் ஒப்புதலுக்கு வைக்க முன்வருகிறேன்.

"கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக் குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திரப் பங்களாதேஷ் முழக்கத்தைச் செய்ய முன் வந்தபோது அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல லட்சக்கணக்கானவரைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியா மீது சுமத்தியதின் மூலம் இந்திய நாட்டின் மீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின் மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலை தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெரு வெற்றி பெறுவதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்கு தருமென்கிற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீரமறவர்களை வாழ்த்துவதிலும், அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்று வதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிடவேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி

இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்க காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கியிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன் வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிட, போருக்கு தேவையான ஆள், பொருள், கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியப் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று இப்பேரவை கேட்டுக் கொள்கிறது."

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒரேமனதாக ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது ஒரு உணர்ச்சிமயமான கட்டத்தில், நாட்டின் எழுச்சி பொங்கி வழிந்து காணப்படுகிற நேரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படுகிற மிக முக்கியமான தீர்மானமாகும்.

பாகிஸ்தான் இந்தியா மீது இன்றைக்குத் தொடுத்திருக்கின்ற இந்தப் போர் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது தொடுத்திருக்கிற போர் என்று கருதுவதைக் காட்டிலும் ஒரு தத்துவம் இன்னொரு தத்துவத்தின் மீது தொடுத்திருக்கிற போர் என்று சொன்னால் அது மிகையாகாது. தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பது போல சர்வாதிகார மனப்பான்மையோடு சர்வாதிகாரக் கொள்கையில் வெறி பிடித்து அலைந்துகொண்டிருக்கிற பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி இந்தியாவில் நாம் கட்டிக் காத்து வருகிற ஜனநாயகத் தத்துவத்தின் மீதும், நம்முடைய வாழ்க்கை முறையின் மீதும், நம்முடைய மதச் சார்பற்ற கொள்கையின் மீதும் இன்றைக்குப் படை எடுத்திருக்கிறார் என்று நாம் திட்டவட்டமாகக் கூற வேண்டும்.

அமெரிக்க நாட்டுக்கு நான் சென்றிருந்த நேரத்தில் அங்கே ஒரு தவறான பிரச்சாரம் இப்போது பாகிஸ்தான் தொடுத்திருக்கிற போர் பற்றி பத்திரிக்கைகளில் கட்டுரை வாயிலாகச் செய்யப் படுவதை நேரில் காண்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தத் தகராறு இன்று நேற்று அல்ல. பல நூற்றாண்டுகாலமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்து வருகிற தகராறினுடைய மற்றொரு கட்டம்தான் இந்தப் போராட்டம் என்று அந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் வருணித்திருப்பதை நான் கண்டேன்.

சில நிருபர்களைச் சந்தித்த நேரத்தில் அது தவறு என்பதற்கான விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது இந்து-முஸ்லீம் தகராறு அல்ல. இந்தியாவில் இன்றைக்கு முஸ்லீம்களே இல்லாமல் இல்லை, குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தியாவிலே இருக்கிற முஸ்லீம்களுடைய தொகை இன்றைக்கு பாகிஸ்தானில் இருக்கிற முஸ்லீம்களின் எண்ணிக்கையைவிட அதிகமானது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது. அந்த அளவுக்கு பாகிஸ்தானைவிட இன்றைக்கு இந்தியாவில் அதிகமான முஸ்லீம்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உரிமைகள் இங்கே மதிக்கப்படுகின்றன. அவர்களுடை நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் அனைவருமே இந்து முஸ்லிம்கள் என்கிற அளவில் இல்லாமல் இந்தியர்கள் என்ற அளவில் ஒன்றுபட்டு இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதிலும் இந்த நாட்டுக்கு வருகிற ஆபத்துக்களைத் தவிர்ப்பதிலும் முன்னிற்கிற காட்சியினை நாம் காண்கிறோம். ஆகவே, இப்போது நடைபெறுகிற இந்தப் போராட்டம் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், இந்துக்களுடைய நாட்டுக்கும் முஸ்லிம்களுடைய நாட்டுக்கும் நடைபெறுகிற போராட்டம் என்று யாரும் கற்பனை கூடச் செய்துகொள்ளத் தேவையில்லை என்று அந்த நிருபர்களிடையே சொன்னேன். இந்தத் தெளிவான விளக்கத்தை இந்தப் பேரவையிலும் நாம் அனைவரும் கொள்வதோடு, வெளியிலும் வற்புறுத்திக் கூறுவது நெடுங்காலமாக நாம் ஏற்படுத்தியிருக்கிற வகுப்பு ஒற்றுமையை இந்த நேரத்திலும் நிலைநிறுத்தப் பயன்படும். போர் சூழ்நிலையைப் பயன்படுத்தி வகுப்பு ஒற்றுமைக்கு உலைவைக்கிற முயற்சியை முறியடிக்கும் வகையிலும் இது அமையும் என்று நான் குறிப்பிட்டேன்.

முதன்முதலாக இந்தியா பாகிஸ்தான் அகதிகளால் படை எடுக்கப்படவேண்டிய நெருக்கடியான கட்டத்திற்கு ஆளானது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிற கிழக்கு வங்கத்தில் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற தேர்தல் முடிவு மதிக்கப்படாமல், சர்வாதிகாரியினுடைய காலடியில் மிதிக்கப்பட்டு அந்த ஜனநாயக எழுச்சிக்கு நாயகனாகத் தோன்றிய திரு. முஜ்பீர் ரஹ்மான் சிறை பிடிக்கப்பட்டு, லட்சக்கணக்கான மக்கள் கிழக்கு வங்கத்தில் கொல்லப்பட்டு, ஒரு கோடி மக்களுக்கு மேல் அகதிகளாக இந்தியாவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் வேறு நாடுகளில் உள்ளவர்கள் என்னிடத்தில் கேட்கிறார்கள். 55 கோடி மக்கள் இருக்கிற இந்தியாவில் இன்னும் ஒரு கோடி மக்களைத் தாங்கிக் கொள்ளக்கூடாதா என்கிறார்கள். 55 கோடி மக்கள் தொகை இருக்கிற ஒரு நாட்டில் மேலும் மக்கள் தொகை பெருகுகிறது என்பது வேறு. திடீரென நுழைகிறார்கள் என்பது வேறு. நம்முடைய நாட்டு மக்கள் தொகை பெருகிடக்கூடாது என்பதற்காக பல்வேறு திட்டங்களையும், முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில் பெருகுவது மாறி திடீரென்று மக்கள் தொகை நுழைந்தால் அதை ஒரு அரசு எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்? சமாளிக்க முடியும்? சமாளிக்க முடியாமல் எவ்வளவு கஷ்டத்தை இந்திய அரசு அனுபவிக்கிறது, இதுவரை எவ்வளவு கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது என்பதனை எல்லாம் அனைத்துலக நாடுகளுக்கும் நாம் எடுத்து விளக்கியிருக்கிறோம். இந்திய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அனைத்துலக நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் மூலம் இந்தியாவின் நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் செய்கிற அட்டூழியங்கள் வேறு நாடுகளில் இருக்கிற அரசுகளால் ஒருவேளை மறைக்கப்பட்டாலும் அந்த அந்த நாட்டு மக்கள் உண்மையை நிச்சயமாக உணர்ந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். குறிப்பாக அமெரிக்க நாட்டு அரசாங்கம் இந்தியா பாகிஸ்தான் விஷயத்தில் இருவரையும் சமமாகவே கருதுகிறது என்றாலும் இந்தியா பக்கம் இல்லாமல் பாகிஸ்தானை முழுமூச்சாக ஆதரிக்க அல்லாடிக்கொண்டிருக்கிறது என்றாலும், அந்த நாட்டில் நான் கவனித்த வரையில்–அமெரிக்க நாட்டு மக்கள் பெரும்பாலானவர்கள் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்தியாவின் பக்கம்தான் திருப்பிவிட்டிருக்கிறார்கள். அமெரிக்க

டெலிவிஷனில் அவர்கள் கண்ட காட்சிகளைப்போல-அந்த அளவுக்கு செய்திகளை நாம் நம்முடைய பத்திரிகைகளில் கண்டிருக்க முடியாது. கிழக்கு வங்கத்திலே பாகிஸ்தான் நடத்திய அட்டூழியங்கள்-வெறியர்களுடைய அடக்குமுறைகளை நேரிடையாகப் படம் எடுத்து டெலிவிஷனில் காட்டினார்கள் பல வீடுகளுக்கு தீயிடப்பட்டதைப் பார்த்தேன். பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டதை, கற்பழிக்கப்பட்டதைப் பார்த்தேன். லட்சக்கணக்கானவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைப் பார்த்தேன். அதுமாத்திரம் அல்ல. அந்தப் பிணங்களைக் கூட புதைக்க முடியாமல் நீண்ட குழி வெட்டி அதில் ஒன்றின் மீது ஒன்றாக பிணங்களை இழுத்தெறிந்த காட்சியினையும் டெலிவிஷன் படத்தில் காட்டினார்கள். இப்படிப்பட்ட கோரக்காட்சிகளை எல்லாம் கண்ட அமெரிக்க மக்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய முழு ஆதரவை இன்றைக்கு இந்தியா பக்கம் திருப்பியிருக்கிறார்கள். அந்த நாட்டு அரசு எவ்வாறு இருந்தாலும் இன்றைக்கு அந்த நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவின் பக்கம் இருக்கிறது. பாகிஸ்தான் வெறியர்களின் அட்டகாசங்களும், அட்டூழியங்களும், துரத்தப்பட்டிருக்கிற அகதிகளின் எண்ணிக்கையையும் எல்லா நாட்டு மக்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் ஒருகோடி மக்களை நாம் தாங்கித் தீரவேண்டிய கஷ்டம் ஏற்பட்டது. அதற்கடுத்து தங்களுக்குத் தனி நாடு வேண்டுமென்ற அளவுக்கு உணர்ச்சி மேலிட்டு, அது ஒடுக்கப் படுகிற நிலையில் வங்கதேச விடுதலை வீரர்கள் சுதந்திர சிங்கநாதம் முழங்கி-ஜனநாயத்தை அழிக்கக் கிளம்பிய சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துவிட்டார்கள். அதனால் ஆத்திரம் அடைந்த பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி தங்களுடைய நாட்டில் ஒரு பகுதி என்று அவர் கருதிக்கொண்டிருக்கிற, கற்பனை செய்து கொண்டிருக்கிற கிழக்கு வங்கம் கைவிட்டுப்போய்விடும் என்பதனை உணர்ந்தவுடன்தான் இந்தியா மீது படை எடுத்திருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தூங்குகின்ற புலியை இடறியிருக்கிறார் பாகிஸ்தானின் சர்வாதிகாரி என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியாவின் விமானப் படைத் தளங்கள் சிலவற்றின்மீது பாகிஸ்தானின் வெறியர்கள் குண்டு களைப் பொழிந்தார்கள், நம் மீது அனாவசியமாக தாக்குதலை நடத்தினார்கள். நாம் தான் இந்தப் போராட்டத்திலே குதித்தவர்கள்

என்றெல்லாம் உலகத்தினர் கற்பனை செய்துகொள்ளவேண்டுமென்று முயற்சிகளைச் செய்தார்கள். ஆனால் அவை அனைத்தும் தவறு, பொய்யான வாதம் என்பதை ஆக்ரா மீதும், அமிர்தசரஸ் மீதும் அவர்கள் நடத்திய விமானப் படையெடுப்பு நிரூபித்துவிட்டது. ஆனால் ஒருநாள், நம்மீது அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்ற செய்தியை நம் நாட்டுப் பத்திரிகைகளும், வெளிநாட்டுப் பத்திரிகைகளும், வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இன்றைக்கு நாம் நடத்துகிற எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் திணறிக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இந்திய நாட்டு விமானங்கள் உள்ளே பிரவேசித்து பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. இன்றைய கணக்குப்படி பார்த்தால், பாகிஸ்தானின் 47 சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்திய விமானங்கள் 17 தான் சுட்டு வீழ்த்தப்பட்டன. பாகிஸ்தான் 47 விமானங்களை இந்தப் போரினால் இழந்திருக்கிறது.

மேற்கு பாகிஸ்தானிலும், 61 டாங்கிகளை பாகிஸ்தான் இழந்திருக்கின்றது என்கிற புள்ளிவிவரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் 3 கப்பல்களை பாகிஸ்தான் இழந்திருக்கிறது. சப்மரீன் ஒன்றை பாகிஸ்தான் இழந்திருக்கிறது. இவை எல்லாம் பாகிஸ்தானின் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்கும்? ஒருவேளை பாகிஸ்தானாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவின் பலம் பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல அகில உலகத்திற்கும் காட்டப்படுகிற அளவில் உயர்ந்திருக்கிறது என்பதில் பெருமைப்பட வேண்டும்.

நமது போர் வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக்கவும், அவர்கள் போர்க்களத்தில் உத்வேகத்துடன் போராடவும் அவர்களுக்குப் பின்னால் நாம் அனைவரும் இருக்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படிச் செய்ய வேண்டும். இன்றைய காலைப் பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்தியானது மேலும் நமக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. சோவியத் நாட்டின் பிரதம மந்திரி கோசிஜின் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 'இந்தத் தகராறில் உலக நாடுகளில் எந்த நாடாவது தலையிட்டால் அது தவறு' என்று அவர் கூறியிருப்பது போற்றத் தக்கதாகும். அதாவது இந்தப் போரில் வேறு எந்த நாடாவது தலையிட்டால், நாங்களும் தலையிடுவோம் என்று கூறுவதாகத்தான் நாம் கொள்ளுகின்ற பொருள் இருக்கும்.

அப்படிப்பட்ட நல்லெண்ணத்தோடு இந்தியாவை அணுகுகின்ற நாடுகளுக்கெல்லாம் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை போர் வீரர்கள் மட்டும் சமாளித்துவிடுவார்கள் என்று நாம் கைகட்டி, வாளா இருத்தல் கூடாது; அப்படி இருக்கவும் முடியாது. இந்திய நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புக்களை உணர்ந்தாக வேண்டும். போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும், போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும். அதை அட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் தயாராக இருக்க வேண்டும். அதில் தயக்கம் காட்டக்கூடாது. அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்கள் மீதும் நம்பிக்கை வைத்து, இதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். போருக்கான நிதியைத் திரட்டுகின்ற பணி ஆரம்பமாக வேண்டும்.

தமிழகத்தில், பொதுப் பணியாளர்கள், பொது நோக்குடையவர்கள் போர்வீரர்களுக்குத் தேவைப்படுகிற மருந்துகளை வாங்கி போர்முனைகளுக்கு அனுப்புதல், தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல். மேலும் போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபட வேண்டும். இப்போது நாம் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். இந்த நெருக்கடி இந்தியாவுக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கே நெருக்கடியானது.

'இந்தப் போர்தான் கடைசிப் போர், கடைசி யுத்தம்' என்கிறார் பாகிஸ்தானின் சர்வாதிகாரி, அவர்களுடைய முடிவை முன்கூட்டியே அவர் சொன்னதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். 'பாகிஸ்தான் இனி இந்தியாவின்மீது மட்டுமல்ல, வேறு எந்த நாட்டின்மீது போர் தொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழாமல் இருக்க வேண்டும்' என்பதைச் செய்ய வேண்டுமென்கிற கடமையுணர்வு இந்திய நாட்டுக்கு இருக்கிறது. நாம் அதை, தமிழ் நாட்டின் சார்பிலே தர வேண்டும், தரவும் வேண்டும், தருவோம் என்பதையும் சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை, முன்மொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

# பங்களா தேசம் அங்கீகரிப்பு

**உரை : 11** **நாள் : 06.12.1971**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் முன்மொழிந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வழி மொழிந்தும் அதிலும் தமிழ் நாட்டு மக்கள் இந்தப் போராட்டத்தில் தங்களுடைய கடமையினை கட்சி, மதம் இப்படிப்பட்ட பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து நிச்சயமாக வழங்குவார்கள் என்பதனை திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தீர்மானத்தை வழி மொழிந்து பேசிய அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும், தீர்மானத்தை முன்மொழிந்தவன் என்ற முறையில் என்னுடைய அன்பான நன்றியை மிகுந்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்படுகிற நேரத்தில், இந்தத் தீர்மானத்தை வலுப்படுத்துகிற அளவுக்கு டெல்லி நாடாளுமன்றத்தில் இருந்து நமக்குக் கிடைத்த செய்தி பங்களா தேஷ், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்பதாகும். பங்களா தேஷ் அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றால், கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்களைக் கொண்ட ஒரு புதிய நாடு இன்றைக்கு முளைத்திருக்கிறது என்று பொருளாகும். நான் ஏன் முளைத்து இருக்கிறது என்று சொன்னேன் என்றால், அது துளிர் விட்டு செடியாகி, அரும்பு வைத்து காயும், கனியும் குலுங்குகிற அளவுக்கு வெகு விரைவில் அகில உலக நாடுகளில் ஒன்றாக அமைய இருக்கிறது என்பதைத்தான் முளைத்து இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன்.

அமெரிக்க அரசு பாகிஸ்தானுடைய போக்கை ஆதரித்து இருக்கிறது என்பதை இங்கே பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் குறிப்பாக என்னுடைய நண்பர் திரு.தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், இங்கே சொன்னார்கள்.

நான் குறிப்பிட்டது அமெரிக்க நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவுக்கு இருக்கிறது என்று தான். அமெரிக்க அரசினுடைய ஆதரவு இந்தியாவுக்குச் சரியான அளவில் இல்லை. அவர்கள் அதிலே மழுப்புகிறார்கள் அல்லது மறைக்கிறார்கள். அல்லது மறைமுகமாக சர்வாதிகார பாகிஸ்தான் பக்கம் சாய்கிறார்கள் .என்ற அந்தக் கருத்தில் நான் எந்தவிதமான மாறுபாடும் கொண்டிடவில்லை. ஒரு நாட்டின் மக்களுடைய எண்ணம் மதிக்கப்படுகின்ற எண்ணமாகும். ஏனென்றால் அமெரிக்க நாடு ஜனநாயக நாடு. அங்கே மக்கள் அரசை மாற்றுவதற்கு வல்லவர்கள். அந்த சூசகத்தை நான் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அடிக்கடி நான் சொல்கிறேன்-அமெரிக்க நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேனே அல்லாது, வேறு அல்ல. ஒரு சர்வாதிகார நாடாக இருந்தால் அந்த சர்வாதிகாரி வாழ்கிற வரையில்-ஆள்கிற வரையில் அந்த நாட்டு அரசின் கொள்கை மாறாதிருக்கலாம். அங்கே மக்கள் கருத்துக்கு மதிப்பு இல்லாத காரணத்தினால், ஜனநாயக நாட்டில்-மக்கள் நினைத்தால் அது மகேசன் குரலாக மாறி-இருக்கிற ஆட்சியை மாற்ற முடியும். அப்படி மாறியிருக்கிற நிலையையும் ஜனநாயக நாடுகளில் நாம் பார்க்கிறோம். அதன் காரணமாகத்தான் அமெரிக்க நாட்டு மக்களின் எழுச்சி நம் பக்கம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு உதவி ஜனாதிபதியாக இருந்தவர்- இப்போது செனடராக உள்ள திரு.ஹம்ரே அவர்களைச் சந்தித்து நான் ½ மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் என்னிடம், "உங்கள் பிரதமரிடத்தில் சொல்லுங்கள், அமெரிக்க நாட்டு மக்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள். நான் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறேன், என்போல பல செனடர்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

செனடர்கள் என்கிறபோது அங்கே நூறு செனடர்கள் இருக்கிறார்கள். ஐம்பது மாநிலங்கள்-மாநிலத்திற்கு 2 செனடர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த செனடர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அறையைப் பார்த்தால் மூன்று முதல் மந்திரியின் அறைக்குச் சமானமான இடமாக இருக்கிறது. அந்த இடமே போதவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இவ்வளவு பெரிய பணக்கார நாட்டில் எனக்கு இருக்கிற சிறிய அறையைப் பாருங்கள் என்றால், இதை இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுப்

பொறாமைப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. அந்த அளவுக்கு நாள்தோறும் 500 கடிதங்களுக்குப் பதில் எழுத வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு சென்டருக்கும் 15 அலுவலர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, அங்கே பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களது கருத்துக்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. அதற்காகச் சொன்னேன்.

அமெரிக்க நாட்டில் நிக்சன் கட்சியைச் சேர்ந்த திரு.கூப்பர் அவர்களையும் சந்தித்தேன். மிகப் பெரியவர் - வயதானவர் - இந்திய நாட்டில் தூதுவராக இருந்தவர்-இந்திய மக்களுடைய அன்பு உள்ளத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கக்கூடிய மிக வயது வாய்ந்தவர் ஆவர். அவர் நிக்சன் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், முழு அன்பும், முழு ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான். இதை இந்திய மக்களிடத்தில் மிகத் தெளிவாகச் சொல்லலாம் என்று என்னிடத்தில் அறிவித்தார்கள். இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம், அங்கே தேர்தலுக்கு ஓராண்டுக் காலமே இருக்கிறது. மக்கள் மனோநிலைக்கேற்ப அங்கே ஆட்சி மாறக் கூடும். இன்றைக்கு இருக்கிற அரசு நம்முடைய நியாயத்தை உணர மறுத்தாலும், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பங்களா தேஷை அங்கீகரிக்கிற காலம் வரும்.

ஆகவேதான், இன்றைக்கு அமெரிக்க அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பதைவிட அமெரிக்க மக்களின் அன்பும், பேராதரவும் நமக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதுபோல அகில உலக நாடுகளுடைய அன்பும், ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறது, மதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அரிய பெரிய உலகப் பயணத்தின் மூலம் வெகு விரிவான விளக்கத்தை உலக நாட்டு மக்களிடத்திலே அளித்து விட்டார்கள். டெலிவிஷன் பேட்டிகள் மூலம் பல நாட்டு மக்களுடைய ஆதரவை, அன்பை இந்தியா பக்கம் திருப்பி விட்டார்கள். ஆகவேதான் இன்றைக்கு பங்களா தேஷை இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இருவார காலத்திற்கு பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையில் இருந்து விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாம் எல்லாம் எதிர்பார்க்கலாம்.

இந்த நேரத்திலே நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் குறிப்பாக, இந்தத் தீர்மானத்தை விவாதித்துக்

கொண்டிருக்கிற தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள், வணிகக் கோமான்கள்–இவர்கள் போரைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை, இருட்டு வியாபாரம் இவைகளிலே தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள முனையக் கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். சென்ற உலக மகா யுத்தத்தின் போது சாதாரணமாக ஏழையாக இருந்த ஒருவர், பெரும் பணக்காரராகி 'எப்படி வசதி' என்றால் 'யுத்தத்தில் நன்றாகச் சம்பாதித்து விட்டார்' என்பதாக இப்படி ஒரு அடைமொழியைச் சேர்த்துச் சொல்லப்பட்டதை எல்லாம், இந்தத் தடவை அத்தகைய அடைமொழியைப் பெறக் கூடாது. இந்தத் தடவை யுத்தத்தில் நிறையத் தியாகம் செய்தார் என்கிற புகழை ஈட்டிக்கொள்ள வேண்டுமேயல்லாது. யுத்தத்தில் சம்பாதித்து விட்டார் என்கிற அடைமொழியைப் பெறுகிற அளவுக்கு அந்தஸ்து தோன்றுவதற்கு இடமளித்தல் ஆகாது. அதில் தமிழ்நாட்டு அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்து, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு.ஹாண்டே அவர்கள் இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் இன்றைக்கு குறிப்பாக போர்க்களத்திற்குச் செல்கிற வீரர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றார்கள். சாவில் இருந்து போர் வீரர்களை காத்துக்கொள்ள பாதுகாப்பு இல்லை. போர்க்களத்திற்குச் செல்கிறவர்களே ஓரளவு திரும்பி வரமாட்டோம் என்கிற உறுதியோடு செல்கிறார்கள். வெற்றி பெற்றே திரும்பி வருவோம் என்கிற அளவில் செல்கிறார்கள். போர்களத்திற்குச் சென்றவர்களை நாம் பார்த்திருக்கிறோம், கேள்விப்பட்டிருக்கிறோம். போர்க்களத்திற்குச் சென்றவனின் உடை திரும்பி வந்து மாதாவின் கண்ணீரால் நனைந்தது என்பதாக. அவன் திரும்பவில்லை, அவன் அணிந்திருந்த உடை தான் வந்தது என்று. இன்னும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், எத்தனையோ அண்ணன்மார்களை போர்க்களதில் இழந்த தம்பிமார்கள் கண்ணீர்விட்டு நின்றதாக, ஏன் இதுவும் கூட கேள்விப் பட்டிருக்கிறோம், காதலிமார்கள், போர்க்களத்தில் தங்கள் தங்கள்

காதலனை இழக்க, பூ இழந்து, பொட்டு இழந்து, பொலிவிழந்து சோகச் சித்திரமாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை. ஆகவே, எந்தச் சூழ்நிலையில் சென்றான், யுத்தத்தில் மாண்டான் என்பது வேறு, இப்பொழுது சாவதற்காகவே செல்கிறான். போர் முனைக்குச் செல்லும் வீரர்கள் சாவதற்காகவே செல்கிறவர்கள். தங்களைப் பிணமாக ஆக்கிக் கொள்வதன் மூலம், இந்த நாட்டு மண்ணின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும், இந்த நாட்டு சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும், இந்த நாட்டு மண்ணின் உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்று செல்கின்ற போர்வீரர்களின் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ரிசர்வ் லிஸ்டிலிருந்து அனுப்புகின்ற நிறுவனங்கள் வீரர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த பேரவையின் சார்பாக வேண்டுகோளாக விடுக்கிறேன்.

நான் ஏற்கெனவே என்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, போர்வீரர்களுக்கு வேண்டிய அளவில் நாம் எல்லோரும் ரத்ததானம் செய்ய வேண்டும் என்று டாக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். யார் யாருடைய ரத்தம் என்ன என்ன குரூப் என்பதைக் கண்டறிந்து ரத்த தானம் அளிக்கும் பணியிலே பணியினை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் இதை இப்போதே ஏற்றுக்கொள்கிறேன். ரத்ததானம் செய்வதற்குத் தகுதி படைத்த உறுப்பினர்கள், இதை வெகு வேகமாகவும் துரிதமாகவும் இந்தப் பணியினை நடத்தி வைப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் இன்னொரு தானமும் கேட்கிறேன். நாங்களெல்லாம், அமைச்சர்கள் தங்களுடைய ஊதியத்திலே 500 ரூபாய் யுத்த நிதிக்காக தருவதாகத் தீர்மானித்திருக்கிறோம். அதேபோல சட்ட மன்ற உறுப்பினர்களும் 100 ரூபாய்க்குக் குறையாமல்-அதிகமாகக் கொடுக்கிற தாராள மனம் படைத்தவர்களைப் பாராட்டுகிறேன்-தர வேண்டும். அதற்கான ஒப்புதலை உங்களுடைய கர ஒலி மூலம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (அனைத்து உறுப்பினர்களும் ஒப்புதலுக்கான கர ஒலி எழுப்பினார்கள்).

அடுத்தபடியாக "இதிலிருக்கும் வேறுபாடுகள், சிக்கல்கள் களையப்பட வேண்டும்" என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சிம்சன் விவகாரத்தைப் பற்றிச் சொல்லி, அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். சிம்சன் விவகாரம் யார் தொழிற்சங்கத் தலைவராக இருப்பது என்பதில் ஆரம்பமாகியிருக்கிறது. தொழிற்சங்கத்திற்கு வெளியார் ஒருவர் தலைவராக இருப்பது என்பது சரியல்ல என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறது. எந்த ஒரு தொழிற்சாலையிலும் தொழிலாளர் யூனியனுக்கு வெளியார் தலைவராக இருக்கக் கூடாது, அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களிடையே உள்ள ஒருவரே தலைவராக இருக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். எந்தத் தொழிற்சங்கத்திலும் வெளியார் தலைவராக இருக்கக் கூடாது, தொழிலாளர்களிடையே உள்ள தொழிலாளிதான் அதன் தலைவராக இருக்க வேண்டும் என்கிற முடிவை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டால் இப்படிப்பட்ட பிரச்சினைகளே தோன்றா. இன்னார்தான் தலைவராக இருக்க வேண்டுமென்பது அந்தத் தொழிலாளர்களுடைய முடிவாக இருக்க வேண்டும். அந்தத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர் ஒருவரேதான் அந்தச் சங்கத்திற்கு தலைமை வகிக்க வேண்டும். இதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற வெளியார்களை அந்தந்தக் கட்சிகள் திரும்பப் பெற்றுக்கொண்டு, தொழிலாளர் ஒருவரே தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுவோம். திராவிட முன்னேற்றக் கழகம் இதை நீண்ட நாள் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறது. இதை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுவோம். இப்பொழுதே அல்ல, அதை யோசித்து, தங்கள் கட்சியில்கேட்டுப் பதில் தெரிவிக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். (டாக்டர் எச்.வி.ஹாண்டே குறுக்கீடு) டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஒத்துக் கொண்டார்கள். நிறைய தொழிற்சங்கங்களை வைத்திருப்பவர்கள் இதை ஒத்துக் கொள்ளவேண்டும். (பலத்த சிரிப்பு).

(திரு.கே.டி..கே.தங்கமணி குறுக்கீடு) நண்பர் திரு. கே.டி.கே.தங்கமணி அவர்களும் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற எல்லாக்கட்சிகளும் ஒத்துக்

கொண்டால், இன்றைக்கே சிம்சன் தகராறுக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதாக நான் கருதுகிறேன்.

நாம் எல்லா வேறுபாடுகளையும் களைந்து விட்டு, தமிழ் நாட்டின் நலன்களுக்கு உகந்த வகையில், அனைவரும் இந்த உணர்ச்சிமயமான தீர்மானத்தை வழிமொழிந்து, தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருவதாகக் கூறி, நல்ல ஆலோசனைகளைத் தந்ததற்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு, இந்த தீர்மானத்தை, ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.

# வங்க தேசம் பாகிஸ்தான் யுத்தம்

**உரை : 12** **நாள் : 17.12.1971**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைப் படிக்கும்போது, இப்போது சேர்க்கப்பட்டிருக்கும் சில திருத்தங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

"வங்க தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இந்தப் பேரவை தனது பாரட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர்வெறிக்குத் தக்க பாடம் கற்பித்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தப் பேரவை பாராட்டுக்களைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்கள் ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்தப் பேரவை தனது மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜ்பூர் ரஹ்மானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்குத் துணைநின்ற சோவியத்

யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தப் பேரவை இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது".

தலைவரவர்களே, 12 நாட்களாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மாபெரும் வெற்றியை, மகத்தான வெற்றியை இந்தியா பெற்றுத் தந்திருக்கிறது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்த கிழக்கு வங்கத்தின் மக்கள், ஜனநாயக முறையிலே எழுப்பிய தங்கள் உரிமைக் குரல், பாகிஸ்தானத்தினுடைய சர்வாதிகாரிகளால் அலட்சியப் படுத்தப்பட்டதன் காரணத்தால், அந்த உரிமைக் குரல் விடுதலைக் குரலாக மாறி, பாகிஸ்தானத்தின் சர்வாதிகாரிகளுடைய அட்டூழியங்கள் அளவு மீறி, அந்தப்பகுதி மக்கள் பெரும் கொடுமைக்கு ஆளாகி, அவர்கள் ஆர்த்தெழுந்து விடுதலை முரசை வேகமாகத் தட்ட, மனிதாபிமான உணர்ச்சியோடு அரசியல் தீர்வு காணவேண்டிய ஒரு பிரச்சனையை பாகிஸ்தானத்தினுடைய அதிபர் யாகியாகான் புறக்கணித்துவிட்ட காரணத்தினால், அனைத்துலக நாடுகளுக்கும் அந்தப் பேருண்மையை எடுத்துச் சொல்ல, அனைத்துலக நாடுகளில் நம் பக்கம் இருக்கின்ற நாடுகளின் பேராதரவினை எல்லாம் ஒருங்கே பெற்று, இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் போராட்டத்தில் பெரிய வெற்றியினை ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

பத்து நாளில் யுத்தம் என்று யாகியாகான் முதலிலே முழங்கினார். இதுவே கடைசி யுத்தம் என்று பின்பு சொன்னார். இப்போது ஐ.நா. மன்றத்திற்குச் சென்றிருக்கிற, பாகிஸ்தானத்தின் நியமிக்கப்பட்ட உதவி பிரதமர் பூட்டோ அவர்கள் ஆயிரம் ஆண்டு காலம் இந்த யுத்தம் நடைபெறும் என்று ஆருடம் கணித்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய பேச்சுக்கள் கேலிக்குரியதாக, கிண்டலுக்கு உரியதாக ஆக்கப்பட்டன என்பதற்கு அடையாளமாகத்தான் இன்று வங்கதேசம் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டு, அதிலே மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறது. அந்த வெற்றிக்கு தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தந்த பேராதரவும், இந்திய இராணுவ வீரர்கள் காட்டிய ஆர்வமும், தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் போர்க்களத்தில் அவர்கள் புரிந்த சாதனைகளும், முப்படைத் தளபதிகளும், அதிலே அணிவகுத்து நின்ற வீரர்களும் நடத்திய திறமை மிக்க போராட்டங்களும் காரணமாகும்.

இறுதி நேரத்திலே கூடப் போராடி, வங்க தேசத்தினுடைய தலைநகரம் டாக்காவைப் பிடித்துவிடலாம் என்ற உறுதி இருந்தாலும் மனிதாபிமான உணர்ச்சியோடு, எதிரியினுடைய வீரர்கள் அனைவருக்கும், தலைநகரில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் தொல்லைகள் ஏற்படுவதை விரும்பாத இந்தியா, அவர்களுக்குக் காலக்கெடு அளித்து, இன்னும் சில மணி நேரம் வேண்டும் நாங்கள் யோசிப்பதற்கு-சிந்திப்பதற்கு என்று கேட்டதற்கு அதையும் வழங்கி, அதற்குப் பிறகு பாகிஸ்தானத்தினுடைய தளபதியினுடைய சரணாகதிப் படலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு வங்கதேசம் விடுதலை பெற்றுவிட்டது; சுதந்திர நாடாக ஆகி விட்டது. அந்த நாட்டினுடைய கொடி பட்டொளி வீசி, முகிலைத் தொட்டு பறக்க இருக்கிறது; பறக்கிறது. இதே நேரத்தில் இந்த மண்ணினுடைய உரிமைக்குக் குரல் கொடுத்த மாவீரன், இந்த மண்ணினுடைய விடுதலைக்கு முழக்கமிட்ட கர்ம வீரன் முஜ்பூர் ரஹமான் மேற்குப் பாகிஸ்தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை, அந்த மாவீரனுடைய விடுதலைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற எல்லா மக்களும் - நான் நாடுகளைச் சொல்லவில்லை-எல்லா மக்களும் மனிதாபிமான உணர்ச்சியோடு அவரை விடுதலை செய்ய விருப்பம் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆகவே, விடுதலை பெற்றிருக்கிறது வங்க தேசம், விடுதலை வீரர் முஜ்பூர் ரஹமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு எல்லா நாடுகளும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த பேரவையிலே நாம் நிறைவேற்ற இருக்கிறோம்.

இந்த மனிதாபிமான உணர்ச்சியுடன் இந்தியா பங்குபெற்று நடத்திய இந்த போராட்டத்தில் ஆதிக்க நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகள், இன்னும் சொல்லப்போனால் தங்களுக்கு நெருக்கடி வந்தபோதெல்லாம் இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொண்ட எகிப்து போன்ற நாடுகள் எல்லாம், இன்னும் அண்டையிலுள்ள சில நாடுகளெல்லாம் இந்தியாவிற்கு விரோதமாக, பாகிஸ்தானத்திற்கு ஆதரவினைக் காட்டி, இன்றைக்கு சரியான பாடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே மேலும் அவர்கள் பாடம் பெறுவார்கள்.

நான் ஏற்கெனவே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதுபோல இந்தியாவை சில நாடுகள் புறக்கணிக்கின்றன; அலட்சியப்படுத்துகின்றன; என்றால், நாம் பெற இருக்கின்ற வெற்றிகள் அந்த அலட்சிய மனப்பான்மையைப் போக்கிவிடும்; நாம் பெற்றுக்கொடுக்கிற அந்தவெற்றி மேலும் அகில உலகில் நமக்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் தரும் என்று தெரிவித்ததைப்போல இன்றைக்கு அந்த வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். வெற்றிக்கு முழுமுதல் காரணமாக இருந்த நம்முடைய படைவீரர்கள் அனைவருக்கும், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் தலைவணங்கி வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு இந்த வெற்றியின் தலைவி-இந்திய மண்ணின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் நான் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பல வெற்றிகள் நமக்கு நிச்சயமாகக் குவியும். ஆனால் நமக்கு மண்ணாசை கிடையாது என்பதைத் தெரிவிக்கிற எடுத்துக்காட்டாக மேற்குப் பகுதியில் போர் நிறுத்தத்திற்கு இந்தியா தயாராக இருக்கிறது என்று அறிவித்திருக்கிறோம். போர் நிறுத்தம் செய்யப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் பாகிஸ்தானம் அதை காதில் போட்டுக்கொள்ளாமல், தம் முடிவைப்பற்றி கவலைப்படாமல் போரில் ஈடுபட்டால், அதற்கு அமெரிக்கா, சீனா போன்ற ஆதிபத்திய நாடுகள் விரும்பினால், இந்தியாவில் இருக்கிற அத்தனை பேர்களுடைய கரங்களும் துப்பாக்கிகளாக மாறி, அவர்களை எதிர்த்து வீழ்த்தும் என்கிற உறுதியினை இந்த அவையிலே நாம் எடுத்துக்கொள்கிறோம் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இங்கு முன்மொழியப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வரவேற்றுப் பாராட்டி இந்த மன்றமே ஒருமுகமாக நிறைவேற்றுகிற கட்டத்தில் நான் மேலும் சில வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

சுதந்திரக் கொடியை வங்காள தேசத்து மக்கள் ஏற்றிய நேரத்தில் அதை ஏற்றிவைப்பதற்கென்று தனி ஒரு இடம் கூட இல்லை. வங்காள தேசத்தில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு மரத்தடியில் அவர்களுடைய அரசை அவர்கள் உருவாக்கினார்கள். இவர் ஜனாதிபதி, இவர் பிரதமர், இவர் ராணுவ தளபதி என்றெல்லாம் அவர்கள் பிரகடனம் செய்ததை உலக நாடுகள் கேலிக்கண்களோடு அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்ததையும் இது எங்கே நடக்கப் போகிறது, புது நாடா, இது உருவாகுமா என்றெல்லாம் கேட்ட கேள்விகளையும் யாரும் மறந்திருக்க முடியாது. இன்னமும் பத்திரிகைகளில் வந்த அந்த புகைப்படம் நம் நெஞ்சிலே பசுமையாகப் பதிந்திருக்கிறது. ஒரு மரத்தடியில் ஒரு சாதாரண துணி போட்டுக்கூட மூடப்படாத ஒரு மேஜையும் பழுது பார்க்கப்பட வேண்டிய சில நாற்காலிகளும், அதிலே நான்கைந்து வங்க தேசத்தினுடைய புதிதாக அறிவிக்கப்பட்ட நிர்வாகிகளும், அவர்களுக்கு எதிரே மிகச் சொற்பமான ஒரு கூட்டமும் அதனைச் சுற்றி சில மரம் செடிகளும் இப்படிப்பட்ட ஒரு புகைப்படம் எல்லா ஏடுகளிலும் வெளியாகியிருந்தது.

ஆனால், இன்றைக்கு அந்தப் படம் மாறி அவர்கள் கிட்டத்தட்ட ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் தள நாயகர்களாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். எங்கேயோ ஒரு இடத்தில் அவர்களாக சூட்டிக் கொண்ட முஜ்பூர் நகர் என்கிற இடத்தில் பறக்கவிடப்பட்ட அந்தக் கொடி இன்றைக்கு வங்க தேசத்தினுடைய தலைநகரமான, இந்திரா காந்தி அவர்கள் அறிவித்ததைப் போல் சுதந்திர நாட்டின் சுதந்திர தலைநகரமான, டாக்கா நகரத்தில் பறக்க விடப்படுகிறது என்பது புறக்கணிக்கப் படுகிறவர்கள், அலட்சியப் படுத்தப்படுகிறவர்கள், உரிமைகள் நசுக்கப்படுகிறவர்கள், விடுதலை விரும்பிகள் என்றைக்காவது ஒரு நாள் வெற்றியை நிச்சயமாகப் பெற்றுத் தீருவார்கள் என்ற நம்பிக்கையை (பலத்த ஆரவாரம்) அகில உலகிற்கும் ஜனநாயக ரீதியில் அறிவித்துக்கொண்டிருக்கிற தெரிந்த சாட்சியமாகும்.

முஜிபீர் நகர் என்று விளையாட்டாகச் சொல்லப்பட்ட பெயர், வேடிக்கையாகக் கணிக்கப்பட்ட ஒரு நகரத்தினுடைய பெயர், ஆனால், இன்றைக்கு டாக்கா நகரத்திற்கே அந்தப் பெயரை வைக்கலாமா என்று அவர்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். 'டாக்கா' என்றாலே, டாக் என்ற ஒரு வகை மரங்கள் நிறைந்த இடம் என்றும், அந்த அடிப்படையில் தான் அந்த நகரத்திற்கு அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுகிறார்கள். அதே போல், மரங்கள் அடர்ந்த இடத்தில் துவங்கப்பட்டு, மரங்கள் அடர்ந்து இருப்பதன் காரணத்தால் பெயர் பெற்ற தலைநகரத்தில் அந்த அரசு நிலைபெறுகிறது. அப்படி நிலைபெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவர்கள் பக்கம் இருந்து, மனித உணர்வோடு ஜனநாயகக் கடமையினைச் செய்து முடித்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நாடும், நாநிலமும் போற்றத் தவறாது.

இங்கே திருமதி அனந்தநாயகி சொன்னார்கள், பெண்மையின் பெருமையை உலகம் உணர்ந்தது என்று. கொஞ்சம் தாமதமாக உணர்ந்தாலும் (சிரிப்பு) பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்திருக்கிறது. இந்திரா காந்தி அவர்கள் எடுத்த அந்த முயற்சிகளை அனைத்து உலகத்திலுள்ள, சில நாடுகள் ஆரம்பத்தில் அலட்சியப்படுத்தினாலும், அந்த நாடுகளுக்கெல்லாம் பாடம் போதிக்கும் வகையில் இந்திரா காந்தி திறமையையும் ஆற்றலையும், இந்தியாவின் ஒருமித்த சக்தியையும் எடுத்துக் காட்டி, மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியது போல, இந்தப் போர் இந்தியாவிலே ஒரு பக்கத்திலே நடைபெற்றுக் கொண்டு இருந்தாலும், அது தமிழ் நாட்டையும் பாதிக்கக் கூடிய போர் என்பதையும் யாரும் மறந்து விடக் கூடாது. அன்றைக்கே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், இன்றைக்கு தமிழ் நாட்டில் தமிழ் மக்களும், ஆந்திரா, மைசூர், குஜராத் என்ற பாகுபாடு இல்லாமல், இந்தியா ஒன்று என்கிற ஒரே உத்வேகத்தோடு எதிரியை வீழ்த்துவதற்குப் போர் முனையில்

நின்று கொண்டு இருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்கு போர் வராவிட்டலும், தமிழ் நாடு போர் முனையில் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இன்றைக்கு, தமிழ் நாட்டு வீரர்கள் சிலர், ஏன், பலர் என்று கூடச் சொல்லலாம், இந்தப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அணிந்திருந்த ராணுவ உடைகள் அவர்களுடைய வீட்டுக்குத் திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ராணுவ உடைகளை, கண்ணீரால் நனைத்து, அவைகளை தன் அருமந்தச் செல்வன் நினைவோடு, வீட்டுச் செல்வன் நினைவோடு, பேழையில் வைத்துப் பூட்டி, மலர் கொண்டு பூஜித்துக் கொண்டு இருக்கிறார்கள், வீட்டுத் தாய்மார்கள், அவர்களுடைய அனுசரணைக்கும், ஆதரவுக்கும் போகின்றவர்கள் நாம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

போர் வெற்றியையும் கொடுக்கும். ஆனால் போருக்குப் பின் ஏற்படுகின்ற விளைவுகளை நாடு சமாளித்துத் தீரவேண்டும். அந்த சமாளிக்கின்ற ஆற்றலை நாம் அனைவரும் பெற்று இருக்கின்றோம். நம்முடைய மன்றத்தில் கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியது போல, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடமை உண்டு. இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்பு உண்டு; அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும், மாவட்ட அதிகாரிகள் மூலமாக தகவல் அந்த அந்த இடங்களுக்குத் தரப்படுகிறது. அந்த நேரத்தில், அதிகாரிகள் வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற்கு முன்பாக. ஆங்காங்கே, மக்கள் பிரதிநிதிகள் சொன்னார்கள், ஊராட்சி மன்றத்தலைவர்கள் சொன்னார்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் சொன்னார்கள், ஒன்றியத் தலைவர்கள் சொன்னார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், மேலவை உறுப்பினர்கள் சொன்னார்கள் என்று சொல்லுகின்ற அளவுக்கு, சில இடங்களில் கூடுமானால் அமைச்சர்களே கூட இல்லங்களுக்குச் சென்றார்கள், ஆறுதல் சொன்னார்கள் என்று, அதிகாரிகளை முந்திக் கொண்டு நாம் நின்றால்தான். 'நம் மகன் இந்த மானப் போர்க்களத்தில் மடிந்துவிட்டாலும். அந்த மகனுக்குப் பதிலாக, இதோ, இன்னொரு மகன் இருக்கிறான்' என்று அந்தத் தாய் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவார்கள், நம் தாய்த்திருநாடு எழுச்சியினைப் பெறமுடியும். நம்முடைய நாடு புறநானூற்றுப் புகழ் கொண்ட நாடு; புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த நாடு நம் தமிழ்

நாடு. இங்கே வீரத்திற்குப் பஞ்சம் இல்லை. மானத்தை நிலைநாட்ட, மறவர்கள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுப்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் பேசப்படுகிறது.

*'வெங்கொடுமைச் சாக்காட்டில், விளையாடும் தோள்*
*எங்கள் வெற்றித் தோள்கள்; .....*

*செங்குருதி தனில் கமழ்ந்து வீரம் செய்கின்ற முச்ச*
*எங்கள் முச்சாம்'*

என்று தமிழ் பாட்டில் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடியதற்கு ஏற்ப மறவர்கள் நிறைந்த நாடு தமிழ் நாடு, தமிழ் மாநிலம். ஆகவே, அந்தத் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றியினைத் தேடித்தர தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள், அங்கங்களை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள், கால் கைகளை வெட்டி பச்சை ரத்தத்தைப் பரிமாறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கு இந்தப் பேரவையின் வணக்கம் சொல்வதில் நாம் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்கிறோம் என்றால் மிகையாகாது. இப்பொழுதும் கூட அப்படிப்பட்ட வீரர்களுக்கு இந்த அரசு சில விருதுகளையும், அந்த விருதுகளுக்கு ஏற்ப பண முடிப்புகளையும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது போதாது என்றாலும், நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். நம்முடைய இதயத்தை அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைக்கிறோம். நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள் கன்னர் ஆறுமுகம் அவர்கள் பற்றிய கடிதத்தை இந்த அவையில் குறிப்பிடுவது நல்லது என்று. அது உங்களுடைய உள்ளத்தைத் தொடக் கூடியது இப்படிப்பட்ட இல்லங்களிலே ஆறு என ஓடுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்குப் பயன்படும் என்று, இதை அவையில் படிக்கிறேன். அது நீண்ட கடிதம், ஒரு பகுதியை மாத்திரம் படிக்கிறேன். மேஜர் பால் அவர்கள், ஆபீசர் கமாண்டிங், எழுதியுள்ள கடிதம்:

Unfortunately gunner Arumugam got a bullet hit in his head while fighting this action but he carried on his duties until he fell dead, in the service of our motherland. His bravery and courage has become an example and source of inspiration for the entire unit. Gunner Arumugam was recently married and leaves behind his widow, who is understood to be in the family way. We are all concerned about her and are doing our best in

all possible ways. However. I shall be very grateful if you could kindly keep a fatherly and protective hand on her and extend all possible assistance to her.

இப்படிப்பட்ட கடிதங்கள், இதுபோன்று போர்க்காலங்களில் ஏராளமாக வரக்கூடும். ஆறுமுகங்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றக்கூடும். ஆறுமுகங்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்தப் பணியில் நாம் ஈடுபடுவோமேயானால்தான் இந்தியாவில் இருக்கின்ற 55கோடி மக்களும், தமிழ் நாட்டில் இருக்கின்ற 4½ கோடி மக்களும் போர்க்களத்தில் நிற்கின்றோம் என்கிற உணர்ச்சி எதிரிக்கு உருவாகும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்ட ·விரும்புகிறேன்.

இப்பொழுதும், இந்தியா, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, மண்ணாசை பிடித்து அலையவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, போர் நிறுத்தம் செய்கிறது என்று அறிவித்திருக்கிறது. ஒன்றை நீங்கள் மறந்து இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். முதலிலே இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான். ஆக, போர் தொடுத்ததில் முந்திக் கொண்டது பாகிஸ்தான். ஆனால் இன்றைக்குப் போர் நிறுத்தம் செய்கிறோம் என்பதில் முந்திக்கொண்டிருப்பது, இந்தியா என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு, உலக நாடுகள், சில நாடுகள், தாங்கள் எடுத்தஅநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால், இந்தியா அவர்களுக்குக் கட்டாயம் மேலும் புத்தி தரத்தக்க அளவுக்குப் பாடத்தைப் புகட்டும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் இல்லை (பலத்த சிரிப்பு). இன்றைக்கு அமெரிக்காவின் கையில் 'புட்டோ' இருக்கலாம். ஆனால் ரஷ்யாவின் கையில் 'வீட்டோ' இருக்கிறது. (சிரிப்பு) இன்றைக்கு ஐ.நா.மன்றங்கள், நியூயார்க் நகரத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது என்னவென்றால், நல்ல நாடுகள், நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நியாயத்தின் பக்கம் ஆதரவு கோரும் நம் பக்கம் இருக்கின்றன என்று. அந்த நாடுகளுக்கு நாம் மேலும், மேலும், மீண்டும், மீண்டும் இந்தப் பேரவையின் சார்பில், 4½ கோடி

தமிழ் மக்களின் சார்பில், நம் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளும் இந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். (பலத்த ஆரவாரம்).



## விலைவாசி உயர்வு

**உரை : 13** **நாள் : 11.08.1973**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவ ரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நாட்டின் பொருளாதாரச் சீரழிவிற்கும், விலை ஏற்றத்திற்கும், வாழ்க்கைச் செலவுப் பெருக்கத்திற்கும் முக்கியமான காரணம் கறுப்புப் பணப் புழக்கம் என்பதை எடுத்துக்காட்டி, அந்தக் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு வாஞ்சு (Wanchoo) குழுவினர் கூறியிருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுச் செயற்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது."

தலைவரவர்களே, நேற்று நடைபெற்ற விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நண்பர் தங்கமணி அவர்களும், பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், சுதந்திராக் கட்சியின் தலைவர் வெங்கடசாமி அவர்களும் இப்படி ஒரு தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வரப்படும் என்று அறிவித்ததை ஏற்றுக்கொண்டார்கள். இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கருத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரவர்கள் இங்கே வெளியிட்டபொழுது, எந்த நல்ல கருத்துக்கள், பயனுள்ள கருத்துக்கள் எதிர்க்கட்சியிலேயிருந்து எடுத்துச் சொல்லப் பட்டாலும் அவைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, உடனடியாக நான் இந்த அவையிலே எழுந்து

அதை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், அதை விரைவாகச் செயல்படுத்தும் வகையிலே இந்தத் தீர்மானத்தையும் இங்கே முன்மொழிந்திருக்கின்றேன்.

இந்தத் தீர்மானத்திலே மிக முக்கியமான அம்சமாக நாம் கோடிட்டுக் குறித்துவைத்துக்கொள்ளவேண்டியது, ''கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு வாஞ்சு குழுவினர் கூறி இருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுச் செயற்படுத்தவேண்டும்'' என்பதும். ''அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது'' என்பது முக்கியமான அம்சமாகும். வாஞ்சு கமிட்டி என்று சொல்லப்படும் அந்தக் குழு ''டைரக்ட் டாக்சஸ் என்கொய்ரி கமிட்டி'' என்ற பெயரால் ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறது. அந்த அறிக்கையிலே மிக முக்கியமான சில பரிந்துரைகள் கறுப்புப் பணத்தைப் பற்றிய பகுதியாகும். இதிலே அந்தக் குழுவினர் கூறுகிறார்கள்.

'Black money is like a cancer growth in the country 's which, if not checked in time, is sure to lead to ruination'.

என்று குறிப்பிடுகிறார்கள். கறுப்புப் பணம் பொருளாதாரச் சீரழிவிற்குப் புற்று நோயைப்போல் இன்றைக்கு வளர்ந்து வருகிறது. ஆகவே, உடனடியாக, அந்தக் கறுப்புப் பணத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற குறிக்கோள் இந்தப் பரிந்துரையிலே அடங்கியிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதைப்போல, எப்படி உருவாகிறது, ஏன் உருவாகிறது, என்ற காரணங்களைச் சொல்லும் நேரத்திலே கூட.

'black-money is found widely used for conducting concealed business transactions smuggling gold and luxury articles. Financing secret commissions, giving donations to political parties, acquiring assets in benami names and the vulgar display of wealth which is evidenced by ostentatious living and lavish expenditure in wedding, festival, etc. is the scourage of black-money.'

என்றும் அந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். படாடோபச் செலவு, பினாமி ஆக சொத்துக்களை எழுதி வைப்பது, தொழில்களைத் தொடங்குவதற்கு மறைமுகமாகப் பணத்தை முடக்குவது, ஆடம்பர வாழ்க்கை வாழ்வது ஆகிய இவைகளுக்கு இந்தக் கறுப்புப் பணம் ஒரு காரணமாக இருப்பதால் அதை இன்றைக்கு மறைத்து வைத்து, அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காக நாட்டிலே குறிப்பிட்ட சிலர் வரி ஏமாற்றுவது போன்றவைகளைச் செய்து, கறுப்புப் பணத்தை மறைத்து வைத்து, ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டத் தவறவில்லை. விலை உயர்வால் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்திய நாட்டில் இந்தக் கறுப்புப் பணத்தை கள்ளச் சந்தையை ஒழிப்பதற்காகத் தீவிரமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் நிச்சயமாகப் பயன்படும் என்கின்ற கருத்தை நேற்று இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

வரி உயர்வால் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளது என்பது ஒரு வாதம். இந்த வாஞ்சூ கமிட்டியிலேகூட வரியைப்பற்றிச் செய்திருக்கின்ற சில சிபார்சுகள் எல்லாவற்றையுமே நாம் ஏற்றுக்கொள்கிறோமா என்பது வாதத்திற்குரிய பிரச்சினை. வரியைப்பற்றி சொல்லியிருக்கிற பிரச்சினைகளில் மாநில அரசுகளையும் கலந்துகொண்டு அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால், நான் தேசிய வளர்ச்சிக் குழு முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டபொழுதுகூட ஒரு கருத்தைச் சொன்னேன். கறுப்புப் பணத்தை வெளிக் கொணர மென்மையான வழிகளைப் பின்பற்ற இந்த அரசு கருதுமேயானால், வரி உயர்வால் வரி கட்டப் பயந்து அல்லது வரி கட்டினால் தங்களுடைய சம்பாதித்த பணம் முழுவதும் போய்விடும் என்று எண்ணி மறைத்து வைத்திருப்பவர்கள் அவர்களாகவே அதை வெளிக்கொணர, அவர்களே முன்வந்து தொழிலிலே முதலீடு செய்ய வந்தால் அப்படி முன் வருபவர்களுக்கு வரிச் சலுகை அளித்தாவது அந்தப் பணத்தை

வெளிக் கொணரலாம், அது என்னுடைய முடிந்த முடிவு அல்ல; அதுபற்றி மத்திய அரசு யோசிக்கலாம் என்ற கருத்தைக்கூட தேசிய வளர்ச்சிக் குழுவில் எடுத்துச் சொன்னேன். அதையும் இந்த அவை அறியுமென்று நான் கருதுகிறேன்.

இந்த அறிக்கையிலே இன்னொன்றையும் குறிப்பிடு கிறார்கள். பொதுவாக, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகள் தருவது இந்தக் கறுப்புப் பணத்திலிருந்துதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிற நேரத்தில் ஒன்றை அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

Removal of the ban on donations by companies to political parties is, therefore, not favoured. Nevertheless, it is an accepted fact of life that in a democratic set-up political parties have to spend considerable sums of money, and that large sums are required for elections. As in West Germany and Japan, in our country also, the Government should finance political parties.

என்ற கருத்தையும் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நான் சென்ற முறைக்கு முன்முறை இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது நானும், நம்முடைய சட்ட அமைச்சர் மாதவன் அவர்களும் இந்தக் கருத்தை அவர்களிடத்தில் சொன்னபோது, அவர்களும் அதை முழுக்க முழுக்க ஒத்துக்கொண்டார்கள். ஒத்துக்கொண்டு தேர்தல் நேரங்களில் அரசாங்கமே அந்தத் தேர்தல் செலவுகளைக் கவனிக்கின்ற அளவுக்கு நன்கொடைகளை வழங்கலாம், செலவுகளை ஏற்றுக் கொள்ளலாம் என்ற கருத்தைப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். நாங்கள் கலந்து பேசக்கூடிய காலத்தில் இரு சாராரும் ஒத்துக் கொள்ளக்கூடிய கருத்தாக இருந்த காரணத்தால், தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற மன்னார்குடி திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் கூட, தேர்தல் செலவுகளை எல்லாம், கறுப்புப் பணத்தை ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் கழகத்தின் சார்பில் நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருப்பதை அனைவரும் அறியக் கூடும்.

ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு நிலைகளில் இன்றைக்கு வளர்ந்து கொண்டு போகிற கறுப்புப் பண நடமாட்டத்தை - கறுப்புப் பணம் முடங்கிக் கிடக்கிறது, இரவு நேரங்களில் நடமாடிக் கொண்டிருக்கும். இரவு நேரம் என்று நான் குறிப்பிட்டது யாருக்கும் தெரியாமல் நடமாடுவதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்-தடுக்க, முடங்கிக் கிடப்பதை வெளியிலே கொண்டு வர என்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று வாஞ்சூ கமிட்டியினர் சொல்லுகிற நேரத்தில் -

'The power of search under the Income-tax Act is a potent instrument in the hands of the Departments to provide direct and clinching evidence about tax evasion and the existence of black money. The Department should make an increasing use of its powers of search and seizure in appropriate cases.'

வருமான வரித் துறையினர் இன்றைக்கு எடுக்கிற நடவடிக்கைகள் மேலும் வேகமாக முடிக்கப்பட வேண்டும், தீவிரமாக ஆக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் இந்தக் குழுவின் மிக முக்கியமான சிபாரிசாக இருப்பதை நாம் அறிவோம். இந்த நேரத்தில் தீர்மானத்திலே ஒன்றைச் சேர்க்க எண்ணினோம். அதை இணைக்கவேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு எழுந்தது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கூட அதையும் இணைத்துக் கொள்ளலாம் என்று உறுதியாகச் சொன்னார்கள்.

இந்த அதிகாரங்கள், கறுப்புப் பணத்தை வெளியே கொணர எடுக்கும் அதிகாரங்கள் மத்திய அரசுக்கு இருப்பதோடு மாநில அரசுக்கும் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு தலையிடக் கூடாது என்று கூறவில்லை. மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் மாநில அரசுக்கும் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு மாநில அரசு அளவுக்கு இந்த நாட்டில் இருக்கும் நிலைமைகளோடு நெருங்கிப் பழகுகின்ற சூழ்நிலை பெற்றிருக்கவில்லை. அது டில்லிப் பட்டணத்தில் இருக்கிறது என்பது மாத்திரமல்ல ; டில்லிப் பட்டணத்தில் இருந்தாலும் அதிகாரக் கால்கள்

நாடெங்கும் பரவி இருக்கிறது; இந்திய பூபாகம் முழுவதும் படர்ந்து இருக்கிறது என்றாலும் மாநில அரசுகள் பரவலாகப் படர்ந்து மக்களோடு நெருங்கி நிலைமைகளை அறியும் வாய்ப்புக் கூறுகள் பெற்றிருக்கிற அளவு மத்திய அரசு பெற்றிருக்காது என்று கருதுகிறேன், மாநில அரசுக்கும் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று மிகத் தெளிவாகத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, அப்படிச் செய்தால்தான் மக்களோடு நெருங்கிய தொடர்புகொண்ட மாநில அரசுகள் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருகிற முயற்சியில் வெற்றி காண முடியும்.

அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்றார்கள். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வது என்றால் அதை மாநில அரசும் செய்யலாம், மத்திய அரசும் செய்யலாம். மாநில அரசுகள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும், மத்திய அரசு ஒன்றுதான் புனிதமானது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டாம். மத்திய அரசு புனிதமானதாக இருந்து மாநில அரசுகள் துஷ்பிரயோகம் செய்வதாக இருக்கலாம். சில நேரங்களில் மாநில அரசு புனிதமானதாக இருந்து மத்திய அரசு துஷ்பிரயோகம் செய்வதாகவும் இருக்கலாம். ஆகவே, இதிலே மாநில அரசு என்றென்றும் துஷ்பிரயோகம் செய்யும், மத்திய அரசு துஷ்பிரயோகமே செய்யாது என்ற முடிவை எடுத்துக் கொள்ளக் கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற எந்த அரசும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யுமானால் தீர்ப்பளிக்கும் பொறுப்பை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகம் விதித்திருக்கும் காலகட்டத்தில் அந்தத் தீர்ப்பை நிச்சயமாக அளிக்க மக்கள் காத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, மாநில அரசும் அதிகாரத்தைப் பெறவேண்டும், துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என்ற உறுதியை அளிக்கிறேன்.

பரீட்சார்த்தமாக ஓராண்டுக் காலத்திற்கு மத்திய அரசு, மாநில அரசுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்கட்டும். கிட்டத்தட்ட ஆறாயிரம் கோடி வரை நம் நாட்டில் கறுப்புப் பணம் இருக்கிறது. அதிலே தமிழ்நாட்டிலே முடங்கிக் கிடக்கும் கறுப்புப் பணத்தில் பெரும்பகுதியை - பரீட்சார்த்தமாக ஓராண்டுக்

காலத்திற்கு அதிகாரத்தைக் கொடுத்தால் வெளிக் கொணரும் முயற்சியில் வெற்றி பெறும் என்று எடுத்துச் சொல்லி, இந்த முக்கியமான தீர்மானத்தை, நேற்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் அங்கீகரித்ததற்கு ஏற்ப, இதற்கு அங்கீகார முத்திரையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு முன்மொழிகிறேன்.

# நெய்வேலி 2-வது சுரங்கத் திட்டம்

**உரை : 14** **நாள் : 19.11.1973**

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** அவைத் தலைவர் அவர்களே.

''தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, நாள்தோறும் பெருகி வரும் மின் சக்தி தேவையை நிறைவு செய்யவில்லை யெனில் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். தமிழ்நாட்டில் நீர் மின் வாய்ப்புக்கள் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், அனல் மின் நிலையங்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். நிலக்கரி பற்றாக்குறை உள்ளதால் தமிழகத்தில் கிடைக்கும் நெய்வேலி பழுப்பு நிலக்கரியை முழுமையாகப் பயன்படுத்தி அனல் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கிவிடுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, நெய்வேலி 2-வது சுரங்கத் திட்டத்தையும் 1,000 மெகாவாட் அனல் மின் உற்பத்தித் திட்டத்தையும் உடனடியாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இது மிகமிக முக்கியமான ஒரு தீர்மானம் ஆகும். இரண்டொரு நாட்களில் மத்தியிலே 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன திட்டங்களைச் சேர்ப்பது என்கிற ஒரு இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னாக இந்தத் தீர்மானத்தின் மூலம், அனைத்துக் கட்சித் தலைவர்களின் சார்பாக இந்த மாமன்றம் தமிழ்நாடு மக்களின் குரலை எதிரொலிக்கின்ற வகையில் இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற

வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதே விருப்பத்தை எல்லாக் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் கொண்டு இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பது, நெய்வேலியில் 2-வது சுரங்கத் திட்ட வேலை தொடங்கப்பட வேண்டும் என்பதாகும். இது தொடங்கப்பட்டு முற்றுப் பெறுமானால், அதன் மூலமாக ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நமக்குக் கிடைக்கக்கூடும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இது மிகமிகப் பயன்படக்கூடிய ஒன்றாகும். இது இந்தக் கட்டத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் ஏறத்தாழ பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரிய தேக்க நிலை ஏற்பட்டுவிடக்கூடும் என்ற அச்சத்தை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எடுத்துள்ள கணக்கின்படி 1978-79-ஆம் ஆண்டில் நமக்குத் தேவையான மின்சாரத்தின் மொத்த அளவு 3,620 மெகாவாட் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்கு இப்போதுள்ள மின்சாரத் திறன் சுமார் 1,400 மெகாவாட்டாகத்தான் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். வர இருக்கின்ற நீர் மின் நிலை உற்பத்தியும் தூத்துக்குடி திட்டமும், எண்ணூர் விரிவுத் திட்டமும் ஆகிய அனைத்தும் முடிவு அடைந்தால் கூட நமது மின் உற்பத்தித் திறன் 2,200 மெகாவாட்டாகத்தான் கூடும் என்று நினைக்கிறேன். ஆகவேதான் நெய்வேலி 2-வது சுரங்கவேலை ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தியும், அங்கு நடைபெறவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நெய்வேலியின் மின்சார உற்பத்தியைப் பெருக்க, அதற்கான மின் நிலையத்தை அமைக்கின்ற வகையில் நிறைய வசதிகள் அங்கே இருக்கின்றன. முதலில் நிலக்கரி அங்கே கிடைக்கிறது. அதன் காரணமாக போக்குவரத்துப் பிரச்சினை எழவில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில், தூத்துக்குடி, எண்ணூரில் இந்தத் திட்டங்களைவிட, இங்கே உற்பத்திச் செலவு சற்று அதிகமானாலும் கூட, நம்முடைய தேவையினுடைய இன்றியமையாமையை முன்னிட்டு இந்தச் செலவைப்

பொருட்படுத்தக் கூடாது என்பதையும் மத்திய அரசாங்கத்திடம், திட்டக் குழுவினுடைய தலைவரிடம், தொடர்புடைய அமைச்சர் பெருமக்களிடம், இந்தியத் தலைமையமைச்சரிடம் தமிழக அரசின் சார்பாகப் பல முறையும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. இப்பொழுது திட்டத்தை எடுத்துக்கொண்டாலே அது நிறைவேறு வதற்கு 7 அல்லது 8 ஆண்டுக் காலம் ஆகும். இது முன்பே, நான்காவது திட்டத்திலே ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் கூட, ரூ.100 கோடி செலவிலே அது முடிவடையக் கூடும் என்று அப்பொழுது கணக்கிடப்பட்டது. இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏற்றுக்கொள்ளலாம் என்றால், ரூ.300 கோடி ஆகும் என்றும், ஐந்தாவது திட்டத்திலே மாத்திரம் செலவு ரூ.200 கோடி என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஐந்தாவது திட்டத்திலே விடப்பட்டு, ஆறாவது திட்டத்திற்குக் கொண்டு செல்லப்படு மேயானால், செலவினுடைய தொகையும் அதிகமாகும். அது மாத்திரமல்ல, ஆறாவது திட்டக் காலத்திலே இந்தத் திட்டத்தைச் சேர்த்துக் கொண்டாலும், இதனுடைய பயனை ஆறாவது திட்டக் காலத்திலே நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக அடைந்திட இயலாது என்பதையும் நாம் மனத்திலே கொள்ளவேண்டும். இதுபற்றி நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு அண்மையிலே சென்றிருந்தபொழுது அங்கே இருக்கிற மத்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு.தார் அவர்களிடத்திலும் இதுபற்றி நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். நேற்றையதினம், மத்திய அமைச்சர் திரு.சுப்பிரமணியம் அவர்களோடு தொடர்புகொண்டு நான் பேசி இந்தத் திட்டம் எப்படியாவது சேர்க்கப்பட வேண்டுமென்று நான் அவர்களிடத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இன்றையதினம் இப்படிப்பட்ட தீர்மானத்தை நாம் நிறைவேற்றுவதன் மூலம் தமிழ்நாட்டு மக்கள் ஏகோபித்தக் குரலில் இந்தத் திட்டத்தை விரும்புகிறார்கள் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அது மாத்திரமல்ல, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம் மத்திய அரசு தமிழ்நாட்டிலே நடத்தவேண்டிய திட்டங்கள்

சிலவற்றைக் குறித்துக் கேட்டிருக்கிறோம் என்றாலும், இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டால், மத்திய அரசின் திட்டங்கள் என்று ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எதுவுமே இல்லாமல் போய்விடும். ஆகவே, அந்தக் குறையைப் போக்க, எதிர் காலத்திலே தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை சீர்படுகின்ற வகையில் மத்திய அரசு உடனடியாக இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, நெய்வேலி இரண்டாவது சுரங்கமுண்டு என்ற செய்தியினை, தமிழ் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தியினை, இரண்டொரு நாளிலே அவர்கள் தந்திட வேண்டுமென்று அவையிலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய, உறுப்பினர்களுடைய அன்பான ஆதரவோடு கேட்டு, நான் அமர்கிறேன்.



# அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டத்திருத்தம்

**உரை : 15** **நாள் : 15.04.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாமன்றம் நிறைவேற்றுகிற இந்த நாள் ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடியவர்களில் இந்தியாவில் தலைசிறந்தவர்களாக விளங்கியவர்களில் ஒருவரான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்தநாள் நேற்றைய தினமாகும். இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற இந்த நாள் இந்த அவைத் தலைவராகிய தாங்கள் பிறந்தநாள் என்பதை எண்ணுகிற நேரத்தில் தங்களுக்கு இந்த அவை உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் மகிழத்தக்க ஒரு தீர்மானத்தை இந்த அவை உறுப்பினர்கள் மிக விளக்கமாக விவாதித்து அதை நிறைவேற்றுகிற கட்டத்தில் எடுத்துச்சொல்லப்பட்ட சில கருத்துக்கள்மீது என்னுடைய கருத்துக்களையும் இணைய வைப்பது சாலப் பொருத்தமுடையது என்றே நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை, அனைவரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பெற்று சிலர் அந்தச் சட்டத்தை நீதிமன்றத்தினுடைய கூண்டுகளிலே ஏற்றி அது முடக்கப்பட்டுவிட்ட பிறகு நான் டெல்லிக்குச் சென்றபோது மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களைக்கூட சந்தித்து இதைப்பற்றி பேசியிருக்கிறேன்.

ஆகவே இன்றைக்கு நாம் நிறைவேற்ற இருக்கிற இந்தத் தீர்மானம் மத்திய அரசில் நல்ல புரட்சிகரமான எண்ணம் கொண்டவர்களால் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குத் திடமாக இருக்கிறது. பாராளுமன்றத்தில் நம்முடைய தீர்மானத்தி

னுடைய நல்ல நோக்கத்தை உணர்ந்து அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான வழிவகைகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த விவாதத்தினிடையே பேசிய நம் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சோவியத் ரஷ்யாவில் எப்படி மத உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதையும், அதே நேரத்தில் அதை எதிர்த்துப் பேசுகிற உரிமை எந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இங்கும்கூட கடவுள் நம்பிக்கை பற்றி பேசுகிறவர்களும் அல்லது கடவுள் நம்பிக்கை தவறு என்று பேசுகிறவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும், மதச் சார்பற்ற ஒரு சர்க்காரில் இருக்கிற நிறுவனங்கள், வானொலி போன்ற அமைப்புக்கள் முழுக்க முழுக்க மதப் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறது என்கின்ற மிகப் பொருத்தமான ஒரு குற்றச்சாட்டைக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

நானும் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தக் குற்றச்சாட்டை வரிக்கு வரி அப்படியே ஒப்புக்கொள்கிறேன். இதே கருத்தை அவர்கள் கடந்த 5, 6 நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்திலே கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் போதும் வலியுறுத்தினார்கள். இதனை ஏற்றுச் செயல்படுத்துகின்ற இடத்தில் தமிழக அரசு இல்லாவிட்டாலும் இன்றைக்குச் செயல்படுத்துகின்ற இடத்திலே இருக்கிற மத்திய அரசு வானொலியை இனிமேலாவது நாட்டு மக்களுடைய பல்வேறு பிரச்னைகளை அணுகுகின்ற வகையில் பயன்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மதப் பிரச்சாரத்திற்கு அவர்கள் அறவே இடம் தரக் கூடாது என்று கூறவில்லை. இந்து மதத்திற்கு, இஸ்லாம் மதத்திற்கு, கிறிஸ்தவ மதத்திற்கு இப்படி பல்வேறு மதங்களுக்கென்று அவர்கள் நேரத்தை ஒதுக்கீடு செய்து இன்றைக்கு அந்தப் பிரச்சாரத்திற்கு வானொலியைப் பயன்படுத்துகிறார்கள்.

அதைப் போலவே பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கென்றும், வானொலியிலே ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் ஒதுக்கிட வேண்டும், அதற்கு ஆவன செய்கின்ற முயற்சியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதையும் இங்கே கே. டி. கே.

அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களோடு நான் இணைத்து ஒரு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பெரியவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள், வாழ்க்கை வரலாறுகள், மறைந்து விட்டவர்களுடைய சிறப்பு இயல்புகள் இவைகளைப் பற்றியெல்லாம் வானொலியிலே எடுத்துச் சொல்லப்படவில்லை என்கின்ற குறைபாட்டினையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, சீர்திருத்தக் கருத்துக்கள், எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படக்கூடிய சீர்திருத்தக் கருத்துக்கள், இவைகளையெல்லாம் இன்றைக்கு இந்த நாட்டில் எடுத்துச் சொன்னால், அந்தக் கருத்துக்கள் ஆழப் பதிந்து வேரூன்றி விடுமேயானால், நாட்டிலே சில மூட நம்பிக்கைகளின் பின்னால் ஒளிந்து கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள், மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றவர்கள், சில சனாதனிகள், இப்படிப்பட்டவர்கள் இங்கே தங்களுடைய நிலை கீழே போய் விடுமோ என்கின்ற பயத்தின் காரணமாக, புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், அதை அவர்தான் சொல்ல முடியும், மற்றவர்கள் யாரும் சொல்ல முடியாது என்கின்ற திரையைப் போட்டு அதை மூடிவிடுகிறார்கள்.

உத்தமர் காந்தி அடிகள் அனைவரும் சமம் என்று கூறுகிறார்கள் என்றால், அதைக் காந்தி சொல்லலாம். மற்றவர்கள் சொல்ல முடியுமா என்று கூறி, ஆகவே, கடவுளின் அவதாரம் என்று எடுத்துக்காட்டி, கடவுளின் அவதாரங்களால்தான் அப்படிப் பேசமுடியும், சாதாரண மக்களால் அப்படி பேச முடியாது என்று தங்களுடைய கருத்துக்களுக்கு ஆக்கம் தருவதற்குப் புரட்சிகரமான கருத்துக்களை மறைத்து விடுகிறார்கள்.

அதைப்போலத்தான் சித்தர்கள் என்கின்ற பெரும் புலவர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். மிகப் புரட்சிகரமான கருத்துக்கள், சாதி, சமயங்களைச் சாடுகின்ற அளவுக்கும், ஆயிரக்கணக்கான கடவுள்களை நாம் வணங்கத் தேவையில்லை யென்கின்ற அளவுக்கும் அந்தக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. அவைகளை அவர்கள் எல்லாம், சிவ வாக்கியர் என்ன, மற்ற சித்தர்கள் என்ன, அவர்களால் அந்தக் கருத்துக்களைச் சொல்லமுடியும் - மற்றவர்களால் சொல்ல முடியுமா என்று அந்தக் கருத்துக்களுக்கும் அணை போட்டு விட்டார்கள்.

கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார்கூடச் சாத்திரங்களைக் கண்டித்தார். சம்பிரதாயங்களைச் சாடினார். சொர்க்கம், நரகம் என்று சொல்லப்படுகின்றவைகளை எல்லாம் 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'! என்றுகூட அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார். ஆனால் என்னவாயிற்று? அவர் மறைவுக்குப் பிறகு அந்தப் பாடல்கள் எல்லாம் முன்னுக்குத் தள்ளப்பட்டு, அவர்கள் மறுபக்கத்திலே பாடிய பாடல்கள் எல்லாம் பின்னால் வைக்கப் பட்டு, முதலிலே இதைப் பாடினார் என்று பின்னால் வைக்கப்பட்டு, திருந்திய பிறகு பாடினார் என்று அப்பாடல்கள் முன்னால் வைக்கப்பட்டு, அவருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் நாட்டிலே மறைத்து விட்டார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். அவர் வழி வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் வழியில் வாழ்ந்து மறைந்த ஜீவா, சமதர்ம பிரச்சாரம் செய்தார். கே. வி. அழகர்சாமி போன்றவர்கள் நடத்திய பிரச்சாரம் பாரதிதாசன் போன்றவர்கள் நடத்திய பிரச்சாரம் - அவர்கள் சொல்கின்றார்கள் என்றால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? என்று எடுத்துச் சொல்லப்பட்ட கொள்கைகளுக்கு, கருத்துக்களுக்கு விமர்சனங்கள் செய்யப்படாமல், எடுத்துச் சொல்லப்பட்ட ஆட்களின்மீது மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கி, அதன் காரணமாக, நல்ல கருத்துக்கள் நாட்டிலே திரை போடப்பட்டன.

இன்று அந்தத் திரை விலகி, எல்லா கட்சிகளும் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு சமதர்ம நோக்கோடு செயல்படுகின்ற இந்த அரசு இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வரவேற்றிருப்பது நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

இது நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போலவும், திரு. கந்தப்பன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போலவும், அம்மையார் அவர்கள் பேசிய நேரத்திலே குறிப்பிட்டதைப் போலவும் யாரோ சிலரை அர்ச்சகர்களாக ஆக்கிவிட வேண்டும். அதுதான் பெரிய

உத்தியோகம், அந்த உத்தியோகத்திற்குச் செல்லமுடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் தவிக்கின்றார்கள். ஆகவே, அவர்களை உச்சாணிக் கொம்பிலே ஏற்றி வைத்திட வேண்டுமென்பதல்ல. உச்சாணிக் கொம்பிலே அவர்களை ஏற்ற விடாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தச் சமுதாயத்தைச் செல்லரித்து வருகின்ற மூடப் பழக்க வழக்கங்களின் தலைமீது போடுகின்ற சம்மட்டி அதுதான் என்று இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அனைவரும் அர்ச்சர்களாக ஆகலாம் என்று கூறுகிறோம்.

இங்கே நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றை அழகாகச் சொன்னார்கள். அர்ச்சகர்கள் கடவுள் நம்பிக்கை படைத்தவர்களாக இருக்க வேண்டும். கோயில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

அந்தக் கடவுளைப்பற்றியெல்லாம் நம்பிக்கையில்லாமல், அந்தக் கடவுள் மீது விஸ்வாசம் இல்லாமல், இந்தத் துளசியையும் வில்வத்தையும் எடுத்துக் கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய உதடு ஒன்றை உச்சரிக்கும், உள்ளம் ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கும். ஆகவே, உதட்டிலே ஒன்றையும் உள்ளத்திலே ஒன்றையும் வைத்துக் கொண்டிருப்பதை யாரும் பார்த்துக் கொள்ள மாட்டார்கள். கடவுள் நம்பிக்கை அறங்காவலர்களுக்கும் வேண்டாமா என்று பார்த்தால், நிர்வாகம் வேறு, தோத்திரம் வேறு. தோத்திரம் ஆண்டவனோடு இரண்டறக் கலப்பது என்று இன்றைக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.

ஆகவே இந்தத் தோத்திரங்கள் ஆண்டவனிடத்திலே நம்பிக்கை உள்ளவர்களால்தான் செய்யப்படும் என்று இங்கே நம்முடைய மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் அர்ச்சனைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுகின்றவர்கள், ஓரளவு கல்விப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். அந்தப் பயிற்சிக்குப் பின்னால், அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும் என்று கோடிட்டுக் காட்டியதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தத் தீர்மானத்தை ஒருமித்த அளவில் நிறைவேற்ற ஆதரவு அளித்தமைக்கு அனைவரையும் பாராட்டி இந்த அளவில் அமைகின்றேன்.

## கூட்டாட்சி பற்றி சட்டத் திருத்தம்

**உரை : 16** **நாள் : 16.04.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெறப்போகும் சிறப்புமிக்க தீர்மானத்தை நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்மொழிகிற பேறு பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிந்தனைச் செல்வம் மிகுதியாகப் பெற்றுள்ள இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தின் நல்ல நோக்கத்தை ஆய்ந்து தெளிந்து தங்கள் பேராதரவை நல்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவின் வலிவும் பொலிவும் கெடாம லிருக்கவும், ஒருமைப்பாட்டுக்கு ஒரு துளி தீங்கும் நேராமல் இருக்கவும் தன் பங்கு எப்போதும் உண்டு என்று சூளுரை மேற்கொண்டு அதனைச் செயல் வடிவிலும் பலமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது, இன்றைய ஆளுங்கட்சியான தி. மு. கழகம் என்பதை அனைவரும் அறிவர்.

1962ஆம் ஆண்டில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டதும், சீன ஆக்ரமிப்பின்போது அந்த எதிரிகளை நோக்கிப் போர் முழக்கம் செய்த பாடி வீடுகளில் ஒன்றாக இருந்தபோதும், பாகிஸ்தான் போக்கு முறியடிக்கப்பட இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும் முந்திக்கொண்டு ஆறு கோடி ரூபாய்க்கு மேல் தமிழகத்தின் சார்பில் போர் நிதி வழங்கியதோடு, போர் முனையில் நிற்கும் உணர்வுடன் வெற்றிக்கான வீரப் பணிகளைப் புரிந்ததும் - இன்றைய ஆளுங்கட்சியான தி. மு. கழகத்தின் நாட்டுப் பற்றுக்குச் சான்றுகளாகும்.

தேவையற்ற ஐயப்பாட்டுப் பின்னணியினூடே இந்தத் தீர்மானத்தின் நோக்கம் பற்றி சிந்தித்திட வேண்டாம் என்பதற்கே இவைகளைக் குறிப்பிட்டேன்.

இந்திய நாட்டில் கூட்டாட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை,

அகில இந்திய காங்கிரஸ் கட்சி, 1945ஆம் ஆண்டு இந்திய மக்கள் முன் வைத்த தேர்தல் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

> "இந்தியக் கூட்டாட்சி என்பது, அதன் பல்வேறு பகுதிகளின் - விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிகபட்ச சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான, முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்தபட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும், தேவைப்படும் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப் பட்டியலும் இருக்கலாம்."

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இந்தத் தேர்தல் பிரகடனத்தைத் தொடர்ந்து, 1947ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலும் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்படும் அதிகாரங்களைத் தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் சுயாட்சி உள்ள மாநிலங்களுக்கே உண்டு என்பது வலியுறுத்தப்பட்டது. அத் தீர்மானத்தின் பகுதியாவது:

> ''இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும் இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப் பகுதிகளும், வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிற படியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்பொழுதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் (Residuary Powers) அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும்."

இந்தத் தீர்மானங்களும். தேர்தல் பிரகடனங்களும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பிறகு மறந்துவிட்ட அல்லது மறைக்கப்பட்டுவிட்ட உண்மைகளாக ஆகிவிட்டன.

அந்த உண்மையை தி. மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் பலமுறை வெளிக்

கொணர்ந்து, அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று வாதிட்டிருக்கிறது. மாநிலங்கள் தன்னுரிமை பெற்றுத் திகழவேண்டும் என்ற கொள்கையை தமிழ்நாட்டில் தமிழரசுக் கழகமும் இடைவிடாது எடுத்துக்கூறி வந்திருக்கிறது.

1967ஆம் ஆண்டு தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை பின் வருமாறு அமைந்தது :-

"ஒருமைப்பாடு என்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, அது ஒரு பகுதியினர், பிற்பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகிவிடாமல், பாதுகாத்திடும் பொறுப்பை தி. மு. கழகம் மேற்கொள்ள உறுதிகொண்டுள்ளது.

மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரு சீராக எல்லா மாநிலங்களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும் தி. மு. கழகம் பொறுப்புடன் பணியாற்ற உறுதிகொண்டிருக்கிறது.

மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும் முறையிலும், குறிப்பிடப்படாத எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடுபடுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது."

மாநிலங்கள் மத்திய அரசை அண்டி நிற்கும் நிலை களையப்பட வேண்டுமென்ற கருத்தைச் சுட்டிக்காட்டி, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றிருந்தபோது 1967-68ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டினார் :-

"நமது கூட்டாட்சி அமைப்பில் (Federal set up) எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்க வேண்டி யுள்ளன என்பதை நாட்டத்திற்கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பில் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன. அயல்நாட்டு வாணிபம்,

நாணயச் செலாவணிக் கொள்கை, கடன் கொள்கை, முதலியன குறித்து, அரசியலமைப்பில் வகை செய்துள்ள அதிகாரங்களின்கீழ், நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரியதாக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பில் குறிப்பிட்டுக் கூறப்படாத எஞ்சிய வரி விதிப்பு அதிகாரங்கள் (Residuary Powers) உட்பட, நீட்சித்திறன் பெற்ற வருமான இனங்களின்மீது மத்திய அரசிற்குள்ள உரிமை வாய்ப்பின் மூலமும், தேசீய வருமான பெருக்கத்தின் பெருமளவு பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலையிலே அது உள்ளது. இந் நிலைமை காரணமாக மாநிலங்கள் தங்கள் திட்டங்களையும் கொள்கை களையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்பக் கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்ப (Discretionary) கடன்களையும், உதவி மானியங்களையும் எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன. பொதுக் கடன்கள்மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டி, தங்கள் நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், அரசியலமைப்பின் 293வது பிரிவில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் நேரடியாகவும், ரிசர்வ் பாங்கியின் மூலம் மறைமுகமாகவும், அக்கடன்கள் எந்த நிபந்தனைகளுக்கும் வரையறைகட்கும் உட்பட்டுத் திரட்டப்படலாம் என கட்டுப்படுத்தும் உரிமையுடன் மத்திய அரசு விளங்குகிறது. ஐந்தாண்டுகட்கு ஒருமுறை மாநிலங்களின் நிதித் தேவைகளைப் பற்றி நிதிக்குழுக்களின் வாயிலாக நடுவு நிலையில் நின்று ஆராய வேண்டுமென்கிற ஏற்பாடும், அக்குழுக்களின் ஆய்வு வரம்பு குறித்து விதிக்கப்படும் பல்வேறு வரையறைகள் காரணமாக, மாநிலங்கள் மத்திய அரசினை அண்டி நிற்கும் நிலை பெருமளவில் குறைந்தபாடில்லை."

அந்த நிதிநிலை அறிக்கையின் இறுதிப் பகுதியில் அண்ணா அவர்கள்,

"மத்திய - மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை என்பதனை இப்பேரவை அறியும். இன்றுள்ள உறவு, உள்ளத்துக்கு நிறை தருவதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதுவரை வரிப்பங்கீடு, அதிகார வரம்பு, திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றிலே கிடைத்துள்ள அனுபவம்,

கசப்பு நிரம்பியதாக இருப்பதை எவரும் மறுத்திட இயலாது; இந்தக் கசப்பு நீங்கிடவும், கனிவு கிடைத்திடவுமான முறையில் தொடர்புகள் அமைந்திட வழி காண்பது உடனடிப் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது. இது குறித்து அச்சமோ, ஐயப்பாடோ அல்ல, தெளிவான சிந்தனையே தேவை. ஒருவருக்கொருவர் உள்ள நல்லெண்ணத்தினாலும், ஒருவரையொருவர் நன்கறிவதாலும் தோழமைத் தொடர்பு மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்கப்பட வேண்டும் என்பதே எனது அவாவாகும்" என்று கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதன் பின்னர், 1969ஆம் ஆண்டு "ஹோம் ரூல்" ஆங்கில ஏட்டில் அண்ணா அவர்கள் எழுதிய கடைசி கட்டுரையில் –

"அன்புள்ள தம்பி,

நான் பதவியைத் தேடி பைத்தியம் பிடித்து அலைபவனுமல்ல; காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்புக் கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின் கீழ் முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பவனுமல்ல. இதற்காக மத்திய அரசிற்கு எரிச்சல் ஏற்படுத்துவதும், டில்லியோடு சண்டை போடுவதும்தான் எனது நோக்கம் என்று – எனது நண்பர் ஈ. எம். எஸ்-ஐப்போல் நான் பிரகடனம் செய்ய விரும்பவில்லை. அதனால் யாருக்கும் நன்மையில்லை. உண்மைதான்; சரியான பருவத்தில் ஒரு உறுதி ஏற்பட வேண்டுமென்பதுதான் முக்கியம். ஆனால் கூட்டாட்சி முறையைப்பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுப்பதை அதற்கு முன்னால் செய்ய வேண்டும். அந்தப் பணியில், அன்புத்தம்பி, உன்னுடைய உற்சாகமான ஒத்துழைப்பும், மனப் பூர்வமான பங்கேற்பும் எனக்குக் கிடைக்கு மென்பதில் எனக்கு நிச்சயம் நம்பிக்கை உண்டு."

"பதவியில் இருப்பதன்மூலம், இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு

> தி. மு. க. கொண்டுவர முடியுமானால் அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்"

என்று எழுதிய கருத்துக்களின் அடிப்படையிலும் 1967ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ஆம் நாள் புதுடெல்லியில் செய்தியாளர்கள் கூட்டத்தில், ''மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்களை வழங்கிவிட்டு; நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு எவ்வளவு அதிகாரங்கள் தேவையோ அவைகளை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டால் போதும்; இப்படி அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கும் அரசியல் சட்டம் செயல்படுவதற்கும், ஒரு உயர் அதிகார ஆணைக்குழு ஒன்றினை அமைக்கவேண்டும்" என்று அவர் தெரிவித்த கருத்துக்கு ஏற்பவும், 1969ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் நாள் சட்டப்பேரவையில் நான் அறிவித்ததை யொட்டி நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் மாநில சுயாட்சி அடிப்படையில் மத்திய மாநில உறவுகளை ஆராயுமாறு டாக்டர் ராஜமன்னார் தலைமையில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. பி. சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழுவை 1969 செப்டம்பர் 22-ம் நாள் இந்த அரசு அமைத்தது.

அதன் பிறகு 1971ஆம் ஆண்டு தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையில்,

"இந்திய அரசியல் முறை 'கூட்டாட்சி முறை' என்று வர்ணிக்கப்பட்டாலும், அந்தத் தராசு மத்திய அரசு பக்கம் அதிகப்பட்சம் சாய்ந்திருப்பதால்; அதிகாரத் துறையிலும், நிதித் துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகளாக இருப்பதால்; அதேநேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்கிற இலட்சியத்திற்கும் ஊறு தேடாமல்; எந்தெந்த துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு; இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி; மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கருதுகிறோம்: இந்த நோக்கத்தோடு நமது அரசு அமைத்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு; அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்.

அரசியல் துறை அதிகாரங்களும், நிதித் துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது; மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் - என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்."

என்று குறிப்பிட்டிருப்பதை யாரும் மறந்திருக்க இயலாது.

1972ஆம் ஆண்டு மைசூர் மாநில ஸ்தாபன காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்,

> "Congress will fight in a determined manner for greater autonomy for the State and against all discrimination and step-motherly treatment by the Centre".
>
> [மத்திய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மை, பாரபட்சம் இவற்றுக்கு எதிராகவும், மாநிலத்திற்கு அதிகமான சுயாட்சி பெறுவதற்காகவும் காங்கிரஸ் கட்சி உறுதியாகப் போராடும்.]

என்று குறிப்பிட்டதையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது பொருத்தமுடையதென்று நான் கருதுகின்றேன்.

1971ஆம் ஆண்டு மே 27ஆம் நாள் இராஜமன்னார் குழுவின் அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை இந்திய நாட்டுத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட தலைமை அமைச்சர் அவர்கள் எனக்கு 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம் தேதியிட்டு எழுதிய கடிதத்தில்,

> "Dear Thiru Karunanidhi,
>
> I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State Relations Inquiry Committee. Your Government will probably examine the

recommendations of this report. As you know the Administrative Reforms Commission also 'went into this question and has already submitted a report which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issue and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours Sincerely

(Sd.) INDIRA GANDHI

[அன்புள்ள திரு. கருணாநிதி,

நீங்கள் சூன் 15ந் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய மாநில உறவுகள் ஆய்வுக்குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றை கடிதத்துடன் அனுப்பி யுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரைகளை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் இப்பிரச்சினை பற்றி ஆய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக் குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவோம். இவை முக்கியமான பிரச்சினைகள் என்பதால் எல்லா முதலமைச்சர் களுடனும் இது குறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணியுள்ளோம்.

தங்களன்புள்ள

**(ஒம்) இந்திரா காந்தி**

என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

1972ஆம் ஆண்டு, மே திங்கள் 30ஆம் நாள் டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசீய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் நான் பேசும்போது,

"Decentralisation is particularly necessary if a large country like ours is to cope with the problems of a modern economy. It is in this sense that our demand for State Autonomy should be understood - as a request for more efficient management of the country's resources, as a means to enable the Centre to be strong in areas of vital national concern, as a method of enabling the minimum demands of our people to be met in the quickest time and in the most efficient manner"

[நமது நாடு போன்ற பெரிய நாட்டின் தற்காலப் பொருளாதாரச் சிக்கல்களை சமாளிப்பதெனில் அதிகாரங்கள் பரவலாக இருப்பது அத்தியாவசியமானது. நாங்கள் எழுப்பியுள்ள மாநில சுயாட்சி கோரிக்கையின் நியாயத்தினை இக் கோணத்திலிருந்து காணவேண்டும். நாட்டின் வளங்களை இன்னும் திறமையாக நிர்வகிப்பதற்கான வேண்டுகோளாகவும், நாட்டின் ஆதாரமான காரியங்களில் மத்திய அரசு வலுவுடன் இயங்குவதற்கான சாதனமாகவும், மிகத் திறம்படவும் மிக விரைவிலும் நம் மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் கிடைப்பதற்கான வழிவகையாகவுமே மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கொள்ளவேண்டும்.]

என்ற அளவில் இந்த அரசின் கொள்கையைத் தெளிவாக்கி இருக்கின்றேன்.

டாக்டர் ராஜமன்னார் குழுவின் அறிக்கையை வரிக்கு வரி இந்த அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அரசின் கொள்கை, வெற்றிகரமாகப் படருவதற்கான கொழுகொம்பாகவே அந்த அறிக்கையை நாம் கருதுகின்றோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையில் மிக நிதானமாக முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்துடன் பல கட்டங்களில் இதுபற்றி ஆராயப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி சார்பில் அமைக்கப்பட்ட செழியன், மாறன் குழுவினரும் ராஜமன்னார் குழுவின் அறிக்கையை அணுகினர். மத்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிக்கையையும்

அரசு பரிசீலித்தது. அதன் தொடர்பான கருத்துக்கள், இந்திய நாட்டு அரசியல் மேதைகளின் அபிப்பிராயங்கள், உலக நாடுகளின் நிலைமைகள் இவைகள் அனைத்தையும் ஆழச் சிந்தித்து ராஜமன்னார் குழு அறிக்கைமீதும் - மாநில சுயாட்சிக் கொள்கை மீதும் - தமிழக அரசின் கருத்துரைகள் என்ற அறிக்கையை இந்த அவையின் முன் வைத்திருப்பதோடு அதனை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தையும் உங்கள் மேலான வழிமொழிதலுக்காக வைத்துள்ளேன்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்துறை பற்றிய கருத்துப் பரிமாற்றக் குழு (Consultative Committee) கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தண்டபாணி பேசும்போது ''ராஜமன்னார் குழு தந்த அறிக்கையில், மத்திய மாநில அதிகாரங்கள் மறுபரிசீலனை பற்றி நல்ல கருத்துக்கள் இருப்பதாகவும், அதன்மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை'' என்றும் கூறியதற்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. தீட்சித் அவர்கள் அளித்த பதிலில், ''ராஜமன்னார் குழு மாநில அரசால் அமைக்கப்பட்ட குழு என்றும், அந்த அறிக்கையின்மீது மாநில அரசு இதுவரை தனது அபிப்பிராயத்தை மத்திய அரசுக்கு அனுப்பவில்லை'' என்றும் கூறியிருக்கிறார். ஆகவே, அந்தப் பதிலுக்கு ஏற்பவும், ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றி இந்தப் பேரவையின் கருத்துக்களைப் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பியதற்கு ஏற்பவும், இந்திய மாநிலங்கள் அனைத்துக்கும் சுயாட்சித் தன்மை கிடைத்திடவும், மத்தியில் உண்மையான கூட்டாட்சி ஒளிவிடவும், இந்தத் தீர்மானத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

இந்திய நாட்டின் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. வான்முகட்டைத் தொடுவது போல் அசைந்தாடும் அந்தக் கொடியின் கம்பீரம் காண, முகில்களைக் கிழித்துக் கொண்டு நமது விழிகள் தாவுகின்றன. வங்கம் தந்த தங்கக் கவி தாகூர் எழுதிய தேசிய கீதம் நமது செவிகளில்

குற்றால நீர் வீழ்ச்சியின் சங்கீத ஓசையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. அடிமைப்பட்டுக் கிடந்த நாடு, தன்னை விடுவித்துக்கொண்டு தலைநிமிர்ந்து கிளம்பிய வரலாற்று வரிகள், உலகப் புத்தகத்தில் கோடிட்டு வைக்கப்பட்டுள்ளன.

சிறையிலிருந்த நாடு, விடுதலை பெற்று விட்டது. கதவு திறந்தது. பூட்டிய இரும்புக் கூட்டிலேயிருந்து கைதி, புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தளிர்நடைச் செல்வம், இளங்கரம் தூக்கி, தாவியோடுகிறது, அவனைத் தழுவிக்கொள்ள! அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள மகனைத் தூக்கி முத்தமிடக் கரங்களை நீட்டுகிறான். கைகள் இயங்க முடியாமல் தவிக்கின்றன. சிறையிலிருந்துதான் விடுபட்டுவிட்டானே; இன்னும் என்ன தடை? தன்னை யார் தடுப்பது? சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை; சுதந்திர பூமியில்தான் இருக்கிறான். பிறகு யார், தன் குழந்தையைக் கூடத் தழுவிட முடியாமல் அவனைக் கட்டுப்படுத்துவது? யாருமல்ல : அவன் சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும் காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டியிருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில், விலங்குகளைக் கழற்ற வேண்டுமென்ற நினைப்புக் கூட இல்லாமல் அவன் வெளியே வந்துவிட்டான். அவன் சுதந்திர மண்ணில்தான் இருக்கிறான். கை, கால் விலங்கு மட்டும் கழற்றப்படவில்லை. மனிதன் விடுதலையாகிவிட்டான். கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லையே; இந்தியா, விடுதலை பெற்று விட்டது. அதன் அவயவங்கள் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?

இந்தக் கேள்வியின் நீண்ட நாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று இந்த அவையின் முன்னால் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

அரசியல் சட்டம் என்பது திருத்தப்படக் கூடாத ஒன்றல்ல. நமது அரசியல் சட்டம் 30 தடவைகளுக்கு மேல் திருத்தப் பட்டிருக்கிறது.

மாநிலங்களின் மொழிகள் வளரவும், பண்பாட்டுத் தன்மைகள் காக்கப்படவும், மாநிலத்திற்கு மாநிலம் நல்லுறவுகள் வளரவும், மத்திய மாநில உறவுகள் நிலைத்துச் செழிக்கவும், நாட்டின் பொருளாதாரம் வளம் பெற்றுத் திகழவும், அரசியல் சட்டத்தில் இந்த மகத்தான மாறுதலைச் செய்வது எதிர்காலத்தில் இந்தியாவின் வலிமையையும் வளப்பத்தையும் பெருக்குவதற்கு அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து மத்திய அரசினர் செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதற்கு உறுதுணையாக உங்கள் ஒத்துழைப்பு அமையவேண்டுமென்று விழைகின்றேன். மக்களின் நல்வாழ்வை மையமாகக் கொண்டும், பெற்ற சுதந்திரத்தின் பயனை நாடு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நெஞ்சில் பதித்துக்கொண்டும், இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றிவைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட, அரசியல் மேதைகள் தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்றும் பணிவன்புடன் கோருகிறேன். வணக்கம். (ஆரவாரம்)

## மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி

**உரை : 17** **நாள் : 20.04.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரசியல் பொது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே முன்மொழிந்து, ஐந்து நாட்கள் விவாதம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற கட்டத்தில், இதுவரையில் பேசப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் நான் இந்த தீர்மானத்தைப்பற்றி முன்னுரையிலே குறிப்பிட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களுக்கும் தொடர்பாக இன்னும் சில கருத்துக்களை இந்த அவையிலே கூற விரும்புகிறேன்.

நான் முன்மொழிந்த தீர்மானத்தை பலர் இங்கே வழி மொழிந்திருக்கிறார்கள். சிலர் என் மீதும் ஆளும் கட்சியின் மீதும் பழி மொழிந்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்கள் வழிமொழிந்து பேசி, தோழமைக் கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் வழிமொழிந்து பேசி, எதிர்தரப்பிலிருந்து பல்வேறு கருத்துக்கள் அவரவர்கள் கொண்டிருக்கிற கொள்கைக்கு ஏற்ப இங்கே எடுத்து உரைக்கப் பட்டிருக்கின்றன.

பழைய காங்கிரஸ் கட்சி, மாநில சுயாட்சியே ஒரு பயங்கரமான பூதம் என்கின்ற அளவுக்கு இங்கே தங்களுடைய வர்ணனையைச் செய்திருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சி டில்லியிலே அவர்கள் இன்றைக்கு அரசோச்சுகின்ற காரணத்தினால் எதையும் விட்டுத்தர முடியாது என்கின்ற அந்த மனப்பான்மையில் எங்களுடைய கருத்துக்களை மிகத் தீவிரமாக இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சிகளோடு இணைந்து 'அரசியல் சட்டம் திருத்தப்படத் தேவையில்லை மத்திய மாநில உறவுகளுக்காக' என்ற ஒரு திருத்தத்தை அவர்கள் சார்பாக

இரண்டு காங்கிரஸ் கட்சிகளுடனும் இணைந்து இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும், பார்வேர்டு பிளாக் கட்சியும், தமிழரசுக் கழகமும், சுயேச்சை உறுப்பினர்களும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டிய இன்றியமையாமையையும் மாநில சுயாட்சியினுடைய அவசியத்தையும் இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். மாநிலத்திற்கு சுயாட்சி தேவை இல்லை; அதை அண்ணா எந்தக் காலத்திலும் சொல்லவில்லை; மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தேவை; ஆனால் அந்த அதிகாரங்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு கொடுக்கக்கூடாது என்கின்ற ஒரு கெழுமிய ஜனநாயகக் கருத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தரப்பட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டனவா? மக்களுடைய நல் வாழ்வுக்கு அந்த அதிகாரங்கள் உபயோகமாக இந்த அரசால் செயல்படுத்தப்பட்டனவா என்ற கேள்வி எழுந்தது. அதன் தொடர்பாக இன்னொரு கேள்வி - என்னென்ன நல்ல காரியங்களைச் செய்வதற்கு இன்றைக்கு இருக்கின்ற அரசியல் சட்டம் இடம் தரவில்லை என்கின்ற மற்றொரு கேள்வி எழுந்தது. நான் என்னுடைய பேச்சின் முதல் பகுதியாக இந்த இரண்டு கேள்விகளுக்கும் சுருக்கமாக பதில் அளிக்க வேண்டியது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

நான் நண்பர் செழியன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்டதைப் போல என்னென்ன காரியங்கள் செய்தீர்கள்? என்னென்ன செய்து முடித்தோம் என்ற வாதப்பிரதிவாதங்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்திலே நடைபெற வேண்டும் என்றாலும் கூட, பல நண்பர்கள் இங்கே என்னென்ன காரியங்கள் இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டு செய்யப்பட்டன என்ற கேள்விகளை விளக்கம் பெறுவதற்காக அல்ல - எந்தக் காரியங்களும் செய்யப்படவில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுவதற்கு அந்தக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். அதைப்போல என்னென்ன காரியங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் அரசியல் சட்டம் இன்றைக்கு குறுக்கே நிற்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி,

அதையும் விளக்கம் பெறுகின்ற முயற்சியாக அவர்கள் எடுத்துக் கொள்ளாமல், அரசியல் சட்டம் குறுக்கே நிற்கவில்லை என்று அவர்களுடைய வாதத்திற்கு ஆதாரமாக அந்தக் கேள்வியை எழுப்பினார்கள்.

இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த என்னுடைய அருமை நண்பர் ஆலடி அருணா அவர்கள், எத்தகைய அதிகாரங்கள் இன்றைக்கு மாநில அரசுக்கு இல்லாத காரணத்தினால் நாம் வளமான வாழ்வைப் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதனையும், இருந்த அதிகாரங்களை எல்லாம் எப்படி எப்படி மத்திய அரசு அவ்வப்போது பறித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் வெகு விளக்கமாக இங்கே எடுத்துக் கூறினார்கள்.

இன்றைக்கு நாம் இங்கே நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகின்ற தீர்மானம், நிறைவேற்றப்படும் என்று நாம் நம்புகின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக நாளைக்கே மத்திய அரசு அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து, மாநில சுயாட்சி தந்துவிடும் என்கிற அந்த அவசரமான நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வரவில்லை. இந்தியாவிலே தோன்ற இருக்கின்ற ஜனநாயகப் புரட்சியினுடைய தோற்றுவாயாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நாளாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் அந்தத் தீர்மானத்தை இங்கே ஆளும் கட்சியின் சார்பாக - இந்தப் பேரவை முன் வைத்திருக்கிறோம்.

அதிகாரங்கள் கூடுதலாக மாநிலங்களுக்கு வேண்டு மென்று கேட்பதால் மத்திய சர்க்காருக்கு குறைவான அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்ற பொருள் அல்ல. மத்திய சர்க்காருக்கு அதனுடைய வலிவு காக்கப்படுவதற்கான அதிகாரங்கள் அங்கே இருக்க வேண்டுமென்பதும், மாநில சர்க்கார்களுக்கு - அந்த மாநிலங்களின் வளம் பெருக்கப் படுவதற்குத் தேவையான அதிகாரங்கள் இருக்கவேண்டு மென்பதும்தான் மாநில சுயாட்சியினுடைய நோக்கம் என்பதை நான் தொடக்கத்திலேயே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இருக்கின்ற அதிகாரங்களை என்ன பயன்படுத்தி சாதித்து விட்டீர்கள் என்ற கேள்விக்குப் பதிலாகத்தான், இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற பல மாநிலங்களுக்கு உணவு தானியங்களை

நாம் வழங்கி அவர்களுடைய பசியை முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவு குறைகின்ற அளவுக்கு கடந்த 5, 6 ஆண்டு காலத்தில் பசுமைப்புரட்சியின் மூலமாக உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்று, மற்ற மாநிலங்களுக்கும் வழங்குகின்ற அந்தப் பெருமை உடையதாகத் தமிழக அரசு விளங்கி வருகிறது. அது இருக்கின்ற அதிகாரங்களை மாக்சிமம் அதாவது அதிகபட்சம் நாம் பயன்படுத்தியதன் விளைவு என்பதை யாரும் மறந்திடக் கூடாது. இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் கூறுதான் பி. யு. சி. வரையில் இலவசக் கல்வி என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்ததாகும். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் விளைவுதான் 103 கல்லூரிகளாக 1967-க்கு முன்பு இருந்ததை இன்றைக்கு 178 கல்லூரிகளாக வளரச் செய்திருப்பது இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தியதன் விளைவுதான்.

இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவுக்கு மனுநீதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை தமிழ் நாட்டிலே அறிமுகப்படுத்தி, மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து, மக்களின் குறைகளை அறிந்து, உடனுக்குடன் அந்தக் குறைகளைத் தீர்த்து வைக்கும் இந்தத் திட்டம் தமிழ் நாட்டைத் தவிர, திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தவிர வேறு எந்த அரசிலும் இன்னும் அறிமுகப் படுத்தப்படவில்லை என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியதால் வந்த விளைவுதான் இது.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கும் சட்டம், வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு முற்போக்கான சட்டம் செய்யப்படவில்லை என்ற நேரத்தில் இங்கே அந்தச் சட்டம் செய்யப்பட்டு ஏறத்தாழ இரண்டு லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்றால், அது இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு செய்யப்பட்டதுதான்.

நிலச்சீர்திருத்தம் இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு செய்யப்பட்டதுதான். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் அவர்கள் அந்த மாநாட்டில் எதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக ஒரு வரைவுக் குறிப்பையே அனுப்பினார்கள். அந்த வரைவுக் குறிப்பில்

காங்கிரஸ் கட்சியால் தயாரிக்கப்பட்ட வரைவுக் குறிப்பு என்று குறிப்பிட்டிருந்தார்கள். நான் தமிழக அரசு சார்பாகச் சொன்னேன் - காங்கிரஸ் கட்சியினுடைய வரைவுக் குறிப்பை அங்கே நாங்கள் ஆராயத் தயாராக இல்லை, உங்களுடைய கட்சி உங்களுக்கு வரைவுக் குறிப்பு தந்தது, அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு பரிந்துரைத்து இருக்குமானால், அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறி, அதற்குப்பிறகு மத்திய அரசு பரிந்துரைத்த குறிப்பின்மீது விவாதிக்கப்படுவதற்கு நான் அழைக்கப்பட்டபோது, அந்த நேரத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற உச்சவரம்பு கொண்டு வரவேண்டுமென்பது வரைவுக் குறிப்பில் ஓர் முக்கியமான அம்சம். நான் அங்கே சொன்ன பதில் இது. ஏற்கெனவே எங்கள் தமிழ் நாட்டில் 7, 8 மாதங்களுக்கு முன்பே அமுல்படுத்தப்பட்ட சட்டமாகும் என்று எடுத்துச்சொல்லுகின்ற அளவுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லா மாநிலங்களையும் முந்திக் கொண்டு நாம் செய்து முடித்திருக்கிறோம் என்பதாகும்.

குடிசைமாற்று வாரியமானாலும், இன்றைக்கு மற்ற மாநிலங்களிலே இருந்து வந்து பார்த்து பாராட்டுகின்ற அளவுக்கும், கர்னாடக மாநிலத்தில் சட்டப்பேரவையிலே பாராட்டிப் பேசுகின்ற அளவுக்கும் மற்ற மாநில அமைச்சர்கள் இங்கே இருக்கின்ற அமைச்சர்களை, வாரியத் தலைவர்களை அழைத்து, விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, இந்தியாவுக்கே வழிகாட்டியாக அறிமுகம் செய்யப்படும் குடிசைமாற்று வாரியம் ஆனாலும், அதைப்போல குடிநீர் வடிகால் வாரியம் ஆனாலும், மின்சார வசதி செய்யும் திட்டம் இவைகள் - இந்தியாவிலேயே இன்றைக்கு மூன்றில் ஒரு பங்கு பம்புசெட்டுகள் - இந்தியா முழுவதும் 20 லட்சம் பம்புசெட்டுகள் என்றால், அதிலே மூன்றில் ஒரு பங்கு - 6 லட்சம் பம்புசெட்டுகள் இன்றைக்கு தமிழ் நாட்டிலே வழங்கியிருக்கிற ஒரே ஒரு அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதையும், இந்தியாவிலே மற்ற மாநிலங்களுக்கு அறைகூவல் விடுகின்ற அளவுக்கு, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்த காரியம் என்பதையும், பின் தங்கியோர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 49 சதவிகிதம் - அதற்கு மேல் போக அரசியல் சட்டம் இடம் தராத காரணத்தால் - வேலை வாய்ப்பு, கல்லூரியில் சேருதல் போன்றவைகளை 49 சதவிகிதம் என்ற வரையில் விகிதாசாரத்தை உயர்த்தியிருப்பது என்பதும், இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தியதால்தான்.

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, ஏன் உலகத்தில்கூட ஒன்றிரண்டு நாடுகளில்தான் இருக்க முடியும் என்று கூறுகின்ற அளவுக்கு, ஒரு காலத்திலே தேர்தல் பிரகடனத்தில் முஜிபுர் ரஹ்மான் வெளியிட்டு, அதை இப்போது ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றினார்களோ இல்லையோ எங்களுக்குத் தெரியாது - ஆனால் தமிழ்நாட்டிலே போக்குவரத்துத் தொழிலாளிகள் இடத்திலே அந்த அருமையான திட்டத்தை நாம் தேர்தல் பிரகடனத்திலே வெளியிடாமலே அந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றோம்.

தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு, முதலீட்டில் பங்கு என்கின்ற உலகத்திலேயே மிகப்பெரிய சாதனையை இங்கே நாம் செய்துகாட்டியிருக்கின்றோம்.

தொழிலாளிகள் ஓய்வு ஊதியம் என்கின்ற திட்டம் அரசுத் துறையிலேயுள்ள தொழிலாளிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்கிற அடிப்படையில் 35 ஆயிரம் பேர் பலன் பெறுகின்ற அளவுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் தொழிலாளி களுக்கான ஓய்வு ஊதியம் அறிமுகப்படுத்தப்படாத நேரத்திலே இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தை நாம் செய்திருக்கின்றோம்.

அரசு அலுவலாளர்களுக்கு குடும்ப நலத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. நம்முடைய மாநிலத்திலேதான்! 10 ரூபாயை ஒருவருடைய ஊதியத்திலே பிடித்துக்கொண்டு இடையிலே திடீரென்று காலமாவாரானால் அவருடைய குடும்பத்தாருக்கு 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி 4, 5 மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் 30 அலுவலர்களுடைய குடும்பத்தார்கள் 10 ஆயிரம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள் என்றால் இது அந்த அலுவலாளர்களின் குடும்ப நலத்திற்கு எவ்வளவு தேவையான திட்டம் என்பதையும், இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட திட்டம் என்பதையும் இந்த மாமன்றம் நன்கு அறியும். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் நம்முடைய சக்திக்கேற்ற அளவுக்கு, நம்முடைய அதிகாரத்திற் கேற்ற அளவுக்குத் தொழில் வளர்ச்சியை இந்த மாநிலத்திலே நாம் செய்து காட்டியிருக்கிறோம்.

இன்னும் செய்ய வேண்டிய சாதனைகளுக்கு அரசியல் சட்டத்தினுடைய குறுக்கீடு என்ன? இந்தக் கேள்வி எழுந்தது.

அந்தக் கேள்விக்கு நான் தருகின்ற பதில்தான் இதே விவாதத்தில் பேசும்போது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். கேரள மாநிலத்தில் தோட்டங்களையெல்லாம் அரசுடைமையாக்க வேண்டுமென்ற அவசரச்சட்டத்தை இன்றளவும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே ஒரு சமதர்மத் திட்டம் அங்கே முடங்கிப்போய்க் கிடக்கிறது என்ற கருத்துப்பட ஒரு குறிப்பை எடுத்துச் சொன்னார்கள்.

அதைப்போலத்தான் 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் என்கின்ற ஒரு சட்டத்தை நாம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றினோம். ஆனால், அந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்சநீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்ற தீர்ப்பை வழங்கியது. இதுபோன்ற புரட்சிகரமான திட்டங்கள் செல்லுபடியாக வேண்டுமேயானால், அது அரசியல் சட்டத்தில் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டாக வேண்டும். 9-வது அட்டவணையிலே இந்தச் சட்டத்தை சேர்த்து 31-ஏ பிரிவின்கீழ் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று 26-2-1972-ல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினேன். பலமுறை மத்திய அமைச்சர்களைச் சந்தித்த போதெல்லாம் இதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னேன்.

24-11-1973-ல் கூட பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இதுவரையில் சாதகமான முடிவு எதுவும் மத்திய சர்க்காரிடமிருந்து நமக்குக் கிடைக்க வில்லை.

இது 9-வது அட்டவணையிலே சேர்க்கப்படாத காரணத்தினால் யார் வேண்டுமானாலும் இதுபோன்ற புரட்சி கரமான சட்டங்களை எதிர்த்து உச்சநீதி மன்றத்திற்குச் செல்லலாம் என்கிற வழி வகையிருக்கிறது. அதைச் சேர்த்து விடுங்கள் என்று நம்முடைய அரசு விடுத்த கோரிக்கை ஏற்கப்படாததால், ஒரு சமதர்மத் திட்டம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன்.

1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மால்கோ தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று அறிவித்தோம். அதை அறிவித்தவுடன் பிப்ரவரி மாதம் சட்ட நகலை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப் பெற்றுக்கொண்டதாக 2-3-1973-ல்

நமக்குக் கடிதமும் வந்தது. ஆனால், இதுவரையில் அந்தப் பிரச்சினை என்னவாயிற்று? முடியுமா, முடியாதா என்கின்ற எந்தத் திட்டவட்டமான பதிலும் இல்லை. இதுவும் ஒரு சமதர்மத் திட்டம்.

1972-ம் ஆண்டு ஆகஸ்டு 14-ந் தேதி இரவு, விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாடப்பட்டபொழுது, இந்த மன்றத்திலேதான் அறிவித்தேன், நான் ஏற்கனவே சொன்னேனே, "தொழிலாளிகளுக்கு நிர்வாகத்திலே பொறுப்பு, முதலீட்டில் பங்கு" என்கின்ற அந்தத் திட்டம். அதற்கான விதிமுறைகளையெல்லாம் வகுத்து, இந்தச் சட்டப்பேரவையிலே அதைப்பற்றி விளக்கங்கள் தந்து, அதுபற்றி போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து, அதை மாமன்றம் வரவேற்று, இன்றைக்கு அந்தச் சட்டம் ஒரு சிறிய காரியத்திற்காக மத்திய சர்க்காருடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கம்பெனிச் சட்டம் இதற்காகத் திருத்தப்பட வேண்டும். இந்தச் சட்டத்தை நாம் அங்கே அனுப்பி வைத்த பொழுது பிரதமர் அவர்கள் எனக்கு ஒரு பதிலைக்கூட எழுதினார்கள். அதிலே சொன்னார்கள் -

'The suggestion for the creation of a new class of shares called the 'Employees Dividend Guaranteed Shares' is an interesting one. I am making the Ministries concerned to examine the question carefully. . . .'

என்று சொல்லி கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாகிறது. இது நல்ல திட்டம் என்று பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு சமதர்மத் திட்டம், தொழிலாளர்களுக்கான திட்டம், பிரதமரின் பாராட்டைப் பெற்றும்கூட, அனுமதிக்காக தவம்கிடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே அரசியல் சட்டத்தில் நாம் சாதனைகள் செய்ய முடியாமல் எப்படி, எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதற்கு இதை ஒரு எடுத்துக்காட்டாகச் சொன்னேன். உணவு உற்பத்தியிலே முக்கிய இடத்தை பிடித்துக்கொண்டிருப்பது உரம். அது பற்றி இந்த மாமன்றத்தில். . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : இந்த விஷயத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த ஷரத்தை, நிர்மாணச் சட்டத்தில் எந்த முறையில், எப்படித் திருத்தினால் இந்த எம்ப்ளாயீஸ் ஸ்கீமை நடைமுறைக்குக் கொண்டுவரமுடியும் என்று ஒரு தெளிவான கருத்தை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினார்களா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அதாவது டிவிடெண்ட் எடுக்கப்பட்ட பிறகுதான் தொழிலாளிகளுக்குத் தரப்பட்ட டிவிடெண்டிற்குப் பிறகுதான் வருமான வரி இருக்க வேண்டும். வருமான வரி கொடுத்தால் டிவிடெண்ட் எடுக்க முடியாமல் போகும். அதற்கேற்ப எங்களுக்கு கம்பெனிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று கேட்டோம். உரத்தைப்பற்றி இந்த மாமன்றத்திலே நிறையப் பேசப்பட்டிருக்கின்றது.

Dr. H. V. HANDE : Sir, for the last few days we have been discussing. This is the last day and the Chief Minister is replying. After that we won't get the opportunity for months togather. I want further clarification. What exactly does the Chief Minister recommend? I want to know from the Chief Minister, what is the specific recommendation amendment, he recommended? He wanted to put forth a scheme, we all accepted. He must come forward to this House, clearly telling us, what was the article that he wanted to be amended? In what way, he wants it to be amended? What was the amendment that he had recommended? It is his business to tell the House. And then I am asking in a good spirit only, not to simply disturb the Chief Minister. In a good right spirit I am asking. What was his specific recommendation? He says என்னாலே செயலாற்ற முடியாத அளவுக்கு அங்கு செயல்பட்டது - அங்கே நடந்தது. . . What is his recommendation? Come on! Let us know it!

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : கம்பெனிச் சட்டத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டோம். எப்படி கடன்கள் மீதுள்ள வட்டியை (நிறுவன வருமான வரி) கார்ப்பரேஷன் டாக்சுக்கு முன்பு அனுமதிக்கிறோமோ அதைப் போலவே தொழிலாளர்களுக்குள்ள சிறப்பு பங்கு மீது லாப

விகிதத்தையும் (டிவிடெண்ட்) வருமான வரி அளிப்பதற்கு முன்பாகவே அனுமதிக்கப்பட வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கை. அதற்கேற்ப கம்பெனிச் சட்டத்தை மாற்றியமையுங்கள் என்று கேட்டோம். அதற்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ஆலோசிப்பதாகச் சொன்னார்கள். பிறகு எந்த விதமான பதிலும் இல்லை. பலமுறை நாம் நினைவுபடுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம். நேரிலும் பேசியிருக்கிறோம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒவ்வொரு பாயிண்டும் விவாதத்திற்குரியது. ஒவ்வொரு எடுத்துக்காட்டிற்கும் விளக்கம் கேட்டால் இந்த விவாதம் முடிவுறாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பஸ் கம்பெனியைப் பற்றிக் கேட்டீர்கள், சரி. நாளைக்கு தனி மனிதன் கார்ப்பரேஷனிடமிருந்து அங்கே வந்து போனஸ் கொடுப்பது பற்றிக் கேட்டால் அதையெல்லாம் பார்த்துத்தான் பதில் அனுப்பவேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அதையெல்லாம் பார்த்துத்தான் ஒரேயடியாக மாநில சுயாட்சி கேட்டுத் தொலைக்கிறோம்.

உணவு உற்பத்தியில் பிரதான தொடர்பு கொண்டது உரம்.. உர உற்பத்தியை எடுத்துக்கொண்டால் - நாம் இன்றையதினம் அவர்களுடைய தொழிற்சாலைகளுக்குள்ளே நுழைந்து அவர்களிடத்திலுள்ள இருப்புகளைக் கேட்கவும் - விநியோகத்தில் தவறு நடந்தால் உரத்தைப் பறிமுதல் செய்யவும் - நாம் கார்டுகள் கொடுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும் - நமக்கு அதிகாரம் தேவை என்றும் - உரத் தொழிற்சாலைகளின் இருப்புகளைச் சோதனையிடுகிற அதிகாரம் நமக்குத் தேவையென்றும் பலமுறை கேட்டிருக்கிறோம். பயன் இல்லை. அதன் விளைவாக எவ்வளவு தவறுகள் தனியார் உர விநியோகத்தில் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

சிறு தானியங்களான - சோளம், கம்பு, கேழ்வரகு (கேப்பை) போன்ற சிறு தானியங்கள் ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்லக்கூடாது என்று தடை இருந்தது. அந்தத் தடையை மத்திய சர்க்கார் நீக்கிவிட்டார்கள்.

யாரைக் கேட்டுக் கொண்டு நீக்கினார்கள்? நம் மாநிலத்தைக் கலந்துகொண்டு செய்யப்பட்டதா? இல்லை.

இந்த மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்கு சிறு தானியங்களை எடுத்துச்செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப்பாட்டை - நம் மாநிலத்தைக் கலந்து கொள்ளாமலே - நமக்குச் சொல்லாமலே அவர்களே தளர்த்தி விட்டு - எந்த மாநிலத்தில் இருந்து எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் கம்பு, கேழ்வரகு (கேப்பை) போன்ற சிறு தானியங்களை எடுத்துச் செல்லலாம் என்கின்ற அறிவிப்பை - நம்மைக் கலந்து கொள்ளாமலேயே செய்து விட்டார்கள்.

அதன் காரணமாக இன்றைக்கு அந்தச் சிறு தானியங்களின் விலை 50 சதவிகிதத்திற்கும் மேல் உயர்ந்திருக்கிறது. அப்படித் தளர்த்தியது தவறு என்று எதிர்த்தோம். கடிதம் எழுதினோம். நம் அமைச்சர்கள் நேரில் சென்று தெரிவித்தார்கள் - அதிகாரிகள் டெல்லிக்கு பலமுறை படையெடுத்தார்கள். சரி. கட்டுப்பாட்டைத்தான் தளர்த்தி விட்டீர்கள் - பரவாயில்லை - தயவுசெய்து லெவி முறைக்காவது எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டோம் - அதையும் மறுத்துவிட்டார்கள்.

இந்தச் சிறு தானியங்களை அடுத்து - நெல், அரிசி போன்றவற்றுக்குள்ள மாநிலக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்கு இது அடையாளமாக அமையக்கூடுமோ என்ற அச்சம் நம்மைப் பிடித்து இன்றைக்கு வாட்டிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சிறு தானியங்களுக்கு இருந்த கட்டுப்பாட்டை, இந்த அரசைக் கலந்துகொள்ளாமல் மத்திய அரசு தளர்த்தி விட்டதன் காரணமாக இன்றைக்கு மாநிலத்தில் பல பகுதிகளில் - பல மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கிற சிக்கலை சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள் என்று கருதுகிறேன்.

எண்ணெய் விலையை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம் என்றுதான் வேர்க்கடலைக்கு லெவி வேண்டுமென்றும், வியாபாரத்திற்கு லைசென்சு தரப்படவேண்டும் என்றும், அதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்றும் அனுமதி கேட்டோம். 12-4-1973இல் இருந்து கேட்டோம். இதுவரை அந்த அனுமதி தரப்படவில்லை.

மண்ணெண்ணெய் இல்லாத சங்கடத்தால் எவ்வளவு பேர் அந்தத் தட்டுப்பாட்டினால் பரிதவித்தார்கள் என்பதை நாம் அறிவோம் - இந்த அதிகாரங்கள் பொது மக்களோடு எவ்வளவு தொடர்பு கொண்டவை - எவ்வளவு தொடர்பு கொண்ட பிரச்னைகளில் நாம் இன்றைக்கு சிக்கித் தவிக்கிறோம் என்பதை முதலில் எடுத்துக்காட்டத்தான் இவைகளையெல்லாம் சொல்கிறேன்.

மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே இதுவரை எண்ணெய் கம்பெனிகளில் இருந்து எண்ணெய் டெப்போக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய உத்தரவிடுகிற அதிகாரம் இதுவரையில் மாநிலத்திற்கு இருந்தது. 1972 இதுவரையில் மாநிலத்திற்கு இருந்தது. எந்தக் கம்பெனியிலிருந்தும், எந்த ஜில்லாவிலிருக்கிற டெப்போவுக்கும் மண்ணெண்ணெய் அனுப்பலாம் என்று உத்தரவிடுகின்ற அதிகாரம் இதுவரையில் மாநிலத்திற்கு இருந்தது. ஆனால், திடீரென்று 1972இல் இந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக்கொண்டார்கள். அதனால் ஏற்பட்ட கஷ்டம் என்ன? நம் மாநிலத்தில் எண்ணெய்த் தட்டுப்பாடு எங்கே ஏற்படுகிறது என்று நமக்குத் தெரியும்.

உடனடியாக அந்தக் கம்பெனியோடு மாநில அரசு தொடர்பு கொள்வது சுலபம். திருச்சிக்கு அனுப்புங்கள் - தஞ்சைக்கு அனுப்புங்கள் - கோவைக்கு அனுப்புங்கள் என்று தட்டுப்பாடு இருக்கிற இடத்தை உடனடியாக அறிந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய தொலைவு இல்லாத இடத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் மத்திய சர்க்கார் நம்மிடம் இருந்த அந்த அதிகாரத்தைப் பறித்து வைத்துக்கொண்டது.

அந்த அதிகாரத்தை மீண்டும் மாநிலத்திற்கே தாருங்கள் என்று கேட்டோம். 26-4-1973இல் கடிதம் எழுதினோம். நேரில் கேட்டோம் - தந்திகள் கொடுத்தோம். தந்தி கொடுத்த பிறகு பதில் தந்தி கொடுத்தார்கள். என்ன தெரியுமா? "எண்ணெய் கம்பெனியில் இருந்து நேரடியாக டெப்போக்களுக்கு எண்ணெய் அனுப்பி வைக்கிற அதிகாரம் உங்களுக்குத் தேவை என்று கேட்கிறீர்களா" என்று ஒரு கேள்வியைத் தந்தியாக ஆக்கினார்கள். "ஆமாம்" என்று பதில் தந்தி கொடுத்தோம். அதற்குப் பதிலே கிடையாது.

ஆக, மண்ணெண்ணெய் போன்ற, மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற பண்டங்களைக் கூட - மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற மாநில சர்க்காரால் விநியோகிப்பதற்கு நம்மிடத்தில் அதிகாரம் இல்லாத காரணத்தினால், இருக்கிற அதிகாரங்களும், பறித்துக்கொள்ளப் படுகிற காரணத்தினால் ஏற்படுகிற சங்கடங்களை விளக்குவதற் காகவேதான் சொன்னேன்.

கரைபோட்ட வேட்டி - வண்ணச் சேலைகள் ஆகியவற்றை நெய்வது கைத்தறிகளுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கைத்தறியாளர்களுக்கு தங்கு தடையின்றி நூல் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்றும் - இன்றல்ல - 1952ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3ஆம் நாள் - டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் தொழிலமைச்சராக இருந்தபோதே - இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். கிட்டத்தட்ட 20 ஆண்டு காலம் ஓடிவிட்டது. அந்தத் தீர்மானத்தின் கதி என்ன?

டாக்டர் கிருஷ்ணாராவ் தொழில்துறை அமைச்சராக தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காலத்தில் 1952ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் கரை போட்ட வேட்டிகள் - வண்ணச் சேலைகள் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் - 20 ஆண்டுக் காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அதைப்பற்றி நாமே பலமுறை இந்த அவையில் பேசியிருக்கிறோம், எடுத்துச் சொல்லியிருக்கிறோம் கவனிக்கப்படவில்லை.

இந்த அரசு கைத்தறியாளர்களது துயரைப் போக்க - பருத்தி நூல், நெட்டிழை பருத்தி நூல் - பட்டு ஆகியவற்றின் விநியோக அதிகாரம், விலையைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்தில் பலமுறை பேசியிருக்கிறோம், எழுதியிருக்கிறோம். பலன் இல்லை. மாறாக இருபது லட்சம் கைத்தறியாளர்களின் கண்ணீரைத்தான் நாம் கண்டு வருகிறோம். நமக்கு அதிகாரம் இல்லாத காரணத்தினால் நாம் கேட்கின்ற அதிகாரத்தை 1952 முதலே மத்திய அரசு கொடுக்க மறுத்து வருகிற காரணத்தினால் இந்த அவல நிலைக்கு இந்த மாநிலம் - மாநிலக் கைத்தறியாளர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் உற்பத்தியாகின்ற நூல்களை எல்லாம் வெளி மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுப்புகின்ற காரணத்தினால், அந்த மாநில கைத்தறியாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் டி. ஐ. ஆர். சட்டத்தின் கீழ் அதை நிறுத்தி விட்டார்கள். அதேபோல் தேங்காயும் - தேங்காய் எண்ணெயும் அந்த மாநிலத்தைவிட்டு வெளியே போகக்கூடாது என்று சட்டம் போட்டார்கள்.

நம் மாநிலத்திலும் மதி அவர்கள் முன்னாள் உணவு அமைச்சராக இருந்தபோது ராஜஸ்தானில் இருந்து பருப்பு வரவில்லை என்றவுடன் இங்கிருந்து வெல்லம் போகக்கூடாது என்று தடை விதித்தார்கள். அப்படி நீங்கள் உத்தரவு போடுங்கள். மத்திய சர்க்கார் என்ன செய்கிறது என்று பார்ப்போம். பிறகு வேண்டுமானால் நாம் உட்கார்ந்து பேசுவோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : உர விநியோகம் சம்பந்தமாக ஏற்கெனவே சொன்னார்கள். நான் அந்த நேரம் தலையிடக்கூடாது என்று நினைத்தேன். உர விநியோகத்திலே இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு ஏதாவது மறுப்பு மத்திய சர்க்கார் தெரிவித்ததா? அல்லது இன்ஸ்பெக்ஷனுக்காக எத்தனை இன்ஸ்பெக்டர்களைப் போட்டாலும்கூட அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்களா? இன்ஸ்பெக்ஷன் கோளாறு காரணத்தினால் இந்த விநியோகத்தில் ஏதாவது ஊறு ஏற்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : உரத் தொழிற்சாலைகளுக்குள் நுழைந்து அவைகளின் இருப்புகளைக் கணக்கெடுக்க அவர்கள் அதிகாரம் அளிக்கவில்லை. தவறாக விநியோகம் செய்யப்படுமானால், அப்படிப்பட்ட இடத்தில் இருந்து உரத்தைப் பறிமுதல் செய்து, நாம் யாருக்குக் கார்டு வழங்கியிருக்கிறோமோ அவர்களுக்கு விநியோகிக்க நமக்கு உரிமையில்லை. இவைகளைக் கேட்டோம், இன்னும் பதில் இல்லை. மறுத்துவிட்டார்கள்.

கேரளாவைப் பற்றிச் சொன்னார் நண்பர் செழியன் அவர்கள், இங்கு நண்பர் திரு. மதியழகன் அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது வெல்லத்தின் மீது போட்ட தடையைப்பற்றிச் சொன்னார்கள். அது நீதிமன்றத்திற்குச் சென்று

அந்த உத்தரவு செல்லாததாக ஆகிவிட்டது. மத்திய சர்க்காரோடு நாம் இப்படி அடிக்கடி சச்சரவுகள் எழுப்புவதில் எந்தவிதமான தடையுமில்லை.

ஆனால் தடை செய்யப்பட்ட பத்து நாட்களுக்குள் நீதி மன்றத்திற்குச் சென்று, அந்தத் தடைகளை நீக்க நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தின் அடிப்படையில் யாரும் பெற்றுவிட முடியும். அதற்காகத்தான் அவைகளை மாற்ற வேண்டும் - மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம்.

இவ்வளவு - இருக்கிற அதிகாரங்களை வைத்துக்கொண்டு இல்லாத அதிகாரங்களுக்காக வாதாடியும் - இந்தச் சூழ்நிலையில் மாநில மக்களுக்கு பல நல்ல காரியங்களை நாம் செய்து வருகிறோம் என்றாலும், நாம் வருந்துகின்ற அளவுக்கு விலைவாசி கட்டுப்படுத்தப்பட முடியாமல் ஏறிக்கொண்டிருக்கிறது.

இதற்கு யார் காரணம்? நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே படித்துக்காட்டினார்களே - ஏ. ஆர். சி ரிப்போர்ட்டை அதன் 18ஆம் பக்கத்தில் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'In fact, it is the policies of the Central Government that are responsible for inflation and increases in prices and the cost of living. . . .'

மத்திய சர்க்கார்தான் இதற்குக் காரணம் என்பதை ஏ. ஆர். சி. ரிப்போர்ட் மிகத்தெளிவாக, விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றது.

ஆகவே, மத்திய சர்க்கார் மீது பழிபோடாதே. மத்திய சர்க்காரைக் குறை சொல்லாதே என்று சொல்வது பொருத்த முடையது அல்ல என்பதற்கான தெளிவான விளக்கத்தை ஏ. ஆர். சி. அறிக்கையே நமக்குத் தந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

அதிக அதிகாரம் கேட்பது இங்கே அமர்ந்திருக்கிற அமைச்சர் பெருமக்கள் அந்த அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா? அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்த அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா?

அதிகாரம் எங்களுக்காக அல்ல. மாநிலத்திற்காகக் கேட்கிறோம். அது புரியவேண்டும் என்பதற்காகத்தான் 'மாநில சுயாட்சி' என்று சொல்கிறோம்.

அது மேலும் தெளிவாகப் புரிய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி என்கிறோம்.

அது அழுத்தந்திருத்தமாகப் புரியவேண்டும் என்பதற்காகத் தான் மத்தியில் கூட்டாட்சி என்று சொல்கிறோம்.

மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி என்று கூறுகிற நேரத்திலேயே அங்கு பிரிவினைக்கு எள்ளளவும் இடம் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் இங்கே நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் - அதன் தலைவர்கள் பேசுகின்ற நேரத்திலும் - வேறு ஓரிருவர் பேசுகின்ற நேரத்திலும் - "உங்கள் வரலாறு அப்படி இருக்கிறதே, ஆகவே உங்களுடைய வரலாற்றுப் பின்னணியைப் பார்த்து நாங்கள் சந்தேகிக்கிறோம்" என்றார்கள். "நீங்கள் ஏற்கெனவே திராவிட நாடு கேட்டவர்கள், பிரிவினை கேட்டவர்கள். ஆகவே உங்களுடைய, வரலாற்றை நாங்கள் பின்னணியாகக் கொண்டு உங்களைச் சந்தேகிக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அப்படியானால் அந்த வரலாற்றுக்குரியவர்கள் இப்பொழுது யார், யார் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதெல்லாம்கூடப் பிரச்சினை. இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் 1937ஆம் ஆண்டிலே நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலம் வரையிலும் காங்கிரஸ் கட்சியிலே இருந்து கொடி தூக்கி விடுதலைப் போராட்டத்திலே பாடுபட்டவர்தான்.

எனக்குப் பின்னாலே அமர்ந்திருக்கின்ற திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் காங்கிரஸ் கட்சிப் போராட்டத்திலே - நான் மாணவனாக அந்தக் காலத்திலேயே ஈடுபட்டிருந்தார். திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் நானும் அவரும் ஒன்றாகப் படித்துக்கொண்டிருந்த நேரத்திலேயே - காங்கிரஸ் இயக்கத்திலே தீவிரமாக இருந்தவர்.

அதைப்போலவே செட்டி நாடு ராஜா அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தவர், காங்கிரஸில் மிகச்செல்வாக்குப் பெற்றிருந்தவர், இப்பொழுதும் அந்தச் செல்வாக்கைப் பெற்றிருக்கிறவர் என்று கருதுகிறேன். ஆகவே திரு. டி. டி. கே. அவர்களையும், ஜஸ்டிஸ் கட்சியின் பிரதான தூண்களில் ஒருவராக இருந்தவர் என்று வர்ணிக்கப்பட்ட திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களையும்தான் இந்தியா சுதந்திரம் பெற்றதும், மத்திய அரசாங்கத்திலே நிதியமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டி, அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். யாரும் மறந்துவிடமுடியாது.

ஜஸ்டிஸ் கட்சியின் பிரதான தூண்களில் ஒருவர் என்று சிறப்பிக்கப்பட்ட டாக்டர் சுப்பராயன்தான் காங்கிரஸ் அமைச்சரவையிலே ஒரு அமைச்சராக ஆனார் என்பதையும் மறந்துவிட முடியாது. ஆகவே. . .

**திரு. கே. டி. கே. தங்கமணி** : டாக்டர் சுப்பராயன் என்றைக்கும் ஜஸ்டிஸ் பார்ட்டியில் இருந்ததில்லை. அவர் முதல் அமைச்சரானபோது அவர் சுயேச்சையாகத்தான் இருந்தார். அவர் எப்போதுமே அதைத் தெளிவுபடுத்திக்கொண்டுதான் வந்திருக்கிறார். நான் ஜஸ்டிஸ் பார்ட்டியைக் குறைத்துச் சொல்வதற்காகச் சொல்லவில்லை. டாக்டர் சுப்பராயனைப் பொறுத்த அளவில் ஜஸ்டிஸ் பார்ட்டியிலே உறுப்பினராகவோ ஜஸ்டிஸ் பார்ட்டி அமைச்சராகவோ இருந்தது இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : ஜஸ்டிஸ் கட்சியிலே அவர் உறுப்பினராக இல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவாளராகத்தான் இருந்தார். அவர் அமைச்சராக ஆனார். சரி, பிரிவினை கேட்காத கட்சிகள், பிரிந்து போக வேண்டுமென்று சொல்லாத கட்சிகள் எந்தக் கட்சியாவது இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிறதா? தமிழ்நாட்டிலே இருக்கிறதா? அல்லது இந்த அவையிலே இருக்கிறதா? இல்லை. நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1941ஆம் ஆண்டு வரையில் பாகிஸ்தான் பிரிவினைக்கு எதிர்ப்பாக இருந்தது. 1941ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யா போரிலே ஈடுபட்டதும் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு, முஸ்லீம் லீக் இந்தியாவின் இரண்டாவது பெரிய வகுப்பைப் பிரதிபலிக்கும் மகத்தான அரசியல் கட்சி என்று பிரகடனப்படுத்தி, பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவு தந்தது.

திரு. ஜீ. அதிகாரி என்பவர் 'பாகிஸ்தான் அண்ட் நேஷனல் யூனிட்டி' என்ற ஒரு புத்தகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். 'முஸ்லீம் தேசிய இனம் முழு சுயாட்சி உரிமைகளுடனும் பிரிந்துபோகும் உரிமையுடனும் விளங்கவேண்டும்'. இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த பாகிஸ்தான் ஆதரவுக்கொள்கை காரணமாகத்தான் காங்கிரஸ் கட்சியிலிருந்து 1945ஆம் ஆண்டு கம்யூனிஸ்டுகள் விலக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை மறந்திருக்க இயலாது.

இதைவிட ஒருபடி அதிகமாகச் சென்று திரு. பி. சுந்தரய்யா 1946ஆம் ஆண்டு எழுதிய 'விசால ஆந்திரா' என்ற புத்தகத்திலே கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளைத் தெளிவாக்கியிருக்கிறார்.

'மலையாளிகள், தமிழர்கள், ஆந்திரர்கள் போன்ற தனித் தன்மை படைத்த தேசிய இனங்கள் இயற்கையாகத் தோன்றி வளர்வதற்கு பிரிட்டிஷார் இந்தியாவை ஒன்றுபடுத்தியது தடையாகப் போய்விட்டது' என்று அவர் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்போது ஆந்திரத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் மொழி அடிப்படையில் ஆந்திரர்களுக்குத் தனி மாகாணம் - மொழிவாரி மாகாணம் வேண்டும் என்று கேட்டு வந்தார்கள். அப்போது சுந்தரையா எழுதுகின்றார் அந்தப் புத்தகத்தில் . . . "எதற்காக நீங்கள் தனி மாகாணம் மட்டும் கேட்கிறீர்கள்? நீண்ட வரலாறும், தனித்த மொழியும், கலாச்சாரப் பாரம்பரியமும் கொண்ட ஆந்திரா ஏன் தனிநாடாக இருக்கக்கூடாது" என்று கேட்டுவிட்டு, "இத்தகைய கொள்கையை நீங்கள் ஒப்புக்கொண்டால், பலுசிஸ்தான், மேற்கு பஞ்சாப், சிந்து, வங்கத்தின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லீம் மக்களுடைய கோரிக்கையை நீங்கள் ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது" என்றும் அவர் அந்தப் புத்தகத்தில் கேட்டிருக்கிறார்.

1942 செப்டம்பர் 19ஆம் தேதி அப்போது ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஒரு தீர்மானம் போட்டது. அந்தத் தீர்மானம் 1943ஆம் ஆண்டு மே மாதம் கூடிய இந்தியக்

கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காங்கிரஸ் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்ன தீர்மானம்? "தொடர்பான பூகோள பிராந்தியத்தைத் தாயகமாகக் கொண்ட, பொதுவான வரலாற்றுப் பூர்வமான பாரம்பரியம், பொது மொழி, கலாச்சாரம், மனப்பூர்வமான ஒருமைப்பாடு, பொதுவான பொருளாதார வாழ்வு, ஆகியன கொண்ட இந்திய மக்களின் ஒவ்வொரு பிரிவும் தனித் தன்மை கொண்ட தேசிய இனமாகும். அத்தகைய தேசிய இனங்கள், சுதந்திரம் பெற்ற இந்திய யூனியன் அல்லது கூட்டாட்சிக்குள் சுயாட்சி பெற்ற மாநிலங்களாக இருப்பதற்கு உரிமை பெற்றவை. அவை விரும்பினால் பிரிந்துபோகும் உரிமை Right to secede அவர்களுக்கு உண்டு" இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை வேண்டும் என்று தீர்மானம் போட்டது குற்றம் என்றால், அதே குற்றத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் செய்திருக்கிறது. ஆகவே, எங்கள் இருவருக்கும் ஒரே வரலாற்றுப் பின்னணிதான் அமைந்திருக்கின்றது. . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி** : 1943ஆம் ஆண்டு பம்பாயிலே நடந்த அகில இந்திய மாநாட்டைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த மாநாட்டினுடைய பின்னணி, நாளைக்குச் சுதந்திரம் வருகிற காலத்திலே ஒவ்வொரு மாநிலமும் மொழி அடிப்படையிலே எப்படி எப்படி அமைய வேண்டும், அப்படி மாநிலத்தினுடைய அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மாநிலத்தினுடைய தேசிய இனங்கள் என்றால் என்ன என்று வரையறுத்துத்தான் அங்கு சொல்லப் பட்டிருக்கிறதேயொழிய வேறல்ல.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நான் இப்போது அது உங்கள் கொள்கை என்று சொல்லவில்லை. கடந்த கால வரலாற்றைப்பற்றித்தான் சொல்கிறேன். நீங்கள் முஸ்லீம் பற்றிச் சொன்னீர்கள். அவர்கள் கடந்த கால வரலாறு பிரிந்து போகின்ற வரலாறு. ஆகவே அவர்கள் இதை ஆதரிப்பார்கள் என்று திரு. கே. டி. கே. தங்கமணி சொன்னார்கள். அதற்காக ஞாபகப்படுத்துகிறேன். முஸ்லீம்கள் பிரிந்துபோவது நியாயம் தான் என்று கம்யூனிஸ்ட் கட்சி 1941ல் வாதாடியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப்போல திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட "டிஸ்கவரி ஆப் இண்டியா" என்ற நூலில் - இதைப்பற்றி நாவலர் அவர்கள் கூட நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன் - 'இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, அதாவது சுதந்திர இந்தியா அமைந்த சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு அதன் பகுதிகளுக்கு பிரிந்து போகும் உரிமையை முறைப்படி வழங்கலாம்' என்று டிஸ்கவரி ஆப் இண்டியா என்ற நூலில் எழுதினார்கள். நேரு அவர்கள் தனிப்பட்ட முறையிலே இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. அகமது நகர் கோட்டைச் சிறைச்சாலையில் இருந்து எழுதினார்கள். அப்போது அவரைச் சுற்றி பல காங்கிரஸ் தலைவர்கள் இருந்தார்கள். அந்தப் புத்தகத்திலே அவர் குறிப்பிடுகிறார் - 'இதை எல்லாரும் படித்துப் பார்த்தார்கள். சிறைச்சாலையிலேயிருந்த காங்கிரஸ் தலைவர்கள் அத்தனை பேர்களும் அதனைப் படித்துப் பார்த்தார்கள். ஆகவே, இதைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டதாகவே கருதவேண்டும்' என்று அந்தப் புத்தகத்தைப் பற்றி குறிப்பையும் எழுதியிருக்கிறார்கள்.

ஆகவே, முன் வரலாற்றை மட்டும் வைத்து இப்பொழுது சொல்கிற எல்லா விஷயங்களுக்கும் தவறான கருத்துக்களை கற்பிக்கக் கூடாது.

போர், போர் என்று அலைந்த அசோகன் களம் பல கண்டான், அவனுடைய கட்டாரி பட்டு ஆயிரக்கணக்கானவர் பிணமாயினர். அவனுடைய ரத, கஜ, துரக, பதாதி படைகளின் ஆர்வத்தால் - வேகத்தால் சரிந்துபோன சாம்ராஜ்யங்கள் எத்தனையோ! கலிங்கம்வரை சென்றான். கலிங்கத்திலே களம் கண்டான், அங்கே பிணக்குவியல்களைப் பார்த்தான், அதற்குப் பிறகு நான் இனிமேல் போர் புரிய மாட்டேன், நான் இனிமேல் புத்தன் என்றவுடனே அவனை, 'உன்னுடைய பழைய வரலாறு போர் வரலாறு, ஆகவே ஒப்புக் கொள்ளமாட்டேன், நான் உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டேன்' என்று அன்றைய இந்தியா சொல்லியிருந்தால், இன்று இந்தியக் கொடியிலே அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டிருக்க முடியாது. இன்றைக்கு அசோகச் சின்னம் நம்முடைய இந்தியாவினுடைய தேசிய சின்னமாக ஆகியிருக்காது. (கரவொலி.)

வழிப்பறிக் கொள்ளையடித்த ரட்சன், வால்மீகியாகி இராமாயணம் எழுதினான். அவனை ஒத்துக்கொண்டீர்கள், எங்களை ஒத்துக்கொள்ளக்கூடாதா? (கரவொலி) ரட்சன் வால்மீகியானானே, அவனை ஒத்துக்கொண்டீர்களே, எங்களை ஒத்துக் கொள்ளக் கூடாதா? (கரவொலி.)

நண்பர் கோவை செழியன் அவர்கள், நீங்கள் ஆதித்தனாரிடத்திலும், சிலம்புச் செல்வரிடத்திலும் போயும் போயும் இந்தக் கொள்கையை கடன் வாங்கினீர்களே என்று கேட்டார். அவருக்கு வருத்தம், அவர் தமிழ் தேசியக் கட்சி என்று ஒன்று ஆரம்பித்தார். அந்தக் கட்சியின் கொள்கை என்ன? 'மொழிவழித் தேசிய தன்னாட்சிகள், சம அந்தஸ்தோடு விரும்பி (விரும்பினால்தான்) - இணைந்த இந்தியக் கூட்டமைப்பில் பிரிந்து போகும் உரிமையோடு கூடிய தமிழ்த் தேசிய தன்னாட்சி காண்பதாகும். பிரதான தலைவராக ஈ. வி. கே. சம்பத்தும், அடுத்த தலைவராக கோவை செழியனும் இருந்த தமிழ் தேசியக் கட்சியின் கொள்கை இது. நாம் ஆதித்தனாரிடம் கடன் வாங்கினோமா, ம. பொ. சி. யிடம் கடன் வாங்கினோமா என்பதை விட செழியன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம், "பரவாயில்லை நாம் மறந்து விட்டாலும் அவர்கள் அதை விடாமல் எடுத்துக்கொண்டு நம்மிடத்திலே கடன் வாங்கி இன்றைக்குப் போட்டுக் கொண்டார்கள்" என்று நினைத்துக்கொள்ளலாம். அதிலே ஒரு திருத்தம். "பிரிந்து போகும் உரிமையோடு" என்பதை மட்டும் நாங்கள் எடுத்துவிட்டோம், நண்பர் கோவை செழியன் அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள், "ம. பொ. சி. யிடமிருந்து இந்தக் கொள்கையை வாங்க வேண்டுமா, ஆகவேதான் மாநில சுயாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னார். திரு. ம. பொ. சி. அவர்கள் நடத்திய 'மாநில சுயாட்சி' கருத்தரங்கிற்கு அண்ணா அவர்கள் சென்றார்கள், கண்ணியத் திற்குரிய காயிலே மில்லத் இஸ்மாயில் அவர்களும் சென்றார்கள், என்னுடைய அன்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பெரியவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இவர்களெல்லாம் அந்த மாநாட்டிற்குச் சென்றார்கள். அந்த மாநாடு 21-7-1968-ல் நடைபெற்றது.

நம்மையெல்லாம் தவிக்கவிட்டு அண்ணா அவர்கள் பிரிவதற்கு ஒரு திங்களுக்கு முன்பு நடந்த மாநாடு, அந்த மாநாட்டுச் செய்திகள், பேச்சுக்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் வந்தன, ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வந்தன. முழுப் பேச்சு முரசொலியில் 21-7-1968-ல் வந்தது. நான் அந்தப் பேச்சைப் படிப்பது மற்றவர்களுக்குப் பயன்படுமோ இல்லையோ என்னுடைய அன்பிற்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்குப் பயன்படும் என்ற எண்ணத்தோடு சொல்கிறேன்.

திரு. எட்மண்ட் அவர்களைப்போல் எரிச்சல் கக்கும் வார்த்தைகளை வீசுவதற்கு என்னால் முடியாது, பழக்கமும் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல் சோர்ந்துபோய்விட்ட காரணத்தால் அந்த வார்த்தைகள் வராமலிருக்கலாம். ஆனால், அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள், என்ன பேசினார்கள் என்பதை மட்டும் படித்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

சிலம்புச் செல்வர் நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில் அண்ணா பேசிய பேச்சைப் படிக்கிறேன்.

"மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது காமராசரும், சுப்பிரமணியமும் 'இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும்' என்று கூறுகின்றனர். இதுபற்றிய எனது விளக்கத்தைக் கூறும் முன்பு அவர்களிடம் பணிவன்போடும், உறுதியோடும் கேட்டுக் கொள்வேன்.

நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும் நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும் - வழி காட்டும் திறமையும் உங்களைத்தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால் எந்தக் காரணத்தால் எப்போது உங்களுக்கு அளிக்கப்பட்டது?"

அண்ணா பாணியில் கேட்கிறார், "உங்களுக்குத்தான் நாட்டைக் காப்பாற்றும் உரிமை உண்டு என்று யாரால், எந்தக் காரணத்தால் எப்போது அந்தத் தகுதி உங்களுக்கு அளிக்கப் பட்டது?" என்று கேட்கிறார்.

மேலும், "நாட்டைக் காப்பதில் ம. பொ. சி. க்கு உள்ள உறுதியைவிட காமராசருக்கு உறுதி அதிகம் என்பது எந்த நியாயத்தின்பாற்பட்டது?

குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதிவிடும், அதற்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமையுண்டு; தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும் - அவர்கள் தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவறாக இருக்கலாம். இருபது ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால் சரி என்று கூறி ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் விழிப்படைந்த இந்தக் காலத்தில்கூட அப்படிப் பேசுவது - ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு என்றுதான் உலகம் கருதும். காங்கிரஸ்காரர்களைத் தவிர நாட்டின் மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது; பொருத்தமற்றது; ஒதுக்கித் தள்ளப்படவேண்டிய கருத்து.

பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிறார்கள். மத்திய அரசுக்கு பலம் எதற்காக? அந்தப் பலம் யாருக்கு எதிராக? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநிலத் துரைத்தனத்துக்கு இருக்கலாம், மத்திய துரைத்தனத்துக்கு இருக்கலாம். ஆனால் அந்தப் பலம் யாருக்காக - எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும் - விளக்கிச் சொல்லாமலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

சீனாவின் ஆக்ரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால் ஒரு துளியும் தயக்கமில்லாமல் அந்த வலிவைச் சேர்த்துத் தரத் தயார். பாகிஸ்தானின் படையெடுப்பை அடக்க மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால் நிச்சயம் அந்த வலிவைத் தேடித்தரத் தயார்.

ஆனால் மத்திய அரசின் வலிவு, அசாமிற்கு அச்சத்தைத் தர - தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்திற்கு கலக்கம் தருவதற்காகத்

தான் என்றால் நமது சுதந்திரச் சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்து, சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால், நமது கூட்டுச்சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்கிரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.

மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்; மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்; ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே?

சரிந்த சாம்ராஜ்யங்களுடன் - இப்போது இருக்கிற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். அந்த சாம்ராஜ்யவாதிகள் - தமது சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதை சரித்திரமுணர்ந்தவர்கள் அறிவார்கள்.

ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலிவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியை சரித்திரத்திலே காண முடியாது. ஆனால் அந்த சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

நமக்கிருக்கிற கவலை எல்லாம் - தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவு தான் என்றால் வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு நல்லது; காரியத்திற்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும் பலத்தையும் வைத்திருக்கும் : மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல. மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து, மத்திய அரசு குவித்துவைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிமை ஏதும் ஏற்பட்டுவிடாது.

நாட்டுப் பாதுகாப்புத் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக்கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்."

திரு. எட்மண்ட் அவர்கள் கவனிக்க வேண்டும், "பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளட்டும்."

தற்போதுள்ள அரசியல் சட்டத்தை ஆராய்ந்து மாநில மத்திய அரசுகளுக்குள்ள அதிகாரப் பங்கீடுகளை மாற்றி அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தர வேண்டும். அதற்கான ஒரு குழு அமைத்து ஆராய வேண்டுமென்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்.

இன்றைய தினம் மாநில அரசுக்குள்ள வேலை என்ன? மக்களுக்குச் சோறு போடுவது - வேலை வாய்ப்புத் தருவது - தொழில் நீதியை நிலைநாட்டுவது - சுகாதாரத்தைப் பேணுவது - கல்விச் செல்வத்தை வளர்ப்பது போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்ய வேண்டியது மாநில அரசு.

ஆனால் மத்திய அரசின் வேலை என்ன? நாடக மேடையில் வரும் இராஜா, மந்திரியை அழைத்து, "மந்திரி! நமது மாநகர்தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்பானாம். அதுபோல் மாதம் ஒரு முறை மாநில மந்திரிகளை மத்திய மந்திரி டில்லியில் கூட்டி, பள்ளிக்கூடங்களில் கல்வி எப்படி இருக்கிறது? காலரா நோய் தடுக்கப்பட்டு விட்டதா? என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தர்பார் பேச்சுப் பேசும் பொறுப்புதான் டில்லிக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

மக்களின் சுக துக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர - மத்திய அரசு அல்ல."

அண்ணா அவர்கள் விளக்குகிறார்கள் :

"மக்கள் மீது அக்கறை இருக்கலாம் மத்திய அரசுக்கு. அது எப்படிப்பட்ட அக்கறை? குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் மூன்றாவது மாடியிலுள்ள சீமான் - ஏதோ கரும்புகை தெரிகிறதே; தீ விபத்து போலிருக்கிறதே; என்று கூறுவானே அதைப் போன்ற அக்கறைதான் மத்திய அரசின் அக்கறை.

ஆனால் குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் பதறித் துடிப்பது யார்? அந்தக் குடிசைக்குப் பக்கத்தில் உள்ள குடிசைவாசிதான். அதைப்போல மாநில அரசினர்தான் மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியவர்கள்.

அதிகாரம் தேவைக்கு அதிகமாகக் குவிந்துவிட்டதால் என்ன நடக்கிறது? நான்"

நான் என்றால், அண்ணா அவர்கள் சொல்கிறார்கள் :

"நான் அண்மையில் டில்லி உணவு அமைச்சரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்."

"எனக்கு தொலைபேசியில் பேசும் சக்தி அதிகம் இல்லை யாதலால் (அண்ணா சொல்கிறார்) எனது நண்பரை விட்டுப் பேசச் சொன்னேன். உணவு அமைச்சர் ஜெகஜீவன் ராம் (திரு. ஜெகஜீவன் ராம் அப்பொழுது உணவு அமைச்சர்) ஊரில் இல்லாததால் துணை அமைச்சர் ஷிண்டே என்பவர் பேசினார். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து சர்க்கரையை வெளிக்கொணரும் உத்தரவு டில்லியில் இருந்து வராததால் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற விஷயத்தை அவருக்குக் கூற முயன்றேன். கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்துகொள்ள அவருக்கு 15 நிமிடங்கள் ஆயிற்று. பெரைப் புரிந்துகொள்ள முடியாததற்காக அவர்மீது நான் குற்றம் சாட்டவில்லை. சர்க்கரை ஆலை இருப்பது தமிழ்நாட்டில், அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லியில் என்று அதிகாரத்தைப் பிரித்துத் தந்தார்களே அவர்கள்தான் குற்றவாளிகள்.

இப்படி கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து காட்பாடி சிறு தொழிற்சாலை வரை எல்லாவிதமான சிறு விஷயங்களிலும் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருப்பதன் விளைவு பெரிய விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்த முடியாமல் போய் விடும் என்பதால்தான் அதிகாரங்கள் டில்லியில் குவிக்கப்படக் கூடாது என்கிறோம்.

ஆகவே, வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தர தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கி பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் கூட சோடை போய் விடுவார்களோ என்பதுதான் என் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது. மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல."

இது அண்ணா பேசியது. அதே மாநாட்டில் திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் பேசியிருக்கிறார்கள். "மத்திய அரசை எதிர்த்து மாநில சுயாட்சிக்காக நடக்கும் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று அதே மாநாட்டில் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இது முரசொலியில்தானே வந்தது என்று இங்கே சொல்லா விட்டாலும் நாளைக்குச் சொல்லக்கூடும். அதற்காகத்தான் 'இந்து' பத்திரிகையின் 'ஃபோட்டோஸ்டெட்' காப்பி எடுத்து வந்திருக்கிறேன்.

"C. Ms. want effective State autonomy"

என்ற தலைப்பில் அண்ணா அவர்களும், நம்பூதிரிபாத் அவர்களும் பேசிய பேச்சு அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

அதைப் போலவே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஜூலை 21, 1968 இதழில் -

Annadurai wants panel to consider State autonomy

என்று அந்தச் செய்திகள் எல்லாம் அப்போதே பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

செழியன் அவர்கள் சொன்னார்கள் 'கருணாநிதி, ம.பொ. சி. யினுடைய அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளலாமா' என்று. அந்த மாநாட்டில் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "இப்படி மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து அறிக்கை தர ம.பொ.சி. அவர்களே முயற்சி எடுத்துக் கொண்டு ஒரு குழுவை அமைக்கலாம்."

இன்றையதினம் ம.பொ.சி. யே கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ம.பொ.சி.-க்குள்ள வசதியில் அது இயலாது என்ற காரணத்தால் ம.பொ.சி.-க்குச் சொன்னால் என்ன, எனக்குச் சொன்னால் என்ன என்பதால் ராஜமன்னார் குழு அமைக்கப் பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக அரசின் கருத்துக்கள் இங்கு ஆராயப்பட, விவாதிக்கப்பட, தீர்மான வடிவில் உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன்.

Dr. H. V. HANDE : Before he begins further arguments, I want to have from the Hon. Chief Minister one clarification. He

has mentioned 'மத்தியிலே கூட்டாட்சி' It would be better for the purpose of useful discussion if he were to spell out clearly as to what exactly he means by that expression. The House would like to know the meaning of the expression. Does he want parliamentary election or wants to send some parliamentary members to Central Government or to inter-State council? He has not mentioned anything. He can spell out what he means in five or six sentences. What is in his mind? The House would like to know. That would be useful for healthy discussion.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தனியாக ஹாண்டே அவர்கள் ஒருநாள் வரட்டும். அவர்களிடத்தில் விளக்கமாகப் பேசுகிறேன். வாருங்கள் பேசலாம்.

(டாக்டர் ஹாண்டே குறுக்கீடு)

எல்லா விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. இங்கே வைக்கப்பட்டிருக்கும் 'மாநில சுயாட்சி பற்றியும் ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் தமிழ் நாடு அரசின் கருத்துரைகள்' என்ற அறிக்கையிலே எல்லா விளக்கங்களும் தரப் பட்டிருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விளக்கம் கேட்கக் கூடாது.

Dr. H. V. HANDE : On a point of order, Sir, I would like to know whether the Hon. Chief Minister (when he is tightly cornered) can try to escape from explaining what exactly he means by the expression 'மத்தியிலே கூட்டாட்சி'. Is it in order for him to escape from explaining that expression to this House? Is it not his duty to give a clear answer to that?

என்று கேட்டால், 'நீங்கள் வீட்டுக்கு வாருங்கள்' என்றா சொல்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஐந்து நாட்கள் ஏற்கெனவே விவாதம் நடந்திருக்கிறது. இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

(டாக்டர் ஹாண்டே நின்று கொண்டிருந்தார்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, Tamil Nadu Government views on State autonomy and the Rajamannar Committee Report.

என்ற புத்தகம் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : மத்திய சர்க்கார் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுங்கள். லோக்சபா இருக்க வேண்டுமா, வேண்டாமா? கிளியராகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : லோக்சபா கலைக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

(டாக்டர் ஹாண்டே எழுந்து பேசிக்கொண்டே இருந்தார் - கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது தாங்கள் எழுந்து நின்று கொண்டு பேசிக் கொண்டே இருப்பது அவையின் நிகழ்ச்சியில் குறுக்கிடுவதாக இருக்கிறது. பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டுமென்பது மரபு. பாயின்ட் அப் ஆர்டர் என்றால் மன்றத்திலுள்ள நிகழ்ச்சிகள் நடைபெறுவதிலுள்ள முறை கேடுகளைச் சுட்டிக்காட்டுவதாக இருக்க வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விளக்கம் பெற எழுந்தால் பேசுகின்றவர்கள் இடம் அளித்தால்தான் குறுக்கிட முடியும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, கருத்துக்களைத்தான் இந்த அவையில் எடுத்து வைத்திருக்கிறோம். எங்களால் முடிந்தது கருத்துக்களைத் தருகிற சக்திதான். அதைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவையும் தா என்று கேட்டால் அது எங்களால் இயலாத காரியம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : அந்தக் கருத்து என்ன என்றுதான் விளக்கமாகக் கேட்கிறேன்.

**திரு. குழ. செல்லையா** : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். முதலமைச்சர் அவர்கள் அறிவு இல்லை என்று சொல்லுகிறாரா?

**திரு. முனு ஆதி** : முதலமைச்சர் அவர்களே 'அறிவு இல்லை' என்று சொன்னால் நாங்கள் என்ன செய்வது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : இவ்வளவு பேர் அமர்ந்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இவ்வளவு பேர் அமர்ந்திருக்கிறார்கள். அண்ணா பேசிய பேச்சு முழுவதையும் படித்துக் காட்டினேன். நீங்கள் எல்லாம் அப்படியே அதிலே இணைந்தீர்கள். ஆனால் ஹாண்டே அவர்களால் இணைய முடியவில்லை (ஆரவாரம்).

(டாக்டர் ஹாண்டே எழுந்து நின்றார் - கூச்சல் குழப்பம்)

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : நான் அண்ணா அவர்கள் பேசிய பேச்சை முழுவதும் கேட்டேன். நான் கேட்பது புதிது அல்ல. 1968ஆம் ஆண்டிலேயே இந்த மன்றத்தில் கேட்டிருக்கிறேன். நம்மைப் பிரித்துப்பார்க்க வேண்டிய அவசியம் முதலமைச்சருக்குத் தேவையில்லை. முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க மரியாதையோடு சொல்லிக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் சொன்னதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். அவர்களைக் கிண்டல் பண்ணுவதற்காகவோ வேறு எதற்காகவோ நான் இதைக் கேட்கவில்லை. உண்மையிலேயே ஒரு விளக்கத்தைப் பெற வேண்டுமென்ப தற்காகத்தான் கேட்கிறேன். மாநிலத்திற்கு சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றார்கள். அண்ணா பேசியதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கூட்டாட்சி என்று சொன்னதற்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அதை ஸ்பெல் அவுட் பண்ணிச் சொல்லட்டும். என்னை ஏன் பிரித்துப் பார்க்க வேண்டும்?

**திரு. க. உரொ. எட்மண்ட்** : தலைவர் அவர்களே, அண்ணா அவர்களுடைய பேச்சை நம்முடைய முதல்வர் அவர்கள் படிக்கும் போது பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் பொறுமையாக இல்லை என்றும் இணைய முடியவில்லை என்றும் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதற்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் பதில் சொல்லிவிட்டார்களே.

**திரு. க. உரொ. எட்மண்ட்** : ஹாண்டே அவர்கள் இணையவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த ம.பொ.சி. காங்கிரஸ் கட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து 'இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் குலைக்க வந்த அநாகரிகக் கும்பல்' என்று சொன்னார்களோ, அந்த ம.பொ.சி. நடத்திய மாநாட்டைப் பற்றி இப்போது சொல்லுகிறார்களே என்பதுபற்றித் தான் அவர் வருத்தப்பட்டுப் பேசியது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, ம.பொ.சி. அவர்கள் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டது நான் அல்ல. அண்ணா கலந்துகொண்டு பேசினார். அண்ணா கலந்துகொண்டு பேசிய பேச்சைத்தான் இங்கே படித்துக் காட்டினேன்.

அடுத்து, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு கட்டளை இடுகிற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்கிறோம். 'இது நியாயமா? இது இருக்கலாமா' என்ற வாதங்களை நம்முடைய நண்பர் சுப்பிரமணியம் அவர்களும், மாரிமுத்து அவர்களும் – நம்முடைய ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள் என்று கருதுகிறேன் – அனந்தநாயகி அம்மையார் அவர்களும் எடுத்துச்சொன்னார்கள்.

மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமென்ற எந்தக் கட்டாயமும் கிடையாது. எப்படி மாநில அரசுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைகின்றனவோ அதைப்போல்தான் மத்திய அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு அமைகிற அரசு. நாடாளுமன்றம் அவர்களுடைய கையில் இருக்கும் காரணத்தால், டில்லியில் அவர்கள் வீற்றிருக்கும் காரணத்தால் மத்திய அரசு என்பது எஜமானர் நிலைமையிலும், மாநில அரசுகள் என்பது அடிமைகள் நிலைமையிலும் இருந்திடல் வேண்டுமென்று யாரும் தலையில் எழுதி வைக்கவில்லை.

பெரியவர் மணலி அவர்கள் பேசும்போது அதை வெகு அழகாக எடுத்துக்காட்டினார்கள். ஒரு அடிமை மனப்பான்மை யோடு, முதலாளித்துவ மனப்பான்மையோடு மத்திய மாநில உறவுகள் இருத்தலாகாது என்று எடுத்துக்காட்டினார்கள். அந்த

அடிப்படையில்தான் கட்டளையிடுகிறவர்கள் என்றால் எஜமானர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தக் கட்டளையைப் பெற்று அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய அவசியத்திலே மாநில அரசுகள் இருக்கத் தேவையில்லை. அது ஜனநாயக மரபுக்கு - முறைக்கு ஏற்றதல்ல. மாநில அரசுகள் தவறு செய்தால் மக்கள்தான் அதற்கான தீர்ப்பு அளிக்கவேண்டுமேயல்லாமல், மத்திய அரசு தீர்ப்பளிப்பது என்பது முறையல்ல என்பதற்காகத் தான் அந்த விதி தேவையில்லை என்ற தமிழக அரசினுடைய கருத்துரை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி மத்திய அரசு கட்டளை பிறப்பித்து மாநில அரசைக் கலைத்து விடுவது, ஏன் அந்தக் கட்டளையை நிறைவேற்றவில்லை என்று 'எஜமான்' இடத்திலிருந்து பேசுவது எல்லாம் கூட்டாட்சி முறைக்கு முரண்பட்டதாகும் என்ற காரணத்தால்தான் அது விலக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடுகிறோம்.

இதுகுறித்து முன்னாள் மேற்கு வங்கத் தலைமை நீதிபதி முகர்ஜி குறிப்பிட்டு இருக்கிறார். இவைகளெல்லாம், இந்த டைரக்டிவ்ஸ், கட்டளைகள் பிறப்பிக்கின்ற அரசியல் சட்டத்தின் விதிகள் எல்லாம் 1935ஆம் ஆண்டு சட்டத்தில் அப்போது தேவைப்பட்டவைகள், தற்போதுள்ள சூழ்நிலையில் இவைகளெல்லாம் தேவையில்லை என்று முகர்ஜி குறிப்பிடுகிறார்கள்.

ஐவர் ஜென்னிங்ஸ் பற்றிச் சொன்னார்கள். அவரும் அந்தக் கருத்தை எதிரொலிக்கிறார். மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கிவிட்டு, அதை பிரிட்டிஷார் காலத்தில் வைஸ்ராய் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்து இருந்தார். ஆகவே, அந்தப் பேரறிவாளர்களின் கருத்து, நம்முடைய அனுபவங்கள், 1935ஆம் ஆண்டு சட்டத்தை அப்படியே பிரதிபலிக்கின்ற அரசியல் சட்டம் - இவைகளின் காரணமாகக் கட்டளைப் பிறப்பிக்கும் இந்தத் தன்மை உலகத்தில் எந்த அரசியல் சட்டத்திலும் இல்லை.

இப்படி மாநிலங்களைத் தண்டிக்கும் தன்மை - சர்வாதிகார நாடு என்று சொல்லுகிறார்கள் - சர்வாதிகார நாடு என்று சொன்னால் தங்கமணி அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன் - சோவியத் ரஷ்யாவை - அந்த ரஷ்யாவிலே கூட இதற்கு ஈடான விதி எதுவும் கிடையாது.

மத்திய அரசு, மாநிலங்கள் சில சட்டங்களின்படி நடக்கத் தவறிவிட்டால் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கியிருக்கும் அதிகாரங்களின்படி மாநில அரசு நடக்கத் தவறி, அதை மீறி நடந்தால் அப்படிப்பட்ட காரியங்களை ரத்து செய்யும் அதிகாரங்களைத்தான் ரஷ்யாவில் வைத்து இருக்கிறார்களே அல்லாமல், மாநில அரசை உடனே கலைத்து விடுவது என்கின்ற அதிகாரத்தை சோவியத் ரஷ்யாவும் பெற்று இருக்கவில்லை என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்டர்-ஸ்டேட் கவுன்சில் பற்றிப் பேசப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : 1935வது வருடச் சட்டத்தில் என்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப் பட்டனவோ, அதேமுறைதான் இங்கே வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் 1935ஆம் ஆண்டு சட்டத்திலே இருக்கும் அதிகாரம்கூட மாநிலத்திற்கு இல்லையே என்று சொன்னார்கள். அப்போதுகூட நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். 1935-வது வருட சட்டத்தைப் பொறுத்தவரையில் அது மாநிலங்கள் சம்பந்தமான அளவுக்கு அமலுக்கு வந்ததே தவிர, அன்றைக்கு மத்தியில் பிரதம மந்திரி என்றோ மந்திரி சபை என்றோ இல்லையே! இப்போது புதிதாக நாடு சுதந்திரம் அடைந்த பின்னால்தான், பிரதம மந்திரியும் மத்திய சர்க்காரும் ஏற்பட்டு, அதன் அடிப்படையிலேயே வந்ததல்லவா மாநிலங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : 55 என்றார்கள். 55-அல்ல, 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் இருந்து நல்லவைகள் சிலவற்றை விளக்கி இருக்கலாம். அதை திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக்கூடும். ஆனால் எவையெவை இன்றுள்ள சூழ்நிலைக்கு தேவை இல்லையோ அவைகளை யெல்லாம் அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளில் ஒன்றுதான் இந்தக் கட்டளையிடும் அதிகாரம் என்பதைக் குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு அல்ல.

இன்டர்-ஸ்டேட் கவுன்சில் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். இது நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையே எடுத்து விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற

அதிகாரங்களுக்கு சட்டமன்றம்தான் சுப்ரீமாக இருக்கிறது. அதுபோல மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களுக்கு நாடாளுமன்றம்தான் சுப்ரீமாக இருக்கிறது. இதை யாரும் மறுத்து விடக்கூடாது. மறந்து விடக்கூடாது. இதில் இரண்டுவிதமான கருத்துகளுக்கு எள்ளளவும் இடமில்லை. ஆனால் நான் குறிப்பிட்டு இருக்கிற 'இன்டர்-ஸ்டேட் கவுன்சில்' வேறு; இது 263-வது பிரிவின்படி இப்போது அரசியல் சட்டத்திலே இருக்கிற இன்டர் ஸ்டேட் கவுன்சிலைப் பற்றி நாம் குறிப்பிட்டு இருக்கிறோமா என்றால் இல்லை. அந்த இன்டர்-ஸ்டேட் கவுன்சில் கூடவே இல்லை. அதைப்பற்றிப் பலபேர் முறையிட்டு இருக்கிறார்கள். கூடவே இல்லை. ஆனால் அதே 'இன்டர்-ஸ்டேட்' கவுன்சில் இருக்கலாம் என்ற வாதம் வந்தபோது கூட நம்முடைய ஈ. எம். எஸ். அவர்கள் அந்த இன்டர் ஸ்டேட் கவுன்சில் இப்போது இருப்பது போல் இருக்கக் கூடாது - அது இருந்தால் மாநிலங்களுடைய உரிமை பறிக்கப்பட்டு விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும் என்ற மாறுபட்ட கருத்தை ஒரு நேரத்தில் தெரிவித்து இருக்கிறார்கள்.

இப்போது 263ஆவது பிரிவில் குறிப்பிட்டு இருக்கின்ற இன்டர்-ஸ்டேட் கவுன்சில், இப்போது இருப்பதுபோல் குறிப்பிடப்பட்டு இருக்கிற கவுன்சில் உருவாகுமானால் நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்று எழுப்பிய பிரச்சினை, அந்தச் சந்தேகம் வரக்கூடும். ஆனால் நாம் நம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கின்ற இன்டர்-ஸ்டேட் கவுன்சில் வேறு மாதிரியானது. எல்லா அதிகாரங்களும் பங்கீடு செய்யப்பட்ட பிறகு நாம் அந்த இன்டர்-ஸ்டேட் கவுன்சில் உருவாக வேண்டுமென்று சொல்கிறோம். அங்கே மத்திய அரசிடம் தரப்பட்டிருக்கிற நான்கு அதிகாரங்களில் ஏதாவது ஒரு நடவடிக்கை ஒரு மாநிலத்தையோ அல்லது பல மாநிலங்களையோ அல்லது மத்திய, மாநில உறவுகளையோ பாதிக்குமானால், அவைகள் மட்டுமே நாம் குறிப்பிடுகிற இன்டர்-ஸ்டேட் கவுன்சிலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

உதாரணத்திற்கு கச்சத்தீவு பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். அது வெளிநாட்டு விவகாரம் பற்றியது, நாம் இன்று இங்கேயிருக்கும் கருத்துக்களைப்பற்றி முழுக்க முழுக்க மத்திய அரசிடம் கொடுத்து இருக்கிறோம். ஆனாலும், கச்சத்தீவு தமிழ் நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் தொடக்கூடியது என்பதை

யாரும் மறுத்திடல் இயலாது. இது சம்பந்தமாக மத்திய அரசு அந்தரங்க முடிவு எடுக்க வேண்டியிருக்குமானால், அந்த நேரம் அதன் பலாபலன்களைப் பற்றி நாம் குறிப்பிடுகிற இன்டர்-ஸ்டேட் கவுன்சில் கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். அதுதான் நாம் இன்டர்-ஸ்டேட் கவுன்சிலுக்கு சொல்லியிருக்கும் விளக்கமாகும்.

அப்படி இப்போது கலந்து ஆலோசிக்கப்படவில்லை. மாநிலங்கள் கலந்து ஆலோசிக்கப்படவில்லை என்பதற்கு நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியின் தலைவர், அகில இந்திய தலைவர் அசோக் மேத்தா அவர்கள்கூட அண்மையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் விழுப்புரம் மாநாட்டில் கச்சத்தீவு பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் பற்றி அச்சுதமேனன் அவர்களைக் கேட்டபோது, அச்சுதமேனன் சொன்னார்கள், பிரதம மந்திரி இலங்கைக்குப் போகும் போதோ அல்லது போய் வந்த பிறகோ முதலமைச்சர் கருணாநிதியை கலந்து பேசியிருந்தால் அவர் பகிரங்கமாக இதுபற்றி மாநாட்டில் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்காது. வெளிநாட்டு விவகாரங்களில்கூட முதலமைச்சர்களைக் கலந்து பேச வேண்டும். இதற்கான 'போரம்' இப்போது இல்லை. அதனால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் தன்னுடைய குறையையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் மாநாட்டில் வெளிப்படுத்தி யிருக்கிறார் என்று அச்சுதமேனன் குறிப்பிட்டார் - மன்னிக்கவும் - இதை அசோக் மேத்தா குறிப்பிட்டார்கள். அச்சுதமேனனுக்கும் அந்தக் கருத்து இருப்பதால் அந்தப் பெயர் பின்னி வந்து விட்டது. அத்தகைய 'போரம்' தான் நாம் நினைக்கிற இன்டர் ஸ்டேட் கவுன்சில் ஆகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். திரு. மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' என்ற புத்தகத்தைப் படித்துக்காட்டி, இப்படி நினைத்தால் தமிழ் நாட்டையே துண்டு துண்டாகப் போட்டு பல பேருக்கு கொடுத்து விடலாம் என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது அதீத கற்பனை என்று சொன்னார்கள். அந்தக் கற்பனைக்கு எடுத்துக்காட்டு இல்லாமல் இல்லை. கற்பனையாக இருக்கலாம். நடந்தாவிடப்போகிறது. அது வேறு விஷயம். ஆனால் இப்போது இருக்கும் அரசியல்

சட்டத்தின் மத்தியில் அவர்கள் பெற்று இருக்கும் அதிகாரங்களுக்கு இதுபோன்ற காரியங்களைச் செய்ய முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு இருந்து இருக்கிறது.

டாக்டர் பி. சி. ராய் அவர்கள் மேற்கு வங்க சட்டசபையில் முதலமைச்சராக வீற்று இருந்த அந்த நேரத்தில் மேற்கு வங்கத்திற்குச் சொந்தமான பெருபாரியை, அவர்களைக் கேட்காமலேயே பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிட பண்டித ஜவஹர்லால் நேரு சம்மதித்து விடுகிறார். நடந்ததா இல்லையா? மேற்கு வங்கத்தில் இருக்கும் பெருபாரியை, மேற்கு வங்க முதலமைச்சரை கலந்து ஆலோசிக்காமலேயே பாகிஸ்தானுக்கு கொடுத்துவிட நேரு சம்மதம் கொடுக்கிறார். முடிவாகி விடுகிறது. உடனே பி. சி. ராய்க்கு வேறு வழியில்லை. அவர் சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிறார். பி. சி. ராய். காங்கிரஸ்காரர். மேற்கு வங்க முதலமைச்சர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். மத்திய அரசை எதிர்த்து முதன் முதலாக வழக்கு தொடுத்தவர் டாக்டர் பி. சி. ராய் என்று அன்று இந்திய பத்திரிகைகளெல்லாம் எழுதின. அத்தகைய புகழ்மிக்க வழக்கு - அந்த வழக்கு - அந்த வழக்கினுடைய தீர்ப்பு என்ன தெரியுமா?

அந்த வழக்கில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தாமல், பெருபாரியை பாகிஸ்தானுக்கு தானம் செய்து இருக்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. அதற்குப் பிறகாவது, பி. சி. ராயைக் கூப்பிட்டு மத்திய அரசு வருத்தம் தெரிவித்துக் கொண்டதா? இல்லை. என்ன செய்தார்கள்? அப்படியா சங்கதி! திருத்து அரசியல் சட்டத்தை! என்று நாடாளுமன்றத்தில் தீர்மானத்தைக் கொண்டு வந்து அரசியல் சட்டத்தைத் திருத்தி பெருபாரியை பாகிஸ்தானுக்கு தானம் அளித்தது சரிதான் என்கின்ற அளவுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்திக் கொண்டார்களே தவிர, பெருபாரி மேற்கு வங்கத்தின் பகுதி ஆயிற்றே என்ற சிந்தனை அவர்களுக்கு எழவில்லை. அந்த அதிகார ஆணவத்தைத்தான் குறைக்க வேண்டும். அந்த நிலைமையைத்தான் மாற்றவேண்டுமென்று இன்றைக்கு நாம் கூறுகிறோமே அல்லாமல் வேறு அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : பெருபாரி எப்படி இதற்குச் சரியான உதாரணம் என்று தெரியவில்லை. இந்திய நாட்டின் எல்லையை மாற்ற வேண்டுமானால், அல்லது டெரீடரிஸை

எடுத்து மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டுமானால் அதற்கு அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று இருக்கிறது. அந்தக் காரியத்தைச் செய்யாமல் போய்விட்டார்கள் என்பதைத்தான் பி. சி. ராய் அவர்கள் சுட்டிக்காட்டினார்களேயொழிய அது எந்தப் பகுதியிலே இருக்கின்ற இடத்தை எடுத்தார்கள் என்ற பிரச்சினைக்கு அல்ல என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நீங்கள், இருக்கின்ற அதிகாரங்களுக்கு வக்கீலாக இருக்கிறீர்கள். நான் இருக்க வேண்டிய அதிகாரங்களுக்கு வக்கீலாக இருக்கிறேன். அவ்வளவுதான் வித்தியாசம். நீங்கள் இருக்கிற அதிகாரங் களுக்காக வாதாடுகிறீர்கள், நான் அதை மறுக்கவில்லை. ஆனால் மாற்றப்படவேண்டிய அதிகாரங்களைப் பற்றி நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய அக்கறை, கவனம் யாவும் மத்திய அரசுக்கும், நாட்டுக்கும் மொத்தமாக இருந்தது. பி. ஸி. ராய் அவர்கள் ஆஃப்டர் ஆல் எ சீஃப் மினிஸ்டர் ஆஃப் எ ஸ்டேட், அவருக்கு ஒரு மாகாணத்தினுடைய இண்டரெஸ்டுதான். ஆனால் ஒரு நாஷனல் இண்டரெஸ்டில் அந்த டெஸிஷன் வந்திருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தேசபக்தி குறைவானது. அதை எடுத்துக்கொடுத்துவிட்டார் – நாங்கள் தடுத்து நிறுத்திவிடுவோம் என்று சொன்னால், என்ன அவர்களைவிட தேசபக்தி நமக்கு எல்லாம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பி.ஸி.ராய் அவர்கள் சாதாரண ஆள் அல்ல. பி.ஸி.ராய் அவர்கள் நேருவை 'மிஸ்டர் நேரு' என்று அழைக்கக்கூடிய அளவுக்கு வல்லமை பொருந்தியவர் ஆவார். நான் நேரு அவர்களை தாழ்த்திச் சொல்லவில்லை. 'ஆஃப்டர் ஆல் சீஃப் மினிஸ்டர் என்றால் அவ்வளவு சாதாரணமா? கிள்ளுக் கீரையா? சீஃப் மினிஸ்டர் என்றால். . . (கரவொலி).

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பாகிஸ்தானோடு இந்தியா ஒரு முடிவுக்கு வரவேண்டியிருந்தது. இரண்டு நாடுகளின் நன்மையையும் மனதில் வைத்து ஒரு முடிவுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்தார்கள். அப்படி

முடிவுக்கு வந்து பெருபாரி கொடுக்கப்பட்டதால், தேசம் பாழாகி விடவேண்டும். அல்லது பி.ஸி.ராய் அவர்கள் கெட்டுவிட வேண்டும். வங்கம் குறைந்துவிடவேண்டும் என்றா கொடுத்திருப்பார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : பி.ஸி.ராய் 'மை பாய்' என்றுதான் நேரு அவர்களைச் சொல்வார்கள். அவர் வயதில் முதிர்ந்தவர் (கரவொலி).

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மணி ஓசை இந்தப் பக்கம் கேட்கிறது. அதுவும் தங்கமணி ஓசை கேட்கிறது (கரவொலி).

இலங்கைத் தமிழர்கள் பற்றி ஒப்பந்தம் செய்துகொண்டார் களே, யாரைக் கேட்டார்கள்? கேட்டார்களா? எவ்வளவு பேர்களை இன்றைக்கு நாம் சுமந்து தீரவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்? இலங்கைத் தமிழர்கள் இங்கே வருவதிலே நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்களைப் பற்றி ஒரு ஒப்பந்தம் நடைபெறுகிறபொழுது யாரைக் கலந்துகொண்டார்கள்? இந்த மாநிலம் கலந்துகொள்ளப்பட்டதா? ஏதோ போனால் போகிறது? என்று டெல்லிக்கு திரு. ராமையா அவர்கள் போய் தானும் கலந்து கொண்டதுபோல் பாவனை காட்டப்பட்டதே அல்லாமல், யார் மதித்தார்கள்? இல்லை. இப்பொழுது இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையைப்பற்றி நம்முடைய மாநில அரசோடு ஏதாவது கலந்து கொள்ளப்பட்டதா? கச்சத் தீவுப் பிரச்னையில் இந்த மாநில அரசுடன் ஏதாவது கலந்துகொள்ளப் பட்டதா? எங்கேயாவது விருந்துக்குப் போகிற நேரத்தில் இரண்டு மந்திரிகள் சந்தித்துப் பேசுகிறார்கள். கச்சத்தீவு பற்றி "என்ன சௌக்கியமா?" என்று கேட்பதுபோலப் பேசுகிறார்களே அதைத் தவிர, இன்றைக்கு கச்சத் தீவு பிரச்சினை தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சிபூர்வமான ஒரு பிரச்சினை. கச்சத் தீவு உரிமையை விடக்கூடாது என்பது தமிழ்நாட்டு மக்களுடைய ஆழ்ந்த, மிகக் கொள்கைப்பிடிப்பு நிறைந்த ஒரு கோஷமாக இருக்கிறது. அதைப்பற்றி எத்தனையோ செய்திகள் தினம் தினம் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ்நாடு அரசுடன் இதுபற்றிக் கலந்துகொள்ளப்பட்டிருக்கிறதா? இல்லை.

திரு. பி. ஸி. ராய் அவர்கள் நம்முடைய நேருதானே - அம்மையார் அவர்களைவிட பி. ஸி. ராய், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு நெருக்கமானவர் - நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல அவர் அவ்வளவு நெருங்கிப் பழகுகின்ற தன்மை வாய்ந்தவர். நேரு, பி. ஸி. ராய் அவர்களை மிகுந்த பெருமைக்கு உரியவராக்கி வைத்திருந்தார். அந்த பி. ஸி. ராய் அவர்களே, நேருதானே செய்தார், நமது பிள்ளைதானே, நமது பையன்தானே என்று கருதிக்கொள்ளாமல் மாநிலத்தின் உரிமையைக் காப்பாற்றுவதற்கு நான் மத்திய அரசை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் செல்வேன் என்று போர்ப்பறை கொட்டினார்களே அந்த பி. ஸி. ராய் அவர்கள், காங்கிரஸ்காரராக இருந்தவர்தான். இந்த மாநில உணர்ச்சிக்கு வாரிசாக இன்றைக்கு தமிழகத்தில், தமிழ் நாட்டில் தி.மு.க. அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரியப்படுத்திக்கொள்கிறேன். (கரவொலி).

பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரங்களைப் பற்றி மத்திய அரசு நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவருவதற்கு முன்பு இண்டர் ஸ்டேட் கவுன்சிலிலேயும், மாநிலங்களையும் கலக்க வேண்டும் என்று நான் கூறியிருப்பதிலும் எந்தத் தவறும் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கௌரவ மாஜிஸ்ட்ரேட்களைப்பற்றி நம்மைக் கலந்துகொண்டு சட்டம் கொண்டுவரப்படவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட அதைப்பற்றிப் பேசினார்கள். மற்றும் சிலரும் அதைப்பற்றி கூறினார்கள், கௌரவ மாஜிஸ்ட்ரேட்களை ரத்து செய்யக்கூடிய பிரச்சினை இந்த அவையிலே எழுப்பப்பட்டது. மாநில அரசுகளோடு கலந்துகொண்டிருக்கலாம். இதுபோன்ற பிரச்சினைகள் இண்டர் ஸ்டேட் கவுன்சிலுக்கு வந்திருந்தால் ஒவ்வொரு மாநிலத்தின் சார்பாக கருத்துக்களைச் சொல்லியிருக்க முடியும். அதன் காரணமாக இப்பொழுது எடுத்த முடிவு மாறி இருக்க இயலும். இவைகளையெல்லாம்தான் இண்டர் ஸ்டேட் கவுன்சிலில் ஆராய வேண்டும் என்று சொல்கின்றோமே அல்லாமல் வேறு அல்ல.

**திரு. கோவை. செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கச்சத் தீவு சம்பந்தமாக மத்திய அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை,

தமிழகத்தைக் கலக்கவில்லை என்று சொன்னார்கள். அது வேதனைக்குரிய செய்திதான். ஆனால், அதே நேரத்தில் இலங்கையில் இருக்கிற தமிழர்களைக் கொடுமைப் படுத்தினார்கள் என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் - வெளிநாட்டுப் பிரச்சினையைப் பற்றிப் பேசவில்லை. கச்சத்தீவு தமிழகத்திற்குச் சேரவேண்டிய ஒன்று. அதற்காக மத்திய அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : புதுக்கருத்துச் சொல்கிறீர்கள்.

**திரு. கோவை செழியன்** : இதற்காக மத்திய அரசை எதிர்த்து நீங்கள் ஏதாவது போராட்டம் நடத்தினீர்களா? அந்த நேரத்தில் இலங்கையிலிருந்து வந்த பிரதம மந்திரிக்கு நீங்கள் மாலை போட்டு வரவேற்புத் தந்திருக்கிறீர்கள். முடியாது என்று சொன்னால் மத்திய அரசு கழுத்தை வெட்டிவிடுவார்களா? முடியாது என்று ஏன் சொல்லவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்** : நான் கூட அதைத்தான் சொல்ல நினைத்தேன். இலங்கை பிரதமர் வந்தார்கள். அந்த பிரதம அமைச்சரை வரவேற்கவேண்டியது நம்முடைய முதல் அமைச்சர் கடமை. ஆனாலும், தமிழர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், வரவேற்க முடியாது - தமிழ் நாட்டின் சார்பில் பொது மக்கள் கறுப்புக் கொடி காட்டுவார்கள் என்று ஜாடை காட்டி யிருந்தால், அன்றைக்கு திருமதி பண்டார நாயகா அவர்கள் இங்கே இறங்கியிருக்க முடியாது. பிரதமர் அவர்கள் நம்முடைய புண்பட்ட உள்ளத்தைப் புரிந்துகொண்டிருப்பார்கள். அதைச் செய்திருக்கலாமே?

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பி. ஸி. ராய் அவர்கள் தன்னுடைய மாநிலத்தைக் காப்பாற்றுவதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றதுமாதிரி கச்சத் தீவுப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது? அதை சுப்ரீம் கோர்ட்டின் கவனத்திற்குக் கொண்டுபோவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : கச்சத்தீவு பிரச்சினையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மாநில சுயாட்சி தேவை. அதுகூடப் போதாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : மாநில சுயாட்சி இல்லாமல் டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறாரே? அதேமாதிரி நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அவர் நடிவடிக்கை எடுக்கின்ற உணர்வோடு கேட்டாரே தவிர, நடிவடிக்கை வெற்றிபெறவில்லை. அம்மையார் அவர்கள் முழுவதும் கவனிக்காமல் அரைகுறையாகப் பேசுவது நல்லது அல்ல.

(மறுபடியும் திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்திருந்தார்)

லாவணி பாடிக்கொண்டே இருக்கக்கூடாது. நீங்கள் பேசும் பொழுது நான் உட்கார்ந்திருந்த மாதிரி, நான் பேசும்பொழுது நீங்கள் உட்கார்ந்திருக்க வேண்டும்.

தலைவர் அவர்களே, இலங்கைப் பிரதமருக்கு நான் வரவேற்பு அளித்தது சரியா என்று கேட்டார்கள். ஒரு நாட்டினுடைய பிரதமர் வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு மரியாதை காட்டுவது என்பது வேறு, அதே நேரத்தில் நமது உரிமைக்குக் குரல் கொடுப்பது என்பது வேறு. அன்றைக்கே இலங்கையில் நடைபெற்ற பிரச்சினையைக் கண்டித்து, சூழ்நிலைகளை, சம்பவங்களைக் கண்டித்து நான் அறிக்கை விடுத்திருக்கிறேன்.

இந்தியாவுக்கு வருகின்ற ஒருவரை வரவேற்பது நம்முடைய பண்பாட்டைப் பொறுத்த விஷயம். வராதே போ என்று சொல்கின்ற உரிமையை நாம் பெற்றிருக்கவுமில்லை. அந்த நாகரீகத்தை நாம் பெற்றிருக்கவும் இல்லை. அதற்காக இலங்கையில் நடைபெற்ற சம்பவத்தை ஆதரித்துவிட்டதாகவும் அர்த்தம் இல்லை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவோ காரசாரமாகப் பேசுகிறோம், நம்முடைய உரிமைகளைப்பற்றி, இங்கிருந்து தாழ்வாரத்திற்குப் போனதும் இங்கே மோதிக் கொண்ட தோழர்களெல்லாம் எப்படி எப்படி சுமுகமாகப் பழகுகிறார்கள் என்பதை நாம் பார்க்காமலா இருக்கிறோம்.

ஆகவே, பண்பாடு வேறு, ஒருவரை ஒருவர் மதிப்பது என்பது வேறு. நம்முடைய உணர்வுகளைக் காட்டவேண்டிய இடத்தில் காட்டுவது என்பது வேறு.

கச்சத்தீவுப் பிரச்சினையில் நாம் டெல்லியோடு போராட வேண்டுமே தவிர, இலங்கையோடு போராட என்ன சக்தி நமக்கு இருக்கிறது? என்ன உரிமை நமக்கு இருக்கிறது? என்ன அதிகாரம் நமக்கு இருக்கிறது? கச்சத் தீவு பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை, இன்னும் நம்மைக் கலக்கவுமில்லை, இன்றைக்கு இதைப்பற்றி இங்கே பேசியிருப்பது நம்மைக் கலந்து பேசுவதற்கு ஒருவேளை அவர்களுடைய மனதில் அந்த எண்ணத்தை உருவாக்கும் என்று கருதுகிறேன்.

நம்மையும் மீறி கச்சத் தீவு விஷயத்திலே ஒரு முடிவு எடுப்பார்களேயானால், அந்த நேரத்தில் நீங்கள் போராடுவீர்களா என்று என்னைப்பார்த்து அண்ணா தி.மு.க. நண்பர்கள் கேட்பதைவிட, நாம் அனைவரும் சேர்ந்து போராடுவோம், வாருங்கள் என்று விடுக்கின்ற அழைப்பை நான் ஆளும் கட்சி, நீ எதிர்க்கட்சி, நீ அழைத்து நான் வருவதா என்று பிகு காட்டாமல் - அதிகாரத்தை உங்களிடம் கொடுப்பதா என்று நீங்கள் கேட்கிறீர்களே அதைப்போல் கேட்காமல் - நல்ல பிரச்சினைக்கு அழைக்கிறார்களா, வருகிறோம், வரத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் எடுத்துக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (திரு. கோவை செழியன் : நாங்கள் அதற்குத் தயார்.) இதே உணர்வு அங்கும் இருக்கவேண்டும். அதிகாரங்களைக் கொடுங்கள். ஆனால் கருணாநிதி கையிலே கொடுக்காதீர்கள், நாவலரிடம் கொடுக்காதீர்கள், பேராசிரியரிடம் கொடுக்காதீர்கள், மற்றவர்கள் கையில் கொடுக்காதீர்கள் என்று சொல்கிறீர்களே அந்த குறுகிய நோக்கத்திலிருந்து விடுபட்டு 'கூட்டுக்கு வெளியே வா, கிளியே என்று நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

**திரு. கோவை. செழியன்** : தலைவரவர்களே, கிளி கூட்டிலிருந்து பறந்துபோய் 6 மாதம் ஆகிவிட்டது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லக்கூடியதில் வரவேற்கக் கூடிய கருத்து இந்த இன்டர் ஸ்டேட் கவுன்சில் இருப்பது நல்லது. அதில் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். இன்டர் ஸ்டேட் கவுன்சிலில் என்ன என்ன விஷயங்களைப்பற்றிப்

பேசுகிறார்கள்? சீப் மினிஸ்டர்ஸ் கான்பிரன்ஸ் நடக்கிறது. என்னென்ன விஷயங்கள் பற்றி அதிலே விவாதிக்கிறார்கள்? இந்த இந்த சப்ஜெக்ட் பற்றித்தான் விவாதிக்க வேண்டுமென்று ஏதாவது வரையறை செய்திருக்கிறார்களா? நம்முடைய ரூல்ஸ் கமிட்டியிலே வைத்திருப்பதுபோல சீப் மினிஸ்டர்ஸ் கான்பிரன்ஸில் வைத்திருக்கிறார்களா அல்லது வேறுமாதிரி வைத்திருக்கிறார்களா? நாங்கள் உங்களை இடையிடையே மடக்கிக் கேள்வி கேட்பதுபோல நீங்கள் அங்கே பிரதமரை மடக்கிக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறதா? இந்தமாதிரி கச்சாத்தீவு பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாங்கள் உங்களை மடக்கிக் கேட்பதுபோல நீங்கள் பிரதமரை மடக்கிக் கேட்டீர்களா? அதன் விளைவு என்ன என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : கச்சாத் தீவு என்று சொல்கிறார்கள். அது கச்சாத் தீவு அல்ல. கச்சத்தீவு, கச்சா என்றால் ரொம்ப சில்லறை என்று ஆகிவிடும் (குறுக்கீடு). நான் பதிவேட்டுக்காகச் சொன்னேன்; வேறல்ல. அவர்கள் திருத்திக் கொள்வதற்காகச் சொன்னேன்.

கச்சத் தீவைப் பொறுத்தவரையில் நானும் தொழிலமைச்சர் அவர்களும் டில்லிக்குப் போயிருந்தபோது நாங்களே பிரதமரைச் சந்தித்துக் கேட்டோம். அவர்கள் அழைத்துப்பேசவில்லை. போகும்போதோ, வரும்போதோ அதைப்பற்றி எங்களிடத்திலே விவாதிக்கவில்லை. டில்லிக்குப் போயிருந்தபோது நானும் தொழிலமைச்சர் மாதவன் அவர்களும் பிரதமரிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது இதுபற்றிக் கேட்டோம்; அப்போது எங்களுக்கு விவரமான பதில் எதுவும் சொல்லவில்லை. அந்த அளவோடுதான் இருக்கிறது.

முதலமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றி விவாதிக்கப்படு மென்று அவர்கள் வரையறை தருகிறார்கள். நாமும் சில நேரங்களில் அனுப்பலாம். ஆனால் கூடுமானவரையில் நிதிப் பிரச்சினைகள், திட்டங்கள் இவைகள் பற்றித்தான் அங்கே பேசப் படுகின்றனவேயல்லாமல், இதுபோன்ற வெளிநாட்டு உறவு விவகாரங்கள் பற்றியெல்லாம் முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசப்படுவதில்லை.

பாகிஸ்தான் போரின்போது முதலமைச்சர்கள் மாநாடு நடந்து முடிந்தபிறகு, சில முதலமைச்சர்களை அழைத்து, என்னையும் அழைத்திருந்தார்கள், அப்போது நாட்டுப் பாதுகாப்பைப்பற்றி என்னிடம் பேசினார்கள். வேறு எதுவும் பேசவில்லை. அதுவும் அதிகாரப்பூர்வமான மாநாடாகக் கூட நடைபெற இல்லை. ஆகவே, கச்சத் தீவு போன்ற பிரச்சினைகளை எழுப்புவதற்கு வழியிருக்கிறதா இதுபோன்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே, என்பதை இனிமேல்தான் யோசிக்க வேண்டுமென்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

நிதி ஆணைக்குழு நிரந்தரமாக இருப்பதைப்பற்றிச் சில மறுப்புரைகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. நிதிக்குழு நிரந்தரமாக இருந்தால்தான் நன்மைகள் நிறைய உண்டு என்பதை நாம் ஆராய்ந்த பிறகுதான் அந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். நண்பர் ஹாண்டே சொன்னார்கள். நிரந்தர நிதி ஆணைக்குழு இருக்க வேண்டுமென்று நாம் சொன்னதை, சிந்தனை இல்லாமல் தீட்டப்பட்ட ஒரு கருத்து -

Without any thought the whole thing has been drafted, it has been drafted in an illfashioned manner — என்று கூடக் கொஞ்சம் வேகமாக சொன்னார்கள். அந்த நிரந்தர நிதி ஆணைக்குழு இருக்கவேண்டுமென்ற கருத்தை ராஜமன்னார் குழு நிறைய எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்த அர்ச்சனைகள் எல்லாம் அவர்களைப்போய்ச் சேரக்கூடாது என்பதற்காக நான் வாங்கிக்கொண்டாலும் பரவாயில்லை.

ராஜமன்னார் 1965-ம் ஆண்டு நிதி ஆணைக்குழுத் தலைவராக இருந்தபோதே இந்தக் கருத்தை அப்போதே வலியுறுத்தி இருக்கிறார்கள். அந்தக் கருத்தைத்தான் இப்போது இவர்கள் சொன்னார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பல்வேறு பொருளாதார நிபுணர்களும் இந்தக் கருத்தைப் பிரதிபலித்திருக்கிறார்கள். இது ஏதோ புதுமையான ஒரு கருத்து என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஆஸ்திரேலியாவில் இப்படித்தான் "காமன்வெல்த் கிரான்ட்ஸ் கமிஷன்" என்கின்ற இதைப்போன்ற ஒரு நிதிக்குழு நிரந்தரமாக இருக்கிறது.

இப்போது, உதாரணமாக ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், நீங்கள் நிதிக் குழுவைக் கேட்டுச் சரியாக வாதிடவில்லை; நீங்கள்

வாதிடாததால் பணம் வரவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். வாதாடினோமா இல்லையா என்பது வேறு விஷயம். வாதிடவில்லை என்றே வைத்துக்கொள்வோம் வாதத்திற்காக. நிதிக்குழு ஐந்தாண்டுக்கு ஒருமுறை கூடி, இந்த ஆண்டு நடக்கிற தவற்றை ஹாண்டே அவர்களின் அறிவுரைப்படி அடுத்தாண்டு நிதிக்குழு நிரந்தரமாக இருந்தால்தானே அடுத்தாண்டு வாதாடி, தேவையான பணத்தைப் பெறமுடியும். ஐந்தாண்டுக்கு ஒருமுறை நிதிக்குழு கூடி கலைந்துவிட்டால் பிறகு மறுபடியும் ஐந்தாண்டு காத்திருக்க வேண்டும் வாதிடுவதற்கு. ஆகவேதான் அவ்வப்போது இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து நிதி நிலையிலுள்ள தேவைகளுக்கேற்ப நம்முடைய கோரிக்கையை எடுத்துச்சொல்லி பரிசீலிப்பதற்கு ஏற்ற வகையில் நிதி ஆணைக்குழு நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று நாங்கள் எடுத்துக்காட்டியிருக்கிறோமே அல்லாது வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : ஒரே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் நிதி ஆணைக்குழு நிரந்தரமாக இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. என்னுடைய நோட்ஸில் கூட குறித்து வைத்திருக்கிறேன். நான் சொன்னது,

"In respect of loans and indebtedness of States there should be a Federal Debt Commission. I personally prefer a permanent Finance Commission. I agree with the Chief Minister that we should have a permanent Finance Commission. We have not got the relief even with a Finance Commission". அதற்காகத்தான் 'தாட்லெஸ்' என்று சொன்னேன். சரியான வகையிலே ஒரு பெர்மனன்ட் பைனான்ஸ் கமிஷன் இருக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற கமிஷனால் நமக்குச் சரியான வகையில் பாதுகாப்புக் கிடைக்கவில்லை. 'லோன்ஸ் அண்டு இன்டெட் டெனெஸ்' என்று கேட்டும் அந்தப் பணத்தை பைனான்ஸ் கமிஷன் தரவில்லையே என்பதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : இப்போது இருக்கிற முறையில் 'பெடரல் டெட் கமிஷன்' தேவைப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் எப்படி நிரந்தர நிதி ஆணைக் குழு இருக்கிறதோ அதைப்போலவே ஆஸ்திரேலியாவின் 'லோன்ஸ் கவுன்சில்' என்கின்ற ஒரு குழுவும் அங்கே

இருக்கிறது. அதைத்தான் 'பெண்டாஸ்டிக்' என்று சொன்னார்கள். பெடரல் டெட் கமிஷன் தேவையில்லை என்பது அவர்கள் வாதம். ஆனால் நாங்கள் சொல்கிற பெடரல் கமிஷன் மாநிலங்கள் மத்திய அரசிடம் பட்டிருக்கிற கடன்களுக்கு எல்லாம் ஒரு நிரந்தரமான பரிகாரத்தைக் காணக்கூடியதாக இருக்க வேண்டும்; பிறகு அந்தக் குழு தேசிய வளர்ச்சிப் பணிகளுக்காகத் தன்னை மாற்றிக்கொண்டு செயல்பட வேண்டும். இதுவும் புதுமை அல்ல. ஆஸ்திரேலியாவில் 'லோன்ஸ் கவுன்சில்' என்ற பெயரால் 'பெடரல் டெட் கமிஷன்' இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இந்திய சர்வீஸ் வேண்டாமென்று சொல்வது ஏன் என்று கேட்டார்கள். ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். இருப்பது போல அண்ணா அவர்கள் காலத்திலே அகில இந்தியப் பணியாக - அகில இந்திய என்சினியர் பணி (ஐ. இ. எஸ்.) - இந்தியன் எஞ்சினீயரிங் சர்வீஸ் - வேண்டும் என்று அவர்களிடத்திலே பொறியியல் துறையினர் எல்லாம் தூதுகூட வந்தார்கள். அதைப்போலவே அகில இந்திய மெடிக்கல் சர்வீஸ் வேண்டும் என்று அண்ணா அவர்களிடம் சொன்னார்கள். அதற்கு மத்திய சர்க்கார் தமிழக அரசிடம் அபிப்பிராயம் கேட்டபோது, அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அகில இந்திய என்சினியரிங் சர்வீஸை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அதைப்போலவே அகில இந்திய மெடிக்கல் சர்வீஸையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். அண்ணா அவர்களோடு அந்தத் தொல்லை முடியவில்லை. மத்திய அரசு இப்போதும் அடிக்கடி அதைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்சினீயரிங் சர்வீசையும், மெடிக்கல் சர்வீசையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நம்மைக் கேட்டு, மத்திய சர்க்கார் வலியுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

ரயில்வேயைப் பற்றிச் சொன்னார்கள். இன்டர் ஸ்டேட் ரயில்வேக்கள் - மாநிலங்களுக்குள் ரயில்வே என்றால் ஏதோ கல்கத்தாவிலிருந்து ஹௌரா ரெயில் தினந்தோறும் சென்னைக்கு வரும். இது எப்படி சாத்தியமாகும் என்று ஹாண்டே அவர்கள் தனக்கே உரிய கேலியுடன் அப்போது சொன்னார்கள். கேலி, கண்டனம், ஏசல், இழிமொழி, குப்பைக்கூடை, திருடன், கொலைகாரன் - இப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் அடிக்கடி

அந்தப் பக்கத்தில் இருந்து இப்போது வந்துகொண்டிருக்கின்றன. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று அண்ணா சொன்ன பொன்மொழியை மனத்திலே வைத்து, அதையெல்லாம் தாங்கிக் கொண்டுதான் இந்தப் பதிலை அளித்துக்கொண்டிருக்கிறேன்.

இது ஒன்றும் ஏதோ மாநில அளவில் ரயில்வே - இன்டர் ஸ்டேட் ரயில்வே மோதிக்கொள்ளும் கருத்து அல்ல. இதெல்லாம் மோதிக்கொள்ளக் கூடிய கருத்துக்கள் என்று கூறப்படுமானால், நான் அவர்களுக்குச் சொல்வேன், பாண்டிச்சேரியும் காரைக்காலும் பிரெஞ்சு காலனியாக இருந்தபோது தினசரி ரயில் போய் வந்துகொண்டுதான் இருந்தது. மாநில சுயாட்சி வந்து விட்டால் இந்த ரயில் அங்கே போகுமா? அந்த என்ஜின் இங்கே போகுமா? என்றெல்லாம் கேட்கவேண்டியதில்லை.

'ட்ரான்ஸ் - காண்டினன்ட்டல் ரயில்வே' இருக்கிறது. அது பாரிசிலிருந்து புறப்பட்டு ரஷியாவில் உள்ள விளாடிவாஸ்டாக் வரையில் போய் வருவதாகக் கேள்விப்படுகிறேன். நான் போனதில்லை. நான் பல நாடுகளுக்குப் போயிருக்கிறேன். ஆனால் ரஷியாவுக்கு இன்னும் போகவில்லை. அப்படிப் போவதாக படித்து இருக்கிறேன்.

**திரு. கோவை செழியன்** : நம்முடைய தங்கமணி அவர்கள் இருக்கிறார்களே, அவர்களைக் கேட்டால். . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாநிலத்திற்கு மாநிலம் கூட அல்ல; பல நாடுகளைக் கடந்து அந்த ரயில் போய் வருகிறது. ஆகவே இங்கே ரயில்வேயைப் பொறுத்தவரையில் கருத்துக் குழப்பம் ஏற்பட வேண்டியதில்லை.

[டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார். . . .]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : குறுக்கீடு இருக்கலாம். ஆனால் எடுத்ததெற்கெல்லாம் ஒவ்வொரு முறையும் குறுக்கீடு இருந்தால் நல்லதல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : நான் விளக்கம் பெறுவதற்காகக் கேட்கிறேன். அது திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. என் வாதத்திலே, ஒரே நாடாக இருக்கிறது. ஒரே நாடாக இருந்த காலத்தில் அங்கே இண்டர் ஸ்டேட் ரயில்வேஸ் ஒரு கம்பெனியாக இருந்தது. இவர் சொல்லுவது வேறு, வேறு நாடாக இருக்கக் கூடிய

அந்த இடத்திலே கூட ஒரே ரயில்வே கம்பெனிதான் இருக்கிறது. இங்கே அந்தக் கஷ்டம் கிடையாது என்று சொல்லுகிறேன். In fact, he is strengthening my argument. My argument is with a number of countries when one train can look after, here we have only different States, why not one train look after.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : இங்கேகூட பல கம்பெனிகளுடைய பஸ்கள் இருக்கின்றன. இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்குப் பஸ்கள் போகின்றன. பாண்டிச்சேரிக்குப் போகிறது, ஆந்திராவுக்குப் போகிறது. ஆந்திராவிலிருந்து பஸ் இங்கே வருகிறது. ஏற்கெனவே ரயில்வே கூட டிஸ்டிரிக்ட் போர்டு அளவில் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் குழப்பமடையக்கூடிய அளவுக்கு பெரிய பிரச்சினை இல்லை என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிறது, விரைவில் முடிக்க வேண்டுமென்று தங்கள் அனுமதியோடு மேலே பேசுகின்றேன்.

மத்திய அரசு, மாநில அரசைச் சுரண்டுகிறது என்ற மிக முக்கியமான வாதத்தை நாம் அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வேன். மத்திய அரசிடம் திரண்ட நிதி ஆதாரங்கள் இருக்கின்றன. கொழுத்த வருமானங்களைக் கொடுக்கக்கூடிய வரி அமைப்புகளெல்லாம் அவர்களுடைய கையிலிருக்கின்றன. நண்பர்கள் ஆலடி அருணா அவர்களும், கந்தப்பன் அவர்களும், கணேசன் அவர்களும், பழனிவேல் ராஜன் அவர்களும் பேசுகின்ற நேரத்தில் அவைகளையெல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். நேற்றைய தினம் நம்முடைய நாவலர் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையிலும் அதுபற்றிக் குறிப்பிட்டார்கள்.

இதற்கு என்ன காரணமென்றால் 1935-ம் வருட சட்டத்தை அப்படியே பெரும்பாலும் காப்பி அடித்திருக்கின்ற காரணத்தினால் தான் நாம் இந்தச் சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறோம். வேறு சில விஷயங்களிலே சில மாற்றங்களை 1935-ம் ஆண்டு சட்டத்தில் செய்திருந்தாலும் கூட, நிதி உறவுகளைப் பொறுத்த வரையில் எந்தவிதமான மாற்றமும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் செய்திருக்கிற ஒரே ஒரு மாற்றம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதிக் குழு ஏற்படும் என்பதுதான். இதைத்

தவிர மத்திய, மாநில நிதி உறவுகளைப் பொறுத்தவரையில், கொச்சையாகச் சொல்ல வேண்டுமானால், ஈயடிச்சான் காப்பி என்று சொல்லுவார்களே அதைத்தான் செய்திருக்கிறார்கள்.

1935ஆம் ஆண்டு சட்டம் எந்தச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டது? அப்பொழுது நடைபெற்றது போலீஸ் ராஜ்யம். ஆகவே, அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்கள் வகுக்கப்பட்டன, வரைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால், இப்பொழுது நடப்பது வெல்பேர் ஸ்டேட். மக்கள் சேமநல சர்க்கார் என்று சொல்கின்றோம். ஆகவே, போலீஸ் ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மாற்றங்கள் ஒரு வெல்பேர் ஸ்டேட்டுக்குப் பொருந்தும் என்று வாதிப்பது சரியானதல்ல. மத்திய அரசு திரண்ட நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, மாநிலங்களை ஆட்டிப்படைக்கிறது.

மாநில முதலமைச்சர்கள் பிச்சைப் பாத்திரங்களோடு அடிக்கடி டெல்லிக்குச் செல்லவேண்டிய நிலையிருக்கிறது என்று நானல்ல, மைசூர் முதலமைச்சராக இருந்த வீரேந்திர பாட்டில் பதவியில் இருந்தபோதே இதைக் குறிப்பிட்டார்.

மத்திய அரசினிடத்தில் இருக்கிற பணம் யாருடைய பணம்? மக்கள் தருகின்ற பணம். மாநில அரசுகளின் வாயிலாகப் போய்ச் சேருகின்ற பணம். அந்தக் கணக்கைக் கொஞ்சம் பார்த்தால், மத்திய அரசுக்கு வருமான வரி, எக்சைஸ் வரி, எஸ்டேட் வரி இப்படிப்பட்ட வரிகளின் மூலமாகப் பணம் வசூலாகிறது.

சிறு சேமிப்பு மூலம் மத்திய அரசுக்குப் பணம் கிடைக்கிறது. அதிலே ஒரு பகுதி மாநில அரசுக்குத் திருப்பித் தரப்படுகிறது. கூட்டுறவு வங்கி உட்பட வங்கிகள் மூலமாகவும், இன்சூரன்ஸ் மூலமாகவும், பிராவிடண்ட் பண்ட் மூலமாகவும் மத்திய அரசு கடன் பெறுகிறது. இந்த இனங்களெல்லாம் சேர்ந்ததுதான் மத்திய அரசின் வருமானம்.

இப்பொழுது மாநில அரசுகளின் வருமானத்தைப் பார்த்தால், தாங்களே வசூலிக்கும் வரி, மாநில அரசுகள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்குப் போதவில்லை. அரசியல் சட்டப்படி வருமான வரி, எக்சைஸ் வரி ஆகியவைகளில் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு ஒரு பங்கு கொடுக்கிறது.

ஆனால், இப்பொழுது நான் சொல்லுகின்ற கணக்குப்படி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1974-75-ல் மாத்திரம் தமிழ் நாட்டிலேயிருந்து மத்திய அரசுக்கு மக்கள் தருகின்ற தொகை 356.75 கோடி ரூபாய். இவற்றில் வரிகளில் பங்குத் தொகையாகத் திருப்பித் தரப்படுகின்ற தொகை 73.75 கோடி ரூபாய். சிறுசேமிப்பின் மூலம் 1974-75-ல் தமிழ்நாட்டில் வசூலாகயிருக்கிற தொகை 14.58 கோடி. அதிலே திரும்பி வருவது 8.75 கோடி. மீதித் தொகையை மத்திய அரசே வைத்துக்கொள்கிறது.

வங்கிகளின் மூலம், இன்சூரன்ஸ் மூலம், பிராவிடண்ட் பண்ட் மூலம் மத்திய அரசு தமிழ் நாட்டிலே கடன் எழுப்பப் போகிற தொகை 24.6 கோடி ரூபாய்.

வருவாய் இனத்தைப் பார்த்தால் 1974-75-ல் திட்டத்திற்கான மானியம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கப்போகிற தொகை 29 கோடி ரூபாய்.

திட்டமில்லாத மானியமாக கிடைக்கப்போகிற தொகை 20 கோடி.

நேரடியாக மத்திய அரசு தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் போவது 111 கோடி.

ஆக, 1974-75-ல் மத்திய அரசு தமிழ்நாட்டிலிருந்து பெறப் போகிற மொத்தத் தொகை 395.43 கோடி. இதிலே நமக்கு வந்தது போக இந்த ஆண்டிற்கு மாத்திரம் தங்கப்போகிற தொகை 153.43 கோடி ரூபாய். அந்த அளவிற்கு தமிழ் நாட்டின் பணம் மத்திய அரசிலே தங்கிவிடப்போகிறது. இவ்வாறு அங்கே தங்கப் போகிற தொகை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 732½ கோடியாக இருக்கும். அடுத்த 10 ஆண்டுக் காலத்தில் இந்தத் தொகை 1,748.58 கோடி ரூபாயாக இருக்கும். இந்தப் பணம் தமிழ் நாட்டிலேயிருந்தால் - ஒரு கணம் எண்ணிப்பாருங்கள் - நான் அதற்காக தமிழ் நாடு தனியாக ஆகவேண்டும் என்ற அடிப்படையிலே இந்தக் கேள்வியை எழுப்புவதாக அர்த்தமல்ல, தனி நாடு கேட்பதாக அர்த்தமல்ல. இதை மனத்தில் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புச் செலவுக்கு மத்திய அரசிடம் பணம் வேண்டாமா? வேண்டும். பாதுகாப்புச் செலவுக்கு எவ்வளவு பணம்

தேவையோ அதை மாநில அரசு கணக்கிட்டுத் தரும் என்று டாக்டர் பி. சி. ராய் அப்பொழுதே சொல்லியிருக்கிறார். அதற்குத் தேவையான பணத்தைத் தரலாம். 10 ஆண்டு காலத்தில் மத்திய அரசு சுமார் 1,700 கோடி ரூபாய் தமிழ்நாட்டுப் பணத்தை வைத்துக் கொள்ளப் போகிறது.

அண்மையில் சச்சிதானந்த சின்கா என்ற ஓர் ஆசிரியர் எழுதிய ஒரு புத்தகத்தில் சொல்லுகிறார், மாநிலங்களின் நிலைமையையும் மத்திய நிலைமையையும் ஒப்பிட்டுப் பேசும்போது உள்நாட்டுக் காலனிகளாக இருக்கின்றன. இன்டர்னல் காலனி என்று இந்த மாநிலங்களின் நிலைமைகளை சச்சிதானந்த சின்கா என்பவர் அந்தப் புத்தகத்தில் வருணிக்கிறார்.

ஆகவே, இந்த உள்நாட்டுக் காலனி நிலைமை இருக்கலாமா? 10 ஆண்டுக் காலத்தில் 1,700 கோடி ரூபாயை மத்திய அரசிடம் ஒப்படைத்துவிட்டு, மாநில அரசு நம்முடைய வளத்தைப் பெருக்குவதற்கு வாட்டத்தோடு, வருத்தத்தோடு உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டுமா? இந்த உள்நாட்டுக் காலனி முறை ஒழிக்கப்பட வேண்டாமா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுப் பணம் 1700 கோடி ரூபாய் மத்திய அரசுக்குச் செல்லுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாதுகாப்பிற்காக ஆண்டு ஒன்றுக்கு 3,000 கோடி செலவழிப்பதாக அறிகிறேன். அதிலே நம் பங்கு 1,700 கோடியாக இருக்கலாம். இதில் நம் பங்கு என்ன? 10 ஆண்டுகளில் நமக்குக் கிடைக்கக்கூடிய மிச்சம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அதற்காகத் தான் எல்லாவற்றையும் அங்கே கொடுத்துவிட்டு, மறுபடியும் நாம் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, இந்த இரண்டு வழி போக்குவரத்துக்குப் பதிலாக, கொடுக்கும்போதே எங்களுக்கு எவ்வளவு, உங்களுக்கு எவ்வளவு என்று நாம் கொடுத்து விடலாம். கொடுக்கின்ற அதிகாரத்தை நாம் வைத்திருக்கலாம் என்பதுதான் மாநில சுயாட்சியின் தாத்பர்யம். அங்கே கொடுத்து விட்டு, மறுபடியும் நீ எங்களுக்குப் பங்குப்போட்டுக் கொடு என்பதைவிட பின்தங்கிய மாநிலங்கள் என்று கஷ்டப்பட்டாலும்

கூட அதையும் கணக்கிலேகொண்டு மத்திய சர்க்காருக்குப் பணம் தேவைப்பட்டால் எவ்வளவு பணம் தேவை என்பதையும் கருத்திலே கொண்டு, இந்த மாநில சுயாட்சி அடிப்படையிலே அளிக்கலாம் என்பதுதான் நம் கருத்து என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

விரிவாகச் சொல்ல வேண்டுமானால் மத்திய அரசு இன்றைக்கு ஒரு கண்ணுக்குத் தெரியாத மாய அரசாக இருக்கிறது. அதனுடைய நடவடிக்கையின் விளைவுதான் நம் கண்ணுக்குத் தெரிகிறதே தவிர, அதன் வலிமையான கரங்கள்தான் நமக்குத் தெரிகின்றனவே தவிர, மத்திய அரசு என்பது பாமர மனிதன் கண்ணுக்குத் தெரியவில்லை.

மத்திய அரசு எப்பொழுது தெரிகிறது என்றால் பட்ஜெட் வாரத்தில் பாமர மனிதனுக்குத் தெரிகிறது. அதைத்தவிர மற்ற நேரங்களில் மத்திய அரசு தெரிவதில்லை. பணக்காரர்கள், தொழில் அதிபர்கள், மத்திய அரசின் வருமான வரிக் கொள்கையை நம்பியிருக்கின்றவர்கள் அவர்களெல்லாம் அடிக்கடி டெல்லி செல்லுகிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு தெரிகிறது. பாமர மனிதனுக்கு பட்ஜெட் நேரத்தில்தான் மத்திய அரசு தெரிகிறது. பாமரனுக்கு மத்திய அரசின் பிரதமரைத் தெரியும். பட்ஜெட் வாரத்தில் நிதியமைச்சரைத் தெரியும். அதைத் தவிர மற்றவர்கள் நெருக்கமானவர்கள் அல்ல.

பாமர மனிதனுக்குக் கோபம் வந்தால் ரெயில்வே தெரியும். இதைத் தவிர மத்திய சர்க்காரைப் பற்றி மாநிலத்திலிருக்கிற பாமர மனிதன் அறிந்து கொள்கிற வாய்ப்பை பெற்றிருக்கவில்லை.

ஆகையினால்தான் மத்திய அரசு நெடும் தூரத்தி லிருக்கிறது. மக்களுடைய சுக துக்கங்களைப் பற்றி சிந்திக்கின்ற இடத்தைத் தாண்டி வெகு தொலைவில் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் துறைகள் குறைக்கப்பட்டு மக்களோடு தொடர்பு கொண்டிருக்கிற மாநில அரசுக்கு அதிகாரங்கள் மிகைப்படுத்தப் பட்டு வலுவுக்குத் தேவையான அதிகாரிகள் அங்கே வைக்கப் பட்டு, வளத்தைப் பெருக்குவதற்கு அதிகாரங்கள் இங்கே வைக்கப்பட்டு, அதிகாரங்கள் கொடு என்று சொல்லுகிறார்கள். அதிக அதிகாரங்கள் தேவை என்று சொல்லுகிறார்கள்.

நாம் கேட்கின்ற மாநில சுயாட்சியிலே என்ன - ஒரே ஒரு சிறிய வேறுபாடு என்னவென்றால் அதிகாரங்கள் கொடுத்தால் திரும்ப எடுத்துக்கொள்கிற உரிமை அவர்களுக்கு உண்டு. மாநில சுயாட்சியிலே அது அல்ல. அதிகாரங்கள் கொடுத்து விட்டால் மறுபடியும் தொட முடியாது, அவர்கள் அந்த அதிகாரங்களை, அதுதான் மாநில சுயாட்சிக் கொள்கை. அதிகாரங்கள் கொடு என்று சொன்னால் கொடுத்து, அதிகாரங்களைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியும். ஐந்தாறு உதாரணங்களை நான் சொன்னேன், கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் எப்படி எப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன என்று.

ஆகவேதான் மாநில சுயாட்சிக் கொள்கையில் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் எடுத்துக் கொள்ளப்பட முடியாது என்பதுதான் நம்முடைய கருத்து. அந்த அடிப்படையிலேதான் மாநில சுயாட்சியை நாம் கோருகின்றோம்.

இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு தேடவேண்டுமென்பது நம்முடைய நோக்கம் அல்ல. இந்தியாவின் ஒற்றுமையையே இன்றைக்கு நாம் பிரதானமாகக் கருதுகிறோம்.

இந்தியாவின் வலிமையை - இந்தியாவின் பாதுகாப்பை - இந்தியாவின் பலத்தை - இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு அக்கறையோடு கவனிக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் - நான் என்னுடைய தீர்மானத்தின் முன்னுரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல் - போர்மேகம் இந்தியாவைச் சூழ்ந்த நேரத்தில் - பங்களா தேஷ் பிரச்சினையின்போது இந்தியப் பிரதமரை அழைத்து 6 கோடி ரூபாய் யுத்த நிதிக்காகக் கொடுத்த ஒரே ஒரு மாநிலம் இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற தமிழ்நாடுதான். தென்னிந்தியாவில் இந்த அளவுக்கு வேறு எந்த மாநிலமும் அதிகம் தரவில்லை. லட்சக் கணக்கில்தான் தந்தார்கள். சில லட்சங்கள் அல்ல - நாம் 6 கோடி ரூபாய் போர் நிதிக்காகத் தந்தோம். நாடு நலம்பெற வேண்டுமென்று போராட்ட வீரர்களுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் தரவேண்டுமோ அவ்வளவு ஊக்கமும் தந்தோம். ஆகவே, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு நாம் என்றைக்கும் எதிரிகள் அல்ல - நாம் பிரிவினைவாதிகள் அல்ல. இதை அழுத்தந்திருத்தமாக ஆயிரம் முறை சொல்லி விட்டோம்.

யாருடைய தேசபக்திக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் தேசபக்தி எள்ளளவும் - இம்மியளவும் குறைந்தது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இன்றையதினம் நிறைவேற்றப்பட இருக்கிற இந்தத் தீர்மானம் சரித்திர பிரசித்திபெற்ற தீர்மானம். திரு. பழனிவேல் ராஜன் சொன்னதைப்போல சுடர்விளக்கை ஏற்றி வைத்திருக்கிறோம். நம்முடைய மணலி அவர்கள் சொன்னதைப் போல இது எந்த ஒரு கட்சிக்கும் உரிய தீர்மானம் அல்ல. தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும் - இந்தியாவில் இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும் உரிய தீர்மானம். இதை ஒரே கட்சிக்கு என்று எடுத்துக்கொண்டு, இதை எங்கள் கட்சிக்கு உரியது என்று நாங்கள் வாதிட மாட்டோம். நான் மணலி போன்ற பெரியவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன் - இது அனைவருக்கும் பொதுவான தீர்மானம்.

தமிழ்ச் சமுதாயத்தைக் காக்க - இந்தியாவிலுள்ள தேசிய இனங்களைக் காக்க இந்தியாவிலுள்ள மாநிலங்களின் உரிமைகளைக் காக்க இந்தியாவிலே இருக்கிற மாநிலங்கள் சுய மரியாதையோடு வாழ இந்தத் தீர்மானம் மெத்தவும் பயன்படும்.

பொருளாதாரத்திலே வளமும் - சுயமரியாதைத் தன்மையிலே தன்னிகரற்ற நிலையும் - விட்டுக்கொடுத்துப் போகின்ற நேரத்தில், மத்திய சர்க்காருக்கு அடிமைகளாக இருக்க மாட்டோம். உறவுக்குக் கை கொடுப்போம் - அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்கின்ற அளவிலேதான் மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி என்ற முழக்கத்தை - பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் - நான் இந்த மாமன்றத்தில் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நீங்கள் எல்லாம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.



## கச்சத்தீவு பிரச்சினை

**உரை : 18** **நாள் : 21.08.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ் நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி அவையிலே பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். கச்சத் தீவு இலங்கைக்கு அளிக்கப்படக் கூடாது, தமிழ் மக்கள் அதை விரும்பமாட்டார்கள் என்பதைப்பற்றி பல நேரங்களில் மத்திய பேரரசுக்கு தமிழக அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. நடைபெற்ற ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் இந்தியா கச்சத் தீவை விட்டுத்தருவது கூடாது என்ற கருத்து தமிழக அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும், அதற்கு மாறாக ஏற்பட்டுவிட்ட இந்தச் சூழ்நிலையில் உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கும் இந்தியப் பிரதமருக்கும் நாம் அனுப்பி வைத்தோம். இப்போது இந்தச் சட்டப்பேரவை மூலமாக ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பிவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்க

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உறுப்பினர்களுடைய கருத்துரைகளுக்கு பிறகு நான் ஏதாவது சொல்ல வேண்டுமென்றிருந்தால் இறுதியாகச் சொல்கிறேன் என்று கூறி இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிகிறேன்.

பிரதமர் என்னை அழைத்து ஒரு வார்த்தை கேட்க வில்லை என்று சொல்லியிருக்கிறேன். என்னை அழைத்துக் கேட்கவில்லை. நான்தான் பிரதமர் அவர்களைச் சந்தித்து கச்சத்தீவு பற்றிச் சொன்னேன். அதற்கிடையில் செயலாளர் பேசினார். ஒரு விருந்தில் வெளிநாட்டு அமைச்சர் பேசினார். இதைப்போல் ஒப்பந்தம் செய்துகொள்ளப்போகிறோம் என்று சொல்லவில்லை. ஏற்கெனவே இருநாடுகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது அன்று தமிழகத்தில் அமைச்சராக இருந்த ராமையா அவர்களை அழைத்து அன்று இருந்த பிரதமர் டில்லியில் வைத்து கலந்து கொண்டார்கள். இப்போது யாரையும் கேட்கவில்லை என்று சொல்வது தவறாகாது. கேட்கத்தான் இல்லை.

**திரு. ஆலடி அருணா** : அவர்களை ஆலோசனை கேட்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது பிரதமர் கேட்கவில்லை, அல்லது வேறு யாரும் கேட்கவில்லை. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, நான் ஒவ்வொரு முறையும் பிரதமரைச் சந்தித்த பிறகும் சரி, செயலாளர் கேவல் சிங்கை சந்தித்தபிறகும் சரி, நிருபர்களை சந்தித்து என்ன பேசினேன், எந்த அடிப்படையில் உணர்வுகளை தெளிவுபடுத்தினேன் என்பதை சொல்லி யிருக்கிறேன். பத்திரிகைகளிலும் அவ்வப்போது அவை வெளிவந்து இருக்கின்றன.

**திரு. ஆலடி அருணா** : ஏற்கெனவே முதலமைச்சர் சொன்னார்கள். நானும், சட்ட அமைச்சர் அவர்களும் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசினோம். பிறகு, தங்களை யாரும் கலந்து ஆலோசிக்கவில்லை என்று மத்திய சர்க்காருக்கு எதிராக வாதிட்ட பிறகு, முதலமைச்சர் அவர்களின் வாதத்தைக் கொண்டு அவர்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. எஸ். எஸ். மாரிசாமி நாடாளுமன்றத்தில் பேசினார்கள். நாடாளுமன்ற மேலவையில் பேசும்போது என்ன சொன்னார்கள்?

It was rather strange that the Centre had neither consulted the Chief Minister of Tamil Nadu nor replied to the letter he wrote to the Prime Minister on the subject, before signing the agreement என்றுதான் திரு. மாரிசாமி அவர்கள் பேசினார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கன்ஸல்டே பண்ணவில்லை என்று சொன்னார். இப்பொழுது என்ன சொல்கிறார் என்றால் நான் "கன்செண்ட்" கொடுக்கவே இல்லை என்று கூறுகிறார். இந்த வாதத்தை ஏன் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது? என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : கிட்டத்தட்ட ஓராண்டு காலத்தில் நிருபர்களிடம் நான் அவர்களைச் சந்தித்ததைப் பற்றியும், என்ன பேசினேன் என்பதைப்பற்றியும் ஒவ்வொரு முறையும் சொல்லியிருக்கிறேன். அவ்வப்பொழுது அதுபற்றி பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா** : ஆலோசனை நடத்துவது வேறு. முதல் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். உங்களைக் கூப்பிட்டு ஆலோசனை நடத்தினார்களா, இல்லையா? சந்திப்பது என்பது வேறு, பேச்சுவார்த்தை என்பது வேறு, ஆலோசனை என்பது வேறு, உரையாடல் என்பது வேறு என்று பிட்டுப் பிட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி இலக்கணத்தை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துகிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பிரதமர் என்னை அழைத்து இதைப்பற்றி ஆலோசனை நடத்தவே இல்லை.

**திரு. ஆலடி அருணா** : மத்திய அரசு உங்களோடு ஆலோசனை நடத்தியதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : செயலாளர் கேவல் சிங் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபொழுது இதைப்பற்றி அவர் என்னிடம் பேசினார். இதை ஆலோசனை என்று வைத்துக்கொண்டாலும் கூட, நான் அவர்களிடம் சொன்னது "தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளாது, கச்சத்தீவு இந்தியாவுக்கே, தமிழகத்துக்குச்

சொந்தமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துச்சொல்லி, மறுநாள் பிரதமரைச் சந்தித்த பொழுதும் இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். பின்னர் நிருபர்களைச் சந்தித்தபோதும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். ஜனவரி மாதத்தில் மேலவையில் பேசும்போதும் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. ஆலடி அருணா** : ஸ்வரண்சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியதை துணைச்சபாநாயகர் அவர்களின் அனுமதியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

The External Affairs Minister Shri Swaran Singh said in Rajya Sabha today that very detailed consultations had been held with Chief Minister of Tamil Nadu Mr. Karunanidhi by the Government of India on the issue of Kachatheevu.

சாதாரண கன்ஸல்டேஷன் அல்ல, 'டீடைல்டு கன்ஸல்டேஷன்'

The consultations were held at least twice.

'அட்லீஸ்டு ட்வைஸ்' என்றுகூட சொல்லியிருக்கிறார்கள், குறைந்தபட்சம் இரண்டு முறை நாங்கள் கன்ஸல்டேஷன் பண்ணியிருக்கிறோம் அதுவும் டீடைல்டு 'கன்ஸல்டேஷன்' அதுவும் மிகத்தெளிவாக, விரிவாக அவர்களோடு கலந்து ஆலோசனை நடத்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், தன்னைக் கேட்கவே இல்லை. ஒரு வார்த்தைகூட கேட்கவே இல்லை. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அதற்கும் நான் விளக்கம் அளித்துவிடுகிறேன். ஸ்வரண்சிங் அவர்கள் சொல்லுகிறார்கள் :

May I say because others might pick up - I would like to say categorically that we had very detailed consultation with the Chief Minister Shri Karunanidhi of Tamil Nadu not once but at least two times. உடனே ரபிராய் என்ற உறுப்பினர் எழுந்திருந்து Has he agreed? என்று கேட்டார். உடனே அமைச்சர் ஸ்வரண்சிங் அவர்கள் சொல்கிறார் : The point raised was about consultation என்று சொல்லி தந்திரமாக தப்பித்துக் கொள்கிறார்கள். பிறகு வலம்புரி ஜான் அவர்கள் சொல்கிறார் :

It is not a question of consultation but registration of protestations of my beloved leader Dr. Karunanidhi. It is not the end of the problem. It is the beginning of the problem. That is the tragedy என்று ஜான் அவர்கள் பேசி முடிக்கிறார்கள்.

**திரு. ஆலடி அருணா** : தந்திரமாகப் பேசி தப்பித்துக் கொள்வது சுவரண் சிங் அவர்கள் அல்ல. தந்திரமாகப் பேசி தப்பித்துக்கொள்வது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தான். கன்ஸல்டேஷன் இல்லை என்று சொல்லிவிட்டு, கன்செண்ட் இல்லை என்று இப்பொழுது சொல்கிறார்கள். எங்களுடைய வாதம் அது அல்ல. நீங்கள் கன்ஸல்டேஷன் இல்லை என்று முதலில் சொன்னீர்கள். இப்பொழுது கன்செண்ட் இல்லை என்று சொல்கிறீர்கள். நாங்கள் சொல்கிறோம். கன்ஸல்டேஷன் இல்லை என்று நீங்கள் முதலில் வாதித்ததற்குக் காரணம், திரை மறைவில் கன்செண்ட் கொடுத்திருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அது உண்மைக்குப் புறம்பானது. அவதூறானது. வேண்டுமென்றே அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகச் சொல்வது. நான் சொல்கிறேன், பிரதமர் அவர்கள் என்னை அழைத்து இதைப் பற்றி ஆலோசனை நடத்தவேயில்லை. நான் பிரதமரைச் சந்தித்த பொழுது கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்துவிடக்கூடாது என்று அவர்களிடம் சொன்னேன். அப்படிக் கொடுப்பதை தமிழக அரசு ஒத்துக்கொள்ளாது என்று சொன்னேன். மத்திய அரசு மந்திரி எவரும் என்னிடம் இதைப்பற்றி ஆலோசனை நடத்தவில்லை. இரண்டு முறைகள் கேவல் சிங் அவர்கள் என்னைச் சந்தித்தார். ஒருமுறை டெல்லியிலும் இன்னொரு முறை சென்னையிலும் சந்தித்தார். டெல்லியில் சந்தித்தபொழுது நான் அவர்களிடம் கச்சத்தீவை இலங்கைக்கு அளிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக மறுத்துக் கூறியிருக்கிறேன். உடனே நிருபர்களிடமும் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். பிரதமர் அவர்கள் என்னை அழைத்து இதைப்பற்றி ஆலோசனை நடத்தவே இல்லை.

**திரு. ஆலடி அருணா** : மத்திய சர்க்கார் பிரதிநிதிகள் முதல் அமைச்சர் அவர்களோடு பேசிய நேரத்தில் கேவல் சிங் அவர்கள் என்ன மனப்பான்மையோடு இருந்தார். வெளி விவகார அமைச்சர் என்ன கருத்தில் இருந்தார்; பிரதமர் என்ன கருத்தில் இருந்தார் என்று திறமைமிக்க நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் அப்பொழுது இதைப்பற்றி அவர்களுடைய தோழமைக் கட்சியிடமோ அல்லது எதிர்க்கட்சிகளிடமோ கலந்துபேசி இந்தத் தீர்மானத்தை அந்த ஒப்பந்தத்திற்கு முன்னால் தீவிரப்படுத்தி ஒரு பெரிய போராட்டத்திற்கு தமிழகத்தை தயாராக ஆக்கி இருக்கலாம். அதை அவர்கள் செய்யவில்லை. அப்படிச் செய்யாததற்குக் காரணம், நாங்கள் குற்றம் சாட்டுகிறோம், நீங்கள் அதற்கு உடந்தையாக இருந்தீர்கள் என்று. இலங்கையில் தமிழர்கள் எவ்வளவு துன்புறுத்தப்பட்டார்கள் என்பதைப்பற்றி நான் இப்பொழுது பேச ஆசைப்படவில்லை.

இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு வருகிறார். சென்னைக்கு வருகிறார். அவரை மாலை போட்டு வரவேற்கிறார் நம்முடைய முதல் அமைச்சர். மாலை போட்டவர் மகஜர் ஏன் கொடுக்கக்கூடாது என்று எங்கள் கட்சித் தலைவர் கேட்டார். "மகஜர் கொடுப்பது உங்கள் பழக்கமே தவிர எனக்குப் பழக்கம் இல்லை" என்று அலட்சியமாக எங்கள் கட்சித் தலைவரை விமர்சனம் செய்தார். நான் அவர் அப்படி விமர்சித்தது பற்றி கவலைப்படவில்லை. இரண்டு, மூன்று நிமிடங்களுக்குள் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். 1961-ல் இலங்கையில் தமிழர்களுக்கு பெரிய கொடுமை இழைத்த நேரத்தில் இலங்கை பிரதமருக்கு இங்கே இருக்கிற அசிஸ்டெண்டு ஹைகமிஷனர் மூலமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மகஜர் கொடுத்தார்கள். அந்த மகஜரை இப்பொழுது இந்த மன்றத்திற்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சென்னை மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு லட்சம் மக்கள் அங்கே வர்த்தகம் நடத்துகிறார்கள். அந்த மகஜர் இலங்கைப் பிரதமருக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. யு.என்.ஓ. வில் உள்ள பொதுச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டது. அப்பொழுது காங்கிரஸ் நண்பர்கள் என்ன சொன்னார்கள்? தி.மு.க. எங்கே, உலக

ஐக்கிய நாடு சபை எங்கே. அங்கே போய் மகஜர் கொடுக்கிறார்கள் என்று இங்கே கேலி செய்தார்கள். கிண்டல் பண்ணினார்கள். அண்ணா அவர்களை அவதூறாகப் பேசினார்கள். அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் மகஜர் கொடுத்ததை எப்படி கேவலமாக பேசினார்களோ, கிண்டல் செய்தார்களோ அதே அடிப்படையில் நாங்கள் மகஜர் கொடுத்ததை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள். இதிலே எங்களுக்கு ஒன்றும் கோபம் இல்லை. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ்காரராக மாறி வருகிறார் என்று தெரிந்து கொள்கிறோம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : வெளிப்படையாக காங்கிரஸ்காரராக மாறினாலும் பரவாயில்லை, துரோகியாக மாத்திரம் மாறக்கூடாது.

**திரு. ஆலடி அருணா** : யார் துரோகி, யார் வீரன் என்று மக்கள் நிர்ணயம் செய்வார்கள். துரோகிகளுடைய முகமூடியை நிச்சயம் 1976-ல் மக்கள் கிழித்து எறிவார்கள். யார் துரோகி, யார் வீரன் என்பது போகப் போகத் தெரியும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நன்றி கெட்டவர்கள் யார், துரோகிகள் யார் என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

கச்சத் தீவு விஷயத்தில் ஸ்ரீலங்கா பக்கம் போய் நின்று வாதாடுவது போல் காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் பக்கம் போய் வாதாடுவார்களா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : காஷ்மீர் நம்முடையது தான் என்று முடிவான ஒன்று. கச்சத் தீவுப் பிரச்சினையிலும்கூட இந்திய சர்க்கார் ஒப்பந்தம் செய்வதற்கு முன்னாலே இப்படிப் பேசவில்லை. இரண்டு தரப்பிலும் ஒரு முடிவுக்கு வந்த பிறகு இப்படி நான் சொல்லுவதில் தவறு இருக்குமென்று கருதவில்லை. ஆக இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது. பக்கத்திலே இருக்கும் எல்லா நாடுகளோடும் நட்புறவோடு இருப்பதுதான் தேசிய வளர்ச்சிக்கு ஒட்டுமொத்தமாக நல்லது. ஆகவே, பக்கத்திலே இருக்கும்

ஸ்ரீலங்கா நாட்டோடு உறவாக இருக்கவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : இதை எதிர்க்கிறார்கள், அவர்களுக்கு ஆதரவாக வோட்டுப் போட்டார்களே என்று சொல்கிறார்கள். நீங்கள் அவர்களை ஆதரிப்பவர்கள் ஏன் வோட்டுப் போடாமல் ஒதுங்கிக் கொண்டீர்கள்?

**திரு. என். கே. பழனிசாமி** : இதற்கு ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பி ஒன்றும் இல்லாததற்கு இவ்வளவு பெரிய கிளர்ச்சி வேண்டியதில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நான் கேட்டதற்கு விளக்கம் தேவை, நாங்கள் அவர்களை ஆதரித்து வோட்டுப் போட்டதாகச் சொன்னீர்கள். இந்திரா காங்கிரஸை ஆதரிக்கிற நீங்கள் ஏன் வோட்டுப்போடாமல் ஒதுங்கி விட்டீர்கள்?

தலைவரவர்களே, கச்சத் தீவு பற்றி இந்த மாமன்றத்தில் நான் முன்மொழிந்துள்ள தீர்மானத்தைப் பெரும்பாலோர் வழிமொழிந்தும், சிலர் எதிர்த்தும், சிலர் அரசின்மீது பழி மொழிந்தும் தங்களுடைய கருத்துக்களை இங்கே கூறி யிருக்கிறார்கள்.

தீர்மானத்தினுடைய வாசகத்தைப் பொறுத்தமட்டில் இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற எல்லாக் கட்சிகளிலேயும் இருக்கின்றவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்பதை நான் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். கச்சத்தீவு பிரச்சினையை முடிந்துவிட்ட பிரச்சினையாகக் கருதாமல், ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்கின்ற முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதில் தமிழ் நாட்டு மக்கள் யாருக்கும் அல்லது அந்த மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கின்ற எந்தக் கட்சிகளுக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு எந்த வகையான நியாயமும் இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய தமிழ்நாட்டு அரசியலில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வருந்தத்தக்க ஒரு சூழ்நிலை என்னவென்றால், மாநில அரசின் சார்பிலேயோ அல்லது முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ சொல்லுகின்ற வாதத்திற்கு மேலாக, மத்திய அரசின் சார்பிலே சொல்லப்படும் வாதங்கள்தான் உயர்ந்தவை அல்லது மத்திய அமைச்சர்கள் சொல்லும் கூற்றுக்கள்தான் நியாயமானவை, அவைகள்தான் உண்மையானவை என்ற ஒரு வருந்தத்தக்க, துரதிருஷ்டவசமான சூழ்நிலை நம்முடைய தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழக அரசை இதுபோன்ற பெரிய பிரச்சினைகளில் மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலைக் கேட்கவில்லை; ஆக்க பூர்வமான முறையில் பிரதமர் - முதலமைச்சர் இதுபற்றி ஆலோசனை நடத்துவதற்கு வாய்ப்புக்கூறுகள் வழங்கப்பட வில்லை என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அனைத்துக் கட்சியினுடைய தலைவர்கள் அடங்கிய கூட்டத்திலேகூட, எத்தனை முறை இதுபற்றிப் பிரதமரிடத்தில் தமிழக அரசின் சார்பிலே ஒரு முறையீடாக இந்த அரசு கச்சத் தீவுப் பிரச்சினையில் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தியது, பிரதமருக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதப்பட்ட கடிதத்திலே எவ்வளவு ஏராளமான ஆதாரங்களை - கச்சத் தீவு தமிழ்நாட்டுக்கு - இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆதாரங்களை வழங்கியது, அதைப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது என்பதையும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

ஆனாலும் இவைகளுக்கெல்லாம் மாறாக டில்லி மாநிலங்கள் அவையில் மத்திய வெளிநாட்டு உறவு அமைச்சர் அவர்கள் "நாங்கள் மாநில அரசைக் கலந்து கொண்டோம்" என்று சொன்ன ஒரே ஒரு வாசகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, கச்சத்தீவை மறந்துவிட்டு, மாநில அரசு மீது பழி சுமத்துவதை நோக்கமாகக் கொள்வது கச்சத் தீவுப் பிரச்சினையில் நாம் கொண்டிருக்கும் உறுதிக்கு ஊனம் விளைவித்ததாக ஆகிவிடும் என்பதற்காகத்தான், என்னைத் தாக்குவதானாலும், என்னுடைய

தலைமையில் இருக்கும் கழகத்தைத் தாக்குவதானாலும் அதை வேறு நேரங்களில் வைத்துக்கொண்டு - அல்லது இன்னும் வேகமாகக் கேட்டிருக்க வேண்டும்; இன்னும் வேகமாகப் போராடியிருக்க வேண்டுமென்று இந்த மன்றத்திலே சொன்னாலும், வெளியிலே சொன்னாலும் அதைக்கூட இந்தப் பிரச்சினையிலே நீங்கள் காட்டுகின்ற உறுதிக்கு அடையாளமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து தமிழ்நாட்டு மக்கள் சார்பாகக் கச்சத் தீவை மறந்து விடாமல், அந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்தியில் இருப்பவர்கள் சொல்வதுதான் வேதவாக்கு; மாநில அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர் சொல்லுகிற வார்த்தைகள் எல்லாம் மதிப்புக் குறைவானவை, மலிவானவை என்ற எண்ணம் நமக்கு வருமானால் அது மத்திய மாநில உறவுகளுக்கும் நல்லது அல்ல; மாநில உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும், மாநில சுயாட்சி வடிவத்திலே அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற குறிக்கோளின் அடிப்படையில் கூட பொருந்தாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அரசோடு கலந்து கொண்டோம் என்று ஸ்வரண்சிங் சொன்னதும் மாநிலங்களவையில் ஒரு உறுப்பினர் எழுந்து கேட்டிருக்கிறார் நீங்கள் கலந்து கொண்டீர்கள், தமிழக அரசு சம்மதித்ததா?' என்று. 'கலந்து கொண்டோமா இல்லையா என்பதுதான் பிரச்சினை' சம்மதத்தை பெற்றோமா என்பது பிரச்சினை அல்ல என்று கேள்விக்குப் பதிலை மிகத் தந்திரமாகச் சொன்னார். இதை நான் நண்பர் அருணா பேசிய நேரத்திலும் குறிப்பிட்டுச் சொன்னேன்.

இன்னொரு அமைச்சர் - பெயர் மறந்து விட்டது - டில்லியில் பாராளுமன்றத்திலோ மாநிலங்களவையிலோ பேசுகிறார். "கச்சத்தீவுப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று எந்தவிதமான தகவலும் இந்திய அரசுக்கு வரவே இல்லை" என்ற தகவலைக் கொடுத்தார். உடனே இங்கிருக்கும் பத்திரிகைகள் எல்லாம் அதை என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டாக எடுத்துக்கொண்டார்களே

அல்லாமல் உண்மை என்ன என்பதை அறிய அவர்கள் நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்னால் அது வேதவாக்கு, நாம் சொன்னால் அது மலிவானது என்ற எண்ணத்தை நாம் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி அல்ல - ஒவ்வொரு மாநிலத்திலும் வேறு எந்த ஆட்சி வருகிற நேரத்திலும் அது நல்லதாக அமையாது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த ஜூன் மாதம் 29-ம் தேதியன்று நம்முடைய கோட்டையிலே கூடி எடுத்த முடிவினை உடனடியாக நான் தலைமையமைச்சருக்கு எழுதியிருக்கிறேன். 29 ஜூன் 1974 "டியர் பிரைம் மினிஸ்டர்" என்று துவங்கி

Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Srilanka agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. I convened an All Party meeting today consisting of my cabinet colleagues and leaders of all the opposition Parties to discuss the Indo - Srilanka agreement.

After discussion, all the Leaders of Political parties in Tamil Nadu, and all the Cabinet members unanimously passed a Resolution which is enclosed. May I express the hope that you will take into consideration the unanimous decision contained in the Resolution and take appropriate action?

என்று நான் எழுதியிருக்கிறேன்.

முதலமைச்சர் என்ற முறையில் இங்கே கூட்டப்பட்ட சர்வ கட்சிக் கூட்டத் தீர்மானங்களை இணைத்து அத்தனைபேர்கள் கையெழுத்தும் அடங்கிய தீர்மானத்தை பிரதமருக்கு அனுப்பியிருக்கிறேன்.

ஆனால் டில்லியில் பதில் சொல்லுகின்ற அமைச்சர் இந்திய அரசுக்குத் தமிழக அரசு சார்பில் எந்தவிதமான தகவலும்

வரவில்லை என்று கூறுவது இங்கே மாநில அரசை எதிரியாக எண்ணுகிறவர்களுக்கு இனிப்பான செய்தியாக இருக்கிறது. நான் ஆதாரங்களோடு தருகிறேன், புள்ளி விவரங்கள், எடுத்துக் காட்டுகள் அவ்வளவையும் அவர்கள் இன்று நம்பத் தயாராக இல்லை என்பதை எண்ணும்போதுதான், மாநில அரசுகள், மாநில மக்களாலேயே மதிப்புக் குறைவாக எண்ணப்படுகின்றன என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் பேசிய பழனிசாமி அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய மாரிமுத்து அவர்களும் நம்முடைய அம்மையார் சத்தியவாணி முத்து அவர்களும் "எல்லாம் முடிந்து போன விவகாரம், ஆகவே விட்டுவிடலாம்'' என்று சொன்னார்கள். சத்தியவாணிமுத்து அவர்கள் "முடிந்து போன விவகாரம், விட்டு விடலாம்" என்று சொன்னாலும் கச்சத் தீவுப் பிரச்சினையில் இருக்கும் நியாய வாதங்களை எடுத்துச் சொன்னார்கள். திரு. பழனிசாமி அவர்களும், நண்பர் மாரிமுத்து அவர்களும், இலங்கையின் பக்கம் இருந்து வாதிட்டு இது அவர்களுக்கு இருக்க வேண்டியது தான் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு வேகமாகச் செயல்படவில்லை என்று குற்றம் சாட்டிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கச்சத் தீவு இலங்கைக்குச் சொந்தம் என்று வாதிடவில்லை. ஆகவே, இவைகளை எல்லாம் மனதில் வைத்து பார்க்க வேண்டும்.

கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வமான "ஜனசக்தி" பத்திரிகையில் ஒரு தலையங்கம் "கச்சத்தீவு" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறது.

பாராளுமன்றத்திலே எல்லாக் கட்சியினரும் - பழைய காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அங்கிருக்கும் கட்சியினர் அத்தனை பேரும் கச்சத்தீவுப் பிரச்சினையில் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். ஆனால் ''ஜனசக்தி'' பத்திரிகை தலையங்கத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் "வெறும் உணர்ச்சியை மட்டும் வைத்துக்கொண்டு இயங்கும் கட்சிகள், பிற்போக்கு வலதுசாரிக் கட்சிகள் கண்டித்து வெளிநடப்பு செய்தனர்" என்று ஜனசக்தி பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்.

இதிலே பிற்போக்கு, முற்போக்கு என்ற கருத்திற்கே இடமில்லை. கச்சத்தீவு இந்தியாவோடு சேர்ந்ததா இல்லையா என்பதுதான் பிரச்சினை. பெரியவர் மணலி சொன்னது போல் இந்தியாவை, முற்போக்குக் கட்சிகள் ஆளலாம் அல்லது பிற்போக்குக் கட்சிகள் ஆளலாம். ஆளுகின்ற கட்சி முற்போக்கா, பிற்போக்கா என்பது பிரச்சினை அல்ல. நமக்கு உரிமையான நிலங்கள், பகுதிகள் காக்கப்படுகின்றனவா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

ஆனால், கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கு - இந்தியாவுக்குச் சொந்தம் என்று விளக்கி பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்தவர்கள், உணர்ச்சிவயப்பட்ட கட்சிக்காரர்கள் அல்லது பிற்போக்கு சக்தி என்ற அளவுக்கு தலையங்கம் எழுதியிருக்கிறது. அவர்கள், கச்சத்தீவு இலங்கைக்குத்தான் சொந்தம் என்று வலியுறுத்தும் வகையில் அந்தத் தலையங்கத்தில் பல பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. மாரிமுத்து அவர்களாவது, முடிந்து போன பிறகு அவர்களுக்கே சொந்தம் என்று ஆக்கிவிட்ட பிறகு விட்டுவிடலாம், என்று குறிப்பிட்டார்கள். அதையாவது பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், பண்டாரநாயகா அம்மையாரேகூட காரணங்களை எடுத்துச்சொல்ல முடியாத அளவுக்கு இவர்கள் வாதிட்டிருக் கிறார்கள் - இலங்கைக்கே கச்சத்தீவு சொந்தம் என்று, இப்படி இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் வாதிடுவது உள்ளபடியே வேதனை தரக்கூடியது.

இப்போதும்கூட முழுகிப் போகவில்லை, நாம் போட்டிருக்கும் தீர்மானம் "மறு பரிசீலனை செய்யுங்கள்" என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுவது. மறு பரிசீலனை செய்யுங்கள் என்று இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்கிறோம். நீங்கள் மறு பரிசீலனை செய்யுங்கள் தமிழ்நாட்டு மக்கள் பேரன்பைப் பெற. இல்லையென்றால் திடீரென்று அந்த அம்மையார் மறு பரிசீலனை செய்ய ஒப்புக் கொண்டார்களானால் நீங்களெல்லாம் தமிழக மக்களால் - திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லவில்லை, எந்தக் கட்சியானாலும் மறு பரிசீலனை செய்ய மத்திய அரசு ஒப்புக்கொண்ட பிறகு நீங்கள் எல்லாம் தமிழ் நாட்டு மக்களின்

கண்ணோட்டத்தில் வேறு விதமாகப் படுவீர்கள் - எச்சரிக்கையாக இருங்கள். ஒருவேளை மறு பரிசீலனை வந்தால் இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தோம் என்ற அளவுக்குத் தமிழக அரசின் கரத்தை வலுப்படுத்தும் அளவுக்கு, தமிழக மக்களின் ஏகோபித்த குரலை மத்திய அரசுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கலாம்.

இது மத்திய அரசுக்கு எதிரானது என்று எடுத்துக் கொள்வதற்கில்லை. நாம் குறைபட்டுக் கொள்கிறோம் - மத்திய அரசு நம்மைக்கலந்து கொள்ளவில்லை என்று. ஸ்வரண்சிங் ஒரு விருந்தில் சந்தித்தார். கேவல்சிங் சந்தித்தார். இந்தப் பேச்சுக்கள் எப்படி ஆலோசனைகளாக ஆக முடியும்? வெளி நாட்டு இலாகா செகரடரியை அனுப்பி வைத்தார்கள். இரண்டாவது முறையாக வந்தார்; அதிகாரிகளைச் சந்தித்தார். பின்னர் என்னை "கர்டசி கால் - பார்க்க வேண்டுமென்றார்" காபிநெட் ரூமில் பார்த்தேன். அகதிகள் பற்றிப் பேசினார். இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடப்பதாகச் சொன்னார். அழுத்தந்திருத்தமாக அப்போதே சொன்னேன். ஜூன் 27-ம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தது. இப்போதும் சொல்கிறேன். இதுபற்றி எந்தவிதமான சூசகமான தகவலையும் இந்த அரசுக்கு அறிவிக்கவில்லை. 27-ம் தேதி பத்திரிகையில் பார்த்தவுடன் பதறிப்போய் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தந்தி கொடுத்தேன். சில பேருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தேன். சில தலைவர்களுக்கு அதிகாரிகளையே அனுப்பினேன். அவர்களுடைய கட்சித் தலைவர் திருச்சி மாநாட்டில் இருந்தார். அவர்கள் கூட்டத்திற்கு வர வேண்டுமென்று சொல்லி அனுப்பினேன்.

அவ்வளவு அக்கறையோடு இந்தக் காரியத்தில் நாங்கள் செயல்பட்டிருக்கிறோமேயல்லாமல் இதில் தமிழக அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளிப்பதில் எந்தவிதத்திலும் உடந்தையாக இல்லை என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

நாங்கள் எதிர்க்கிறோம், மத்திய அரசு செய்திருக்கிற ஒப்பந்தத்தை. பெரியவர் மணலி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல் எதையும்

முடிந்த முடிவாகக் கருதாமல் - மறுபரிசீலனை என்று போட்டிருப்பதற்குக் காரணமே, முடிந்திருப்பதை பரிசீலனை செய்ய, மறுபரிசீலனை என்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறது. சாதாரணமாகச் சொல்லப்போனால் சிம்ஸனில் நடந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஒரு பெரிய போராட்டமே நடத்தியிருக்கும்போது இவ்வளவு பெரிய பிரச்சினையில் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஏன் கேட்கக்கூடாது? மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். இது தமிழ் நாட்டு மக்களுக்கு இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் பெரும் பலனை அளிக்கக்கூடிய ஒன்றாக இருப்பதால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. கோவை செழியன்** : இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்பாக தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். அதாவது கச்சத் தீவு தமிழ்நாட்டுக்குத் தான் சேரவேண்டும் என்பதில் அவர்களுக்கு இருக்கிற ஆர்வத்தைவிட எந்தவிதத்திலும் எங்களுக்குக் குறைந்துவிட வில்லை. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முடிவு மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பாக மாநில அரசு அதில் அவ்வளவு அக்கறை, தீவிரம் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டை நாங்கள் சொன்னோம். அந்தக் குற்றச்சாட்டை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது. மத்திய அரசின்மீது இப்போது குற்றச்சாட்டு சாட்டியிருக்கிறார்கள். மத்திய அரசின் தவறு மட்டுமல்ல - மாநில அரசு தன் கடமையைச் செய்ய தவறிவிட்டது என்பது எங்கள் கட்சியின் வாதம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேதிவாரியாக எடுத்துச்

சொல்லியிருக்கிறேன். எந்தெந்த நேரத்தில் எந்தெந்த முறையில் நாம் பிரச்னையை அணுகியிருக்கிறோம், எந்தெந்த நேரங்களில் மிகக் கண்டிப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதையும், எழுதப்பட்ட கடிதங்களை தேதிவாரியாக எடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே மாநில அரசைப் பொறுத்தவரையில் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்** : மாநில அரசின் தவற்றைக் கண்டிக்காமல் மத்திய அரசினுடைய தவறை மட்டும் கண்டிக்கிற இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நண்பர் செழியன் அவர்களுக்கு இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். மாநில அரசு இன்னும் வேகமாகச் செயல்பட்டிருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை உங்கள் கட்சிக் கூட்டத்தில் போடுங்கள், நான் வரவேற்கிறேன். ஆனால் இங்கு நாம் எல்லோரும் சேர்ந்து தமிழ் நாட்டினுடைய குரலை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும். கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் போடுங்கள், மாநில அரசு இன்னும் வேகமாக செயல்பட்டிருக்க வேண்டும் என்று. ஆனால் இந்தப் பேரவையில் அனைவரின் சார்பாகவும் நம் தமிழக மக்களின் ஏகோபித்த குரலை மத்திய அரசுக்குத் தெரிவிக்க இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# குதிரைப் பந்தயம்

**உரை : 19** **நாள் : 28.08.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக மகிழ்ச்சிகரமான, பெருமைக் குரிய ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே ஒரே மனதாக நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியதற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதய மார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்கின்ற முடிவு 1949ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது என்றாலும் 18 ஆண்டு காலம், காங்கிரஸ் கட்சி ஆட்சியை விட்டு அகலுகின்ற வரையிலும் எடுத்த முடிவை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை யென்பதையும் 7 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இதுவரையிலும் ஏன் கொண்டுவரவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்பதற்குப் பதிலாக 18 ஆண்டுக் காலமாக நாம் நடைமுறைப்படுத்தாததை, 7 ஆண்டு காலத்திலே அவர்கள் நடைமுறைப்படுத்தினார்களே என்ற அளவிற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்து இருப்பார்களானால் நான் வரவேற்றிருப்பேன்.

ஆளுங் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதுபோன்ற கொள்கைகளை அறிவிக்கின்ற நேரத்திலே திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். முதலிலே அந்தக் கொள்கைகள் நிறைவேற்றப்படவேண்டு மென்று சொல்கிற நேரத்திலே அளித்த பதில்கள் வேறாகவும், பிறகு திடீரென்று இப்படிப்பட்ட அறிவிப்புகள் வருவதும் விசித்திரமாக இருக்கிறது என்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று, டெல்லியிலே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு மாநாட்டில்

முதலமைச்சர்கள் அனைவரும் கலந்து கொண்டபோது, பிரதம மந்திரி இந்திரா காந்தி முன்னிலையில் நான் கருத்துக்களை வெளியிட்ட நேரத்திலே இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று மத்திய அரசிடமிருந்து பதில் தரப்பட்டது. ஆனால் அதே கருத்து அடுத்த இரண்டாண்டுக் காலத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக ஆகி இந்தியாவிலே 14 வங்கிகள் தேசீயமயம் ஆக்கப்பட்டதை நாம் மறந்திருக்க முடியாது. ராஜ மானியங்கள் ரத்து செய்யப்படவேண்டும் என்ற கொள்கை காங்கிரஸ் கட்சியிலே நீண்ட நாட்களாக இருந்த கொள்கை யானாலும், 1971ஆம் ஆண்டிற்கு முன்புதான் நிறைவேற்றப்பட்ட கொள்கையாக உருவெடுத்தது என்பதையும் மனத்திலே கொள்ளவேண்டும். சிற்சில சங்கடங்களாலும் வேறு பல சூழ்நிலைகளாலும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கொள்கைகள் நடைமுறைப்படுத்துவதற்குத் தடங்கல்கள், தடைகள் ஏற்பட்டு விடுவதுண்டு. ஆனால் அந்த தடைகளையெல்லாம் கடந்து நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இயன்ற வரையில் நிறைவேற்ற வேண்டு மென்ற அடிப்படையிலே இயங்குகின்ற இந்த அரசு, குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்று 1962ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கைகளிலே குறிப்பிட்டு, தொடர்ந்து தேர்தல் அறிக்கைகளிலே எடுத்துப் பேசப்பட்டு, இன்றைக்கு இந்த நல்ல முடிவை மேற்கொண்டு இருக்கிறோம், மேற்கொண்டிருக்கிற இந்த முடிவை நவம்பர் முதல் தேதியிலிருந்து அமல்படுத்த வேண்டும் என்பதற்கு மாறாக மார்ச் 31ஆம் தேதி வரை ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்று எழுந்த கருத்துக்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற கருத்துக்கு எதிரான கருத்துக்கள் அல்ல என்று கருதுகிறேன். அவர்கள் எல்லாம் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் இதிலே சில பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு கொள்கை அமுலாக்கப் படுகின்ற நேரத்திலே அந்தக் கொள்கையால் யார், யார் பாதிக்கப் படுகிறார்கள் என்ன என்ன சங்கடங்கள் எல்லாம் ஏற்படும் என்று பார்க்கின்ற காரணத்தினாலே நாம் அந்தக் கொள்கையைத் துணிவாக அறிவிக்கின்ற சக்தியை இழந்து விடுகிறோம். நிறைவேற்ற வேண்டுமென்று முடிவு எடுத்த பிறகு இரண்டொரு

மாதங்கள் என்று சில மாதங்கள் காலதாமதமானால் ஒரு கொள்கை நிறைவேற்றப்பட்டாக வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டதற்கு பிறகு, இருக்கின்ற பிரச்சினைகளை இடைக்காலத்திலே களைந்திட வேண்டும் என்ற முறையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. எட்மண்ட் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துரைத்த போதும் வேறு சில உறுப்பினர்கள் அதுபற்றிப் பேசியபோதும் நான் ஒரு உறுதிமொழியைத் தந்தேன்.

குதிரைப் பந்தயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்காத அளவிற்கு வகைகள் செய்யப்படும். 3 மாத காலமோ, 4 மாத காலமோ தேவைப்பட்டால் தவணைத் தரப்படும் என்ற உறுதிமொழியை இந்த மன்றத்தில் சொன்னேன். அந்த உறுதி மொழியின் அடிப்படையில் ஆராய்ந்த நேரத்தில் மார்ச் மாதம் 31ஆம் தேதி வரையில் பந்தயங்கள் நடைபெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளெல்லாம் குதிரைப் பந்தயங்களை நடத்தும் கிளப்புகளிலே இருக்கின்றவர்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, மார்ச் 31ஆம் தேதி வரைக்கும் குதிரைப் பந்தயங்களுக்கான தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இடையிலே அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத்தான் மார்ச் 31ஆம் தேதி வரைக்கும் தவணைகொடுத்து, பிறகு குதிரைப் பந்தயத்தை அறவே நீக்குவது என்ற முடிவை எடுத்து, அந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே மசோதாவாக ஆக்கி உங்களுடைய அன்பான ஆதரவைப் பெறுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி யிருக்கிறோம். நம்முடைய நண்பர் திரு. நரசிம்மன் அவர்கள் இன்னும் ஓராண்டு காலம் நீடித்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 1980ஆம் ஆண்டு வரையில் நீடிக்கலாம் என்று திருத்தம் தந்திருந்தாலும் ஓரளவு நடுநிலைமையோடு, மக்களுடைய நிலை, சமுதாய நிலை இவைகளையெல்லாம் உணர்ந்து அதை அவ்வளவாக வலியுறுத்தாமல், தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்திய அளவில் இந்தக் கொள்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

மதுவிலக்கை ஒத்தி வைத்தபொழுது நான் கூறிய காரணங்களிலே ஒன்று, நம்முடைய தமிழகத்தைச் சுற்றியிருக்கும் மாநிலங்களில் மது தாராளமாகப் புழக்கத்தில் இருக்கும்பொழுது அந்தக் கொள்கையில் எங்ஙனம் வெற்றிபெற முடியும் என்ற கேள்வி எழுந்ததால்தான் நாம் இப்பொழுது ஒத்திவைக்க வேண்டுமென்ற வருந்தத்தக்க சூழ்நிலைக்கு ஆளாகிறோம் என்று அப்பொழுதும் சொல்லப்பட்டது. இடைக்காலத்திலேயும் சொல்லப்பட்டது. அந்த நியாயமான வாதம் இன்றைக்கும் அப்படியேதான் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. ஆனால் எல்லா மாநிலங்களிலும், அகில இந்திய அளவிலே, குஜராத் ஒன்றைத் தவிர இன்றைக்கு மது தாராளமாக இருக்கும்பொழுது தமிழ்நாட்டிலே நாம் மீண்டும் மதுவிலக்குக் கொள்கையைத் துணிச்சலோடு அமல் நடத்துவதைப்போல, எல்லா மாநிலங்களிலும் குதிரைப் பந்தயங்கள் இருந்தாலும், எப்படி மதுவிலக்கை இங்கே அமல் படுத்துகிறோமோ அதைப்போல குதிரை பந்தயத்தையும் ஒழிக்கும் கொள்கையையும் அமல் படுத்துவோம் என்ற துணிவோடுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழகம் பல்வேறு காரியங்களில் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. இந்தியாவின் பிதா, இந்தியத் திருநாட்டின் காந்தி, ஏன், உலக காந்தி சொன்ன கருத்துக்களை அவருடைய கட்சியைப் பின்பற்றுகிறவர் களுடைய அரசுகள் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளா விட்டாலும், உலக காந்திக்கு அடுத்தபடியாக உள்ள தென்னாட்டுக் காந்தியான பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளை தமிழக அரசாவது பின்பற்றும் என்ற அளவில் இதை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்.

இதையெல்லாம் பாராளுமன்றத்திலே பேச வேண்டு மென்று திசைதிருப்பாமல், ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாரிமுத்து போன்றவர்கள், இப்படிப்பட்ட காரியங்கள் தமிழ்நாட்டு அளவில்தான் இருக்கிறது, இவைகள் அகில இந்திய அளவில் நடக்க வேண்டுமென்று, அவர்களெல்லாம் சட்டமன்றத்தில்

தானே இருக்கிறோம், பாராளுமன்றத்தில் இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளாமல், சுப்பிரமணியம் சென்று பேச வேண்டுமென்று இல்லாமல், அடுத்தமுறை மாரிமுத்து அவர்களே சென்றால் வேகமாக மட்டுமல்ல, இன்னும் உரிமையோடுகூடச் சொல்லலாம். அப்படிப்பட்ட வாய்ப்புகளை அவர்கள் பெற வேண்டும். அப்பொழுது அவர்கள் ஆதரவு கேட்டால்கூட, எப்படி மாரிமுத்து அவர்கள் பி. எஸ். பி. கட்சியில் இருந்தபொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு கொடுத்ததோ அதேபோல் அவர்கள் பாராளுமன்றத்திலே இந்தக் கொள்கைகளைச் சொல்லப் போகிறேன் என்று தேர்தல் பிரகடனமாகச் சொன்னால், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில், இந்த விஷயத்திற்காக ஆதரவு அளிக்கத் தயாராக இருக்கிறோம்.

உத்தமர் காந்தியடிகளால் சொல்லப்பட்ட கொள்கைகள் தமிழகத்தில் மட்டும் நிறைவேற வேண்டுமென்ற தலையெழுத்து இல்லை. இந்தியா முழுவதும் நிறைவேறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, மிகவும் வரலாற்றுப் புகழ் மிக்க, சரித்திர புகழ் மிக்க இந்த பெரிய தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்தும், இன்றைக்குப் பல உறுப்பினர்கள் வழிமொழிந்தும் நிறைவேற்றும் பெருமை இந்த அரசுக்கு, எங்கள் அண்ணனால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்குக் கிடைத்தது என்ற பெருமையோடு அமர்கிறேன், வணக்கம்.



# பினாமி நில ஒழிப்பு

**உரை : 20** **நாள்: 11.08.1980**

**கலைஞர் மு.கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பினாமி நிலங்களை ஒழிக்கின்ற உயரிய நோக்கம் கொண்ட இந்த மசோதா அரசின் திருத்தங்களோடு இன்றைக்கு வந்துள்ள நிலையில், மிகச் சிறிய விவசாயிகள் இந்தத் திருத்தங்களின் வாயிலாக பாதிப்பில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள் என்ற வகையில், இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல வேளையாக 8 ஆம் தேதியன்று இந்த மசோதாவினுடைய விவாதங்கள் முடிவுற்று அமைச்சர் அதற்கான விளக்கங்களை அளித்து அன்றைக்கு இது நிறைவேறாமல் இடையிலே மூன்று நாட்கள் இடைவெளி கொடுத்து ஒத்திவைக்கப்பட்டதும் நல்ல தாகத்தான் போயிற்று என்பதை அரசின் சார்பில் அளிக்கப் பெற்றுள்ள திருத்தங்களில் இருந்து என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. சில நேரங்களில் சில காலதாமதங்கள்கூட நல்லவைகளைச் செய்து விடுகிறது. 'விரைவு', 'அவசரம்' என்ற இந்த இரண்டு சொற்களுக்கிடையே பலத்த வேறுபாடு இருக்கிறது. விரைவான முடிவுகளை எடுப்பது என்பது 'quick decision' என்பதையும், அவசரமான முடிவுகளை எடுப்பது என்பது, 'hasty decisions' என்பதையும் குறிப்பிடும். எட்டாம் தேதி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் பற்றிக் கவலை இல்லை. எங்களிடத்தில் இருக்கிற பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றிவிடுவோம் என்று அரசு முடிவுக்கு வந்திருக்குமானால், இன்று ஏழை எளிய சிறிய விவசாயி களுடைய வாழ்வு பாதிக்கப்படாத அளவுக்கு கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தங்கள் இன்றைக்கு இடம் பெறாமலே

போய் மறுபடியும் அந்தத் திருத்தத்தைச் செய்வதற்குப் பல சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்பட்டுவிடக்கூடும். எனினும் இந்தத் திருத்தங்கள் இன்று அரசின் சார்பாகத் தரப்பட்டிருப்பதற்கு நான் உள்ளபடியே என் வரவேற்பை, பாராட்டுதலை, ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழக உறுப்பினர் மாண்புமிகு நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மசோதா பற்றிப் பேசுகின்ற நேரத்திலே பினாமி நிலங்களை ஒழிக்கவேண்டுமென்கின்ற நோக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக ஆதரிக்கிறது என்பதையும் ஆனால், சட்டமாக இருக்கிற இந்த மசோதாவிலே இருக்கிற சில சந்தேகங்கள் போக்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டி, 5 ஏக்கர் என்ற அளவுக்கு நன்செய்க்கும், 10 ஏக்கர் என்ற அளவுக்கு புன்செய்க்கும் விதிவிலக்கு வேண்டுமென்று திருத்தங்கள் கொடுத்திருந்தாலும் கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சங்கரய்யா போன்றவர்கள் எல்லாம் அதை நாங்கள் ஆதரிப்பதற்குத் தயாராக இல்லை என்று கூறினாலும்கூட ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் பொறுப் போடு திருத்தங்கள் தருவது, 10 கேட்டால் 5 வது கிடைக்கும் என்று அளவிலேதான் திருத்தங்கள் தரப்படுகின்றன என்பதை யும், இந்தத் திருத்தங்களும் அதுபற்றிய விமர்சனங்களும் அன்றைக்கு நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் விரிவாகத் தரப்பட்ட காரணத்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து இத்தகைய நல்ல திருத்தத்தை அது அளவிலே ஏக்கர் 2½ அல்லது 5 என்ற அளவிலே முறையே நன்செய், புன்செய்க்கு என்று இருந்தாலும்கூட வரவேற்கத்தக்க திருத்தத்தை இங்கே வழங்கியிருக்கிறது.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இந்த அவையின் முன்னால் வைத்து உரையாற்றியபோது சில சாட்சி யங்களை எல்லாம் தனக்கு சார்பாக அழைத்தார்கள். இந்த அவையைப் பொறுத்தவரையில், அவ்வளவு சாட்சியங்களை அழைத்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை ஆளுங்கட்சிக்கு இல்லை. காரணம் நிலம் ஆதிக்க புரியிடத்திலே அடங்கிப்போய் நிலப்பிரபுக்கள், நிலத் திமிங் கிலங்கள் கொடிகட்டி வாழ்கின்ற காலம் மாற்றப்பட்டு நிலச்சீர் திருத்தங்கள், நிலமுறையிலே புரட்சிகள் மேலிட வேண்டு மென்கிற கொள்கை படைத்தவர்கள்தான் இந்த மன்றத்திலே

ஆளுங்கட்சியினாலும் சரி, எதிர்க்கட்சி வரிசையானாலும் சரி, நிரம்பப்பேர் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த நிலச் சீர்திருத்தச்சட்டம்- இதுபற்றிய வரலாற்றை நாம் ஒருமுறை திரும்பிப் பார்க்கிற நேரத்திலே சில வரலாற்று உண்மைகளை மறந்துவிடக்கூடாது. நம்முடைய அமைச்சர் பல சாட்சிகளை அன்றைக்கு அழைத்தபோது நான் கேட்டேன். என்னை ஏன் சாட்சிக்கு அழைக்கவில்லை என்று அவர் என்னிடத்திலே அப்போது சொன்னார். ''1960 ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்கின்ற உச்சவரம்புச் சட்டம் வந்தபோது நீங்கள் என்ன பேசினீர்கள் என்று தேடித் தேடிப் பார்த்தேன், எனக்கு சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை. எனவே உங்களை சாட்சிக்கு அழைக்கவில்லை'' என்று அமைச்சர் சொன்னார். அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களை பேராசிரியர் அன்றைக்கு சொன்ன கருத்துக்களை அவர்கள் மேற்கோள் காட்டினார்கள். இந்த அவையில் அண்ணா அவர்களுடைய தலைமையிலே 1957 தொடங்கி சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றிய நாங்கள்-நானும் பேராசிரியர் அவர்களும் மற்றும் கழக உறுப்பினர்களும் அன்றைக்கு எடுத்து வைத்த கருத்துக்களுடைய தொகுப்பு நம்முடைய சட்டமன்ற நாள் குறிப்புகளிலே இடம் பெற்றிருக்கின்றன. நான் ஆகஸ்ட் 29ஆம் தேதி, 1961ஆம் ஆண்டு அந்த மசோதா பற்றி பேசிய போது குறிப்பிட்டதை இங்கே நினைவுபடுத்துவது அமைச்சர் அவர்களுக்கு மேலும் நல்ல சாட்சியமாக, சான்றாக, ஆதாரமாக இருக்கும் என்பதற்காகத்தான் அப்போது பேசியதைக் குறிப்பிடுகிறேன்.

இந்த மசோதா எப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் யூகிக்கிறேன் என்றால், நாட்டிலே உள்ள மிராசுதாரர்கள் அத்தனை பேரையும் அழைத்து, இம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவரப் போகிறோம், அதற்குள் பிரிக்க வேண்டிய நிலத்தைப் பிரித்து விடுங்கள், உங்களுடைய வீட்டிலுள்ள உற்றார், உறவினர்கள், பேரன் பேத்திகள், சுற்றத்தார்கள், நம்பிக் கைக்கு உரியவர்கள், வேண்டியவர்களுக்கு எழுதி வைத்து விடுங்கள். அதற்குப் பிறகு இந்த மசோதாவைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லி மறுபடியும், இறுதியாக இந்த மசோதாவைத் தயாரிக்கிறபோது அவர்களைக் கூப்பிட்டு சொன்னபடி செய்து விட்டீர்களா? இந்த மசோதாவைக் கொண்டு

வரலாமா என்று அவர்களிடம் உத்திரவு கேட்டுவிட்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் யூகிக்கிறேன்.''

''அசல் மசோதாவில் இருந்த ஒரு சில நல்ல விஷயங்கள் கூட ''திருத்தம்'' என்கிற பெயரால் பொறுக்குக் குழுவில் சேதப் படுத்தப்பட்டிருக்கின்றன- சீரழிக்கப்பட்டிருக்கின்றன'' என்றும், ''ஆகவேதான், இந்த மசோதாவை 'ஏட்டுச் சர்க்கரை, தாகத்தைத் தீர்க்காத தண்ணீர், அரும் பசிக்கு உதவாத அன்னம், என்று விமர்சிக்க விரும்புகிறேன்'' என்றும் நான் குறிப்பிட்டேன்.

அது மாத்திரம் அல்ல, அப்பொழுது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த பெரியவர் மாணிக்கவேலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அதையும் நான் என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டேன்.

''ஏற்கனவே நிலங்களை மிராசுதார்கள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டுவிட்டார்கள் என்கின்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் களும், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும் ஏனைய முற்போக்கு உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன நேரத்தில், நம்முடைய அமைச்சர் மாணிக்கவேலு அவர்கள் அதைக் கேலியான பதிலாகக் கருதினார்களோ அல்லது உண்மையான பதிலாகக் கருதினார்களோ பிரிக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்த்தோம்? அதன்படி பிரிக்கப்பட்டுவிட்டது என்று அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி நண்பர் களும் அதே கருத்தை திருப்பித், திருப்பி, 'பிரிக்க வேண்டு மென்று எண்ணினோம். பிரிந்துவிட்டோம்' என்று குறிப்பிட் டார்கள். அந்த வாதத்தை எண்ணிப் பார்க்கும்பொழுது நான் சிறுவனாக இருந்த காலத்தில் பார்த்த ஒரு சினிமாப் படம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அது 'சபாபதி' என்ற படம்; அந்தப் படத்தில் வேலைக்காரனைக் கூப்பிட்டு, 'சோடா உடைத்துக்கொண்டு வா, என்று எசமான் சொன்னபோது, அந்த வேலைக்காரர், சோடா பாட்டிலை ஹாலில் போட்டு 'படார்' என்று உடைத்துவிட்டார்; 'ஏன்டா உடைத்தாய்?' என்று எசமான் கேட்ட பொழுது, வேலைக்காரன் 'சோடாவை உடைக்கத்தானே சொன்னீர்கள், உடைத்துவிட்டேன்' என்று சொன்னான். அப்படி, 'சோடாவை உடைக்கச் சொன்னீர் உடைத்தேன்' என்று கூறிய

வேலைக்காரன் பேச்சுக்கும், 'பிரிக்கத்தானே சொன்னீர்கள், மிராசுதாரர்களுக்குள்ளே பிரித்து விட்டோம்' என்று வாதாடுகிற வர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை'' என்றும், அன்றைக்கு நான் 1961 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறேன். எனவே, எப்படியோ பிரித்து விட்டோம் என்கின்ற ஒரு வாசகத்தை மாத்திரம் பயன் படுத்தி ஏராளமான நிலங்கள், 1960 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்கின்ற உச்சவரம்புச் சட்டத்தில் தப்பித்துக்கொண்டு விட்டன; அதன் காரணமாகத் தான் தொடர்ந்து இருந்து வந்த மக்களுடைய எண்ணத்திற் கேற்பவும், விவசாயத்தை நம்பி வருகின்ற மக்களுடைய விருப்பத்திற்கேற்பவும் முற்போக்கு எண்ணம் படைத்த ஓர் ஆட்சி, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே உருவாகி, அண்ணா அவர்கள் மறைந்த பிறகும் அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு 1970ஆம் ஆண்டில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்பு என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது.

அதிலேகூட சில குறைபாடுகள் இருந்தன. இன்னமும் அந்தக் குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை இங்கே பேசிய அருமை கம்யூனிஸ்ட் கட்சிகளினுடைய நண்பர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்கு அரசு எத்தகைய மசோதாக் களைக் கொண்டு வந்தாலும் அவைகள் தொடக்கத்திலே, அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட முடியாமல் போய், அவைகள் இன்றைக்குக் கண்டுபிடிக்கக் கூடிய சூழ்நிலையிலே எந்த மசோதாக்கள் வந்தாலும் அவைகளை ஏற்றுக்கொள்ள, அவைகளை இந்த மன்றத்திலே விவாதித்து நல்ல முடிவுக்கு வர திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

ஆனால் அமைச்சரானாலும் சரி அல்லது பேசிய மற்றக் கட்சிகளினுடைய தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும் தொடர்ந்த வரலாற்றில் சில உண்மைகளை, வேண்டுமென்று அல்ல, ஒருவேளை அலட்சியமாகவும் இருக்கலாம் அல்லது

தேவையில்லை என்று கருதியிருக்கலாம்; விட்டுவிட்டமைக்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

6-4-1960-ல் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்ற நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது 60 முதல் 67 ஆம் ஆண்டு வரையில் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்ட மொத்த நிலத்தினுடைய பரப்பளவு 24,194 ஏக்கரா, அதாவது ''நோட்டிபிகேஷன்'' அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிலே அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கரா. 60-லிருந்து 67 வரையில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, 24,194 ஏக்கராதான் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு, அதிலே அரசு 16,330 ஏக்கராதான் கைப்பற்றியது. மற்றவர்களுக்கு, நிலமில்லாத ஏழை விசாயிகளுக்கு ஏதாவது ஒப்படை செய்த நிலத்தின் பரப்பளவு உண்டா என்றால் இல்லை. 67 வரையிலும் யாருக்கும் ஒப்படை செய்யப்படவில்லை. ஆனால் 1970-ல் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டதன் விளைவாக நான் 75 வரையிலே உள்ள கணக்கைச் சொல்கிறேன்.

அதற்குப் பிறகுள்ள கணக்கு என்னிடத்திலே இல்லை. 1975 ஆம் ஆண்டு இறுதி வரையிலே உள்ள கணக்கின்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் உச்சவரம்பிற்குப் பிறகு உபரி நிலமாக அறிவிக்கப் பட்டது 1,08,068 ஏக்கரா. இப்படி அறிவிக்கப்பட்ட 1 இலட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கரா பரப்பளவில் அரசாங்கம் கைப்பற்றியது 88,146 ஏக்கரா. அப்படி அரசு கைப்பற்றிய 88,000 ஏக்கராவில், நிலம் அற்றவர்களுக்கு ஒப்படை செய்யப் பட்டது 62,682 ஏக்கரா. இந்த 62,682 ஏக்கராவில் பயன் அடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர். எனவே, என்னுடைய அருமை நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1960 ஆம் ஆண்டு 9,000 பேர்கள்தான் நிலமுடையவர்கள் தமிழ்நாட்டில் இருந்தார்கள் என்பதற்கு மாறாக 1975 ஆம் ஆண்டில் 38,504 பேர்களுக்கு அவைகளை அன்னியில் அரசாங்கம் கைப்பற்றிய நிலத்தை, உபரி நிலத்தை, வழங்குகிற ஒரு ஏற்றமான தன்மை ஏற்பட்டது என்பதை நான், இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அது மாத்திரமல்ல, பல விதிவிலக்குகளையும் ரத்து செய்திருக்கிறோம். நாம் 15 ஸ்டாண்டர்ட் எக்கரா உச்சவரம்பு கொண்டு வந்த அந்தக் காலகட்டத்தில்,

**திரு. ப. நெடுமாறன்:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்ன இந்தப் புள்ளிவிவரத்திற்கு நன்றி. 1960-லே மிஞ்சுகின்ற உபரி நிலம் என்று எதிர்பார்க்கப்பட்டது 2,82,105 ஏக்கரா. ஆனால் கிடைத்தது, 28,104 ஏக்கரா- அரசு கைப்பற்றியது. இதே நேரத்திலே, 1970-லே அவர்கள் குறிப்பிட்டது 88,000 ஏக்கரா, எல்லாம் சேர்த்தாலும் 1 இலட்சத்து சொச்சம் ஏக்கராதான். 1960-லேயும், 1971 லேயும் கிடைத்த ஏக்கரா. மீதம் 1,82,000 ஏக்கரா என்ன ஆயிற்று என்பது இது வரையில் தெரியவில்லை. அதையும் எதிர்க்கட்சித் தலைவர் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

**கலைஞர் மு.கருணாநிதி:** என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்குத்தான் இந்த மசோதாவே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைக் கொண்டுவந்த பிறகு எந்த அளவிற்கு நிலம் கிடைக்கிறது-எவ்வளவு பரப்பளவு கிடைத்தது என்ற புள்ளிவிவரங்களை ஆளுங்கட்சியினர் அல்லது அமைச்சர்கள் நமக்கு அறிவிக்காமல் இருக்கமாட்டார்கள். எவ்வளவு கிடைக்கக்கூடும் என்ற விவரத்தைக்கூட நம்முடைய அமைச்சர் தன்னுடைய பதில் உரையிலே தருவார் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன், இந்த மசோதாவின் மூலமாக எவ்வளவு நிலத்தை எடுக்க முடியும் என்கிற விவரங்களைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்கிற காரணத்தால்.

விதிவிலக்குகள் கரும்பாலை-நிலத்திற்கு கழக ஆட்சியில் 1970ஆம் ஆண்டு உச்சவரம்பு சட்டம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று கொண்டுவரப்பட்டபொழுது ரத்து செய்யப்பட்டது. மேய்ச்சல் நிலத்திற்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப் பட்டது. பால் பண்ணைக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப் பட்டது. அது மாத்திரமல்ல. பொது அறக்கட்டளைகள் இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதிலே வருகின்ற வருமானம் அதற்கே செலவிடப்பட வேண்டு

மென்றும் சட்டம் செய்தது மாத்திரம் அல்ல, அதைக்கூட 1-3-1972ல் என்ன என்ன அறக்கட்டளைகள் இருந்தனவோ, அவைகளுக்குத்தான் அது பொருந்தும் என்றும் குறிப்பிடப் பட்டது. அதற்குப் பிறகு, புதிய அறக்கட்டளைகள் அவை களுக்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்றும், அன்றைக்கே சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பொது அறக்கட்டளைகளில் கல்லூரி என்றால் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கராக்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும், உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், ஆரம்பப் பள்ளி என்றால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், மாணவர் விடுதி என்றால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், தொழில் கல்விக்கு என்றால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், விவசாயப் பள்ளிக்கு என்றால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கரா, மற்ற அறக்கட்டளைகள் என்றால் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும் அதற்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் நிர்ணயித்திருந்தோம். எனவே, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்ச வரம்பு கொண்டுவரப்பட்ட அந்தக் காலக்கட்டத்திலிருந்து நமக்கு இந்த நிலச் சீர்த்திருத்தக் கொள்கையில் ஒரு கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறைப்பதற்கில்லை. அதைத்தொடர்ந்து மேலும் முற்போக்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்கிறது என்கிறபொழுது, அதை ஆதரிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களுக்கு இதுநாள்வரை யிலே இருந்த கவலையெல்லாம் நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முதல்நாள் அவருடைய உரையிலே எடுத்துக் காட்டியதுபோல், 2 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று உண்மையிலேயே- போனஃபைடி-அப்படி பினாமி அல்லாமல் வாங்கி இருக்கிறவர்கள் வைத்திருக்கிறவர்கள், இந்த மசோதா வால் அல்லது சட்டத்தால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாதே என்பதுதான் எங்களுக்கிருக்கிற கவலை.

களை எடுக்கிறோம் என்று சொல்லி பயிரையே அழித்து விடக்கூடாது என்கிற கவலையைத்தான் சுட்டிக்காட்டி இருக்கிறேனே தவிர, வேறல்ல. இப்போது இந்த மசோதா சட்ட மான பிறகு, அந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு நிலங்களை நாம் கைப்பற்ற இருக்கிறோம் என்கின்ற ஒரு கணக்கைப்

போட்டுக்கொண்டு, அப்படிக் கைப்பற்றுவதற்கு உதவிகரமாக இருக்கிற குழுவும் அமைக்கப்படும் என்றும் இந்த மசோதா விலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதிகாரம்பெற்ற அதிகாரி ஒருவர் விசாரணை நடத்துவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல அப்படி விசாரணை நடைபெறுகிற நேரத்தில் அதிகார துஷ்பிரயோகம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அமைக்கப்படுகின்ற குழுக்கள்கூட அரசியல் நோக்கத்தோடு தங்களுடைய பணிகளை ஆற்றாமல் உண்மையிலேயே நிலச் சீர்திருத்தத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும், அதிலே அரசு மிக உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும். இந்தக் குழுவிலே சமூக நலத் தொண்டர்கள் 3 பேர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் சமூக நலத் தொண்டு ஆற்ற வில்லையா என்று நிச்சயமாக கேட்கக்கூடிய ஆற்றல் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு உண்டு என்று எனக்குத் தெரியும். வலிவலத்தில், தஞ்சை மாவட்டத்தில் கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு, சர்வோதயத் தலைவர்கள், மாவட்டத்தில் உள்ள எல்லாக்கட்சித் தலைவர்களையம், அப்போது ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய மாவட்டத் தலைவர்கள், அதைப்போல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், வேறு பல கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் இணைந்து நின்று வலிவலம் போன்ற பெரிய பண்ணைகளில் பினாமி நிலங்கள் இருந்ததை எல்லாம் கைப்பற்றி அங்கே உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகள் பெற்றுக் கொள்ளத்தக்க வழிமுறைகளை நடத்திக்காட்டி இருப்பதை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். எனவே இந்தக் குழுக்கள் அமைகிற நேரத்தில் இந்தக் குழுக்களின் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இடம் பெறுவதற்கான வகை களைச் செய்திட வேண்டும். ஏனென்றால் எந்தக் கட்சிக்கும் இதிலே மாறான கருத்து கிடையாது. நிலங்கள் ஒரு சிலரிடத் திலே குவிந்து கிடப்பது மாற்றப்பட்டு அது

பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதிலே முரண்பாடான கருத்து யாருக்கும் கிடையாது. ஆகவேதான் இதிலே அரசியல் புகுந்து விடக்கூடாது. அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அனைத்துக் கட்சிகள் என்றால் பல கட்சிகள் இருக்கின்றன. எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடம் அளிக்க முடியுமா என்று அரசு கேட்குமானால், அங்கீகாரம் பெற்ற கட்சிகள், சட்டமன்றத்திலே இருக்கின்ற கட்சிகள் என்று இதிலே வடித்தெடுத்து, எல்லாக் கட்சியினுடைய பிரதிநிதிகளும் அந்தக் குழுவிலே அமைகின்ற அளவுக்கு இருந்திடுமேயானால் நல்ல முறையிலே அந்தப் பினாமி நிலங்களைக் கைப்பற்றுவதற்கும், அறிவிப்பதற்கும் அதிகாரிகளிடத்தில் விசாரணைக்கு உட்படுத்துவதற்கும், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்ற கருத்தினையும் நான் இந்த மாமன்றத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இத்தகைய பணிகளை அவர்கள் நிறைவேற்ற ஏற்றுக் கொள்வார்கள் என்றும் நம்பு கிறேன்.

ஒன்றை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்பு, 60 ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய நாட்டில் ஆதிக்கக்காரர்களாக நிலப்பிரபுக்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ஆதிக்கம் நிலப்பிரபுக்களிடம் இருந்து பிரிந்து, அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு தொழில் அதிபர்கள், வட்டிக்கடை வேந்தர்கள் என்று இப்படி வேறு பக்கம் அந்த ஆதிக்கம் திரும்பி இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களுக்கான கணைகள் கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகள் மீது பாய்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு மாறாக, நகர்ப்புறங்களில் இருக்கிற கோடீஸ்வரர்கள் மீதும் பாய்ந்திடவேண்டும். நகர்ப்புறத்தில் இன்றைக்கு 100 வீடுகள் 200 வீடுகள் என்று வைத்துக் கொண்டு இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீடுகள் உச்சவரம்புக்கு ஆட்படுத்தப்பட்டு கோடீஸ்வரர்களாக வாழ்கின்றவர்கள் நகர்ப்புறத்திலே பெரிய பெரிய ஆசை அரசர்களாகவும் வாழ்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆதிக்கபுரியினர் பக்கமும் நம்முடைய கவனம் திரும்பவேண்டும்.

பஸ் தேசியமயமாக ஆக்கப்பட வேண்டும் என்ற முற்போக்குத் திட்டத்தை கழக அரசு காலத்திலே கொண்டு வந்து இன்னமும் உச்சநீதிமன்றத்தில் அது உறங்கிக் கொண் டிருக்கிறது. அதனுடைய உறக்கத்தைத் தட்டி எழுப்பி பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற அந்த முற்போக்கான கொள்கையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தன்னுடைய முழு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். சட்டங்களைக் கொண்டு வருவது மசோதாக்களை நிறைவேற்றுவது மாத்திரம் பெரிதல்ல.

ரெவின்யூ போர்டு கூட கலைக்கப்பட்டிருக்கிறது. புரட்சி கரமான திட்டம்தான். ஆனால் இன்றைக்கு ரெவின்யூபோர்டு மெம்பர் என்ற பெயர் மாற்றப்பட்டு கமிஷனர் என்ற பெயர் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், மாவட்டத்தில் இருந்து வருகின்ற வழக்குகளினுடைய அப்பீல் போர்டு மெம்பர் என்ற ஒருவருக்குப் போகாமல், கமிஷனர் என்று சொல்கிற ஒரு வருக்குச் செல்லுகிற நிலைமைதான் இருக்கிறது.

எனவே சட்டங்களை, மசோதாக்களைக் கொண்டு வருவது மாத்திரம் பெரிதல்ல. அவைகளை நடைமுறைப் படுத்துவதுதான் பெரிது. அவைகளை ஒழுங்காக, செம்மையாக நடைமுறைப் படுத்த அரசு முன்வருமானால், திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய நடவடிக்கைகளுக்குத் தனது ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, திருத்தத்தோடு வந்திருக்கிற இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினை

**உரை : 21** **நாள்: 21.08.1981**

**கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே! மாண்பு மிகு அவை முன்னவர் அவர்கள் இந்த அவையின் முன்னால் வைத்துள்ள மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகின்ற கடமையுணர்ச்சியோடு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். ஏறத்தாழ, இருபது ஆண்டு காலமாகவே, இலங்கையில் தமிழர்களுடைய பிரச்சனை அவ்வப்போது பயங்கரமாக எழுவதும், இன வெறிக்கு, ஆதிக்க வெறிக்கு, அங்குள்ள தமிழர்கள் பலியாகின்ற சூழல் ஏற்படுவதும், அவர்களுடைய கண்ணீர் வெளிப்படும்போது எல்லாம் அதனைத் துடைத்திடும் கரங்கள் தாய்த் தமிழகத்திலேயிருந்து நீளுவதும், நம் வரலாற்று நிகழ்ச்சியாக ஆகிவிட்டதாக நாம் உணர்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே, இருபது ஆண்டுகளுக்கு முன்பே, இலங்கையிலுள்ள தமிழர்கள் தமிழ் மங்கையர், தமிழ் மழலையர் இவர்கள் அனைவரும் மரண வேதனைக்கு, மானபங்கத்திற்கு ஆட்படுத்தப்பட்ட போது, தமிழ்நாடு கொடுத்த குரலின் காரணமாக அமைதி நிலவிடவும், அதற்குப் பிறகு ஒரு நீண்ட இடைவெளி காலம் தமிழர்கள் நிம்மதியாக வாழ்ந்திடவுமான ஒரு நிலை இலங்கைச் சீமையில் ஏற்பட்டது. ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற நாட்களுக்குப் பிறகு; இலங்கையிலே இருக்கின்ற சிங்கள மக்களோடு தாங்களும் ஒற்றுமையாக, அதே நேரத்திலே தமிழர்களுக்கு உரிய கலாச்சார, மொழி, இன, உரிமைகளைச் சமமாகப் பெற்று, வாழ வேண்டுமென்ற திட்டம் வகுத்துக் கொண்டு, வாழ்ந்த தமிழர்கள், தனி நாடு கேட்க வேண்டிய அளவுக்கு துரத்தப்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

இனி தங்களால் இணைந்திருந்து வாழமுடியாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் விடுதலைப் போர்க்

கொடியை இலங்கையிலுள்ள தமிழர்கள் உயர்த்தினார்கள். அதன் தொடர்பான விளக்கங்களில், இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அவையில் நான் எந்தக் கருத்துகளையும் எடுத்து வைக்க விரும்பவில்லை.

முழுக்க முழுக்க வெளிநாட்டுப் பிரச்சினை இது என்று சொல்லப்பட்டாலும் கூட, அதே முழுக்க முழுக்க என்ற சொற்களைப் பயன்படுத்தி முழுக்க முழுக்க இதை நாம் அறவே தவிர்த்து விடுகின்ற பிரச்சினை அல்ல, என்பதையும் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதை இந்த அவையிலுள்ளவர்களுக்கு அல்ல, இந்தியப் பேரரசை இன்றைக்கு நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அவையின் சார்பாக இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெளிநாட்டுப் பிரச்சினைகளில், குறிப்பாக மைனாரிட்டிஸ் ரைட்ஸ் போன்ற வெளிநாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுகிற உரிமையையும், அதுபற்றிப் பேசுகிற உரிமையையும் மக்கள் உரிமை சங்கங்கள் உலக அளவில் பெற்றிருக்கின்றன என்பதை நாம் மிகவும் தெளிவாக அறிவோம். குறிப்பாக சிறுபான்மையோர் உரிமையானாலும், தொழிலாளர் உரிமையானாலும், வெளிநாட்டுக் குடிமக்கள் உரிமையானாலும் இவை எல்லாம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே ஆழ்ந்த கவனத்தை அப்படிப்பட்ட மக்கள் உரிமைச் சங்கங்கள் நிலைநாட்டி வருகின்றன. அதே போல் நாம், இந்த அவையிலுள்ள நாம், அவை முன்னவர் நாவலர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், இன உணர்ச்சியில் மொழி உணர்ச்சியில், பண்பாட்டு உணர்வில் நம்மோடு கலந்திருக்கிற இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை தமிழர்கள் என்ற அந்த உணர்வோடு நாம் அணுகுகிறோம் என்றாலும், இந்தியப் பேரரசு மனிதாபிமான உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்பதுதான் மிக முக்கியமானதும், அவசரமானதும், அவசியமானதுமான நம்முடைய வேண்டுகோள் ஆகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்புதான் ஒரு பெரிய கலவரம் யாழ்ப்பாணம் பகுதியில் நடைபெற்று தமிழர்கள் அவதிக்குள்ளானார்கள். தமிழர்களின் கோயில்கள் தீக்கிரையாக்கப்

பெற்றன. தமிழர்கள் பத்திரிகை அலுவலகங்கள் சூறையாடப் பட்டன. தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்ற தமிழ் நூல்கள் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள இலங்கையிலுள்ள மிகப் பெரிய நூல் நிலையம் சாம்பலாக்கப்பெற்ற ஒரு நூலின் சிறிய பக்கத்தைக் கூட, ஒரு ஏட்டினைக் கூட திரும்பப் பெற முடியாத அளவு கருகிவிட்டது என்ற சேதியை கேள்விப்படுகிறோம். கேள்விப் படுவது மாத்திரமல்ல, அமெரிக்கா செல்லுகிற வழியில் சென்னையில் எங்களை எல்லாம் சந்தித்த ஈழத்துத் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் அந்தச் சோகச் சம்பவத்தை விவாதிக்கச் சொன்னார்கள்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் இந்தியப் பேரரசின் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களிடம், தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய தமிழர்களுக்காக எடுத்து வைத்த கோரிக்கைகளில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்திய இந்தியப் பிரதமர் அவர்கள் தக்க ஏற்பாடுகளை நிச்சயமாக இந்தியப் பேரரசு கவனிக்கும் என்ற உறுதிமொழியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அதைப் போல் முதலமைச்சருக்கு அளித் திருக்கும் சேதிகளை ஏடுகளில் பார்த்து ஓரளவு ஆறுதலும் மனநிறைவும் பெற்றுள்ளேன்.

வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் இதுபற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இலங்கையிலே தமிழர்கள் தாக்கப்படுகிற நேரத்தில் எல்லாம், தமிழ் நாட்டி லிருந்து இந்தியப் பேரரசுக்கு எல்லாக் கட்சியிலும் உள்ளவர் களாலும் கட்சி சார்பற்ற முறையில் கட்சி வேறுபாடுகளை யெல்லாம் கடந்து, அனைவரும் தமிழர்கள் என்கின்ற அந்த உணர்வோடு, அவதிப்படுகின்ற தமிழர்கள் இலங்கையிலே இருந்தாலும் அவர்கள் உலகத்தில் வேறு எந்த நாட்டிலோ எந்தப் பகுதியிலோ இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவாக தமிழகத்திலே இருக்கின்ற 5 கோடி தமிழர்களும் தயாராக இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஆதரவு தர அரவணைப்புத் தர இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் கட்சிகளை எல்லாம்

மறந்து நிலைநாட்டி இருக்கிறோம். அந்த வகையிலே தமிழர்களை ஒற்றுமையோடு இன்றைக்கு இந்தத் தீர்மானத்திலே காணுகின்ற ஒரு அரும்பெரும் காட்சியை என்னால் காண முடிகிறது.

இந்தப் பிரச்சினைகளிலே நாம் கருத்து சொல்வதற்கே தகுதியற்றவர்கள் என்று நிச்சயமாக ஆகிவிட மாட்டோம். அயர்லாந்திலே நடைபெறுகின்ற போராட்டத்திலே பாபிசாண்டர்ஸை தொடர்ந்து இதுவரையில் 10 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு நாம் அனுதாபம் தெரிவிக்கிறோம். மாநிலங்கள் அவையிலேகூட இதுகுறித்து சில கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். அதுபோல் வெளிநாட்டிலே அவதியுறுகின்றவர்கள் தமிழர்கள் அல்லவா என்ற பிரச்சினையைவிட அனைவரும் மனிதர்கள் என்கின்ற அந்த உணர்வின் அடிப்படையிலாவது அந்த மனிதாபிமானத் தன்மையோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே பல கட்சிகளின் சார்பிலே, எல்லாக் கட்சிகளின் சார்பிலும் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் எல்லாம் கருதி, அதற்கான நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்றிருந்தாலும்கூட அரசின் சார்பிலே இப்படி ஒரு தீர்மானம் வருவது மிகப் பொருத்தமுடையது என்று நாங்கள் கருதியதற்கேற்ப அரசின் சார்பிலே வந்திருக்கின்ற தீர்மானத்தை மன நிறைவோடு நான் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்கின்ற அளவோடு நில்லாமல் இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட வேண்டும், அவர்கள் சிந்துகின்ற செந்நீர் நிறுத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக் கூறி அமர்கிறேன்.

# மாநில சுயாட்சித் தீர்மானம்

**உரை : 22** **நாள் : 29.03.1983**

**கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் அருமை நண்பர் உமாநாத் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் வரவேற்றுப் பாராட்டி, சிலபல கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்குப் பேசப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படையை மையமாக வைத்துக் கூறப்பட்டவை. அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்ட கருத்துக்கள் ஆனாலும் சரி, உள்ளதே போதும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் ஆனாலும் சரி, அரசியல் சட்டத்தை மையப்படுத்தி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் என்பதிலே மாறுபாடு இல்லை.

முதலிலே நம்முடைய அரசியல் சட்டம் எத்தகையது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1935-வது ஆண்டுச் சட்டம் இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களிலே உள்ள சுதேசிகளை நம்பாமல் அன்றைக்கு இருந்த வெள்ளைக்காரர்கள் "1935 அக்ட்" என்ற இந்தச் சட்டத்தை உருவாக்கினார்கள். அதை வரிக்கு வரி, இளம் பிள்ளைகள் சொல்வார்களே 'ஈ அடித்தான் காப்பி' என்று, அதைப்போல காப்பியடித்து கொண்டுவரப்பட்ட சட்டம்தான் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் என்று சொன்னால் மிகையாகாது.

அரசியல் சட்டம் உருவானபிறகு, மொழிவாரி மாநிலங்கள் தேவை என்கிற குரல் எழுப்பப்பெற்று, அது மதிக்கப்பட்டு மொழி

வாரியாக நிலப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு, அந்தந்த நிலப் பரப்பிலும், குறிப்பிட்ட தாய்மொழியைக் கொண்டவர்கள் தங்களுடைய தாய்மொழிக்கு செல்வாக்கு இருக்க வேண்டும். அந்தத் தாய் மொழிதான், அந்த மொழிவாரி மாநிலங்களிலே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டு 35 ஆண்டுக்காலமாக ஒரு மாநிலப் பிரக்ஞை, அதாவது உணர்வு, ஆங்கிலத்திலே சொல்லவேண்டும் என்றால், State Conciousness என்கிற ஒரு மாநிலப் பிரக்ஞை ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட இயலாது. அந்த மாநில உணர்வைத்தான் State Conciousness என்கிற அந்த உணர்வைத்தான், பிராந்திய உணர்வு என்றும், பிராந்திய வெறி என்றும் Chauvinism என்றும்கூட சிலர் வர்ணிப்பதை நாம் இன்றைக்குக் காண்கிறோம்.

ஒரு உதாரணத்தை இங்கே சொல்லவேண்டும் என்றால் கனடா என்னும் நாட்டில், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழி பேசுகிற மக்கள் இருக்கிறார்கள். அங்கே ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி, ஆகிய இரண்டு மொழிகளும் ஆட்சிமொழி களாக இருக்கின்றன. ஆனால், பிரெஞ்சு மொழி அதிகம் பேசுகிற ஒரு மாநிலம் கனடாவில் இருக்கிறது. கியூபெக் என்பது அதனுடைய பெயர். அந்த கியூபெக் மாநிலத்தை ஆளுகின்ற பிரெஞ்சு மொழி பேசுகின்ற அந்த மாநிலத்தை ஆளுகின்ற மாநில கட்சி சுதந்திரமேகூட கேட்டது. கனடா நாட்டிலே இருந்து விடுபட்டு; பிரிந்து தனித்துப் போய்விட வேண்டும் என்கிற சுதந்திரக் குரலையேகூட எழுப்பியது. எழுப்பியது மாத்திரம் அல்ல, அப்படித் தனித்துப் போகவேண்டும் என்பதற்காக ஒரு ரெஃபரேண்டம் கூட கொண்டு வந்தது, அப்படி வைக்கப்பட்ட அந்த ரெஃபரெண்டத்தில் அந்த மாநிலக் கட்சி தோற்றுவிட்டது. அதற்குப் பிறகு, அந்த மாநிலக் கட்சி தலையெடுக்கவே எடுக்காது என்று குறிப்பிட்ட போதிலும் அடுத்து நடைபெற்ற தேர்தலில் அதே மாநிலக் கட்சி பதவிக்கு வந்து, இப்போது கனடா நாட்டினுடைய ஒரு மாநிலமாக அந்த மாநிலம் இருந்தாலும் கூட, அந்த மாநிலக் கட்சியால் அது ஆளப்பட்டாலும் கூட, இன்னும் சுதந்திரக் குரலை அந்த மாநிலத்திலே உள்ள அந்தக் கட்சி எழுப்பிக்கொண்டே இருக்கிறது.

நான் அதை மேலும் விரிவாக எடுத்துக்காட்டுடன் கூற வேண்டுமானால், ஜெரால்ட் பெல்லட்டியன் என்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், கனடா நாட்டு பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருப்பவர், ஒரு பெரிய பத்திரிகையின் ஆசிரியரும் கூட, அவரை நிருபர்கள் சந்தித்துக் கேட்கிற நேரத்தில், தன்னுடைய கருத்தை அவர் வெளியிடும் விதத்தில் சொல்கிறார், நான் முதலில் பிரெஞ்சு சமுதாயத்தைச் சேர்ந்தவன், இரண்டாவதாகத்தான் நான் கனடா நாட்டுக்காரன்' இதை ஆங்கிலத்திலே சொல்லவேண்டும் என்றால், If I told you that I am firstly the Canadian and then my belonging to the French Community comes to second, that would be a shameful life. பிரெஞ்சு சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதை இரண்டாவதாக ஆக்கிவிட்டு, நான் கனடியன் என்பதை முதலாவதாக ஆக்கினால், அதைவிட வெட்கக்கரமான பொய் ஒன்று இருக்க முடியாது என்று, ஜெரால்ட் பெல்லட்டியன் என்ற கனடா நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட கருத்துக்களை, பிரிந்து போக வேண்டும் என்கிற ஒரு கட்சியினுடைய முழக்கம் இந்த நாட்டில் Chauvinism என்றோ, அல்லது தேசவிரோதம் என்றோ சொல்லப்பட்டு வருகிறது.

ஆனால், நாம் இங்கே தமிழ்நாடோ அல்லது ஆந்திரமோ, அல்லது கர்நாடகமோ அல்லது இந்த பெங்களூர் மாநாட்டிலே கலந்துகொண்ட, மற்ற மாநிலங்களில் ஒன்றான புதுவையோ, யாரும் தனியாக பிரிந்து போய்விட வேண்டும், அல்லது 4 மாநிலங்களும் சேர்ந்து தனியாகப் போய்விட வேண்டும் என்கிற எண்ணத்தோடு அல்லாமல், ஒற்றுமைக்கு, அந்த உணர்வுக்கு உள்ளடங்கிய, இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்காத அளவில், மாநில உரிமைகளைக் கேட்பது எப்படி தேச விரோதமாகும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இது தேசத்துரோகம் என்று வேறு சில மாநில முதலமைச்சர்கள் எல்லாம், அல்லது இன்று இங்கேயிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் எல்லாம், அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் எடுத்துக் குறிப்பிடுவார்களேயானால், நான் அதை மிகமிக வன்மையாக மறுக்க விரும்புகிறேன்.

இது தேசத்துரோகம் அல்ல, ஒரு தேசத்திலிருந்து பிரிந்து செல்கிற ஒரு உணர்வையே கனடா போன்ற நாடுகளில் மதிக்கிற நேரத்தில் நாம் இங்கே பிரிந்துபோக விரும்பவில்லை. மாநிலங்களுக்கான உரிமைகள் கிடைப்பதற்காக, சுய ஆட்சித் தன்மையை ஒரு கூட்டாட்சி அமைப்புக்குள்ளேயே வழங்குங்கள் என்று கேட்பதற்கு, அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் தேவை என்று கூறுவது நாட்டுத் துரோகம் ஆகாது, பிரிவினை முழக்கம் ஆகாது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மொழியால் தமிழனாகவும், இனத்தால் திராவிடனாகவும், நாட்டால் இந்தியனாகவும், உலகத்தால் மனிதனாகவும் இருக்கவேண்டும் என்ற கொள்கை கொண்டிருக்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். இந்தியாவிலே ஏறத்தாழ 20 க்யூபெக்குகள் இருக்கின்றன. கனடா நாட்டிலே இருக்கின்ற க்யூபெக்குகள் போன்று இந்தியாவில் இருக்கின்ற க்யூபெக்குகள் விடுதலை கேட்கின்ற க்யூபெக்குகள் அல்ல. அங்கே எப்படி பிரெஞ்சு மொழி பேசுகின்ற சமுதாயத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறார்களோ அதைப்போல் வங்காள மொழி பேசுகின்றவன் என்று பெருமை கொள்கின்ற மேற்கு வங்கக் குடிமகனும், நான் தெலுங்கன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகின்ற ஆந்திர மாநில குடிமகனும், நான் கன்னடம் பேசுகின்றவன் என்று பெருமை கொள்கின்ற கர்நாடக மாநிலக் குடிமகனும், நான் மலையாள மொழிக்கு உரியவன் என்று பெருமை அடைகின்ற கேரள மாநிலத்தவனும் நான் தமிழன் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன் என்று பெருமை அடைகின்ற தமிழ்நாட்டுக்காரனும் எப்படி தங்கள் மொழி உரிமையைப் பேணிக் காக்கவேண்டும், மொழி உரிமையின் மீது பிறமொழி ஆதிக்கம், பிறமொழி படையெடுப்பு கூடாது என்று கருதுகின்றாயோ அதைப் போல க்யூபெக் அளவிலே இல்லாவிட்டாலும் கூட - மொழிவாரி மாநிலங்கள் என்ற அளவில் ஏறத்தாழ 20 க்யூபெக்குகள் இந்தியத் திருநாட்டில் இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட உணர்வின் அடிப்படையில் நாம் மறுத்துப் பேசிவிடவும் இயலாது. அந்த அடிப்படையிலேதான் முதல் கடமையாக தென் மாநில முதல்வர்களுடைய மாநாடு கூட்டப்பெற்று இருக்கின்றது. அதைக் கூட்டுவதற்காக முயற்சி எடுத்துக் கொண்ட கர்நாடக

முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட தமிழக முதலமைச்சரையும், ஆந்திர முதலமைச்சரையும், புதுவை மாநில முதலமைச்சரையும் வாழ்த்துகிறேன். அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், இப்போது நம்முடைய முதலமைச்சருக்குக் கிடைத்தது போன்ற நல்ல சூழ்நிலை அப்போது இருந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. காரணம் பக்கத்திலே ஆந்திராவிலே, கர்நாடகத்திலே வேறு கட்சிகளின் ஆட்சிகள், இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள விரும்பாத கட்சிகளின் ஆட்சிகள் இருந்த காரணத்தால், எங்கே தொலை தூரத்தில் உள்ள பஞ்சாப் மாநில முதலமைச்சர் குர்னாம்சிங் அவர்களோடு மாத்திரம் தொடர்பு கொண்டு மாநில சுயாட்சிக் கொள்கையை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தினை எடுத்துவைக்க முடிந்தது. ஆனால் இன்றைக்கு சூழ்நிலை மிகப் பக்குவமாகி இருக்கின்றது. நாங்கள் முதலிலே எடுத்துச் சொன்ன கருத்துக்கள், பல ஆண்டுக் காலமாகவே தமிழகத்திலே தழைத்துக் குலுங்கி இருக்கின்ற கருத்துக்கள், இன்றைக்கு கர்நாடகாவிலே காயாகிக் கனிந்து கொண்டிருக்கின்ற கருத்துக்கள், ஆந்திராவிலே அரும்பு விடுகின்ற கருத்துக்கள் என்ற ஒரு அற்புதமான சூழ்நிலை, வரவேற்கத்தக்க சூழ்நிலை இன்றைக்கு நம்முடைய முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நண்பர் உமாநாத் அவர்கள் தீர்மானத்திலே எடுத்துக்காட்டி இருந்தாலும் கூட இதை முற்றிலும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் அவரோடு சேர்ந்து கழகத்தின் சார்பிலே நானும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் என்னென்ன கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டன என்பதை இந்த அவையிலே ஒரு அறிக்கையாக அரசின் சார்பிலே வைக்கப் பட்டதை அனைவரும் படித்துப் பார்த்திருக்கிறோம். இங்கே பேசிய பல்வேறு கட்சியின் தலைவர்களும் விளக்கமாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள். பெங்களூர் மாநாட்டில் அடிப்படை வருமான வரியோடு மேல் வரியை இணைத்து அப்படி இணைக்கப்பட்ட சூழ்நிலையில் மாநிலங்களின் பங்கினைத் தரவேண்டும் என்பது அந்த அறிக்கையிலே வருகின்ற ஒரு

வாசகம். இதனைக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழு எந்த வடிவத்திலே விளக்கியிருக்கின்றது என்பதை இங்கே எடுத்துக்காட்டுவது ஏதோ இதற்கு முன்பே நாங்கள் செய்துவிட்டோம் என்பதற்காக அல்ல. பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

ராஜமன்னார் குழு பரிந்துரை மேல்வரி வருவாயில் மாநிலங்கள் பங்குபெற முடியாமல் போனால் அதில் நியாயம் இல்லை. எனவே மேல் வரியை மாநிலங்களிடையே பகிர்ந்து கொள்ளும் வகையில் அடிப்படை வருமான வரி விதிக்கப் படுவதோடு மேல் வரி இணைக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கிறோம். இது ராஜமன்னாருடைய பரிந்துரை. அதற்கு பிறகு செழியன், மாறன் குழுவினர் அதை ஆராய்ந்து அரசுக்கு, அரசு கட்சிக்கு அளித்த அந்த அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை பரிசீலித்த பிறகு இந்த அவையில் வைத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருக்கிற வாசகம் போன்றது தான் பெங்களூர் மாநாட்டிலே வருமான வரியோடு மேல் வரியை இணைத்து மாநிலங்களுக்கு பங்கு தர வேண்டும் என்ற கருத்துமாகும். ராஜமன்னார் கமிட்டியின் சிபாரிசும் ஏறத்தாழ அதுதான். ஆனால் 1974-ம் ஆண்டு கழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்திலே மத்திய அரசினுடைய பட்டியலிலிருந்து வருமான வரியை மாநில பட்டியலுக்கு அப்படியே மாற்றிவிடவேண்டும் என்பது ஆகும். நம்முடைய அருமை நண்பன் சித்தன் அவர்கள் இப்போது கூட பிரதமர் வறட்சி நிவாரண நிதி வழங்குவதற்காக எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு தமிழ் நாட்டுக்கு வந்தார்கள்? இப்படி எல்லாம் மத்திய அரசுக்கு அக்கறை இல்லையா அதை நீங்கள் மறுக்கிறீர்களா என்று கேட்டார்கள். எங்களுக்குள்ள கஷ்டமே பிரதமருக்கு இந்த சிரமம் ஏன் என்பதுதான். இப்படிப்பட்ட சிரமங்களை அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான். நிதி ஆதாரங்களை பெருவாரியாக ஒவ்வொரு மாநிலத்திற்கு வழங்கி விடுவார்களானால் கையை ஏந்தி ஒவ்வொரு மாநிலமும் டெல்லியை நோக்கி பிச்சை எடுக்கின்ற அந்தத் தன்மை மாற்றப்பட்டு விடுமானால் ஏகப்பட்ட சிரமத்தை தாங்கிக் கொண்டு நம்முடைய பிரதமர் பகல் 3 மணிக்கு வேகாத வெயிலில் விமான நிலையத்தில் வந்து இறங்கவும், 3 மணி நேரம்

4 மணி நேரம், தமிழகத்தில் 2, 3 பகுதிகளில் சுற்றிப் பார்க்கவுமான அந்தச் சிரமத்தைக்கூட அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. அந்த நேரத்தில் வெளிநாட்டு உறவுகள் பற்றி பல்வேறு விஷயங்களை அவர்கள் கலந்து பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும். எனவேதான் நிதி ஆதாரங்களை பொறுத்தமட்டிலே மாநிலங்களுக்கு அதிக வசதி வாய்ப்புகள் இருந்திட வேண்டும் என்பதற்காகத்தான் வருமான வரி கூட மாநிலப் பட்டியலுக்கு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி ஆனால் மத்திய அரசு பணத்திற்கு எங்கே போகும் என்றால் நாங்கள் தருகிறோம் வாங்கிக் கொள்ளுங்கள். இதுவரையில் நீங்கள் கொடுத்தீர்கள். நாங்கள் வாங்கிக் கொண்டோம். இனிமேல் நாங்கள் தருகிறோம் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்கின்ற அந்த நிலை ஏன் வரக்கூடாது? ஏன் அப்படிப்பட்ட ஒரு பெருமை மாநிலங்களுக்கு ஏற்படக்கூடாது என்பதைதான் நம்முடைய நண்பர் சித்தன் அவர்கள் சித்தம் இறங்கி எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூர் மாநாட்டிலே இன்னொன்று; அரசியல் அமைப்பிலே 256, 257 பிரிவுகள் மாநில பட்டியலிலும் குடியரசு தலைவருடைய சம்மதத்தை பெறும் அவசியமின்றி சட்டம் இயற்ற மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்பது குறித்து பரிசீலிக்கப்படவேண்டும். இது பெங்களூர் மாநாட்டு தீர்மானம் அல்லது அவர்களுடைய கருத்து ராஜமன்னார் பரிந்துரையும் அதுவேதான். 256, 257, 339 (2) ஆகிய பிரிவுகள் அரசியல் அமைப்பு சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். இது ராஜமன்னார் பரிந்துரை. அந்தப் பரிந்துரை மீது 1974-ம் ஆண்டு கழக அரசு இங்கே கொண்டு வந்த தீர்மானம் ராஜமன்னார் பரிந்துரையை ஏற்று 256, 257, 339 (2) அத்துடன் 344 (6) ஆகிய பிரிவுகளை நீக்கவேண்டும் என்பதாகும். 256 என்றால் என்ன? மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரம்; அது நீக்கப்படவேண்டும். 257 என்றால் என்ன? மாநிலத்தினுடைய சட்டங்களுக்கு மத்திய அரசு எந்த நேரத்திலும் தடங்கல் செய்யலாம் என்கின்ற அதிகாரம் அது நீக்கப்படவேண்டும். 339 (2) என்றால் என்ன? தாழ்த்தப்பட்ட

மலைசாதி மக்கள் குறித்து மத்திய அரசுதான் கட்டளைகள் பிறப்பிக்கும் என்பது. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைப் பற்றி மாநில அரசுகளுக்கு கவலை கிடையாதா? மத்திய அரசுக்கு மாத்திரம்தான் அந்த கவலையா? எனவே அந்தப் பிரிவு நீக்கப்படவேண்டும். 344 (6) என்கின்ற பிரிவு என்ன? மொழி குறித்த கட்டளைகளை குடியரசுத் தலைவர் பிறப்பிப்பார். அது மிக மிக அபாயகரமானது. இந்திதான் தேசிய மொழி; ஆங்கிலம் அகற்றப்பட்டு விட்டது என்கின்ற கட்டளையைக் கூட திடீர் என்று ஒரு நாள் குடியரசு தலைவர் இந்த 344 (6) என்கின்ற பிரிவின் கீழ் கட்டளையாக பிறப்பித்துவிட முடியும். எனவே தான் கழக அரசில் 1974-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலே 256, 257, 339 (2), 344 (6) ஆகிய பிரிவுகள் அறவே நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

பெங்களூர் மாநாட்டில் இங்கே நம்முடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல் மிக முக்கியமான ஆனால், ஒரே ஒரு வரியிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஒரே வரிக் கருத்திலேதான் மாநில சுயாட்சியே அடங்கியிருக்கிறது. "அரசியலமைப்பில் 7-வது விவர அட்டவணையை மாற்றியமைப்பது உட்பட சட்டமியற்றுவதற்கான அதிகாரம் மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும்". இது பெங்களூர் மாநாட்டினுடைய கருத்துரை அல்லது தீர்மானம். அரசியலமைப்பிலே உள்ள 7-வது விவர அட்டவணையை மாற்றியமைக்க வேண்டும். 7-வது விவர அட்டவணை என்ன? மாநிலங்களுக்கு என்ன என்ன அதிகாரங்கள், மத்திய ஆட்சிக்கு என்ன என்ன அதிகாரங்கள், பொதுப் பட்டியலிலே என்ன என்ன அதிகாரங்கள், இவைகள்தான் 7-வது அட்டவணை. அதை மாற்றியமைக்க வேண்டும்.

1974ஆம் ஆண்டு கழக அரசு தீர்மானத்தில் வருகிற வாசகத்தை நான் படிக்க விரும்புகிறேன். "அரசியலமைப்பின் 7-வது இணைப்பு குறித்து ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை கவனத்திலே கொண்டு, நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, மாநிலங்களிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவைகளைக் குறித்த அதிகாரங்கள் மாத்திரம் மத்திய கூட்டாட்சி அரசுக்கு ஒதுக்கப்பட்டு எஞ்சிய

அதிகாரங்கள் உள்பட மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மாத்திரமே இருக்கிற வகையில் உண்மையான கூட்டாட்சி அரசை நிறுவும் நோக்கத்தோடு மேற்சொன்ன அதிகார விவரப் பட்டியலை ஆராய்ந்து அவற்றை கூட்டாட்சிப் பட்டியல் என்றும், மாநிலப் பட்டியல் என்றும், பொதுப் பட்டியல் என்றும் 3 தொகுப்புகளாக ஒதுக்கப்பட்டு, அவைகள் பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன. அன்றைக்கு நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தினுடைய நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் – ஆங்கிலத்திலே அனக்ஷர் என்றும், தமிழிலே இணைப்பு என்றும் தரப்பட்டிருக்கிற அந்தக் குறிப்புகளிலே எவையெவை மத்தியப் பட்டியலில் இருக்கவேண்டும். எவையெவை மாநிலப் பட்டியலுக்கு வரவேண்டும், எவையெவை மத்தியப் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும், எவையெவை பொதுப் பட்டியலுக்கு உரியவை என்பதை ராஜமன்னார் குழுவினுடைய பரிந்துரையினுடைய அடிப்படையில் அன்றைய தினம் மேலும் சற்றுத் தீவிரமாக நிறைவேற்றி வைத்திருக்கிறோம். இப்போது மத்தியப் பட்டியலுக்கு இருக்கிற அதிகாரங்கள் 97 அதிகாரங்கள், மாநிலப் பட்டியலுக்கு இருக்கிற அதிகாரங்கள் 66. அதிலே சில எடுக்கப்பட்டுவிட்டன. பொதுப் பட்டியலில் 47 அதிகாரங்கள். பொதுப் பட்டியலிலே அதிகாரங்கள் 47 என்று எண்ணிக்கை அளவில் இருந்தாலும்கூட ஒருமுறை திரு. கே. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பொதுப்பட்டியலுக்குப் போய்விடக்கூடியவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அது எவ்வாறு? திரு. சந்தானம் அவர்களுடைய கருத்து எவ்வாறு நமக்கு உடன்பாடு உடையது என்பதை நான் விளக்க விரும்புகிறேன். பொதுப்பட்டியலில் குறிப்பிடப்படும் விஷயங்களில் மாநில அரசும் மத்திய அரசும் சட்டமியற்றலாம். பொதுப் பட்டியலில் உள்ள ஒரு விவரம் குறித்து ஒரு அதிகாரம் குறித்து மாநில அரசும் சட்டமியற்றலாம், மத்திய அரசும் சட்டமியற்றலாம். ஆனால் அந்தச் சட்டங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளவைகளாக இருந்தால் மத்திய அரசு நிறைவேற்றுகிற சட்டம்தான் செல்லுபடியாகும். மாநில அரசு நிறைவேற்றுகிற சட்டம் செல்லுபடியாகாது. ஒருவேளை ஏற்கனவே உள்ள சட்டத்திற்கு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெற்ற மாநிலத்தால் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால்

அந்தச் சட்டம் செல்லுபடியாகும். என்றாலும்கூட புதிய ஆபத்து என்னவென்றால் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெற்ற ஒரு சட்டத்தை இங்கே மாநில அரசு நிறைவேற்றிவிட்டாலும் மத்திய அரசு விரும்பினால் இதே விஷயத்திற்கு நாடாளுமன்றத்தில் வேறு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து மாநில சட்டத்தை செல்லுபடியாகாமல் செய்யமுடியும். இப்போது பொதுப் பட்டியலில் மின்சாரம், பத்திரிகை, தொழிற்சாலை, மருந்துகள், டிரேட் யூனியன், திருமணங்கள், விவாகரத்துகள், கோர்ட் அவமதிப்பு, குடும்ப நலத் திட்டம் போன்ற 47 அதிகாரங்களில் முரண்பாடுகள் ஏற்படுமானால், சட்டம் இயற்றுகிற நேரத்திலே, மாநிலங்களுடைய சட்டங்கள் புறக்கணிக்கப்படக்கூடிய சூழ்நிலை, நான் இங்கே எடுத்துச் சொன்ன இரண்டு விவரங்களாலும் வெகு தெளிவாக உணரப்படும். மத்திய பட்டியல்; 97 மிகக் கொழுத்த அதிகாரங்களைக் கொண்ட பட்டியல் மத்திய பட்டியல். பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், ரயில்வே, தேசிய நெடுஞ்சாலை, துறைமுகம், ஆகாய மார்க்கம், தபால் தந்தி, கரன்சி, நாணய-செலாவணி, ரிசர்வ் வங்கி, பாரிசுச் சீட்டு, வங்கிகள், இன்சூரன்ஸ், இறக்குமதி, ஏற்றுமதி, சுரங்கம், எண்ணெய், சென்சார், வருமான வரி, கம்பெனி வரி, உயர்தரக் கல்வி போன்ற கொழுத்த அதிகாரங்கள் இன்றைக்கு அவர்களுக்கு இருப்பதோடு, மாநிலப் பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் சேராமல் எஞ்சியிருக்கின்ற அதிகாரங்கள் அவர்களுக்குத்தான் என்ற நிலை இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. மாநிலப் பட்டியலில் 66 அதிகாரங்கள். இதிலே முக்கியமில்லாத அதிகாரங்கள் 30; முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டினேன்; இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணீர் இல்லை என்ற கதையைப்போல், 66 அதிகாரங்களில் 30 அதிகாரங்கள் முக்கியமே இல்லாதவை. 22 அதிகாரங்கள் வரி விதிப்பைப் பற்றிய அதிகாரங்கள். இந்த 30-ல் முக்கியத்துவம் இல்லாத அதிகாரங்களின் பட்டியலை படிக்கிறேன். கால்நடைகள் அடைக்கும் பட்டிகள் - பவுண்டுகள் - பெரிய அதிகாரம், கால்நடை ட்ரெஸ்பாஸ்களை தடுக்கிற அதிகாரம்; வனவிலங்கு, பறவைகள் பாதுகாக்கிற அதிகாரம் : மார்க்கெட்டுகள், சந்தைகள் போன்ற அதிகாரம், எடைகள் அளவுகள்; (யாருக்காவது மந்திரிகளுக்கு இலாக்கா குறைவாக

இருக்குமானால் அதைத் தூக்கித்தான் முதலமைச்சர் அந்த மந்திரிக்கு கொடுப்பார்.) எடைகள் அளவுகள் என்ற அந்த அதிகாரம்; அரங்குகள், நாடகம், பொழுதுபோக்கு, கேளிக்கை : அத்துடன் சினிமா; (சினிமாவிலே சென்சார் தவிர; அதுவும் மாநிலங்களுக்குக் கிடையாது) பந்தயம், சூதாட்டம், உள்நாட்டு யாத்திரை. (அதுவும் வெளிநாட்டு யாத்திரை இல்லை; உள்நாட்டு யாத்திரை.) சத்திரம், சாவடி, இடுகாடு, சுடுகாடு, ஊனமுற்றோர், பிச்சைக்காரர்கள் நல்வாழ்வு : இவைகள் எல்லாம் அதிகாரங்களா? அல்லது ஒரு மாநில அரசு நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளா என்பதை எண்ணிப் பார்த்தால் இவைகள் அதிகாரப் பட்டியலில் கூட வர முடியாது.

**Thiru K. S. G. Haja Shareef :** Mr. Speaker Sir, The schedule was drafted by the Constituent Assembly. These items were given by them to the Central and State Governments. If the Hon. Leader of the Opposition wants any change he can certainly represent to the Commission, and that can be got done. Instead he goes on telling, why it should have been done, for which he must only ask the Constitution makers.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பட்டியலிலே உயர்தரக் கல்வி இருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உயர்தரக் கல்வி அல்ல, எல்லா கல்வியையும் இப்போது எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அது அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது செய்யப்பட்டதல்ல : இப்போது எமெர்ஜென்சி பீரியடிலே கல்வியை சேர்த்திருக் கிறார்கள். அது தவறு என்றுதான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நண்பர் ஹாஜா ஷெரிப் அவர்கள் சமையல்காரர்களைப் பற்றி நான் குறை சொல்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சமையல்காரரை குறை சொல்கிறேன்; சமையலையும் குறை சொல்கிறேன்; சில நேரங்களில் உப்பு அல்லது காரம் அதிகமாகி விட்டது என்று சமைத்தவர்களே கூட குறைபட்டுக் கொள்வதுண்டு. அதைப்போல அரசியல் சட்டத்தை உண்டாக்கிய அம்பேத்கார் போன்றவர்கள்

கூட அது குறையுள்ளது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இங்கே எடுத்துச் சொல்லப்படுகிற கருத்துக்கள் வருகிற குழுக்களில் அல்லது கமிஷன்களில் ஆராயப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர வேறு அல்ல என்பதை அவருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1970ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; ஒட்டுமொத்தமாக சொல்வோமேயானால் மாநில சுயாட்சி வேண்டுமென்கிற கருத்தினை வலியுறுத்துகிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, கழகம் ஒன்றாக இருந்த அந்தக் காலக்கட்டத்திலே, சென்னையில் ஒரு மாநாட்டை நடத்தினோம். அந்த மாநாட்டிலே மேற்கு வங்கத்தினுடைய முன்னாள் முதலமைச்சரும், பழுத்த தேசியவாதியுமான, அஜாய் முகர்ஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். அகாலிதள பொதுச் செயலாளர் பிரேம்சிங் லால்புரா அவர்களும் கலந்து கொண்டார்கள். தெலுங்கானா போராட்ட வீரரும் முன்னாள் ஆந்திர அமைச்சரான வி. பி. ராஜூ, எம். பி. அவர்களும் கலந்து கொண்டார்கள். மைசூர் நாடாளுமன்ற உறுப்பினரும் சோ கட்சியினுடைய உறுப்பினரும், இன்றைக்கு மத்திய அமைச்சருமான எஸ். எம். கிருஷ்ணா அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை வீர உரையாகும். வங்காள காங்கிரசின் பொதுச் செயலாளர், இன்றைய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களும் அன்றைக்கு அந்த மாநில சுயாட்சி மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

பீகார் மாநில சோஷலிஸ்ட் தலைவர் காமேஸ்வர் சிங் எம். பி. அவர்களும் கலந்துகொண்டார்கள் : பஞ்சாபைச் சேர்ந்த அகாலிதளக் கட்சியைச் சேர்ந்த திருமதி நிர்லிப் கவுர், எம். பி. அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிற்கு வரவேற்புரை ஆற்றியது இன்றைய நிதியமைச்சர் நம்முடைய நாவலர் அவர்கள்தான் என்பதையும் நான் நினைவுபடுத்துகின்றேன். ஏனென்றால், இந்த விவாதத்திலே இறுதியாக பதில் அளிக்கப்போவது அவர்தான் என்று நான் அவர் மூலமாகக் கேள்விப்பட்டேன். அப்பொழுது அவரிடம் கூடச் சொன்னேன், நான் பேசத் தேவையில்லையே, நீங்கள் பதில் அளித்தால் போதுமே என்றுகூட நான் அவரிடத்திலே சொன்னேன். அந்த அளவு தனது வரவேற்புரையிலே மாநில சுயாட்சி எந்த அளவுக்குத் தேவை, ஏன் தேவை என்கிற விளக்கங்களையும் தந்து அவர்கள் அன்றைக்கு உரையாற்றியிருக்கிறார்கள்.

மாநில சுயாட்சிக்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்கின்ற கருத்து நாங்களாகவே கூட உருவாக்கிக் கொண்டது அல்ல. சென்னையிலே நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில், 21-7-1968ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த கால கட்டத்தில் அண்ணா அவர்களும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களும் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்களும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும் கலந்துகொண்டார்கள். அப்பொழுது ஆங்கிலப் பத்திரிகையிலே வெளியிடப்பட்ட தலைப்பே கூட "Annadurai wants panel to consider State autonomy" என்பதுதான். மாநில சுயாட்சியைப் பற்றி ஆராய்ந்திட ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அண்ணா அவர்கள், 1968ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபொழுதே வெளியிட்டார்கள். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ராஜ்மன்னார் குழு - ராஜ்மன்னாரைத் தலைவராகக் கொண்டு, பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் இலட்சுமணசாமி அவர்களையும், முன்னாள் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினராகக் கொண்டு - மத்திய மாநில உறவுகளை ஆராய அமைக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்பட்டு, பணியை ஆற்றிக் கொண்டிருந்தபொழுது என். டி. சி, கூட்டத்தில் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் - நான் கலந்துகொண்டு, தமிழகத்தினுடைய மக்களின் சார்பாக, முதலமைச்சர் என்கிற முறையிலே உரையாற்றிய நேரத்தில் குறிப்பிட்ட வாசகங்களை இங்கே எடுத்துக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்குமென்று நம்புகிறேன். "கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை என்று அரசியல் தலைவர்களும் பொருளாதார வல்லுநர்களும் வெளிப்படையாகவே கூறி விட்டார்கள். அதற்குக் காரணம், திட்டம் வகுப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் வேண்டிய எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்திலே குவித்து வைத்திருப்பதுதான். குறிப்பாக கல்வி, விவசாயம், மருத்துவம், தொழில்கள் போன்றவற்றில் மத்திய அரசு அதிகப் பிடிப்பு வைத்திருப்பது தேவையற்றது. அது

நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. நாங்கள் அடிக்கடி கூறிவருவதுபோல், இந்திய நாட்டில் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், கரன்சி, தபால்-தந்தி, ரெயில்வே போன்ற முக்கியமான ஒருசில துறைகளைத் தவிர்த்து பிற துறைகளின் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தால் திட்டம், நாம் அனைவரும் விரும்பும்வண்ணம் செம்மையாகச் செயல்படவும், நாடு முன்னேறவும் வழிபிறக்கும். ஆகவேதான் மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி வேண்டுமென்று நாங்கள் சொல்லி வருகின்றோம். இம்மாதிரி சொல்வதால் நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வலுவான மத்திய அரசு இருக்க வேண்டுமென்ற கொள்கைக்கும் முரண்பட்டவர்கள் அல்லவே அல்ல. மத்தியிலே வலுவான ஆட்சியிருந்தால்தான் மாநிலங்களுக்கிடையே ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்து உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க முடியும். ஆனால், இன்றைய தினம் மத்திய அரசானது சிக்கல் இல்லாத துறைகளில் சிக்கலை உண்டாக்குவதும், சிக்கல் இருக்கக் கூடிய இடங்களில் சிக்கலைத் தீர்க்க முடியாது தவிப்பதுமான சூழ்நிலையிலேயே இருக்கிறது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் அரசியல் சட்டமானது ஒரே கட்சி எல்லா மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சி புரியும் என்ற ஒரு திடமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால், காலம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மாநிலக்கட்சிகள் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. ஆனால் மத்தியில் வேறு ஒரு கட்சி ஆட்சிப் பொறுப்பை வகிக்கிறது.

இம்மாதிரியான மாறுபட்ட சூழ்நிலையில் மத்திய அரசு உருவாக்கும் ஒவ்வொரு கொள்கையையும் அந்தந்த மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது சரியானதல்ல. எனவே விரைவில் அரசியல் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருவது, தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் நல்லது என்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்." இதைத்தான் 21-3-1970-ல் டில்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன். ஏன் அதனை

இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், 1970-71-ஆம் ஆண்டிலேயே மாநில சுயாட்சிக்கான கருத்துக்கள் ஆராயப்பட்டன.

நம்முடைய நண்பர் உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1977ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில், அசோக் மித்ரா (அவர் அந்த மாநிலத்தினுடைய நிதியமைச்சர் என்று நினைக்கிறேன்.) அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு நபர் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அதனுடைய கருத்துக்கள் அன்றைக்கு இருந்த ஜனதா ஆட்சியினுடைய தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவைகளை அவர் புறக்கணித்துவிட்டார் அல்லது ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் அல்லது அதை அக்கறையற்ற தன்மையிலே விட்டுவிட்டார் என்று கொள்ளவேண்டிய சூழ்நிலை 1977ஆம் ஆண்டு ஏற்பட்டது. 1974ஆம் ஆண்டு ராஜமன்னார் அறிக்கை வெளிவந்ததும், மாநில அரசின் சார்பிலே பிரதமர் இந்திரா அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கை தனக்கு வந்து சேர்ந்ததாகவும், அதைப்பற்றி முதலமைச்சர்கள் எல்லோருடனும் கலந்துபேசி முடிவெடுக்க இருப்பதாகவும் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அப்போது தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது, மேலும், ஒரு கட்டமாகத்தான் தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மிகுந்த பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எத்தகைய கட்டங்களையெல்லாம் தாண்டி வந்திருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவர் சித்தன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்- "இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு இந்த அரசு என்ன சாதித்து விட்டது" என்று கேட்டார். ''மேலும் அதிகாரங்களைக் கேட்கிறீர்களே; எதிர்க்கட்சித் தலைவர் உங்கள் மீது எவ்வளவோ குறைகளை சொல்லியிருக்கிறாரே. அதற்கெல்லாம் பதிலே சொல்ல முடியாத நீங்கள் ஏன் மேலும் அதிகாரங்களைக் கேட்கிறீர்கள் என்று என்னை அவர் துணைக்கு அழைத்தார். இந்த விவகாரத்தில் நான் அவரோடு துணைக்குச் செல்லத் தயாராகயில்லை. ஏனென்றால் 1974ஆம் ஆண்டு இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிந்து, பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் அமைச்சராக இருந்து, நம்முடைய நாவலர் அவர்கள் முன்னவராக இருந்து

நம்முடைய பண்ருட்டி அவர்கள் அமைச்சராக இருந்து, வரலாற்றுப் பிரசித்திப்பெற்ற தீர்மானம் ஒன்று நாம் எல்லாம் வாயார மனமார மகிழ்ந்து தீர்மானத்தை நிறைவேற்றிய நேரத்திலே இன்றைக்கு சித்தன் என்ன பேசினாரோ, அதையேதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அன்றைக்கு எதிரேயிருந்து பேசினார்கள். இருக்கின்ற அதிகாரத்தை வைத்து என்ன சாதித்து விட்டீர்கள் "இருக்கின்ற அதிகாரத்தை வைத்து தமிழகத்தை கெடுத்தது போதாதா" என்று சொல்லிய வார்த்தைகளையெல்லாம் எடுத்துக்கொண்டால், வேடிக்கையாக இருக்கும். இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கருப்பையா அவர்கள் மிக அழகாக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியிருக்கிறது, என்று கூறினார்கள். ஆனால் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கொடுத்த திருத்தம் என்ன தெரியுமா? காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து கம்யூனிஸ்ட்டும், ஒரே மாதிரியான திருத்தத்தைக் கொடுத்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை திரு. கே. டி. கே. தங்கமணியும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் கீழ்க்கண்ட திருத்தத்தைக் கொடுத்தார்கள்.

**Thiru K. T. K. Thangamani :** Sir, I move the following amendment :

This House, having considered the various recommendations of the Rajamannar Committee and also the views of the Tamil Nadu State Government is of opinion that no constitutional amendment in necessary in the matter of Centre-State relations.

**Thiru A. R. Marimuthu :** Sir, I move the following amendment :

This House, having considered the various recommendations of the Rajamannar Committee and also the views of Tamil Nadu State Government is of opinion that no constitutional amendment is necessary in the matter of Centre- State relations.

இரண்டு கட்சிகளும் ஒரே மாதிரியான திருத்தம் கொடுத்த போதிலும் இப்போது அவர்கள் (கம்யூனிஸ்டுக்காரர்கள்) மாறி

விட்டார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இன்னும் மாறவில்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிடுகிறேனே அல்லாமல், வேறல்ல. அரசியல் சட்டத்திலே திருத்தமே தேவையில்லை என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி அன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொடுத்தது. ஆனால், அ. தி. மு. க உறுப்பினர்கள் அரசியல் சட்டத்திலே திருத்தம் தேவைதான், இன்னும் சொல்லப் போனால், மாநில சுயாட்சிகூட தேவைதான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் மாநில சுயாட்சி தரக்கூடாது என்று சொன்னார்கள்.

இது ஒரு கொள்கை பிரச்சினையே தவிர, யாரிடத்திலே சுயாட்சியைத் தருவது, யாரிடத்திலே அதிகாரத்தைத் தருவது என்பது பிரச்சினை அல்ல. எனவேதான் ஆயிரம் குறைகள் இருக்கலாம், அவைகளை இந்த மாநிலத்திற்குள்ளே நாம் தீர்த்துக் கொள்ளலாம். குறைகளை எடுத்துச்சொல்லி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த அரசு வேண்டாம், இன்னொரு அரசு வரட்டும் என்று தீர்ப்பு அளிக்கக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு இருக்கின்ற காரணத்தால், மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற குறைபாடுகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், எங்களுக்குள்ளே இருக்கின்ற சண்டையை - அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நான் சொல்லவில்லை - மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற சங்கடங்கள், சிக்கல்கள், தொழிலாளர்கள் பிரச்சினையிலோ, அல்லது வேறு பிரச்சினையிலோ இருக்கின்ற சிக்கல்கள், இவைகளையெல்லாம் வைத்து எப்படி பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைப் பிரித்தாள எண்ணினார்களோ, அதைப்போல மாநிலங்களைப் பிரித்து ஆளுகின்ற எண்ணம் மத்தியிலே இருப்பவர்களுக்கு வரக்கூடாது என்று நான் மிக மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. மாநில சுயாட்சித் தீர்மானம் இங்கே ராஜமன்னார் கமிட்டியினுடைய பரிந்துரையின் அடிப்படையிலே இந்த அவையிலே வந்தபோது This is a very mischievous என்றெல்லாம், இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற நண்பர் டாக்டர் ஹண்டே அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். This is a very mischievous என்றுகூட அன்றைக்குச் சொன்னார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள்.

Who are going to be in the Inter State Council after all the Chief Ministers of different states. "After all." "After all Chief Ministers."

அப்பொழுது நான் சீப் மினிஸ்டராக இருந்த காரணத்தால் எல்லா சீப் மினிஸ்டர்களும் - ஆப்டர் ஆல் சீப் மினிஸ்டர்களாக அன்றைக்கு இருந்தார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு மாறி இருப்பதைப் பார்த்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற துணைத் தலைவராக இருந்த என்னுடைய அருமை நண்பர் எட்மன்ட் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? மாநில சுயாட்சி என்று இருப்பதால், அது எப்படி இருந்தாலும் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். "எங்களுடைய சந்தேகம் எல்லாம் - (எட்மன்ட் அவர்கள் சொன்னது) - இருக்கின்ற அதிகாரத்தை நீங்கள் எந்த வகையிலே பயன்படுத்தி யிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போதுதான் சந்தேகம் எழுகிறது என்று சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை ஒழித்து விட்டீர்கள் (நான் கேட்கிறேன். இப்போது என்ன படி அரிசி திட்டத்தை மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வந்தா அதிகாரம் கேட்கிறோம். இல்லை) மதுவிலக்கை ஒழித்துவிட்டீர்கள். சாராயக் கடைகளை திறந்துவிட்டீர்கள். இப்போது அதிகாரம் கேட்கலாமா" என்று எட்மன்ட் அவர்கள் கேட்டார்கள். இப்போது என்ன சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிட்டா அதிகாரம் கேட்கிறோம். ஆகவே, மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற பிரச்சினைகள் வேறு, பொதுவான பிரச்சினைகள் வேறு என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. இன்னொன்றையும்கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ராஜமன்னார் கமிட்டி புத்தகத்தைப் பற்றி நம்முடைய எட்மன்ட் அவர்கள் சொன்னார்கள். "இது சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு தகுதி உள்ள புத்தகம் அல்ல. உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்குக்கூட பயன்படாது, இதில் எந்தவிதமான கருத்தும் இல்லை. குப்பைக்கூடையிலே தூக்கி எறியப்படவேண்டிய அறிக்கை என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்."

ராஜமன்னார் கமிட்டி அறிக்கையை குப்பைக் கூடையில் தூக்கி எறியச்சொன்னார். ஆனால் பெங்களூர் மாநாட்டில் அதைக் குப்பைக்கூடையிலேயிருந்து எடுத்து அதிலுள்ள திருத்தங்களை இன்றைக்கு ஏற்றுக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றதைப் பார்க்கும்போது, அன்றைக்கு நாவலர் அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்ன, ஒரு வார்த்தை இன்றைக்கு எந்த அளவிற்கு பலித்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அன்றைக்கு சொன்னார்கள் நாவலர் அவர்கள். இங்கே பேசும்போது மாநில சுயாட்சி தீர்மானத்தில் நான் இறுதியாகப் பேசுவதற்கு முன்பு நாவலர் அவர்கள் பேசினார்கள். அப்போது சொன்னார். "மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி' என்ற அடிப்படையிலே மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்பதை ஆராய ராஜமன்னார் குழு போடப்பட்டு அவர்களுடைய அறிக்கை தந்ததற்குப் பின்னாலே இதிலே என்ன என்ன மாற்றங்களைச் செய்யலாம் என்று அரசு ஆராய்ந்து அந்த அடிப்படையிலேதான் நாம் வெள்ளை அறிக்கை வைத்திருக்கிறோம். தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். எந்த எந்த அதிகாரங்கள் எப்படி மாற்றப்படலாம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி மாற்றப்பட்டால்தான் புது வாழ்வு ஏற்படும், நல்லாட்சி மலரும். இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு இருந்தாலும், 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது இந்தக் கருத்துக்கு வலிவு ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அரசியல் தலைவர்களும், மாநில அரசுகளும், முதல் அமைச்சர்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆக்கம் தருகிறார்கள். இன்றைக்கு நாம் செடியை நட்டிருக்கிறோம். அந்தச் செடி மரமாகி, பூத்து, காய்த்து, கனிந்து பழத்தைத் தரும் என்ற நம்பிக்கை உண்டு என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். நாவலர் அவர்களே, அன்றைக்கு 1974ஆம் ஆண்டு நாமெல்லாம் சேர்ந்து நட்ட அந்தச் செடி இன்றைக்கு பூத்துக் காய்த்து இருக்கிறது. கனியும் நாள் தொலைவிலே இல்லை என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இருக்கின்ற வேதனை எல்லாம் ஆளும் கட்சி எது? எதிர்க்கட்சி எது? ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் பல்வேறு வகையான மனக்கசப்புகள், மாச்சரியங்கள் எவை என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்காமல்

இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். அன்றைக்குக்கூட நண்பர் ஹண்டே அவர்கள், மன்னிக்க வேண்டும், இன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உங்களிடத்திலே மாநில சுயாட்சி தரமுடியாது என்று சொன்னார்கள். நான் சொன்னேன். "வேண்டாம், நீங்கள் வந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுங்கள், எதிர்காலத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மாநில சுயாட்சித் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருமேயானால், அதை ஆதரிக்கிற முதல் ஆளாக கருணாநிதி இருப்பான்" என்று நான் அன்றைக்குச் சொன்னேன். ஆகவே கொள்கை ரீதியிலே சில விஷயங்களை அணுக வேண்டும். சின்னச் சின்னப் பிரச்சினைகள், சிக்கல்கள், மனமாச்சரியங்கள், கட்சி மாச்சரியங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டு மத்திய, மாநில உறவுகளை நாம் ஆராயவேண்டும்.

356-பிரிவைப் பற்றி இங்கே பேசிய கட்சியின் தலைவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 356-பிரிவு என்பது என்ன? அதுதான் ஒவ்வொரு மாநில சர்க்காருடைய தலையிலும் தொங்கிக்கொண்டு இருக்கும் கொடுவாள். அந்த வாள் தாக்கி எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவர் சில காரணங்களைச் சுட்டிக்காட்டி ஒரு மாநில ஆட்சியைக் கலைக்க முடியும் என்பதே அந்த வாள் ஆகும். அந்தக் கொடுவாளுக்கு தப்பிய கட்சி ஏதாவது இங்கே இருக்கிறதா, நான் கேட்கிறேன். கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி அந்த 356-பிரிவின்படி கலைக்கப்பட்டது. ஒருமுறை அல்ல, இரண்டு முறை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த கொடுவாளுக்குத் தப்பவில்லை கலைக்கப்பட்டு இருக்கிறது. ஜனதா மத்தியில் அரசுக்கு வந்ததும், காங்கிரஸ் ஆட்சிகள் 9 மாநிலங்களில் கலைக்கப்பட்டன. பிறகு இந்திரா காங்கிரஸ் கட்சி அங்கே ஆட்சிக்கு வந்ததும், ஜனதா கட்சி ஆண்ட மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. இன்னும் மற்ற கட்சிகள் எல்லாம் வளர்ச்சியடையாத காரணத்தால் கலைக்கப்படவில்லையே தவிர வேறு அல்ல. ஆகவே, ஒரு பெரிய பரிசு நாம் எல்லோருமே கலைக்கப்பட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். கலைக்கப்பட்ட ஆட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான். எனவே இப்படிப்பட்ட பொதுவான நோக்கத்தோடு பார்த்தாலும்கூட - இது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் கூடாத ஒரு பிரிவுதான் என்பதை நண்பர் சித்தன் அவர்களும், ஹாஜா செரீப் அவர்களும் உணர்ந்து

கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த 356-பிரிவில் ஒரு வேடிக்கை என்ன இருக்கிறது என்று சொன்னால் மாநில அரசைக் கலைக்க வேண்டுமானால்,

Art. 356 of the Constitution : "If the President, on receipt report from the Governor of a State or otherwise. . .,

கவர்னருடைய ரிப்போர்ட்டை கொண்டோ, அல்லது அந்த ரிப்போர்ட் இல்லாமலேயோ கலைக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு பெங்களூர் மாநாட்டைக் கூட்டியவர் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும்கூட முதன் முதலாக கவர்னருடைய ரிப்போர்ட் இல்லை.

If the President, on receipt of a report from the Governor State or otherwise. . . ."

என்று இருக்கிறதே, அதிலே அந்த 'அதர்வைஸ்' வார்த்தையைப் பயன்படுத்தி 9 மாநில ஆட்சிகளை அன்றைக்குக் கலைத்தது ஜனதா கட்சியின் ஆட்சி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஒரு நேரம் நாமேகூட மத்தியில் இருந்தால் அதைச் செய்வோமோ என்னவோ. ஏனென்றால் அப்படிப்பட்ட அதிகாரக் குவியல்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை மத்தியில் இருப்பவர்களுக்கு வந்து விடுகிறது.

இங்கே பேசிய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, ஜனதா கட்சியினுடைய தேர்தல் பிரகடனத்திலேகூட மாநில உரிமைகள் தாராளமாக வழங்கப்படும் என்றுதான் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் தரப்பட்டதா? ஜனதா கட்சி ஆட்சி காலத்தில் ராஜ்ய சபையில் முரசொலி மாறன் - கழக உறுப்பினர் - 356 பிரிவையே எடுத்துவிட வேண்டும் - இஷ்டத்திற்கு மாநில அரசுகளைக் கலைக்கின்ற அதிகாரம் இருப்பதை எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு சென்றபோது அதை ஆதரித்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் மாறனின் தீர்மானத்தை ஆதரித்து அந்தப் பிரிவு அகற்றப்படவேண்டும் என்று சொன்னபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மௌனமாகவும் இருக்கவில்லை. ஆதரிக்காமலும் இருக்கவில்லை. எதிர்த்தே வாக்களித்தார்கள். மாநில அரசுகள் கலைக்கப்படவேண்டும் என்பதற்கு ஆதரவாக முரசொலி மாறனின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தார்கள்.

ஆனால் எனக்கு இருக்கும் மகிழ்ச்சி எல்லாம் அந்த நிலைமையெல்லாம் மாறி, இப்போது நம்முடைய பட்ஜெட்டிலே, இந்த ஆண்டு படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே, நம்முடைய நாவலர் அவர்கள் மிக அழகாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான்கூட நாவலர் அவர்கள் கழகத்தை விட்டு அங்கே சென்றபோது மெத்த வருத்தப்பட்டேன். இப்போது கொஞ்சம் மகிழ்ச்சி எனக்கு. அங்கே சென்றதால் அல்லவா நம்முடைய கருத்தை அவர் வாயாலே சொல்லவைக்க முடிகிறது என்கிற ஒரு மகிழ்ச்சிகூட எனக்கு இருக்கிறது.

This Government has been, constantly stressing the need for autonomy of the States with adequate powers, without in any way affecting national integration. . .

என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு தேடாவண்ணம், மாநில சுயாட்சி - ஸ்டேட் அடானமி - அன்றுகூட முதலமைச்சர் சொன்னார் - ஸ்டேட் அடானமி என்ற வார்த்தையை நான் மறுக்கிறேன் என்றுகூட சொன்னார் - ஸ்டேட் அடானமி என்பதை நம்முடைய நாவலர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள், பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். உமாநாத் அவர்கள்கூட இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஸ்டேட் அடானமி என்பது பிரிவினைவாதம் என்று சொல்லப்படுமானால் நாம் கேட்கிற அந்த உரிமையை மட்டும் பிரிவினைவாதம் என்று சொல்லாமலா இருக்கிறார்கள். பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டை ஒப்புக் கொண்டார்களா? பிரிவினைவாதம் என்ற குற்றச்சாட்டுக்கு ஒரு படி மேலே போய், தேசத்துரோகம் என்றே சொல்லிவிட்டார்கள். அதை ஒரு பிராந்திய பித்து என்றே சொல்லிவிட்டார்கள். நாட்டைக் குலைக்கக்கூடிய காரியம் என்றேகூட கூறிவிட்டு இருக்கிறார்கள். எனவே இந்தத் தீர்மானத்தை இன்றைக்கு வரவேற்பது மாத்திரம் அல்ல, இந்த அரசு இரண்டாவது கட்டமாக 1974ஆம் ஆண்டு இங்கே மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைபோல், அதைப்போலவே இரண்டாவது கட்டமாக மற்றொரு மாநில சுயாட்சித் தீர்மானம் இங்கே நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும். அதுதான் இந்தத் தீர்மானத்தின் சரியான எதிரொலியாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



# சட்டமன்ற மேலவை

**உரை : 23** **நாள்: 13.05.1986**

**கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே! மேலவையைக் கலைப்பது என்கின்ற தீர்மானம் சட்டமன்றப் பேரவையிலே வருகிறது என்ற இந்தப் பிரச்சினையின் மீது நான் முதலிலே ஒன்றைத் தெளிவாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நான் எனக்காக வாதாட விரும்பவில்லை. அப்படி வாதாடப் போவதுமில்லை. எனக்காக வாதாடுவது என்னுடைய வழக்கமும் இல்லை. நான் இப்போது வாதாடுவது இந்த மன்றத்திற்காக, கடந்த 60 ஆண்டுக் காலத்திற்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகளும், மாண்புகளும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

அன்றொரு நாள், தாங்களே இந்த அவையிலே சொன்னீர்கள். கழகம் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தபோது, முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த நான் தங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள். ''அந்த அவையிலே இருந்து இந்த அவைக்கு வரும்போது ஓர் அமைதிகரமான சூழ்நிலை உருவாகிறது. இங்கு ஏற்படுகிற அமைதியும் ஆழமான சில உணர்வுகளும், அறிவிக்கப்படுகிற ஆலோசனைகளும் இந்த அவையில் மாத்திரமல்லாமல், அந்த அவையிலேயும் எங்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே, நிர்வாகத்தை மேம்படுத்தக்கூடிய நிலையிலே அமைகின்றன'' என்பதை நான் தங்களிடத்திலே எடுத்துக்கூறியதை அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பேசிய திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு உவமையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே பயன் படுத்திய உவமை அது என்றாலும், முன்னாள் மேலவைத் தலைவர் திரு. சி.பி. சிற்றரசு அவர்கள் சொன்னதாகக் குறிப்

பிட்டார்கள். அதை அண்ணா அவர்கள்தான் மேற்கோளாக எடுத்துக்காட்டினார்கள். அமெரிக்காவில், மேலவைப் பிரச்சினை ஒன்று அங்கே எழுந்தபோது, வாஷிங்க்டன் தேநீர் விருந்தில் எடுத்துச்சொன்ன உவமையாகும். அந்த விருந்திலே மேலவை இருக்க வேண்டாமா என்ற விவாதம் எழுந்தபோது, 'கப் அண்ட் சாசர்' வைத்துக்கொண்டு, கப்பிலே இருக்கிறவரை சூடாக உள்ள தேநீர், சாசரில் ஊற்றும்போது எப்படி ஓரளவிற்கு ஆறுகிறதோ, அதைப்போல மேலவை என்பது சூட்டைத் தணிக்கிற வகையில் வெப்பத்தைப் போக்கி, வெளிச்சத்தைத் தருகிற வகையில், உஷ்ணத்தை நீக்கி ஒளி தருகிற வகையில் அமைகிறது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள்.

பல நேரங்களில் மேலவை தேவையா என்று பிரச்சினை எழுந்திருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம், தேவையா என்ற கேள்விக்குறி வலுப்பட்ட காலக்கட்டத்திலேகூட இறுதி முடிவாக தேவைதான், நீடிக்கட்டும் என்ற முடிவுகள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அறிவார்கள்; தாங்களும் அறிவீர்கள். தமிழகத்திலே உள்ள மேலவையைக் கலைத்துவிடுவதற்கான காரணத்தைச் சொல்லும்போது, அது குறித்து பேரவையிலே கழக உறுப்பினர் திரு. ரஹ்மான்கான் வினா எழுப்பியபோது, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது ஏடுகளிலும் வந்திருக்கின்றன. ''இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே மேலவை இல்லை. ஒரு 5, 6 மாநிலங்களிலேதான் மேலவை இருக்கின்றது'' என்று குறிப்பிட்டார்கள். ஒருவேளை 5, 6 மாநிலங்களிலே தானே இருக்கின்றது. எனவே, இதை எடுத்துவிட்டால் என்ன என்ற விவாதத்தின் அடிப்படையிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் துணை போவார்களானால், நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், நம் இந்தியாவிலே எந்த மாநிலங்களிலும் மதுவிலக்கு இல்லை. தமிழ் நாட்டிலே மதுவிலக்கு இல்லை. ஆனால் காங்கிரசார் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டக்கூடியதாகத் தமிழ்நாடு இருக்க வேண்டும், எனவே, மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் வாதாடுவார்கள். அவர்களிடத்திலே எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், பாண்டிச்சேரியில்

இல்லையா, கர்நாடகத்திலே இல்லையா அல்லது வேறு பல காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே இல்லையா என்றெல்லாம் கேட்கும் போது, ''மற்ற மாநிலங்களைப் பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? இந்த மாநிலத்தைப்பற்றிப் பேசுங்கள்'' என்கின்ற வாதத்தை அழுத்தந்திருத்தமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியத் தலைவர்கள் எல்லாம், எடுத்து வைத்திருக்கின்றார்கள். எனவே, 5,6 மாநிலங்களில்தான் இருக்கின்றது எனவே, இந்த மாநிலத்திலே அதைக் கலைத்து விடுவதிலே ஏந்தவிதமான சங்கடமும் இல்லை'' என்ற குறிக்கோள் ஒரு நல்ல வாதமாக எனக்குப் படவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இந்த மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று இந்த மன்றத்திலே அமர்ந்தார்கள். அவர்கள் அப்படி, ஒரு மேலவை உறுப்பினராக வந்து அமராமலேயே ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பதவி விலகச் சொல்லிவிட்டு, அந்த இடத்தில் நின்று பெரும் பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சட்டமன்றப் பேரவையிலே பொறுப்பேற்று முதலமைச்சராக வந்திருக்க முடியும். ஆனால் மாநகராட்சி உறுப்பினர்கள் வாக்குகளைப் பெற்று மேலவையில் அண்ணா அவர்கள் அமர்ந்தார்கள். அப்போது இந்த மேலவையில் அன்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்ற எதிர்க் கட்சியாக இருக்கின்றதே என்ற எண்ணத்தில் மேலவையைக் கலைத்துவிட வேண்டும், ''நமக்கு ஒரு கண்போனாலும் எதிரிக்கு இரண்டு கண்கள் போக வேண்டும்'' என்ற எண்ணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே வரவில்லை. அவர்கள் காலத்தில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக காலக்கட்டத்திலேயும் இந்த நிலை ஏற்படவில்லை. அப்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இங்கேயிருந்தபோதுகூட, இந்த மேலவையிலே ஆளுங்கட்சியின் சார்பாகக் கொண்டுவரப் பட்ட தீர்மானங்களில் அல்லது மசோதாக்களிலே பெரிய மோதல்கள் ஏற்பட்டுவிடவில்லை. ஓரிரு தடை ஏற்பட்டாலும் சர்வசாதாரணமாக அரசியல் சட்ட விதிமுறைகளின்படி

அவைகள் போக்கிக்கொள்ளப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் அறிவார்கள்.

அடுத்தபடியாகச் சொல்லப்படுகின்ற காரணம், ஏடுகளிலேகூட வந்திருக்கின்றது; இதைக் கலைப்பதன் மூலம் ஒரு பெருஞ்செலவைக் குறைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே 3419 கோடிக்கு நிதி ஒதுக்கீடு வைத்து, அதற்கான அனுமதியை அந்த மன்றத்திலேயும் இந்த மன்றத்திலேயும் பெற்றார்கள். அப்போது எவ்வளவு பணம் எப்படியெல்லாம் விரயம் ஆகிறது என்பதையெல்லாம் நான் சொன்னேன். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு அதையெல்லாம் சரிசெய்யவேண்டும் என்று இங்கே பேசியிருக்கிறார்கள். அது இங்கே விவாதக்குறிப்பில் பதிவாகியிருக்கின்றன. ஆகவே, செலவாகிறது. அந்தச் செலவைச் சிக்கனப்படுத்துவது என்று சொன்னால், நண்பர் திரு.மாணிக்கம் அவர்கள்கூட சொன்னார். கவர்னர் என்ற பதவிக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30 இலட்சம், ரூ. 40 இலட்சம் என்ற அளவிலே செலவிடப்படுகிறது. ஆனால் அந்தப் பதவி இருக்கலாம். அது நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் போராட புறப்பட்டிருக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றுவதோடு, கருத்துக்களைச் சொல்வதோடு இருக்கிறோம். அங்கே அதிகாரம் இருக்கின்ற அந்தக் காரணத்தினால், பெரும்பான்மை இருக்கின்ற காரணத்தினால், இந்த மன்றத்தைக் கலைத்துவிடலாம். அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றோ நாளையோ அந்த முடிவு பற்றிப் பேரவையில் பெரும்பான்மையைப் பெறுமானால், அந்த முடிவு நிறைவேற்றப்படவும் இருக்கின்றது. அதற்குப் பிறகு பாராளுமன்றத்திலே அந்த முடிவை வைத்து அதனுடைய ஒப்புதலைப்பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நான் அந்த விவரங்களிலே எல்லாம் நுழைய விரும்பவில்லை. செலவு காரணமாக, சிக்கனப்படுத்துவதன் காரணமாக இந்த மேலவைக் கலைப்பு என்று சொன்னால், உள்ளபடியே நாம் மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய மனச்சாட்சிக்கு

விரோதம் இல்லாமல் எண்ணிப்பார்த்தால் எத்தனையோ தேவையற்ற செவுகள் தமிழ்நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலவை மாத்திரம்தானா தேவையில்லாத செலவு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஏறத்தாழ 25,26 க்கு மேற்பட்ட வாரியங்கள் இருக்கின்றன. கோழி வாரியம் வரையில் இருக்கின்றன. அந்த வாரியங்கள் எல்லாம் ஏன் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். டெல்லிப் பட்டினத்தில் தமிழ்நாட்டுப் பிரதிநிதி என்கிற ஒரு அலுவலாளர் நியமிக்கப்படுகிறார். இதுவரை நியமிக்கப்பட்ட எந்த அலுவலாளராவது தமிழ்நாட்டுத் தூதுவராக, தமிழ் நாட்டுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்கள் யாரிடத்தில் என்ன வாதாடினார்கள். எந்தத் தொழிற்திட்டத்தைத் தமிழ் நாட்டுக்காகப் பெற்றார்கள், எந்த வகையிலே வாதாடி, போராடி, அங்கேயுள்ள அமைச்சர்களை, பிரதமரைச் சந்தித்து தமிழ்நாட்டின் தேவைகளைப் பெற்றார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறி; ஆனாலும், அதற்கு ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டு, அந்தக் காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல. குழுக்கள், இரு அவையும் சேர்ந்த குழுக்கள் எத்தனையோ இருக்கின்றன. அந்தக் குழுக்கள் சுற்றுப்பயணம் கூட செய்கின்றன. சில குழுக்கள்தான் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். ஆனால் நம்முடைய தாராள மனப்பான்மை, அஷ்யூரன்ஸ் கமிட்டிகூட காஷ்மீர் வரையில் செல்கிறது. உறுதிமொழிக்குழு-இங்கே தரப்படும் உறுதி மொழிகள் எவை எவை என்பதும், அவை நிறைவேற்றப்பட்டதா என்பதும், இந்த அவையாலே நியமிக்கப்படுகின்ற குழுவாலே விவாதிக்கப் பட்டு முடிவு எடுக்கப்படவேண்டிய விவகாரம், காஷ்மீருக்குப் போய், நீங்கள் எந்த உறுதிமொழியை எப்படி, நிறைவேற்றுகிறீர்கள் என்று கேட்டு, இங்கே நிறைவேற்றத் தேவையில்லை. எல்லாக் குழுக்களும், உறுதிமொழிக் குழு உட்பட எல்லாக் குழுக்களும் காஷ்மீர் வரை செல்கின்றன. நான் நகைச்சுவைக்காகச் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ''சிலகுறிப்பிட்ட குழுக்கள்தான் வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டும். எல்லாக் குழுக்களும் செல்ல வேண்டியதில்லை'' என்று அண்ணா அவர்கள் எழுதினார்கள். அதற்குப்பிறகு,

திரு.விநாயகம் அவர்கள் அண்ணாவைச் சந்தித்தார்கள், அண்ணாவைச் சந்தித்து, அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். ''எல்லாக் குழுக்களும் போகும்போது, என்னைச் சந்தித்தார்கள். அண்ணாவைச் சந்தித்து, அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். ''எல்லாக் குழுக்களும் போகும்போது, என்னுடைய தலைமையில் உள்ள குழு மட்டும் போகக்கூடாது'' என்று கூறியிருக்கிறார்களே என்று கேட்டார்கள். பிறகு வாதாடினார்கள். அதற்குப்பிறகு அண்ணா அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவையோடு ''அனுபவி ராஜா, அனுபவி'' என்று சொல்லி, அந்தக் குழுவும் செல்லலாம் என்று குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இப்படி ஏராளமான குழுக்கள், வாரியங்கள், டெல்லியிலே எந்தப் பணியும் ஆற்றாத தமிழ்நாட்டு பிரதிநிதி, இப்படியெல்லாம் செலவுகள் ஆகின்ற நேரத்தில், செலவின் காரணமாகச் சிக்கனத்தின் காரணமாக மேலவையைக் கலைக்கிறோம் என்று வாதம் செய்வார்களானால், அதுவும் பொருத்தமான வாதமாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் ஒன்று, சட்டப் பேரவைத் துறைக்கு மொத்தமாக செலவாகும் தொகை 1 கோடி ரூபாய் என்பது என்னுடைய கணிப்பு. அதற்குமேல் 19 இலட்சம், 20 இலட்சம் இருக்கலாம். அதிலேகூட சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். கவர்னர் பதவிக்கு 20 இலட்சம் ரூபாய், இவ்வளவு பேர் அடங்கியுள்ள சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். அதற்காக இதைக் கலைக்கிறோம் என்ற வாதம் பொருத்தமற்ற வாதமாகும்.

இன்னும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பார்த்தசாரதி அவர்கள் எடுத்துகாட்டியதுபோலவும், மாண்புமிகு உறுப்பினர் திரு.பி.டி.ஆர் பழனிவேல்ராஜன் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோலவும் அமைச்சரவை கூடி ஆழ்ந்து யோசிக்காமல், தேர்தல் அறிக்கையிலேகூட குறிப்பிடாமல், இது பற்றிக் கருத்தோட்டம் என்கின்ற வகையிலே மக்கள் மத்தியிலே இதை வைக்காமல், திடீரென்று, அமைச்சரவையிலே ஆலோசிக்காமல், பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் விளக்கம், வினா கேட்க, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 'அதைப்

பற்றிக் கொள்கை இருக்கிறது, முடிவாகவில்லை'' என்று சொல்லி, ''இந்த அவையிலே 2 நாட்களில் தெரியும்'' என்று சொல்லி, திடீரென்று இன்றைக்கு இந்தத் தீர்மானம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. காலையில் செய்தியாக வந்துவிட்டது. இப்படி நிகழப்போகிறது என்று 3 நாட்களுக்கு முன்பே எனக்குத் தெரியும். முதன்முதலாக 'முரசொலி' பத்திரிகையில் செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்த பிறகு பேரவையிலே பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது மூடி மறைக்கப்பட்டு, பிறகு பேரவையிலே பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது மூடி மறைக்கப்பட்டு, பிறகு மேலவையிலே 'ஆமாம் என்று இழுபறியாகச் சொல்லப்பட்டு, இன்றைக்குத் தீர்மானம் வந்திருக்கிறது திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் எடுத்துக்காட்டியது போல, அமைச்சரவை கூடி இப்படிப்பட்ட கொள்கை முடிவை எடுக்க வேண்டுமென்ற நியதி ஏன் மீறப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. திரு.பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் சொன்னார்கள், கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராகிவிட்ட காரணத்தால்தான் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டதென்று இன்றுள்ள சூழ்நிலையில் நம்முடைய நண்பர் திரு.மாயவன் அவர்களுக்கு திரு.பார்த்தசாரதி அவர்களும், நம்முடைய நண்பர் ஆசிரியர் பிரதிநிதியாகப் பேசிய திரு.லெட்சுமிகாந்தன் அவர்களும் குறிப்பிட்டதுபோல இப்பொழுதுதான் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆசிரியர் தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். பட்டதாரி தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இந்த 4 இடங்களிலும் ஆளும் கட்சி ஆதரித்த நண்பர்கள் வெற்றிபெறவில்லை. இது ஒன்று; அடுத்து, உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பெரும் பான்மையான இடங்களில்...

**திரு.எஸ்.ஆர். இராதா:** ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவதால் தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கக்கூடாது, தயவுசெய்து பிரச்சினைகளை அரசியல் ரீதியாக அணுகுகிற நிலைமை வேண்டாம். கருத்துக்களைச் சொல்லும் போது, சுமுகமாகச் சொல்லி, சுமுகமாகத் தீர்க்க வேண்டும். அரசியலாக ஆக்கி, நாங்களும் பதில் சொல்லுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டாம். இது விதிக்கு மீறிய முறை, நான் பாயின்ட் ஆப்

ஆர்டராகக் கூட கேட்கலாம். தலைவர் அவர்கள் பெருந்தன்மையுடன் அனுமதித்திருப்பதால் பாதிக்கப்படுகிற நேரத்திலே சட்டத்தை மீறலாம் என்று நானும் ஒத்துக் கொண்டேன். ஆனால் தயவுசெய்து எல்லாவற்றையும் மீறலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருக்குச் சொல்கிறேன். நான் இதை அனுமதிக்கவில்லையென்றால், இந்தப் பதவியில் இருக்கவே நான் தகுதியற்றவன். இந்த அவையே கலைக்கப்படுகிற நிகழ்ச்சி முன்பு எப்போதுமே நடந்ததில்லை. முன்மாதிரி இல்லாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கிற காரணத்தினால், நாம் கடைபிடிப்பதுதான் முன்மாதிரி, ஆகவே தான் நான் இதை அனுமதித்திருக்கிறேன்.

**கலைஞர் மு. கருணாநிதி:** ஆக, 4 தொகுதிகளிலிருந்தும் 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் யார் எந்தக் கட்சி என்றுகூட நான் குறிப்பிட விரும்பவில்லை. நான் இந்த அவையிலே பேசுகின்ற பாணி எடுத்துக் கொள்கின்ற முறை, அந்த அவையிலே நான் பேசியிருக்கின்ற முறை இவை களுக்கு உள்ள வேறுபாடுகளைத் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், அமைசர்களும்கூட உணர்ந்திருக்கக் கூடும். ஏனென்றால் இந்த அவை அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்க ஓர் அவை. டாக்டர். ஏ.எல்.முதலியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள், மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள், திரு.பாலசுப்பிரமணிய ஐயர் போன்றவர்கள், ஏன் தங்களைப் போன்றவர்கள் எல்லாம் இருக்கின்ற இந்த அவைக்கு என்று தனி மதிப்பு இருக்கிற காரணத்தினால்தான், இந்த அவையிலே எப்படி அணுகுமுறை இருக்க வேண்டும், குற்றச்சாட்டு இருந்தாலும் எந்த அணுகுமுறையோடு சொல்ல வேண்டும் என்பதை எல்லாம் எண்ணி, மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன், என்பது நான் 7,8 தடவை பேசியிருக்கின்ற பேச்சுகளை எடுத்துப் படித்துப் பார்த்தாலே, மிக நன்றாகத் தெரியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட் டதைப் போல, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும், சென்னை

மாநகராட்சி மன்றம் ஒன்றைத் தவிர, ஏனைய 20 இடங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக இந்த மன்றத்திற்கு கடந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் உறுப்பினர்கள் வரக்கூடிய நிலைமை. 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கின்ற சூழ்நிலை அடுத்து, 20 பேர் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக வரக்கூடிய சூழ்நிலை. அதிலே யார் பெரும்பான்மையாக வருவார்கள். யார் குறைவாக வருவார்கள் என்கின்ற பிரச்சினைக்கு எல்லாம் இடம் இல்லை. ஆனால், யார் வந்தாலும், ஆங்காங்கே இருக்கின்ற கிராம மக்களுக்காக, ஸ்தல ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காகப் பாடு படக்கூடியவர்கள் வரக்கூடிய சூழ்நிலை; அதுமட்டுமல்லாமல் இது கொள்கை ரீதியாக, காலையில் அரும்பி, பகல் எல்லாம் மலராகி, மாலையில் மலர்ந்தது என்று சொல்லத்தக்க அளவில் இந்தக் கொள்கை மலர்ந்தது என்றும் யாரும் கூற முடியாது. அதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அப்படி அறிகுறி இருந்திருந்தால், அண்மையில்கூட 3 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கமாட்டார்கள். ஒருவர் ராஜிநாமா செய்துவிட்டார் என்பது வேறு விவகாரம். ஆனாலும், நியமனம் செய்யக்கூடிய அளவுக்குக்கூட பரிந்துரை செய்யப்பட்டு நியமனங்கள் செய்யப்பட்டு, நாளையதினம் விடைபெற, ஓய்வு பெற இருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் நாளை பாராட்டு விழா என்ற அளவிலே, விருந்து, அவர்களுக்கு எல்லாம் நாளை பாராட்டு என்று எல்லாம் சொல்லக்கூடிய சூழ்நிலையில் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நாளைக்கு இவர்களை எல்லாம் பாராட்டும்போது அவர்கள் ''இன்றைக்கு எங்களைப் பாராட்டுகிறாய், நாளைக்கு எங்களோடு நீயும் வரப் போகிறாய்'' என்கிற கண்ணோட்டத்தோடுதானே எங்களைப் பார்ப்பார்கள். நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எனக்காக நான் வாதாடவில்லை. இந்த மன்றத்திற்காக நான் வாதாடுகிறேன். என்னைப் பத்திரிகை நிருபர்கள் சந்தித்து இப்படி ஒரு தீர்மானம் வரப்போகிறதாமே என்று கேட்டபோதுகூட, நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். ''இதைப் பற்றி கழகச் சார்பிலே எங்களுடைய பொதுச் செயலாளர் நிருபர்களிடத்திலே பேட்டி அளித்த போது கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார். என்னை பொறுத்தவரையில், நான் இதுகுறித்துக் கவலைப்படவில்லை''

என்று சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொன்னதற்குக் காரணம் இங்கே திரு.பி.டி.ஆர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏதோ எனக்காகத்தான், நான் எதிர்க்கட்சித் தலைவன் ஆவேன் என்ற காரணத்தால்தான், இப்படி ஒரு தீர்மானம் வருகிறது என்றால், நான் இந்த மன்றம் நீடிக்க வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காக, எனக்காகத்தான் இது வருகிறது என்ற ஒரு நிலை இருக்குமானால், என்னுடைய இந்தப் பதவியை இந்த மன்றம் நீடிக்க வேண்டும் என்பதற்காக நான் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். என்னால் இந்த மன்றம் நீடிக்கலாம்; கலைக்கப்படுகிற சூழ்நிலைக்கு ஆளாக வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தோடு இந்தக் கருத்தை நான் எடுத்துக் கூறுகிறேன். இதற்குப் பிறகாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''கருணாநிதி ஒழிந்தான், அவன் இல்லாத சபைதான் இது'' என்ற எண்ணத்தோடு இந்த மன்றத்தை நீட்டிப்பதற்கு முற்படுவார்கள் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன்.



# பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு

**உரை : 24** **நாள்: 12.05.1989**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பின்வரும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் முன்மொழிகிறேன்.

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 ஆம் விதியில் கூறப்பட்டுள்ளவாறு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4) 16 (4) பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டுள்ள இடஒதுக்கீட்டினையும், சிறப்பு விதிகளையும் சமூக நிலை யிலும், கல்வியிலும் பின்தங்கியுள்ள பிரிவினர் முன்னேற்றத் திற்காகச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பெரும்பங்கு வகிக்க வேண்டுமெனவும் காலஞ்சென்ற திரு. B.P. மண்டல் அவர்களைத் தலைவராகக் கொண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 1980ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து சமூக நீதியை ஏற்படுத்த மத்திய அரசு ஆக்கப்பூர்வமாக விரைந்து செயல்பட வேண்டுமெனவும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது."

இந்தத் தீர்மானத்தை அவையின் முன்பு வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை வழங்கிய பிறகு தீர்மானம் நிறைவேற வேண்டும் என்கின்ற கோரிக்கையை விளக்கமாக வைக்க இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பிற்படுத்தப்பட்டோருக்கு அனைத்து இந்திய அளவில், மண்டல் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்ற இந்தத் தீர்மானம் இங்கே

நிறைவேறும்போது பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் எல்லாரும் இங்கே இருக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். இந்தத் தீர்மானத்தை அவையிலே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், சில மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்த நேரத்திலேகூட இந்தத் தீர்மானத்தை வரவேற்று, அதே நேரத்திலே இருக்கின்ற சிக்கலைத் தீர்ப்பது எப்படி என்ற யோசனையையும் மத்திய அரசுக்கு வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது நாடு தழுவிய அளவிலே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் அவர் கூறினார். இந்தக் கூற்று பஞ்சாயத்து ராஜ்யத்திற்கும் பொருந்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடு தழுவிய பிரச்சினைகளை நாடு தழுவிய அளவிலே விவாதிப்பது நிச்சயமாக நன்மை பயக்கும். எந்தத் தவறுகளுக்கும் இடம் தராது. ஆனால் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல. ஒரு திங்கள் அல்ல, இரண்டு திங்கள் அல்ல, ஓராண்டல்ல, ஈராண்டல்ல, ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகள் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. அதனை ஏற்றுச் செயல்படவேண்டும். சிக்கல்கள் எந்தப்பிரச்சினையிலேயும் இருக்கத்தான் செய்யும், அவற்றைக் காரணங்களாகக் காட்டி, பிரச்சினைகளைத் தட்டிக்கழித்துக்கொண்டேயிருந்தால் எந்த ஒரு நல்ல முடிவினையும், ஒரு அரசு மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுவிடும். கடந்த மார்ச் திங்கள் 13 ஆம் தேதியன்று இந்த அரசு வெளியிட்ட, தமிழகத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகித ஒதுக்கீடு என்று அறிவித்த அந்தச் செய்தி வெளியீட்டில் 5-வது பகுதியிலே மிகத்தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அரசியல் சட்டத்தின் 16 (4) விதிப்படியும், 15 (4) விதிப்படியும் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிக் கிடக்கும் வகுப்பினருக்கு தனி ஒதுக்கீடுகளையும், சிறப்புத் திட்டங்களையும் செய்து, அவர்களைக் கைதூக்கி விடுவதில் மத்திய அரசுக்கும் பெரும் பங்குண்டு; அரசியல் சட்டம் 340 பிரிவின்படி அமைக்கப்பட்ட

மண்டல் கமிஷன் பரிந்துரைகளைக் கருத்திலே கொண்டு சமூக நீதி குறித்த இந்த முக்கியமான துறையில், மத்திய அரசு ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமென்று மார்ச் திங்கள் 28 ஆம் தேதி தமிழகத்திலே 20 சதவிகிதம் ஒதுக்கீடு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அறிவித்த அந்தக் காலக்கட்டத் திலேயே, அந்த அறிக்கையிலேயே இது சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. அதற்கேற்ப இந்தத் தீர்மானம் இந்த மாமன்றத் திலே இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு, ஏறத்தாழ அவை உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது. சிலர் மண்டல் கமிஷன் அறிக்கை மீதான தீர்மானத்தை அடிப்படையாக வைத்து, இன்று தமிழகத்திலே உருவாகியுள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்தார்கள். அதிலே அரசைப் பாராட்டவும் செய்தார்கள். அரசின் போக்கினைத் தாக்கவும் செய்தார்கள். அதற்கு இந்தத் தீர்மானம் பயன்பட்டது என்பதில் எனக்கு மகிழ்ச்சி. இதைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய கருத்துக்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள் என்பதிலே அவர்களுக்கு ஒரு மன ஆறுதல் இருக்கிறதோ இல்லையோ, எனக்கு நிச்சயமாக மன ஆறுதல் உண்டு. இங்கே பேசிய அ.தி.மு.க உறுப்பினர் திரு அர்ச்சுனன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 107 சாதிகளுக்கு 20 சதவிகிதம் என்பது நியாயம்தானா என்று கேட்டார். இதைத்தான் இன்றைகுக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் நாட்டு மக்களிடத்திலே பரப்புகிறார்கள். 107 சாதிகள் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது.மக்கள் தொகை எவ்வளவு? 30 சதவீகிதம் எத்தனை லட்சம் மக்களுக்குப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 20 சதவிகிதம் எத்தனை லட்சம் மக்களுக்குப் பிரிக்கப்பட்டிருக் கிறது. அதாவது தரப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் நாங்கள் மார்ச் திங்களில் வெளியிட்ட அந்த ஆணையை உள்ளடக்கிய அந்த நீண்ட அறிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். வன்னிய வகுப்பினர் 65 லட்சத்து 5 ஆயிரம் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 39 லட்சம் 95 ஆயிரம் என்றும், சீர் மரபினர் 17 லட்சத்து 19 ஆயிரம் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக் கிறோம். இந்த 3 பிரிவினரும் சேர்ந்து-மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரும்,

சீர் மரபினரும் சேர்ந்து-122 லட்சத்து 19 ஆயிரம் பேர், அவர்களுக்கு நாம் ஒதுக்கியுள்ள சதவிகிதம் 20. அதாவது வேலை வாய்ப்பிலும், கல்வியிலும், மேலே குறிப்பிட்ட வகுப்பினரைத் தவிர்த்து மீதமுள்ள பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் 217 லட்சத்து 49 ஆயிரம் பேர். ஆக 122 லட்சத்திற்கு 20 சதவிகிதம். 217 லட்சத்திற்கு 30 சதவிகிதம், இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1 கோடியே 22 லட்சம் பேருக்கு 20 சதவிகிதம். 2 கோடியே 1 லட்சம் பேருக்கு 30 சதவிகிதம். இதிலே என்ன அநியாயம் நடந்து விட்டது என்பதை நடுநிலையோடு எண்ணிப்பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. இதிலே வன்னியர்களுக்கு என்ற...

**திரு.வி.கே.சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மன்னிக்க வேண்டும். இந்த ஒரு கோடியே 22 லட்சம், சொச்சம் பேருக்கு 20 சதவிகிதம் என்றும், 2 கோடியே 17 லட்சம் சொச்சம்பேருக்கு 30 சதவீதம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். நான் அவரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்- இந்த அடிப் படையில் இப்போது மோஸ்ட்-பேக்வேர்டு என்று பிரித்திருக் கிறீர்கள். இவ்வாறு மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் இப்போதுள்ள அரசு அதிகாரிகளின் பட்டியலில் எத்தனை சதவீதம் பேர் வருகிறார்கள். அதே அடிப்படையில் 2 கோடியே 17 லட்சம் சொச்சம் பேரில் எவ்வளவு சதவீதம் வருகிறார்கள் என்கிற ஒட்டுமொத்தமான கணக்கை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்தக் கணக்கை எல்லாம் பார்த்துத்தான் 1 கோடியே 23 லட்சம் பேருக்கு 20 சதவிகிதம் என்று இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் களில் அதிகம் பேர் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாக வும் வர முடியவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் வரவில்லை என்ற காரணத்திற்காகத்தான் அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து பிரித்து 'மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்று ஒரு பிரிவை உருவாக்கி அந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அதாவது 1 கோடியே 22

லட்சம் பேருக்கு-50 சதவீதம் ஒதுக்கீடு என்று பிரித்திருக் கிறோம். அதிலும்கூட, இந்த 122 லட்சத்தில் மிகப் பெரும் பான்மையாக இருக்கிற மக்கள் வன்னிய வகுப்பினர்தான். அதாவது 65 லட்சம் பேர் அவர்கள் இருக்கிறார்கள். 20,000க்கும் குறைவான மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட சமூகத்தினர் 11 சாதியினர் 1000 முதல் 10,000 வரை மக்கள் தொகையைக் கொண்ட சமூகத்தினர் 21 பிரிவினர் 15-லிருந்து 500 பேர் வரை மக்கள் தொகையைக் கொண்ட சமூகத்தினர் 14 பிரிவினர். இவைகளை எல்லாம்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே இந்த 20 சதவீதத்தால் யாருக்கு அதிகமான பயன் கிடைக்கும் என்றால்-20,000 க்கும் குறைவான எண்ணிக்கையில் மக்கள் தொகையைக் கொண்ட சமூகத் தினருக்கு அதிகமான பயன் நிச்சயமாகக் கிடைக்காது. எனவே அவர்கள் இன்னும் பல ஆண்டுக் காலத்திற்கு வன்னியர் களோடு இப்படிப்பட்ட தேர்வுகளில் போட்டி போடுவது என்பது இயலாத காரியமாக இருக்கும்.

அதைப்போலவே 1,000 முதல் 10,000 வரை மக்கள் தொகையைக் கொண்ட பிரிவினருக்கும்கூட இன்னும் பல ஆண்டுக் காலம் ஆகும் வன்னியர்களோடு போட்டி போட, 15 முதல் 500 பேர்களை மட்டுமே கொண்ட 14 ஜாதிக்காரர்களில் எத்தனை பேர் படித்திருக்கிறார்கள்-பள்ளிக்கூடம் இருக்கிற இடம் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதை யெல்லாம் நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே 122 லட்சம் என்றாலும்கூட அதிலும் மிகப்பெரும்பான்மையாக இருப்ப வர்கள்- 65 லட்சம் பேர்களாக இருப்பவர்கள் வன்னியர்கள். அந்தச் சமூகத்தினருக்குக் கிடைக்க வேண்டியது இதுவரை கிடைக்கவில்லை என்ற அந்த ஆதங்கம் அகற்றப்பட்டு கிடைக்கவேண்டிய பயன் நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல- நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு தனித் துறையே உருவாக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு.கே.ரமணி அவர்கள் இங்கே எடுத்துக்

காட்டியதைப் போல் சமுதாயத்துறையில் மட்டுமல்லாமல் பொருளாதாரத் துறையிலும் அவர்கள் ஏற்றம் பெற்றிடவும் அதன் காரணமாக கல்வி வேலைவாய்ப்பு வசதிகளை யெல்லாம் அவர்கள் பெறுவதற்கு ஒரு உரிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு தனித்துறையே அமைக்கப்பட்டு, அதிலேகூட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர்தான் அதனுடைய இயக்குநராக நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதற்கு என்று ஒருதனி மானியம் ஒதுக்கப்பட்டு துணை மானியக்கோரிக்கையிலே அதற்கான அனுமதியும் இந்த அவையிலே பெறப்படும் என்றும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

கடந்த வாரத்தில் இது குறித்து எடுத்த முடிவைக்கூட இங்கே நான் சொல்லவிரும்புகிறேன். நுழைவுத் தேர்வுக்கும் மதிப்பெண்கள் போடுவதற்கான தகுதிகளில் சில விதிகள் இருக்கின்றன. இவ் வளவு மார்க்குகள்- மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும் என்று இருக்கிறது.

பிளஸ் 2-வில் ஓப்பன் காம்படீஷன் என்று சொல்லப் படுகிற வகையில் ஒரு மாணவர் எடுக்க வேண்டிய மார்க்குகள்- மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவீதம் இருக்க வேண்டும். இது ஒவ்வொரு பாடத்திலும்- மொத்தத்தில் 200-ல் 140 பெற்றிருக்க வேண்டும். இது ஒப்பன் காம்படிஷனுக்கு செல்லுகிற மாணவர்களுக்கு, இதில் எந்த மாற்றமும் நாம் செய்யவில்லை.

ஆனால் பின்தங்கியவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவீதம் இருக்க வேண்டும். மொத்தத்தில் 200 க்கு 140 இருக்க வேண்டும் என்று இருந்தது. இந்த அரசு அதை மாற்றி இனிமேல் 200-க்கு 130 மார்க் இருந்தாலே போதும் பின் தங்கியவர்களுக்கு என்று முடிவு செய்துள்ளது.

மிகவும் பின்தங்கியவர்களுக்கு இந்த விண்ணப்பத் தகுதி ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவிகிதம் இருக்கவேண்டு மென்பதை மாற்றி 55 சதவிகிதம் இருந்தாலே போதும் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 200-க்கு 140

மதிப்பெண்கள் இருக்க வேண்டும் என்பதை மாற்றி, 200-க்கு 120 இருந்தாலே போதும் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதைவிட இன்னும் ஏதாவது அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்யவேண்டும் என்று இந்த அரசு கருதினால், கோரிக்கைகள் வந்தால் அவைகளை நாங்கள் புறக்கணிப்போம் என்று என்றைக்கும் ஆணவமாக அரசின் சார்பிலே விடை அளித்தது கிடையாது. பதில் வழங்கியதும் கிடையாது. பலமுறை இந்த மாமன்றத்திலே நான் சொல்லி இருக்கின்றேன் இப்போது அளிக்கப்பட்டுள்ள இந்த விகிதாச்சார முறையில் இந்த ஆண்டு ஏற்படுகின்ற அனுபவங்களைக் கொண்டு மீண்டும் பரிசீலனை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமேயானால் அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்று நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டார்கள் என்றெல்லாம் அர்ச்சுனன் அவர்கள் சொன்னார்கள். கடந்தகால ஆட்சிகளில் எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறாமல் இருந்தது கிடையாது. தி.மு.க. ஆட்சி வந்த பிறகுதான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாகச் சொல்ல முடியாது. கடந்த கால ஆட்சியில் ஒரு தண்ணீர் பிரச்சினைக்காக வாகைகுளத்தில் இரண்டு பெண்களே சுடப்பட்டார்கள்-பாக்கியத்தம்மாள், முத்து வேலம்பாள் என்ற இரண்டு பெண்களேகூட சுடப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் வன்முறைகள் நடைபெறுகிற நேரத்தில் ஆட்சியாளர்கள் கை கட்டிக்கொண்டு வாளா இருக்க முடியாது. வேண்டுமென்றே இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும். இந்த ஆட்சிக்கு சிக்கலை ஏற்படுத்த வேண்டும். எத்தனை நல்ல திட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்காக, மாநில மக்களுக்காக இந்த ஆட்சியின் வாயிலாகச் செய்யப்பட்டாலும்கூட அவைகளுக்கு எல்லாம் மாறாக ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்து, வன்முறைகளில் ஈடுபட்டு ஒவ்வொரு நாளும் ஒரு பஸ்ஸாவது கொளுத்தப்பட வேண்டும் என்கின்ற முறையிலே சிலர் ஈடுபடுவார்களேயானால் அதையெல்லாம் ஒரு அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இங்கே வைக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தைக் குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது 9 ஆண்டுகள் தாமதத் திற்கு எவையெவை காரணம் என்பதை எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். இப்போது நாம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருப்பதேகூட அந்தக் காரணங்கள் சரியல்ல என்று கூறுவதற்காகவோ அல்லது மத்திய அரசை இதை வைத்துக் கொண்டு கண்டிப்பதற்காகவோ அல்ல. இனிமேலா வது சிக்கல்களை எல்லாம் போக்கி இந்தத் தீர்மானத்தை ஏற்று அகில இந்திய அளவிலே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று மண்டல் குழு பரிந்துரைத்து இருக்கிறதோ அதனை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்து காட்டியதைப்போல மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தியப் பிரதமராக ஜனதா ஆட்சிக் காலத்திலே பொறுப்பு ஏற்று இருந்த நேரத்தில் இந்தக் குழு அமைக்கப்பட்டு சற்றொப்ப ஓராண்டுக்காலப் பணிக்குப் பிறகு 31-12-80 அன்று அந்த அறிக்கை பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அந்த அறிக்கை வைக்கப்பட்டது. 30-4-82 லே தான் அந்த அறிக்கை வைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் இரண்டு அவைகளிலும் வைக்கப்பட்டது. அப்படிக் காலம் கடத்திய தற்கு என்ன காரணம் என்பதை எல்லாம் ஆராயத் தேவை இல்லை. கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்திலாவது இந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று அழுத்தமாக நாம் இந்த அவையின் மூலமாக விடுகின்ற வேண்டுகோளின் மாற்று வடிவம்தான் இந்தத் தீர்மானம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் அரசியல் சட்டம் திருத்தப்பட்டதேகூட தமிழ் நாட்டு மக்களுடைய ஆர்த்தெழுந்த அந்நாள் கிளர்ச்சியின் காரணமாகத்தான் என்பதை இந்த அவையிலே உள்ள

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மிக நன்றாக அறிவார்கள். அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் அன்றைக்குத் தேவைப் பட்டது. ஏனென்றால் தமிழ்நாட்டிலே காலங்காலமாக இருந்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீட்டு முறை இவைகளுக்கெல்லாம் வேட்டு வைக்கின்ற முறையில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத் தீர்ப்புக்களை இட ஒதுக் கீட்டிற்கு மாறாகப் பெற்று, அதன் காரணாக தமிழகத்திலே தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் பெரும் கிளர்ச்சியிலே ஈடுபட்டு-கட்சி சார்பற்ற முறையிலே சில காங்கிரஸ் நண்பர்களே கூட-அன்றைக்கு அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தருகின்ற நிலை எல்லாம் ஏற்பட்டு தமிழகமே கொந்தளித்த அந்தச் சூழ்நிலையிலேதான் அரசியல் சட்டத்திற்கே முதல் திருத்தம் வந்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்பொழுது நாடாளுமன்றத்திலே பிரதமர் நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

You know what was the immediate cause for bringing the First Amendment to the constitution. You all know that there are certain happenings in Madras State which has led us to back this amendment. என்று நேரு அவர்கள் குறிப்பிட்டு அந்தத் திருத்தத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அதைக்கூட மண்டல் கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே சுட்டிக்காட்டும் பொழுது, Madras is the pioneer State in communal representation. It has given representation for backward classes.

என்று மண்டல் குழுவினுடைய அறிக்கை-இந்த நிலையைத் தமிழகம்தான் அதற்கு முன்னோடியாக இருந்தது என்பதை -சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்தக் குழுவிலே உள்ளவர் களுடைய பெயர்கள், அவர்கள் இந்தியா முழுவதும் பயணம் நடத்தி அறிந்துகொண்ட பல்வேறு உண்மைகள், அந்த உண்மைகளெல்லாம் அடங்கிய ஒரு கருவூலமாக இந்தக் குழுவினுடைய அறிக்கை பாரதப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்களுடைய முன்னுரையோடு தொடங்கி, பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்களுடைய முடிவுரை

யோடு, டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் தன்னுடைய பணியை முடித்து அவர்களிடத்திலே அதனை வழங்கியது.

அதிலே முக்கியமான பரிந்துரைகள் என்று எடுத்துக் கொண்டால், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்புடைய அரசு நிறுவனங்களிலுள்ள அனைத்துப் பணிகளிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் 27 சதவிகித இடஒதுக்கீடு இதர, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்தப் பரிந்துரை பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதத்திற்கு அதிகமாக இடஒதுக்கீடு செய்திருக்கும் மாநிலங்களைப் பாதிக்காது என்று மிக எச்சரிக்கையாக அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர்கள் பழங்குடி மக்களுக்கு உள்ளதுபோல் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நிரப்பப்படாமல் உள்ள இடஒதுக்கீடு அளவு மூன்று ஆண்டுகளுக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்குக் கொடுப்பது போலவே, அதே அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் மைய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசுகளும் பிற்படுத்தப்பட்டோர் நல முன்னேற்ற வாரியம் அமைக்க வேண்டும். அதை இந்த மாநிலத்திலே நாம் ஏற்கனவே 1971 ஆம் ஆண்டிலேயே அமைத்து விட்டோம்.

மேலும், மைய மற்றும் மாநில அரசுகளின்கீழ் பிற்படுத்தப்பட்டோருக்காகத் தனி அமைச்சகம், துறை அமைக்க வேண்டும். தனி அமைச்சர், அதற்காக துறை அமைக்க வேண்டுமென்று மண்டல் குழு சிபாரிசு செய்திருக்கிறது. மாநில அளவிலே நாம் 1971 ஆம் ஆண்டிலேயே இதற்கு என்று தனி இலாக்கா தனி அமைச்சர் என்கின்ற அளவிற்கு நாம் உருவாக்கி விட்டோம்.

மண்டல் குழுவினுடைய பரிந்துரைகள் நிறைவேற்றப் பட்ட பிறகு, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள்

மேலும் ஆய்வுசெய்யப்பட வேண்டுமென்றும் இந்தக் கருத்துக்கள் அந்தக்குழுவினுடைய பரிந்துரைகளாகத் தரப்பட்டன.

நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே சொன்னார்கள், என்ன முயற்சி எடுக்கப் பட்டது? எப்பொழுது தட்டிக் கழிக்கப்பட்டது என்றெல்லாம் கேட்டார்கள். கடந்த காலத்திலே கவர்னர் ஆட்சியிலேகூட, மண்டல் கமிஷன் சிபாரிசுகளைப் பற்றி அப்பொழுது இங்கே யிருந்த சில சூழ்நிலைகளையொட்டி மத்திய அரசுக்கு எழுதப் பட்ட கடிதத்திற்கு.

மத்திய அரசின் Ministry of welfare துறையின் சார்பாக 3-10-1988 அன்று தமிழக அரசுக்கு ஒரு பதில் கடிதம் வந்திருக்கிறது.

Government of India, Ministry of Welfare.

To
The Secretary to the Government of Tamil Nadu,
Social Welfare Department,
Madras

என்று முகவரியிட்டு ஒரு பதில் வந்தது. அந்தப் பதிலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"On the question of reservation to other Backward classes in services and educational institutions as contained in the Mandal Commission Report, the Central Government is of the opinion that status quo should be maintained till a national consensus is evolved.

Yours faithfully,
.....
Joint Director.

என்று கையெழுத்திட்டு பதில் வந்திருக்கின்றது.

தேசிய அளவிலே ஒரு கருத்து உருவாகிற வரையில் இப்பொழுதுள்ள நிலையே நீடிக்கட்டும் என்று கவர்னர் ஆட்சியிலே இங்குள்ள சூழ்நிலையினுடைய அடிப்படையிலே எழுதப்பட்ட கடிதத்திற்குக்கூட மத்தியிலேயிருந்து வந்த பதில் இப்படித்தான் அமைந்திருக்கின்றது. முயற்சிகள் மாநில

அரசின் சார்பாக பலமுறை எடுக்கப்பட்டன. கழக ஆட்சியிலே பலமுறை மத்தியிலும் இப்படிப்பட்ட இடஒதுக்கீடுகள் தேவை என்று வலியுறுத்தப்பட்டது.

பிறகு கழக ஆட்சிக்குப் பிறகு, கழகம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக்கால கட்டத்திலேகூட தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் மற்றுமுள்ள சமுதாய நல அமைப்புக்கள் டெல்லி வரையிலே சென்று, டெல்லியிலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள், தலைவர்கள் இவர்களோடு சேர்ந்து டெல்லிப் பட்டணத்திலேயே ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக் கின்றார்கள்.

அங்கே உண்ணா நோன்புகளை எல்லாம் நடத்தி இருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு கூட இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உள்ள நிலைமையை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நாட்டின் மக்கள் தொகையிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தைச் சேர்ந்தவர்கள் 52 சதவீதம், தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்கள் 22.5 சதவீதம். இந்த 52 சதவீத பின்தங்கிய மக்களுக்கு மத்திய அரசினுடைய வேலை வாய்ப்புகளில் எத்தனை சதவீதம் கிடைத்திருக்கிறது என்றால், பொதுவாக மொத்தத்தில் கிடைத்திருக்கிற சதவீதம் 12.55 தான். அதிலும் குறிப்பாக, மத்திய அரசு நிறுவனங்களிலும், பொதுத்துறை நிறுவனங் களிலும், மத்திய அரசு வங்கி போன்றவைகளிலும் 'கிளாஸ்-1' என்ற அந்தப் பணிக்கு, மேல்நிலை உத்தியோகங்கள் என்ற நிலையிலே எடுத்துக்கொண்டால் 4.69 சதவீதம்தான் பின்தங்கிய மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டித்தான் நாம் இந்த 27 சதவீதம் பின்தங்கிய மக்க ளுக்கு மத்தியிலே, பொதுத் துறைகளிலும், வங்கிகளிலும், மத்திய அரசு சார்புடைய இலாக்காக்களிலும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு, உங்கள் முன்னால் இந்தத் தீர்மானம் வைக்கப்பட்டிருக்கிறது.

இதை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தருவதன் மூலம், தமிழகத்தில் உள்ள நாம் அனைவரும் இந்தப் பிரச்சினையிலே ஒரே கருத்துடையவர்களாக இருக்கிறோம். எனவே மத்திய அரசு உடனடியாக இதுபற்றிக் கவனம் செலுத்தி, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற வகையில், இதனை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து அமைகிறேன். வணக்கம்.



# காவிரி நதி நீர்ப்பங்கீடு பிரச்சினை

**உரை : 25** **நாள்: 25.04.1990**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு, இந்தப் பிரச்சினையிலே பேச்சுவார்த்தை முடிந்து தோல்வி அடைந்து விட்டது என்ற தகவலை மறைக்காமல் தரவேண்டுமென்ற தீர்மானம் நேற்றைய தினம் இந்த மாமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானம் ஒன்று மாமன்றத்திற்கு வந்தால் அது முன்மொழியப்பெற்று அவை உறுப்பினர்களும், பல கட்சிகளுடைய தலைவர்களும் அதுகுறித்துப் பேசி, பிறகு அந்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, நிறைவேற்றுவது இந்த மாமன்றத்தின் மரபு. நேற்று நேரமில்லாத காரணத்தால், தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, இன்றைக்கு அந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிற நிலையில் எல்லாக் கட்சித் தலைவர்களும், முதல் வரிசையில் உள்ள தலைவர்கள் அனைவரும் நீண்ட உரை, விளக்க உரை ஆற்றியிருக்கிறார்கள். எல்லா உரைகளுடைய தொகுப்பும் என்னவென்றால், காவிரிப் பிரச்சினை இனிமேல் பேச்சு வார்த்தையிலே முடிவடையக் கூடிய ஒன்றல்ல. நடுவர் தீர்ப்பைத் தவிர வேறு பரிகாரம் கிடையாது என்பதுதான் அனைவரும் எடுத்துக்கூறிய கருத்துக்களின் மொத்தத் தொகுப்பு ஆகும்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசும்பொழுது ஊடே சில வாக்கியத்தைச் சொன்னார். கடந்த காலத்தில் வழக்கை திரும்பப் பெற்ற காரணத்தால் ஏற்பட்ட விளைவுகளைத்தான் அனுபவிக்கிறோம் என்று சொன்னார். வழக்கை 1971-72ஆம் ஆண்டிலேயே திரும்பப் பெறுவதற்கான காரணம் அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள், ''வழக்கு

இருக்கிற நேரத்திலே நான் தலையிட்டு பேசித் தீர்ப்பது என்பது இயலாததாக இருக்கிறது; எனவே வழக்கைத் திரும்பப் பெற்று பேச்சுவார்த்தை நடத்துங்கள்'' என்று கேட்டுக்கொண்டதற் கிணங்க, பேச்சு வார்த்தையிலே முடிவுறும் என்று நம்பி அன்றைக்கு அந்தப் பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக- முன் னிலை வகித்தவர் பாபு ஜகஜீவன்ராம் என்ற காரணத்தினால்- அவருடைய பேச்சு எடுபடும்; அவருடைய முன்னிலையிலே இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிபெறும் என்ற நம்பிக்கையோடு தமிழக அரசின் சார்பில் நானும், அதைப்போல கர்நாடகத்தின் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் அவர்களும், கேரளத்தினுடைய முதலமைச்சர் அச்சுதமேனன் அவர்களும், பாண்டிச்சேரி முதலமைச்சரும் பேச்சுவார்த்தையிலே கலந்துகொண்டு கிட்டத் தட்ட பேச்சுவார்த்தை வெற்றி பெறுகின்ற கட்டத்திலே ஓரிரு நுணுக்கங்களின் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தை அன்றைக்கு முடிவுறாமல் ஒரு கட்டத்தில் தோல்வியைச் சந்தித்தது.

நாம் வழக்கைத் திரும்பப் பெறுகிற அந்த நேரத்திலே கூட எப்படித் திரும்பப் பெற்று இருக்கிறோம் என்றால் With liberty to file a fresh suit on the same ... of action என்கின்ற அந்த நிலையிலேதான் வழக்கைத் திரும்பப்பெற்று இருக் கிறோமே அல்லாமல், வழக்கே போட மாட்டோம் என்று அல்ல. அதைத் திரும்பப்பெற்ற பிறகு பல ஆண்டுக் காலம் இடையிலே இருந்து இருக்கிறது; கடந்த கால ஆட்சியிலேகூட அந்த வழக்கை திரும்பப் போட்டு இருக்கலாம்; ஆனால் பேச்சுவார்த்தையில் நாம் நம்பிக்கை வைத்து இருந்தோம். ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, 26 தடவை பேசி, இறுதியாக ''நானும், தமிழக முதலமைச்சரும், இரண்டு பேரும் பேசினால் இறுதியாக முடிவு காண இயலும்'' என்று வீரேந்திர பாட்டீல் அவர்கள் டில்லியிலே அறிவித்தற்கு இணங்க, அந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை கடந்த 19ஆம் தேதி அன்று நடத்திப் பார்த்து, அது தோல்வி அடைந்துவிட்ட காரணத்தால்தான் நாம் உச்ச நீதிமன்றத்துக்கு அங்கே நம்முடைய அரசின் சார்பில் வாதாடுகின்ற வழக்கறிஞர் மூலமாக பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துவிட்டது என்ற குறிப்பை அனுப்பி இருக்கின்றோம்.

அதுவும் அரசின் சார்பாக மாத்திரம் அல்ல; இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாயிலாகவும் அந்தச் செய்தியை வழக்கறிஞருக்குச் சொல்லி, வழக்கறிஞர் நேற்றைய தினம் உச்சநீதிமன்றத்திலே இந்தச் செய்தியை எடுத்து உரைத்து இருக்கின்றார்.

இப்போது வீரேந்திர பாட்டீல் அவர்கள், கர்நாடகத்தின் முதலமைச்சர் அவர்கள் திடீரென்று இண்டர்-ஸ்டேட் கவுன்சில் மூலமாகக் கூட இதைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார். இன்னும் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலுக்கான அடிப்படைகள், அதிலே உள்ள மாறுதல்கள்- இவைகள் எல்லாம் செய்யப்பட்டு அந்த கவுன்சிலே இன்னும் அமையாத சூழ்நிலையிலே, அதிலே தீர்த்துக்கொள்ளலாம் என்பது, மேலும் காலம் கடத்தி- இப்போதே கிட்டத்தட்ட 140 டி.எம்.சி. தான் என்கின்ற அளவுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். இடைக் காலத்திலே, கடந்த காலத்திலே, நாங்கள் மின்சாரம் தருகிறோம்; பரிவர்த்தனையாக நீங்கள் தண்ணீர் தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு நம்முடைய உரிமைகள்கூட விட்டுக் கொடுக்கப் படுகின்ற சூழ்நிலையில் தண்ணீரைப் பெற வேண்டிய அவதிக்கு இந்த மாநிலம் ஆளாகி இருக்கின்றது. படிப்படியாக நமக்கு வரவேண்டிய தண்ணீர் குறைக்கப்பட்டு, இன்னும் ஓர் ஐந்து, ஆறு ஆண்டுக் காலம் போனால் இதைவிடக் குறைவாகத்தான் கர்நாடகம் நமக்குத் தண்ணீர் தரும் என்ற ஒரு கொடுமையான நிலை ஏற்படக்கூடும். இப்போதேகூட அவர்கள் வாதாடுகிற நேரத்திலே பேச்சுவார்த்தையில் 20 ஆண்டுக்கால சராசரி கணக்கை எடுக்காதே; கடந்த 5 ஆண்டுக் காலத்திலே எவ்வளவு தண்ணீர் திறந்து இருக்கிறோம்; அந்தக் கணக்கை- சராசரியாக எடு என்று சொன்னார்கள். நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன். வேதனையோடு சொன்னேன். ''கடந்த 5 ஆண்டு காலக் கணக்கை வைத்து சராசரி எடுக்க வேண்டும் என்றால் நீங்கள் இன்னும் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் இந்தப் பேச்சு வார்த்தையை நீட்டித்து, அப்போது ஐந்து ஆண்டுக் காலத்து சராசரிக் கணக்கு எடுத்தால், சராசரி பார்க்கத் தண்ணீரே இருக்காது; அந்த அளவுக்கு நீங்கள் கடந்த காலத்திலே தமிழகத்தை

ஏமாற்றத்திற்கு ஆளாக்கி இருக்கின்றீர்கள்'' என்று நான் குறிப்பிட்டுத்தான், மேலும் ஆய்வுகள் தேவையில்லை; மேலும் புள்ளி விவரங்கள் சேகரிக்கத் தேவையில்லை; இருக்கின்ற புள்ளி விவரங்கள், ஏற்கெனவே செய்யப்பட்ட ஆய்வு- இந்த அடிப்படையிலே பேசினால் போதும் என்று சொன்ன பிறகு தான், அதை ஏற்றுக்கொண்டு அவர் சென்னைக்கு வந்தார், பேச்சுவார்த்தை நடத்த. பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்பதால் நாம் தெளிவாக அவருக்கும் தெரிவித்திருக் கிறோம்; நாட்டுக்கும் தெரிவித்திருக்கிறோம்; மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம். பிரதமருக்கும் உடனடியாக அன்றைக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கும் அன்றைக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்திற்கும் நம்முடைய வழக்கறிஞர் மூலமாக இந்தச் செய்தி நேற்றைய தினம் தரப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியினுடைய பிரதிகள் மாநில அமைச்சர்களுக்கும், பிரதமருக்கும் அனுப்பப்பட்டிருக் கின்றன.

மத்திய அரசு நமக்குச் சாதகமாக நடக்குமா, பாதகமாக நடக்குமா என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது. நம்முடைய தீட்சிதர் அவர்கள்கூட நமக்குச் சாதகமாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே சாதகம், பாதகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்கள் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும். இதிலே கர்நாடகத்திற்குச் சாதகம், தமிழ்நாட்டிற்குப் பாதகம் அல்லது தமிழகத்திற்குச் சாதகம், கர்நாடகத்திற்குப் பாதகம் என்றெல்லாம் இல்லை.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்ற அந்த வகையிலேதான் இன்றைக்கு மத்திய அரசு தன்னுடைய பிரச்சினையை மத்திய அரசு அணுக வேண்டும். Natural co ellery என்று குறிப்பிடுவதைப் போல, இயற்கையான விளைவு அதுதான். பேசிப் பார்த்தாகி விட்டது. ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல. 27 தடவை பேசிப் பார்த்தாகி விட்டது. பிரதமர் இந்திரா காந்தி காலத்திலேயிருந்து, இராஜீவ் காந்தி காலம் வரையிலே பேசிப் பார்த்தாகி விட்டது.

இப்பொழுது ஒரு புதிய அரசு அங்கே உருவாகி இருக்கிற நேரத்தில் - அந்தப் புதிய அரசு உருவாவதற்கு முன்பு இராஜீவ் காந்தி அவர்களாலும் மற்றும் காங்கிரஸ் கட்சியாலும் மற்றக் கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நடுவர் தீர்ப்புக்கு இந்தப் பிரச்சினை விடப்பட வேண்டும் என்பதாகும். அதிலே, இன்றைக்கு இருக்கிற மத்திய அரசுக்கும் மறுப்பு இருக்க இயலாது. நடுவர் தீர்ப்புக்கு விடப்படுகின்ற காரணத்தாலேயே கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் தகராறு ஏற்பட்டு விட்டதாக யாரும் கருதத் தேவையில்லை.

நடுவர் தீர்ப்பிலே விசாரணை நடைபெற்று இருக்கும் பொழுதுகூட நாம் கோருகின்ற தண்ணீரைத் தருவதற்குக் கர்நாடகம் முன்வருமேயானால் நாங்கள் எங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொண்டோம், இனிமேல் நடுவர் தீர்ப்பு தேவையில்லை என்றுகூடச் சொல்லலாம். ஆனால் கர்நாடகத்தினுடைய நிலைமையைப் பார்க்கும்பொழுது அவர்கள் முழுக்க, முழுக்க தமிழகத்தைப் பட்டினி போட, வறண்ட பாலைவனமாக ஆக்கு வதற்குத்தான் இன்றைக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று எண்ணத்தோன்றுகின்ற காரணத்தினாலேதான் மத்திய அரசு இதிலே யாருக்கும் சாதகமாக இருக்கத் தேவையில்லை; நடுநிலையோடு நடந்து கொண்டால் போதுமானது.

நடுநிலையோடு நடந்து கொள்வது, நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு எது வழியோ, அந்த வழியை மத்திய அரசு அணுக வேண்டியது என்பதுதான். இப்பொழுதுள்ள நிலை கூட. மத்திய அரசே கூட நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று அல்ல, உச்ச நீதிமன்றத்திற்கு உண்மையைச் சொல்லிவிட்டால் போது மானது. எனவேதான், நேற்றைய தீர்மானத்திலே கூட உண்மையை மறைக்காமல் மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்திற்குச் செய்தியைச் சொல்ல வேண்டுமென்று திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியும், திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், யார் மத்தியிலே இருந்தாலும் சரி- அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி,

நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களே கூட மத்திய அரசிலே இடம் பெற்றிருந்தாலும் சரி, உறவுக்கு கைகொடுப்போம்- உரிமைக்குக் குரல் கொடுப்போம்- என்பதிலேயிருந்து எந்த நேரத்திலும் இம்மியளவும் மாறாத அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இன்றைக்கு இந்த அரசின் சார்பில் டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்துத் திரும்பியிருக்கின்ற நாடாளுமன்றக் குழுவினர் நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். அதைத்தான் பொதுப்பணித்துறை அமைச்சர் நேற்றையதினம் ''நாங்கள் பிதமரிடத்திலே குழுவின் சார்பாகச் செய்திகளை எடுத்து வைத்திருக்கின்றோம், அனுதாபத்தோடு கவனிப்பதாக அவரும் கூறியிருக்கிறார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நம்பிக் கையோடு நாளைய தினம் மத்திய அரசு எப்படி நடந்துகொள்ள இருக்கிறது என்பதை நாம் கவனித்துக் கொண்டிருக்கின்றோம்; மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கின்றோம்; திட்டவட்ட மாகத் தெரிவித்து இருக்கின்றோம்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார், அங்கே ஹெக்டே போன்றவர்களெல்லாம் தலையிட்டு, அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்கள் என்று. நாமும் அங்கே இருக்கின்ற நம்முடைய அமைச்சர் மூலமாகச் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்க முடியும். அவரைக்கூட அந்தக் குழுவிலே அனுப்பியிருக்க முடியும். அப்படி அனுப்புவது அரசியல் பண்பாடு ஆகாது என்ற காரணத்தினால் அனுப்பவில்லை. ஆனால், ஹெக்டே போன்றவர்கள்- திட்டக் குழுத்தலைவராக இருக்கிறவர்கள் அந்தக் குழுவிலே பங்கேற்றுச் சென்றிருக் கிறார்கள் என்றால், அவர்களுக்கு மாநிலப்பற்று இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில்- செல்வாக்கு அங்கே தவறாகப் பயன்படுத்தப்படுகிறதோ என்கின்ற சந்தேகம் எனக்கும், மற்றவர்களுக்கும் எழுவது நியாயமே ஆகும். அப்படிப்பட்ட சந்தேகங்கள்கூட யாருக்கும் எழாத அளவிற்கு மத்தியிலே பொறுப்பிலே இருப்பவர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மத்திய அரசு இந்த விஷயத்தில் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதை மாத்திரம் திட்டவட்டமாக உங்கள் சார்பாகச் சொல்லிக்கொள்ளுகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள ஐந்து கோடி மக்கள் சார்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாளும், நாளும் விவசாயப் பெருங்குடி மக்கள், தஞ்சை, திருச்சி- முக்கியமாக காவிரி நதிதீரத்தில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள்- அவர்களை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழ்நாட்டில் உள்ள ஐந்து கோடிக்கு மேற்பட்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள், அவர்கள் சார்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேச்சுவார்த்தை- இறுதி பேச்சு வார்த்தை 19-ஆம் தேதியோடு முடிந்துவிட்டது. இனி மத்திய அரசு எந்தவகையில் அழைத்தாலும் தமிழ்நாடு அரசு பேச்சு வார்த்தைக்கு தயாராக இல்லை, இல்லை, இல்லை என்பதைக் கூறி அமர்கிறேன்.



## மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அமல்

**உரை : 26** **நாள்: 21.08.1990**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்களுடைய திருத்தத்தை ஏற்று அதை அரசின் சார்பாகவே கொண்டு வருகிறேன்.

நான் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்டு 7ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசில் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன், அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

12.5.1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான

முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு, அரசின் சார்பில் முன்மொழிந்துள்ள மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு நிறைவேற்றியமைக்காக நன்றியையும், பாராட்டையும் மாமன்றத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம் என்ற கருத்து அடங்கிய தீர்மானத்தின் மீது, கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்துக்களில் அவர்கள் தெரிவித்த கோணங்கள் அல்லது பாணிகள் வேறுவேறாக இருந்தாலும்கூட, எல்லோருடைய குறிக்கோளும், இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது என்கின்ற வகையிலே அமைந்து, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளில் இழையோடிக்கொண்டிருக்கிற உண்மை என்ன என்ற அடிப்படையிலே விவாதித்திருக்கிறார்கள்; தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை, இந்த அவையிலேயுள்ள எல்லாக் கட்சியினரும், குறிப்பாக, எதிர்க்கட்சியினரைச் சார்ந்தவர்களும் இருந்து, ஆதரித்திருந்தால் நலமாக இருந்திருக்கலாம் அல்லவா என்பதைச் சொல்லாமற் சொல்லி, நம்முடைய திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள், விட்ட குறை- தொட்ட குறை விடாத காரணத்தினால், தன்னுடைய வேதனையை இங்கே வெளிப்படுத்திக் கொண்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நீண்ட நெடுங்காலமாக, நம்முடைய கோரிக்கையாக இருந்து வந்த, மண்டல் குழு பரிந்துரைகளினுடைய நிறைவேற்றம், முதற்கட்டமாக இன்றைக்கு வெற்றி பெற்று, நம்மையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியிருக்கிறது. முழுமையாக மண்டல் குழு பரிந்துரைகளையோ அல்லது மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்கும் அப்பாற்பட்ட, இன்னும் மேலாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளையோ, சலுகைகளையோ நாம் பெற வேண்டுமென்று வாதாடுவதற்கு ஒரு அடித்தளம் அமைக்கப் பட்டிருக்கிறது என்ற அளவில் இதை வரவேற்றுப் பாராட்ட

அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தினுடைய தாய் நிலம், இந்தியத் திருநாட்டில்- இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையான 'தென்னகம்' என்பதும் அதுவும் குறிப்பாக, இந்தத் 'தமிழ் நிலம்' என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நீதிக்கட்சி காலத்தில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்ற குரல் எழுப்பப்பட்ட பின்னர், 1926-27 என்கிற கால கட்டத்தில், அன்றைய தினம் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள், அரசு ஆணையாகப் பிறப்பித்த அந்தக் காலக்கட்டத்தின் முதற்படிதான் இன்றைக்கு அது எந்த அளவிற்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது ஒரு 14 அல்லது 15 உத்தியோகங்களில் யார்யாருக்கு எவ்வளவு இடம் எத்தனை பேருக்கு 4 இடம்; யாருக்கு 3 இடம்; யாருக்கு 2 இடம் என்றெல்லாம் இடங்கள் ஒதுக்கப்பட்டு, அது கூட 'ரொட்டேஷன்' முறையில்தான் வருமென்ற நிலை வகுக்கப்பட்டு இப்படி உருவானதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும் கூட, இது ஏதோ காங்கிரஸ்- கழகம் இரண்டுக்குமிடையே உள்ள ஒரு போராட்டம் என்பதுபோல் எண்ணிக்கொண்டு, கருத்துக்களைப் பரிமாற வேண்டிய அவசியம் அந்தத் தரப்பிலே பேசியவர்களானாலும், இந்தத் தரப்பிலே பேசியவர்களானாலும் இருப்பதை நான் உணராமல் இல்லை. ஆனால், என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலனில் எவ்வளவு அக்கறை உள்ளது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஆனால், காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தொடக்க காலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு விரோதமாக- மாறாக, கருத்துக்களைச் சொல்லி வந்த இயக்கம் என்பதை வரலாறு கூறுகிறது. அந்தக் காரணத்தினாலே

தான், காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தளபதியாக தென்னகத்திலே அன்றைக்கு உலா வந்த தந்தை பெரியார் அவர்கள் இரண்டு, மூன்று முறை நீதிக்கட்சி கடைப்பிடிக்கின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வலியுறுத்தி அதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், காஞ்சி புரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலிருந்து, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தலைமையிலே நடைபெற்ற மாநாட்டிலிருந்து, காங்கிரஸைவிட்டு அவர்கள் வெளி யேறினார்கள் என்பதெல்லாம் கடந்தகால சரித்திர உண்மைகள்.

அதற்குப் பிறகு திரு. ஓ.பி. ராமசாமி போன்றவர்களும், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும், காங்கிரஸ் இயக்கத்தில் பெரும் செல்வாக்குமிக்க இடங்களைப் பெற்ற வர்கள். அந்தக் காலக்கட்டத்தில் தந்தை பெரியாருடைய கொள் கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு அப்படி ஏற்றுக்கொண்ட திரு. ஓ.பி. ராமசாமி செட்டியாரைப் பார்த்து இவர் தாடி வைக்காத ராமசாமி என்றெல்லாம்கூட கேலி பேசுகிற, எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு திரு. ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும், பெருந் தலைவர் காமராஜர் அவர்களும் பெரியாருடைய வகுப்புவாரிப் பிரதிநித்துவக் கொள்கைகளின் அடிப்டையை ஏற்றுக்கொண்டு பணியாற்றினார்கள். எனவே தொடக்க காலத்திலே காங்கிர ஸுக்கு உடன்பாடாக அந்த இயக்கத்திலே இல்லாத ஒன்று, அதற்குப்பிறகு காங்கிரஸ் தலை எடுக்க, செல்வாக்குப் பெற்ற தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, அப்போதும் அது காங்கிரஸ் கட்சியினுடைய முழு முதல் கொள்கை என்று ஏற்றுக் கொள்ளப்படாமல், அதில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட தலை வர்களால் மாத்திரம் போற்றப்படக்கூடியதாக, பாதுகாக்கப் படக்கூடியதாக அந்தக் கொள்கை இருந்தது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

அண்மையில் கூட அ.தி.மு.க. ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது 9,000 ரூபாய் என்று உச்சவரம்பைக் கொண்டுவந்த அந்தக் காலகட்டத்திலே இதை எதிர்க்கிறோம் என்று திராவிடக்

கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் இயக்க ரீதியாக எதிர்ப்புக் காட்டியபோது அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை இயக்க ரீதியாக. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற நண்பர்கள், ரமணிபாய் போன்றவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்கள், மணிவர்மா போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு நாங்கள் நடத்திய கண்டனக் கூட்ட மேடைகளில் வந்து கலந்து கொண்டு 9,000 ரூபாய் உச்ச வரம்பு என்று அன்றைக்குக் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கட்சி ரீதியாக இந்தக் கொள்கை எங்களுடையது என்று கூறி அதை அவர்கள் ஆதரிக்க வராவிட்டாலும்கூட, அதிலே உள்ள தனிப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் அன்றைய தினம் அதற்கு ஏற்பட இருந்த ஊனத்தைப் போக்க, ஆபத்தைத் தடுக்க, அபாயத்திலிருந்து மீட்க அவர்கள் போராடி இருக்கிறார்கள். அதைப்போல்தான் அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாத ஒன்று இது என்று அல்லாடி போன்றவர்கள் வாதாடியபோது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எல்லாம் அடிபட்டுப் போகிற நேரத்தில் இதே மன்றத்தில் நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் கோசல்ராம், ஆர்.வி.சுவாமிநாதன் போன்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் இதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்றும், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பேசிய பேச்சுக்கள் எல்லாம் இன்றைக்கும் பதிவேடுகளில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றேன்.

இப்போதும் நான் சொல்கிறேன். இது ஒரு கட்சியினுடைய கொள்கையாக இல்லாமல் அந்தக் கட்சியிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களால் அன்றைக்குப் பாதுகாக்கப்பட்ட ஒரு கொள்கையாகத்தான் இருந்தது என்பதற்கு இவைகள் எல்லாம் ஆதாரங்கள் ஆகும்.

இன்று இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படை அம்சமாக இருக்கின்ற பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்குப் பாராட்டு, நன்றி, என்கிற அந்தக் கருத்துக்களைப் பற்றி காங்கிரஸ் கட்சி

யின் சார்பில் பேசும்போது அவர்கள் சொன்ன கருத்து ஏதோ நிலைமையை உத்தேசித்து தேவிலால் பிரச்சினைக்காக இதை பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆதாரமாக பாரதீய ஜனதா கட்சி இப்படி சொல்லி இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். பாரதீய ஜனதா கட்சிக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையில் வேறுபாடான கருத்து உண்டு என்பதை இந்த அவையிலே உள்ள அனைவரும் மிக நன்றாக அறிவோம். இருந்தாலும் கூட நண்பர் திரு. லத்தீப் எடுத்துக்காட்டியதைப் போல தோழமையாக இருந்து ஆதரவு அளித்துக்கொண்டிருக்கிற கட்சியே எதிர்த்தாலும் கூட அதனால் வருகிற விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள், என்பதற்காகத்தான் இதை நாம் பாராட்ட வேண்டும். மிகப் பெரும்பான்மையாக இருந்து அதன் காரணமாக அறிவித்தார் என்பது வேறு, சிக்கலான நேரத்தில்கூட இதை அறிவிக்கிற துணிவு, அந்த எண்ணம் அவருக்கு இருந்தது என்ற அந்த அளவில் பாராட்டுவதற்கு ஒரு தனிச் சிறப்பே இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தேவிலால் பிரச்சினைக்குப் பிறகு ஏற்பட்டதல்ல. இதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகமும் தேசிய முன்னணியில் இடம்பெற்றிருக்கின்ற காரணத்தால், இந்த வரலாறு எனக்கு மிகத் தெளிவாக முழுமையாகத் தெரியும்.

தேசிய முன்னணி, பாராளுமன்றத் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன்பு, டெல்லியிலே கூடி தேர்தல் அறிக்கையைத் தயாரித்தபோது, நானும் அந்த அறிக்கையைத் தயாரிக்கின்ற பணியிலே ஈடுபட்டு பங்கு பெற்றேன். அந்த நேரத்தில், தேவிலால் அவர்களும் இருந்துதான் இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டது.

சேர்க்கப்பட்டது மாத்திரம் அல்ல. தேவிலால் அவர்கள் தேசிய முன்னணி ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகு, துணைப்

பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி ஆராய்ந்து அறிக்கை தர, எப்படிச் செயல்படுவது என்பது பற்றி அறிந்து அறிக்கை தர, தேவிலால் அவர்களையே தலைவ ராகக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இது தேவிலால் பிரச்சினைக்காகத்தான் வந்தது என்றால், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் குழு பரிந்துரையை நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி ஏற்கெனவே தரப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலிருந்து இது தேவிலால் பிரச்சினைக்காக வந்தது என்ற வாதம் மிகத்தவறானது என்று தெரியவரும்.

அது மாத்திரமல்ல, ஒன்றை உங்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 12.6.1990 அன்று பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதுகிறார்கள். அப்போது தேவிலால் பிரச்சினை வரவில்லை. அந்தப் பிரச்சினை ஆகஸ்டில்தான் வந்தது. கடிதம் ஜூன் மாதத் தில் எழுதப்பட்டது. எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதம் அது. எனக்கும் கடிதம் எழுதியிருக்கிறார், அதில்,

"Dear Shri Karunanidhiji,

I am writing to you to-day on issues concerning the vital interest of the Backward classes in our country. It has been 10 years since the second Backward Classess Commission headed by sri Mandal submited its report. This Commission has made some important recommendations on imporving the conditions of the socially and educationally Backward Classes of the country. You would agree that we have to provide special safeguard fro the Backward classes. Your views on all the issues involved would therefore be of crucial importance to us. As the new Central Government be of eracial importance to us. As the new Central Government is committed to taking an early decision on the recomendations of the commission I would be grateful to hear your considered views by the end of this month. This

would help us to take an early final decision on implementing the various recommendations of the Mandal Commission."

ஜூன் மாதம் 12-ந் தேதி அவர் கடிதம் எழுதி மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிடுவதற்கான முயற்சிகளை நாம் மேற் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு, ஜூன் மாதக் கடைசிக் குள்ளாக முதலமைச்சர்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்ள விரும்பி, அதற்குள்ளாகக் கருத்துக்களை அறிவிக்கச் செய்கிறார்.

அதைப்போலவே உடனடியாக தமிழக அரசின் சார்பில் அந்த மாத இறுதி வாரத்தில் அவருக்கு நான் கடிதம் எழுதி யிருக்கிறேன்.

"Dear Prime Minister,

Thank you for your letter of 12th June calling for our state Government's views on the recommnedations of the Mandal Commission I am enclosing a detailed statement, containing our views on the various recommendations of the Mandal Commission. I would like to high-light a few of the sailent points. As you yourself have said we have to provide special safeguards for the Backward Classes. The Special safe-guards can only be in the form of Reservation in Government ... and Educational Institutions besides the various concessions ... the educational and economic advancement of the Backward classes. Such safeguards alone can ensure social justice to these... advantaged communities as envisaged by the founding Fathers of ... communities as envisaged by the founding Fathers for ... constitution. Regarding the list of Backward Classes to be ... for the implementation of the concessions recommended ...the Mandal Commission I would strongly urge the Government of ... to adopt the state Government's list of Backward Classes with ... to each state. I would like to drow your particular attention ... the strong recommentation of the Mandal

Commission that all developmental programmes specially designed for the Backward classes should be financed by the Central Government in the same ... and to the same extent as is being done in the case of sheduled Castes and Sheduled Tribes. I would like to add that the ... for the implementation of the Mandal Commission's recomenadations cannot be overemphasised and all of us look forward to ... early decision on this subject which will open a new era for ... Backward Classes under your dynamic leadership."

இது ஜூன் மாதத்திலே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்து. எனவே, தேவிலால் பிரச்சினைக்கும் இதற்கும் துளியும் சம்பந்தமில்லை. அதுமாத்திரமல்ல, தேவிலால் பிரச்சினையோடு சம்பந்தமுடையது என்று எண்ணுகின்றவர்களும் ஒரு விளக்கத் தைப் பெற வேண்டும். நாம் வகுத்துக்கொண்டிருக்கிற அல்லது வகுக்கப்பட்டதாய் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜாதி முறைப்படி, தேவிலால் அவர்கள் ஜாட் வகுப்பைச் சார்ந்தவர்கள். ஜாட் வகுப்பு முற்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வகுப்பு அல்ல. எனவே, அந்த வகுப்பை தன் வயப்படுத்த வேண்டுமென்று தந்திரமாக திரு. வி.பி. சிங் அதை அறிவித்தார் என்று யாராவது எண்ணிச் செல்வார்களேயானால் அது தவறு. பெரும்பாலான எண்ணிக்கை கொண்ட, ஜாட் வகுப்பு இதுவரையில் - நாளைக்கு சேர்க்கப்படலாம். அது வேறு விவரம். இதுவரை அந்த வகுப்பு - பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெறாத வகுப்பு என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் தான் அலகாபாத் சென்றது 1975ஆம் ஆண்டு என்று சொன்னார். அல்ல, 1973ஆம் ஆண்டு, மேலும் அங்கு பேசியது என்பது அல்ல. அதற்கு முன்பே திராவிட இயக்கத்தின் சார்பாக, தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், இவர்கள் எல்லாம் எடுத்து வைத்த கருத்து மாநில அளவிலே இருக்கின்ற இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்திய நாட்டின் அளவி லேயும் பரவிட வேண்டும் என்பதாகும். அந்தக் கருத்தைத்தான்,

பிற்படுத்தப்பட்டோர் மாநாடு அலகாபாத்தில் 1973ஆம் ஆண்டு நடைபெற்றபொழுது, அன்றைக்கு முதல்வராக ஆட்சிப் பொறுப்பிலிருந்த நான் அழைக்கப்பட்டு, அந்த மாநாட்டில் நான் பேசியபோது, மத்திய அரசு பொறுப்புகளிலும், அரசு சார்புடைய பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று அறிவித்தேன். அந்த மாநாட்டிலே அதுபோல ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து அதை நாம் வலியுறுத்திக் கொண்டு வந்த காரணத்தினால், 1978ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக ஜனதா கட்சியின் சார்பில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தபோது 20.12.1978 அன்று, மண்டல் கமிஷன் நியமிக்கப்படுமென்கிற அறிக்கை வெளி வந்து அது நியமிக்கப்பட்டது. அந்தப் பணி முடிவடைந்தபோது திரு. மொரார்ஜி தேசாய் பதவியில் இல்லை. அது அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே அந்த அறிக்கை வழங்கப்பட்டது. 1980ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட அந்த அறிக்கை 30.4.1982 அன்று, அதாவது 2 ஆண்டுகள் கழித்துதான் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. எனவே ஒரு பத்தாண்டுக் காலம், அந்த அறிக்கையைப் பற்றி எந்த விதமான சாதகமான பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை.

இதே மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1989ஆம் ஆண்டு மே மாதம் மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறை வேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு, பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு அவர்கள் கொடுத்த பதில் ''நீங்கள் அனுப்பிய தீர்மானம் கிடைக்கப்பெற்றோம்'' என்று தான் வந்ததே தவிர, அதைப்பற்றிய வேறு எந்தக் கருத்தும் நமக்கு பதிலாக வரவில்லை. உண்டு, இல்லை என்று வர வில்லை. அதற்கு முன்புகூட 1988ஆம் ஆண்டிலேகூட மண்டல் குழு பற்றி தமிழக அரசின் சார்பாக ஒரு கடிதம் எழுதப் பட்டபோது அதற்கு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய அரசின் சார்பில் அனுப்பப்பட்ட பதிலில் Status Quo இப்பொழுது

உள்ள நிலைமை நீடிக்கட்டும் பிறகு பார்க்கலாம் என்றுதான் அப்போதும் பதில் வந்திருக்கிறது.

எனவேதான் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, அது கிடப்பிலே போடப்பட்டதோ அல்லது அவர்கள் சொன்னது போல ஆராயப்பட்டதோ எனக்குத் தெரியாது. எனவே பத்தாண்டுக் காலம் மண்டல் குழுவின் பரிந்துரைகள் இந்தப் பயணத்திலே, பிற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற பயணத்திலே ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை. நான் எண்ணிப்பார்க்கிறேன். 1982ஆம் ஆண்டிலேயே இந்தப் பரிந்துரை வந்திருக்குமானால் இன்றைய தினம் நாம் எத்தனை பிற்படுத்தப்பட்ட மக்களை மத்திய அரசு அலுவலகங்களில் பெரிய பணிகளிலே பார்த்துக் களித்திருக்க முடியும் என்று. எனவே ஒரு பத்தாண்டுக் காலத்தை இந்திய நாட்டு வரலாற் றிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் எப்படியோ இழந்துவிட்டார்கள் என்பதைத்தான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது. இதைத்தான் இங்கே நண்பர் திரு. வல்லரசு அவர்கள் எடுத்துச்சொன்னார்கள்.

மண்டல் குழு தன்னுடைய அறிக்கையைத் தயாரித்து வழங்கியபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நிலை மத்தி யிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்கி இருக்கிறது. அதை நான் புள்ளி விவரத்தோடு இங்கே சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மத்திய அரசுத் துறையிலும், தொடர் புடைய மற்றத் துறைகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பதற்கான புள்ளி விவரங்கள், மண்டல் வழங்கியுள்ள புள்ளி விவரங்கள் இவை.

பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-1 அதிகாரிகள் பதவி, மொத்த அலுவலர்கள் 1379 பேர். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 48 பேர். ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு விகிதாச்சாரம் இல்லாவிட்டாலும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு 22.5 சதவிகிதம் உண்டு. 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு; 7.5 சதவிகிதம் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு. இரண்டும் இணைந்து 22.5 சதவிகிதம். அந்த 22.5 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்புத் துறையிலே

என்றால், கிரேட்-1 அலுவலர் பதவியிலே அவர்களுக்குக் கிடைத்து இருக்கவேண்டியது 310 இடம். ஆனால் அவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த இடமே 48 தான். மொத்தம் 1379-ல் தாழ்த்தப்பட்டோருக்கு 47 சத விகிதம் தரப்பட்டிருக்கிறதே, இதன்படி ஏற்கனவே தரப்பட்டிருந்தால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய இடம் 372. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய 372 இடங்களுக்குப் பதிலாக பாதுகாப்புத் துறையிலே 9 இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஏனைய உயர் வகுப்பாருக்கு 1322 இடங்கள் கிடைத்திருக்கின்றன. பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-2 அதிகாரிகள் பதவியில் மொத்த அலுவலர்கள் எண்ணிக்கை 7752. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 803. பிற்படுத்தப்பட்டவர்கள் 187. உயர் வகுப்பினர் 6762. கிளாஸ் 3, கிளாஸ் 4 ஆக இரண்டிலும் பாதுகாப்புத் துறையில் மொத்த அலுவலர்கள் 2127. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 604. பிற்படுத்தப்பட்டவர்கள் 131. இன்று அறிவித்துள்ள 27 சதவிகிதம் கிடைக்குமேயானால் 574 பேர் அங்கே இடம் பெற்றிருக்க முடியும். பாதுகாப்புத் துறையிலே அனைத்துத்தர அதிகாரிகளையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் மொத்த அலுவலர்கள் 11258 பேர். இதிலே உயர் சாதிக்காரர்கள் 10476 பேர்; பிற்படுத்தப்பட்டவர்கள் 327 பேர்; தாழ்த்தப்பட்டவர்கள் 1455 பேர்.

நிதித்துறையில் கிளாஸ் 1 அதிகாரிகள் மொத்தம் 1008 பேர். இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 66 பேர், உயர்சாதிக் காரர்கள் 941 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 1. ஒன்றே ஒன்றுஎ கண்ணே கண்ணு என்பார்களே அதைப்போல, 1008 கிளாஸ் 1 அதிகாரிகள் உள்ள நிதித்துறையிலே உயர் வகுப்பார் 941, பிற்படுத்தப்பட்டவர்கள் ஒன்றே ஒன்று.

நிதித்துறையில் கிளாஸ்-2 அதிகாரிகள் மொத்தம் 2,824. அதிலே உயர் சாதிக்காரர்கள் 2507 பேர். தாழ்த்தப்பட்டோர் 306, பிற்படுத்தப்பட்டோர் 11, நிதித்துறையில் கிளாஸ்-3, கிளாஸ்-4, மொத்தம் 821 பேர். அதிலே தாழ்த்தப்பட்டோர் 202; உயர் சாதிக்காரர்கள் 606; பிற்படுத்தப்பட்டோர் 13.

செய்தித் துறையில் மொத்தப் பணியாளர்கள் 16,505. அதில் உயர் வகுப்பார் 11,498 பேர். தாழ்த்தப்பட்டவர் 3,660, பிற்படுத்தப்பட்டவர்கள் 1,347. திட்டத்துறை மொத்தப் பணியாளர்கள் 6,971 பேர். அதிலே உயர் வகுப்பார் 4,582 பேர். தாழ்த்தப்பட்டவர் 977 பேர், பிற்படுத்தப்பட்டவர் 358 பேர். சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் மொத்தப் பணியாளர்கள் 9,185 பேர். அதிலே உயர் சாதிக்காரர்கள் 6,463 பேர், தாழ்த்தப்பட்டவர்கள் 2,181, பிற்படுத்தப்பட்டவர்கள் 541. குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்தப்பணியாளர்கள் 307. தாழ்த்தப்பட்டவர்கள் 47 பேர். உயர் சாதிக்காரர்கள் 260, பிற்படுத்தப்பட்டவர் இல்லை. மண்டல் இந்த அறிக்கையைத் தயாரித்து இந்தப் பரிந்துரை வழங்கியபொழுது அவர் அளித்த புள்ளி விவரம் இது. இதற்குப் பிறகும் ஒரு சமூக நீதிக்காக நாம் போராடுவது எவ்வளவு நியாயமானது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனவே தான் இன்றைக்குக் கிடைத்து இருக்கின்ற இந்த சமூகநீதி தமிழக வரலாற்றிலே ஏற்கனவே கிடைத்த ஒன்று என்றாலும் கூட, அது இன்றைக்குப் பெருகிப் பல்கி வளர்ந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, இந்தியத் திருநாட்டிலே ஒரு பெரிய சரித்திரத் திருப்பத்தை, ஒரு புதிய சகாப்தத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறது. அதனால்தான் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 7ஆம் தேதி இதை அறிவித்து விட்டு, ஆகஸ்ட் 9-ஆம் தேதி அதைப் பற்றிப் பேசும்பொழுது, ''In fact this is the realisation of the dream of Bharath Ratna Dr. Ambedkar, of the great Periyar Ramasami and Dr. Ram Manohar Lohia. It has been the aspirations of a very large section of people who in the present system are condemned to social inequity since their very birth to their last breath and whatever they may be, whatever their performance, whatever their merit, they are uable to break the shackles throught their life'' என்கின்ற முன்னுரையோடு அவருடைய பேச்சைத் தொடங்கி இந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரையை நிறைவேற்ற வேண்டிய

அவசியம் ஏன் தனக்கு ஏற்பட்டது என்பதையெல்லாம் எடுத்துக் காட்டி இருக்கின்றார்.

அவர் இதை அறிவித்ததிலேயே எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் என்பதை அவர் பயன்படுத்தி உள்ள வார்த்தைகளை எல்லாம் பார்க்கும்பொழுது மிகநன்றாகத் தெளிவாக நமக்குப் புரிகின்றது. சொல்லப்படுகின்ற குறை இது. கல்விச் சாலைகளுக்கும் அங்கே கிடைக்கின்ற வாய்ப்பு களுக்கும் இதிலே இடம் இல்லை. சிறுபான்மை மக்களுக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்பது போன்ற சில கருத்துக்களைத்தான் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இது முதல் கட்டம் என்று குறிப்பிட்டு இருக்கிறார். முதல் கட்டமாக இதை அறிவித்து இருக்கின்றோம். அடுத்தடுத்து மேலும் மேலும் உணரக்கூடிய பல்வேறு யோசனைகளை, கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அதை விஸ்தரிக்க முடியும், விரிவாக்க முடியும் என்ற கருத்தோடுதான் அவைகளை எல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின்றனர். பொருளாதார அடிப்படை வேண்டும் என்று சொல்கின்றார்கள். இதுவரையிலே போராடியது எல்லாம் பொருளாதார அடிப்படை கூடாது; சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் பின்தங்கிய மக்கள் என்றுதான் இருக்க வேண்டும் என்றுதான் ஒரு எழுச்சி 1952ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன்றைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்குக் குழி தோண்டப்பட்டபொழுது தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்திலே அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந் தாலும்கூட இந்தக் கொள்கையிலே ஒன்றுபட்டு நின்று, தமிழகத்தில் அன்றைக்கு ஒரு பெரும் புயல் வீசியபொழுது தான் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதன் முதலாக அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த முதல் திருத்தத்தைக் கொண்டுவரும்பொழுது அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முன்பு கூட எனக்குத் தெரியும், நான் படித்து இருக்கின்றேன். ஓ.பி. இராமசாமி போன்றவர்கள் நேரு அவர்களிடத்திலே அணுகி பிற்படுத்தப்பட்ட மக்களை சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் என்று அறிவிக்க

வேண்டும் என்று சொன்னபொழுதெல்லாம் நேரு அவர்கள் மிகக் கடுமையாகப் பதில் சொன்னார் என்பதும், அதன் காரணமாக ஓ.பி. இராமசாமி அவர்கள் பதவியையே ராஜினாமா செய்யத் தயாராக இருந்தார் என்பது வரலாறு ஆகும்.

ஆனால் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட பெரிய கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு அந்தக் கிளர்ச்சியைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''You know what was the immediate cause for bringing the first amendment to the constitution. You all know that there are certain happenings in Madras State which led us to make this amendment.''

என்று சொல்லிவிட்டுத்தான் அந்தத் திருத்தத்தை பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்திருக்கிறார், அப்படிக் கொண்டு வருகிறபோது குறிப்பிடுகிறார். இப்போது சில பத்திரிகைகளிலே- இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கட்டம் கட்டிப் போடுகிறார்கள். ஜவஹர்லால் நேரு அப்பொழுது பொருளாதார அடிப்படையை ஒத்துக்கொள்ளவில்லை என்று. இவையெல்லாம் நேரு இந்தத் திருத்தம் கொண்டுவருவதற்கு முன்பே சொன்னது. ஆனால் திருத்தம் கொண்டுவரும்போது பண்டித நேரு என்ன சொன்னார்? பொருளாதார அடிப்படை என்று அமைத்துவிட்டால், பொருளாதர நிலை என்பது நிரந்தரமானது அல்ல. ஒருவன் இந்த ஆண்டு பணக்காரனாக இருப்பான். அடுத்த ஆண்டு அவனுக்கு வருமானம் இல்லாமல் போய் விடும். அடுத்த ஆண்டு வருமானம் வரக்கூடும். எனவே பொருளாதார அடிப்படை என்று போடக்கூடாது என்பதுதான் நேரு அவர்கள் அன்றைக்கு அளித்த தெளிவான பதிலாகும். எனவேதான் நம்முடைய தமிழகத்திலேகூட இதுவரையிலே நாம் சோஷியலி, எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொன்னாலுங்கூட 'சோஷியலி' என்பதைத்தான் அதிகமாக வற்புறுத்தி அந்தச் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடுகளைச் செய்து வந்திருக்கிறோம்.

இங்கே நம்முடைய நண்பர் சுந்தரதாஸ் குறிப்பிட்டதைப் போல, மற்ற நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல படித்த வீட்டுப் பிள்ளைகள்தான் மேலும் பட்டதாரிகளாக வருகிறார்கள். எனவே, அதுவே ஒரு தனி சமுதாயமாக ஆகிவிடுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்திக்கொண்டு, வளர்ந்தவர்களே வளர்கிறார்கள். படித்தவர்களே மேலும் படிக்கிறார்கள், கிராமத்தில் உள்ள படிக்காத வீட்டுப் பிள்ளைகள் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள் என்றார். இந்தக் குறையைக் களைவதற்காகத்தான் இந்த ஆண்டு நம்முடைய அரசு 5 மதிப்பெண்கள் தருகிறது. திரு. பாண்டியன் சொன்னதைப் போல இலவசமாக தருவதல்ல. அவன் 230 மதிப்பெண்கள் வாங்கினால், அதற்குப் பிறகு தருவதுதான் இந்த 5 மதிப்பெண்கள். திடீரென்று 230 மதிப்பெண்கள் தருகிறேன் என்று யாருக்கும் தருவதில்லை. அந்த 5 மதிப்பெண் தருகிற நேரத்தில் நல்ல மார்க் எடுத்தவன் கெடுக்கப்படுகிறான் அல்லது பாதிக்கப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். அப்படி பாதிக்கப்படுகிறவர்கள் பட்டதாரிக் குடும்பத்திலிருந்து வந்தவர்களாகத்தான் இருக்க முடியும். முதன் முதலாக ஒரு குடும்பத்திலிருந்து வருகிற பட்டதாரி என்று எடுத்துக்கொள்ளும் போது அவன் உள்ளபடியே பட்டதாரியாக அந்தக் குடும்பம் இல்லாததற்கு முழுமுதற் காரணம் வறுமையாகத்தான் இருக்க முடியும். அப்படி வறுமை நிலைமையிலே இருக்கிற காரணத்தால்தான் அங்கே பட்டதாரிகள் உருவாகவில்லை. அப்படி உருவாகாத குடும்பத்திலிருந்து பட்டதாரி வரவேண்டும் என்பதற்காகத்தான் 5 மதிப்பெண்கள் அதிகமாகத் தருவது என்று இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு அது நல்ல முறையிலே செயல்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், இந்த ஆண்டிலிருந்துதான் செயல்படுகிறது. நம்முடைய திரு. குமரி அனந்தன் எடுத்துக்காட்டியதைப் போல பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1957ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் என்ற பட்டியல் தயாரித்து இந்த அவையிலே வைத்தார்கள். நான் அந்த இடத்திலே

உட்கார்ந்து படித்துப் பார்த்திருக்கிறேன். அப்படி வைக்கப்பட்ட அறிக்கை சலுகைகளுக்காகத்தான், உரிமைகளுக்காக அல்ல. ஒன்லி ஃபார் கன்செஷன். கன்செஷன் வேறு, ரிசர்வேஷன் வேறு. அதாவது இலவசக் கல்வியைப் பெற, கல்வியிலே ஊக்கம் அளிக்க, இப்படிப்பட்ட காரியங்களுக்காக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியல் அன்றைக்கு உருவாக்கப் பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கிளர்ச்சி மதிக்கப்பட்டு, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களில் வன்னியர்கள், முக்குலத்தோர் அதாவது சீர் மரபினர் என்ற இரண்டு பேரும் சமூகத்தினர் மற்றும் பல சிறு சிறு சமூகத்தினர் இணைக்கப்பட்டு அந்த 20 சதவீதம் என்பதை இன்றைக்கு நல்ல முழுப்பயனோடு வெற்றிகரமாக அனுப விக்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு மேலும் ஒரு துணையாக, அவர்களை கைதூக்கி விடத்தான் ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் அல்லது உடன் பிறப்புக்கள் பட்டதாரியாக இல்லாவிட்டால் அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தர வேண்டும் என்று அறிவித்ததன் காரணமாக, நான் இங்கே பெருமையோடு, மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே வந்துள்ள பட்டியல்படி பொறியியல் கல்லூரியில் 3,876 பேர் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். அதிலே 504 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன்பெற்று இன்றைக்குப் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் இதுவரையில் வந்துள்ள பட்டியலின்படி மொத்தம் 957 பேர்களில் 212 பேர்கள் இந்த ஐந்து மதிப்பெண்ணால் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறார்கள். கால்நடை பட்டப் படிப்பில் 268 மொத்தம். அதிலே 105 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரியில் 1,348 பேர்கள். மூன்றாண்டுப் பட்டப்படிப்பில் 492-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 309 பேர். ஐந்தாண்டுப் படிப்பிலே 438 பேருக்கு ஐந்து ஐந்து மார்க்கினால்

பலன் பெற்றவர்கள் 232 பேர். மாலைக் கல்லூரியில் 418-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 212 பேர். மொத்தம் 1,348 பேர்களுக்கு 753 பேர் இந்த ஐந்து மதிப் பெண்களால் பலன் பெற்றிருக்கிறார்கள். வேளாண்மைக் கல்லூரியில் 388 பேர் மொத்தம். அதிலே இந்த ஐந்து மதிப் பெண்களால் பலன் பெற்றவர்கள் 246 பேர். இவர்கள் எல்லாம் பட்டணக்கரையிலிருந்து வந்தவர்கள் அல்ல. கிராமங்களி லிருந்து, பட்டிதொட்டிகளிலிருந்து, குக்கிராமங்களிலிருந்து, நமக்கே பெயர் விளங்காத பல ஊர்களிலிருந்து வந்துள்ள கிராமப்புறத்து இளைஞர்கள் இந்தப்பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது இதை இலவசம் என்று சொல்லி நாம் ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. இது இல வசம் அல்ல. நமக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குகிற பரவசம் இது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி.எச். பாண்டியன்:** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தாக மீண்டும் சொல்கிறேன். கருத்தாகத்தான் சொல்கிறேன், எதிர்க்கவில்லை. எதிர்ப்பு என்பது வேறு, கருத்து என்பது வேறு. இன்றைக்கு சாதாரணமாக ஒரு அலுவலகத்தில் பியூனாக இருப்பவன்கூட பட்டம் பெற்று விடுகிறான். நாம் திறந்தவெளி பல்கலைக்கழகங்களையெல்லாம் திறந்து வைத்திருக்கின்றோம். ஒரு பக்கம் எல்லோரையும் பட்டம் பெறலாம் என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் பட்டத்தைப் பெற்றால் ஐந்து மார்க் உன்னுடைய குழந்தைக்குக் குறையும் என்று சொல்வோமானால் முரணாக வருவதைப்போல தெரிகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர் களே, ஐந்து மார்க் குறைக்கப்படும் என்று சொல்லவில்லை. ஐந்து மார்க் அதிகப்படுத்தப்படும் என்று சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தைத் தருகிறோம். பட்டதாரிகள் இருக்கிற வீடுகளி லிருந்து இன்னொரு பட்டதாரி வர வேண்டாம் என்பதல்ல. அதையும் மீறி வருகிறார்கள். நான் இங்கே படித்த இந்தப் பட்டியலில் 2,000 பேருக்கு 500 பேர் வந்திருக்கிறார்கள்

என்றால் மிச்சம் 1,500 பேர்கள் பட்டதாரிகள் வீடுகளிலிருந்து வந்தவர்கள்தான். எனவே, பட்டதாரிகளே இல்லாத கிராமத்து விவசாயிகளின் வீட்டிலிருந்து ஒருவன் பட்டதாரியாக வர வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட புரட்சிகரமான மாற்றம் இது. இதைக்கூட அகில இந்திய அளவிலே தேசிய முன்னணி அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துமானால் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிற இந்தப் பிரச்சினைகூட இல்லாமல் போய்விடும் என்றே, கருதுகிறேன். இப்போதுதான் உண்மையிலேயே 'சோசியலி' என்ற அளவோடு நின்ற இந்தப் பிரச்சினை 'எஜுகேஷனலி பேக்வர்டிற்கும்' இது கிடைத்து இருக்கிறது. அதை நாம் செய்திருக்கிறோம். தமிழ்நாட்டிலே இந்தியாவினுடைய தென்கோடி முனையிலே உருவாகிற கருத்துக்களை இன்று அகில இந்தியாவும் ஏற்றுக்கொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு நாம்தாம் விடுமுறை விட்டோம். இன்றைக்கு அகில இந்தியா அளவில் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு விடுமுறை என்று வி.பி.சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மேதின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று வி.பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மேதின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று நாம்தாம் விட்டோம். இன்றைக்கு அகில இந்திய அளவில் மேதின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று தேசிய முன்னணி அரசின் தலைவர் வி.பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

வி.பி. சிங் காங்கிரசில் இருந்தபோது என்ன செய்தார் என்று கேட்டார்கள். காங்கிரசில் இருந்த காரணத்தால் செய்ய வில்லை, தேசிய முன்னணி அரசை உருவாக்கிய காரணத்தால் செய்கிறார் என்பதைத் தான் அதற்குப்பதிலாக அளிக்க முடியும் என்று கூறி, இவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள், வேகமான பேச்சுகள், விறுவிறுப்பான பேச்சுகள் இருந்தாலும்கூட அனைவரும் ஒருமுகமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நம்முடைய சுந்தரதாஸ் போன்றவர்கள் எனக்கும் நன்றி தெரிவித்ததற்காக அவர்களுக்

கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர், நண்பர் பாண்டியன், நம்முடைய லத்தீப் அவர்கள், நம்முடைய வல்லரசு அவர்கள் மற்றுமுள்ள நண்பர்கள், ஆளும் கட்சி சார்பில் ஆதரித்துப் பேசிய இரகுமான்கான் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இதை ஆதரிக்க எப்போதுமே கடமைப்பட்டவர். நல்லவேளையாக தேசிய முன்னணி அரசு கொண்டுவந்த காரணத்தால் இது போதவில்லை என்று சொல்லவில்லை. இல்லாவிட்டால் இதுவும் போதவில்லை என்று சொல்வார். இருந்தாலும் அனைவரும் மனநிறைவு அடையத்தக்க அளவுக்கு ஒரு அருமையான தீர்மானத்தை இங்கே நாம் வழி மொழிந்திருக்கிறோம். நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்த அத்தனை பேருக்கும் நன்றிகூறி இதை ஒரு மனதாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).



# சட்டமன்ற மேலவை கொண்டு வருதல்

**உரை : 27** **நாள் : 26.07.1996**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தில் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகைமுறை களையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாகும் நிறைவுறு, இடைவுறு மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில், இந்திய அரசமைப்பின் 169ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்கீழ் நிறைவேற்றலாம் என்றும் இந்தப் பேரவை தீர்மானிக்கிறது என்று இந்தத் தீர்மானத்தை பேரவையிலே முன்மொழிகிறேன்.

தமிழகத்திலே மிகச் சிறப்புற நடைபெற்றுவந்த பெரும் மேதைகளுடைய கருத்துரைகளை, அறிவுரைகளை, ஆலோசனைகளை எல்லாம் பெற்று இயங்கி வந்த சட்டமன்ற மேலவை 14-5-1986ஆம் நாளைய அரசினர் தனித் தீர்மானம் ஒன்றின் வாயிலாகக் கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1989ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20ஆம் நாள் மேலவையை மீண்டும் தோற்றுவிக்கின்ற தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. அங்கே சற்று காலந்தாழ்ந்தது மாத்திரமல்ல, இந்தத் தீர்மானத்திற்கான ஒப்புதல் வழங்குவதற்கு முன்பு அரசு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் மாறிவிட்ட காரணத்தால் இந்தத் தீர்மானம் உயிர்பெறாமல் இருந்தது. அப்படியிருந்த தீர்மானத்தை 1991ஆம் ஆண்டு இங்கே

ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் 4-10-1991ஆம் நாளன்று மேலவை தேவை என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக் கொள்வது என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றினார்கள். எனவே, தமிழகத்திலே உள்ள, இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு பிரிவினர்கள் இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்றவர்கள் அன்னியில், இடம் பெற்று தங்கள் சார்பாக, தங்களுடைய பிரிவுகளின் சார்பாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டிய பலர் இடம் பெறமுடியாத ஒரு சூழ்நிலை, அவர்களுடைய அரிய யோசனையை அரசு கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை எண்ணிப் பார்த்து மீண்டும் மேலவைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றேன். இதைப்பற்றி அவையிலே உள்ள மற்ற கட்சிகளின் சார்பில் கருத்துக்கள் கூறப்பட்ட பிறகு என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மேலவையைத் தோற்றுவிக்க வேண்டும் என்று முன்மொழிந்துள்ள தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் இங்கே கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆதரித்தவர்களுடைய எண்ணிக்கை அதிகம். எதிர்த்தவர்களுடைய எண்ணிக்கை குறைவு என்பதற்காக, அவர்களின் எண்ணங்களை அலட்சியப்படுத்தக் கூடாது என்பது தான் ஜனநாயகத்தின் இலக்கணம். எனவே, இந்தத் தீர்மானத்தை எதிர்த்துள்ள கட்சிகளுக்குச் சில விளக்கங்களை அளிப்பது என்னுடைய கடமையாகும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள், தன்னுடைய கட்சியின் கட்டுப்பாடு இது என்பதை எடுத்து விளக்கி, மேலவையைக் கலைக்க வேண்டும் என்ற தீர்மானம் வந்தபோது கடுமையாக அதை தன் கட்சியின் சார்பாக எதிர்த்ததற்கு என்ன காரணம் என்பதையும் இங்கே சுட்டிக் காட்டினார். காரணங்களை இங்கே அடுக்கிக் காட்டவில்லை. ஏனென்றால், பழைய வரலாறுகளைப் புரட்டக்கூடாது என்ற பண்பாட்டின் காரணமாக என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலவை கலைக்கப்படும் என்ற செய்தி பரவிய நேரத்தில், மேலவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர், அருமை நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை

இங்கே நான் படித்துக்காட்டுவது என்னுடைய கடமை. கலைக்கக்கூடாது என்பதற்கான காரணங்கள் அல்ல, மேலவை ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள். ஆனால், திரு. சுப்பராயன் அவர்கள் கலைக்கக்கூடாது என்பதற்கான நிலையிலிருந்து வாதாடியதாகச் சொன்னார். ஆனால் முதுபெரும் அரசியல்வாதி களிலே ஒருவரும், நல்ல தியாக மனப்பான்மை கொண்டவரும், பல போராட்டங்களிலே ஈடுபட்டவரும் சிறந்த யோசனைகளை எடுத்துக் கூறி வருபவருமான திரு. மாணிக்கம் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலப் பொதுச் செயலாளராக இருந்த அந்தக் காலக்கட்டத்தில், மேலவையிலே அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"படித்த பட்டதாரிகள், அறிவாளிகள் ஆகியோருடைய அறிவு இந்த அவைக்குத் தேவை, அவர்களின் அறிவு தமிழ்நாட்டினுடைய நிர்வாகத்திற்குத் தேவை, இங்கே அரசை நடத்துவதற்குத் தேவை என்பதால்தான், அறிவுத் துறையில் உள்ளவர்களுக்கும், அறிஞர்களுக்கும் இங்கே பிரதிநிதித்துவம் தரப்பட்டிருக்கிறது. அதேபோல, உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த மேலவை கலைக்கப்பட்டால் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக இங்கே வரக்கூடியவர்களுக்கு இனி அந்த வாய்ப்பே இல்லாமல் போய்விடும். பஞ்சாயத்துக்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற அமைப்புகளின் ஒட்டுமொத்தமான நலன்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான், இந்த முறையே இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அறிவுத் துறையில் உள்ளவர்களும், கிராமப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நலன்களைக் காக்க விரும்புகிறவர்களும் இங்கே அங்கம் பெற வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அண்மையிலேதான் நாமினேஷன் கூட நடந்தது. தமிழ்நாட்டிலே உள்ள முக்கியமான சமூகநல ஊழியர்கள், கலைத் துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் அறிவுத் துறையைச் சார்ந்தவர்கள், நிபுணர்கள் போன்றவர்களை நியமிக்கலாம் என்று ஆளுநருக்கும் அதிகாரம் இருக்கிறது. இவ்வாறு சமுதாயத்தின் முக்கியமான துறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த

அமைப்பு முறை ஏற்பட்டிருக்கிறது" என்று அவர்கள் அன்றைக்கு ஒரு சிறந்த கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கலைக்கப்படுகின்ற நேரத்திலே கலைக்கப்படக்கூடாது என்று கடுமையாக வாதிட்டதென்பது வேறு, மேலவை எதற்காகத் தேவைப்படுகிறது என்ற அவசியத்தை எடுத்துச் சொன்னது வேறு என்ற நிலையில், நண்பர் திரு. மாணிக்கம் அவர்களுடைய கருத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டு, எல்லாப் பிரிவினருக்கும், இங்கே இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்கள் சார்ந்துள்ள பிரிவினருக்கும் மாத்திரம் அல்லாமல், இன்னும் வெளியிலே எஞ்சியுள்ள பிரிவினருக்கும் கூடுமானவரையிலே பிரதிநிதித்துவம் வழங்கிடவும், அவர்களுடைய கருத்துக்களையும் சிந்திக்கவும் ஒரு வாய்ப்பை நமக்கு நாமே இன்றைக்கு ஏற்படுத்திக் கொள்கிறோம்; அதுதான் மேலவை மீண்டும் வேண்டும் என்ற இந்தத் தீர்மானமாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எந்தெந்தப் பிரிவு மக்களையெல்லாம் நலிந்த சமுதாயத்திலே உள்ளவர்களையெல்லாம் அழைத்து மேலவையிலே இடம்பெறச் செய்தார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய அதே வழியைப் பின்பற்றி, பெரியாருடைய அடித்தளக் கொள்கைக் கேற்ப, அண்ணாவினுடைய வழியில் நடக்கின்ற நாங்களும், அதேபோல், திரு. கோலப்பன் என்ற சலவைத் தொழிலாளர் சமுதாயத்தைச் சார்ந்தவர் போன்றவர்களையும் மேலவையிலே இடம்பெறச் செய்து, அந்த மக்களுடைய குறைகளை மேலவையிலே பிரதிபலிக்கச் செய்து, அவற்றை நிறைவேற்றுகின்ற, அந்தக் குறைகளைப் போக்குகின்ற பணியிலே கழக அரசு காலத்திலே ஈடுபட்டிருக்கிறோம். இப்போதுதான் அண்மையிலே மறைந்த 'எலமந்தா' என்ற தோழர்; அவர் ஆதி ஆந்திர சமுதாயத்தைச் சார்ந்தவர்; 'ஸ்கேவஞ்சர்ஸ்' என்ற அந்த மக்களின் பிரதிநிதியாக இருந்தவர்; அவரை மேலவையிலே இடம்பெறச் செய்து, அந்த மக்களுக்குரிய குறைபாடுகளையெல்லாம் தீர்த்துக் கொள்கிற வாய்ப்பையும் பெற்றோம்.

அதுமட்டுமல்ல; மடாலயங்களுக்கு, ஆன்மீகத் துறை பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறுகிற வாய்ப்பு இல்லாமல்

இருப்பதை எண்ணிப் பார்த்து, தமிழ்மொழிக் காவலர்களிலே ஒருவராகவும், ஆன்மீகத்திலே மிகுந்த பற்றுள்ளவராகவும் விளங்கிய குன்றக்குடி அடிகளார் அவர்களை மேலவையிலே அமரச்செய்து, அவருடைய அருங்கருத்துக்களைப் பெற்ற காரணத்தினால், தெய்வீகப் பேரவை அமைந்ததும், அந்தத் தெய்வீகப் பேரவையின் சார்பிலே பல நன்மைகள் அறநிலையத் துறையின் மூலம் செய்யப்பட்டதையும் யாரும் மறந்திருக்க முடியாது. சிறுபான்மை சமுதாயத்து மக்கள், கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், அவர்களின் சார்பாகவும் பலரை இடம்பெறச் செய்யக்கூடிய நிலை, மேலவை இருந்தபோது இருந்தது என்பதை மறப்பதற்கில்லை. கலையுலகத்தில் உள்ளவர்கள், இசைத்துறையிலே உள்ளவர்கள், இவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற மேலவை பெரிதும் பயன்பட்டது. இன்னும் சொல்லப்போனால், மேலவையைக் கலைப்பதற்குத் தீர்மானத்தைக் கொண்டுவந்த முன்னாள் முதலமைச்சர் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில், மேலவையிலே இடம் பெற்றிருந்தவர்தான். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களும் மேலவையிலே இடம் பெற்றிருந்தார். காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலே, கொடுமுடி கோகிலம், கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் மேலவையிலே இடம் பெற்றிருந்தார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், மேலவையிலே இடம் பெற்றிருந்தார். அவர் மேலவையிலே இருந்தபோதும், திராவிட முன்னேற்றக் கழக அரசு அவரைக் கௌரவித்திருக்கிறது. அவர் மறைந்த பிறகும், திராவிட முன்னேற்றக் கழக அரசு, இந்த வளாகத்திலே உருவாக்கிய பத்து மாடிக் கட்டிடத்திற்கு, 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்ற பெயரைக் சூட்டியிருக்கிறது. அந்தப் போற்றுதலுக்குரிய ஒருவருடைய அறிவுரைகளை ஆலோசனைகளைக் கேட்பதற்கு - பேரவையிலே அவருக்கு வாய்ப்பில்லை - அப்படிப்பட்டவர்களுடைய அறிவுரைகளையும், கருத்துரை களையும் கேட்க, மேலவை ஒரு வாய்ப்பாக இருந்தது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. யார் யாரெல்லாம் அந்த மேலவையிலே இடம் பெற்றிருந்தார்கள் என்ற பட்டியலை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் அவற்றையெல்லாம்

மீண்டும் இங்கே திரும்பச் சொல்ல அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், மேலவை கலைக்கப்பட்டு, அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, மீண்டும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அது நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டியதைப் போல, இந்த ஆட்சி கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், அந்த மேலவையை மீண்டும் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் வலுவற்றுப் போய், செயலற்றுப் போய், அதற்குப் பிறகு வந்த ஆட்சியில், கடந்தகால ஆட்சியில், செல்வி ஜெயலலிதா அவர்களை முதலமைச்சராகக் கொண்டிருந்த அந்த ஆட்சியில், அந்தத் தீர்மானத்தையே, செயல்படாமல்போன அந்தத் தீர்மானம், எங்கே செயல்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, அந்தத் தீர்மானம் செல்லத்தக்கதல்ல என்று ஒரு தீர்மானத்தையே இந்த அவையிலே கொண்டுவந்து - அதனுடைய வரலாறெல்லாம் பெரிய வரலாறு - இருந்தாலும், முறைப்படி அந்த மேலவை கலைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த முறைகள், விதிகள் கடைபிடிக்கப்படவேண்டுமோ, அவைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. 14-5-86ஆம் நாளன்று இந்தப் பேரவையில் அன்றைய ஆளும் கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க. சார்பில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது, மேலவை கலைக்கப்பட வேண்டுமென்று. எப்படி அது அவசரமாக நடைபெற்றது என்பதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு கருதுவதைப்போல யாரையும் புண்படுத்துவதற்காக, குறை சொல்வதற்காக அல்ல. இருந்தாலும் ஒரு வரலாற்று உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். எப்படி விதிமுறைகள் பயன்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன். Business Rules and Secretariat Instructions என்ற நூலில் அமைச்சரவைக் கூட்டத்திலேதான் மேலவைக் கலைப்பு பற்றி முடிவெடுக்கப்பட வேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. 'Cases to be brought before the council' என்று குறிப்பிடப்பட்டு, ஒரு பட்டியலே

போடப்பட்டிருக்கிறது. Proposal to dissolve the Legislature of the State என்று தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு மாநிலச் சட்டமன்ற அமைப்பைக் கலைப்பது என்ற கருத்து கவுன்சில் முன்னால் விவாதிக்கப்பட வேண்டும் என்று அந்த விதி கூறுகிறது. கவுன்சில் என்றால் என்ன என்று ஒரு கேள்வி எழலாம். கவுன்சில் என்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ள விளக்கம் — Council means the Council of Ministers constituted under Article 163 என்று தெளிவாக இருக்கிறது. அதாவது 163-வது உறுப்பின்படி அமைக்கப்பட்ட அமைச்சரவை என்று பொருள்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு அவையைக் கலைப்பது என்றால் அது அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி விவாதிக்கப்படவில்லை. விவாதிக்கப்படவில்லையென்றால், "the Chief Minister may direct that any case referred to in the Second Schedule may, instead of being brought up for discussion at a meeting of the Council, be circulated to the Ministers for opinion" என்றிருக்கிறது. சுற்றாணையாகவாவது, சுற்று அறிவிப்பாகவாவது அமைச்சர்களுக்கு அது அனுப்பப் பட்டிருக்க வேண்டும். அதுவும் செய்யப்படவில்லை. பிறகு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகாவது கவர்னருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் அனுப்பப்படவில்லை. முதலிலே கலைக்க வேண்டுமா, வேண்டாமா என்பது அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஆலோசிக்கப்படாமல், கவர்னருக்கும் தெரிவிக்கப்படாமல் இங்கே மிக அவசரமாகத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்மானம் எப்படி நிறைவேற்றப்பட்டதென்றால் 9-5-86 அன்று முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதுதான் மாநில அரசு, மத்திய சர்க்காருக்கு தெரிவித்த ஆவணம். அந்தக் கடிதம்தான்,

"Dear Thiru Rajiv Gandhi,

When I met you last at Delhi, I mentioned about our ideas of abolishing the Second Chamber of the Tamil Nadu Legislature and you expressed your agreement. On that basis,

we are taking follow-up action. I discussed this with Thiru O. Subramaniam, Leader of Tamil Nadu Congress Legislature Party also. He indicated that the Congress party would support the move provided suitable advice is received from you. May I, therefore, request you kindly to give suitable instructions immediately to him to the effect that the Members of the Tamil Nadu Congress Legislature Party should support the move?

With Kind regards."

இப்படி ஒரு கட்சித் தலைவர் இன்னொரு கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதமாக அமைந்த இந்த ஆவணத்தை வைத்து மேலவை கலைக்கப்பட்டது என்பதுதான் வேதனைக் குரிய ஒரு செய்தியாகும். அப்படிக் கலைப்பதற்கான தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்ட பிறகு, அந்தத் தீர்மானத்தை மத்தியிலே உள்ள அரசுக்கு அனுப்பிய அந்த நேரத்திலேகூட, தீர்மானம் கவர்னருக்கு அனுப்பப்படவில்லை. அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலமின்றி இருந்தார் என்பதும், பேசுவதற்கு ** எழுதுவதற்கு இவை எல்லாம் அவருக்குக் கஷ்டமாக இருந்தது என்பதும் பரிதாபத்தோடு, இரக்க உள்ளத்தோடு நாம் எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்று. ஆனால் கவர்னருக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற குறிப்பை அடித்துவிட்டு, The intention of the Chief Minister is that this need not be circulated to the Governor என்று Deputy Secretary to C.M. எழுதுகிறார். Deputy Secretary to the Chief Minister எழுதி இது கவர்னருக்கு அனுப்பப்பட வேண்டாம் என்பது முதலமைச்சருடைய எண்ணம் - 'இன்டென்ஷன்' என்று எழுதி, இப்படிப்பட்ட ஒரு அலங்கோலமாகத்தான் அன்றைக்கு மேலவை கலைக்கப்பட்டது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவை கலைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் அதற்கு அமைச்சரவை கூடிப் பேசவேண்டும், அப்படி அமைச்சரவை கூடவில்லை என்றால் சர்குலேஷன் அனுப்ப வேண்டுமென்றெல்லாம் வரிசையாகச்

சொன்னார்கள். அதற்கு பிரவிஷன் எல்லாம் இருக்கிறது என்ற அடிப்படையில் சுட்டிக்காட்டினார்கள். நான் சொல்ல விரும்புவது, சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்குப் பின்னாலே மத்திய அரசாலும் நாடாளுமன்றத்தாலும் ஏற்கப்பட்டு மேலவை கலைக்கப்பட்டது என்று சொன்னால், அந்தப் புரவிஷன் எல்லாம் கம்பல்சரி அல்ல, அல்லது கட்டாயம் இல்லை என்கிற காரணத்தால்தான் இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, அந்த அடிப்படையிலே பார்த்தால் அவர் செய்தது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சட்டமன்ற மேலவையும் கலைக்கப்பட்டது. அப்படியும் செய்திருக்கலாம், இப்படியும் செய்திருக்கலாம். இன்னொன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொன்ன ** என்பது சபைக் குறிப்பில் இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பேசுவதற்கு சிரமப்பட்டதை வேண்டுமானால் சொல்லுங்கள். ** என்பது சரியல்ல. நன்கு புரிந்துகொள்கிற சூழ்நிலையில்தான் அவர் இருந்தார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு சொன்ன அந்தக் கருத்துக்கு ஏற்ப ** என்ற சொற்களை எடுத்துவிடுவதிலே எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. அதை எடுத்துவிட தாங்கள் உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்தச் சொற்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : நான் சொல்வது எல்லாம் நிறைவேறிவிட்டதற்காகவே, அதை நிறைவேற்றுவதற்குக் கையாண்ட முறைகள் எல்லாம் சரியானவை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், நாளைக்கு மேலவை அமைந்து, இன்னொரு முதலமைச்சர் வந்து இன்னொரு ஆட்சி வந்து, அந்த மேலவையைக் கலைக்கின்ற நேரத்திலே இதே

** மாண்புமிகுபேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாதிரியான வழிமுறைகளைப் பின்பற்றக் கூடாது. அப்படிப் பின்பற்றினால் எங்களைப்போல சும்மா இருந்து விடாமல் வழக்கு தொடுக்க வேண்டும். மேலவை வேண்டும் என்கிற நண்பர்கள் அதற்கு முன் வரவேண்டும். நாங்கள் சும்மா இருந்து விட்டோம், போனால் போகிறது, பரவாயில்லை என்று சும்மா இருந்து விட்டோம், வழக்கு யாராவது தொடுத்திருந்தால் என்னென்ன 'புரசிஜர்' கையாளப்பட்டிருக்கிறது, கவர்னர் கையெழுத்து போட்டிருக்கிறாரா எனப் பார்க்கவேண்டிய நிலைமை வந்திருக்கும். கவர்னர் பதவி வேண்டாம் என்பது வேறு. இங்கே நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கவர்னர் பதவி கூடாது என்பது எங்களுடைய கொள்கை என்று குறிப்பிட்டார்கள். அதே கொள்கைதான் எங்களுக்கும். ஆனால், கவர்னர் பதவி இருக்கிற வரையில் அந்தப் பதவிக்கு மதிப்பு அளிக்க வேண்டும். உறுப்பினர் திரு. தண்டபாணி கேட்டதற்குக்கூட, திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன பதில் சரியான பதில். மேலவை வேண்டாம் என்பது அவர்களுடைய கருத்து, மேலவை இருந்தால் அங்கேயும் இந்தக் கருத்தைச் சொல்வோம் என்று சொன்னார்கள். அதேதான், கவர்னர் பதவி இருக்கின்ற வரையில் அந்தப் பதவியின் மூலமாகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்பது.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் கவர்னர் ஒருவர் இருக்கிறாரா என்பதுகூடக் கேள்விக்குறியாக இருந்தது. அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அதை ஏற்றுக்கொண்டாரா? ஏற்றுக்கொள்கிறாரா என்பது வேறு. Past Tense-ல் கேட்கிறேன், ஏற்றுக்கொண்டாரா என்றால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், இருக்கின்ற விதிமுறைகள், வழிவகைகள், அவைகளை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கையை இளைஞர் சமுதாயத்தினரிடம் ஏற்படுத்த முடியும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேனே அல்லாது வேறு அல்ல. சரி, நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றினோம். வி.பி.சிங் அவர்களுடைய ஆட்சி மாறி விட்டது. வேறு ஆட்சி வந்தது, தீர்மானத்தைக்

கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அந்தத் தீர்மானம் செயலற்றதாகி விட்டது. பிறகாவது சும்மா இருந்தார்களா முன்பு இருந்த ஆட்சியாளர்கள்? முன்பிருந்த ஆட்சியாளர்கள் என்றால் முன்பிருந்த செல்வி ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியாளர்கள், அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். வந்ததும் வராததுமாக 4-10-91-ல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அப்போதுதான் நாங்கள் 'வெளிநடப்புச் செய்தோம்' என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்களே, அந்த நேரம், மேலவை தேவை என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக்கொள்ள ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நீக்கிக்கொள்ள ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டது. அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். மத்திய அரசுக்கு 1991-லே அனுப்பப்பட்டு அங்கேதான் வேடிக்கை, வேதனை-4 ஆண்டுகளாக அதை அவர்களும் கவனிக்கவில்லை, இவர்களும் கவனிக்கவில்லை. அதற்குப் பிறகு 1995ஆம் ஆண்டு ஒரு கோப்பு நகர்கிறது. அந்தக் கோப்பில் என்ன இருக்கிறது என்றால் - அப்படி அனுப்பப்பட்ட தீர்மானத்தைப் பற்றி - மத்தியிலே உள்ளவர்கள், ஏற்கெனவே செயலற்றுப்போன தீர்மானம். எனவே அந்தத் தீர்மானம் தேவையில்லை "In view of the decision stated above, the Department has proposesd to drop further action in the matter". 'ஆக்ஷனே' தேவையில்லையென்று அலுவலகக் குறிப்பு வருகிறது. இதுதான் மத்தியிலே உள்ள நிலை என்ற குறிப்பும் வருகிறது. வந்த பிறகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 16-3-1995-லே கையெழுத்துப் போடுகிறார், டிராப் பண்ணிவிடலாம் என்று, இதில் வேடிக்கை 8-5-1996-லே ஓட்டு எண்ணுகிறார்கள்; 7-5-1996-லே செல்வி ஜெயலலிதா அவர்கள், அந்தக் கோப்பிலே என்ன கையெழுத்துப் போடுகிறார்கள் என்றால் "This may be placed before the Cabinet" (சிரிப்பு). அதாவது அந்தத் தேதியில் அனுப்பிய தீர்மானத்திற்கு ஒரு 'வேல்யூ' இல்லை; அது ஒன்றுமில்லை என்று சொல்லியாயிற்று அதனாலே அப்படியே விட்டுவிடலாம்; டிராப் பண்ணிவிடலாம் என்பதை அப்படியே ஏற்றுக்கொண்டார் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. சட்ட அமைச்சர் அல்லவா? எனவே, அவர் நடுநிலையோடு சிந்தித்து, சரிதான் என்று கையெழுத்துப்

போட்டிருக்கிறார். அதற்குப்பிறகு, ஓராண்டு இரண்டு மாதம் கழித்து - நாளைக்கு ஓட்டு எண்ணப் போகிறார்கள் - என்ன நம்பிக்கை தெரியுமா?

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இதை அமைச்சரவையிலே வைத்து விவாதிக்கலாம்' என்று சொன்னால், எந்த அமைச்சரவை வந்தாலும் அந்த அமைச்சரவையில் வைத்து விவாதித்துக் கொள்ளலாம் என்றுகூடப் பொருள் கொள்ளலாம் அல்லவா? அந்த அமைச்சரவையே வந்தாலும் சரி, இல்லை. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் திரு. திருநாவுக்கரசும் ஒன்றாகத்தான் சிந்திப்போம். (சிரிப்பு) நான் அடுத்த வாக்கியம் அதைச் சொல்லவேண்டும் என்றிருந்தேன். தம்பி முந்திக் கொண்டார். என்ன இருந்தாலும் அண்ணனுக்குத் தம்பிதானே. (சிரிப்பு) அதைப் பாராட்டவேண்டும். ஆகவே, ஒரு அமைச்சரவையிலே விவாதிக்கச் சொன்னார்கள். ஆனால், முன்பு போல அமைச்சரவையிலே விவாதிக்காமல் நாம் செய்து விடவில்லை. செல்வி ஜெயலலிதா அவர்களுடைய கருத்துப்படி அமைச்சரவையிலே கூடி விவாதித்து, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஒருவேளை, தெரிந்துதானோ, என்னவோ திரு. திருநாவுக்கரசு அவர்கள் இதை ஆட்சேபிக்க வில்லை. ஏனென்றால், செல்வி ஜெயலலிதா அவர்களே அமைச்சரவையிலே விவாதித்தால் ஏற்றுக்கொள்வதாக மறைமுகமாகச் சொல்லியிருப்பதாகக் கருதி திரு. திருநாவுக்கரசு அவர்கள் இதை ஆட்சேபிக்கவில்லை என்று சொல்லியிருக்கின் றார்கள். இதை ஆட்சேபித்து கருத்துக்களைச் சொன்ன மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மணி அவர்களுடைய கருத்துக்கும் மதிப்பளிக்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் நம்முடைய திரு. சுப்பராயன் அவர்களுடைய கருத்துக்கும் மதிப்பளிக்கின்றேன். அதைப் போல இதை வரவேற்றுப் பேசிய, கருத்துக்களை வழங்கிய மற்ற கட்சிகளினுடைய கருத்துக்களையெல்லாம் மதித்து, அவர்களுடைய அன்பான ஆதரவை ஏற்று, எதிர்த்தவர்களும் இது வந்துவிட்டால் ஆதரிப்பார்கள் என்கிற அந்த எதிர்பார்ப்போடு அனைவரும் இதை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

## மதராஸ் என்பதற்கு சென்னை என பெயர் மாற்றம்

**உரை** : 28 **நாள் : 31.08.1996**

**கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த இனிய எழிலார்ந்த நம்முடைய உணர்வுகளை உள்ளடக்கிய பெயர் மாற்றத்திற்கு அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய ஆதரவை இந்த அவையிலே தந்திருப்பதற்கு என்னுடைய நன்றியை பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா முழுமையும் இந்தப் பெயர் தெரிகின்ற அளவிற்கு எல்லா மாநிலங்களுக்கும் அறிவிப்புகளை அனுப்ப வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அவையிலே இது தீர்மானமாக சட்டமாகப் பிறப்பெடுத்தாலே, இந்தியாவிலுள்ள மாநிலங்கள் மாத்திரம் அல்ல, அனைத்து நாடுகளிலும் அது பின்பற்றப்பட வேண்டிய ஒரு பெயராக ஆகிவிடும் என்பதில் எவ்விதமான ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவருடைய ஆலோசனையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே உள்ள மெட்ராஸ் யூனிவர்சிட்டி, மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் இதற்கெல்லாம்கூட திருத்தம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தச் சட்ட முன்வடிவிலேயே பொதுவான அத்தனை பெயர்களும் மெட்ராஸ் என்று இருப்பதெல்லாம் சென்னை என்று மாற்றப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. எனவே அதற்குள் அவர் குறிப்பிட்ட அந்தப் பெயர்களும் அடங்கும். இதிலே 1 ஆம் பிரிவில் 2 ஆம் உட்பிரிவின்படி குறிப்பிட்டுள்ள தேதி உள்ளிட்ட அத்தேதி முற்கொண்டு

இந்த மாநிலத்தில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் வருகின்ற மெட்ராஸ் என்னும் சொல்லுக்குப் பதிலாக சென்னை என்னும் சொல் அமைக்கப்படுதல் வேண்டும் என்று இருக்கிறது. அதுவே அவருடைய அந்தக் கருத்துக்கு ஏற்புடைய பொருத்தமாக போதுமான ஒன்றாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற பெயர் மாற்றத்தை இங்கு உள்ள அனைவரும் ஆதரித்துப் பாராட்டு தெரிவித்திருந்தாலுங்கூட வெளியிலே சிலர் இதைப்பற்றி கேலி பேசுவது கிண்டல் செய்வது இது தேவையா என்று உண்மையிலேயே அவர்கள் அவ்வாறு உணர்ந்து கேள்விகளை எழுப்புவது இன்றைக்கு இருப்பதை நாம் காண்கிறோம். உள்ளபடியே அதற்காக நான் வருத்தப்படுகிறேன். எழுத்தாளார் இந்திரா பார்த்தசாரதி அவர்கள் ஒரு பத்திரிக்கையிலே எழுதியுள்ள பகுதியின் இறுதிப் பகுதியை மாத்திரம் இங்கே நான் படிக்க விரும்புகிறேன். அதிலே அவர் சொல்லுகிறார். பம்பாயை மும்பை என்று மாற்றியபோது எந்த மராத்தியனும் முணு முணுக்கவில்லை. ஆனால் மெட்ராஸ் என்பதை எல்லா மொழிகளிலும் சென்னை என்று வழங்க முற்படும்போது ஏன் இத்தனை விவாதங்கள்? தமிழ்நாட்டில் தமிழர்கள்தான் இருக்கிறார்களா என்ற சந்தேகம் வருகிறது என்று இந்திரா பார்த்தசாரதி தன்னடைய கட்டுரையில் மிகுந்த கவலையோடு கேட்டிருக்கின்றார். எனவே அத்தகைய சந்தேகங்களும் அத்தகைய கேலியும் கிண்டல்களும் எழாமல் இருக்கக்கூடிய ஒரு தமிழகத்தை நாம் காண வேண்டும். அந்த நாள் வெகு தொலைவிலேயே இல்லை என்பது நமக்குத் தெரிகிறது.

தினமணிப் பத்திரிக்கையில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்திலேகூட, ''சென்னை நகருக்கு ஆங்கிலேயர் ஆட்சியிலே வழங்கிய பெயர் மதராஸ், சென்னை என்ற பெயரை, வழக்காற்றில் வந்துவிட்ட மதராஸ் என்ற பெயர் கிரகணம் போல மறைத்துவிட்டது. சென்னை என்ற பெயரை 'சென்னி' 'தலை' என்ற தமிழ்ச்சொல்லோடு தொடர்புபடுத்தலாம். தமிழகத்திற்கு சென்னி தலைநகரம் சென்னைதானே? சென்னையை மற்ற மொழிக்காரர்கள் இன்றும் மதராஸ் என்றே அழைத்து வருவது கருணாநிதியை உறுத்தியிருக்கிறது. எனவேதான் சென்னை என்றே அழைக்கச்செய்ய நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்து விட்டார். பம்பாய், மும்பை ஆனது போல் காசி வாரணாசி ஆகியிருப்பது போல்

ஆலப்பே, ஆலப்புழாவாகி இருப்பதுபோல் மதராஸ் சென்னை ஆகிறது. இந்த மாற்றத்திற்குக் காரணமாக தி. மு. க.வின் சென்னி போன்ற கருணாநிதி பாராட்டுக்குரியவர்'' என்று தினமணி எழுதியிருக்கின்றது. பொதுவாக தமிழகத்தில் தமிழ் மொழியினுடைய எழுச்சிக்கும், அந்த எழுச்சியின் காரணமாக ஏற்படுகின்ற ஒரு மொழி உணர்வுக்கும் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் திரு. வி. க. போன்றவர்கள், மறைமலை அடிகளைப் போன்றவர்கள், அவர்களைப்போலவே தேவநேயப் பாவாணர் போன்றவர்கள்- அவர்களுடைய அந்த வழியைத் தொடர்ந்து மக்களிடத்திலே இந்த எழுச்சியை, தமிழ் மொழிக்கான எழுச்சியை உடனே உருவாக்கிய இயக்கம் என்கின்ற முறையில் நாம் ஆற்றி இருக்கின்ற தொண்டு இன்றைக்குள்ள தலைமுறைக்கு பல பேருக்குத் தெரியாமல் போயினும் கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எத்தகைய சொற்கள் தமிழ் வீதிகளிலே நடமாடின என்பதும், அந்தச் சொற்கள் எல்லாம் இன்றைக்குப் புதையுண்டு உரிய சொற்கள் தமிழ்ச் சொற்கள் இன்றைக்கு வெளிவந்து உள்ளன என்பதையும் அறியலாம். ஒருவரை ஒருவர் காணும்போது நமஸ்காரம் என்று சொன்ன அந்தப் பழக்கம் மாறி வணக்கம் என்று ஆகி இருக்கிறது. அக்ராசனாதிபதி அவர்களே என்று அழைத்த காலம் மாறி தலைவர் அவர்களே என்று அழைக்கின்ற காலம் வந்து இருக்கிறது. அபேட்சகர், வேட்பாளர் ஆகிவிட்டார், செக்ரடேரியட், தலைமை செயலகம் ஆகி இருக்கிறது. மெம்பர், உறுப்பினர் என்று ஆகி இருக்கிறார். ஸ்பீக்கர், அவைத் தலைவர் என்று ஆகியிருக்கிறார். கோபித்துக் கொள்ளக்கூடாது. டெபுட்டி ஸ்பீக்கர், துணைத் தலைவர் என்று ஆகி இருக்கிறார். இருப்பினும்கூட இன்றைக்கும் தூத்துக்குடி ஆங்கிலத்தில் டூட்டுகுரின் என்றுதான் அழைக்கப்படுகிறது. கன்னியாகுமரி, கேப் காமரின் என்றுதான் அழைக்கப்படுகிறது. செஞ்சி, ஜிஞ்ஜி என்றுதான் அழைக்கப்படுகிறது. தரங்கம்பாடி, டிராங்க்கோபார் என்றுதான் ஆங்கிலத்தில் இன்றைக்கும் அழைக்கப்படுகிறது. அவற்றிலும் ஒரு பெரிய மாற்றத்தை நாம் உருவாக்க வேண்டும் (குறுக்கீடுகள்) மதுரை, மெஜுரா என்று அழைக்கப்படுகிறது. இன்று நாம் செய்கின்ற இந்த மாற்றத்தின் மூலம், மற்றவைகள் எல்லாம் மாற்றப்படுவதற்கு இது ஒரு

வழிக்காட்டியாக அமைக்கப்படும் பொன்மலை, கோல்டன் ராக் என்று அழைக்கப்படுகிறது. அங்கே கோல்டும் இல்லை, எதுவும் இல்லை, ராக்தான் இருக்கிறது (சிரிப்பு) அதுவும் மிகச்சிறிய ராக். அது பொன்மலை: அது கோல்டன் ராக் என்று இன்றைக்கு அழைக்கப்படுகிறது.

ஒரு பெயரை மாற்ற, டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றி நம்முடைய தமிழ்ப் பெயரான கல்லக்குடி பழங்கானந்தம் என்று பெயரை மாற்ற ஒரு பெரும் போராட்டமே நடத்தவேண்டி இருந்தது. அதற்குப் பல்லாயிரக்கணக்கானோர் சிறை செல்ல வேண்டி இருந்தது. இன்றைக்கு இந்த இயக்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கின்ற காரணத்தால், நல்ல தமிழ்ப் பெயர்களை, உரிய பெயர்களை சூட்டுகின்ற அந்த உரிமையை நாம் பெற்று இருக்கின்றோம். எனவே ஒரு வழிகாட்டுகின்ற வகையிலே, இந்தப் பெயர் மாற்றம் இன்றைக்கு நடைபெற்று இருக்கின்றது.

மெட்ராஸ் ஸ்டேட் என்ற இந்தப் பெயருக்குப் பதிலாக தமிழ்நாடு என்ற பெயர் சூட்ட வேண்டும் என்று சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மெட்ராஸ் ஸ்டேட் மாற்றப்பட்டு, தமிழ்நாடு ஆக ஆயிற்று. மெட்ராஸ் ஸ்டேட்டை மாற்றக்கூடாது என்று சில பேர் வாதிட்டார்கள். ஏனென்றால் அமெரிக்கா வரையிலே, ரஷ்யா வரையிலே ஜெர்மானிய நாட்டு வரையிலே தெரிந்த பெயர் மெட்ராஸ் ஸ்டேட், அதை மாற்றினால் யாருக்கும் புரியாமல் போய்விடும் என்றெல்லாம் அன்றைக்கு ஆர். வெங்கட்டராமன் போன்றவர்கள் இதே அவையிலே வாதிட்டது உண்டு. ஆனால் அந்த வாதங்களை எல்லாம் பொடிப்பொடியாக ஆக்கி சென்னை மாநிலத்திற்கு, நாம் பிறந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்ற பெயரை அமைத்த பேரறிஞர் அண்ணா வழியிலே வந்துள்ள இந்த அரசு (மேசையை தட்டும் ஒலி) இன்றைக்கு இந்த நகரத்திற்கு மெட்ராஸ் என்ற பெயரை மாற்றி சென்னை என்று சிங்காரத் தமிழிலே அழைக்கின்ற ஒரு நிலை உருவாகி இருக்கின்றது. அதற்கு அதரவு அளித்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைக் கூறி அமைகின்றேன். வணக்கம்.

# நாடாளுமன்ற தொகுதிகள் குறைக்காமலிருக்க சட்டத்திருத்தம் தேவை

**உரை : 29** **நாள் : 22.02.1999**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20ஆம் தேதி அன்று இந்த மாமன்றத்திலே முன்மொழிந்த தீர்மானத்தையொட்டி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் அவையில் உள்ள கட்சிகளின் தலைவர்களும் ஆதரவு வழங்கி தங்களுடைய கருத்துக்களையும் இணைத்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நம்முடைய மாநிலம் இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு - அதாவது குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்று வதில் மற்ற மாநிலங்களைவிட முந்திக்கொண்டும், முன்னணி யிலும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் உரையாற்றிய தலைவர்களும், இந்தத் திட்டத்திற்காகத் தமிழகத்திலே பெருமளவிற்குப் பிரச்சாரம் நடைபெற்றிருக்கிறது; திட்ட அளவிலே மாத்திரம் அல்லாமல் பிரச்சார அளவிலும் இந்த மாநிலத்திலே குடும்ப நலத் திட்டத்திலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்று முக்கியமாக ஒன்றைச் சொல்லவேண்டுமேயானால் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற திருமண விழாக்களில் நூற்றுக்கு அறுபது அல்லது எழுபதுக்கு மேற்பட்ட விழாக்கள் சீர்திருத்த முறையிலே நடைபெறுகின்ற திருமண விழாக்கள். தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்டு, அறிஞர் அண்ணா மற்றும் சமூக சீர்திருத்தக் காவலர்களால் தொடரப்பட்டு, இப்போது பெருமளவிற்கு நடைபெறுகின்ற திருமண

விழாக்களில் உரையாற்றுகின்ற ஒரு நிகழ்வு இருப்பதனால் உரையாற்றுகின்றவர்கள் தங்களுடைய கருத்தாக குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியும் வெகுவாக எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல குடும்ப நலத் திட்டத்திற்கு எதிர்ப்பாகச் சில கருத்துக்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்களாலேயே அண்மைக் காலத்திலே பேசப்பட்டதற்குக் காரணமே இதை நாம் தீவிரமாகக் கடைபிடிப்பதால் நம்முடைய நாடாளுமன்றத் தொகுதிகள் குறைகின்றன என்கின்ற ஆதங்கத்தால்தானே தவிர திட்டத்தின் மீது உள்ள வெறுப்பினால் அல்ல என்பதை நன்றாக உணர்வார்கள். இந்தக் குடும்ப நலத் திட்டத்தை அரசின் திட்டமாக அறிவிப் பதற்கு முன்பேகூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தான் யாத்த ஓர் அழகான கவிதையிலே குறிப்பிடுகின்றார்.

**"காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம் இதிலென்னகுற்றம்?"**

என்று. இப்படி வழிவழியாக சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக, திராவிட இயக்கத்தின் சார்பாக இந்தக் குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம் ஒரு சமூக சீர்திருத்த கொள்கையாகவே தமிழகத்திலே வேரூன்றியதும் இந்தத் திட்டம் தமிழகத்திலே மற்ற மாநிலங்களைவிட நல்ல அளவிலே பரவியிருப்பதற்கு ஒரு காரணம் ஆகும். ஆனால், அதற்குப் பரிசாக நாம் இன்றைக்குப் பெற இருப்பது ஆறு இடங்கள் குறைவு என்பதை எண்ணும்போதுதான் வருத்தமாக இருக்கிறது; வேதனையாக இருக்கிறது. உடனடியாக மத்திய அரசுக்கு இதை எடுத்துச் சொல்லி நம்முடைய உணர்வுகளைச் சுட்டிக்காட்டி இந்தத் திருத்தத்தை அரசமைப்புச் சட்டத்திலே உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கூறவேண்டியிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தைக் குறித்து சில விளக்கங்களை இந்த அவைக்கு நான் தர விரும்புகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 82-ன்படி ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பின்பும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டிய மக்களவைத் தொகுதிகள் மற்றும் அதன் எல்லைகள் குறித்து சட்டவிதிகளின்படி நாடாளுமன்றம் முடிவு

எடுக்க வேண்டும். இதன்படி ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பின்னரும் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மற்றும் எண்ணிக்கையை வரையறுக்க, எல்லை வரையறைச் சட்டம் - Delimitation Act - இயற்றப்படும். அச்சட்டத்தின்படி அமைக்கப்படும் தொகுதி வரையறை ஆணையத்தின் - Delimitation Commission - பரிந்துரைகளின்படி இந்திய அரசு நாடாளுமன்றத்தில் சட்டமுன்வடிவைக் கொண்டுவரும். மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் தற்போதைய எல்லைகளின் வரையறை மற்றும் எண்ணிக்கைகள், 1972ஆம் ஆண்டு இயற்றப்பட்ட எல்லை வரையறைச் சட்டத்தின்படி 1971ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. இதற்குரிய சட்டமுன்வடிவு நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் 1976ஆம் ஆண்டு, தொகுதி வரையறை ஆணை - Delimitation Order -வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையின்படி, தற்போது தமிழகத்திற்கு 39 மக்களவைத் தொகுதிகளும் 234 சட்டமன்றத் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. 39 மக்களவைத் தொகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு 7 தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1975ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் - Delimitation Commission - ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படவேண்டிய தொகுதிகளின் எண்ணிக்கையை மக்கள்தொகையின் அடிப்படையில் பின்வருமாறு வகுத்துள்ளது. 15 மாநிலங்களின் மொத்த மக்கள் தொகை 1971ஆம் ஆண்டு கணக்கின்படி 52 கோடியே 90 இலட்சத்து 42 ஆயிரத்து 59. இந்தக் கணக்கெடுப்பின்படி ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, மேகாலயா மற்றும் நாகாலாந்து தவிர நாடாளுமன்றத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 545. இவை தவிர, யூனியன் பிரதேசங்களுக்குள்ள தொகுதிகள் 20 போக மீதமுள்ள தொகுதிகள் 525. ஐந்து மில்லியனுக்கும் குறைவாக மக்கள் தொகை உள்ள மாநிலங்களான ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, நாகலாந்து இவை

அன்னியில் ஒரு தனித் தொகுதி. அது ஏன் தனித் தொகுதியில் வந்தது என்பதைப் பிறகு சொல்கிறேன். ஒரு தனித் தொகுதி. இப்படி ஒதுக்கப்பட்ட தொகுதிகள் மொத்தம் 18. 525-ல் அந்த 18-ஐயும் கழித்தால் 507, மிச்சப்படுகிறது. மக்களவைத் தொகுதிகள் 507.

ஒவ்வொரு தொகுதிக்கும் கணக்கெடுக்கப்படும் சராசரி மக்கள் தொகை 52 கோடியை 507 ஆல் வகுத்தால் ஒரு தொகுதிக்கு நம்முடைய தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல 10,43,475 பேர். 1971ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4 கோடியே 11 இலட்சத்து 99 ஆயிரத்து 168. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப் பட்ட தொகுதிகள், 4 கோடியே 11 இலட்சத்து சொச்சத்தை 10,43,475 ஆல் வகுத்துப் பார்த்தால் 39.48. அல்லது 39. இந்த 48.50 ஆக ஆகாத காரணத்தால் நமக்கு 39 இடங்கள் கிடைத்தன. ஏன் இது 50 ஆகவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த ஒரு தொகுதியைப் பற்றிச் சொன்னேனே, ஒரு தனித் தொகுதி, அதை கழித்துவிட்டார்கள். 508 ஆக இருந்திருந்தால் நமக்கு அப்போதே 39.48-க்குப் பதிலாக 39.50 வந்திருக்கும். 40 இடங்கள் கிடைத்திருக்கும். 1957 மற்றும் 1962-ல் நடந்த பொதுத் தேர்தலின்போது தமிழகத்தில் 41 மக்களவைத் தொகுதிகள் இருந்தன. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, இவை 39ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 1962ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் 1961ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப் பின் அடிப்படையில் மேற்கண்ட முறையில்மக்களவைத் தொகுதிகளை ஒதுக்கி, 1966-ல் ஆணை வெளியிடப்பட்டபோது தமிழகம் 2 மக்களவைத் தொகுதிகளை இழக்க நேர்ந்தது.

1974ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16ஆம் தேதியன்று இதே அவையில் கழக அரசின் சார்பில் ஒரு தீர்மானம், நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையையும் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானத்தில் நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் நாடாளுமன்ற மக்களவை

உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை 40 ஆகவும் மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் தற்போதுள்ள 6 சட்டமன்றத் தொகுதி இடங்களை 7 சட்டமன்றத் தொகுதி இடங்களாக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டோம். இது தீர்மானம் மாத்திரம் அல்ல, அதற்குப்பிறகு ஒருமுறை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, குழந்தைகளுக்காக நடத்தப்பெற்ற ஒரு விழாவில் - அன்றைக்கு நான் முதலமைச்சர், அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் அந்த விழாவிலே கலந்துகொண்டார்கள். அவர்களே புரவலராக இருந்து நடத்துகின்ற ஒரு பள்ளியினுடைய விழா அது. அப்போது காமராஜர் அவர்களே - பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்திலே சட்டமன்றத் தொகுதிகள் 6 என்பதை 7-ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டார்கள். அம்மையார் அவர்களும் பரிசீலிப்பதாக சொன்னார்கள். ஆனால், அது பரிசீலிக்கப்படவே யில்லை.

இந்திய மக்கள் தொகையை மொத்த மக்களவைத் தொகுதிகளான 507-ஆல் வகுத்தபோது 39.48 என்று வந்ததால், அது 39.50-க்குக் குறைவு என்று காரணம் காட்டப்பட்டு 39 இடங்களே நாடாளுமன்றத்திலே ஒதுக்கப்பட்டன. 507 என்ற எண்ணிக்கையால் வகுப்பதற்கு மாறாக தனித் தொகுதிக்காக ஒரு மக்களவைத் தொகுதியைக் குறைத்துக் கொண்டதற்கு மாறாக அதையும் சேர்த்து 508 என்று கணக்கிட்டு அந்த மொத்த மக்கள் தொகையினால் வகுத்தால் 39.56 என்று விடை வந்திருக்கும். அந்த வகையில் அது 39.50 என்பதற்கு அதிகம் என்ற வகையில் நமக்கு 40 இடங்கள் அப்போதே கிடைத்திருக்கும்.

1974ஆம் ஆண்டு நாம் 40 இடங்கள் கேட்டபோது தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4 கோடியே 11 இலட்சத்து 99 ஆயிரத்து 168. தற்போது 1991ஆம் ஆண்டு கணக்கின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5 கோடியே 56 இலட்சத்து 38 ஆயிரத்து 318. அப்படியானால் அதிக இடம் வரவேண்டுமே என்ற கேள்வி எழலாம். இயலாது என்பதற்கான விளக்கத்தையும் தர விரும்புகிறேன்.

1971-1981 மற்றும் 1981-1991 ஆண்டுகளுக்குரிய சில மாநிலங்களினுடைய மக்கள் தொகை வளர்ச்சி, மக்கள் தொகையினுடைய பெருக்கம் என்று பார்த்தால் இராஜஸ்தான் மாநிலத்திலே 1971-81-ல் அந்த ஆண்டுகளில் மக்கள் தொகை பெருக்க விகிதம் 2.87 சதவிகிதமாக இருந்தது. 1981-91-ல் 2.47 சதவிகிதம் என்ற அளவிற்கு உள்ளது. மத்திய பிரதேசத்தில் 1971-81ல் 2.27 சதவிகிதமாக இருந்த உயர்வு1981-91ல் 1.39 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இதன்படி தமிழகத்திலே ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க விகிதம் மற்ற மாநிலங்களைவிட குறைவாகவே உள்ளது. மற்ற தென் மாநிலங்களும் இதைப்போலவே பாதிக்கப்படக்கூடும். இது குறித்து 28-8-1997 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தென் மாநிலங்களின் 22-வது மண்டலக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆந்திர அரசு, குடும்ப நலத் திட்டத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்தும் தென் மாநிலங்கள் இதனால் பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்தை அந்த மாநாட்டில் தெரிவித்தது.

இந்திய அரசு, 1981ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளைத் திருத்தியமைக்க இந்திய அரசமைப்பு (71-வது திருத்தம்) சட்டமுன்வடிவு, 1990-ஐ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. 1971ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், தொகுதிகளின் எண்ணிக்கையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொகுதிகளின் எல்லைகளை மட்டும் மாற்றியமைக்க வகை செய்த இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றும்போது, மாநிலங்களவை 1981ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பதிலாக 1991ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என அந்தச் சட்டமுன்வடிவில் திருத்தம் கொண்டு வந்தது. மக்களவை, அந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றாமல், ஆய்வுக் குழுவிற்கு (Select Committee-க்கு) அனுப்பியது. இந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று, இந்திய அரசு, இந்திய அரசமைப்பு (83-வது திருத்தம்) சட்டமுன்வடிவை 1994-ல் மக்களவையில் அறிமுகப்படுத்தியது. ஆனால், இந்தச் சட்டமுன்வடிவு காலாவதியானது.

1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி தற்பொழுது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் செய்யப்படாமல் தொகுதிகளின் எல்லைகளை மாத்திரம் வரையறுக்கலாம் என்று இந்திய அரசு முனைந்து, 1996-ல் நாடாளுமன்றத்தில் இந்திய அரசமைப்பு (80-வது திருத்தம்) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் இச்சட்டமுன்வடிவும் காலாவதியானது.

இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 82 மற்றும் 170-ன் படி மக்களவைத் தொகுதிகள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மற்றும் எண்ணிக்கைகளில், வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிலவரம் வெளியிடப் படும்வரை எவ்வித மாற்றமும் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 81-க்கு, இதற்குரிய 42-வது சட்டத் திருத்தம் 1976-ல் கொண்டுவரப்பட்டுள்ளது.

வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது தமிழகத்தில் ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க விகிதம் குறைகின்ற காரணத்தால், தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் 6 வரை குறைய வாய்ப்புள்ளது. எனவே, இது குறித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 2001-ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை வரையறை நிர்ணயிக்க ஒரு புதிய எல்லை வரையறை ஆணையம் அமைக்கப்பட்டால் தமிழகத்திற்கு 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒதுக்கப்பட்ட 39 மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாமல் எல்லைகள் மட்டும் மறு வரையறை செய்யப்படலாம் எனத் தமிழக அரசு ஏற்கெனவே மத்திய உள்துறை அமைச்சருக்கு 2-6-1998 அன்று கடிதம் எழுதியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சரவர்களும் இது குறித்து கவனிப்பதாகத் தனது 8-6-1998 ஆம் நாளிட்ட கடிதத்தில் எனக்கு பதில் அனுப்பியுள்ளார்.

மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்தி, தமிழகத்திற்குத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின்

எண்ணிக்கையில் மேலும் எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் இருக்க வேண்டுமென்றும், இதற்குரிய தேவையான அரசமைப்புச் சட்டத்திருத்தம் மக்களவையிலே கொண்டுவரப்பட வேண்டுமென்றும் பாரதப் பிரதமர், மத்திய உள் துறை அமைச்சர் மற்றும் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு 15-2-1999 அன்று கடிதமும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவற்றையொட்டித்தான் இப்போது இந்தத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தில் 50 ஆண்டுகள் என்று இருப்பதை மாற்றிவிட வேண்டும்; அந்தக் காலக்கெடு தேவையில்லை என்று நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. பழனிசாமி அவர்களும், அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பில் திரு. சந்தானம் அவர்களும் எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மனத்திலே வைத்து சில திருத்தங்களோடு மீண்டும் இத்தீர்மானத்தை உங்களுடைய அன்பான ஆதரவுக்காக முன்வைக்க விரும்புகிறேன்.

''இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 81-க்கு 1976ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நாற்பத்தி இரண்டாவது சட்டத் திருத்தம் மற்றும் பிரிவு 82 ஆகியவற்றின்படி வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் நிலவரம் வெளியிடப்படும்வரை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப் பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றப் படாமல் இருக்கப்பட வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத் திட்டத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்தும் மாநிலங் களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை மக்களவையில் குறைக்கப்படாமல் இருக்க இந்தச் சட்டத் திருத்தம் உறுதி செய்கிறது.

வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போது, தமிழகத்தில் ஆண்டு மக்கட்தொகைப் பெருக்க விகிதம் குறைகின்ற காரணத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், மக்களவையில் தமிழகத்தின்

பிரதிநிதித்துவம் 6 தொகுதிகள் வரை குறைக்கப்படலாம் என அச்சம் ஏற்படுகிறது. காலப்போக்கில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலும் குடும்ப நலத் திட்டம் அமல்படுத்தப்படுவதை இது பெருமளவில் பாதிக்கும்.

எனவே, மக்களவைத் தொகுதிகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையிலே மாற்றம் ஏதும் செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதுவாக தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளலாம் என்று இந்தப் பேரவை தீர்மானிக்கிறது.''

என்ற திருத்தத் தீர்மானத்தை உங்கள் முன்னால் வைக்கிறேன். இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

# அரசினர் சட்ட முன் வடிவுகள்

## கை ஏர் வாரம், மாட்டு ஏர் வாரம்

உரை : 30 நாள் : 14.11.1957

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, திரு கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவை ஒட்டி என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டமன்றத்தில் விவசாயிகளுடைய நிலைமை களைப் பொறுத்தும், அண்மைக் காலங்களில் பல மாவட்டங் களில் சர்க்காரால் புதிதாக வகுக்கப்பட்டுள்ள சட்டத்திலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களை புத்திசாலிகள் பயன்படுத்திக் கொள்கிற காரணத்தினால் எந்த இடையூறுகளுக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை பலமுறை நான் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறேன். சட்டமன்றத்தில் மாத்திரம் அன்றி, அமைச்சர் அவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அதைப் பற்றிய விளக்கங்களை எடுத்து தந்திருக்கிறேன். விவசாயிகள் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டமும், நியாயவாரச் சட்டமும் கொண்டுவரப்பட்டபோதிலும்கூட, சாணக்கிய தந்திரம் படைத்த சிலர் எப்படியோ இருக்கக்கூடிய சந்துபொந்துகளில் நுழைந்து கொண்டு தங்களுக்குச் சாதகமாகவும், விவசாயிகளுக்குப் பாதகமாகவும் செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் அநேக இடங்களில் உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டொரு வாரங்களுக்கு முன்பும், ஒரு திங்களுக்கு முன்பும் நடைபெற்று இருக்கிற சம்பவங்கள் இந்தச் சபைக்கு நன்கு தெரியும்.

திருச்சி மாவட்டங்களில் கை ஏர், மாட்டு ஏர்க்காரர்கள் முச்சிலிகா எழுதிக்கொடுத்தவர்கள் என்ற அளவிலே எறத்தாழ பத்தாயிரம் விவசாயிகள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் சாகுபடி செய்கின்ற மொத்த நிலத்தின் பரப்பு பத்தாயிரம் ஏக்கர் நிலமாகும். அந்த பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் பாடுபடுகிற விவசாயிகள் இந்த சட்டத்தினுடைய உள் நோக்கத்தை நல்ல முறையிலே அனுபவிக்கிறார்களா என்று பார்த்தால் அவர்கள் அந்த அளவு அனுபவிக்க முடியவில்லை என்பதையும், அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், சபை அறியும், அமைச்சர்களும் நன்கு அறிவார்கள். நங்கவரத்தில் ஏற்பட்ட அறப்போரில் நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த அறப்போரின் உட்கருத்தையும் அதனுடைய அவசியத்தையும் புரிந்துக்கொள்ளாமல் அமைச்சர் பெருமக்கள் இந்த அறப்போராட்டம் ஒரு கட்சியினுடைய தனிப்பட்ட செல்வாக்குக்காகத்தான் நடைபெறுகிறதென்றும் உண்மையாகவே விவசாயிகளிடத்திலே பணியாற்றுகின்ற எண்ணம் திராவிட முன்னேற்ற கழகத்தாருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இல்லை என்றும் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டார்களே தவிர பிரச்சனையை எப்படி தீர்க்கவேண்டும் என்பதிலேயே அவர்கள் தங்களுடைய அவசரத்தைக் காட்ட மறுத்து விட்டார்கள். ஆனால் பல நேரங்களில் ஒத்துக்கொண்டார்கள். இந்த சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன என்று.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி-அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி-
கொண்டு வந்தான் ஒரு தோண்டி-அதை
கூத்தாடி கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என்ற பாடலை நினைவூட்டுகிற வகையிலேதான் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த அந்தச் சட்டம் உடைக்கப்பட்ட தோண்டிபோல் ஆகிவிட்டது. சட்டத்திலேயே ஓட்டை இருக்கிறது. அதை அடைக்கவேண்டும் என்று சொல்லிவிட்டால் முடியுமா என்று கேட்பவர்களுக்கு நான் ஒரு சாதாரண உதாரணம் கூற முடியும்.

பெண்கள்கூட வீட்டிலே இருக்கிற குடங்களில் ஓட்டை விழுந்தால் அவசியத்திற்கு புளியை வைத்து அடைத்து

விடுவார்கள். அந்த முறையிலே ஒரு அவசரச் சட்டத்தையாவது போட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு இந்த அமைச்சர்கள் முன்வரவில்லை என்பதைக் காண உண்மையிலே என் வருத்தத்தை தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

கல்யாணசுந்தரம் பெரியவரா, கருணாநிதி பெரியவரா என்பதற்காக இந்தப் போராட்டம் என்று குறிப்பிடப்படுகிறதே தவிர, இதன் நோக்கம் என்ன? ஏன் அங்கு இருக்கிற விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அங்கே இருக்கும் நிலப்பிரபுக்கள் எப்படி எப்படி அவர்களை ஆட்டிப்படைக் கிறார்கள் என்ற காரணத்தை அறிய அவர்கள் மறந்துவிட்டார்கள். நங்கவரத்தில் நடைபெற்ற போராட்டம் எவ்வளவு அமைதியாக நடைபெற்றது என்பதையும் எந்த அளவு காந்தியார் கூறுகிற அகிம்சை முறையில் சாத்வீக முறையில் நடைபெற்றது என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் சபையிலே ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஒரு வேளை தனிப்பட்ட முறையில் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

போராட்டத்தில் நான் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஒரு நாள் சென்னைக்கு வந்துவிட்ட நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கொஞ்சம் கட்டுக்கடங்காமல் போகவே, போலீஸ் அதிகாரிகள் அந்த விவசாயிகளைப் பார்த்து "நீங்கள் கட்டுக்கடங்காமல் போனால் நான் உங்கள் அண்ணாவிடத்தில் சொல்வேன். குளித்தலையில் அண்ணா கூறி இருக்கிற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகியவைகளை மறந்துவிட்டீர்களா?" என்று அண்ணா அவர்கள் பேசிய பேச்சை போலீஸ்காரர்கள் எடுத்துக்காட்டி அங்கே கொதித்தெழுந்த விவசாயிகளுக்கு அறிவுரை கூறினார்கள் என்றால் எந்த அளவிற்கு அந்த போராட்டத்தை நடத்தினோம் என்பது புலனாகும்.

அந்தப் போராட்டம் எழுவதற்குக் காரணம் என்ன? நங்கவரத்தில் இருக்கும் தனிப்பட்டவர்கள் மீது உள்ள ஆத்திரமோ, வஞ்சமோ நிச்சயமாக இல்லை. நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் அங்கே இருக்கிற விவசாயிகளிடமிருந்து முச்சிலிகா என்ற அந்த கொடுமையான அடிமை முறைச் சீட்டை எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த சீட்டை போலீஸ்

அமைச்சர்கூட பார்வையிட்டார்கள், அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். கல்லணையில் அவர்கள் அதைப்பார்த்தபோது, ''இது Czar-உடைய சட்டம்போல் இருக்கிறது'' என்று கூறியதாக எனக்கு ஞாபகம். அந்த அளவு விவசாயிகளை அடக்கி ஒடுக்குகிறார்கள் நாங்கள் உங்களுக்கு அடிமைகளாக இருப்போம், நிலத்திலே பாடுபடுவோம். நீங்கள் கொடுத்ததை வாங்கிக்கொள்வோம் என்று கூறுகிற அளவு முச்சிலி கா நடமாடுகிறது. அந்தக் கொடுமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு அங்கிருக்கும் ரென்ட் கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது. ஆனால் அந்த வழக்குகளை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரிடத்திலேயே மாற்றிக் கொள்ளக்கூடிய உரிமை அந்த விவசாயிகளுக்கு இருக்கிறதா என்றால், நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் 6(ஏ) ஷரத்துபடி அவர்களுக்கு அந்த உரிமை அளிக்கப்படவில்லை. அந்த ஷரத்தின்படி அவர்கள் ''விவசாயிகள்'' என்று ஒப்புக்கொள்ளப்பட்டால், அவர்கள் குத்தகைதாரர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டால்தான் அந்த வழக்குகள், அவர்களுடைய உரிமையை பெறுகிற வழக்குகள், நிலத்திலிருந்து வெளியேற்றப் படுகிற கொடுமையிலிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ளுகிற நிலைமைக்கு மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற அந்த வழக்குகள், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்பட முடியும்.

இந்த நிலைமையை நாம் உன்னிப்பாக கவனிக்கும்போது அங்கிருக்கும் பத்தாயிரக்கணக்கான கை ஏர், மாட்டு ஏர்க்காரர்கள், குத்தகைதாரர்கள் என்ற அடிப்படையிலே அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டால்தான் இந்தச் சட்டம், நியாயவார சட்டமாக இருந்தாலும் சரி, 60 :40 என்ற அந்த காமதேனு, அந்த கற்பக விருட்சம், அது தருகிற பயனை அவர்கள் நிச்சயமாக அனுபவிக்கமுடியும் என்பதை இந்த அவை உணர வேண்டும். அதைப்போல்தான் முச்சலிகா எழுதிக்கொடுத்தவர்களையும் குத்தகைதாரர்கள் என்று எழுதிக்கொடுத்தவர்களின் பட்டியலில்சேர்க்கப்பட்டாக வேண்டும். இந்த நிலைமையிலேதான் டெனன்சி அக்ரிமெண்ட் என்ற அந்த ஒப்பந்தத்தின் கீழ், குத்தகைதார் ஒப்பந்தத்தின் கீழ் முச்சிலிகாகாரர்களும்,

அங்கிருக்கும் கை ஏர், மாட்டு ஏர்காரர்களும் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இன்னொரு வழியிருக்கிறது. முச்சிலிகாகாரர்கள், கையேர் காரர்கள், மாட்டு ஏர்காரர்கள், பத்தாயிரக்கணக்கான அந்த விவசாயத்தொழிலாளர்களை குத்தகை ஒப்பந்தம் என்ற பெயரிலே சேர்ப்பதற்கு ஏதாவது இடையூறு இருக்குமானால், சட்டபூர்வமாக இடையூறு இருக்கும் என்று சர்க்கார் கருதினால் பொதுவாகவே விவசாயி ஒப்பந்தம் என்ற அளவிலே அந்த ஒப்பந்தம் என்ற ஒரே வார்த்தையை உபயோகித்து, குத்தகைதார் ஒப்பந்தம் என்றோ கையேர் மாட்டு ஏர்காரர் ஒப்பந்தம் என்றோ தனித்தனியாக பிரிக்காமல், ஒப்பந்தம் என்ற பொதுச்சொல்லின் கீழே அந்த விவசாயிகள் அத்தனை பேரையும் கொண்டுவர முடியும். அப்படிக் கொண்டுவந்தால்தான், அந்த அளவுக்கு சட்டம் அவசர அவசரமாக உடனடியாகத் திருத்தப்பட்டால்தான், அங்கே கஷ்டப்படுகிற விவசாயிகள் அங்கே நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற விவசாயிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், நிலப்பிரபுகளுடைய கொடுமையிலிருந்து விடுபடுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன், கையேர் மாட்டு ஏர்காரர்களை, குத்தகை ஒப்பந்தம் என்ற அளவிலே அவர்களை குத்தகைத்தார்களாகச் சேர்க்கவேண்டும். அல்லது அது சரி அல்ல என்று சட்டபூர்வமாக கருதப்படாமல் ஒப்பந்தம் என்ற பொதுச்சொல்லின் அடிப்படையிலாவது அவர்கள் சேர்க்கப்படுவார்களானால் விவசாயிகள் உண்மையிலேயே நிச்சயமாக பாதுகாக்கப்படுவார்கள் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூறி நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்த மசோதாவை ஒட்டி என்னுடைய கருத்தை இந்த அவை முன்னாலே வைக்கிறேன். வணக்கம்.

## துறைமுகங்களை வளர்த்தல்

**உரை : 31** **நாள் : 14.11.1957**

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள், துறைமுகங்களை வளர்க்க வேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானத்தின் கருத்தினையொட்டி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே துறைமுகங்கள் தேவை என்று முன்பெல்லாம் வெள்ளைக்கார துரை முகங்களைப்பார்த்துக் கேட்டோம். இன்றையதினம் நம்முடைய நாட்டு மந்திரிமார்களுடைய முகங்களைப் பார்த்து தமிழகத்தில் துறைமுகங்கள் நிரம்ப வேண்டுமென்று கேட்கின்ற நிலைமையிலே இருக்கிறோம்.

தமிழகத்தில் ஒரு காலத்திலே எந்த அளவுக்கு நல்ல துறைமுகங்கள் இருந்தன என்பதையும் அத்தகைய துறைமுகங்கள் வாயிலாக யவனத்திற்கும் கிரேக்கத்திற்கும் தமிழகத்தினுடைய மயில் இறகு, மிளகு போன்ற பொருள்கள், தமிழகத்தினுடைய சிறப்பான முத்துக்கள் எந்த அளவுக்கு ஏற்றுமதி ஆயின என்பதையும் நம்முடைய வரலாறுகள் விளக்கி நமக்குப் பெருமை அளித்துக்கொண்டிருக்கின்றன. காவிரிப் பூம்பட்டிணம் என்று இன்றையதினம் வழங்கப்படும் ஊர் பூம்புகார் என்று வழங்கிவந்தது. நான் பூம்புகார் என்று சொல்லும்போது ஒரு சிலருக்கு நான் ஏதோ "புகார்" கூறுகிறேன் என்றுகூடத் தோன்றலாம். சிலப்பதிகாரத்தில் மிக மிக அழகுற விளக்கப்படுகிறது:

*நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*

*கங்கை வாரியும் காவிரிப் பயனும்*
*ஈழத்துணவும் காழகத் தாக்கமும். . .*

என்று சொல்லக்கூடிய இந்தத் துணைக் கண்டத்தினுடைய பொருள்கள் அத்தனையும் வந்து குவிகின்ற மாபெரும் துறைமுகப்பட்டினம் அது. வெளிநாடுகளிலிருந்து சிறப்பான குதிரைகள் வந்து இறங்கும் அத்தகைய பெருமை படைத்ததாகும். பூம்புகார் துறைமுகம் ஒரு காலத்தில் ஏற்றமும் பெற்றியும் பெற்று விளங்கியது. அத்தகைய துறைமுகம் இன்றையதினம் கடலால் அழிக்கப்பட்டுப் போய்விட்டாலும்கூட, இன்று நாட்டிலே முற்போக்கும் நல்ல வளமும் வேண்டும் என்று விரும்புகிற இந்த அமைச்சரவை நாகப்பட்டினத்துத் துறைமுகத்தை விருத்தி செய்வதோடுகூட, தமிழகத்தினுடைய கரையோரங்களில் உள்ள துறைமுகங்களை விருத்தி செய்வதோடுகூட, மாமல்லபுரத்தில் இருந்து, அழிந்துவிட்ட துறைமுகங்களையும் மீண்டும் புதுபிக்க முயற்சி எடுத்துக்கொள்வதோடு கூட, பூம்புகார் என்னும் பழைய துறைமுகத்தையும் மீண்டும் அங்கே தோற்றுவிக்கக்கூடிய முயற்சியையும் எடுத்துக்கொள்ளுமேயானால், இலக்கிய கால எழில்மிக்க துறைமுகம் ஒன்றையும் தமிழகத்தினுடைய வாணிபத்தை உலகெங்கும் பரப்பிய அத்தகைய துறைமுகம் ஒன்றையும் மீண்டும் நாம் தோற்றுவித்தோம் என்ற பெருமைக்கு உள்ளாவோம்.

துறைமுகங்களை இங்கு ஏற்படுத்தவேண்டுமென்று கூறுகிற நேரத்தில் அமைச்சரவை வழக்கமாக திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய கோரிக்கைக்குத் தருகிற பதிலைத் தரமுடியாது என்று கருதுகிறேன். வட நாட்டிலே இருப்பது போல் அணைக்கட்டுகள் தமிழ் நாட்டிலே வேண்டுமென்று கேட்டால், ''இங்கே ஆறுகள் கிடையாதே, எப்படி அணைகட்ட முடியும்?'' என்று ஒரு வரியிலே கூறிவிடுவார்கள். இன்று அவர்கள் எங்கு நோக்கினாலும் விரிந்து பரந்து இருக்கிற நீலத் திரைக் கடலும் அந்த நீலத் திரைக் கடலோரங்களில் எத்தகைய துறைமுகங்களைக் கட்டலாம் என்பதற்கான கணக்கும், அவர்கள் மறைத்தாலும் மறைக்க முடியாத அளவுக்கு விரிந்து பரந்து இருக்கிறது, ''ஆறு இல்லை, ஆகவே அணைக்கட்டு கட்டவில்லை.'' என்று கூறுகிற இந்த அமைச்சரவைக்கு கடல் இருக்கிறது. நல்ல கரை இருக்கிறது. துறைமுகங்கள் இருந்த இடங்கள் இருக்கின்றன, நல்ல துறைமுகங்கள் அமைக்கலாமே என்ற யோசனையை நான் கூறுகிறேன்.

கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சல் என்னும் இடத்தில் ஒரு துறைமுகம் அமைக்கவேண்டும் என்று இங்கே யோசனை கூறப்பட்டது. கன்யாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறது என்ற பெருமையோடு கூறிக்கொள்ளும் அதே நேரத்தில் அந்த மாவட்டத்திலிருந்து நமக்கு ஒரு அம்மையாரும் அமைச்சராகக் கிடைத்திருக்கிறார்கள். அத்தகைய பெருமைக் குறிய மாவட்டத்தில் குளச்சல் தொகுதி அவ்வம்மையார் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாகும். அந்தத் தொகுதியில் இருக்கும் குளச்சல் துறைமுகத்தை நல்ல முறையிலே ஆக்குவித்து, அந்தத் துறைமுகம் மீண்டும் தமிழகத்தினுடைய பெருமையை நிலைநாட்டும் வகையிலே அமைவதற்கு இந்த அரசு நல்ல முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே மீண்டும் மீண்டும் நான் இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களை கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய வாணிபம் ஒரு காலத்திலே ஏற்றம்பெற்று இருந்தது போலவே, பல்வேறு நாடுகளுடைய தொடர்பு கிட்டியது போலவே, மீண்டும் அந்தத் தொடர்பு வர, இந்த ஒரு வகையிலாவது தமிழகம் முன்னேற, வளம் பெற, அந்தத் துறைமுகங்களை விருத்தி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இது எதிர்கட்சியிலேயிருந்து கொண்டுவரப்பட்ட கோரிக்கை அல்ல, காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து-அந்தப் பகுதியிலிருந்து-வந்திருக்கிற காரணத்தால் இது நிறைவேறும். ஆகவே இந்த காரியத்தை விரைவில் செய்துமுடிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, மீண்டும் அந்தப் பூம்புகார் துறைமுகத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியைக் கைக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

# நில உச்சவரம்பு

**உரை** : 32 **நாள்** : 29.08.1961

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, பொறுக்குக் குழுவுக்குச் சென்று, ஏற்கனவே இருந்த அரைகுறை ஜீவனையும் இழந்துவிட்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவைப் பற்றி வருத்தத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நில உச்ச வரம்பு மசோதா, தமிழகத்திலேயே உள்ள நிலச்சுவான்தார்களிடத்திலே குவிந்து கிடக்கின்ற தனிப்பட்ட நிலங்களை, ஏழை எளிய விவசாயிகளைப் பொறுத்த அளவிலே, அவர்களுடைய வாழ்விலே ஒரு நல்ல திருப்பத்தை உண்டு பண்ணும் என்று எண்ணி, தமிழ்நாட்டிலே உள்ள எல்லா முற்போக்கு அரசியல் கட்சிகளும், காங்கிரசிலே தப்பித் தவறி இருக்ககூடிய தீவிரவாதிகளும் எண்ணி வரவேற்று மகிழ்ந்தோம். அப்படி வரவேற்கப்பட்ட இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்கு விடப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அதிலே இருந்த சூடு குறைக்கப்பட்டு, கடைசியிலே இந்தப் பொறுக்குக் குழு குளிர்ச்சியான கொடைக்கானலிலே கூடி, ஷரத்துவாரிப் பரிசீலனை செய்தபோது ஜில்லிட்டு, இப்போது இந்தச் சட்ட மன்றத்திலேயே கொண்டுவந்து வைக்கக்கூடிய ஒரு பரிதாபகரமான நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, தனிப்பட்டோரிடம் நிலங்கள் குவிந்து இருப்பது தேசிய நீதி ஆகாது என்கிற கருத்தின் அடிப்படையி லேயும், மிராசுதார்கள் கொடுமையையும், அவர்கள் விவசாயிகளை அடிமைப்படுத்திக்கொண்டு இன்னல் புரிவதையும், அவர்களிடம் அடிமை முறிச்சீட்டு எழுதி

வாங்கிக்கொண்டு அவர்களை நிரந்தரக் கூலிகளாக்குகின்ற வேதனை நிலையிலே இருந்து அவர்களை மீட்கலாம் என்ற ரீதியில் இந்த மசோதா பயனுள்ளதாக இருக்குமென்றும் எண்ணி இந்த மசோதாவை வரவேற்றவர்கள் அனைவருமே, ஏமாந்து போகக்கூடிய சூழ்நிலையில், மேலும் வருத்தத்தை அளிக்கின்ற வகையில் பொறுக்குக் குழுவினர் திருத்தங்கள் அளித்திருக் கிறார்கள்.

இந்த மசோதாவைப் பார்த்து, இந்த நாட்டிலுள்ள சுதந்திரா கட்சிக்காரர்கள் ஏன்தான் பீதி அடைகிறார்களோ, பயப்படுகிறார் களோ என்கின்ற ஆச்சர்யம் என் போன்றவர்களுக்கு ஏற்படாமல் இல்லை. ஏனென்றால், இந்த மசோதா முழுக்க முழுக்க, மிராசுதார்களுக்காக தயாரிக்கப்பட்ட மசோதாவாகும். கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மசோதா, 'வரப்போகிறது, வரப்போகிறது' என்று அதி தீவிரமாக விளம்பரப் படுத்தப்பட்டு, 'இந்த மசோதா இப்படி இருக்கலாம், அப்படி இருக்கலாம்' என்று விவசாயிகளின் நாக்கில் தேன் தடவப்பட்டு, தேர்தல் பிரசாரமாக சில ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு, இந்தத் தேர்தல் பிரசாரம் இப்பொழுது காங்கிரசு ஆளவந்தார்களால் தீவிரமாக்கப் பட்டிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

இந்த மசோதா எப்படித் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் யூகிக்கிறேன் என்றால், நாட்டிலுள்ள மிராசுதார்கள் அத்தனை பேர்களையும் அழைத்து, 'இம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவரப் போகிறோம்: அதற்குள் பிரிக்கவேண்டிய நிலத்தைப் பிரித்து விடுங்கள்: உங்களுடைய வீட்டிலுள்ள உற்றார், உறவினர்களுக்கு, பேரன் பேத்திகளுக்கு, சுற்றத்தார்களுக்கு, நம்பிக்கைக்கு உரியவர்களுக்கு, வேண்டியவர்களுக்கு எழுதிவைத்து விடுங்கள், அதற்குப் பிறகு இந்த மசோதா கொண்டு வருகிறோம்' என்று சொல்லி மறுபடியும் இறுதியாக இந்த மசோதா தயாரிக்கும்பொழுது அவர்களைக் கூப்பிட்டு 'சொன்னபடி செய்து விட்டீர்களா? மசோதா கொண்டு வரலாமா?' என்று அவர்களிடம் உத்தரவு கேட்டுவிட்டு, இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாக நான் யூகிக்கிறேன். அசல் மசோதாவில் இருந்த ஒரு சில நல்ல விஷயங்கள்கூட, 'திருத்தம்' என்கிற பெயரால், பொறுக்குக் குழுவில் சேதப்படுத்தப் பட்டிருக்கின்றன-சீரழிக்கப்பட்டிருக்கின்றன.

விதிவிலக்குகள் எண்ணிக்கையில் அடங்காது. ஏறத்தாழ 17 விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுக் கழகங்கள், நில அடமான பாங்குகள் வசம் உள்ள நிலங்கள், விவசாயத்துறை நிறுவனங்களுக்குள்ள நிலங்கள், பால் பண்ணைத் தொடர்புள்ள நிலங்கள், கால்நடைப் பண்ணை நிலங்கள், விறகுக்காக சாகுபடிச் செய்யப்படும் நிலங்கள், பதிவாகாத கூட்டுறவுக் கழகங்களின் நிலங்கள், தொழில் அல்லது வர்த்தகச் சங்கங்களின் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், சர்க்கரை ஆலை நிலங்கள், இனி ஏற்படப்போகும் புதிய சர்க்கரை ஆலை நிலங்கள், தோப்புகள், மத்திய மாநில அரசுக்குச் சொந்தமான நிலங்கள், கல்வி நிறுவன நிலங்கள், மத நிறுவன நிலங்கள், மலைப்பகுதி நிலங்கள், பூமிதான இயக்க நிலங்கள் போன்ற ஒன்றிரண்டு வகைகளுக்கு கொடுத்துள்ள விதிவிலக்குகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவை என்றாலும், இங்கே தரப்பட்டுள்ள பெரும்பாலான விதிவிலக்குகள் உள்ளபடியே நம்மை அயரச் செய்யக்கூடிய விதிவிலக்குகள் என்று நான் கருதுகிறேன். ஆகவேதான், இந்த மசோதாவை, 'ஏட்டுச் சர்க்கரை, தாகத்தைத் தீர்க்காத தண்ணீர், அரும் பசிக்கு உதவாத அன்னம்,' என்று விமர்சிக்க விரும்புகிறேன்.

ஏற்கனவே நிலங்களை மிராசுதார்கள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டுவிட்டார்கள் என்கின்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், ஏனைய முற்போக்கு உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன நேரத்தில், நம்முடைய அமைச்சர் மாணிக்கவேலு அவர்கள்-அதைக் கேலியான பதிலாகக் கருதினார்களோ அல்லது உண்மையான பதிலாகக் கருதினார்களோ-பிரிக்கவேண்டும் என்றுதானே எதிர்பார்த்தோம்? அதன்படி பிரிக்கப்பட்டுவிட்டது, என்று அடிக்கடி சொல்லிவந்திருக்கிறார்கள். ஆளும் கட்சி நண்பர்களும் அதே கருத்தைத் திருப்பி திருப்பி, 'பிரிக்க வேண்டுமென்று எண்ணினோம்: பிரித்துவிட்டோம்', என்று குறிப்பிட்டார்கள். அந்த வாதத்தை எண்ணிப்பார்க்கும்பொழுது நான் சிறுவனாக இருந்த காலத்தில் பார்த்த ஒரு சினிமாப் படம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அது 'சபாபதி' என்ற படம்: அந்தப் படத்தில் வேலைக்காரனைக்

கூப்பிட்டு, 'சோடா உடைத்துக்கொண்டு வா? என்று எசமான் சொன்னபொழுது, அந்த வேலைக்காரர், சோடா பாட்டிலை ஹாலில் போட்டு 'படார்' என்று உடைத்து விட்டார்: 'ஏனடா உடைத்தாய்?' என்று எசமான் கேட்ட பொழுது, வேலைக்காரன், 'சோடாவை உடைக்கச் சொன்னீர்கள், உடைத்தேன்', என்று கூறிய வேலைக்காரன் பேச்சுக்கும், 'பிரிக்கத்தானே சொன்னீர்கள், மிராசுத்தார்களுக்குள்ளே பிரித்து விட்டோம்' என்று வாதமிடு கிறவர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. 'பிரிக்கத்தானே வேண்டும்' என்றும் பிரிக்கப்பட் டிருக்கிற நிலங்கள், '30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவிலே மாத்திரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. '30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பாக நிர்ணயிக்கப்படும்,' என்ற வருங்கால உண்மையை மிரா சுதார்களுக்கும், நில வேந்தர்களுக்கும் முன்னமே உணர்த்தப்பட்ட தன் காரணமாக அவர்கள் 30, 30 ஏக்கராவாகப் பிரித்துவைத்தி ருக்கிறார்கள். 1952-ம் ஆண்டிலிருந்து பிரிக்கப்பட்டு, மற்றவர் களுக்குப் பாகப்பிரிவினை செய்யப்பட்டு பராதீனப்படுத்தப் பட்டிருக்கிற அந்த நிலங்களின் பிரிவினை செல்லுபடியாகாது: '1952-லிருந்து இந்த மசோதாவுக்கு உயிர் கொடுப்பதற்கு இந்த சர்க்கார் முன்வருமா?' என்று கேட்டால், அமைச்சரவை முன் வருவதற்குத் தயாராக இல்லை என்பதைத்தான் அவர் தம் சூசக மான பதில்கள் நமக்கு உணர்த்தி வருகின்றன. அதோடுமட்டு மல்ல: நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன வென்றால் '30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று பிரிக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் நிலையைப்பற்றி நான் கூறுகிற நேரத்தில்-15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் ஒரு குடும்பத்திற்கு இருக்க வேண்டும். அதற்கு மேல் அதிகப்படியாக உள்ளவர்களுக்கு சராசரியாக 2 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருக்க வேண்டும். அதிகப்பட்சமாக 25 ஸ்டாண்டர்டு ஏக்கர்வரை அனுமதிக்கலாம்,' என்று இருக்கிற எங்களுடைய திருத்தத்தை-முற்போக்குக் கட்சியினுடைய திருத்தத்தை இந்த சர்க்கார் ஏற்றுக்கொண்டு, 1952-லிருந்து இந்த மசோதா உயிர் பெறவேண்டும் என்று நாங்கள் சொல்லுவதை ஏற்றால், 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று பிரித்துக்கொண்டிருக்கிற சிறு மிராசுதார்களிடம்கூட, தனியார்களிடமும் கூட, 15 ஏக்கராவை விட்டுவைத்து, மிச்சத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடிய

முன்னேற்ற நிலைமை ஏற்படும் என்ற யோசனையை நான் சர்க்காருக்குக் கூற விரும்புகிறேன்.

**பேரவை தலைவர்** : இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரை ஆளும் கட்சியில் உள்ள பலரும், அத்தனை பேருமே-ஒரு சிலரைத் தவிர-'இந்த மசோதா, விவசாயிகளுக்குப் பாதகமானது', என்கின்ற உண்மையை எடுத்துக் கூறியிருக் கிறார்கள்: விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடியது அல்ல இந்த மசோதா, என்ற படப்பிடிப்பினை இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த சர்க்கார், இந்த அமைச்சரவை, தங்களுக்கு இருக்கிற எண்ணிக்கை பலத்தை அடிப்படையாக வைக்காமல் இந்த மன்றத்தில் இருக்கிற காங்கிரசு உறுப்பினர்களாக இருந்தாலும் சரி-திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாக இருந்தாலும் சரி-ஏனைய முற்போக்கு கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி-என்ன பேசினார்கள் என்ற எண்ண பலத்தை அடிப்படையாக வைத்து, இந்த மசோதாவைப் பற்றி ஓர் நல்ல முடிவுக்கு வருவார்களேயானால், இந்தத் திருத்தங்கள், பொறுக்குக் குழுவினால் செய்யப்பட்ட, மிராசுதார்களுக்குச் சாதகமான திருத்தங்கள் அனைத்தும் விலக்கப்பட்டு, அசல் மசோதா இன்னும் தீவிரமாக்கப்பட்டு, 'உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்' என்கின்ற ஒரு புனிதமான நல்ல காரியத்தைச் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்படும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் பதிவாகாத கூட்டுறவு சங்கங்கள், சர்க்கார் அங்கீகாரம் பெற்ற வர்த்தக அல்லது தொழில் நிறுவனங் களுக்குள்ள நிலங்கள், விறகுக்காகப் பயிரிடப்படும் நிலங்கள் முதலியவற்றிற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. விறகுக் காகப் பயிரிடப்படும் நிலம் என்று சொல்லும்பொழுது, விறகு என்ற பெயரால் பல மிராசுத்தார்கள் தங்கள் நிலங்களில் சவுக்கைப் பயிரிட்டு, அப்படி அவர்கள் பயிரிட்டதன் காரணமாக விதிவிலக்கு பெறக்கூடிய அந்த முயற்சியிலும் அவர்கள் வெற்றிபெற்றிருக் கிறார்கள். 'சர்க்கரை ஆலைகளுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்: அப்படிச் சொந்தமாக இருக்கிற அந்த நிலத்தை இந்த மசோதா தொடாது. இந்த மசோதா பாதிக்காது,' என்றும் இந்தத் திருத்தங்கள் கூறுகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால்,

திருச்சி மாவட்டத்தில் பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலை துவக்கப்பட்ட நேரத்தில் 500 ஏக்கரா சொந்தமாக வாங்கப்பட்டது-கரும்பு சாகுபடிக்கு வசதியாக இருக்கவேண்டு மென்று. அந்த 500 ஏக்கரா நிலங்கள் இப்போது விற்கப்பட்டிருக்கின்றன: காரணம் பேட்டைவாய்த் தலையைச் சுற்றியுள்ள சிறு மிராசுதார்கள் அவரவர் நிலத்திலே கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான 500 ஏக்கரா நிலங்கள் இன்றைதினம் விற்கப்பட்டிருக்கின்றன என்ற ஒரு உதாரணத்தை முன்னோடியாக வைத்து, சர்க்கரை ஆலைகள் என்ற பெயரால் கரும்பு நிலங்கள் இருக்கத்தான்வேண்டும்: தங்களுக்குச் சொந்தமான கரும்பு நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்-என்று கருதுவது, காங்கிரசு சார்போடு இருக்கக்கூடிய ஒரு சில மிராசுதார்கள்: ஒரு சில நிலவேந்தர்கள் உச்சவரம்பிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று செய்யப்பட்ட காரியமே தவிர, வேறு அல்ல என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

எல்லாவற்றையும் திருத்தியவர்கள்-மிராசுதார்களுக்கு அனுசரனையாகப் பல திருத்தங்களைச் செய்தவர்கள், 60-வது ஷரத்தில் இருக்கிற உபரி பிரிவுகளில் கைவைக்காத சூட்சுமத்தை அமைச்சரவை உணர்ந்துதான் தீரவேண்டும். 60-வது ஷரத்தில், 1-வது (ஏ) உப பிரிவில் இந்த உச்சவரம்புச் சட்டம் வெளியிட்ட தேதிக்குப் பிறகு மிராசுதார்களுக்குக் கொடுக்கவேண்டிய குத்தகை, தரவேண்டிய தேதிக்குப் பிறகு ஒரு மாதத்திற்குள் கொடுக்கப்படாவிட்டால், விவசாயியை நிலத்திலிருந்து வெளி யேற்றலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலே பொறுக்குக் குழுவினர் திருக்கரத்தை வைக்கவில்லை. அதேபோல, (பி) பிரிவில், 'நிலத்தை அங்கமாகச் செய்தாலோ அல்லது அழிக்ககூடிய விதத்தில் அலட்சியம் செய்கிற குற்றம் செய்தாலோ அது நிலத்திற்கு கெடுதி உண்டாகிற வகையில் குற்றம் செய்தாலோ, விவசாயியை நிலத்திலிருந்து வெளியேற்றலாம்', என்றிருக்கிறது. அதேபோன்று, 60-வது ஷரத்தில் மிராசுதார்கள் நிலம் துர்வினியோகப்படுத்தப்பட்டால் விவசாயியை வெளியேற்ற

வழியிருக்கிறது. இந்த 30 ஏக்கரில் 5 ஏக்கர் சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொண்டு-மிச்சம் 25 ஏக்கரை, 60-வது ஷரத்து உப பிரிவுகளை வைத்துக்கொண்டு, அணு அணுவாக- படிப்படியாக விவசாயிகளை வெளியேற்றி, இந்த 30 ஏக்கரையும் சொந்தத்தில் ஏகபோக சாகுபடி செய்யும் நிலைமையை மிராசுதார் உண்டுபண்ணக்கூடிய வழிதான் இருக்கிறது. அப்படி நடக்கும் போது, வெகு விரைவில், மிராசுதாரிடம் கூலியாளாக வேலை செய்யும் நிலைமைதான் விவசாயிக்கு ஏற்படும். ஆகவே, இன்றைக்கு நம் தமிழ்நாட்டிலே மிக்க இழிவான-கொடூரமான-பரிதாபகரமான வழியில் கொண்டுவரப்படுகிறது இந்த மசோதா என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இந்த 14 ஆண்டுகளில் ஆட்சியை இராமனுடைய வனவாசத்திற்கு ஒப்பிட்டால் இந்த மசோதா அங்கே தோன்றும் ஒரு 'மாய மான்'. அமைச்சர் திரு. சுப்பிரமணியன் நேற்று ஒரு சாதாரண விஷயத்திற்கு மாயையைப் பற்றிச் சொன்னார்கள். அதுதான் இந்த மசோதா என்ற குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாய மான், விவசாயியை ஏமாற்றி இழுத்துச் செல்ல, அந்த நேரத்தில் 'வாக்குரிமை' என்ற சீதையை இந்த காங்கிரசு இராவணன் தூக்கிச் செல்வான். இந்த வனவாச ஆட்சியில் இப்போது மாய மானைத் துள்ளவிட்டிருக்கிறது சர்க்கார்! அந்த விதத்தில் இந்த உச்ச வரம்பு மசோதா அழகாக அமைந்திருக்கிறது. இது விவசாயிகளை ஏமாற்றும் மசோதாவே தவிர வேறில்லை! இந்த மசோதாவினால், நிலப் பிரபுக்களுக்கு, நிலவேந்தர்களுக்குப் பயனே தவிர, ஏழைகளுக்கில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்களும் இதை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதா, காடு கழனிகளில் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து நெல் மணிகளைக் கொடுக்கும் விவசாயிகளுக்குப் பயனளிக்காது. பிச்சைக்காரர்களுக்குத் தரப்படும் 'அம்மன் காசு' போன்றது இந்த மசோதா என்ற கூறி முடிக்கிறேன்.

# வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டம்

**உரை : 33** **நாள் : 04.05.1962**

**கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன். 1949-ம் ஆண்டு இந்த வீட்டு வாடகை கட்டுப்பாடுச் சட்டம் வந்த நேரத்தில், அதிலே ஒரு புதிய விதி விலக்கு தேவை என்ற யோசனைகள் கூறப்பட்டதன் காரணமாக, 1960-ம் ஆண்டில் 30-வது பிரிவு என்று சொல்லப்படுகிற பிரிவு திணிக்கப்பட்டது. இந்தப் பிரிவால் ஏற்பட்ட பல பல தொல்லை களில் குடியிருப்பவர்களுக்கு ஏற்பட்ட வேதனை காரணமாக அந்தப் பிரிவிற்குப் புதிய திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் இந்த மன்றத்தின் முன் எடுத்து வைத்திருக்கிறார்கள். 1949-ம் ஆண்டு சட்டத்திலேயே விதிவிலக்கு தேவை என்று 1960-ம் ஆண்டில் ஒரு பிரிவு புகுத்தப்பட்ட காரணத்தினால் அது விளைவித்த புதுத் தொல்லைகள் நீக்குவதற்கு இப்போது மறுபடியும் ஒரு திருத்தம் கொண்டுவரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு பதில் 1960-ம் ஆண்டு திணிக்கப்பட்டுள்ள விதிவிலக்கு பற்றிய 30-வது பிரிவை எடுத்துவிடுவது நலமாக இருக்கும் என்ற கருத்தினை நான் வலி யுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். அந்த 30-வது பிரிவில் புதிய வீடுகள் கட்டப்படுகிற நேரத்தில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் சென்னை மாநகரத்தில் லாப நோக்கத்தில் வாடகைக்கு விடவேண்டுமென்ற நோக்கத்தில்-வீடுகள் கட்டப் படுகின்றன. 1951-ம் ஆண்டிலிருந்து 1962-ம் ஆண்டு வரையில் கொஞ்சம் ஊன்றி கவனித்தால், 1951-ம் ஆண்டில் இருந்த வீடுகளின் எண்ணிக்கை 58,000, என்றால், 1962-ல் எண்ணிக்கை

88,000-மாக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 30,000 புது வீடுகள் இந்த இடைக்காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அப்படி கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் பெரும்பாலான வீடுகள் லாப நோக்கத்தோடு கட்டப்பட்ட வீடுகளாக அமைந்திருக்கின்றன, 10 வருஷங்களுக்கு முன்பு வீடுகள் புதிதாகக் கட்டப்படவேண்டு மென்று மாநகர ஆட்சி மன்றத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,200 என்றால் 1962-ல் புது வீடுகள் கட்டவேண்டுமென்று அனுப்பப்படுகிற விண்ணப்பங் களின் எண்ணிக்கை 6,000 என்ற கணக்கில் இருக்கிறது. இப்படி வீடுகள் அதிகமாகக் கட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்று சிந்தித்துப் பார்த்தால் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகும், நில உச்ச வரம்புச் சட்டம் வருகிறது என்ற செய்திக்குப் பிறகும் கிராமங்களில் இருக்கிறவர்கள் நகரப்புறங் களில் வீடுகள் கட்டி லாபகரமாக ஆக்கிக்கொள்ள-வாடகைக்கு விட-இப்படி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆக, புதிய வீடுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. என்ற நிலைமை மாற்றப்படவேண்டும். விதிவிலக்கு அகற்றப்பட வேண்டும். என்று அமைச்சருக்கு கவனமூட்ட விரும்புகிறேன். குடியிருப்புக்காக கட்டிக்கொள்ளப்படும் சிறு சிறு புதிய வீடுகள் அனுமதிக்கப் படலாம், அப்படி அனுமதிக்கப்படுவது மட்டுமல்லாமல் புதிய வீடுகள் கட்டப்படுவதை உற்சாகப்படுத்துவதற்காக 1,200 சதுர அடி கொண்ட அளவுக்குக் கட்டப்படும்போது வீடு கட்டும் பொருள்களான இரும்பு, சிமெண்ட், செங்கல் ஆகிய பொருள் களுக்கு சர்க்காரால் விதிக்கப்படும் சர்சார்ஜிலிருந்து வரி விலக்கு செய்யலாம். அது மாத்திரமல்லாமல் 5 ஆண்டு காலத்திற்கு மாநகராட்சி மன்றம் சொத்து வரி இல்லாமல் தங்களுடைய குடியிருப்புக்காகவென்று கட்டப்படும் வீடுகளுக்கு வரி விலக்கு அளிக்கலாம். இப்படிப்பட்ட விதிவிலக்கு அளிக்கவேண்டு மென்றும் அமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டு மென்றும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அதை விட்டு 1960-ம் ஆண்டு தினிக்கப்பட்ட 30-வது பிரிவை 250 ரூபாய் வாடகை வரக்கூடிய குடியிருப்பு வீடுகள், வணிக ஸ்தலங்களுக்கு 400 ரூபாய் வாடகை வரக்கூடிய இடங்களை விட்டுவிடும் முறையில் திருத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இல்லை. அறவே இந்த விதிவிலக்கு தேவை இல்லை என்ற முறையில் திருத்தம் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்தை இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

# உள்ளாட்சித் தேர்தல்

**உரை : 34** **நாள் : 01.11.1962**

**கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, மன்றத்தின் முன்பு ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கும் இந்த மசோதாவை அதரித்து ஒருசில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். எவ்வளவு நெருக்கடியான நிலைமையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இப்போதுள்ள நிலைமையில் நகராட்சித் தேர்தல்களை நடத்தக்கூடிய அளவுக்கு நிர்வாக இயந்திரம் சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதுகூடப் பிரச்சனையல்ல. நகராட்சித் தேர்தல்களை நடத்தக்கூடிய அளவுக்கு நிர்வாக இயந்திரம் தயாராக இருந்தாலும் அதற்கான சாதனங்களும், வாய்ப்புகளும் அரசாங்கத்துக்கு இருந்தாலும், மிக மிக முக்கியமாக நாட்டிலே இருக்கின்ற எல்லா மக்களுடைய உள்ளங்களில் மனக்கசப்பு வளராத விதத்திலும், அரசியல் கட்சிகளுக்கிடையே பகையுணர்ச்சி மூளாத விதத்திலும் நகராட்சித் தேர்தல்கள் ஒத்திவைப்புப் பயன்படும் என்றுதான் எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் வலியுறுத்திக் கூறினோம். அதை ஆளும் கட்சித் தலைவர் அவர்களுக்கு இங்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். ஆகவே, நகராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதன் மூல நோக்கம், மிக மிக நெருக்கடியான இந்த நேரத்தில், குடியரசுத் தலைவர் அவர்கள் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தியிருக்கும் இந்த நேரத்தில், இந்த நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒன்றுபட்டு நம்மை எதிர்த்து வருகின்ற எதிரியை வீழ்த்துகின்ற வகையில் தங்களுடைய பார்வையைத் திருப்ப வேண்டுமென்பதுதான். இந்த மூலநோக்கத்தின் காரணமாகத்தான் நகராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகிறது என்பதையும், இந்த மூலநோக்கத்தை நிறைவேற்ற இந்த நாட்டில் இருக்கும் எல்லா

அரசியல் கட்சிகளும் தயாராக இருக்க வேண்டுமென்பதையும், இந்த மசோதாவை ஆதரிக்கும் நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பொதுக்கூட்டங்களானாலும், மன்றத்தில் நடைபெறும் விவாதங்களானாலும், பட நிகழ்ச்சிகளானாலும், அத்தனையிலும் கசப்பும், மனமாச்சரியங்களும் ஏற்படாத விதத்தில் நெருக்கடியும், பயங்கரமான நிலைமையும் நம்மைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாம் எல்லோரும் நடந்துகொள்ள வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களையும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்மை நோக்கி வடபுறத்து எல்லையிலே சூழ்ந்து வந்து கொண்டிருக்கும் பகையை விரட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை கழகம் தன்னால் ஆன உதவிகள் அனைத்தையும் செய்ய முன்வந்திருக்கிறது. இது, ஒருவருக் கொருவர் பெருமை பேசிக்கொள்வதற்காகச் செய்வது அல்ல. இன்றையதினம் நாட்டு மக்கள் அத்தனைபேரும், இந்த துணைத் கண்டத்து மக்கள் அத்தனை பேரும், தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அந்த வகையில் சாமான்ய-சாதாரண மக்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலியன்ற அளவுக்கு உதவி வருகிறது. புராணத்தில் ஒரு கதை வருகிறது. இராமன் இலங்கைக்குச் செல்வதற்கு கடலுக்கு அணை கட்டினபோது அணில்கள் தம்மாலியன்ற அளவு கற்களைத் தூக்கிக் கொண்டு போய் போட்டு உதவி செய்தனவாம். இராமனுடைய காரியத்திற்கு அணில்கள் செய்த உதவி மிகச்சிறியதாக இருக்கலாம். இராமன் அந்த அணில்களின் முதுகையும் அன்போடு தடவிக்கொடுத்தான் என்றும், அப்படி அவன் தடவிக்கொடுத்த அடையாளமாகத் தான் மூன்று கோடுகள் நாமம்போல அணில்களின் முதுகில் விழுந்திருக்கின்றன என்று சொல்வார்கள். இராமன் அணில்களின் முதுகில் தடவிக்கொடுத்ததைப் போல் நீங்கள் எங்கள் முதுகில் தடவிக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. எங்கள் நெற்றியில் போடாமல் இருந்தால் போதும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேசத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி தீருகிற வரையில் மக்களுடைய கவனம் சிதறாமல் இருப்பதற்கு தல நிர்வாக மன்றங்களின் தேர்தலை ஒத்திவைப்பதற்காக வழி முறை செய்திருப்பது நல்லதொரு சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்தும் என்று தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

## நிலவரி, நீர்வரி உயர்த்தும் மசோதா

**உரை : 35** **நாள் : 27.02.1963**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் தலைவர் அவர்களே, இந்த நிலவரி, நீர்வரியை உயர்த்துகின்ற மசோதாவானது சட்ட மன்றத்திலே உறுப்பினர்களால் பலமாக எதிர்க்கப்பட்ட பிறகு, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அந்த குழுவிலே எங்களுடைய கட்சியின் சார்பாகப் பங்கு பெற்ற உறுப்பினர்கள் தங்களுடைய மறுப்புரையையும், அது ஏற்கப்படாத காரணத்தால் குறைந்த பட்சம் இவைகளையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற அளவிலே திருத்தங்களையும் முன் வைத்து, அவைகளும் பொறுக்குக் குழுவிலே பெரும்பான்மை பலத்தினால் தோற்கடிக்கப்பட்டு, இப்போது பொதுவான விவாதத்திற்காக இந்தச் சபையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் அந்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வரி விதித்துத்தான் ஒரு நாட்டிலே ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டுமென்கிற கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கழகத்தவர்களாகிய நாங்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் அந்த வரிவிதிப்பது ஏழைகளைப் பொறுத்தவரையில் மிக மிக மென்மையான முறையிலே கையாளப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் நான் இந்த மன்றத்திலே அடிக்கடி வலியுறுத்திக் கூறி வந்திருக்கின்றேன். இங்கு பேசிய ஈரோடு உறுப்பினர் அவர்கள் கூட, 'கோழி மிதித்துக் குஞ்சு சாகாது, அந்த முறையில் இந்த வரி போடப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். தாய் என்ற உதாரணத்திற்கு அவர் கோழியைக் காட்டினார். அதே நேரத்தில் தாய் என்ற உதாரணத்திற்குப் பூனையைப் பொறுத்தி வைத்துப் பார்த்தால், அது போட்ட குட்டிகளிலேயே இரண்டொன்றைச் சாப்பிட்டு விட்டுத்தான் மற்றக் குட்டிகளைக் காக்கும்.

இந்த வரியானது 'கோழி மிதித்துக் குஞ்சு சாகாது' என்ற நிலைமையில் போடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் கூறுவீர்களே யேனால் இந்த வரியானது குட்டியைச் சாப்பிடுகின்ற தாய்ப்பூனை நிலைமையில் போடப்பட்டிருக்கும் வரியாக இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது. 'ஆபத்து வருகிறது, ஆகவே குஞ்சை மிதிக்கிறோம்' என்று சொல்வதுகூட அவ்வளவு சாலப் பொருத்தமுடைய கருத்தாக இல்லை.

*"கோழியும் தன் குஞ்சதனைக் கொல்லவரும்*
*வான் பருந்தை சூழ்ந்து எதிர்க்கும் தமிழ்நாடு."*

என்றுதான் நாட்டிலே உள்ள கவிஞர்கள் கோழியின் வீரத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த வரியைப் பொறுத்தவரை நாட்டு மக்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த வரியினால் பாதிக்கப்படுகிற உழவர்களின் நிலைமை எப்படி இருக்கிறதென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உழவர்கள் தங்களுடைய வருவாய்க்கு மேலான செலவினங்களுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். விலைவாசி விஷமென உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே வரி போடுவது என்பது ஒரு பெரியவர் குறிப்பிட்டது போன்று மலரிலே இருக்கும் தேனை வண்டு குடிக்கும் மென்மையான நிலையிலே இருக்க வேண்டுமே தவிர, மலரைக் கசக்கிப் பிழியும் விதத்திலே இருக்கக்கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரியினால் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போதே உழவர்கள் உற்சாகம் இழந்த நிலையில் இருக்கிறார்கள். பருவக்கோளாறின் காரணமாக விவசாய விளைபொருள் உற்பத்தி கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கிறது.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தடவை எந்த அளவிற்கு விளைவு குறைந்திருக்கிறது என்ற ஆதாரபூர்வமான செய்திகளை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற உழவர் பெருங்குடி மக்கள் கண்ணீரோடு எடுத்துக்கூறி வருகிறார்கள். நமது அமைச்சர் ஒருவர் வேண்டுமானால் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் விளைவு அதிகம் என்று கூறியிருக்கலாம். அவர்கள் அப்படி கூறிய பிறகுதான், இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சையில் நடைபெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்கு சென்றிருந்தபோது

அங்கு வந்திருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, அமைச்சர் அவர்கள் இப்படி கூறுகிறார்களே உண்மையா என்று கேட்டேன். அந்த காங்கிரஸ் கூறுப்பினர்களில் யாரும் அமைச்சர் அவர்களின் புள்ளி விவரத்தை ஒத்துக்கொள்ளவில்லை. கலெக்டர் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் 'ஆமாம் இந்தத் தடவை விளைவு உயர்ந்துத்தான் இருக்கிறது, என்று கூறினார்கள். ஆனால் கலெக்டருக்கு மறுப்புரை வழங்கும் வகையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அதிலும் குறிப்பாக நன்னிலம் தொகுதியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள்கூட "இல்லை! இல்லை! பலயிடங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரம் சரியாக இல்லை" என்ற கருத்தைத்தான் கலெக்டர் முன்னிலையில் எடுத்துக் கூறினார்கள். உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் உழவர்கள் உற்சாகம் இழக்கும் வகையில் அவர்கள் உற்சாகத்தை மேலும் மேலும் குறைக்கும் வகையில் இந்த வரி வழி செய்யும். ஆகவே இதை கைவிடவேண்டுமென்ற கருத்தை இங்கு நாங்கள் அடிக்கடி எடுத்துக் கூறினோம். அதன் தொடர்பாக இங்கு பலப்பல திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி தனியாக விவாதிக்க இருப்பதால் அவைகளைப்பற்றிய அதிக விளக்கங்களை நான் இங்கு எடுத்துக்கூற விரும்பவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்கள் மனப்பூர்வமாக இந்த வரியை ஆதரிக்கிறார்களா என்றால் அவர்கள் நெஞ்சாற இந்த வரியை ஆதரிக்கிறார்கள் என்று நான் கொள்ள முடியாது. ஒருவேளை ஓட்டுக்கு விடப்போகிற நேரத்தில் வேண்டுமானால் பெரும் பான்மை பலத்தை ஆட்சியாளர்கள் காட்டலாமே தவிர அவர்கள் உள்ளத்தைத் தொட்டுப்பார்த்தால் பெரும்பாலோருக்கு இந்த வரி பிடிக்கவில்லை. ஆனால் ஜனநாயக முறையில் தலையை எண்ணுவது ஒரு பழக்கமாக இருக்கிறது. தலைக்கு உள்ளே இருக்கும் அபிப்பிராயத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டும் காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலோருக்கு, இந்த வரி எவ்வளவு பாதகமானது என்பது தெரியும். ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டை மீறக்கூடாது என்ற நிலைமையில்தான் இந்த வரியை அவர்கள் இன்றையதினம் ஆதரிக்கிற அவதிக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கிற ஏழை உழவர்களுக்காவது, சிறு நிலச்சுவான்தார்களுக்காவது இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தையாவது இந்த மாமன்றம் ஏற்றுகொள்ளுமேயானால் அது பாராட்டவேண்டிய நிகழ்ச்சியாக இருக்கும். பொறுக்குக் கமிட்டியில் ஓரளவு சதவிகிதம் குறைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அது குறைக்கப்பட வேண்டும் என்று தரப்பட்டிருக்கிற திருத்தங்களை அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப்பார்த்து இந்த நேரத்தில் உழவர்கள் உள்ளம் புண்படாமல் நடந்துகொள்ள வேண்டும். நூல்களை எழுதுகிற பழங்காலத்து ஆசிரியர்கள் நூலைத் தொடங்கும்போது நீர் வளம், நில வளம் நிறைந்த தமிழ் நாடு என்று ஆரம்பிப்பார்கள். இந்த வரி வந்த பிறகு புத்தகங்கள் எழுதப்படுமானால் நீர் வரி, நில வரி நிறைந்த தமிழ் நாடு என்று எழுதும் மோசமான சூழ்நிலை உருவாகும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை உருவாக்காமல் உழவர்களுக்கு தொல்லைகள் அளிக்காமல், உற்பத்திக் குறைவைத் தடுக்கிற வகையில் உழவர் குடும்பங்கள் சிறக்கிற வகையில் இந்த வரி விதிப்பை கைவிட வேண்டும். குறைந்த பட்சம், கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களையாவது ஏற்றுக்கொண்டு குறிப்பாக ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களுக்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்திக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.



# விவசாயிகளுக்கு வரிவிலக்கு

**உரை : 36** **நாள் : 27.02.1963**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் உதவித் தலைவர் அவர்களே, இன்று துவங்கியப் பொதுவிவாதத்தில்கூட இந்தப் பிரச்சனைப் பற்றி கருத்துரை வழங்கிய எதிர்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பலரும் எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், இந்தக் திருத்தங்களில் காணப்படும் கருத்துகளை வலியுறுத்தி இந்த மன்றத்தில் எடுத்துவைத்திருக்கின்ற கருத்தினையொட்டி இந்த மசோதாவின் ஆறாவது பிரிவில் கனம் தர்மலிங்கம் அவர்களும், கனம் மாதவன் அவர்களும் கொடுத்திருக்கின்ற திருத்தங்களை ஆதரிக்கின்ற வகையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிப்பதின் காரணமாக, இந்த வரியின் மூலம் கிடைக்கும் பெருத்த வருவாய் குறைந்து போய்விடும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அந்தக் கருத்து சரியானது என்றால், அதை எடைபோட்டுப் பார்க்கின்ற நேரத்தில் பெரும்பகுதி, அதாவது முக்கால் பகுதி விவசாயிகளும் விதிவிலக்கு பெற வேண்டிய குறைந்த அளவு ஏக்கர் உள்ளவர்கள், இவர்கள்தான் இன்றைக்குத் தாங்க முடியாத அளவுக்கு வரிச்சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எளிதில் உணரலாம். சிறு நிலச்சுவான்தார்கள் இன்றைய சூழ்நிலையில் எந்த அளவுக்கு வறுமையோடு போராடிக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் கிராமங்களில் எந்தவிதமான ஏழ்மை நிலையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவர்களுடைய வாழ்க்கையை வளமாக்குவதற்கு செய்யப்படுகின்ற ஏற்பாடுகள் பார்ப்பதற்குப் பசுமையாக இருந்தாலும், அவைகளை உழவர் பெருங்குடி மக்கள்

பெறுவதற்கு என்னென்ன இன்னல்களை அனுபவிக்கிறார்கள். என்பதை ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இந்த மாமன்றத்தில் இல்லாவிட்டாலும், மனமார மந்திரிகள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் தருகின்ற அபிப்பிராயங்களிலிருந்தும், கோரிக்கைகளிலிருந்தும் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள். கடன் தொகை வழங்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தாலும் அவர்கள் அதை ஒழுங்காக அனுபவிக்கமுடியாத அளவுக்கு இடுக்கண்கள் வந்து சேருகின்றன. அந்த அளவுக்குப் பல இன்னல்களைத் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இத்தனையும் சமாளித்துக்கொண்டு தங்களுடைய கழனிகளில் சென்று விளைவை நடத்தி அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் போராடிக்கொண்டு இருக்கும் விவசாயிகளுக்கு ஓரளவு கருணைகாட்டுகின்ற நிலையில், இவர்களுக்கு வரி வேண்டாம் என்று சொல்லுகின்ற திருத்தங்களை -கண்டனமாக அல்ல-ஆத்திரத்தோடு அல்ல-மிக மிக இரக்க சுபாவத்தோடு கவனித்து எதிர்க்கட்சியினர் கொடுக்கும் திருத்தம் என்று எடுத்துக் கொள்ளாமல் ஆளும் கட்சியிலிருந்தே, வேண்டுமென்றால் கொண்டுவந்து நிறைவேற்றலாம். இதே மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போய்வந்த பிறகும் அமைச்சர் அவர்கள் சார்பில் எவ்வளவோ திருத்தங்கள் புற்றீசல்கள் போல் வந்துகொண்டே யிருக்கின்றன. இந்த முறையில் இந்த திருத்தத்தையும் உருவாக்கிக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ''கேட்டால் கொடுக்கப்படும், தட்டினால் திறக்கப்படும்" என்பது முன்னோர் மொழி. ஆனால் இங்கே நடப்பதைப் பார்த்தால், "கேட்டால் கெடுக்கப்படும், தட்டினால் தடுக்கப்படும்" என்கிற அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது. "எறும்பூரக் கல்லும் தேயும்" என்று சொல்வதுண்டு. எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் எவ்வளவோ உருக உருக பேசியும் கனம் அமைச்சர் அவர்கள் மனம் கரையவில்லை. அவ்விதம் கரையாததினால் அமைச்சர் அவர்களின் மனம், கல் மனம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. கருணை மனத்தோடு தான் இதைச் செயல்படுத்துவதின்மூலம் கண்ணை மனம் கொண்டவர் என்று புகழப்படவேண்டுமென்று விரும்புகிறேன். பாரத கதையை

எல்லோரும் அறிவார்கள். கிருஷ்ணபரமாத்மா துரியோதனாதிகளிடம் சென்று பாண்டவர்களுக்கு ஐந்து நாடு கொடுங்கள் என்று கேட்டாராம், அது மறுக்கப்பட்டது, பின்னால் ஐந்து ஊர் கேட்கப்பட்டது. அது மறுக்கப்பட்ட பின்னால் ஐந்து வீடாவது கொடுங்கள் என்று கேட்கப்பட்டது என்று புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் தங்களைத் துரியோதனர் என்று கூறமாட்டேன்! தூயவர்களே! ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமாவது இந்த வரியிலிருந்து விதிவிலக்கு கொடுங்கள். அதற்கான திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

# அரசியல் சட்டத் திருத்தம்

**உரை : 37** **நாள் : 07.08.1963**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டத்திற்கு பதினாறாவது திருத்தம் கொண்டுவரப்பட்டு, பாராளுமன்றத்திலே நிறை வேற்றப்பட்டு, இந்த மன்றத்தினுடைய ஒப்புதலுக்காக வைக்கப் பட்டிருக்கிற நேரத்திலே, அதன் பேரில் என்னுடைய கருத்துக்களை கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோதாவினுடைய உண்மை வடிவத்தை என்னுடைய கட்சிச் செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தை, ஆதரித்துப்பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பலர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சோந்த நாங்கள் எல்லாம் தேசத் துரோகிகள், தேச விரோதிகள் என்றும் மிக ஆக்கிரோஷமாகக் கண்டித்துப்பேசிய நேரத்தில், எங்களுக்கு மெத்த வருத்தம் ஒன்றும் ஏற்படவில்லை. காரணம் தேசத் துரோகிகள் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லும்போது, ஆளும் கட்சி சார்பில் அமர்ந்திருக்கும், மந்திரிகளில், சட்ட மன்ற உறுப்பினர்களில், எத்தனை பேர்கள் சுதந்திர போராட்ட காலத்தில் காங்கிரசில் இருந்தவர்கள் என்பதைப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் திரு. ராமைய்யா அவர்களே 1950-ம் ஆண்டு காங்கிரஸை எதிர்த்து, போட்டி இட்டு, வெற்றி பெற்றவர் என்ற செய்தியை. . .

**கனம் திரு. வெ. ராமைய்யா :** காங்கிரஸை எதிர்த்து நான் ஒரு போதும் போட்டி போடவில்லை.

**Mr. SPEKER :** I suggest that the hon. Member need not go into so many particulars and try to insinuate persons who are here or outside the House.

**கலைஞர் மு. கருணாநிதி :** தாங்கள்தான் காங்கிரஸைக் கட்டிக் காத்து வருவதாக மற்றவர்கள் நினைத்துப் பேசும்போது, காங்கிரசினுடைய விடுதலைப் போராட்டத்தில், வெள்ளைக் காரனை வெளியே துரத்தும் போராட்டங்களிலே, எத்தனை பேர்கள் ஈடுபட்டு இருந்தார்கள் என்பதையும் அறிவோம். இங்கே எங்களைப்பற்றிப் பேசப்படும்போது, அவர்கள் முகம் மாறும் விந்தையை நான் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினரை, தேசத் துரோகிகள் என்று கூறிய பலரிலே எவராவது சுதந்திர போராட்ட காலத்தில் தாங்கள் அந்த போராட்டத்தில் கொண்ட பங்கு என்ன, செய்த வீர தீரச் செயல்கள் என்ன என்று எடுத்துச் சொன்னார்களா என்றால், இல்லை. அது வேடிக்கையாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தை தேசத்துரோக இயக்கம், தேசத்தைக் காட்டிக் கொடுத்த இயக்கம் என்று, நண்பர்களும், சொல்லும் நேரத்திலே, கம்யூனிஸ்ட் சீன வெறியர்கள் இந்திய மண்ணை ஆக்ரமித்த காலத்தில், அந்த ஆக்ரமிப்பை எதிர்த்து இந்த இந்திய உப கண்டத்தை விடுவிக்க தி.மு. கழகத்தினர் செய்த முயற்சிகளைப் பற்றி இதே மன்றத்திலே நேற்றும் இன்றும் காங்கிரஸில் உள்ள சில உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

கழகத்தைப் பொருத்த வரை, இந்த திருத்த மசோதா பற்றி எங்கள் கருத்தை அறிவிக்கும் நேரத்தில், இது பேச்சுரிமையை, அடிப்படை உரிமைகளை, ஜனநாயக தத்துவத்திற்கு முரணாக பறிக்கிறது என்று கூறுகிறோம். நேற்று விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் நிதி அமைச்சரும், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், குறிப்பாக இது திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டைத் துண்டாட வேண்டும் என்று சொல்லுவதற்காக, பிரிவினைப்பேச்சுப் பேசுகிறவர்களுக்காக, கொண்டுவந்த சட்டம் என்று தங்கள் பேச்சின் இடை இடையே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்த சட்டம் 16-வது திருத்த மசோதா என்ற தலைப்பில் இருந்தாலும், பொதுவாக தமிழ் நாட்டில், சிறப்பாக இந்தியத் துணைக்கண்டத்தில், பிரிவினைத் தடை மசோதாதான் என்று பல உருவங்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பது என்ற போர்வையில், அடிப்படை

உரிமைகளை அந்த சட்டம் பறிக்கிறது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச்சாட்டு, அரசியல் சட்டத்தை அன்று செய்தவர்கள் நாட்டைத் துண்டாடுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அமைச்சர் சொன்னார்கள். நான் கேட்கிறேன், அரசியல் சட்டத்தை யாத்த காலத்தில், நாட்டைத் துண்டு போடுவது கூடாது என்று சட்டத்தை யாத்தார்களா என்று அன்று சட்டம் இயற்றிய காலத்தில், ஓர் உறுப்பு நாடாக இருந்த இந்தியா, சுதந்திரம் பெறும் நேரத்தில், அதனுடைய இயல்பு மாற்றப்பட்டு, ஓர் உறுப்பு நாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, துண்டு போடப்பட்டு, பாகிஸ்தானை துண்டு போட்டு, ஓர் உறுப்பு அழிக்கப்பட்டு, அரசியல் சட்டத்தை வகுத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடவில்லை. அரசியல் சட்டம் ஏன் திருத்தப் படுகிறது? கொடி காப்பாற்றப்படவேண்டும், அரசியல் சட்டம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக முன்பொருமுறை பாதுகாப்புச்சட்டம் கொண்டு வந்தீர்கள். திரு. மதியழகன் குறிப்பிட்டது போல, நானும் குறிப்பிடுகிறேன். அமைச்சர வர்களை கனம் அவைத்தலைவர் அவர்களே தங்கள் மூலம் கேட்கிறேன், ''முன்பு அந்த சட்டம் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட காலத்தில், கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா இந்த மன்றத்திலே எதிர்ப்புக்குரல்எழுப்ப வில்லையா? சட்டத்தை நிறைவேற்றுவதனால் மட்டும், காரியங்கள் சட்டத்தைமீறி நடைபெறாதா? என்று கேட்டார்களே! அதேபோல இன்றையதினம் இந்த மன்றத்திலே சட்டம் நிறைவேற்றப்படுவதனால் மட்டும், அது மீறப்படாதா? அரசியல் சட்டம் கொளுத்தப்படவில்லையா? 3,000 பேர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்களே. 10-12 பேர்கள் சிறைச்சாலையில் உயிர் நீத்திருக்கிறார்கள். அந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்தியவர்கள் என்று இந்த மன்றத்தில் இருக்கிற ஆளும் கட்சிக்காரர்களால் குற்றம் சாட்டப்பட்டவர்கள், அப்படிப்பட்ட தேசத்துரோக சக்திகள் என்று வர்ணிக்கப்பட்ட வர்கள் உதவியைப்பெற்று தேர்தல் நேரத்தில் அவர்களோடு உறவு வைத்துக்கொண்டிருக்கிற ஆளும் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து தேசத்துரோக சக்திகள் என்று சொல்லுவார்களானால் அது வேடிக்கையும் விந்தையுமான நிலைமை ஆகும்.

ஒருமைப்பாடு குழு சிபாரிசுப்படி இந்த மசோதா வருகிறது என்று நேற்றைய தினம் நிதி அமைச்சர் எடுத்துச் சொன்னார்கள். ஒருமைப்பாடுக் குழு எத்தன்மை வாய்ந்தது? அதனுடைய தலைவர் எவ்வண்ணத்தவர்? அவர், திருவாங்கூர் தனி நாடாக ஆகவேண்டும் என்று பிரகடனப்படுத்தியது மாத்திரமல்லாமல், பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆகிவிட்டது என்ற வீராதி வீரர், டாக்டர் சி.பி. ராமசாமி அய்யர். அவர் தலைமையில் ஒருமைப்பாட்டுக் குழு. அந்தக் குழு இந்தப் பிரிவினைக் கொள்கையை நாட்டிலிருந்து வேரறுக்க வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் எவர்களைச் சந்தித்தது? இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்தில் நேற்றைய தினம் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கூட எழுப்பினார். எங்கள் தலைவர் பாராளுமன்றத்தின் முன்னும் வெளியிலும் எழுப்பினார்கள். அதற்கான பதிலை பொறுப்பான அதிகாரத்தில் இருக்கிறவர்கள் சொல்லாதது உள்ளபடியே வருந்தத்தக்கதாகும். அப்போது வெளியிலே பலர் இருந்தார்கள். சிறைச்சாலையில் சிலர் இருந்தாலும், வெளியிலே தலைவர்கள் இருந்தார்கள். அவர்களைக் கலந்து யோசிக்கவோ, சந்தித்துப் பேசவோ கிஞ்சித்தும் ஜனநாயக மனப்பான்மை இல்லாமல் போய் விட்டது ஏன்? விவசாய ஆராய்ச்சிக்காக ஒரு குழு நியமிக்கப்பட்டால் அது விவசாயிகளைச் சந்திக்காதா? தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்க அமைகிற குழு தொழிலாளர் பிரதிநிதிகளைச் சந்திக்காதா? பிரிவினையை வேரறுப்பதற்காக, அந்தக் கொள்கை கூடாது என்று சொல்லுவதற்கு ஒரு குழு அமைகிறது என்றால், அந்தக் குழு பிரிவினைவாதிகள் என்று குற்றம் சாட்டப்படுகிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைச் சந்திப்பதில்லை என்றால் என்ன அர்த்தம்? சம்பந்தி வீட்டுக்குச் சொல்லாமல் நிச்சயதார்த்தமா? இத்தகைய வேடிக்கையான குழு இந்த ஊருக்கு வந்தபோது, குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்த மாநில அமைச்சர் பெருமக்கள் அவர்களுக்கு ஒரு அரிய பெரிய யோசனை சொன்னார்கள். அந்த யோசனை என்னவென்றால் கழகக்காரர்களை எப்படியும் தேர்தலில் நிற்காமல் செய்துவிட வேண்டுமென்ற அடிப்படையில் அமைந்ததாகும். திராவிட நாடு கேட்டால், பிரிவினை வேண்டுமென்று சொன்னால், தேர்தலில் ஈடுபடக்கூடாது என்ற வகையில் அந்தச் சட்டம் தயாரிக்கப்பட

வேண்டும் என்று யோசனை சொல்லப்பட்டு இன்றைய தினம் அந்தச் சட்டம் வந்திருக்கிறது.

நண்பர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ''திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலந்திருந்தால் அவர்கள் ஒருவேளை தங்கள் கொள்கையை விட்டுக்கூட கொடுத்திருப்பார்கள் ஆனால் சட்டம் போட்டு, திடீரென்று விட்டு விட அவர்களுக்கே வெட்கமாக இருக்காதா? கலந்து பேசியிருந்தால் அது வரையில் போதும், இது வரையில் போதும், அதிகாரங்கள் வரையில் போதும் என்று சொல்லி, கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொடுத்து மக்களிடத்தில்கூட நல்ல பெயர் வாங்கியிருப் பார்கள்'' என்று சொன்னார்கள். தொழிலாளர் வேலை நிறுத்தம் போராட்டங்களை நடத்த வேண்டும் என்று ஊருக்கு அறிவித்து விட்டு திரைமறைவில் போராட்டத்தை நிறுத்த பேரம் பேசி 2 ரூபாய் கூலி உயர்வு என்று வெளியில் கேட்டு, 1¼ ரூபாய் போதுமானது என்று முதலாளிகளிடம் பேரத்தை முடித்துக் கொள்ளும் அப்படிப்பட்ட தந்திரோபாயங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே இல்லை என்று கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு வினயமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் இன்னொன்றைக் குறிப்பிடும்போது அமெரிக்காவில் அந்தக் காலத்திலேயே ஆப்ரஹம் லிங்கன் காலத்திலேயே செய்த முடிவு இது என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்கள். அந்தச் சட்டம் எப்படி வந்தது? அதன் பூர்வோத்திரம் என்ன? வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் பலமான கருத்து வேறுபாடு எழுந்தது. நீக்ரோக்கள் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினை களில் கருத்து வேறுபாடு எழுந்தது. அந்த நேரத்தில் வடக்குப் பகுதியிலிருந்து பிரிந்துவிடவேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்த தெற்குப் பகுதி ஒரு வழக்கை தெற்குப் பகுதி நீதிமன்றங் களுக்கு கொண்டு சென்றது. தெற்கு பகுதி நீதிமன்றம் அந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பியது. சுப்ரீம் கோர்ட்டில் என்ன நீதி வழங்கப்படுமோ என்று அமெரிக்க நாட்டில் எதிர் பார்த்திருக்கும் நேரத்தில், அரசு பீடத்தில் இருப்பவர்களுக்குச் சந்தேகம் எழுந்தது. அமெரிக்க ஜனநாயகச் சட்டம் பிரிந்து போகும் உரிமைக்கு இணக்கமானதுதான், முரண்

ஆனதல்ல என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தால் என்ன செய்வது என்ற அச்சம் காரணமாக, நீதி வழங்கப்படுமுன் வடக்கு பகுதி, தெற்கு பகுதி மீது யுத்தப் பிரகடனம் செய்து போராட்டத்தில் குதித்தது. வலிமை மிகுந்த வடக்கு, வலிமை குறைந்த தெற்கை அந்த யுத்தத்தில் வென்றது. தெற்குப் பகுதி தோற்றது. அந்த வெற்றிக்குப் பிறகு அந்த வெற்றி அடிப்படையில்தான், அந்த வெற்றியின் விளைவாகத்தான் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் இந்தப் பிரிவினைக்கு அந்த அரசியல் சட்டத்தில் இடம் கிடையாது என்ற அடிப்படையில் வடக்கிற்குச் சாதகமான தீர்ப்பு அளித்தது. அதைக்கூட போஸ்ட் ஃ பேக்டோ ஜட்ஜ்மெண்ட் என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நீதி வழங்கப்பட்டு அதுதான் பிரச்சினையைத் தடுக்கிறது என்று நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்பதை நாம் நினைவு கூறவேண்டும். எனது நண்பர் திரு. மதியழகன் எடுத்துக் காட்டியது போல, அமெரிக்காவில் பிரியக் கூடாது என்று சட்டம் இருக்கிறது என்றால், ரஷ்ய நாட்டில் விரும்புகிறவர்கள் பிரிந்த செல்லலாம் என்று அரசியல் சட்டம் இருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

பிரிவினையே கூடாது, அது தேசத் துரோகமான காரியம், கூட வளர்ந்திருக்கிற சுதந்திர பாரதத்திற்கு நீங்கள் செய்கிற தீமை என்று நேற்றைய தினம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசி, எங்களை தேசத் துரோகிகள் என்று சுட்டிக்காட்டி, அவர் அவருடைய குற்றங்களை மறைப்பதற்கு நேற்றையதினம் தன் பேச்சைப் பயன்படுத்திக் கொண்டார்கள். நான் அவர் பேச்சில் உள்ளபடியே ஒன்றை மிக வருத்தத்தோடு மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக்காக இருக்கிற காரணத்தினால், கழகத்தில் 50 நல்ல இளைஞர்கள் இந்த மன்றத்தில் வீற்றிருந்தாலும் அவர்களால் இந்த மன்றத்தில் முக்கியத்தும் பெற முடியவில்லை. பிரகாசிக்க முடியவில்லை என்று கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேச்சில் குறிப்பிட்டார்கள். அது ஒரு கல்லில் இரண்டு கனி அடிக்கும் காரியம். ஒன்று கொள்கையையும் தாக்கினார். அதோடு நாங்கள் 50 பேர்கள் முக்கியத்துவம் பெறவில்லை என்று குறிப்பிட்டு தனக்குத்தானே ஆனந்தம் கொண்டார். நாங்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கிற காரணத்தினால்தான் வெளியில் இருக்கிற மக்கள்

ஐம்பதோடு ஒன்றை ஐம்பத்தொன்றாகச் சேர்த்திருக்கிறார்கள். அவர்களை நன்றாக உணர்ந்த மக்கள் நான்கை இரண்டாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகையால், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்தில் முக்கியத்துவமுள்ள பிரதான, பிரகாசிக்கக்கூடிய எதிர்கட்சியாக விளக்கி வருகிறது என்பதை எனது நண்பருக்கு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். ''சர்க்காருடைய ஊழல்களை எடுத்துச்சொல்லி, வரிக் கொடுமைகளை எடுத்துச்சொல்லி, மக்களுடைய வறுமையைப் பற்றி எடுத்துச் சொல்லி, கட்டாய சேமிப்பு முறையைப் பற்றி எடுத்துச்சொல்லி, பொற்கொல்லர்களுடைய அவதியை எடுத்துச் சொல்லி, இவ்வளவையும் எடுத்துச்சொல்லி கடைசியாக திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறுகிறார்கள், அதனால் கவரப்பட்ட மக்கள் வாக்களிக்கிறார்கள். திராவிட நாடும் அவர்களுக்கு கவர்ச்சியாகத் தோன்றுகிறது, வேறு ஒன்றுமல்ல!'' என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். திராவிட நாடு என்கிற ஒன்றைத் தவிர சர்க்கார் கட்சி ஊழலை மற்ற கட்சிகள் எடுத்துச் சொல்லுகின்றன. பி. சோ கட்சி எடுத்துச் சொல்லுகின்றன. சோஷலிஸ்ட் கட்சி எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் அதையே எடுத்துச்சொல்லுகிற திராவிட முன்னேற்றக் கழகம் வளருகிறது. ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் 51 இடங்களை சட்ட சபையில் பெற முடிகிறது? ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் மக்களிடத்தில் செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டு வருகிறது? அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அதே கருத்துக்களைத்தான், அதே வாதங்களைத் தான் எல்லாக் கட்சிகளும் எடுத்துச் சொல்லுகிறது. அதோடு இணைத்து நாடு பிரிந்தால் நன்மை பல உருவாகும், ஆகையால் திராவிட நாடு திராவிடருக்கே என்று எடுத்துச் சொல்லுகிறோம். மக்கள் ஆதரவு தருகிறார்கள். தீய கருத்தாக இருந்தால் மக்கள் ஒதுங்கி விட மாட்டார்களா? இதையும் நண்பர் கலியாணசுந்தரம் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடையை ரஷ்ய நாட்டு அதிபர் குருஷ்சேவ் அவர்கள் இந்தியாவைச் சுற்றிவிட்டு, 'கிழக்குலக மக்களுடைய நம்பகமான நண்பன் சோவியத் நாடு' என்ற புத்தகத்தை வெளியிட்ட நேரத்தில், 1963-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், ஐந்தாம் நாள் என்று நினைக்கிறேன் - மாஸ்கோவிலுள்ள

உழைப்பாளிகள் பேரவையில் பேசும் போது, குருஷ்சேவ் அவர்கள் குறிப்பிட்டார். எதைப்பற்றி? பாகிஸ்தானிலே இருக்கும் பக்டூனிஸ்தானைப்பற்றி, ''பாகிஸ்தான், இந்தியா பிரிகிற நேரத்தில், துண்டாடப்படுகிற நேரத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யவாதிகளால் பாகிஸ்தானோடு பத்து லட்சம் பஷ்டு மக்கள் இணைக்கப்பட்டு, அவர்கள் பாகிஸ்தானோடு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றையதினம் பாகிஸ்தானிலிருந்து பிரியவேண்டுமென்று கருதுகிறார்கள். அப்படி பிரிந்து அவர்கள் சுய நிர்ணய உரிமையோடு தனிநாட்டை அமைத்துக்கொண்டாலும், அல்லது ஆப்கானிஸ்தானத்துடன் இணையவேண்டுமென்று விரும்பினாலும் நாம் வரவேற்கவேண்டியதே'' குருஷ்சேவ் இவ்வாறு பேசியது மாத்திரமல்ல. இன்னொன்றையும் குறிப்பிட்டார்.

''ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. தேசிய இனப் பிரச்சினை மக்களின் விருப்பத்திற் கேற்பத் தீர்க்கப்படவேண்டும் எனக்கூறும் லெனினிய தேசீய இனக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது நம் நிலை'' என்றும் குருஷ்சேவ் அவர்கள் அந்தக் கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வோட்டு முறையிலே திராவிட நாடு கிடைக்காது என்பது கம்யூனிஸ்டு கட்சித்தலைவருடைய வாதம். வோட்டு முறையைப் பயன்படுத்தக்கூடாது என்பது நிதி அமைச்சருடைய வாதம். எதனுடைய அடிப்படையில் இந்த வாதம் எழுகிறது என்று நான் விளக்கத் தேவை இல்லை. வோட்டு முறை ஒன்றை மாத்திரம் வைத்தே இதைக் கணக்கிட முடியுமா என்றால், 1937ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம்லீக் பெற்ற இடங்கள் எத்தனை? இந்தியாவிலே மொத்த முஸ்லீம் ஸ்தானங்கள் 485. அந்த 485 மொத்த முஸ்லீம் ஸ்தானங்களில் முஸ்லீம் லீகுக்குக் கிடைத்தவை 108. லீக் அல்லாத முஸ்லீம்களுக்குக் கிடைத்த ஸ்தானங்கள் 377. எனினும் லீகின் முயற்சியால் பாகிஸ்தான் பெற முடிந்தது. ஆகவே, உணர்ச்சிகளை மதிக்க வேண்டும்.

இல்லை, வோட்டுகளை மதிப்போம் என்றால், அதற்கும் வாருங்கள் என்ற கொள்கை படைத்தவர்கள் நாங்கள்.

அரசுரிமை மக்களிடத்தில் இருக்கிறது. மக்கள் அரசுரிமைச் சட்டங்களைத் தயாரிக்கின்ற பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள். ஆகவே, அரசுரிமைக்கும் மக்களுக்கும் நிரம்பச் சொந்தம் இருக்கிறது. அந்தக் காரணத்தால்தான் 1952-லிருந்து 1957-ம் ஆண்டு வரை நாங்கள் வெட்ட வெளிகளில், பசும்புல் தரைகளில் மக்களைக் கூட்டிவைத்துப் பேசும் தருணத்தில், மதிப்பிற்குரிய இன்றைய முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், 'இப்படி வெளியிலே கூச்சல் போட்டுப் புண்ணியம் இல்லை, உள்ளே வாருங்கள், பார்க்கிறோம்' என்று சொல்லியபோது, அழைக்கிறார்களே என்பதற்காக, 1957-இல் நாங்கள் தேர்தலில் ஈடுபட்டோம். 15 பேர்கள் சட்ட மன்றத்திற்கு வந்தோம்.

அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிர மணியம் அவர்கள், 'நீங்கள் ஏதேதோ பிரச்சினைகளைச் சொல்லி உள்ளே வந்துவிட்டீர்கள். உங்களுடைய தேர்தல் பிரகடனத்தில் திராவிட நாட்டைச் சொல்ல வக்கு இருக்கிறதா? அப்படிச் சொன்னால் உங்களுக்கு ஒரு இடம்கூடக் கிடைத்திருக்காது' என்று இந்த மன்றத்தில் அறைகூவல் விட்டார்கள். அந்த அறைகூவலையும் ஏற்றுக்கொள்வோம் என்று 1962-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாடு அமையவேண்டும் என்பதை முதன்மையாக அறிக்கையில் வலியுறுத்தியது. ஒரு இடம்கூடக் கிடைக்காது என்று சொன்னதற்குப் பதிலாக ஐம்பது இடங்களைப் பெற்றோம். இப்பொழுது மேலும் ஒரு இடத்தையும் சேர்த்து, 51 இடங்களை நாங்கள் பெற்றிருக்கிறோம்.

இதற்குப் பிறகு என்ன செய்வது? முதலில் 'வாருங்கள்' என்றார்கள். வந்தோம். திராவிட நாட்டைத் தேர்தல் பிரகடனமாக வைத்தோம். வெற்றி பெற்றோம். இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்? பழைய காலத்தில் ஒரு கதை உண்டு. 'ஏழு கடலைத் தாண்டி, எட்டு கானகங்களைக் கடந்து, ஒன்பது மலைகளுக்கப்பால் இருக்கும் பாரிஜாத மலரைப் பறித்துக்கொண்டு வந்தால், பத்தரை மாற்றுத்தங்கம்போன்ற

என் பெண்ணைத் தருவேன்' என்று அரசன் சொல்வான், பாரிஜாத மலரைக் கொண்டுவந்து கொடுத்த பிறகு மகளைக் கொடுக்காமலிருப்பதும்மட்டுமல்ல; 'சாமியாராகப் போ' என்றால் மாப்பிள்ளையாகப் போகவேண்டியவன் கழுவில் ஏறினாலும் பரவாயில்லை என்று காத்தவராயனாகத்தானே மாறுவான்? (சிரிப்பு). நீங்கள்தான் (ஆளுங்கட்சி) அழைத்தீர்கள்; வந்தோம் வந்த பிறகு, ஐம்பத்தொரு பேர்களாக நாங்கள் ஆன பிறகு, இன்றைய தினம் 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தலில் சந்திப்பதற்கான திறமை, தெம்பு, திராணி உங்களுக்கு (ஆளுங்கட்சி) இல்லாத காரணத்தால், சட்டம் போட்டுப் பழிவாங்க நீங்கள் கருதுகிறீர்கள். மக்களிடத்தில் செல்வோமே. பதினைந்து ஆண்டுகள் நீங்கள் பேசினீர்கள். நாங்களும் பேசினோம். எங்களுடைய கழகத் தலைவர், இந்த நாடு பிரிய வேண்டும் என்பதற்கு ஆயிரம் ஆயிரம் ஆதாரங்களை நாட்டு மக்களுடைய மன்றத்திலே வைத்தார்கள். மக்களுடைய உள்ளத்திலே கருத்துக்களை ஊடுருவச் செய்தோம். நாங்கள் சாதாரண மனிதர்கள். சாமானியர்கள். மிக மிகச் சாதாரணமானவர்கள். காங்கிரஸ் ஆளும் கட்சியில் கனம்கள் என்ன, பெரிய ராஜ ராஜாக்கள் என்ன, பெரிய பெரிய பஸ் முதலாளிகள் என்ன, செல்வாக்கு மிகுந்தவர்கள் என்ன, தேசத் தியாகிகள் என்ன, அத்தனை பேரும் நாட்டு மக்களிடத்தில் சென்று, 'அண்ணா துரையினுடைய வாதம் சப்பை, நெடுஞ்செழியனுடைய விளக்கம் சொத்தை, மதியழகன் பேச்சை நம்பாதீர்கள்' என்றெல்லாம் பேசினார்கள், நாங்களும் பேசினோம், இப்பப்பட்ட கருத்து மோதல் ஜனநாயக ரீதியாக அரசியல் நாகரிகத்தோடு நடைபெறுவதற்கு நீங்கள் வழிவிடவேண்டுமே தவிர, சட்டம் என்கிற கதவை வைத்து அடைத்தால், உண்மையிலேயே ஜனநாயகத்தை காப்பாற்றிய பெருமை உங்களுக்கு வந்து சேருமா என்று, கனம் சபாநாயகர் மூலமாக, கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய புத்தகத்திலேகூட அந்த வீர வரிகள் பதிவாகியிருக்கின்றன.

'போராட்டங்களும் கிளர்ச்சிகளும் ஜனநாயக நாட்டிலே இருக்கக்கூடாது; ஜனநாயக நாட்டிலே கிளர்ச்சிக்கும் போராட்டத்திற்கும் இடம் இல்லை, இவைகளையெல்லாம் தேர்தல் பிரச்சினையாக வைத்துப் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பதிலளிக்கும் நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், ''பிரிவினைச் சட்டத்தைக் கொண்டுவந்து தடுக்காதீர்கள், திராவிட நாடு வேண்டுமென்றுகூறி, தேர்தலில் போட்டியிட்டு, இப்பொழுது வாங்கிய 35 இலட்சம் வாக்குகளில் ஒரு இலட்சம் வாக்குகள் நாங்கள் குறைத்து வாங்கினாலும், திராவிட நாட்டுக் கோரிக்கையை விட்டு விடுகிறோம். நீங்கள் சட்டத்தை விட்டுவிட்டு தேர்தலில் இந்தப் பிரச்சினையை வைக்கத் தயாரா?'' என்று குறிப்பிட்டார்கள். இதுவரையில் அதற்குப் பதில் என்ன? முதலமைச்சரின் மௌனம்தான் அதற்குப் பதிலே தவிர, அதற்கான பதில் இன்னும் வரவில்லை.

'பேச்சு சுதந்திரம் தந்தோம், ஆகவே, காங்கிரசுக்கு வோட்டு போடுங்கள்' என்று இதுவரையில் பேசிய காங்கிரசின் தீரமிகு சொற்பொழிவாளர்களைக் கேட்கிறேன் - இனிமேல், 'பேச்சு சுதந்திரம் அளித்தவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று கேட்பதற்கு உங்களால் முடியுமா? என்று நான் ஆளுங் கட்சியில் இருக்கும் காங்கிரஸ் பேச்சாளர்களைக் கேட்க விரும்புகிறேன். பேச்சு சுதந்திரம் அளித்ததுதான் என்ன? அது என்ன பிரமாதம்? உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் இல்லாத அதிசயமா? பெரிய அற்புதமா? பிரிட்டிஷ் இராணியார் அங்கே முடியாட்சி நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட இங்கிலாந்து நாட்டிலே ஒரு பூங்காவில் ஒரு சின்ன ஸ்டூலைப் போட்டுக் கொண்டு, அதன்மேல் ஒருவன் நின்று, 'பிரிட்டிஷ் இராணியே! 24 மணி நேரத்திற்குள் உன்னுடைய மகுடத்தைக் கழற்று; இல்லாவிட்டால் நான் ஒரு கை பார்ப்பேன்' என்று பேசச் சுதந்திரம் அந்த நாட்டிலே இருக்கிற பிரஜைக்கு அளிக்கப்பட்டி ருக்கிறது. அப்படிப் பேசுபவனைப் பார்த்து, சமுதாயம் பரிகாசம் செய்து, இழித்துப் பேசலாமே தவிர, சட்டம் அவனைத் தொடுவதற்கில்லை. அந்த அளவு பேச்சுரிமை அங்கே அளிக்கப் பட்டிருக்கிறது. வெள்ளைக்காரனை எதிர்த்துப் போராட்டங்களில்

ஈடுபட்ட நேரத்திலே, அவனுடைய நாட்டிலே சென்று, இந்திய நாட்டு மக்கள் வெள்ளைக்காரனை எதிர்த்துப் பேசுவதற்கு உரிமையை அந்த நாடு அளித்திருந்தது. ஆகவே, பேச்சுரிமை யைப்பற்றி, அதை அளித்தது காங்கிரசு ஒன்றுதான் என்று கித்தாப்பு பேசிக்கொள்வதால் பெருமை ஒன்றும் இல்லை.

ஆனால், பேச்சுரிமைக்காகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படாமல் இருக்கின்றனவா? சாதாரண வாக்குறுதியை அல்ல, சகலகலா வல்லவர் என்றும் ஜெகமெங்கும் இருக்கின்ற நாட்டு அதிபர்களால் கைகுலுக்கப்படுகிறவரும், என்னுடைய மதிப்பிற்குரியவரும், இந்தியத் துணைக் கண்டத்தின் இன்றைய தலைமை அமைச்சருமான பண்டித நேரு அவர்கள், 1922-ம் ஆண்டு, மே திங்கள், 22-ம் நாளில் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தந்த அறிக்கையின் குறிப்பை மட்டும் நான் கோடிட்டுக் காட்டிக் குறிப்பிடுகிறேன். அதாவது.

''பேச்சின் மூலம் பழி தூற்றாமல், ஏமாற்றாமல், சட்டதுக்குப் புறம்பான மற்ற காரியங்களைச் செய்யாமல் ஒருவன் பேச உரிமை இருக்கிறது. மனதில் பட்டத்தைக்கூற, மற்றவர்களுக்கு விளக்கிக் காட்ட, எழுச்சியூட்ட ஒவ்வொரு வருக்கும் உரிமை இருக்கிறது. பேச்சுரிமை - என்ன நேரிட்டாலும் சரி; அதை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம்.''

என்று குறிப்பிட்டார், அவரே, 1928-ல், ''வருங்கால இந்திய அரசியல் சட்டம் எப்படியிருக்கவேண்டும்?'' என்று அறிக்கை தயாரிக்கப்பட்டபோது கூறிய கருத்து என்ன?

''அரசியல் சட்டத்தில் வைக்கப்படும் அடிப்படை உரிமைகள், எக்காரணத்தைக் கொண்டும், எந்தக் காலத்திலும் குறைக்கப்படாமல் பாதுகாப்புத் தருவதுதான் நமது முதல் கவலையாக இருக்கவேண்டும்.''

என்று பண்டிதநேரு அவர்கள் தெரிவித்தார்கள். விடுதலை வீராராக இருந்த நேரு அவர்கள் 1945, ஜூலை, 17-ம் நாள், காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் கபுர்தாலா தோட்ட மைதானத்தில் பேசிய வாசகங்களை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் பேசியதென்ன?

''இந்தியாவின் ஒரு பகுதியை மற்றொரு பகுதி அடக்கி ஆள்வதற்காக நாங்கள் சுதந்திரம் கேட்கவில்லை.''

என்று பேசினார். இந்த வரியை இந்தி வெறியர்கள், இந்தி ஆதிபத்தியக்காரர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். நேரு அவர்கள் மேலும் கூறியதாவது -

''இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு பகுதி பிரிந்துபோக விரும்பினால், அப்படிப் போக வேண்டாமென்று காங்கிரஸ் கேட்டுக் கொள்ளும். பிரிந்துதான் போவோம் என்று கண்டிப்பாக இருந்தால் அவ்வாறு போவதைக் காங்கிரஸ் அனுமதிக்கும்.''

இவை பண்டித ஜவஹர்லால் நேரு விடுதலை வீரராக இருந்து 1945-ஆம் ஆண்டு காஷ்மீர் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் உதிர்த்த மணிவாசகங்கள். அந்த வாசகங்களின் அடிப்படையில் இப்போது பேச்சுரிமை தரப்பட்டிருகிறதா? அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று? அது வழக்கம்போல பண்டித நேருவின் வாக்குறுதிகள் போல ஆகிவிட்டதா?

சட்டத்தினால் உடலை அழிக்கலாம். உணர்ச்சிகளை அழித்துவிட முடியுமா? சட்டத்தினால் உடல் எலும்புகளை முறிக்கலாம். ஆனால் உள்ள உறுதியை முறித்துவிட முடியுமா? உள்ளத்திலே ஊறி வைரம் பாய்ந்திருக்கும் கருத்துக்களை, உணர்ச்சிகளை உடைத்தெறியும் சம்மட்டி அல்ல உங்கள் சட்டம் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பற்றி தமிழக முன்னாள் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சென்ற பிப்ரவரித் திங்களில் இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியிருக்கும்படியான கருத்து நம் சிந்தனைக்குரியது.

''வெள்ளையரிடம் இருந்து பிரிந்து விடுதலை பெற்றுவிட வேண்டும் என்று தீவிரமாகக் கேட்டவர்களின் தொகை பத்து லட்சத்துக்கு மேல் இருக்காது. ஆனாலும்கூட வலிமை மிக்க வெள்ளையர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தாகவேண்டிய நிலை ஏற்பட்டது. சட்டத்தின் கெடுபிடி, சிறையின் கொடுமை, கசையடியின் கோரம், ஏன் தூக்குத்தண்டனைகூடப் பயன் இல்லாமல் போய் விட்டது. இந்த நாட்டின் ஒரு பகுதியில் உள்ள

மூன்று கோடி மக்களில் இரண்டுகோடி பேர் பிரிவினை வேண்டு மென்று விரும்பினால் இந்தப் பிரிவினைக் கோரிக்கையின் விளைவுகளை எதிர்நோக்க அவர்கள் தயாராக இருந்தால் இத்தகைய சட்டத்தின் துணுக்கு ஒன்று என்ன செய்துவிட முடியும்?'' என்று அந்தக் கட்டுரையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இறுதியாக நான் இந்த மன்றத்தில் ஒன்றே ஒன்றை மாத்திரம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயக அடிப்படையில் உரிமைகளைக் குலைத்தெறிய முற்பட்டு இன்றைய தினம் இங்கே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் ஒப்புதல் அளிக்கப்பட்டாலும் எங்களுடைய உள்ளத்தில் உள்ள வைரம் பாய்ந்த உணர்ச்சிகளை நிச்சயமாக இந்தச் சட்டம் அழித்துவிடாது. அழித்துவிடுவதற்கும் இந்தச் சட்டத்தால் இயலாது. அயர்லாந்து நாட்டின் விடுதலை இயக்கத்தை சட்டங்களின் துணை கொண்டு பயங்கரமான முறையில் அடக்க முயன்றார்கள். விடுதலை வீரன் பியர்சே என்பான் சுட்டுக் கொல்லப்பட்டான். அந்த விடுதலை வீரன் மாபெரும் தியாகியாகிச் சரித்திர ஏட்டிலே இடம் பெறுவதற்கு முன் ''தெய்வத் திருநாடு'' என்ற பத்திரிகையில் ஒரு கருத்தை வெளியிட்டான். அதைமாத்திரம் நான் என் பேச்சின் முடிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன். ''பாராளுமன்றத்திலே நீங்கள் எட்டுப் பேர் இருக்கிறீர்களே, அது எப்படி ஏகாதிபத்தியம் ஆக முடியும்?'' என்று திரு. கல்யாணசுந்தரம் கேட்டார்களே. அவர் களுக்கும் பதில் அளிக்கும் விதத்தில் அவன் எழுதியதை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

''இங்கிலீஷ்காரர்களே, சொல்லுவதை கேளுங்கள், நீங்கள் நாளை இந்தப் பூமியில் உள்ள மிகச்சிறந்த நிலத்தை யெல்லாம் எங்களுக்குச் சுவாதீனப்படுத்தினாலும் - உங்களுடைய பாராளுமன்றத்திலே எங்களுக்கு நிறையப் பிரதி நிதித்துவம் அளித்தாலும் - உலகத்திலுள்ள மிகச்சிறந்த பொக்கிஷங்களை எல்லாம் கொள்ளையடித்து அந்தச் செல்வத்தையெல்லாம் எங்கள் காலடியில் குவித்தாலும் - அப்பொழுதும் நாங்கள் உங்களுக்குச் சொல்லுவோம். எங்களது உற்சாகம் மிகுந்த இதயத்தின் பேராலும் சிந்தனை, திறன் மிக்க

ஆத்மாவின் பேராலும் பயமறியாத உத்வேகத்தின் பெயராலும் சொல்லுவோம். அயர்லாந்து உங்களுக்கு அடங்கிய மாநிலமாக இருக்கவேண்டும் என்பதுதான் நிபந்தனையானால் நீங்கள் அளிக்க முன்வரும் சன்மானங்களைத் தூக்கி எறிவோம். இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சொல்கிறோம். இதன் விளைவு எதுவாக இருந்தாலும் வருவது வரட்டும் என்று அயர்லாந்தின் பெயரால் சொல்கிறோம். அயர்லாந்து ஒரு நாடாக ஆகியே தீரும்.''

என்று அந்த மாவீரன் முழக்கினான். சட்டம் அவனைக் கொட்டிக் கொன்றது. அவன் புகழோடு வாழ்கிறான். அவன் கீர்த்தி மங்கவில்லை. சரித்திரத்தில் ஒரு பொன் ஏடாகிவிட்டான்.

திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிற நிலை, திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடிக்கிற கொள்கை இவற்றை மாசுபடுத்திட எண்ணியவர்கள் இந்த மன்றத்தில் சேர சோழ பாண்டிய மன்னர்களுடைய மாகீர்த்திகளையே மாசு படுத்தினார்கள். ''நீங்கள் சேர, சோழ, பாண்டியர்களுடைய நாட்டைக் கேட்கிறீர்களா?'' என்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரைச் சேரனாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைச் செயலாளரைச் சோழனாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளரை பாண்டியனாகவும் எண்ணிக்கொண்டு அவர்களைக் கூட இன்றையதினம் இழிவு படுத்தினர்கள். சேரன் செங்குட்டுவனின் வீரமும், நெடுஞ்செழிய பாண்டியனின் நீதி வழுவாத்தன்மையும், கரிகால் சோழனுடைய வளம் பெருக்கும் நல்ல பரிபாலனமும், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களுக்கு உண்டு. அவர்கள் விடுதலை வீரர்கள். எத்தகைய சட்டத்தைக்கொண்டு அவர்களைக் கொட்டினாலும், நிச்சயமாக அவர்களுடைய லட்சியமாகிய உணர்ச்சிகளை அழித்துவிட முடியாது. அவர்களுடைய வாழ்வின் மூச்சு திராவிட நாட்டின் விடுதலையே என்பதை எடுத்துச்சொல்லி சபையின் அங்கீ காரத்தைப் பெறுவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்த திருத்த மசோதாவுக்குப் பலமான கண்டனத்தைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்



# உள்ளாட்சி உறுப்பினர்கள் ஏற்கவேண்டிய உறுதிமொழி

**உரை : 38** **நாள் : 22.01.1964**

**கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்திலும், நகராட்சி மன்றத்திலும் பொறுப்பு ஏற்கின்ற உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய உறுதிமொழிபற்றிய திருத்தம் ஒன்றினைப்பற்றி என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உறுதிமொழிபற்றிய அடிப்படை அம்சங்களைக் கொண்ட திருத்தம், அரசியலமைப்பின் 16-வது திருத்தம் பாராளுமன்றத்தில் வந்த போதும், அது பற்றி இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போதும், திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவான முறையில் தன்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறது. உரிமைகளைப் பறிக்கிறது. பேச்சு உரிமையை பாழ்படுத்துகிறது என்கிற அளவில், அந்தத் திருத்தம் தேவையில்லை என்கிற கருத்தைத்தான் வெகுவாக எடுத்து விளக்கியிருக்கிறோம். ஆனாலும் பெருபான்மை இருக்கிற காரணத்தினால் அந்தத் திருத்தம், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனையும் அந்த அடிப்படையில் மாநகராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் அந்த உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற திருத்தம் இப்போது கொண்டுவரப்படுகிறது தவறு என்று நான் கூற மாட்டேன். ஆனால் நகராட்சி மன்றங்களிலும், மாநகராட்சி மன்றத்திலும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுகிற முறை தேவைதானா என்று யோசிக்கவேண்டும் என்றுதான் நான் ஆளும் கட்சியினரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய சட்ட திட்டங்களை மாற்றி அமைத்திருக்கிறது என்று கனம் உறுப்பினர் சிலர் குறிப்பிட்டது போல், பயத்தின் காரணமாக அப்படி கழகம் தன் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டது என்று அவர்கள் கருதுவார்களானால், கழகம் தன் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டது பயத்தின் அடிப்படையில் என்றால், இந்த அரசியலாரும் சட்ட திட்டங்களுக்குத் திருத்தம் கொண்டு வந்தது பயத்தின் அடிப்டையில்தான், இல்லை சூழ்நிலை அடிப்படையில் தான் 16-வது திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று ஒப்புக்கொள்வார்களானால், சூழ்நிலை அடிப்படையில்தான் கழகம் தன் சட்டத்திட்டங்களை மாற்றிக்கொண்டிருக்கிறது என்று பதில் கூறுவேண்டியிருக்கும். திராவிட முன்னேற்ற கழகத்தில் இருக்கிற ஒருவர், அல்லது தமிழ் நாட்டிலே இருக்கிற ஒருவர் திராவிட நாடு வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்பவர்களுக்கு 10 ஆண்டு சிறைவாசம் என்ற கூறினால் அப்படிப்பட்ட சிறைவாசத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே யாரும் பின் வாங்கியவர்கள் அல்ல என்பதை, மூன்று ஆண்டு காலம் சிறைவாசம் என்று வகுக்கப்பட்டிருக்கிற சில தண்டனைப் பிரிவுகள் அடங்கிய சட்டங்களையெல்லாம் மீறுகிற அளவுக்கு இருக்கிற உறுப்பினர்களைக் கொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை அறிந்தவர்கள் பயத்தின் காரணமாக சிறைவாசத்தை ஏற்கவேண்டும் என்ற காரணத்திற்காக அந்த அடிப்படையில் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டார்கள் என்று எண்ணுவது தவறானது ஆகும். 10 ஆண்டு காலம் திராவிட நாடு கேட்டால் சிறைவாசம் என்று சொல்லப்படுமானால், அதை புன்னகையோடு ஏற்றுக்கொண்டு அத்தகைய போராட்டத்தில் ஈடுபட ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரச்சனை அது அல்ல. கழகம் இருப்பதா இல்லையா என்கிற அடிப்படையில் அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. திராவிட நாடு கேட்டால் தண்டனை என்று சட்டம் வந்திருந்தால் அஞ்சுவதற்கு யாரும் இல்லை. ஆனால் வந்த சட்டம் திராவிட நாடு கேட்பவர்கள், பிரிவினை கேட்பவர்கள், தேர்தலில் ஈடுபடக்கூடாது, அவர்கள் உறுப்பினராக சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இடம் பெறக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்தில் பணியாற்றுகின்ற அந்தப் பகுதியை அழிக்ககூடிய அளவுக்கு கழகமே இயங்க முடியாத அளவுக்கு

அந்த திருத்தம் கொண்டுவரப்பட்ட சூட்சமத்தை நாங்கள் உணர்ந்து, எங்களுடைய கழகம் வாழவேண்டும் என்ற அளவிலே எங்களுடைய சட்ட திட்டங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. நான் இப்பொழுதும் சொல்லுவேன், அந்த உரிமை பாதிக்கப்படாமல் திராவிட நாடு வேண்டுமா, வேண்டாமா என்கிற கேள்வி எழுப்பப்படும் என்றால், இன்றைக்கும் திராவிட நாடு வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வோம். அந்த திருத்தம் மனமாற்றத்தை வலிந்து புகுத்துவதாக அமைகிறது என்ற மறுப்பு உரையைத்தான் பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் நாங்கள் எடுத்துவைத்து வந்திருக்கிறோம். அந்த அளவில் அது மேலும் தொடர்ந்து ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றம் ஆகிய இடங்களுக்கும் வியாபிக்கிறது. நான் உள்ளபடியே ஆட்சியாளரை கேட்க விரும்புகிறேன். இதை இன்னும் என்னென்ன இடங்களில் நீங்கள் விரிவாக்கப் போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. மனைவியைப் பார்த்து 'என்னிடத்திலே அன்பாய் இரு' என்று கேட்ட பிறகு, கட்டளை இடுகிற கணவரைப்போல, இந்த ஆட்சியினர் இந்திய ஆதிபத்திய உரிமைக்கும், ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக நீங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நல்ல பல செயல்கள் மூலம் மனமாற்றத்தை செய்யவேண்டி இருக்க, நல்ல வழிகளை விடுத்து வலிந்து மனமாற்றத்தை சட்டத்தின் மூலம் திணிப்பது முறையானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் அந்தந்த நகரம் அல்லது பேர் ஊர் பகுதிக்கு தேவையான திட்டங்களை, பிரச்சனைகளைக் கவனிக்கத்தான் இருக்கின்றன. சட்டங்களை ஆக்கவோ, சட்டங்களை வகுக்கவோ அவைகள் உரிமை பெறவில்லை. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி, பேரூராட்சி மன்றங்கள் சட்டங்களை ஆக்க அல்ல சட்டங்களை வகுக்க திறமையோ, சக்தியோ அதிகாரமோ பெற்றிராத இந்த மன்றங்களுக்கு அங்கத்தினர்களாக வருபவர்களுக்கு இந்த உறுதிமொழி தேவைதானா என்பதை யோசிக்கவேண்டும். சாலை வசதி, ஒளி விளக்கு வசதி, சுகதார வசதி போன்ற வசதிகளை கவனிக்கவேண்டிய இப்படிப்பட்ட மன்றங்களுக்கு இந்த உறுதி மொழி தேவை இல்லை என்பதை நான் மீண்டும் வற்புறுத்திக் கூறி, ஆகவே வலிந்து இதனை புகட்டவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

# ஆட்சிமொழி தமிழ்

**உரை : 39** **நாள் : 17.10.1964**

**கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதிக்கப்படுகிற இந்த மசோதாவைக் குறித்து நேற்றைய தினம் பேசிய நண்பர்களும், இன்றைய தினம் கருத்துக்களை தெரிவித்திருக்கிற நண்பர்களும் இறுதியிலேயே இந்த மசோதாவை வரவேற்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். நண்பர் நல்லசிவம் அவர்களைத் தவிர, இந்த மசோதாவை பொறுத்தவரையில் நான் நேற்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை நண்பர் கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசுகிற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். மசோதாவை நாங்கள் ஆட்சேபிக்கவில்லையென்று கூறுவதற்கு மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். என்று கூறுவதற்கும், இருக்கிற வேறுபாட்டை யாரும் மறந்துவிட முடியாது என்பதை நான் நம்புகிறேன். ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்கிற இந்த மசோதா சூழ்நிலைக்கு ஏற்றவகையில் மிக மிக அத்தியாவசியமான ஒரு மசோதா ஆகும். அந்தச் சூழ்நிலையை ஒட்டித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மசோதாவை ஆட்சேபிக்கவில்லை என்ற கருத்தினை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்திருக்கின்றது. ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் ஆங்கிலம் நீடிப்பதை ஒரு காலவரையறைக்குள் உள்படுத்தப்படவேண்டும் என்று கூறினார்கள். சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் பேசுகிற நேரத்தில் ஆங்கிலமே காலவரையறையின்றி என்றென்றும் நீடிக்கவேண்டுமென்று எடுத்துக்கூறினார்கள். வழங்குகின்ற வட்டார மொழிகளெல்லாம் பொது ஆட்சி மொழியாக ஆகின்ற பக்குவம் பெறுகிற வகையில் ஆங்கிலம் நீடித்தால் போதுமானது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து. வழங்குகிற வட்டார மொழிகள் ஆட்சிமொழியாக ஆவது

என்பது பற்றி இங்கே பேசிய ஆளுங்கட்சி நண்பர்கள் கருத்துத் தெரிவித்தபோது பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழியாக ஆவது என்பது சாத்தியமா, சமஸ்கிருதத்தை ஆட்சிமொழியாக ஆக்க முடியுமா என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் 14 மொழி என்று சொன்ன காரணத்தால், சமஸ்க்ருதமும் இருக்குமா என்கிறார்கள். ஏதாவது ஒரு மொழி தகுதியுடையதாக இருக்காது என்றால் அப்படி இருக்கும் ஒன்றிரண்டு மொழிகள் வேண்டுமானால் 'தகுதியில்லை' என்று கூறிவிட்டார்கள் என்றால் மற்ற மொழிகள் பற்றி சந்தேகமற்ற நிலைமை புரிந்து விடும். ஆகவே, இப்பொழுது எண்ணிக்கை பற்றிய பிரச்சனை எழவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ் தக்க தகுதி பெறுகின்ற வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறோம். அப்படிக் கூறுவதால் ஆங்கில மோகத்தால் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடவில்லை. தமிழ் காப்பாற்றப்படவேண்டும், தமிழ் இந்தியாவில் பொதுமொழி என்று தகுதி பெற்றாகவேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில்தான் குறிப்பிடுகிறோம். ஆங்கிலம் காக்கவைக்கப் படவேண்டும். என்பதற்கும் தமிழ் காக்கப்படவேண்டும். என்பதற்கு உள்ள வேறுபாட்டைப் புரிந்துக்கொள்ள வேண்டும். ஆகவேதான் சொல்லுகிறோம், தமிழ் ஆட்சி மொழி அந்தஸ்து பெறும் வரை ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று. ஆகவேதான் இந்த மசோதா ஆட்சேபணைக்குரியது அல்ல என்ற முறையில் இன்றையதினம் இதை நிறைவேற்றுகிறோம். மாறுபாடாக இந்த மசோதா இன்றையதினம் நிறைவேறக்கூடாது என்று எதிர்த்தோமானால், என்ன நேரிடும்? அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்கொள்ளும் பேராபத்து இருக்கிறது என்பதனை உணர்ந்தே இதை ஒத்துக்கொள்கிறோம். ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதை எதிர்த்தால் அதன் பின்விளைவுகளை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறோம். இதில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. பல்வேறு அரசியல் பிரச்சனைகள் ஆராயப்பட்டன. அவைகளுக்கெல்லாம் இந்த நேரத்தில் பதில் சொல்லுவது தேவையற்றது. இந்தியாவின் பொது மொழி ஆவது பற்றியும், அதற்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு பற்றியும் பேசுவதற்கு வேறு ஒரு தீர்மானம் சபைமுன் வர இருக்கிறது. அப்பொழுது இவைகளையெல்லாம் விளக்கமாக விவாதிக்க சந்தர்ப்பம்

இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இந்த மசோதாவை ஆதரித்த காங்கிரஸ் நண்பர்கள் இந்தி இந்தியாவின் பொதுமொழியாக ஆகவேண்டும். ஆகமுடியும். என்று நம்புகிறார்களோ? உள்ளபடியே காங்கிரஸில் இருக்கின்ற பெரியவர்கள், பெரும் பெரும் பதவிகளில் இருப்பவர்கள் இந்திதான் பொதுமொழி ஆகவேண்டும் என்ற கருத்தை மனசார ஆதரிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். மறைந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் தான் எழுதிய கட்டுரையில் 'இந்தி இந்தியாவின் பொதுமொழியாக தகுதி அற்றது' என்ற கருத்தினை தெளிவாக எழுதியிருக்கிறார்கள். திரு. காமராஜர் அவர்களை டெல்லியில் நிருபர்கள் பேட்டிக்கண்ட நேரத்தில் 9-4-1963-ம் தேதியில் ஒரு கேள்வியை நிருபர்கள் கிளப்பினார்கள். ''பல மாநில அமைச்சர்கள் மொழித் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள அடிக்கடி டெல்லிக்கு வந்து போகிறார்களே. நீங்கள் அப்படி வருவதில்லையே உள்ளபடியே உங்கள் மாநிலத்தில் மொழி பூசல்கள் எதுவும் கிடையாதா? என்று கேட்டார்கள். அப்பொழுதுகூட இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டு, நிருபர்களுக்குச் சொன்னார் "எங்களிடம் எந்த பூசலும் கிடையாது: எங்கள் பூசலெல்லாம் உங்களோடுதான் இந்தி வெறியர்களோடுதான்" என்ற கருத்துப்பட சொன்ன பதிலை பத்திரிக்கைகளில் படித்திருக்கிறோம். காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும், பல்வேறு பொறுப்பான பதவிகளில் இருந்தவருமான திரு, கே, சந்தானம் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் எடுத்துச் சொன்னதையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இணை ஆட்சி மொழியாகவோ, துணை ஆட்சி மொழியாகவோ ஆங்கிலத்திற்குச் சிறப்பான இடம் ஒதுக்கப் படவில்லையென்றால் நாட்டின் சில பாகங்களில் போராட்டம் துவங்கும். பத்து வருடங்களுக்குப் பிறகு ஆட்சி மொழி பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை. அது பற்றிய விதி நீக்கப்பட வேண்டும். இந்த மசோதா பற்றி மூன்று விஷயங்களை கவனத்தில் வைக்கவேண்டும்.

(1) இந்த மசோதா இந்தி பேசாத மக்களின் மனதில் பயத்தை உண்டாக்குகிறதா?

(2) நாட்டின் கலாசார தொழிலியல் வளர்ச்சியைப் பாதிக் கிறதா?

(3) பிரதமர் வாக்குறுதியை இது நிறைவேற்றுகிறதா?

இந்த மசோதா பிரதமர் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ஆங்கிலம், இணை மொழியாக 'இருக்கலாம்' என்று இருப்பதை 'இருக்கவேண்டும்' என்று மாற்றவேண்டும். இணை அந்தஸ்து தரப்படவேண்டும். இவற்றையெல்லாம் செய்யாவிடில் போராட்டம் துவங்கப் பெறும்.'' என்று 20-4-1963-ல் நடந்த காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சிக் கூட்டத்தில் கே. சந்தானம் குறிப்பிட் டுள்ளார்.

ஆகவே காங்கிரஸ்காரர்களும்கூட இந்தியை மனமார பொது மொழியாக வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் இந்தி வெறியர்களைத் தட்டிக்கேட்க அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இந்த மசோதாவில் இந்தி மறைமுகமாக திணிக்கப்படக்கூடிய ஆபத்தின் நிழல் படிந்திருக்கிறது. 1975 வரைக்கும் இந்த நீடிப்பு இருக்கும். 1975-க்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினர்களும் ராஜ்ய சபை உறுப்பினர்களும் சேர்ந்த ஒரு குழு "இந்தி வளர்ந்து விட்டதா" என்று ஆராயும், அவர்கள் ஆராய்ந்து இந்தி தகுதி பெற்று விட்டது என்று கருதினால் ஆங்கிலத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் இந்தி இந்தியாவின் பொது மொழியாக அமையும். அப்பொழுது தமிழர்கள் இரண்டாந்தர மக்களாக ஆகி விடுவார்கள்.

இந்தி பாஷைக்கு 13-ஆம் நூற்றாண்டில்தான் முதல் முதல் கலை நூல் உற்பத்தியாகியது என்று கூறினார்கள். அப்பொழுதுதான் அதன் ஆதிகவி தோன்றினார். ஆனால் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே தமிழ், தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைப் பெற்றிருக்கிற மொழியாக விளங்குகிறது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வளம் பெற்ற மொழியாக இருந்தால் அது மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று ஒரு இலக்கணத்தைப் பெறக்கூடிய தகுதி யுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக்கூற வேண்டிய அவசியம் இல்லை. இந்தியாவின் பொதுமொழியாக ஆகத்தக்க தகுதி பதிமூன்றாம்-நூற்றாண்டிலே இலக்கிய நூலைப் பெற்ற இந்திக்குத்

தான் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவிற்கு பொதுமொழி தேவை. ஆனால் இந்திதான் அந்த இடத்தை நிரப்ப வேண்டுமென்ற உரிமைப் பேச்சு சீர்தூக்கிப் பார்க்க படவேண்டும். கனடா நாட்டிலே சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கே பிரஞ்சு பாஷையும் ஆங்கில பாஷையும் சம அந்தஸ்துடன் இருக்கின்றன. அதேபோல் தென் ஆப்பிரிக்காவில் சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கேயும் இரண்டு மொழிகள் இருக்கின்றன ஆங்கிலமும் டச்சு மொழியும். போயர்கள் என்பவர்கள் டச்சு மொழியை கையாளுகிறார்கள். ஸ்விட்சர்லாந்தில் 1874-ம் சமஷ்டி சட்டத்தின்படி ஜர்மானிய மொழி, பிரஞ்சு மொழி, இத்தாலி மொழி ஆக மூன்று மொழிகளும் சமஷ்டி அரசியலில் இடம் பெற்றிருக்கின்றன. இத்தனைக்கும் ஜெர்மானிய மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 71 பேர்கள். ஃபிரெஞ்சு மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 23 பேர்கள். இத்தாலிய மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு ஐந்து அல்லது ஆறு பேர்கள். இப்படியிருந்தும்கூட, இந்த மூன்று மொழிகளும் பிரதானமொழிகளாக ஆக்கப்பட்டு, சமஷ்டி அரசியலினுடைய சட்ட திட்டங்களெல்லாம் இந்த மூன்று மொழிகளிலும் உருவாக்கப்படும் நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, ஒருமைப்பாட்டுக்காகத்தான் ஒரு பொது மொழி தேவை, அந்த பொதுமொழி இந்தியாக இருக்கவேண்டும் என்று கூறும் வாத மும் இப்படிப்பட்ட உதாரணங்களால் உடைப்பட்டுப் போகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் பேசிய டாக்டர் நடராஜன் அவர்கள் 'வேற்று மொழியினுடைய கலப்பால் தமிழ் அழியாது' என்று குறிப்பிட்டார்கள். வேற்று மொழிக்கலப்பால் தமிழ் வளம் பெறும் என்றும் குறிப்பிட்டார்கள். அது வாதத்திற்குரிய பிரச்சனை, வாதத்திற்காக 'வளம் பெறும்' என்று ஒத்துக்கொண்டாலும் 'கலப்பு' என்பதற்கும், 'ஆதிக்க உணர்வு' என்பதற்கும் இருக்கும் வித்தியாசத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆதிக்கம் செலுத்த வருகின்ற இந்தி மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள், உத்தரப் பிரதேசக்காரர்கள், பீகாரைச் சேர்ந்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற மொழி

தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்துமானால், அப்படி ஆதிக்கம் செலுத்தும் நேரத்தில், தமிழ்க் குடிமக்கள் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான், மொழியோடு மொழி கலப்பதை அல்ல, ஒரு மொழி இன்னொரு மொழியின்மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் வெறுக்கிறோம்.

இந்த மசோதா நிறைவேறும் நேரத்தில், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வர இருக்கும் ஆபத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் மனத்திலே சிந்தித்துப் பார்க்கவேண்டும், ஆரம்பத்தில், அன்னியர்கள் வெளியேற்றப்பட்டபோது, அவர்கள் மீது இருந்த வெறுப்புக் காரணமாக அவசர அவசரமாகக் கூடி, இந்திதான் நாட்டின் பொதுமொழியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்தை உடனடியாக துரத்த வேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்டு, அந்த வகையிலேயே முடிவு செய்யப்பட்டது. ஆகவே, அப்படி மிக மிக அவசரமாக, அரை வேக்காடுத் தன்மையில் உருவான அந்த மொழிப்பிரச்சனையை இன்றைய தினம் வைத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே, அந்த போலி அஸ்திவாரத்தின் மீது மேலும் மேலும் கட்டடத்தை எழுப்பிக்கொண்டு செல்வது நல்லதல்ல என்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று சொல்வது ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாது நோயுற்றிருக்கும் நேரத்தில் புட்டிப் பால் புகட்டுவதை அனுமதிப்பதாகும். ஆகவே, ஆங்கிலத்தை நீடிப்பது கூடாது என்று சொல்ல முடியாது, ஆனால் நண்பர்கள் சிலர், 'ஆங்கிலம் என்கிற புட்டிப்பால் வேண்டாம், இந்தி என்கிற கள்ளிப்பால் போதும்' என்று கூறுவதை ஏற்றுக்கொண்டால் குழந்தையும் சாகும், குழந்தை செத்ததைக் கண்டு தாயும் சாவாள். இந்தப் புட்டிபால்கூட அந்தத் தாய் நோய்ப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிற வரையில் தான். தாயை நோய்ப் படுக்கையிலிருந்து எழவைக்கின்ற நல்ல மருத்துவம் செய்ய, ஏழெட்டு ஆண்டுகளாகத் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு, எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி களெல்லாம் முடங்கிக் கிடக்கின்றன.

திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, 'நாங்கள் பிரதான எதிர்க்கட்சியாக இருந்தபோது தமிழ் ஆட்சிமொழி

ஆயிற்று, திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்கட்சியாக ஆகி அந்த முயற்சி பின்னே போகிறது' என்று குறிப்பிட்டார்கள். ஒரு வேளை அவர்கள் எதிர்கட்சியாக இருந்தபோது கொண்டுவந்த கைராசிதானோ என்னவோ அது இன்றையதினம் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு) இனி மேலாவது இந்த ஆட்சியிலுள்ள அமைச்சர் பெருமக்கள் தமிழ் மொழிக்கு உரிய இடத்தை அளிக்கவேண்டும். சட்டமன்றத்தில் கேள்வி நேரத்திலிருந்த சட்டங்களை உருவாக்குவது வரையில் தமிழ் மொழிக்கு இங்கே உரிய இடத்தைத் தரவேண்டும் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அழுத்தமான கருத்தை வலியுறுத்தி, இந்த மசோதா, சூழ்நிலை காரணமாக, ஆட்சேபிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

## மாநகராட்சி சட்டத்திருத்த மசோதா

**உரை : 40** **நாள் : 04.08.1965**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் அவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி சட்ட திருத்த மசோதா என்கிற பெயரால் வந்துள்ள இந்த மசோதாவின் மீது, இதைப் பொறுக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்று தரப்பட்டுள்ள திருத்தத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துக்காட்டிய தைப் போல, பொறுக்குக் குழுவுக்கு இதை விடவேண்டுமென்று சொல்லுகின்ற காரணத்தினாலேயே இந்த மசோதாவினுடைய தத்துவத்தை நாங்கள் ஒத்துக்கொண்டதாக அல்ல. இந்த மசோ தாவின் மூலம் இழைக்கப்படுகிற கொடுமைகளைப் பெரும் அளவுக்கு தவிர்க்க பொறுக்குக் குழு பயன்படும், அதில் எங்கள் யோசனைகளை எடுத்துச்சொல்லலாம் என்ற சீரிய நோக்கத்தில் தான் இதை பொறுக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்று உண்மையிலேயே இங்கே கருத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. அதனை நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், ஆளும் கட்சியிலே உள்ளவர்களும் நிச்சயம் ஆதரித்து, பொறுக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்ற இந்த எதிர்க்கட்சித் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஒருவேளை என்னுடைய நம்பிக்கை பாழ்பட்டுப் போனாலும் போய்விடலாம், ஆனால் ஜனநாயகம் பாழ்பட்டு விடக்கூடாது என்பதிலே முதல் அமைச்சருக்குக் கொஞ்ச நஞ்சம் உள்ளத்தில் நம்பிக்கை ஒட்டிக்கொண்டிருக்குமானால், அதைச் செய்யவேண்டும்: அதைச் செய்வார்கள் என்று திடமாக நம்புகிறேன்.

மாநகராட்சி மன்றச் சட்டத்திற்கு திருத்த மசோதா வருகிறது என்று நான் கேள்விப்பட்டவுடன், ஒருவேளை ஆங்காங்கு இருக்கிற சர்க்கிள் கமிட்டிக்கு அதிகாரங்கள் முறைப்படுத்தி வழங்கப்பட வேண்டுமென்ற நிலை இல்லாமல் இருக்கிறதே அதற்காகத்தான் திருத்த மசோதா வருகிறதோ என்று ஆவலோடு புரட்டிப்பார்த்தால், பயங்கரமான நிலைமை, ஜனநாயகக் குழந்தையை குத்திக்கொல்ல வாள் தீட்டப்படுகிறது என்பதோடு மேலும் கூர்ஏற்ற இப்போது சட்ட மன்றத்தின் ஒப்புதல் பெற இந்த மசோதா இங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் உணர்கிறேன். காரணம் இல்லாமல் கைது செய்யப்படுகிற முறையில் இன்றைய தினம் அமல் செய்யப்படுகிற பாதுகாப்புச் சட்டத்தைவிட இது கொடுமையான மசோதா என்று நான் கூற விரும்புகிறேன். இந்த மசோதா இவ்வளவு அவசரமாக இங்கு வரவேண்டிய காரணம் என்ன? 'நாங்கள் விரும்புகிறோம், இருக்கட்டும்' என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். இதைக் கொண்டுவரும்போது மாநகராட்சியினர் இதை இதைச் செயல்படுத்தவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். 1957-ம் ஆண்டு முதல் இந்த மன்றத்தில் இருக்கிறேன் என்ற நினைவில் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் 'தேசியக் கொடிகளைக் கொளுத்துவேன்.' என்று அறிவித்த போது 'தேசியச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம்' என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. தேசீய சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற உணர்ச்சி ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற அமைச்சர்களுக்கும் எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுக்கும் நிச்சயம் உண்டு. அந்த உணர்ச்சி எப்போதும் இருந்தும் கூட தேசீயச் சின்னங்களைப் பாதுகாக்க சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் 1947-ம் ஆண்டு முதல் ஏற்படாமல் இருந்து, பெரியார் தேசீயக் கொடிகளைக் கொளுத்தப் போகிறேன் என்று கூறிய பிறகு, அந்த சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று ஒரு மசோதா தேவைப்பட்டு இந்த மாமன்றத்தால் அது சட்டம் ஆக்கப்பட்டது, ஆகவே, ஒரு அவசர நிலை இருந்து அதை நாங்கள் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்று அமைச்சர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட அவசரமான நிலைமை ஏற்படும் அளவுக்கு இன்றையதினம் நிர்வாகத்தில் இருக்கிற மாநகராட்சி மன்றத்தினர், இத்தனை அவசரமாக நடவடிக்கை எடுக்கும்

அளவுக்கு, நடந்து கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை. ஒன்றே ஒன்றைச் சுட்டிக்காட்டலாம், இந்தி எதிர்ப்பு தீர்மானம் கொடுத்தார்கள் என்று. இந்தத் தீர்மானத்தினுடைய வாசகத்திலே கூட, ஒரு இம்மி அளவாவது அரசாங்கத்தைக் கண்டிக்கிற எந்த வாசகமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கிற தீர்மானம்தான் இது. உயிர் நீத்தவர்களில் போலீஸ் அதிகாரிகளும் இருக்கிறார்கள். உயிர் நீத்தவர்களில் கிளர்ச்சியிலே ஈடுபடாத அப்பாவிகளும் இருக்கிறார்கள். உயிர் நீத்தவர்களில் கிளர்ச்சிக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லாத முதியோர்களும் இருக்கிறார்கள். உயிர் நீத்தவர்களில் கிளர்ச்சிக்கும், தங்களுக்கும் தொடர்பு இல்லாத சிறு, சிறு குழந்தைகளும் இருக்கிறார்கள். அந்த குழந்தைகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும், மற்ற தியாகிகளுக்கும் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் போடப்பட்டது இந்தத் தீர்மானம். அனுதாபத்தைத் தெரிவிக்கக் கூடிய தீர்மானத்தில், அதைத்தொடர்ந்து இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் பரவக்கூடாது என்பதை மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக்கூடிய இந்தத் தீர்மானத்தில் கண்டனமோ, மறுப்போ, ஆட்சேபக் குறிப்போ எதுவுமே இல்லை. அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது. அந்தத் தீர்மானம் ஒன்றைத்தான் இந்த அரசினர் இப்பொழுது கொண்டுவந்திருக்கிற மசோதாவிற்குக் காரணமாக சுட்டிக்காட்ட முடியும் என்று நான் கருதுகிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் 1959-ம் ஆண்டிலிருந்து இதுவரையிலே நடைபெற்றுவருகிற மாநகராட்சி மன்ற நிர்வாகத்தில் கட்சிசார்பற்று நடைபெறுகிற காரியங்களையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்திருப்பார் என்று நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், முன்னாள் முதல்அமைச்சராக இருந்தவருமான உயர்திருவாளர் காமராஜ் அவர்கள் உருவச்சிலையை மறைந்த மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை வரவழைத்து அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கச்செய்த பெருமை

திராவிட முன்னேற்றக் கழக மாநகராட்சி நிர்வாகத்திற்கு உண்டு. அவருடைய குருநாதர் திரு. சத்தியமூர்த்தி அவர்களுடைய உருவச்சிலையை பண்டித நேரு அவர்களை வரவழைத்து மாநகராட்சி கட்டிடத்தில் திறந்து வைத்த பெருமை இந்த மாநகராட்சி நிர்வாகத்திற்கு உண்டு. தொழிலாளர் தலைவர், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களுடைய திருவுருவப் படத்தையும், திரு. சுப்பிரமணிய சிவா அவர்களுடைய திருவுருவப் படத்தையும் திறந்து வைத்த பெருமை இந்த மாநகராட்சி மன்றத்திற்கு உண்டு. கட்சிப் பற்றின்றி நடந்துகாட்டுகின்ற பெருமை திராவிட முன்னேற்றக் கழக மாநகராட்சி நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு நிச்சயம் உண்டு. அதே மன்றத்தில் எங்களுடைய தலைவர் திரு. அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கவேண்டும் என்று கூறிய நேரத்தில் எதிர்ப்பு புயலெனக் கிளம்பியது உண்டு. "அவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது" என்றெல்லாம் கேட்கப் பட்டது உண்டு. ஆகவே, அரசியல் பெருந்தன்மையும், அரசியல் நாகரிகமும், கட்சி சார்பற்ற முறையில் மாநகராட்சி மன்றத்தை நடத்திச் செல்லவேண்டும் என்ற நோக்கமும் தங்களுக்கு இருக்கிறது என்பதை 1959-ம் ஆண்டு முதல் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி மன்றத்தில் செயலிலே காட்டி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மன்றத்தில் இன்றையதினம் நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்திருக்கிற நேரத்தில், இந்த மன்றத்தின் சார்பிலே இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவருவது பற்றி பொது மக்கள், அரசியல்வாதிகள், நடு நிலையிலே இருந்து ஆராய்பவர்கள் அத்தனை பேர்களுமே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைத் தவறாகக் கருதுவதற்கு இடம் அளிக்கும் என்று நான் கருதுகிறேன். ஏன் இந்த மன்றத்தில் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக நிறைவேற்றுவதற்குத் துணிந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு என்ன ஆயிற்றே என்ன நெருக்கடியோ, புரியவில்லை. 'என்னையே நம்பி ஏற்றேன். இந்தப் பழியை' என்று சொல்வது போல், முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பழியை ஏற்றுக்கொள்வதற்கு ஏன் முன்வந்திருக்கிறார் என்று தெரியவில்லை. இந்த மாமன்றம் உள்ள அளவுக்கு, தமிழ் உள்ள அளவுக்கு, தமிழ்நாடு உள்ள அளவுக்கு முதல் அமைச்சர் அவர்களுடைய பெயர் தமிழகத்தினுடைய

சரித்திரத்தில் இடம் பெறும். அப்படி இடம் பெறுகிற நேரத்தில் இங்கு அவர்கள் காலத்தில் மாட்டப்பட்ட திருவள்ளுவர் படத்திற்கு அடியில் பொறிக்கப்பட்ட திருக்குறள் இடம் பெற்றிருக்கிற இந்த மாமன்றத்தில் ஜனநாயக கொலை செய்யப்படுவதற்குரிய அளவுக்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற இழிவும், பழியும் ஏன் முதல் அமைச்சர் அவர்களுடைய வரலாற்றில் இடம் பெற வேண்டும்? முதியவரும், பெரிய அனுபவ சாலியும், விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களில் வயதானவராக இருப்பவருமான நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்த இழுக்கு நேரிடக்கூடாது என்று அவர்களிடம் எங்களுக்கு உள்ள தனிப்பட்ட அக்கறையின் காரணமாக, 'இதை விட்டுவிடுங்கள்' என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு உரிமையும் உண்டு அவர்களுக்கு, மாநகராட்சி மன்றத்தில் அவர்கள் டெப்யூட் மேயராகப் பதவி வகித்தவர் தான், வாழ்ந்த அந்த இடத்தில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சர்வாதிகாரத்தை ஏன் நுழையவிடவேண்டும்? தான் வாழ்ந்த இடம், இருந்த இடம், புகுந்த இடம் என்று எண்ணிப்பார்த்தாவது, தான் ஒரு காலத்தில் டெப்யூடி மேயராயக இருந்த இடத்தில் இப்போர்ப்பட்ட சர்வாதிகாரச் சாயலைப் படரவிடுவது சரிதானா என்பதை நம்முடைய முதல் அமைச்சர் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவருவதைவிட ஒரேடியாக மாநகராட்சி மன்றமே தேவையில்லை, மக்கள் வாக்களித்து கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுக்கத் தேவையில்லை. தாங்களே பார்த்து இவர்கள்தான் கவுன்சிலர்கள் என்று நியமிக்கப்படுகிறவர்கள்தான் கவுன்சிலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த யாரும் கவுன்சிலராக வரக் கூடாது மாநில ஆட்சியை எந்தக்கட்சி கைப்பற்றியிருக்கிறதோ அந்தக்கட்சி அத்தனை கவுன்சிலர்களையும் அந்தக் கட்சியின் சார்பிலேயே நியமிக்கும் என்ற முறையிலே ஒரு மசோதாவைக் கொண்டுவந்துவிட்டால், அது இதைவிட பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இங்கு பேசிய என் அருமை நண்பர் திரு. மாதா கவுடர் அவர்கள் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குப் பதில் அளிக்கும்

வகையில் 'ஜனநாயகம் நாங்கள் அளித்தது அல்லவா? ஜனநாயகம் இருப்பதனால்தான் நீங்கள் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள், இல்லாவிட்டால் சர்வாதிகாரியாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருப்பார்' என்று கூறினார். அதிலே இருக்கிற ஆபத்து ஒன்றை அவர் மறந்துவிட்டார். சர்வாதிகாரியாக முதல் அமைச்சர் அவர்கள் எத்தனை நாட்களுக்கு உட்கார்ந்திருக்க முடியும்? யார் எப்படிக் காலைத் தட்டிவிடுகிறார்களோ? அல்ஜீரியா, எகிப்து போன்ற நாடுகளில் சர்வாதிகாரம் எப்படி எப்படி செயல்படுகிறது என்பது நமக்குத் தெரிகிறது. மற்ற பல நாடுகளுக்கும் தெரிகிறது. ஜனநாயகம் நாம் அத்தனை பேர்களும் வலியுறுத்திக்கொண்டிருக்கிற கொள்கை, வேறு நாடுகள் பார்த்து அதைப் பாராட்டுகிற கொள்கை. வெளிநாடுகளுக்குச் செல்லும்பொழுது, நம் தலைவர்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, இந்திய ஜனநாயகத்தைப் பாராட்டத் தவறியதில்லை. ஜனநாயகத்திற்கு இப்படிப்பட்ட களங்களையும், இப்படிப்பட்ட மாசு மருக்களையும் தேடுகிற காலத்தில், அதை எடுத்துக்காட்டுவதற்கும், கண்டிப்பதற்கும், கைவிடுங்கள் என்று வேண்டுகோள் விடுப்பதற்கும் எதிர்க்கட்சிக்கு நிச்சயம் பரிபூரணமான உரிமை இருக்கிறது.

"நம்மிடையே ஏதாவது தவறு இருந்தால், தவறு செய்கிறோம் என்றால்தான் சட்டம் தேவை" என்று குறிப்பிட்டு இதே மன்றத்தில் சில நாட்களுக்கு முன்பு திரு. மாதவன் அவர்கள் ஒரு மசோதா கொண்டுவந்த நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். இன்றையதினம் இந்த மசோதா கொண்டுவரப்படும் பொழுது நண்பர் திரு. மாதா கவுடர் அவர்கள் 'நாம் தவறு செய்யவில்லை என்றால் சட்டம் வந்தால் என்ன? சட்டம் வரலாம், நாம் தவறு செய்யவில்லை என்றால் எதற்காக கவலைப்பட வேண்டும்? என்று பேசினார்கள். அன்றைய தினம் திரு. மாதவன் அவர்கள் 'சட்டமன்ற உறுப்பினர்கள் கணக்குக் காட்டவேண்டும்' என்று மசோதா கொண்டு வந்த நேரத்தில், 'நாம் தவறு செய்யாமல் இருந்தால் சட்டம் எதற்காக' என்று கேட்டார்கள் ஆளும் கட்சியினர்கள் 'தவறு செய்யாமல் இருந்தால் ஏன் சட்டத்தைப்பற்றி கவலைப்படவேண்டும், தவறைத் தடுப்பதற்கு சட்டம் இருந்தால் என்ன' என்று இன்றையதினம் அவர்கள்

கேட்கிறார்கள். இது விசித்திரமான ஜனநாயகம் என்றுதான் நான் நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஜனநாயகம், சர்வாதிகாரம் என்கின்ற ஆராய்ச்சியில் இப்பொழுது நாம் இறங்கத் தேவையில்லை. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா அவசரத்தேவைதானா என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்கள், முக்கியமாக முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, இந்த மசோதாவை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அல்லது இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்புகிற எதிர்க் கட்சியினுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம்.

# கல்லூரிகளில் தமிழ் பாடமொழி

**உரை : 41** **நாள் : 01.02.1966**

**கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நண்பர் திரு. மதியழகன் தந்திருக்கிற திருத்தத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன். தமிழைப் பாட மொழியாகக் கல்லூரிகளிலே ஆக்கவேண்டும் என்பதைக் கொள்கை ரீதியிலே ஒத்துக்கொண்டிருக்கிற நாம், பல்கலைக் கழகத்தில் அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு இந்த முன்னுரையிலே குறிப்பினைச் சேர்க்க வேண்டும் என்பதைத்தான் கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்களுடைய திருத்தம் இங்கே சுட்டிக் காட்டுகிறதே தவிர, வேறு புரட்சிகரமான ஏதோ ஒரு மாறுதலைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி, அதற்கு எப்படி இணங்குவது என்று திக்குமுக்காட வைக்கிற நிலைமையை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பன்மொழிப் புலவர் ஒருவர், தமிழ்க் கடல் என்றெல்லாம் புகழத் தக்க திரு. தெ.பொ.மீ. அமைகிறார்கள் என்று கேட்டு தமிழகம் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறது என்று கூறுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால், நல்ல தமிழ் ஆய்ந்த தமிழ் சான்றோர் ஒருவரைத் துணை வேந்தராகப் பெற்றிருக்கிற அந்தப் பல்கலைக்கழகம் தமிழைப் பாட மொழியாக ஆக்குகிற திட்டத்தைத் தொடர்ந்து தீவிரப்படுத்துமா என்கிற ஐயப்பாடு இந்த மகிழ்ச்சிக்கிடையே தமிழக மக்களுக்கு ஏற்படாமல் இல்லை, நான் கடந்த சில கிழமைகளுக்கு முன் துணை வேந்தராக அமைகிற பன்மொழிப் புலவர்

திரு. தெ.பொ.மீ. அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சினை ஒரு ஏட்டில் படிக்க நேர்ந்தது. அதிலே அவர் குறிப்பிட்டிருக் கிறார். 'தமிழ் பல்கலைக் கழகத்தின் பாட மொழியாக ஆக வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும்' என்று குறிப்பிட்டு விட்டு, 'அதுதான் என்னுடைய கொள்கை' என்றும் வற்புறுத்திக் கூறிவிட்டு, அதே நேரத்திலே இன்னொன்றையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். தமிழ் பாடமொழியாக ஆகவேண்டுமென்பது என் கொள்கையே தவிர, நான் கூறுகிற கருத்தே தவிர, அதுதான் பல்கலைக் கழகத்தின் கொள்கை என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது' என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட சங்கடம் மதிப்பிற்குரிய துணை வேந்தர் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தச் சங்கடம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? அவர் மனமார, நெஞ்சார, தமிழ்தான் பல்கலைக்கழகத்தின் பாடமொழியாக ஆகவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அவர் அது தனிப்பட்ட தன் கொள்கையே தவிர இந்த பல்கலைக் கழகத்தின் முடிவாகவோ, கொள்கையாகவோ இருக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது என்று சற்று நழுவிவிடுகிறார். அப்படி அழுத்தமாகப் பேச முடியாததற்குக் காரணம் அது முன்னுரையில் சேர்க்கப்படவில்லை என்பதுதான். இந்தப் பல்கலைக்கழகம் தமிழைப் பாடமொழியாக ஆக்குகிற முயற்சியில் படிப்படியாக, தீவிரமாக இல்லாவிட்டாலும் படிப்படியாக செயல்படும் என்று முன்னுரையில் கனம் அங்கத்தினர் மதியழகன் கொண்டு வந்திருக்கிற திருத்தம் சேர்க்கப்பட்டிருந்தால் பன்மொழிப் புலவர் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பார்கள். இந்தக் கொள்கை தான் பல்கலைக்கழகத்தின்கொள்கை என்று கூறியிருக்க முடியும், இரண்டையும் தனித்தனியாகப் பிரித்து, தன் கொள்கை இது, இதுதான் பல்கலைக்கழகத்தின் கொள்கை என்று சொல்லத் தயாராக இல்லை என்று நழுவிக்கொள்வதற்கான நிலைமை

ஏற்பட்டதற்குக் காரணமே முன்னுரையில் நண்பர் மதியழகன் கொண்டுவந்திருக்கிற திருத்தம் ஏற்கனவே அந்தச் சட்டத்தில் இடம் பெறாததுதான். ஆகவே இதைச் சேர்ப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கவில்லை - விளக்கவும் முடியாது என்று நான் கருதுகிறேன். அப்படி பயன்படும்படியாக ஒன்றும் இல்லை. ஆட்சி மொழிபற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இணைக்க வேண்டுமென்று சொல்லுவதில் உள்ள சங்கடங்களை எடுத்துக் காட்டியது போல எடுத்துக்காட்டும் அளவுக்கு எந்தச் சங்கடமும் இல்லை என்று கருதுகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்களும் அப்படி ஏதாவது இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. இனியும் தெரிவிப்பார் என்று நினைக்கவில்லை. எந்தச் சங்கடமும் இல்லாமல் தமிழகத்தில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துக்கொள்ளும், தமிழக மக்கள் வெகுவாக எதிர்பார்க்கும், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. போன்ற பெரியவர்கள் உள்ளத்தில் உறங்கிக்கொண்டிருக்கிற இத்தகைய கொள்கையை முன்னுரையில் சேர்த்து விடுவதால் எந்தத் தவறும் ஏற்பட்டு விடாது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து, எதிர்க்கட்சியைச் சேர்ந்த மதியழகன் கொண்டு வந்தார் என்பதால் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று எண்ணியாலும், இதை கனம் முதல் அமைச்சர் அவர்களேகூடக் கொண்டு வரலாம்; ஆகவே கனம் முதல் அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து இதை ஏற்றுக்கொண்டு, புதிய சகாப்தத்தை தொடங்கி வைத்தார் என்ற நற்பெயரைத் தட்டிக்கொண்டுபோக வேண்டுமென்று கூறி அமைகிறேன். வணக்கம்.



## மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு மசோதா

**உரை : 42** **நாள் : 28.06.1967**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே "1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளவாறு நான்காவது தேசிய வளர்ச்சித் திட்ட வேலைகளைச் செயல்படுத்துவதற்கான கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டும் பொருட்டு சென்னை மாநகருக்குள்ளும், நகராட்சிக்குள்ளும் மட்டும் ஓடுகிற பஸ்கள் தவிர்த்து ஏனைய பஸ்களுக்கும் கார்களுக்கும் கூடுதல் வரி விதிக்க வகை செய்வதற்காக இச்சட்ட வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது.

பஸ்கள் செல்லும் அன்றாட வழித்தட நீளத்தையொட்டி வரி வீதங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. தற்போது இருக்கை ஒன்றுக்கு காலாண்டுக்கு விதிக்கப்படும் வரி வீதங்கள் வருமாறு.

210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ரூ. 35, 210 கிலோ மீட்டருக்கு மேல் 270 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ரூ. 40, 270 கிலோ மீட்டருக்கு மேல் ரூ. 45. 210 கிலோ மீட்டருக்கு குறைவாக ஓடும் பஸ்களின் எண்ணிக்கை அதிலும் குறிப்பாக நகருக்கு வெளியேயுள்ள பகுதிகளில் இவ்வாறு ஓடும் பஸ்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பஸ்களில் பெரும்பாலானவை ஏற்கனவே ஒரு நாளுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேல் ஓடிக்கொண்டிருக் கின்றன.

இதனைக் கருத்தில்கொண்டு கூடுதல் நிதி வசதி திரட்ட வேண்டியதின் பொருட்டு, பின்வருமாறு இவ்வீதங்களை

மாற்றியமைக்க நாம் முடிவுசெய்துள்ளோம். பஸ்கள் செல்லும் அன்றாட வழித்தட நீளம் நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டரோ அதற்குக் குறைவாகவோ இருப்பின் ரூ. 50, நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேற்படி ரூ. 55, நகருக்குள் மட்டும் ஓடும் பஸ் போக்குவரத்து, அவ்வளவாக ஆதாயம் தரக்கூடிய தில்லையாதலால், அவற்றிற்கான வரிவீதங்களில் மாறுதல் ஏதும் இராது, தனியார் துறை பஸ் உரிமையாளர்கள் செய்துகொண்ட முறையீட்டைக் கருத்தில் கொண்டு அவர்கள் செய்துள்ள முதலீட்டிற்கு பயன் பெறத்தக்கவாறு நாளொன்றுக்கு ஓடக்கூடிய உயர்மட்ட அளவை 320 கிலோ மீட்டரிலிருந்து 400 கிலோ மீட்டர்களாக நாம் உயர்த்தியுள்ளோம். இதனால் எல்லாப் போக்குவரத்து நிறுவனங்களின் ஆதாய வாய்ப்பினைப் பெருமளவில் உயர்த்தி கூடுதல் வரி விதிப்பு பொறுப்பினை ஏற்பதில் இடர் அதிகமிராதிருக்க வழி கோலப்படுகிறது. மேலும் 700 கிலோகிராமும் அதற்குக் குறைவாகவும் தன் எடை (அனலேடன் வெயிட்) கொண்ட மோட்டார் கார்களுக்கான காலாண்டு வரியை ரூ. 21-லிருந்து ரூ. 30 ஆகவும் 700 கிலோகிராமுக்கு மேற்பட்டு 1,500 கிலோகிராமுக்கு மேற்படாத தன் எடை கொண்ட கார்களுக்குக் காலாண்டு வரியை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆகவும் 1,500 கிலோகிராமுக்கு மேற்பட்ட தன் எடையுள்ள கார்களுக்கான வரி வீதங்களை இதையொத்த முறையில் உயர்த்துவது எனவும் முடிவு செய்துள்ளோம். மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள். முச்சக்கர வண்டிகள் மீதான வரி வீதங்களில் உயர்வு ஏதும் இராது.

குறுகிய கால உரிமங்கள் (ஷார்ட் டேர்ம் லைசென்ஸ்) குறித்தும் மேற்சொன்ன அடிப்படையில் வரி வீதங்கள் உயர்த்தப்படும்.

இவ்வரி உயர்வுகள் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்கு வரும். எந்த வண்டிகள் குறித்து 1967 ஜூன் 30-ம் தேதிக்குப் பிறகும் வரி வீத உயர்வு குறித்த அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்படும் முன்னரும் செலுத்தப்படுகின்றதோ அந்த வண்டிகள் குறித்து கூடுதல் வரியை வசூலிப்பதற்காகவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதா குறித்து பல கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் இடையிலே குறுக்கிட்டுக் கூறியவாறு, பேருந்து வண்டிகளை நாட்டுடைமையாக்குவதற்காக வேண்டிய விஷயங்கள் இங்கே பேசப்பட்டன. என்றாலும், நண்பர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வினாயகம் அவர்கள் "மெள்ள, மெள்ளத்தான் நீங்கள் நடக்க வேண்டும்." என்று எடுத்துச் சொன்னார்கள். மெள்ள மெள்ள நடக்கிறோம் என்பதற்கு அடையாளமாகத்தான், திடீரென்று பஸ் எல்லாம் நாட்டு உடைமையாக்கப்பட்டுவிட்டன என்ற அறிவிப்பைத் தராமல், முதல் கட்டமாக 75 மைல்களுக்கு, அதற்கு மேலும் உள்ள பஸ்களும் தேசிய மயமாக்கப்படும் என்ற திட்டத்தை மெள்ள, மெள்ள படிப்படியாக அரசு மேற்கொண்டி ருக்கிறது. என்பதை இந்த மன்றத்தில் இருப்பவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவாதிக்கப்படுகின்ற இந்த மசோதா, பஸ்களில் உள்ள இடம் ஒன்றுக்கு இதுவரையிலும் தந்த வரி விகிதத்திலேயிருந்து இனிமேல் எவ்வளவு தர வேண்டுமென்பதை நிர்ணயித்து அனுமதி பெறுவதற்காக இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கப் பட்டிருக்கிறது. 1962 ஜூலைத் திங்கள் 28-ம் நாள் இந்த மன்றத்திலே பேருந்து வண்டிகளுக்கு வரி உயர்வை அதிகமாக்குகின்ற மசோதா கொண்டுவரப்பட்டது, அன்றைய முதலமைச்சர் மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் அந்த மசோதாவை இந்த மன்றத்தின் முன்னால் வைத்தார்கள். வியப்புக்குரிய வகையிலே இந்த மன்றத்திலே இருந்த அத்தனை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் அந்த மசோதாவை எதிர்த்தார்கள். "இது பஸ் முதலாளிகளைத் தொல்லைப்படுத்த கூடியது-அவர்களை வேதனைப்படுத்தக் கூடிய வரி உயர்வு-ஆகாது" என்று அத்தனை பேரும் பேசினார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் முதலமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்தார்கள். அதனை நான் சுட்டிக்காட்டுவது நல்லது என்று கருது கிறேன். "நான் போடுகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொருள் தேவையாக இருக்கிறது, அதில் ஏற்படுகின்ற

பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகத்தான். லாரி சொந்தக்காரர்கள். பஸ் சொந்தக்காரர்கள், அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். என்ற நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது'' என்று முன்னால் முதலமைச்சர் அவர்கள் இநத் மன்றத்திலேயே எடுத்து சொன்னார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் மேலும் மேலும் தங்களுடைய கொள்கைகளை வலியுறுத்திச் சொன்னார்கள். "1953-ல் வரி அதிகப்படுத்தபட்டது. 1954-லிருந்து 9 ஆண்டுகளாக அதிகப் படுத்தவில்லை. சாலைகள் நன்கு அபிவிருத்தியடைந்தி ருக்கிறது. வரி அதிகப்பட்டதால், சிறிய அளவில் தொழில் நடத்துபவர்களால் இதனைத் தாங்க முடியுமா, கொடுக்க முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு, லாபத்தில் ஒரு சிறு பகுதிதான் வரியாகப் போடுவது என்ற வரி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டது" என்பதை அன்றைய தினம் இருந்த முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முன்பு ஆட்சியாளர்கள், சர்சார்ஜ் 10 ரூபாயும், மோட்டார் வாகன வரி 30 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் கால் ஆண்டுக்குக் கட்டக்கூடிய மொத்த வரியாகக்போட்டு இருந்தது. முதல் கட்டமாகும். அப்போது உயர்த்தப்பட்ட வரிவிகித அமைப்பு 210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ஒரு நபர் இடத்துக்கு காலாண்டுக்கு 35 ரூபாய், 210 கிலோ மீட்டருக்கு மேல் 270 கிலோ மீட்டருக்கு மேற்படாது இருப்பின் 40 ரூபாய். 270 கிலோ மீட்டருக்கு மேல் 45 ரூபாய். அவ்வாண்டு ஜூலை 28-ம் நாள் இந்த வரி விகித உயர்வு கொண்டுவரப்பட்டு ஜூலை-1ம் தேதி முதலே இது அமுலுக்கு வரும் என்பதாக ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டு அந்த மசோதா நிறைவேறியது. அதே ஒற்றுமை இப்பொதும் ஏற்பட்டு நிறை வேற்றப்பட இருக்கிறது. ஜூலை 28-ம் நாள் தான் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்த மசோதா இம்மாதம் 1-ம் தேதி முதலே அமுலுக்கு வரும் என்கிற அளவிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதை ஒற்றுமை உணர்வுக்காக நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பஸ் முதலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். "அவர்களுக்கு என்ன வருமானம் வருகிறது? அவர்களை இப்படிக் கொல்கிறீர்களே'' என்பதாக காங்கிரஸ் கட்சி கொறடா

மதிப்பிற்குரிய விநாயகம் அவர்கள் மெத்தவும் கவலைப் பட்டார்கள். அவர்கள் கவலைப்படத்தான் வேண்டும். அவர் கவலைப்படமாட்டாரா என்று பலர் எதிர்பார்ப்பார்கள். கவலைப்பட வேண்டிய அவசியம் இருந்தது. ஆகவே, கவலைப்பட்டார்கள் ஆனால் எந்த வருமான அடிப்படையில் எப்படி எப்படி பஸ் முதலாளிகள் வரிகளை செலுத்திவருகிறார்கள். என்ன என்ன வகையில் என்பதை இந்த மன்றத்தில் விளக்குவது இன்றியமை யாதது. சுமார் 250 கிலோ மீட்டர் ஒடுகிற 50 சீட்டுகள் கொண்ட ஒரு பஸ்ஸுக்கு ஒருநாள் வருமானம் 250 ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டு கணக்கைத் தொடங்கினால்-டி. பி. ஜி. ஆக்ட் கணக்கில் எடுத்துக்கொள்கிற போது ஒரு பஸ்ஸுக்கு சர்சார்ஜ் என்ற அளவில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் ஒரு நாள் வருமானம் 250 ரூபாய்க்கு 25 ரூபாய் கட்ட வேண்டும். ஒரு நாளைக்கு. காலாண்டுக்குக் கணக்குப் பார்க்கிறபோது 25 இண்டு 90 என்றால் 2,250 ரூபாய் தரவேண்டும். ஆனால் இந்த 2,250 வரியாகத் தரவேண்டும் என்பது அதிகம் என்று பஸ் முதலாளிகள் முறையிட்டுக்கொண்டதன் காரணமாக கம்பவுண்டிங் செய்துகொள்ள உடன்பட்டு ஒத்துக்கொண்ட வகையில் வரையறுக்கப்பட்ட வரி விகிதம் ஒரு காலாண்டுக்கு ஒரு சீட்டுக்கு 48 பைசா என்ற விகிதத்தில் கணக்கிட்டால் 1,500 ரூபாய் வருகிறது. 2,250 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமையில் இருந்து 1,500 ரூபாய் கட்டலாம் என்ற நிலைமை உருவாயிற்று. அதை அடுத்து இன்னொரு மாற்று முறையும் தரப்பட்டது. அந்த முறை இன்னும் வரிப்பளுவைக் குறைத்தது. ஒரு சீட்டுக்கு ஒரு காலாண்டுக்கு 25 ரூபாய் வீதம் 25 இண்டு 50 என்பதாக 1,250 ரூபாய் கட்ட வகை செய்தது. ஆகவே, இந்த மூன்றிலே எதை பஸ் முதலாளிகள் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்பதை நான் சொல்லித் தெரிந்துக்கொள்ள வேண்டியதில்லை. 1,250 என்ற வகையில் கட்டுகிறார்கள். இப்போது ஒரு காலாண்டுக்கு மோட்டார் வாகன வரி 40 ரூபாய் என்றால் 50 சீட்டுக்கு 2,000 ஆகிறது. அதிகபட்சம் டிரைவர், கண்டக்டர் சம்பளம், டீசல் எண்ணெய் செலவு ஆகியவற்றுக்கு நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற அளவில் கணக்குப் போட்டால் காலண்டுக்கு 7,200 ஆகிறது. பராமரிப்புச் செலவை தாராளமாகப் போட்டு-அடிக்கடி அவர்களுடைய பஸ் பழுதாகிவிடுகிறது என்கிற வகையிலும் இடம் அளித்து

ஒதுக்கினால் மூன்று மாதத்திற்கு 4,000 ஆகிறது. ஆக, மொத்தச் செலவு காலண்டு சர்சார்ஜ் கம்பவுண்டிங்கில் 1,250. மோட்டார் வாகன வரி 2,000. மூன்று மாத தினச்செலவு 7,200, பாராமரிப்புச் செலவு 4,000 ஆக 14,450 ஆகிறது. வருமானம் நாள் ஒன்றுக்கு 250 என்கிற அடிப்படையில் 90 நாட்களுக்கு 22,500 வரும், செலவு போக ஒரு பஸ்லின் மூலம் காலாண்டுக்கு 8,000 ரூபாய் லாபம் நிற்கிறது. இந்த எட்டாயிரம் ரூபாய் லாபத்தில் நல்ல காரியங்களுக்காக ஒரு 500 ரூபாய் காலாண்டுக்குக் கொடுங்கள் என்று கேட்டால் தருவதற்கு மனம் இளகக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். காலண்டுக்கு 8,000 லாபம் நிற்கிறது. என்கிறபோது 500 ரூபாய் கேட்பது அதிகமான பளுவை அவர்களுக்குத் தராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திரு. வினாயகம் அவர்கள் வட்டிகட்ட வேண்டாமா என்கிறார்கள். பஸ் வாங்கக் கடன் வாங்கியிருப்பதாக வைத்துக் கொண்டு, வட்டி கட்டினாலும்கூட லாபம் நிற்கிறது. எல்லோரும் கடன் வாங்குபவரும் அல்ல.

அடுத்து, இப்படிப்பட்ட வரி உயர்வினால் பஸ் கட்டணம் உயர்த்தப்படுமா? உயர்த்தப்படாது என்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று திரு. ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். நிச்சயமாக இந்த அரசு அந்த உத்தரவாதத்தை அளிக்கிறது. பஸ் கட்டணம் இப்போது உள்ளத்தைவிட நிச்சயமாக அதிகப்பட மாட்டாது.

அடுத்து, திரு. காசிராமன் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தம் அவசியம் இந்த மசோதாவில் இடம்பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டிரு கிறார்கள். அந்தத் திருத்தம் முறையாக இடம் பெறுவதற்கு உரியதா என்பது ஆராய வேண்டிய விஷயம். ஆயினும் அந்தத் திருத்தம் கோருகிற கருத்தை முழுவதும் மறுத்துவிடுவதற்கில்லை. திருத்தத்தில் under rule 268-A என்று எழுதியிருக்கிறார்கள். எப்போதும் ஆக்டில் ரூலை இணைப்பது சரியல்ல. ரூல் என்பது சட்டமன்றத்தில் உருவாக்கப்படுவதில்லை. நிர்வாகம் தனிப்பட்ட முறையில் ரத்தும் செய்துவிடலாம். ஆகவே, ரூலை சட்டத்தில் சேர்க்கவேண்டும் என்கிற திருத்தம் முறையானது அல்ல. ஆயினும் அதன் மூலம் அவர் சில கருத்துக்களைச் சொன்னார்

என்ற முறையில் அதற்குரிய பதிலைத் தரக் கடமைப்பட்டிருக் கிறேன். அவர் குறிப்பிடுவது வரவுச்செலவுத் திட்டத்தில் நகர பஸ் போக்குவரத்து என்பது எல்லா நகரங்களிலும் ஓடுபனவற்றைக் குறிப்பது அல்ல. நகர பஸ் போக்குவரத்து குறிப்பிட்ட நகரங்களில் ஓடுகின்ற பஸ் போக்குவரத்தாகும். ஏன் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் என்றால், பழைய சர்க்கார் நிறைவேற்றியிருக்கிற சட்டத்திலும் இதே முறையில் வரி விகிதங்கள் இருந்திருக்கின்றன. திரு காசிராமன் சொல்வதுபோல் பரவலாக எப்போதும் இருந்தது இல்லை. நகரங்களில் ஓடுகின்ற பஸ்களின் வருமானம், மற்ற பஸ்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, குறைவாகவே இருக்கும் என்கிற காரணத்தினால் இவற்றுக்கு வரியை அதிகப்படுத்த எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் திரு. காசிராமன் அவர்கள் திருத்தத்தை ஏற்றுக்கொள்வோமானால் ஏறத்தாழ 500 பஸ்கள் தப்பித்துகொள்ளும். அப்படி 500 பஸ்கள் தப்பித்துக்கொள்வதால் மொத்தமாக அரசாங்கத்திற்கு எதிர்ப்பார்க்கின்ற வருமானத்தி லிருந்து குறையக்கூடிய தொகை 12 லட்சம் ரூபாய். 12 லட்ச ரூபாயை இந்த நேரத்திலே அரசாங்கம் இழப்பதற்குத் தயாராக இல்லை. ரூல்268 ஏ.யிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஒரு நகரத்திலிருந்து புறப்பட்ட பஸ் நகரத்தின் விளிம்பிலே மாத்திரமல்லாமல் புறப்பட்ட இடத்திலிருந்து 24 கிலோ மீட்டர் அளவுக்கு வெளியிலே சென்று விடுமானால் அது நாம் குறிப்பிடுகின்ற வரிக்கு உட்பட்ட வண்டியாக ஆகிவிடும். அதை மாற்றவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். அப்படி மாற்றிவிட்டால், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கடலூரிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஒரு பஸ் சென்று வந்தால் அது சென்ற தூரம் 24 கிலோ மீட்டர் என்று வைத்துக்கொண்டால் அங்கே பஸ் விட்டுக்கொண்டிருக்கிற பஸ்காரர்களும், தங்களுக்கும் விலக்கு வேண்டுமென்று கோருவார்களானால் அதிலே நியாயம் இருக்க முடியும். இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கின்ற விகிதாசாரப்படி அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். நகரத்திற்குள்ளேயிருந்து வெளியிலே செல்லுகின்ற பஸ்கள் அதுவும் தொழிற்பேட்டைகள் அதிகரித்துள்ள இந்த நிலையில், லாபகரமான இந்த நிலையில் எல்லையைத்தாண்டிச் சென்றுவருகின்ற பஸ்களுக்கு விலக்கு

அளிக்க வேண்டுமென்று சொல்வார்களானால் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லையென்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த தூரமே போகக்கூடிய பஸ்களுக்கு என்ன வருமானம் வருகிறது. அவர்கள் வரி கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். வருமானத்தின் அடிப்படையிலே பார்த்தால் சர்சார்ஜ் 100-க்கு 10 சதவீதம் கொடுக்கலாம். 25 ரூபாய் கம்பவுண்டிங் ரேட்டிலே கொடுக்க வேண்டுமென்பது இல்லை,. 48 ரூபாய் ஒரு வருஷத்திற்கு ஒரு சீட்டிற்கு என்று குறிப்பிட்டேனே அதுவும் இல்லை வருமானம் குறையக் குறைய 10 ரூபாய் நூற்றுக்குக் கட்டலாம். என்ற முறையிலே சர்சார்ஜ் இருக்கிறது அதை ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் பஸ் முதலாளிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. 1962-ஆம் ஆண்டிலே வரி ஏற்றுவதைப்பற்றிய நோட்கள் இருக்கின்றன. அதைப் பார்க்கின்றபொழுது அப்பொழுது 88 ரூபாய் வரை உயர்த்தலாமா என்ற அளவுக்குத் திட்டம் போடப்பட்டு, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல் திரு, பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று பஸ் முதலாளிகளும், மற்றவர்களும் வலியுறுத்தியதன் காரணமாக அந்த நிலையிலேதான் இறங்கி விட்டோம். என்று அவர்கள் சொல்லியிருக்கின்ற நிலையை வைத்துப் பார்த்தால் இது 1962-லேயே வந்திருக்கவேண்டியது. நாங்கள் வந்துதான் வரவேண்டுமென்று இருந்திருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகள் பாதிக்கப்படக்கூடாது என்ற நிலையில் மெள்ள மெள்ளச் செல்லவேண்டுமென்றும் ஒரேடியாகக் கொல்கிறார்களே என்றும் சொன்னார்கள். இது கொல்லக்கூடிய சமாச்சாரம் அல்ல. நாட்டுடைமை ஆக்குவது வேறு, இது வேறு என்று வேறுபடுத்திப் பார்த்தால் இதைப் புரிந்துகொள்ளலாம். அப்பொழுதுதான் இரண்டையும் ஒன்றாகப்போட்டு குழப்பிக்கொள்ளமாட்டார்கள். பஸ்களை நாட்டுடைமை ஆக்குவது தனிப்பட்ட விஷயம். இருக்கின்ற வரியை உயர்த்துவது வேறு, வரியை உயர்த்துவதினால் பாதிக்கப்படமாட்டார்கள். இதைத் தவிர 200 மைலிலிருந்து 250 மைல் வரையில் அதாவது 250 கிலோமீட்டரிலிருந்து 400 கிலோமீட்டர் வரையில் செல்லுகின்ற வழித்தடங்களைத் தாராளமாக அனுமதித்திருக்கின்ற காரணத்தாலே

அவர்கள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவித்து, இந்த உறுதிமொழிகளை மனதிலே கொண்டு திருத்தங்களை வலியுறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. வினாயகம்** : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபி கேஷன் சார், அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது 1962-வது ஆண்டிலே இப்பொழுது வந்திருக்கிற மசோதா வரவேண்டிய சூழ்நிலையில் இருந்தது. அப்பொழுது திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்ன வார்த்தைகளைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்ற அமைச்சர் அவர்கள் அப்பொழுது என்ன இந்த மன்றத்திலே சொன்னார்கள் என்பதையும் படித்துக்காட்டினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அதற்கு நான் பதில் சொல்ல வழியில்லாமல் அப்பொழுது திரு பக்தவத்சலம் அவர்கள் என்னை திருச்சி சிறையிலே போட்டுவிட்டார்.

**திரு. கே. வினாயகம்** : அவர் இல்லாவிட்டாலும் அவர்களுடைய கட்சி சார்பில் யாராவது பேசியிருந்தால் அதைச் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எல்லோருமே சிறையில்தான் இருந்தார்கள். அப்படி இங்கே இருந்திருந்தாலும் ஆதரித்துத்தான் இருப்பார்கள். காங்கிரஸ் நண்பர்களைப்போல் எதிர்த்து இருக்கமாட்டார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, coming to a serious problem...

Mr. SPEAKER : The hon. Member can ask for an elucidation

Thiru K. VINAYAKAM : I want an explanation on the Bill...

Mr. SPEAKER : Only with the permission of the speaker. the hon. Member can rise on a Clarification.

THIRU K. VINAYAKAM : The Hon. Speaker may be gracious enough to give ,me one more chance இந்த மசோதாவின் மூலமாக அரசாங்கம் எவ்வளவு வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறது. அதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வரும். இந்த ஆண்டு கால் ஆண்டு முடிந்து விட்ட காரணத்தால் அடுத்த ஆண்டு 1½ கோடி ரூபாய் வரும்.

**மாண்புமிகு பேரவை தலைவர்** : இந்தத் தீர்மானத்தை வாக்களிப்பிற்கு விடும்முன்னால் ஒரு குறிப்பு. ஆறாவது பிரிவுக்கு திரு. காசிராமன் அவர்கள் கொடுத்த திருத்தத் தீர்மானம் விதிகளுக்குள்ளே வருகிறதா, இரண்டு பார்லாங்குக்கு ஒரு ஸ்டாப் என்ற நிலையில் 250 மைல் ஓட்ட முடியாது. மப்ஸல் சர்வீசாக இருந்தால் 4 மைலுக்கு ஒரு ஸ்டாப். டவுண் சர்வீசில் 2 பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் இருப்பதால் காலதாமதம் ஏற்படும். ஆகவே இது சலுகை கொடுத்தும் கொடுக்காத சலுகைத்தான். வரியை உயர்த்துவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சலுகை "இம்ப்ராக்டிகபிள் கன்ஸெஷன்" அனுபவத்தில் கொண்டுவர முடியாத சலுகையாகும். அதனால்தான் அரசாங்கமே நடத்துகிற பஸ்களை இதற்குள்ளே உட்படுத்திக்கொள்ளவில்லை.

பழைய வரி விகிதத்தை போட்டும்கூட 34 லட்சம் டவுண் சர்வீஸ் பஸ்களுக்கு நஷ்டம் காட்டியிருக்கிறது. மோட்டார் வெகிகிள் டாக்ஸ்படி 50 லட்சம் ஒதுக்கியிருந்தும்கூட 34 லட்சம் நஷ்டம் வருகிறது. இது எதைக் காட்டுகிறது? சர்க்காரே டவுண் சர்வீஸ்களில் லாபம் இல்லை என்ற உண்மையை ஒத்துக் கொண்டதை நன்றாகக் காட்டுகிறது. ஆகவேதான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது பற்றிய விளக்கத்தைக் கூறியிருக்கிறேன். இது முன்னரே உள்ள வேறுபாடுதான். முந்திய சர்க்காரிலே தீர

யோசிக்கப்பட்டு சட்டத்திலே வரி விலக்கு விதி விலக்கு அளிக்க முடியாத நிலையிலேதான் இந்த மசோதா தீட்டப்பட்டது. அந்த வேறுபாட்டை இப்பொழுது நீக்குவதற்கான அவசியம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குறைந்த தூரந்தான் டவுன் சர்வீசுகள் போகின்றன என்று குறிப்பிட்டார்கள். முன்பே சொன்னேன் 130 மைல் போவதிலேயே வருகின்ற வருமானத்திற்கு ஏற்றவாறு 10 சதவீதம் என்ற அளவிலே சர்சார்ஜ் கொடுக்கிற நேரத்தில் மொத்தமாகக் கட்டவேண்டிய வரிச் சுமையில் இருந்து விலக்கிகொள்ளுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொன்ன வாதம் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இல்லை.

வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். சர்க்காருடைய பஸ் போக்குவரத்தினுடைய கணக்கில் டவுன் சர்வீசுக்கு இந்த வரி புகுத்தப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த மசோதா நிறைவேறுவதற்கு முன்பே தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் என்ற காரணத்தால் அதிலே இதைப் புகுத்த இயலாது என்பதை உணருவார்கள். இனிமேல் அது இடம் பெறும் என்று தெரிவித்துக்கொண்டு எந்த வகையிலும் இந்த நகர பஸ் என்று இருப்பதற்கும், நகரத்திற்குள் ஓடுகின்ற பஸ் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அகற்ற முடியாத நிலையில் இருக்கிறேன். முன்பு சொன்னதைத்தான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு விதிவிலக்கு அளித்துவிட்டால் குறைந்த தூரம் 15 மைல்-24 கிலோ மீட்டர் நகரில் சேராமல் இருக்கிற வெளியூர் பஸ்காரர்கள் 50, 55 ரூபாயை வரியாகக் கட்டும்போது தாங்கள் வஞ்சிக்கப்பட்டு விட்டதாக, பாரபட்சம் காட்டுவதாக எண்ண இடம் ஏற்படும்,. அரசாங்க வருமானத்திலே 12 லட்சம் ரூபாய் துண்டு விழக்கூடிய வகையில் இருக்கிற இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என்று கூறி அமர்கிறேன்.



# நில உச்சவரம்பு மசோதா

**உரை : 43** **நாள் : 09.04.1970**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : பொது மக்களின் அபிப்பிராயத்தைப்பற்றி என்ன சொல்லுகிறேன் என்று கருத்தறிய டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதோ ஒன்றுக்குத் திட்டமிட்டுக் கேட்கிறார்கள். அதை நான் புரிந்துகொண்டிருக் கிறேன். ஆனால் பொதுமக்களினுடைய அபிப்பிராயத்தை எந்த வகையிலே கேட்பது என்று நான் கேட்டேன். அதற்குரிய விளக்கத்தை யாரும் தரவில்லை. (குறுக்கீடு) கொடுத்தீர்கள். 1954-இலே கொண்டுவந்து 1955-ஆம் ஆண்டு "வித்ட்ரா" செய்யப் பட்ட "பில்"லைப் பற்றிக் கூறினீர்கள். "வித்ட்ரா" செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே மசோதா கொண்டுவந்தால் இதை எப்படியாவது கை கழுவி விட வேண்டுமென்று, பொதுமக்களின் கருத்தை அறிய வேண்டுமென்று ஆறப்போட்டுக் கைகழுவி விடலாம். ஆனால் இந்த மசோதாவைக் கொண்டுவருவது இதைக் கைகழுவி விட வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டுவரப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்கம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல், 1961-ஆம் ஆண்டு அப்பொழுது இங்கு வருமானத்துறை அமைச்சராகயிருந்த மாண்புமிகு திரு. மாணிக்கவேலர் அவர்கள் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்த நேரத்தில், எதிர்க்கட்சி வரிசையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்த எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அப்பொழுதே இது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராக ஆக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திப் பேசியிருக்கின்றார்கள். அப்படிப் பேசிய பிறகுதான், அதை வைத்துத்தான் நாங்கள் இந்த நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தை ஒவ்வொரு தடவையும் நடத்தியிருக்கிறோம். 15 ஆக

இருந்தவர்கள் 50 ஆக ஆனோம். பிறகு 50 ஆக இருந்த நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறோம் என்றால், பொதுமக்களின் அபிப்பிராயம் எங்களுக்குப் படிப்படியாகக் கிடைத்த காரணத்தினால்தான், பொதுமக்களின் ஆதரவு இந்தக் கொள்கைகளுக்கு இருக்கிறது என்ற காரணத்தினாலேதான் நாங்கள் இந்த இடத்திற்கு வந்திருக்கிறோம்.

அப்படியும் பொதுமக்களின் அபிப்பிராயத்தை இப்பொழுது அறியாமல் இல்லை. இந்த மசோதா கொண்டு வந்தபிறகு, நாங்கள் சொன்னதை அப்படியேதான் வைத்துக் கொள்ள வேண்டும், ஆரம்பத்தில் எப்படிக் கொடுக்கப்பட்டதோ அப்படியேதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இல்லாமல், பலருடைய அபிப்பிராயங்களுக்கு நாங்கள் மரியாதை கொடுத்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் அல்லது என்னுடைய தலைமையில் இயங்குகின்ற அமைச்சரவையைப் பொறுத்தவரையில், அல்லது ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் எதிலும் கௌரவப் பிரச்சினை பாராட்டுவ தில்லை என்று இங்கு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் அறிவார்கள். இந்த நாட்டிலேயுள்ள பெரியோர்களும், சான்றோர்களும் நன்றாக அறிவார்கள். அதற்குப் பிறகு, கடந்த ஒரு மாத காலத்தில் நாங்கள் கொண்டுவந்திருக்கும் எத்தனையோ பிரச்சினைகளில், பொதுமக்களின் அபிப் பிராயத்தை இணைத்து எங்களால் முடிந்த அளவிற்கு அவைகளிலே திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம்.

நேற்றுக்கூட, இந்துக்கள் அல்லாதார் கோயிலுக்குள் நுழைவதைப் பற்றி ஒரு திருத்தத்தை, ஒரு அறிக்கையை நான் இங்கே சமர்ப்பித்திருக்கிறேன். அதுகூட புரட்சிகரமானது அல்ல என்று நம்முடைய நண்பர் திரு. காசிராமன் அவர்கள் பதில் அறிக்கை அளித்தார்கள். அவர்கள் இந்த அளவிற்குச் சுயமரியாதை எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் போன தேர்தலில், பெரியார் இராமசாமி அவர்களின் ஆதரவைப் பெற்று, கும்பகோணத்தில் வெற்றி பெற்றார்கள். எனவே, அவர்கள் அந்த இடத்திலேயிருந்துகொண்டு இருக்கிறார்கள். "இது ஒன்றும் புரட்சிகரமானது அல்ல, நாங்களே செய்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

ஆனால் ஒரு ஜீ. ஓ. இருக்கிறது. பழைய காங்கிரஸ் கட்சிக் காலத்தில் போட்ட ஒரு ஜீ. ஓ. இருக்கிறது. அது என்னவென்றால், தஞ்சாவூரில் கோயிலிலே, பிரகதீஸ்வரர் கோயிலிலே, வலது புறத்தில் உள்ள பிரகாரத்தில் மாத்திரம் இந்துக்கள் அல்லாதவர்கள் சுற்றிப் பார்க்கலாம் என்றிருக்கிறது. அது செல்லுபடியாகாது என்ற காரணத்தினால் ஒரு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டிய நிலையேற்பட்டது. அந்தத் திருத்தம் சிலர் மனதைப் புண்படுத்தியது என்பதாலும், பெரிய, கண்ணியம் மிகுந்த பத்திரிகைகள் அதை எழுதியதாலும், அந்தப் பத்திரிகையில் அதுபோன்ற கருத்துக்கள் வெளியானவை என்பதால், அந்தக் கருத்து பொதுமக்களின் கருத்து என்ற எண்ணத்தோடு, நானும் ஒரு பத்திரிகை ஆசிரியன் என்பதாலும், என்னுடைய அமைச்சரவையில் இருக்கின்ற பெரும்பாலோர் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் என்பதாலும், நாங்கள் கிஞ்சித்தும் தவறமாட்டோம் என்ற அந்த அளவில், நாங்கள் எந்த மதத்தினரின் மனமும் புண்படாத அளவிற்கு நேற்றுக்கூட அந்த அறிக்கை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும்.

கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பிரச்சினையில் அவர்களின் கோரிக்கைகளை நாங்கள் உணர்ந்து, முடிந்த வரைக்கும், ஆழக் கிணறுகளைத் தோண்டுவதற்கு 75 அடி ஆழத்திற்கு மேல் தோண்ட அதிகச் செலவிட வேண்டியிருக்கிறது என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதில் பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கருதி, பத்திரிகைகளிலே எழுதி வந்த ஆலோசனைகளைக் கருதி, இந்தச் சபையிலே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும், எங்கள் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் எடுத்துச்சொன்ன கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, எங்களால் முடிந்த அளவிற்கு, 6 கோடி, 7 கோடி என்ற அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று, 10 பைசா என்று ஆக்கியதை 9 பைசாவாகக் குறைத்து, எட்டே கால் பைசா கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். மேலே முக்கால் பைசா அதிகமாகக் கொடுத்தால் போதும் என்று அதிலே திருத்தம் செய்திருக்கிறோம். இப்படிப் பல்வேறு வகைகளிலும்

பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளித்தே வந்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் அறிவார்கள்.

இந்த உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் அபிப்பிராயம் என்ன என்பதற்கு, எங்கள் கட்சியின் மாநாடுகளில், பொதுக்கூட்டங்களில் இவைகளைப்பற்றி எடுத்துச்சொல்லுகின்ற நேரத்தில் அவர்கள் எந்த அளவிற்கு வரவேற்றிருக்கிறார்கள் என்பதைச் சுதந்திராக் கட்சியின் துணைத் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நன்றாக அறிவார்கள். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேயும் சரி, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேயும் சரி, அல்லது பி. எஸ். பி., அல்லது தமிழரசுக் கழகம், அல்லது முஸ்லீம் லீக் அல்லது காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், அல்லது சுதந்திராக் கட்சியின் சார்பிலேயும் இப்படிப்பட்ட கருத்துக்கள் சொல்லப்படும் நேரத்தில் எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கிறது என்று நன்றாகத் தெரியும்.

இந்த உச்சவரம்புபற்றி பத்திரிகையில் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கிறது. நான் மதிக்கின்ற, கண்ணியமான பத்திரிகைகள் என்று எங்கள் கணக்கிலே வைத்திருக்கும் பத்திரிகைகளெல்லாம் எழுதியிருக்கின்றன. அவைகளுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கிறோம். இந்த அவையிலே தனிப் பட்டிருந்தாலும், நட்பு முறையிலே இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றத் தலைவர்களும், எடுத்துச் சொன்ன கருத்துக்களையும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களையும் ஆராய்ந்து அலசிப்பார்த்து, அவைகளிலே ஏற்றதாக இருப்பவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவிலே நாங்கள் ஒப்புக்கொண்டு, நாங்கள் எங்கள் மசோதாவிற்குச் சில திருத்தங்களை இங்கே கொடுத்திருக்கிறோம்.

பொதுமக்களின் கருத்தை அறிய வேண்டுமென்ற முறையிலே பார்க்கும்பொழுது, தஞ்சை மாவட்டத்திலேயுள்ள மிராசுதாரர்களின் ஊர்வலம் வந்தது. 500 அல்லது 1,000 பேர் வந்தார்கள். இதைப்போல, விவசாயிகள் வந்தார்கள், 25,000-க்கு

மேற்பட்ட விவசாயிகள் வந்தார்கள். பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளிப்பது என்றால், 25,000 பேர் வந்து கொடுத்த அந்த முறையீட்டிற்கு மதிப்பளிப்பதா அல்லது 500 அல்லது 1,000 பேர் என்ற அளவில் வந்த மிராசுதாரர்களின் கருத்திற்கு மதிப்பு அளிப்பதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கும், பொது மக்களின் கண்ணாடியாக விளங்கும் பத்திரிகைகளின் அபிப் பிராயங்களுக்கும் இந்த ஆளுங்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்கு மதிப்பளித்திருக்கிறது என்பதைக் காட்டும்வகையில் நாங்கள் கொடுத்திருக்கும் இந்தத் திருத்தத் தீர்மானங்கள் அமைந்திருக்கின்றன.

என்னுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு. இராஜாஜி அவர்கள் கருத்து அறிவித்திருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள். சுதந்திராக் கட்சியைச் சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் அத்தனை பேரின் பிரதிநிதி என்ற முறையில் அவர்களுடைய அபிப்பிராயம் அதில் இருக்கிறது. அதைப் போலவே காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. காமராஜர் அவர்களின் அபிப்பிராயம் தெரிந்திருக்கிறது. அதைப்போலவே திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அவரது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அளவோடாவது நிற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு போட முடியுமா என்றால், முன்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டுவந்தபொழுது அவ்வாறு சட்டம் போட முடியவில்லை.

ஆகவே, இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவருடைய கருத்துக்களை நாங்கள் அறிந்துகொண்டிருக் கிறோம். அதைப்போலவே திரு. சுப்பிரமணியத்தின் கருத்துக்களை நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவரின் கருத்துக்களை அறிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் தமிழரசுக் கழகத்தின் தலைவர், பி. எஸ். பி., எஸ். எஸ்.பி., இப்படி எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களின் கருத்துக்களையும் நாங்கள் அறிந்துகொண்டிருக்கிறோம் என்றால், அவர்கள் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களுக்குத் தலைவர்களாக வீற்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரதிநிதித்துவம்

வகிக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனையும் தெரிந்து கொண்டு எந்த அளவுக்கு இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டும் என்று பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட ஒரு மசோதாவை சட்டமன்றத்திலே கொண்டுவந்திருக்கிறோம்.

மேலும், பத்திரிகைகளில் எழுதப்பட்ட நல்ல அறிவுரை களை எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு எடுத்துக்கொண்டு, நாங்கள் திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். நல்ல அறிவுரைகளை வழங்கிய பத்திரிகைகளுக்கு நான் அமைச்சரவையின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, எங்களுக்குப் பிடிக்காத கருத்துக்களாக இருந்தாலும், அந்தக் கருத்துக்களின் மூலமாக, எங்களுடைய வேகத்தில் தேக்கத்தை ஏற்படுத்தி, நின்று நிதானித்து வாருங்கள் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கிய ராஜாஜி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டக்கூடிய அளவுக்கு உற்சாகப்படுத்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முற்போக்குள்ள எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரிய யோசனைகள் வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அவர்கள் தலைவர் என்று மதிக்கக்கூடிய திரு. காமராஜ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இப்படி நாட்டிலே இருக்கிற, எங்களையும் சேர்த்து அனைவரும் நான்கு கோடி மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்களாக இருக்கிறோம். ஆகவே, அனைவருடைய எண்ணத்திற்கும் மதிப்பு அளித்து இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இதற்குமேல் யார் பொதுமக்கள் இருக்கிறார்கள்? ராஜாஜி அவர்கள் கருத்தை அறிந்துகொண்ட பிறகு, சுதந்திரா கட்சியில் அதைவிடப் பொதுமக்கள், அதற்கு மேலாக ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லப்போகிறார்களா? பெரியார் அவர்களின் கருத்துக்குப் பிறகு, அவர்களுக்கும் மேலாக யார் எந்தக் கருத்தைச் சொல்லிவிடப்போகிறார்கள்? திரு. சுப்பிரமணியம் அவர்களின் கருத்தை அறிந்துகொண்ட பிறகு, அவருக்கு மேல் ஒரு கருத்தை யார் சொல்லப்போகிறார்கள்? திரு. காமராஜ் அவர்களின் கருத்தை

அறிந்துகொண்ட பிறகு, அவர்களுக்கு மேல் அவரைச் சார்ந்த ஒருவர் எந்தக் கருத்தைச் சொல்லப்போகிறார்கள்? இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவரின் கருத்தை அறிந்துகொண்ட பிறகு, அவர்களுக்கு மேல் ஒருவர் எந்தக் கருத்தைச் சொல்லிவிடப் போகிறார்கள்? இப்படி நான்கு கோடி மக்களின் தலைவர்களுடைய, அவர்களுடைய பிரதிநிதிகளின் கருத்துக்களையெல்லாம் தெரிந்துகொண்டு அவை ஆராயப்பட்டிருக்கின்றன.

இவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிலைக்கண்ணாடி போல் இருக்கிற பத்திரிகைகளின் கருத்துக்களும் ஆராயப்பட்டிருக்கின்றன. இத்தனை கருத்துக்களுக்கும் மதிப்பு அளித்து, முற்போக்கு என்று கருதி, அடித்தளத்திற்கு ஆபத்து இல்லாத வகையிலே, குந்தகம் ஏற்படாத வகையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுமக்களுடைய கருத்துக்களை முழுக்க முழுக்க அறிந்துகொண்டு, கொண்டுவரப் பட்டிருக்கிற மசோதா இது, மாண்புமிகு சுதந்திரா கட்சியினர் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு அமர்கிறேன்.



## மது விலக்குப் பிரச்சினை

**உரை : 44** **நாள் : 23.10.1971**

**கலைஞர் மு. கருணாநிதி** : டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு எதிர்த்து எதிர்த்துத் தோல்வி அடைந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். இதில் யாரும் தோல்வி அடைந்ததாகக் கருத வேண்டாம். நாம் நிச்சயமாக அனைவரும் சேர்ந்து வெற்றி அடைய வேண்டும் என்பதற்காகத்தான் நம் தமிழ்நாட்டில் நான் ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்ததைப் போன்றும் சற்றுமுன்பு இந்த அவையில் நான் அறிவித்ததைப் போலவும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போலவும், இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதை அகில இந்திய ரீதியில் சிந்திக்கவேண்டுமென்று முன்வந்திருக்கிறார்கள். நாம் இந்த மதுவிலக்கை ஒத்திவைப்பது, என்பதைச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால், அதை எதிர்த்து எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும், தோழமைக் கட்சியில் இருக்கின்ற முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்களும் இங்கு பேசியிருக்கிற காரணத்தினால் அதற்குப் பதில் அளிக்கக்கூடிய வகையில் இந்தியா முழுமைக்கும் இது சட்டமாக ஆக்கப்படுமானால் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது என்று கூறியதன் காரணமாகவும் அதை இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு யோசிக்கலாம் என்று கூறியிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற முதல் கட்ட வெற்றியாகும்.

இந்த முதல் கட்ட வெற்றியோடு மட்டும் நிற்காமல் முழுமை பெறுவதற்கு இந்தியா முழுமையிலும் மதுவிலக்கு

வரும் நன்னாளை எதிர்ப்பார்ப்போம். இதில் வெற்றி தோல்வி என்ற பிரச்சனையே கிடையாது. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னவர்கள் வெற்றிபெற்று விட்டார்கள் என்றும், மதுவிலக்கை ரத்து செய்கிற கொள்கை தவறானது மது அருந்துவது தீதானது என்று சொல்லப்படுகிற கொள்கை தோற்றுவிட்டதாகவும் யாரும் கருதவேண்டாம். மதுவிலக்கு என்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு புனிதமான கொள்கையாகும். அப்புனிதமான கொள்கை இந்தியா முழுவதிலும் வரவேண்டுமென்று பாடுபடுகிறோம்.

இப்போது பல்வேறு இடங்களில் இந்தக் கடைகள் வைக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கிற சில மனமாச்சாரியங்களையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிற விவரங்களும், அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளும் பற்றி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இங்கு விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நானும் கூறியிருக்கிறேன். இந்த மாநிலம் முழுவதும், எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களின்படி, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இவர்கள் விருப்பத்திற்கிணங்க 62 இடங்களில் கடைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களில் பொதுமக்கள் கோரிக்கைகள், சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் இவைகளை ஏற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் போலீஸ் அதிகாரிகளும் நிச்சயமாகச் செயல்படுவார்கள்.

கலெக்டர்களிடமிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இங்கே அதை விளக்கியதன் மூலம் இனிமேல் கலெக்டர்கள் அந்தப் பதில்களை தக்க நேரத்தில் உரியவர்களுக்கு அனுப்புவார்கள். அனுப்பவேண்டும் என்று நான் இங்கு கூறிக்கொள்கிறேன். ஆனால் தவறான கருத்துக்களை மக்கள் உள்ளத்தில் பதிய வைத்து அரசாங்கத்திற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்தவேண்டு மென்று எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் அல்லது மாற்றுக் கட்சிகளில் உள்ளவர்கள் முனையக்கூடாது என்பது என் வேண்டுகோளாகும்

உதாரணமாக, மதுரை மாநகரத்தில் உத்தமர் காந்தி அடிகள் அன்று உடை மாற்றிக்கொண்ட அந்த வீட்டிலேயே

கள்ளுக்கடை வைக்கப்பட்டிருக்கிறது என்று பலமாகப் பிரசாரம் நடைபெறுகிறது. ஆனால் அதை விசாரித்த பிறகு காந்தியடிகள் உடை மாற்றிக்கொண்ட அந்த இடத்தை இந்த அரசு 18-6-1971-ல் காதி போர்ட்டுக்கு வாங்கியிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே தவறான பிரசாரமாகும் அது, அந்தத் தெருவில் பக்கத்து வீட்டில் கடை வைக்கப்பட்டிருப்பது என்னவோ உண்மை. ஆனால் செய்திகள் திரிக்கப்பட்டு, அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற முறையில் அந்த வீட்டில் கள்ளுக்கடை வைக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட தவறான பிரசாரங்களை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

மதுவிலக்கை ஒத்திவைத்து அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் வேறு வழியில்லாது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை மனசார ஒப்பி இந்தச் சட்டத்திற்கான ஆதரவைக் காட்ட வேண்டும். எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு எல்லாத் தரப்பிலுள்ள எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு

**உரை : 45** **நாள் : 16.04.1975**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு வசதியான திருத்தத்தை அநேகமாக எல்லாக் கட்சிகளின் சார்பிலும் ஆதரித்து, வரவேற்று, வரவேற்கும் நேரத்திலே சில அரிய யோசனையும் இந்த இல்லங்கள் எப்படி நடைபெற வேண்டுமென்ற வகையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளை அரசும் தொடர்புடைய துறையும் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்த்து ஏற்றவைகளைச் செய்வதற்கு இயலும் என்பதை நான் முதலில் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே, தமிழ்நாட்டிலேதான் தொழுநோயாளிகள் அதிகம் இருக்கிறார்கள் என்கின்ற புள்ளி விவரம் அண்மையிலே வெளியிடப்பட்டது. இந்த அவையில் திரு. ஹாண்டே அவர்களாலும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களாலும், மற்றவர்களாலும் எடுத்துச்சொல்லப்பட்டது. அந்தப் புள்ளி விவரத்தில், தமிழ்நாட்டிலே 7.6 இலட்சம், ஆந்திராவிலே 6 இலட்சம், மத்திய வங்காளத்திலே 6 இலட்சம், ஒரிசாவில் 4½ இலட்சம், மத்திய பிரதேசத்தில் 1½ இலட்சம், இதர பகுதிகளில் மொத்தம் 1 இலட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மாநிலங்களைப் பற்றிய கணக்கு இது. மற்ற மாநிலங்களைப் பற்றி கணக்கிடப்பட்டிருக்கிறதா என்ற விவரம் நம்மிடத்திலே இல்லையென்றாலும் ஆந்திராவைவிட, வங்காளத்தைவிட, 1 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள், தொழு நோயாளிகளாகத் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்றாலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கே அளித்த

விளக்கத்திற்கேற்ப இந்தக் தொழுநோயைக் குணப் படுத்துவதற்கும், வராமல் தடுப்பதற்கும் தொடக்க காலத்தி லேயே அதைத் தடுத்து அது விரிவடையாமல், பரவாமல் இருப்பதற்கும் ஏற்ற முயற்சிகள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையிலேதான் எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாமல் பிச்சை எடுப்பதைத் தங்களுக்கு உகந்த ஒரு தொழிலாகக் கொண்டு, தங்களுக்கு வந்துவிட்ட தொழு நோயையே இந்தப் பிச்சை எடுக்கும் தொழிலுக்கு மூலதனமாக வைத்துக்கொண்டு சிலர் நம்முடைய தமிழ்நாட்டுத் தெருக்களில் அலைந்து திரிவதை முதல் கடமையாக நீக்கிட வேண்டுமென்ற முயற்சி 1971-ஆம் ஆண்டு இந்த அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் குறிப் பிட்டார்கள். 'ஏற்பது இகழ்ச்சி' ஆகவேதான் இந்தக் காரியத்தை இந்த அரசு செய்கிறது என்று. 'ஏற்பது இகழ்ச்சி' - பிச்சை எடுக்கிறவர்களுக்குக் கூட இகழ்ச்சி அல்ல. நம்முடைய நாட்டில், சமுதாயத்திலே இருக்கிற ஒரு பகுதியினர் ஏற்பது, பிச்சை எடுப்பது இகழ்ச்சி. யாருக்கு என்றால், அதைப் பார்த்துக்கொண்டிருக்கிற நமக்கெல்லாம் இகழ்ச்சி என்கின்ற அந்த வகையிலேதான் நாம் இந்த முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினோம்.

நம்முடைய ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பேசிய நண்பர் மாரிமுத்து அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 1945-ம் ஆண்டிலே இருந்து இந்தச் சட்டம் இருக்கிறது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் அமுலாக்கப்பட முடியாத நிலைமையையும், அது ஏற்பட்டதையும் குறிப்பிட்டார்கள். சட்டங்களை இயற்றி விடுவது சுலபம்தான். ஆனால், அந்தச் சட்டங்களை அமுலாக்குகிற நேரத்தில் அந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள் - பாதிக்கப்படுபவர்கள் என்று சொல்வது பயன் பெறுகிறவர்கள் என்ற பொருளிலும் கொள்ளலாம் - அவர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற நேரத்தில், அல்லது பயன்படுகிற நேரத்தில், அதற்கான மாற்றுத்

திட்டங்கள் இல்லாத காரணத்தாலே அவை பயனற்றுப்போய் விடுகின்றன. அந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வராமல் போய் விடுகின்றன.

தெருவிலே பிச்சை எடுப்பதைத் தடுப்பது, அவர்களைக் கைது செய்வது, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துவது, சில மாதங்களுக்குத் தண்டனை அளிப்பது. மீண்டும் அவர்களை வெளியிலே விடுவது என்று இருந்தால், அது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு சுற்று நிகழ்ச்சியாகவே இருந்து விடக்கூடும். ஆகவே, அந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்துகிற நேரத்தில், இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற பிச்சைக்காரர்களில் நாம் முதல் கட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மாற்றுத் திட்டமாக இல்லங்களை அமைப்பது, அதிலே அவர்களுக்குப் புதிய வாழ்வைத் தருவது, மறுவாழ்வு தருவது என்று செங்கல் பட்டிலே பரனூரிலும், தென்னாற்காடு மாவட்டத்திலே உளுந்தூர்பேட்டையிலும், தருமபுரி மாவட்டத்திலே பர்கூரிலும், புதுக்கோட்டையிலும், தஞ்சை மாவட்டத்திலே மனையேரிப்பட்டியிலும், மதுரை மாவட்டத்திலே புதுப் பட்டியிலும், வட ஆற்காடு மாவட்டத்திலே மல்லவாடியிலும், கோவையிலே விண்ணப்பள்ளியிலும், சேலம் மாவட்டத்திலே தேவியாகுறிச்சியிலும், தருமபுரி மாவட்டத்தில் செல்லியம் பட்டியிலும் இந்த மறுவாழ்வு இல்லங்களை நாம் அமைத்திருக்கிறோம்.

அங்கே ஆட்களே இல்லை என்றெல்லாம்கூட சில உறுப்பினர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். நான் மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்த 10 இல்லங்களி லேயும் 3,406 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். மாவட்ட வாரியாகச் சொல்லவேண்டுமானால் பரனூரில் 385 பேரும், உளுந்தூர்பேட்டையில் 351 பேரும், பர்கூரில் 277 பேரும், புதுக்கோட்டையில் 416 பேரும், மனையேரிப் பட்டியில் 424 பேரும், புதுப்பட்டியில் 439 பேரும், மல்லவாடியில் 296 பேரும், விண்ணப்பள்ளியில் 246 பேரும், தேவியாகுறிச்சியில் 381 பேரும், செல்லியம்பட்டியில் 191 பேரும், மொத்தம் 3,406 பேர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தொழில்கள், விவசாய வேலைகள் இவைகள் எல்லாம் தரப்படவேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்களும், ஜோதி அம்மையார் அவர்களும், மாரிமுத்து அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

இதுவரையிலும், 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அவர்களுக்கு வழங்கப்பட்ட தொழில்களின் காரணமாக நடந்தேறிய பணிகளைப் பார்த்தால் அவர்களால், தொழுநோய்ப் பிச்சைப் காரர்களால் முடையப்பட்ட பாய்களின் எண்ணிக்கை 7,330. அவர்கள் தைத்த ஆடைகளின் எண்ணிக்கை 5,150. அங்கே அமைக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புப் பிரிவுகளில் உற்பத்தியான முட்டைகள் 1,33,126. அவைகள் எல்லாம் அங்கே இருக்கிறவர்களுக்கு பெரும்பாலும் உணவுக்காக வழங்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பாத அணிகளின் எண்ணிக்கை 507 ஜோடிகள், காய்கறித் தோட்டங்களிலே விளைவிக்கப்பட்ட காய்கறிகள் 12,849 கிலோகிராம்.

இதன்னியில் பல்வேறு திட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு அதற்கான ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. மருத்துவத் துணைப்பணியில் 74 பேரும், வேளாண்மைத் தோட்டங்கள் போடுவதில் 230 பேரும், தையல் வேலையில் 30 பேரும், பாத அணி தயாரித்தலில் 47 பேரும், பாய் முடைதலில் 93 பேரும், கோழி வளர்த்தலில் 17 பேரும், தச்சு வேலையில் 12 பேரும், துணி நெய்தலில் 19 பேரும், சமையல் உதவியாளர்கள் என்ற முறையில் 108 பேர்களும், மொத்தம் 630 பேர்கள் வேலை வாய்ப்புப் பணிகளை அங்கே பெற்றிருக்கிறார்கள்.

அவர்களுக்காக தொழிற்கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பரனூரில், ஸ்விடிஷ் ரெட்கிராஸ் ரீஹேபிலிடேஷன் இண்டஸ்ட்ரீஸ் மூலம் அளிக்கப்பட்ட தொழிலுதவியை அண்மையிலே பிரதமர் தமிழகத்திற்கு வந்த போது தொடங்கி வைக்கப்பட்டது என்பதையும், அங்கே 80 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இளம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைத் தனியாகக் கவனிக்கவேண்டுமென்று சீனிவாசன் சொன்னார். இன்றைய தினம் சீனிவாசன் அருமையான யோசனைகளை நிதானமாக வழங்கியிருக்கிறார். இளம் தொழுநோய் பிச்சைக்காரர்கள் தனியாகப் பாதுகாக்கப்பட்ட வேண்டுமென்றும், அவர்களிட மிருந்து இந்த நோய் பரவிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டு மென்றும் சீனிவாசன் சொன்னார். ஏற்கனவே எடுக்கப்படுகிற முயற்சிகளின் தொடர்பாக அதுவும் செய்யப்படும்.

ஆறு ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் பேர்கள் வரையில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எல்லாப் பிச்சைக்காரர்களும் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தும் அம்மையார் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. எல்லாப் பிச்சைக்காரர்களும் என்று கணக்கை எடுத்தபோது 60 ஆயிரத்திற்குமேல் அவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே முதல் கட்டமாக 6 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் வரையில் உள்ள இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்துத் தீர வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தோம்.

இப்போது இந்த இல்லங்களிலே 4 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். மேலும் இப்போது கொண்டுவரப்படக்கூடிய திருத்தம் நிறைவேற்றப்பட்டு, செயல்முறைக்கு வருகிறபோது மீதம் இருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கும் இப்போது இருக்கிற இடங்களை விரிவுபடுத்த வசதிகள் இருக்கின்றன. தேவைப்படுமானால் புதிய கட்டடங்களைக் கட்டவும் ஆராயலாம். அந்தக் கருத்திலேதான் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு இல்லம் போதாது. இன்னொரு இல்லம் வேண்டுமென்று முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. வகாப் அவர்களும் சொன்னார்கள். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் காரியங்கள் செய்யப்படுகின்றன.

பரனூருக்குச் சென்று பார்த்து வந்தேன். நல்ல முறையிலே பணியாற்றுகிறது என்று இங்கே சொன்னார்கள்.

இதைப்போலவே ஒவ்வொரு இல்லமும் நல்ல முறையிலே பணியாற்றக்கூடிய முறையிலே, நாங்கள் வருகிறோம் என்று கூடச் சொல்லாமல் திடீர் திடீரென்று பிச்சைக்காரர்கள் இல்லங்களுக்குச் சென்று பார்வையிட்டு குறைகளை அறிந்து உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டுமென்று நான் ஆகட்டும், இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சராகட்டும், அதிகாரிகளாகட்டும் காரியங்களைச் செய்து வருகிறோம். அந்த வகையிலே பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பக் கிடைக்க வேண்டும். பொதுமக்களுடைய பிரதிநிதிகளுடைய ஒத்துழைப்பும் நிரம்பக் கிடைக்கவேண்டு மென்று கூறி அமைகிறேன்.



# ஓய்வூதியத் திட்டம்

**உரை : 46** நாள்: 7.11.1975

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கரும்பே வேண்டாமென்று சொல்லிவிட்டு கொஞ்சம் சர்க்கரையோடு சேர்த்துக்கொடுங்கள் என்பதைப் போல் நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள், தான் முதலிலே பேசிய வார்த்தைகளுக்கு புதுக் கருத்துக்களை இணைத்து இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் இதை கட்சியினுடைய கருத்துக்களாக இல்லாமல் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமைக்கேற்றவாறு சில எண்ணங்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்றாலும், மாண்புமிகு கே.டி.கே. தங்கமணி அவர்கள் பொதுமக்கள் நம்மைப்பற்றித் தவறாகக் கருதுவார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பதைப்போல் இந்த விஷயத்தில் ஆளும் கட்சியை காட்டிக்கொடுத்துவிட்டுப் போய்விடலாம் என்பதற்காக எதிர்வாதங்கள் புரிவது அவ்வளவு நல்லதல்ல,

ரயில்வே பாஸ் போன்றவைகளால்கூட பொது மக்களிடத்தில் நாம் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறோம் என்று கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களேதான் துணைமானியக் கோரிக்கையை இந்த அவையில் நாம் விவாதித்தபோது அந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது கொடுத்த ஒரு வெட்டுப் பிரேரணையில், தங்கமணி அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணை ரயில்வே பாஸ் கொடுப்பதில் தாமதம் என்பதைச் சுட்டிக்காட்ட என்ற ஒரு

வெட்டுத் தீர்மானத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆக ரெயில்வே பாஸ் கொடுப்பது தவறு அல்ல, கொடுப்பதில் இவ்வளவு தாமதமாயிற்றே, தாமதமாகியதே கூட தவறு என்று சுட்டிக்காட்டுகிற சூழ்நிலையில் கே.டி.கே.தங்கமணி அவர்கள் எல்லாம் மிக முனைப்பாக இருந்துவிட்டு இப்போது இந்தப் பென்ஷன் திட்டத்தைப் பற்றி பொதுமக்கள் ஏதாவது சொல்வார்களானால் அப்போது அவர்களுக்குப் பதில் சொல்வதற்காக இங்கே சில கருத்துக்களைப் பதிய வைப்பது ஆளும் கட்சியை சங்கடத்தில் ஆழ்த்துகிற ஒன்றாக ஆகிவிடும். ஆளும் கட்சி வேண்டுமென்று- இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று முதலில் ஆளும் கட்சி சார்பாக இந்த முடிவு வெளிப்படவில்லை. திருக்குறளில்,

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு,"

என்பதைப்போல் நான் ஒரு புதிய குறளைச் செய்திருக்கிறேன். அங்கத்தினர் ஓய்வூதியமெல்லாம் ஆதி சபையில் மொழிந்த பிறகு, அவர்தான் முதன்முதலாகச் சொன்னார்கள் இந்த ஓய்வூதியம் தரப்பட வேண்டுமென்று. அந்தக் கருத்தை நானும், அவை முன்னவர் நாவலர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கலந்து பேசி ஒரு வடிவு அமைக்கப்பட்டது. அந்த வடிவம் அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் என்னைச் சந்தித்தார்கள். அந்த வடிவத்தை மாற்ற வேண்டுமென்று வடிவேல் தலைமையில் ஹாண்டே அவர்களும், கிட்டப்பா அவர்களும் என்னைச் சந்தித்து, அதை 10 ஆண்டுகளாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

இங்கே பதவியில், பொறுப்பேற்று இருக்கின்ற ஒரு சிலர் மாத்திரம் அல்ல, ஏற்கெனவே 52இல், 57இல் பதவியில் இருந்து இன்று மீண்டும், பொறுப்புக்கு வர முடியாமல், வெற்றி பெற முடியாமல், அல்லது போட்டியிடாமல் இருக்கின்ற, தங்களைப் பொதுப்பணிக்கு அர்ப்பணித்துக்கொண்ட பல பெரியவர்களுக்கு இதன் மூலமாக பெருத்த நன்மை கிடைக்கிறது என்று என்னால் சொல்ல முடியும்.

இன்று காலை கூட தென்காசியிலிருந்து சங்கரநாராயணன் பிள்ளை எம்.ஏ.பி.எல்., எக்ஸ் எம்.எல்.சி. அவர்கள்கூட எழுதியிருக்கிறார். 12 வருஷம் பொறுப்பில் இருந்தால், அவர் பெற முடியும் என்றாலும், 12 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகளாக எம்.எல்.ஏ.க்களுக்கு மாற்ற வேண்டுமென்று கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஆக, வெளியில் இருக்கிறவர்கள்கூட, பதவிப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்று இருக்கிறவர்கள்கூட இப்படிப்பட்ட முறை வரவேண்டும், அது 10 ஆண்டுக் காலம் என்ற அளவில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால், பல உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியது போல, அவர்கள் தங்களுடைய வருங்காலத்தில், ஓய்வு காலத்தில் தங்களுடைய குடும்பத்தை ஓரளவிற்கு நடத்திச்செல்வதற்கு அந்தத் தொகை பயன்படும் என்பதால் தான்.

வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர் களுக்கு இது தேவையில்லை என்ற கருத்தை நம்முடைய கோவை செழியன் எடுத்துச்சொன்னார்கள். அதற்கும் நம்முடைய சட்டத்தில் இடம் இருக்கிறது. தேவையில்லை என்றால் இந்த ஓய்வூதியத்தை மாத்திரம் அல்ல, இப்போது வாங்கும் சம்பளத்தைக்கூட வேண்டாம் என்று அரசாங்கத்திற்கே திருப்பிக் கொடுத்துவிடலாம் அல்லது அந்தப் பணத்தை வாங்கி வேறு நல்ல காரியத்திற்கு, ஒரு அறக்கட்டளைக்கு, ஒரு பள்ளிக்கூடத்திற்கு, ஒரு அனாதை இல்லத்திற்கு அந்தப் பணத்தைக் கொடுக்கலாம், அவர்கள் தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர்கள், இந்த முறையில் பயன்படுத்தவும் இடம் இருக்கிறது.

இது ஆளும் கட்சியின் சார்பாக, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்காகக் கொண்டுவரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதனுடைய தலைவர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் பேசியதற்கு மாறாக நண்பர் வடிவேல் பேசினார். உணர்வுகள் இங்கே பேசப்பட்டன

என்று பொருள். நண்பர் சீனிவாசன் பேசிய கருத்துக்கு மாறாக டாக்டர் ஹாண்டேயும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள், என்றால் உணர்வுகள் இங்கே வெளிப்பட்டு இருக்கின்றன என்றுதான் பொருளே அல்லாமல் அதைக் கட்சி சார்பான நிலைமையில் கொள்ளாமல், இது ஒரு நல்ல காரியம், இன்று நிறைவேற்ற இருக்கிறோம் என்ற அளவில், இதை ஏகமனதாக அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி திரு.முனு ஆதி அவர்கள் சொன்னார்கள். அது இதில் வராது. இந்த அரசு பத்திரிகை நிருபர்களுக்கு வீடு வழங்கல், மற்றும் பல சலுகைகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது. பத்திரிகை நிருபர்கள் ஏற்கெனவே இந்த அரசின் மீது திருப்தியாக இருக்கிறார்கள். அவர்களை இப்படிப்பட்ட சிபார்சு மூலம், தங்கள் பக்கம் திருப்பிக்கொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, அனைவரும் இதனை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# 44-வது அரசியல் சட்டத்திருத்தத்திற்கு ஒப்புதல்

**உரை : 47** **நாள் : 13.03.1978**

**கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு ஜனதாக் கட்சி தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிக்கேற்ப நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட 44ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவைப் பெற இந்த மாமன்றத்தில் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தைத் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக வரவேற்று ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல் இதை மன்றத்தின் முன் வைத்த நமது சட்ட அமைச்சர் அவர்கள் அவசர காலச் சட்டத்தால் இந்திய திருநாடு சர்வாதிகார, ஆட்சியை நோக்கி இழுத்துச் செல்லப்படும் என்ற எச்சரிக்கையை விடுத்தார் என்பதை நினைவுகூர்வது இன்றியமையாத ஒன்று. நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு அவர் எழுதியக் கட்டுரை ஒன்றை இந்த மாமன்றத்தில் படித்துக்காட்டியிருக்கிறேன். நெருக்கடி நிலை என்ற பெயரால் இந்தியாவுக்கு வரவிருந்த பேராபத்து அண்மையில் நீங்கிவிட்டது என்ற மகிழ்ச்சி வெளிப்படுத்தி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கட்டுரை தீட்டியிருந் தார்கள் தாமதமாக இதை உணர்ந்தார்கள் என்றாலும், உணர்ந்து திருந்திக்கொண்டோம் என்ற வகையில் நமக்கு நமே ஆறுதலைக் கூறிக்கொள்ள முடியும்.

அந்த 42ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது பல கட்சிகளும் தங்கள் கருத்துக்களை

எடுத்துச் சொன்னார்கள் என்ற போதிலும், என்ன கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்பதை ஏடுகளில் அன்றைக்கு நாம் காண முடியவில்லை.

நம்முடைய அவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு நாடாளுமன்றத்தில் அவர்களுடைய கட்சியின் சார்பில் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் எவை எவை என்று நான் இப்போதுதான் அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடிந்ததே தவிர பத்திரிக்கைகளில் பார்த்து தெரிந்துகொள்ளக் கூடிய சூழ்நிலை அன்றைக்கு நாட்டில் இல்லை என்பதை இன்றைக்கு மிகுந்த வேதனையோடு எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்தத் திருத்தங்களில் எல்லா கருத்துக்களும் தங்களுக்கு உடன்பாடானவை என்று அவர்கள் முடிவெடுத்திட வில்லை என்று சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இன்றைக்கு ஜனதா அணியில் இருக்கின்ற வேறு கட்சிகள், அவைகளிலுள்ள உறுப்பினர்கள், அனைவரும் இந்தத் திருத்தத்தை அல்லது இந்தத் திருத்தத்திற்கு காரணமாக இருந்த நெருக்கடி நிலையை மிகவும் வன்மையாக எதிர்த்ததின் காரணமாக எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டது என்பதை கடந்த வரலாற்று ஏடுகள் எதிர்காலத்திலும் சொல்லிக்கொண்டு இருக்கத்தான் போகின்றன.

எனவே இந்த விவரங்களிலே எல்லாம் நான் இப்போது விரும்பவில்லை. 'தேச விரோதம்' என்ற சொல்லை வைத்துக்கொண்டு, எதிர்க் கட்சிகளை அழித்துவிடவேண்டும், அவர்களுக்கு எதிராக உள்ள நிறுவனங்கள், தொழிற்சங்க அமைப்புகள் தொழிலாளர்களுடைய உரிமைக்குரல் அனைத்தையும் ஒழித்துக்கட்டிவிடுவது என்ற முனைப்பான முயற்சியை மையமாக கொண்டிருந்தது. 'தேச விரோதம்' என்ற அந்தச் சொல்லில் எவரைப் பார்த்தாலும், யாரை வேண்டுமானாலும் 'தேச விரோதி' என்று கூறிவிடுவதன் மூலம் அந்தக் கட்சிகளை, அமைப்புகளை விளக்கங்களை, லட்சியங்களை ஒடுக்கிவிடலாம் என்கின்ற அடிப்படையில்தான் 42ஆவது திருத்தம் என்ற பெயரில் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

42ஆவது திருத்தம் வருவதற்கு முன்பு எப்படிப்பட்ட திருத்தங்கள் எல்லாம் கொண்டுவரலாம் என்பதற்காக

அமைக்கப்பட்ட சுவரன் சிங் குழுவினர் சில கருத்துகளைத் தந்து, அதைப்பற்றிய விளக்கங்களை நாடு தழுவிய வகையில் எல்லோரும் சொல்லலாம். அனைவருக்கும் உரிமை இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் மாதவன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. சுவரன் சிங் குழுவினர் தந்திருக்கின்ற கருத்துக்களை யெல்லாம் ஆராய்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறிக்கை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அப்படி தயாரிக்கப் பட்ட கருத்துக்களை நாங்கள் பத்திரிக்கைகளிலே வெளியிட வேண்டுமென்று முயற்சித்தபோது, எல்லோருக்கும் அபிப் பிராயம் வழங்க உரிமையிருக்கிறது, தாராளமாக உங்களுடைய கருத்துக்களை வழங்கலாம் என்று சுவரன் சிங் குழுவினர் கூறிய போதிலும், மத்திய அரசு தன்னுடைய தணிக்கை அதிகாரிகள் மூலம் இப்படி வழங்கப்பட்டக் கருத்துக்களை பத்திரிக்கைகள் வெளியிட முடியாமல் குந்தகமான காரியங்களைச் செய்தது என்பதையும், நாம் இப்போது மறந்துவிடுவதற்கில்லை. அந்தத் குழுவின் அறிக்கையிலே கோடிட்டுக்காட்டியதை நான் இங்கே படித்து, இந்த அவைக் குறிப்பிலே பதிய வேண்டிய, எதிர்கால சரித்தரத்தில் மிக முக்கியமானது என்ற வகையிலே பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு சில வரிகளை இங்கே படிக்க விழைகிறேன்.

"கடமைகளை யாரும் எதிர்த்திட மாட்டார்கள். ஆனால் இந்தக் கடமைகளை அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கப் பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் முரணாகச் செயல்படுத்திட பாராளுமன்றம் சட்டங்களை இயற்றலாம் என்பதும், இதில் நீதி மன்றங்கள் தலையிட முடியாது என்பதும் பேராபத்தாக அமைந்துள்ளன. ஜனநாயக நாட்டில் ஆட்சியின் அதிகார சுழலில் அமிழ்ந்து விடாமல் பாதுகாத்துக்கொள்வதற்காகத்தான் அடிப்படை உரிமைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. கடமைகள் என்ற பெயரில் கொடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பது ஜனநாயகத்திற்கு முரணாகும். கடந்த 26 ஆண்டுகளாக

சொன்ன கடமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிக்கப் படாமலேயே சட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன, அண்மை காலத்தில்தான் கடமைகள் என்ற பெயரில் அடிப்படை உரிமைகளைத் தகர்த்திடும் போக்கு எழுந்துள்ளது. என்று அந்தப் பரிந்துரை நூலில் முன்னுரை விளக்கம் கொடுக்கிறது.

நண்பர் திரு. மனோகரன் அவர்கள், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொன்ன அந்த கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம்-யார் அந்தக் கருத்தை முன்னால் சொன்னார்கள் என்ற போட்டிக்கு நான் வர வில்லை. 11-8-1976 அன்று வெளியிடப்பட்ட அந்த நூலில் வெகு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுவரன் சிங் குழுவின் சிபார்சில்,

"இறையாண்மை வாய்ந்த ஜனநாயக 'மத சார்பற்ற' சோஷலிச குடியரசு.' 'என்று இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப் பட்டதை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட அந்த அறிக்கையில்

"இறையாண்மை வாய்ந்த 'ஜனநாயக' மத சார்பற்ற, சோஷலிச கூட்டாட்சிக் குடியரசு."

என்று அமைய வேண்டுமென இந்தக் குழு வற்புறுத்துகிறது என்று அப்போது தெளிவாகச் சொல்லப்பட்டது. இந்தக் கருத்தை இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத்திலே எடுத்து வாதாடியிருக்கிறார்கள். இதைக் கேட்கவே எனக்கு இன்பமாக இருக்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு விட்டால் தானாகவே மாநில சுயாட்சித் தத்துவமும் அதிலிருந்து பிறந்து விடுகிறது. மாநில சுயாட்சி அமைப்பும் அதோடு இணைந்தது தான். கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக்கொண்ட அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சியை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாதாடினாலும்கூட கூட்டாட்சியை ஒப்புக்கொண்ட பிறகு, மாநில சுயாட்சியை எதிர்ப்பது, 'எப்படி

ஒரு அணு காசுக்குள், காலணுவும் அடங்கியது' என்று அண்ணா அவர்கள் சொன்னாரோ, அதைப்போல் கூட்டாட்சித் தத்துவத்தில் மாநில சுயாட்சியும் அடங்கியிருக்கிறது என்ற காரணத்தினால் கூட்டாட்சி என்ற சொல்லும் அதிலே இருக்கவேண்டுமென்று அன்றைக்கே நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

ஆனால் இப்படி கூட்டாச்சி, சுயாட்சி என்கிற இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள், இவைகள் மக்கள் மத்தியில் பரவிவிடாமல் தடுக்க அல்லது இந்த வார்த்தைகள், தத்துவங்களுக்கு மக்களிடத்தில் எங்களுக்கு செல்வாக்கு வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள, தங்களுடைய பிரச்சார பலம் போதாது என்ற காரணத்தால்தான், நெருக்கடி காலத்திலே தேச விரோத நடவடிக்கைகள் என்ற பெயரால் அதைத் தடுக்க முனைந்தார்கள். 42ஆவது திருத்தத்தின் மூலம் அந்த நடவடிக்கை இப்போது தவிர்க்கப்பட்டுவிட்டது. 44-வது திருத்தத்தை ஆதரித்து பேச காரணமே, இப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆளாக்கப்படத் தேவையில்லை என்ற மகிழ்ச்சியால்தான்.

ஆயினும் சட்டத்தின் மூலமாக இல்லாவிட்டாலும் இன்னும் பிரச்சாரத்தின் மூலம் நடைபெறுகிறதா இல்லையா என்பதை இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

இந்தி மொழித் திணிப்பு கூடாது என்று நாம் அனைவரும் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாகக் கருதுகிறோம். நேற்றைய தினம் கோவையில் நடைபெற்ற ஜனதா கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகத்தைப் படிக்கின்ற நேரத்தில் 'தமிழ்நாட்டில் பிரிவினை பிற்போக்கு சக்திகள் வெறியைத் தூண்டி விடுகின்றன' என்பது தீர்மானத்தின் வாசகமாக அமைந்திருக்கிறது. ஆக, தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும், தமிழர் நலன்கள் காப்பற்றப்படவேண்டும். வேற்றுமொழி ஆதிக்கம் வரக்கூடாது, இந்தி மொழித் திணிப்பை ஏற்க மாட்டோம் என்று சொல்கிற நேரத்தில் அப்படி சொல்கிற அனைவரும் பிரிவினைச் சக்திகள், பிற்போக்குச் சக்திகள்,

மொழிவெறியைத் தூண்டுகிறவர்கள் என்ற வகையில்தான் நாட்டில் ஜனதா கட்சி மாநாட்டில் தீர்மானம் போடப்படுகிறது. நெருக்கடி காலத்தில் சட்டத்தை வைத்துச் செய்தார்கள். இப்போது பிரச்சாரத்தின் மூலம் செய்கிறார்கள். இரண்டு இடையே பெருத்த மாறுபாடோ, முரண்பாடோ இருப்பதாக தெரியவில்லை.

இன்னொரு நிகழ்ச்சி-12-ஆம் தேதி ஜனதா கட்சித் தீர்மானம் போடுகிற அதே நேரத்தில் புதுடில்லியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி-இந்திரா காங்கிரஸ் அல்ல-காங்கிரஸ் காரிய கமிட்டி கூடி அவர்கள் போடுகிற தீர்மானத்திலே, இந்தியாவில் ஜனதா கட்சியும், இந்திரா காங்கிரஸும் பிராந்திய பிற்போக்கு வகுப்புவாதக் கொள்கைகளைக் கொண்டவை, என்று தீர்மானம் போடுகிறார்கள். தமிழ்நாட்டிலே இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்கள், பிரிவினை வாதிகள், பிற்போக்கு வாதிகள், மொழி வெறியைத் தூண்டிவிடுகிற சக்திகள் இன்று இங்கே உள்ளவர் பற்றி ஜனதா தீர்மானம் போடுகிறது. அதே நேரத்தில் இவர்களைப் பற்றி அதே நாளில் 12-ஆம் தேதி, புதுடில்லியில் பிற்போக்கு பிராந்திய வகுப்புவாத சக்திகள் என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் காரணம் அரசியல், காலத்திற்கு காலம் எப்படி ஆகாயத்தில் அலைகிற மேகங்கள் போல் அடிக்கின்ற காற்றிக்கு ஏற்ப உரு மாறுகிறதோ அதே போலவே மாறுகின்றன என்பதற்கு இவைகள் அடையாளம் என்றாலும்கூட, ஒரு கட்சியினுடைய கொள்கைகளை, கோட்பாடுகளை எடுத்துச்சொல்லுகிற எண்ணங்களை ஒத்துக் கொள்ள இயலாத நிலையில் அதற்கான ஆதாரங்களை, கருத்துக்குக் கருத்து மோத விடுகின்ற நிலைமைகளை எடுத்து வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

ஒட்டு மொத்தமாக பிரிவினைவாதிகள், பிற்போக்கு வாதிகள், மொழி வெறியைத் தூண்டிவிடுகின்ற சக்திகள் என்று கூறுவதன் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. என்னதான் அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் செய்தாலும் மையக் கருத்திலிருந்து அகன்றுவிடக் கூடாது. இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு தேசிய இனங்களின் உரிமைகள், பல்வேறு தேசிய இனங்களின் கலாச்சாரங்கள், பல்வேறு தேசிய இனங்களின் பண்பாடுகள் காப்பாற்றப்பட அரசியல் சட்டத்திலே இடம்

இருக்க வேண்டும் என்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டி ருக்கிறேன். நான் சொன்னேன்-அரசியல் அலைகள் எப்படி காற்றடிக்கின்ற திசையில் எப்படி எல்லாம் மாறுகின்றன என்று குறிப்பிட்டேன்.

இப்போது இருக்கும் வேடிக்கை என்னவென்றால் அருமை நண்பர் உமாநாத் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் 42-வது திருத்தம் அனைத்தையும் 44-வது திருத்தம் தீர்த்துவைத்துவிட்டதா என்றால் இல்லை. தீர்த்து வைக்க முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் இருப்பதை நடைமுறையில் நாம் உணர முடியும். அதற்கு நாடாளுமன்றத்தில் எத்தனை வாக்குகளைப் பெற வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவைகளை எல்லாம் கருதி இதை- முள்ளில் போட்ட துணியை மெல்ல மெல்ல எடுப்பதுபோல இன்றைக்கு ஜனதா அரசு மற்ற எதிர் கட்சிகளைக் கூட்டி வைத்து மெல்ல மெல்ல செய்ய முன்வந்திருக்கிறது என்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்தாலும், இந்திரா காந்தி ஆண்ட நேரத்தில் ஜனதா கட்சித் தலைவர்கள் சொன்னதெல்லாம், வெளிநாட்டு அபாயம் இந்தியாவிற்கு வந்தால் மட்டுமே அவசர நிலைப் பிரகடனத்தைப் பயன்படுத்த வேண்டும். உள்நாட்டு அபாயம் என்று சொல்லி அவசர நிலையை பிரகடனபடுத்தக் கூடாது' என்று வலியுறுத்தி வந்தார்கள். இன்றைக்கு நிலைமை அப்படியே தலை கீழாக மாறியிருக்கிறது. எப்படி இருந்தாலும் உள்நாட்டு அபாயம் என்று சொல்லி நெருக்கடி நிலையைப் பயன்படுத்தக் கூடாது என்று, அன்று ஜனதா கட்சி சொல்லிற்று.

அன்றைக்கு காங்கிரஸ் கட்சி - இந்திரா காங்கிரஸ் கட்சி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தது. அன்று நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி இன்றைக்கு எதிரில் அமர்ந்துகொண்டு, 'வெளிநாட்டு அபாயம் வந்தால்தான்' நெருக்கடி நிலையை அறிவிக்கலாம், உள்நாட்டு அபாயம் என்று சொல்லி நெருக்கடி நிலையை அறிவிக்கக்கூடாது, என்று வாதிடு கின்ற அளவிற்கு காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது. ஆனால் ஜனதா கட்சி தன்னுடைய அன்றைய நிலையிலிருந்து மாறி கொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல, நண்பர்கள் பலரும் இங்கே எடுத்துக் காட்டியதைப் போலவும், மாண்புமிகு உமாநாத் அவர்களும், சுப்பு அவர்களும் இங்கே எடுத்துச்சொன்னதைப் போலவும் இந்தத் திருத்தங்கள் மட்டும் போதாது, இன்னும் பல திருத்தங்கள் தேவை. மத்திய மாநில உறவுகளைச் சீர்படுத்த, மத்திய என்று கூட்டாட்சியும் மாநிலங்களுக்கு சுயாட்சியும் தேவை என்ற அடிப்படையிலே திருத்தங்கள் தேவை அரசியல் சட்டத்தில் என்பதை நாம் இன்றைக்கு வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் இங்கே பேசிய நேரத்திலே சொன்னார்கள். சிக்கிம் பிரச்சனையில் எப்படி நடந்து கொண்டீர்கள், நான் திருப்பித் திருப்பிக் கேட்டக் கேள்விகளுக்கு அன்றைக்கிருந்த முதலமைச்சர் பதில் சொல்லவில்லை என்று சொன்னார். நான் அந்த நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தேன். அன்றையதினம் நான் பதில் சொல்லா விட்டாலும், கல்வியமைச்சராகவிருந்த அவை முன்னவராக இருக்கின்ற இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே அவைத் தலைவராக இருக்கின்ற நாவலர் இந்த அளவில் ஆற்றிய உரையில் பதில் அளித்து இருக்கிறார் அதை அப்படியே படிக்கிறேன்.

"மாநில சுயாட்சியை இன்றும் கேட்கிறோம். அன்று எவ்வளவு அழுத்தந்திருத்தமாக மாநில சுயாட்சி கேட்டோமோ அப்படியே இன்றும் கேட்கிறோம். இந்த சிக்கிம் பிரச்சனைக்கு பிறகு அதை இன்னும் அழுந்தந்திருத்தமாகக் கேட்க முடியும். எப்படி அரசியல் சட்டத்தை இந்தச் சிக்கிம் இணைப்பிற்காக திருத்தி மாற்றியமைக்கிறோமோ அதேபோல் அரசியல் சட்டத்தை மாற்ற முடியாது என்பதல்ல, மாற்ற முடியும். மாற்றி சுயாட்சி உரிமையை நாம் கேட்கலாம். 21 மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். இனிமேல் மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிற தான் வரும்.

மாநில சுயாட்சி கேட்பதற்கும், இந்த சிக்கிம் பிரச்சனைக்கும் இடையே எந்தவிதமான இடர்பாடும் ஏற்படவில்லை. பாண்டிச்சேரி, கோவா, டையூ, டாமன் போன்றவை இந்தியாவோடு சேர்ந்தன.

இப்போது சிக்கிம் சேருகிறது. திரு. கே. டி. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி நேபாளம், பூடான், சூரத் போன்ற மற்றப் பகுதிகளும் சேர்க்கப்படும் நிலை வந்தால் நல்லதுதான். அப்போது அவைகளுக்கும் சேர்ந்து நாம் மாநில சுயாட்சி கேட்கலாம். ஆனால் அந்தப் பிரச்சனைக்கும், இந்தப் பிரச்சனைக்கும் சம்பந்தமில்லை. அது எப்போதும் அழுத்தந்திருத்தமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. நம்பிக்கை தந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். 'இடம் மாறினால், நம்பிக்கை மாறலாம் சூழ்நிலை மாறினால் நம்பிக்கை மாறலாம் என்று நாவலர் பேசியிருக்கிறார்.

அன்றைக்கு நாவலர் அவர்கள் இதே அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது யார் இடம் மாறியதைப்பற்றியோ, சூழ்நிலை மாறியதைப்பற்றியதோ அல்ல, எடுத்துவைக்கப்பட்ட வாதங்கள் ஆட்கள் பேசுவதல்ல, எடுத்து வைக்கப்பட்ட அறிவுரைகள், எடுத்து வைக்கப்பட்ட வாதங்கள், வலிவான வாதங்கள் அப்படியே இருக்கின்றன. அந்த வகையிலே மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று நம்முடைய அமைச்சர் நாடாளுமன்றத்திலே வலியுறுத்திய அந்தக் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அந்தக் கொள்கை வலியுறுத்தப்படுகிற வகையிலே மாநிலங்களிலே கூட்டாட்சி அமைகின்ற வகையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

தேச விரோத சக்திகள் என்ற பெயர் சூட்டி கட்சியை தடைசெய்துவிடக்கூடிய ஆபத்து வந்துவிடுமோ, கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையிலே அகில இந்திய என்ற சொல்லை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதோடு சேர்த்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அகில இந்திய என்று சேர்த்துக் கொண்டாலும் எங்களையும், உங்களையும் சேர்த்துப் பிராந்திய கட்சிகள் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தருகின்ற பரிசோ, தருகின்ற பட்டமோ, சூட்டுகின்ற பெயரோ நம்மைப்பற்றிய அவர்களுடைய எண்ணத்தை மாற்றிவிடாது. அகில இந்திய அளவிலே இருக்கின்ற கட்சிகள்கூட, அகில இந்திய என்கிற அடைமொழியைப்

போடுவதில்லை. உதராணமாக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையில் ஒரு அகில இந்திய கட்சியாக இருந்தபோதிலும் தேவையில்லாமல் அகில இந்திய என்று சொல்லிக்கொண்டிருப்பதில்லை. ஆகவே இனிமேலாவது அகில இந்திய என்பது இல்லாமல் அதிலிருந்து மாறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரிலேயே நீங்கள் வழங்கலாமா என்று யோசிக்கலாம்.

**திரு. ரா. உமாநாத்** : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரைக்கும் சி. பி. ஐ. (எம்) என்றுதான் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்கிஸ்ட்) என்றுதான் போடுகிறோம்.

**கலைஞர் மு. கருணாநிதி** : பெயர் போடப்பட்டுள்ளது, நான் அதைத்தான் மிக ஜாக்கிரதையாகச் சொன்னேன். யாரும் அனைத்திந்திய சி. பி. ஐ. (எம்) என்று சொல்லுவதில்லை. ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இங்கே பேசும்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று தவறாமல் சொல்கிறார்கள். அப்படி போட்டும்கூட பயனில்லை என்பதும் நம்மை மாநிலக் கட்சி என்றுதான் கருதுகிறார்கள் என்பதையும் தெரிவித்து, இப்படிப்பட்ட திருத்தங்கள் மேலும் மேலும் வருகின்ற நாளை எதிர் பார்ப்போம் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு சுயாட்சித் தமிழகம் அமையும் திருத்தங்கள் வருகின்ற அந்த நன்னாளை எதிர்பார்ப்போமாக! அதற்கு நாம் அனைவரும் பாடுபடுவோமாக!

**திரு. ஜே. ஜேம்ஸ்** : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது அகில இந்திய அண்ணா தி. மு. க.வுக்கும், தி. மு. க.வுக்கும் இருக்கிற வித்தியாசத்தை சுட்டிக்காட்டினார்கள். அகில இந்திய என்ற வார்த்தைகளை எடுத்துவிட்டு அண்ணா தி. மு. க. என்றே அழைப்பதில் தவறில்லை என்று சொன்னார்கள். நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த வித்தியாசத்தை ஒழிப்பதற்கு அவர்கள் கட்சியை அகில இந்திய தி. மு. க என்று சூட்டிக் கொண்டாலும் அதுவும் தவறு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

□**கலைஞர் மு. கருணாநிதி** : நாங்கள் எந்தப் பெயரைச் சூட்டி கொண்டாலும் இரண்டும் ஒரே குட்டையிலே ஊறிய மட்டைகள் என்றுதான் நீங்கள் சொல்லப்போகிறீர்கள்.

# நுழைவு வரி

**உரை : 48** **நாள் : 27.04.1983**

**கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, பயன்படுத்துகின்ற பொதுமக்களாலும், வாணிபத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பல்வேறு வகையான வணிகப் பெருமக்களாலும், எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களாலும் நாட்டிலே இருக்கின்ற அரசியல் சார்புடைய ஏடுகள் மாத்திரம் அல்லாமல், நடுநிலையாக இருக்கின்ற பல்வேறு ஏடுகளாலும் கண்டிக்கப்படுகின்ற ஒரு வரியை நுழைவு வரி என்கின்ற பெயரால், இந்த அவையிலே அவையினுடைய முன்னவர் நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த காலம் தொட்டு, அதிலே சில பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று அவர்கள் ஆறுதல் கூறியதும் ஏற்கத்தக்கது அல்ல. முழுமையாக கைவிட வேண்டுமென்று குரல் எழுப்பப்பட்டு, சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்திலும் இந்த அவையிலே அனைத்துக் கட்சிகளால், ஆளும் கட்சியை தவிர மற்ற கட்சிகளால் கடுமையான எதிர்ப்பு உணர்வு காட்டப்பட்டும், அனைத்தையும் மீறி இன்றையதினம் ஜனநாயகத்தை கிஞ்சிற்றும் மதிக்காத ஒரு நிலையில் இந்த வரியை விதித்தே தீருவோம் என்ற பிடிவாத நோக்கத்தோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மூலமாக இந்த அரசு இந்த அவையிலே விவாதிப்பதற்கு வைத்து, ஆளும் கட்சிக்கு இருக்கிற பெரும்பான்மை பலத்தின் காரணமாக நிறைவேற்றிவிடலாம் என்கின்ற அந்தத் துணிவோடு செயல்பட்டுக் கொண்டு இருப்பதை மீண்டும் ஒருமுறை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த வரியைப் பற்றிக் கூறப்படுகிற நேரத்தில் பொருளாதார நிர்வாக சீர்திருத்தக் குழுவினுடைய தலைவர் எல்.கே.ஜா அவர்கள் 'ஆக்ட்ராய்' வரி ஒரு அருவருக்கத்தக்க வரி, இதை கைவிட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதே கருத்தை சட்ட நிபுணர் பல்கிவாலா அவர்கள் எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் கட்சி ஏடு அல்லாத பொதுவாக நடைபெறுகிற ஏடு என்று பலரும் கருதிக் கொண்டிருக்கிற தினமணியில் எழுதிய தலையங்கத்தில் கூட இந்த வரியினால் சரக்குப் போக்குவரத்து தாமதமடையும்; வணிகர்களுக்குத் தொல்லை உண்டுபண்ணும்; ஊழலுக்கு வித்திடும். அதைவிட பொருள்களின் விலை உயர்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த வரியைக் கைவிட வேண்டுவது அவசியமாகும்; இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை வாபஸ் பெற வேண்டும். அப்படி முடியாவிட்டால் இதனை சட்ட மன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதே நல்லது. கூட்டு ஆய்வுக் குழு பொது மக்களின் கருத்தை அறிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த மசோதாவை அவசர கோலமாக நிறைவேற்றுவதைத் தவிர்க்க வேண்டும் என்று 23-4-1983 தேதியிட்ட தினமணி பத்திரிகையின் தலையங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஆனால் எதையும் பொருள்படுத்தாமல் எல்லாவிதமான கருத்துக்களையும் புறக்கணித்துவிட்டு, இந்த நுழைவு வரியைத் திணிப்பது அரசாங்கத்தினுடைய பிடிவாத குணத்தைத்தான் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டிச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதிலேகூட காலையிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த சில பிரச்சினைகளை நாம் மறந்துவிடுவதற்கில்லை. நிதிநிலை அறிக்கை விவாதம் நடைபெற்று பதில் அளித்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில பொருள்களைக் குறிப்பிட்டு, அவைகள் எல்லாம் இந்த வரிகளிலேயிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று எடுத்துக் கூறினார்கள். அப்படி விலக்கு அளிக்கப்படாத சூழலில் இந்தச் சட்ட முன்வடிவு

தயாரிக்கப்பட்டிருக்கிறதே அது சரிதானா என்கிற ஒழுங்குப் பிரச்சினையை அல்லது உரிமைப் பிரச்சினையை எல்லாம் இங்கே எழுப்பப்பட்டு, அதற்கு அவைத் தலைவராகிய தாங்களும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய விழிப் புணர்ச்சியை நான் பாராட்டுகிறேன் என்று கூறிவிட்டு, அதைப்போல அதற்கான திருத்தங்கள் இந்த அவையிலே வைக்கப்படும் என்று சொன்ன அவை முன்னவர் அவர் களுடைய அந்தப் பரந்த மனப்பான்மையையும் தாங்கள் பாராட்டுவதாகச் சொன்னீர்கள்.

ஆனால் இங்கே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் அது குறித்து, பிரச்சினையை எழுப்பியபோது, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டது ''இதிலே நான், இவைகளில் எல்லாம் எது எது நீக்கப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் கூறினார்களோ, அவைகளை எல்லாம் குறிப்பிட வில்லை என்று சொன்னாலும் கூட, அவைகள் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், அதற்கான விதிமுறைகள் வகுப்பதற்கான நடவடிக்கைகள் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள்.''

இங்கே தரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவினுடைய 29வது பக்கத்தில் விவர அட்டவணை என்கிற பகுதியில் 2(1) என்கிற பிரிவினை காண்க என்ற தலைப்பின் கீழ், 'அட்டவணையிடப்பட்ட சரக்குகள்' என்ற தலைப்பில், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மூன்றாவதாக சர்க்கரை என்று குறிப்பிட்டு விட்டு, நிதியமைச்சர் அதற்கு என்ன அறிவித்தார் களோ, எது எது நீக்கப்படும் என்று சொன்னார்களோ, அதை அந்த சர்க்கரை என்ற தலைப்பிலே மாத்திரம், வளைவு அடைப்புக்குள் (கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக) - என்று நிதியமைச்சர் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியை மாத்திரம், வளைவு அடைப்புகளுக்குள்ளே அமைக்கப்பட்டிருக் கிறது. அதுவும் சர்க்கரை என்ற பொருளுக்கு மாத்திரம் .

ஆனால் ஐந்தாவதாக, பெட்ரோலியப் பொருள்கள் என்று வருகிற அந்தப் பகுதியில், மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதில் அப்படி மண்ணெண்ணெய்க்கு விலக்கு

அளிக்கப்படவில்லை. அதிலே வரிசையாக பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய், கனிம எண்ணெய் வகைகள், உயர் எண்ணெய், வெப்பம் தணிக்கும் எண்ணெய், மசகு, தார், திரவ பெட்ரோலிய வாயு, மண்ணெண்ணெய் நாப்தா என்று எல்லாவற்றையும் அடக்கிப் போடப்பட்டிருக்கிறது. இதிலே ஏன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல் விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள், அடைப்பு வளைவுக் குறிகளுக்குள்ளாவது போடப்படவில்லை? சர்க்கரையை குறிப்பிடும்போது மாத்திரம், கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக என்று வளைவு குறி போட்டு சுட்டிக் காட்டியிருப்பது ஏன்? அதேபோல மண்ணெண்ணெய்க்கும் அப்படி வளைவு குறி போட்டு, அது நீங்கலாக என்று ஏன் சுட்டிக் காட்டப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்? ஆகவே, ''இது ஒரு அவசர கோலம் அள்ளித் தெளி'', என்ற வகையிலே தான் இந்தச் சட்ட முன்வடிவு தயாரிக்கப் பெற்றிருக்கிறது. அதனாலே தான் ஏற்ற திருத்தங்கள்கூட வைக்கப்படாமல், அவையில் இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப் பெற்று, உறுப்பினர்கள் அதற்குரிய பிரச்சினைகளை எழுப்பிய பிறகு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வாய்மொழியாகவே சொன்னார்.

''நான் 5 சதவீதத்திற்கு மேற்படாமல்'' என்று குறித்து இருப்பதை 2 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று திருத்திக் கொள்கிறோம்'' என்று வாய்மொழியாகவே சொல்லி, பலரும் பேசி, கிட்டத்தட்ட நான் பேச இருக்கிற, ஒரு 5 அல்லது 10 நிமிடங்களுக்கு முன்புதான் வாய்மொழியாகச் சொன்ன அந்தத் திருத்தம் எழுத்து வடிவத்திலே; 2 சதவீதம்தான் என்ற அளவிலே எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தச் சட்டத்தைப் பற்றி உங்களுக்கே ஒரு வகை தொகையான, நிலையான கருத்து இல்லை. உங்களுக்கே பெரும் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலேதான், சரியான திருத்தங்கள் வைக்கப்படாமல், அல்லது நிதியமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல், இப்படிப்பட்ட முரண்பாடான சட்ட முன்வடிவு இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல உறுப்பினர்களும், கட்சியினுடைய தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மிக வேடிக்கையானதும், இதுவரையில் எந்த வரி விதிப்புச் சட்ட முன்வடிவிலேயும் இல்லாததுமான ஒரு விசித்திரம் பக்கம் 3-லே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ''. . . .வெவ்வேறு சரக்குகளுக்கு வெவ்வேறு உள்ளூர் பகுதிகளுக்கு வெவ்வேறு வீதங்களில் இவ்வரியை அரசு குறிப்பிடலாம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எத்தகைய சிக்கலான பிரச்சினையை உருவாக்கக்கூடும் என்பதை இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். வெவ்வேறு சரக்குகள் என்றால் என்னென்ன சரக்குகள்? இதிலே குறிப்பிட்டிருக்கிறபடி இன்னதுதான் என்று கிடையாதா? வெவ்வேறு உள்ளூர்ப் பகுதிகள் என்ன என்ன பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா? கிடையாது. வெவ்வேறு வீதங்கள் என்ன என்ன வீதங்கள் எந்த எந்த சரக்குகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா என்றால் கிடையாது. இந்தச் சிக்கல் எவ்வளவு பெரிய ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏன் என்றால் இந்த வெவ்வேறு சரக்குகள் என்று வருகிற நேரத்தில் ஒரு வியாபாரி அல்லது ஒரு வணிகர் தன்னிடத்தில் இருக்கின்ற சரக்கு இன்ன சரக்குதான் என்று எழுதச் சொல்கின்ற அந்தச் சலுகையை அதிகாரியிடத்தில் பெறுகின்ற நேரத்தில் அங்கே எத்தகைய ஊழல் தொடங்கும் அல்லது ஏற்கனவே இருக்கின்ற ஊழல் பெருகும் என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போல்தான் 4-வது பக்கத்தில் 3-வது பகுதியில் உள்ளூர் பகுதிக்குள் தன் சொந்த கணக்கிலோ அல்லது தன் முதலாளிக் கணக்கிலோ அச்சரக்குகளைக் கொண்டுவருகிற அல்லது கொண்டுவரும்படிச் செய்கிற பதிவான வணிகரால் அல்லது தம்மை வணிகராகப் பதிவுசெய்து கொள்வதற்கு உட்பட்டவரால் அல்லது அச்சரக்குகள் அவ்வாறு கொண்டு வரப்படும்போது ஒப்படை எடுத்துக் கொள்பவரால் அல்லது ஒப்படை எடுத்துக்கொள்ள உரிமையுடையவரால் இந்த வரி செலுத்தப்பட வேண்டும், என்று 4-வது பக்கத்திலே 3-வது பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதே பக்கத்தில் அத்தியாயம் 3-ல் 5-வது பகுதியில் விவரக் கணக்குகளும் வரி விதிப்பும் -(1) 8-ஆம் பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், இச்

சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்டுள்ள ஒவ்வொரு வணிகரும், இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதற்குட் பட்ட ஒவ்வொரு வணிகரும், வரையறுக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளும், முறையிலும், வரையறுக்கக்கூடிய தகவல்கள் அடங்கிய கணக்குகளை, வரி விதிப்பு அதிகாரிக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்ப வேண்டும், என்று இருக்கிறது. எனவே, நண்பர் அழகர்சாமி இங்கே எடுத்துக் காட்டியதுபோல் இது நுழைவு வரியா அல்லது உள்ளபடியே விற்பனை வரியை இன்னும் உயர்த்தி விதிக்கப்படுகின்ற ஒரு வரியா என்பதை அரசுதான் எங்களுக்கு விளக்க வேண்டும். ஏன் என்றால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற பொருட்களுக்கு அந்த நகரத்தினுடைய எல்லையில் விதிக்கப்படுகின்ற வரிக்குப் பெயர் நுழைவு வரி.

ஆனால் இங்கே காட்டப்படுகின்ற குறிப்புகளை படிக்கின்ற நேரத்தில் வணிக பெருமக்கள் அதற்கான ரெக்கார்டு களை வைத்துக்கொள்ள வேண்டும், கணக்குப் பதிவேடுகளை வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான பதிவுகளை செய்து கொள்ள வேண்டும் என்று எல்லாம் வருகின்ற இந்தப் பிரிவுகளை பார்க்கும்போது இது ஒவ்வொரு நகரத்திலும் இருக்கின்ற வியாபாரிகளிடத்தில் வணிகர்களிடத்தில் வழக்கம்போல் விற்பனை வரி அதிகாரிகள் சென்று கணக்குக் கேட்டு விற்பனை வரி பெறுவதைப்போல் நுழைவு வரி என்ற பெயரில் பலமடங்கு அதிகமான விற்பனை வரியை செலுத்தக்கூடிய ஒரு இன்னலுக்கு வியாபாரிகள் ஆளாகி, அப்படி ஆளாகின்ற வியாபாரிகள், வாங்கி பயன்படுத்துகின்ற பொதுமக்கள் தலையில் அந்த வரி பளுவை சுமத்த அதன் காரணமாக பொதுமக்கள், ஏழை எளியவர்கள், விவசாய பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் பாதிக்கின்ற ஒரு நிலைமைதான் ஏற்படுகிறது. எல்லா கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கின்ற வியாபாரிகளுடைய பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மகஜர்களில் குறிப்பாக ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்ற வியாபாரிகள் அனுப்பியிருக் கின்ற மகஜரைப் படித்துப்பார்த்தால், இந்த நுழைவு வரியால் எந்த கைத்தறியைக் காப்பாற்ற வேண்டும் என்று நாம் எல்லாம் இன்றைக்கு கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறோமோ, அந்த

கைத்தறிக்கும், கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கும், எவ்வளவு இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை இந்த மகஜரில் உள்ள சில வாசகங்களைப் படித்துப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். இந்த வரி அமுலுக்கு வந்தால் சிறிய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமத்திலுள்ள சிறிய வர்த்தகர்கள் தங்கள் கொள்முதலை அண்டை மாநிலங்களில் செய்வார்கள். இதனால் தமிழகத்தில் மொத்த வணிகம் பாதிக்கப்பட்டு அண்டை மாநிலங்கள் பயனடையும். நம் மாநிலத்தில் பொருளாதார சீர்குலைவு ஏற்படும். இதை நம்பி வாழும் சிப்பந்திகள், மூட்டை கட்டுகின்றவர்கள், கைவண்டி இழுப்பவர்கள், லாரிகள், பாரம் தூக்குகின்றவர்கள், முதலிய அனைவரும் பாதிக்கப்படுவார்கள். அதே சமயம் மாநிலங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகள் வர்த்தகமும் பெரிதும் பாதிக்கப்படும். உதாரணமாக மில் துணி கொள்முதலுக்கு அண்டை மாநிலத்தை அணுகும் வியாபாரிகள் அங்கேயே கைத்தறி துணியையும் வாங்கி விடுவார்கள் என்று கைத்தறி துணி வியாபாரத்தில் ஏற்படக்கூடிய அந்த சீர்கேட்டினையும் அவர்கள் இந்த மகஜரின் மூலமாக சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இப்படி பல்வேறு வணிக நிறுவனங்களின் சார்பாக அவர்களுடைய பெரிய சங்கங்களின் சார்பாக மகஜர்கள் அளிக்கப்பட்டும், முதலமைச்சர் அவர்களை நேரிடையாக சந்தித்து அவர்களுடைய பிரதிநிதிகள் உரையாடல் நிகழ்த்தியும் கூட இறுதியாக தாங்கள் கொண்டதே கொள்கை என்கின்ற வகையில் மிக பிடிவாதமாக இந்த வரியை திணிப்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தால் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப் படுகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

நம்முடைய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதும் இங்கே குறிப்பிட்டார்கள். பல்வேறு வகையில் இந்த அரசு பணத்தை விரயம் ஆக்குவதை அல்லது வரவேண்டிய வருமானங்களை இழப்பதைச் சரி செய்யுமேயானால், இந்த வரி விதிப்புக்கு இடமே இருந்திருக்காது என்று குறிப்பிட்டார்கள். ஜனதா கட்சியினுடைய தலைவர் நண்பர் இஸ்மாயில் அவர்கள்

சொல்கிறபோது சொன்னார்கள், பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் நம்முடைய உடன்பிறப்பு என்.டி.ராமராவ் ஆண்டு கொண்டிருக்கிற ஆந்திர மாநிலத்தில் 67 லட்சம் குழந்தைகளுக்கு அங்கே இந்த மதிய உணவிற்காக செலவிடப்படுகிற தொகை 100 கோடிக்கு குறைவானது. இன்னும் சொல்லப்போனால் 80 அல்லது 85 கோடிதான் என்று அங்கிருந்து செய்திகள் வருகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் 130 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு அதே நேரத்திலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமிருந்து அரிசி வாங்குகிற காரணத்தினால் அவர்களுக்குத் தருகிற இழப்பு என்ற பெயரால் 50 கோடி ரூபாய் அரசு இந்த இழப்பை ஏற்றுக்கொள்கிற வகையில் சற்றொப்ப 185 கோடி ரூபாய் அளவுக்கு அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் அளவுக்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது என்றால் ஆந்திரத்திலே அதே எண்ணிக்கையிலே உள்ள குழந்தைகளுக்கு 100 கோடிக்கும் குறைவாக செலவாகும் பொழுது இங்கே 200 கோடி ரூபாய் செலவிடப் படுகிறது என்றால் எங்கேயோ தவறு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடலாமா?

அதைப்போலவே வரவேண்டிய வருமானத்தை, வருவாயை நாம் இழந்து இருக்கிறோம். வரிவிதிப்பே வருவாய்த் துறையைப் பொறுத்த விஷயம் என்ற காரணத்தினால் வருவாயைப் பற்றி பேசுவதில் தவறு இல்லை, ஏனென்றால் எத்தனையோ உறவில்லாத விஷயங்கள் பல, சில நேரங்களிலே இந்தச் சபையிலே அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால் இதுவும் அங்கீகரிக்கப்படும். இது பொருத்தமுடைய விஷயம் என்பதால் சொல்கிறேன். வருவாய் வரியினாலே கிடைக்கிறது. ஆனால் அப்படிக் கிடைக்க வேண்டிய வரிகளையெல்லாம் உதறித் தள்ளிய பெரும் குற்றச்சாட்டுக்கு ஆளான ஒரு அரசு இன்றைக்கு உள்ள இந்த அரசு என்பதை நான் எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

ஸ்டீல் ரீரோலிங் மில் இவைகள் வரி கட்டுவதைப்பற்றி ஒரு பிரச்சினை எழுந்து தங்களால் வரி கட்ட இயலாது. எனவே தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது . . . .

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தூண்டிலைப் போடுகிறபோது இங்கேதான் வரப்போகிறார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். இதற்கு முன்பே பேசியதற்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். நீங்கள் இங்கே பேசுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நீங்கள் பேசலாம்.

**கலைஞர் மு. கருணாநிதி :** வீராணம் பற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வீம்புக்காக மறுபடியும் பேசப்படவில்லையா? அதைப்போல் நான் சொன்னால் இப்போது மறுபடியும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் பதில் அளிப்பார்கள், அது புதிய பதிலாகக்கூட இருக்கும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். வேறு யாரும் குற்றஞ்சாட்ட வேண்டியதில்லை. பொதுக் கணக்குக் குழு அதனுடைய தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு.வி. கிருஷ்ணமூர்த்தி இருந்தாலுங்கூட அந்தக் குழுவிலே இருப்பவர்கள் பெரும்பாலோர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். நிதியமைச்சர் உள்ளிட்ட பெரும்பாலோர் அந்தப் பொதுக் கணக்குக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்தக் குழு என்ன தெரிவிக்கிறது? ஸ்டீல் ரீரோலிங் மில்ஸ், அந்த ஆலைகளே முன்வந்து விற்பனைவரிக் கடனை கடனாகக் கோரியிருந்தபோது பணிக்குழு விற்பனைவரிக் கடனுக்குப் பதிலாக விற்பனை வரி விலக்கு முன்னுரிமை அளித்து பரிந்துரை செய்தது கண்டு பொதுக்கணக்குக் குழு வியப்படைகிறது. அந்தப் பரிந்துரையால் அரசுக்குப் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தவிர்த்திருக்கக்கூடிய அந்த இழப்புக்குப் பொறுப்பாளியாக இருந்த எல்லோர் மீதும் பொறுப்பு நிர்ணயிக்கப்படவேண்டுமென்று பொதுக் கணக்குக் குழு விழைகிறது. ஆக 1970ஆம் ஆண்டிலிருந்து 1982ஆம்ஆண்டு வரையில் 12 ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 3.12 கோடி 3 கோடியே சொச்சம் ரூபாய் வீதம் 37 கோடி ரூபாயை நாம் வலிய இழந்திருக்கிறோம். அவர்கள் கேட்டது அதை கடனாக பாவியுங்கள், கடனாகவா கேட்கிறீர்கள், நாங்கள் வரியையே விலக்கு செய்கிறோம் என்று அவர்களுக்கு வரியையே விலக்குச் செய்து

கொடுத்தது. அது மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழக அரசில் இந்தப் பிரச்சினை உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 1976ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அரசுக்குச் சார்பாக அந்த ஆலை அதிபர்கள் அந்த வரியைக் கட்டித்தான் தீர வேண்டும் என்று ஒரு தீர்ப்பை அளித்தபிறகும், அந்தத் தீர்ப்பைத் தூக்கிக் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டு நீங்கள் கடனா கேட்கிறீர்கள், கடன் கூட இல்லை, வரி விலக்கே கூட செய்கிறோம் என்ற அளவிற்கு ஆசீர்வாதம் செய்து ஆலை அதிபர்களைக் காப்பாற்றிய அசகாய சூரர்களுடைய அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நானும் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறேன். பாட்லிங், பிளென்டிங், சாராயக் கலவை தொழிற்சாலை மூலமாக ஏறத்தாழ 30 கோடி ரூபாய் தனியார்களுக்குப் போகிறது. யாரோ ** அல்லது ** இருந்து கொண்டு, ** வைத்துக்கொண்டு 30 கோடி ரூபாயை தனி அதிபர்கள் ஆதாயங்கள் பெறுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே நாங்கள் ** கொடுத்திருக் கிறோம் என்பதுதான். அது ** இல்லையா என்பதைப்பற்றித்தான் விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழு போட்டிருக்கிறது. ஆகவே, அதிலே ** இருக்கிறது; யாருக்கோ கொடுத்திருக்கிறோம். ** இருக்கிறவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேசுவதில் தவறு கண்டுபிடிப்பதாக தயவுசெய்து கருதக்கூடாது. ஏனென்றால் நீங்கள் எங்கள்மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** கொடுத்திருக்கிறது என்பதுதான். எங்கள்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பது தான். அது உண்மையா, இல்லையா என்பதை விசாரிப்பதற்காகத் தான் விசாரணைக் குழு எங்கள் மீது நாங்களே, போட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த வார்த்தைகள் அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

குறிப்பிலே இல்லாமல் இருப்பது நலமாகயிருக்குமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த அவை எல்லா உரிமைகளையும் பெற்றது. நீதிபதிகளைப் பற்றி விமர்சிக்கலாம் என்ற அளவிற்கு இந்த அவையில் தாங்கள் எங்களுக்கு உரிமை அளித்திருக்கிற நேரத்தில் ஒரு விசாரணை கமிஷனிலேயிருக்கிற பிரச்சினை பற்றி பேசுவது தவறல்ல என்று தான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதிபதிகளை விமர்சிக்கலாம் என்று நான் சொல்லவில்லை. நீதிமன்றங்களிலிருக்கிற தீர்ப்புகளைப்பற்றித்தான் சொன்னேன். நீதிபதிகள் என்று சொன்னதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

**கலைஞர் மு. கருணாநிதி :** நான் தீர்ப்புகளைக்கூட விமர்சிக்கவில்லை. விவரங்களைத்தான் சொல்கிறேன். சாராயக் கலவைத் தொழிற்சாலையில்.. .

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே நான், அவர்கள் பேசியதிலே ** இருக்கிறது; ** கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னவைகள் அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது; நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதில் தங்களின் உத்தரவைக் கோருகிறேன்

**கலைஞர் மு. கருணாநிதி :** ** லைசென்சே பெறவில்லையா; அதையாவது சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த இடத்திலே உங்களுக்குப் பிரச்சினை?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, எங்கள்மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே, அது பிளென்டிங் யூனிட் ஆனாலும் சரி, அல்லது சில்லறைக் கடையானாலும் சரி, அல்லது ஹோல்சேல் கடையானாலும் சரி, இவைகளில் நான் படித்துக் காண்பித்தேன். அதில் என்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

சொல்லப்பட்டிருக்கிறதென்றால், இவைகளில் எல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதிலே அதிகமாக மார்ஜின் கொடுத்து, பிராபிட் மார்ஜினில் எல்லாம் எங்களுக்கு பங்குண்டு என்று கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிப்பதற்குத்தான் விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறதாலே ** உள்ளவர் பெயரும் அதிலே வந்திருக்கிறது. ஆகவே ** என்றும் அதிலே வந்திருக்கிறது. அவைகளைத் தவிர மற்றவற்றைப் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மது என்றுகூட சொல்லக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மது என்று சொல்வதைப் பற்றியல்ல. விசாரணைக் குழுவிலே இருப்பதைப் பேசவேண்டியதில்லை, அது குறித்துப் பேசப்பட்டவைகளைத் தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**கலைஞர் மு. கருணாநிதி :** விசாரணைக் குழு என்ற வார்த்தையையே நான் பயன்படுத்தவில்லை. நான் சொல்வது தனியார்கள் ** இருப்பவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது விசாரணைக் குழுவின் முன்பு இருக்கிற சப்ஜெக்ட் என்று அமைச்சர் சொல்கிறார்.

**கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 26 கோடி ரூபாய் தனிப்பட்ட முதலாளிகள் ** உள்ளவர்களோ, ** உள்ளவர்களோ, சம்பாதிப்பதை அரசே ஏற்றுக்கொள்ளுமானால் அதனால் ஏற்ற வருவாய் அரசிற்கு கிடைக்குமென்பதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற சாமர்த்தியமும், திறமையும். அதைச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

சொல்கிற போது எந்த அளவிற்குச் சொல்லவேண்டுமோ அதைச் சொல்கிற அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இப்படி ** என்று பேசியது, ** என்று பேசியதை எல்லாம் நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்றாகவும், மற்றவர்களுக்கு ஒன்றாகவும் நீங்கள் தீர்ப்பளிப்பது நியாயமில்லை. அதிலே ** என்ற வார்த்தையும் ** என்ற வார்த்தையும் இருக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ** என்று சொல்வதிலே ** என்று சொல்வதிலே பிரச்சினைகள் இல்லை. குற்றச்சாட்டு மாதிரி வருவதால்தான் பிரச்சினை வருகிறது. ** இரண்டையும் விட்டுவிட்டு மீதி எல்லாம் பேசுங்கள். அவைகள் மட்டும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**கலைஞர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு - கொடுத்திருக்கிற அல்ல; கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு - ஏறத்தாழ ரூ. 30 கோடி இந்தப் பிளன்டிங் பாட்லிங் தொழிற்சாலை மூலமாகவும், மாவட்ட சாராய மொத்த வியாபார நிலையங்களின் மூலமாகவும் செல்லுகின்ற அந்த வருவாய் அரசுக்குக் கிடைக்க, இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட யோசனைகள், பல்வேறு கட்சிகள் செயற்குழு, பொதுக்குழுக்களில் நிறைவேற்றிய அந்தக் கருத்துக்கள் இவைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டாலே, இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டாலே, போட்ட வரிகளை எல்லாம் நம்பித்தான் அரசு நடத்த வேண்டுமென்று இந்தப் பயங்கரமான, ஊழல்கள் மலியக்கூடிய புதிய வரியைப் போடுகின்ற அபாயத்திலிருந்து அரசு தன்னை மீட்டுக் கொண்டிருக்க முடியும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்த அளவிற்குப் பணம் விரயம் ஆகிறது என்பதையும் இங்கே எங்களுக்குத் தந்திருக்கிற அறிக்கையிலேயிருந்து என்னால் காட்டமுடியும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, 1981-

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்குகள் விவரம் இங்கே எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதிலே இந்த உலகத் தமிழ் மாநாட்டிற்காக சுமார் ரூ. 10 கோடி மொத்தமாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றுள்ளது. கேட்டால் நிரந்தரமாக சில காரியங்கள் செய்யப்பட்டன என்று முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, அல்லது அதற்கு முந்தைய ஆண்டு, இங்கே பேசியபொழுது, தன்னுடைய பதில் உரையில் குறிப்பிட்டார்கள். நிரந்தரமான செலவுக்காக, ரூ. 9 கோடி, அந்த ரூ. 10 கோடியில் செலவிடப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற, தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்கு விவரத்தில், ரூ. 9 கோடி அல்ல; ரூ. 6 கோடி நிரந்தரச் செலவுக்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. நிரந்தரச் செலவுகூட என்ன? கட்டணம் செலுத்திச் செல்ல வேண்டிய கழிப்பிடங்கள் - கக்கூஸ்கள் - மதுரை மாநகரத்தில், ரூ. 1 கோடியே 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. இன்று அவைகளும் பயன்படுகின்றனவா என்பதை மதுரையிலே உள்ளவர்களை விசாரித்தால் தெரியும். அதைப்போல, சாலை வசதி, மதுரை மாநகராட்சிக்கும், திருப்பரங்குன்றத்திற்கும் ரூ. 3½ கோடிக்குச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகள் எல்லாம் இன்று பயன்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றனவா என்று சென்று பார்த்தால் தெரியும். மதுரையிலே, ரூ. 1.18 கோடிக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டதாக அதிலே கணக்கு இருக்கிறது. ஆனால், மதுரை நகரத்தில் குடிநீர் இல்லாமல், இன்றைக்கு மக்கள் தவித்துக்கொண்டிருக்கிற நிலைமையையும் நம்மால் காண முடிகிறது. அதிலே இன்னொரு குறிப்பு - குமரிக்கண்டம் என்ற ஒரு படம், 2,000 அல்லது 3,000 அடிகள் கொண்ட படம். அது 11 பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகியிருக்கிற செலவு ரூ. 9¼ இலட்சம். அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன். பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால்கூட, ரூ. 12 இலட்சம். . .

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நீங்கள் இங்கே தெரிவித்திருக் கிறீர்கள், சில தினங்களுக்கு முன்னால். திடீரென்று

குற்றச்சாட்டைச் சொன்னால் எப்படி மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியும் என்று. இன்றைக்கு இப்படித் திடீரென்று சொன்னால், எப்படிப் பதில் சொல்ல முடியும்? என்னுடைய இலாகாவைப் பற்றியது அல்ல அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டுகள் அல்ல, தணிக்கை அறிக்கையிலே வந்துள்ள செய்திகளைச் சொல்கிறார்.

**கலைஞர் மு. கருணாநிதி :** பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால்கூட, 12,000 அடி கொண்ட கலர் படத்தை வெளியிட்டால்கூட, ரூ. 10 இலட்சம் அல்லது ரூ.11 இலட்சம்தான் ஆகும். அந்தக் குமரிக்கண்டத்திலே பெரிய நடிகர்கள் யாரும் நடித்ததாகத் தெரியவில்லை. 2,000 அல்லது 3,000 அடி உள்ள ஒரு டாக்குமென்டரி பிலிம், 11 பிரதிகள் எடுப்பதற்கு ரூ. 9¼ இலட்சம் செலவிடப்பட்டது என்பது நம்பத் தகுந்ததாக இல்லை. இப்படிப் பல செலவுகள். அதைப் போலவே, உலகத் தமிழ் மாநாடு நிகழ்ச்சிகளை, ஊர்வலத்தை நிழல் படம் - திரைப்படம் அல்ல; நிழல் படம் - எடுக்க ஆகி இருக்கிற செலவு போட்டோ எடுக்க செலவு ரூ. 2½ இலட்சம் என்று இந்தத் தணிக்கைக் குழு ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படித் தேவையற்ற, அதே நேரத்திலே, அநாவசியமான, அதே நேரத்திலே அளந்து போடாத கணக்கற்ற நிலையிலே செலவைச் செய்து நிதிப் பற்றாக்குறை. ஆகவே வரி போடுகிறோம் என்று கூறுவது எப்படிப் பொருத்தம் உடையதாகும்?

கடந்த நான்கைந்தாண்டுக் காலத்திலே மாத்திரம் பத்திரிகைகளுக்குச் செய்தித்துறை மூலம் பல்வேறு இலாகாக்களுடைய விளம்பரங்கள் இதுவரையிலே காங்கிரஸ் அரசுக் காலத்திலோ, கழக ஆட்சிக் காலத்திலோ இல்லாத அளவிற்கு ஆறு கோடி ரூபாய் பத்திரிகை விளம்பரத்திற்காக இந்த அரசு செலவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பல நேரங்களில், கேள்வி நேரங்களிலேகூட நம்முடைய அமைச்சர்களெல்லாம் சொல்வார்கள். இந்தப் பிரச்சினை மத்திய அரசிலே இருக்கிறது; பாராளுமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் இவர்களெல்லாம் சென்று மத்தியிலே இருக்கின்ற அரசிடம் வலியுறுத்துங்கள் என்று அமைச்சர்கள் கேள்வி நேரத்திலே சொன்னதையெல்லாம் நான் கேட்டிருக் கின்றேன். இப்படிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கும்பொழுது, அதுவன்னியில் அரசு அதிகாரிகள் இருக்கும்பொழுது, டெல்லியிலே தமிழ்நாட்டு அரசாங்கத்தி னுடைய பிரதிநிதி என்கின்ற ஒருவர் தேவைதானா? அதற்கு இரண்டாயிரம் ரூபாய் மாதச்சம்பளம் தர வேண்டியதுதானா? அது எவ்வளவு செலவு?

அரசுப் பிரதிநிதியாகத் தலைவர் அவர்களே, தாங்கள் இருந்தீர்கள். தாங்கள் அந்தப் பணியை, தங்கள் அரசுப் பிரதிநிதியாக ஒரு மகுடம் சூட்டப்பட்டு உட்கார வைக்கப்படா விட்டாலும்கூட அந்தப் பணியை நிறைவேற்றுவதிலே வல்லவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) அது தேவைப்படும். கோடைக்காலம்தான், எனவே அது தேவைப்படும்.

ஆனால் தொடர்ந்து அரசு அரசியல் கட்சி சார்புடையவர் களை, அதிகாரிகள் அல்லாதவர்களை இப்படிப்பட்ட பணிக்கு அங்கே ஈடுபடுத்துவதன் மூலமாக அவர்கள் எந்தக் காரியத்தையும் அங்கே இந்த அரசின் சார்பாகச் செய்யாத ஒரு சூழ்நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய் - இதுவரையில் அந்தக் கணக்கு தரப்படவில்லை - அந்த அளவிற்கு அரசுப் பிரதிநிதி என்கின்ற பெயரால் செலவழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீண் செலவுகளைக் குறைத்தும், வரவேண்டிய வருவாய்களை ஒழுங்காகக் கவனித்து அவைகளைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இந்த அரசு இயங்குமேயானால் இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டிய அவசியமே இல்லை. எனவேதான் இதையொரு ஆய்வுக் குழுவிற்கு, பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்றுகூட நம்முடைய

நண்பர்கள் திரு. சித்தன் அவர்களும் மற்றும் பலகட்சிகளைச் சேர்ந்தவர்களும், எனக்கு முன்னால் பேசிய திரு. சங்கரய்யா அவர்களும், நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

இது பொறுக்குக் குழுவிற்கு விடப்படும் என்றால், அந்தக் காலதாமதத்தினால் பல்வேறு காரியங்கள் தவறாகக்கூட நடைபெறக்கூடும். பொறுக்குக் குழுவிற்கு அதை விடலாம் என்றால்கூட இதனுடைய அடிப்படையை நாம் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். எனவே, இந்த அடிப்படையையே தகர்த்தெறிகின்ற அளவிற்கு இந்த நுழைவு வரியைத் தமிழகத்திலே நுழைய விடாமல் தடுக்க வேண்டுமென்கின்ற முறையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த வரிவிதிப்பை மீண்டும் மீண்டும் வன்மையாகக் கண்டித்து, இதைத் திரும்பப் பெறுவதே உசிதமான வழி என்று வருவாய்த் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் அறிவித்து அமைகின்றேன் வணக்கம்.



## உள்ளாட்சிகளுக்கு அதிகாரம்

**உரை : 49** **நாள்: 02.11.1989**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! இன்று எதிர்க்கட்சிகளுடைய தலைவர்களும், தோழமைக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் இந்தத் திருத்தம் குறித்து தங்களுடைய கருத்துகள் பலவற்றை எடுத்து வைத்திருக்கிறார்கள். நேரம் அதிகமாகி விட்ட காரணத்தால் விரைவிலே சில விளக்கங்களை அவர்களுடைய உரைகளுக்குப் பதிலாக அளிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். 1989 ஆம் ஆண்டு ஜனவரியில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையிலே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பொதுவாக உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகள் பற்றி அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதிலே, மிக முக்கியமாக ஒரு பகுதியில், ''கடந்த சில காலமாகவே மாவட்ட அளவில் திட்ட மிடல் என்கின்ற பெயரில், மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் செயல் நடைபெற்று வருகிறது. அதற்கு முதல் படியாக, மாநில அரசுகளை ஒதுக்கிவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பிரதமர் கூட்டிப் பேசுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை 15-12-1987 அன்று கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் அல்லாத கட்சிகளைச் சேர்ந்த 7 முதலமைச்சர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். மாவட்ட அளவில் திட்டமிடுவதற்கோ உள்ளாட்சி மன்றங்களைத் தன்னாட்சி மன்றங்களாக்குவதற்கோ நாங்கள் எதிரிகள் அல்ல, ஏதோ காங்கிரஸ் கட்சி மத்திய ஆட்சி மட்டும் தனக்கு நிரந்தரமானது என்று எண்ணிக்கொண்டு, மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் முயற்சியிலும், மாநில அரசுகளில் பணியாற்றும் அதிகாரிகளுடைய ''டியூயல் லாயல்டி'' இரட்டை

விசுவாதத்தை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு, கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறாக, நடந்திடும் போக்கினை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியல் சட்டத் திற்கும் கூட்டாட்சி முறைக்கும், ஜனநாயகத்திற்கும் விரோத மான இந்தச் செயலை, தமிழ்நாட்டு மக்கள் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக் கிறார்கள் என்பதைக் கழகம் வலியுறுத்த விரும்புகிறது'' என்று தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டு இருக்கின்றோம்.

இந்தப் பின்னணியில், பின்வரும் உறுதிமொழிகளைக் கூட தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருக்கிறோம். ஏதோ திடீரென்று ஏற்பட்ட ஞானோதயம் என்றெல்லாம்கூட இங்கே பேசினார்கள் அல்ல, இந்த உறுதிமொழிகளைத் தேர்தல் அறிக்கையில் எவ்வாறு இணைத்திருக்கிறோம் என்றால் ''கடந்த காலத்தில் நகராட்சிகளிடமிருந்தும், ஒன்றியங்களிடமிருந்தும், பஞ்சாயத்துகளிடமிருந்தும் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் திருப்பிக் கொடுக்கப்படுவது மட்டுமல்ல, மேலும் மக்களுக்குப் பணியாற்றும் விதத்தில் அதிக அதிகாரங்களும், நிதியாதாரங் களும் வழங்கப்படும். மாநில சுயாட்சி கோருகிற எங்களால் தான் உள்ளாட்சிகளுக்குத் தன்னாட்சி தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். கடந்த காலத்திலே நகராட்சி, ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து உறுப் பினர்களுடைய 5 ஆண்டுப் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஜனநாயகத்திற்கு நேர்ந்த இந்த இடையூறை மாற்றி, அவர்களது பதவிக் காலம் முன்புள்ளதைப் போலவே அமைய, மேலும் 2 ஆண்டு நீடிப்போம்.'' என்றும் அறிவித் தோம்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 7-2-1989 அன்று நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலை வர்கள், அனைவரையும் கூட்டி, சென்னையிலே ஒரு மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டினுடைய கோரிக்கைகள், அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் இவைகளின் அடிப் படையில் மேலும் மக்களுக்குப் பணியாற்ற தேவைப்படும் அதிகாரங்களும், நிதியாதாரங்களும் உள்ளாட்சி மன்றங் களுக்கு மீண்டும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. 11-2-1989 அன்று இந்த மாமன்றத்திலே ஆளுநர் அவர்கள்

சட்டசபையைத் துவக்கிவைத்துப் பேசிய உரையில் அரசின் கொள்கை பின்வருமாறு வெளியிடப்பட்டது.

''உள்ளாட்சி மன்றங்கள் மிகவும் நலிவுற்று இருப்பதால் அவை வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாத நிலையில் உள்ளன. உள்ளாட்சி மன்றங்கள், வளர்ச்சி அடைந்து விரைந்து செயல்படுவதற்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கத் தேவையான பல சீர்திருத்தங்களைச் செய்ய இவ்வரசு விழைகிறது. நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலத்தை, மூன்று ஆண்டுகளிலிருந்து மீண்டும் ஐந்து ஆண்டுகளாக உயர்த்துவதற்கான சட்டம் இயற்றப்படும்.'' என்று அறிவித்ததோடு அதனுடைய தொடர் நடவடிக்கையாக, அவ்வாறே 5 ஆண்டுக் காலம் என்று உயர்த்தப்பட்டு, பின்னர் மதிய உணவுத் திட்டம், தொடக்கக் கல்வி, நல்வாழ்வுத் துறையின் துணை நிலையங்கள், விவசாய இடு பொருள்களின் விநியோகம், விவசாய விரிவாக்கப் பணிகள், குடிநீர் வழங்குதல் போன்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மேற்பார்வையிடும் அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப் பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், சமூகக் காடுகள் திட்டம், மற்றும் வறுமை ஒழிப்புப் பணிகள் போன்றவற்றின் மூலம் கிட்டும் நன்மைகள் உரியவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொறுப்பு, ஊராட்சிகள் வசமும், ஊராட்சி ஒன்றியங்கள் வசமும் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சூழலிலேதான் 5-5-1989 அன்று பஞ்சாயத்து ராஜ் குறித்து, முதலமைச்சர்களுடைய மாநாட்டை டெல்லியிலே பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கூட்டினார்கள். அதற்கான அழைப்பு வந்தபோது- எனக்குத் தொலைபேசி மூலமாகக்கூட 'வருகிறாயா?' என்று கேட்டபோது, நான் சொன்னேன், ''இந்த மாமன்றத்திலே பொன் விழா தேதி குறிப்பிடப்பட்டு நடை பெறுகிற காரணத்தால் நான் வர இயலாது. தேதி மாற்றப்படு வதாக எனக்குச் சில செய்திகள் வந்தன. அப்படி முதல்

நாளோ அல்லது மறுநாளோ வைத்துக் கொள்ளப்படுமே யானால் நான் நிச்சயம் வந்து கருத்துக்களைத் தெரிவிப்பேன் என்று சொன்னேன். அதைப்பற்றி யோசிப்பதாகச் சொல்லி விட்டு அதே தேதியிலேதான் அந்த மாநாடு நடைபெறுவ தாகத் திடீரென்று அறிவிக்கப்பட்டு பிறகு நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்களை அரசின் சார்பாக அனுப்பி வைத்தோம். அவர்கள் அந்த மாநாட்டில் பேசும்போது ''தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மன்றங்களைப் பலப்படுத்தும் வேலையில் யாருக்கும் பின்தங்கியது இல்லை; அதே நேரத்திலே மாநில சுயாட்சியை விட்டுக்கொடுக்க நாங்கள் தயாராக இல்லை. இந்தச் சூழ்நிலையில்தான் மாநி லங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் முறையில் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சட்ட திருத்தங்களை நாங்கள் எதிர்க்கும் நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.'' என்று விளக்கம் தரப்பட்டது. அந்த மாநாட்டில் மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டத் திருத்தத்தின் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. பொதுவாக, திருத்தம் வரப்போகிறது என்று சொல்லப்பட்டதே தவிர, என்ன திருத்தங்கள் என்று எதுவும் அந்த மாநாட்டிலே வெளியிடப்படவில்லை. அதற்குப் பிறகு 15-5-89 அன்று 64-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா பிரதமரால் நாடாளுமன்றத்திலே அறிமுகப் படுத்தப்பட்டது. அதையடுத்து மசோதாவின் ஷரத்துக்களை நன்கு ஆராய்ந்த பிறகு முதலமைச்சர் என்கின்ற முறையில் 25-5-89-ல் பிரதமருக்கு விரிவாக ஒரு கடிதம் என்னால் எழுதப்பட்டது. அந்த நீண்ட கடிதம் முழுவதையும் நான் படிக்க இங்கே நேரம் இல்லை என்றாலும், அதிலே குறிப்பிடப்பட்ட சில முக்கியமான விவரங்களை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன். அதில்.

1. தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மன்றங்களைப் பலப் படுத்த வேண்டுமென்ற கொள்கையிலே தீவிரமாக உள்ளது. புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட குறுகிய காலத்தி லேயே தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகாரங்களையும், பொறுப்புகளையும், நிதி ஆதாரங்களை யும் பெறுவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

2. அரசியல் சட்டத்தில் ஊராட்சிகள் பற்றி தனி ஒரு அத்தியாயம் கொண்டுரப்படுவதன் மூலம் இந்த மசோதா அரசியல் சட்டத்தின் கட்டமைப்பிலே ஒரு அடிப்படையான மாறுதலைக் கொண்டு வருகிறது. மேலும் இந்த மசோதாவில் உள்ளடங்கிய ஷரத்துக்கள் பெரும்பாலும் மாநில அரசின் 7-வது அட்டவணை, இரண்டாவது பட்டியலில் 5-வது நுழைவில் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டம் இயற்ற அதிகாரங்களுக்கு உட்பட்ட விஷயங்கள் தொடர்பானவைகள் ஆகும். எனவே இந்தத் திருத்தங்கள் மாநில அரசுகளின் பிரத்தியேக அதிகாரங்களையும், சுயாட்சித் தன்மையையும் கொள்கையளவிலும், பொருள் அளவிலும் பாதிப்பதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு, அரசியல் சட்டத் திருத்தங்களை கொள்கையளவில் எதிர்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறது.

3. பஞ்சாயத்து ராஜ் என்பதைப் பொறுத்தவரையில் அனைத்து இந்திய அளவில் ஒரே மாதிரியான செயல்பாடு களை வகுப்பது விவேகமான ஒன்றல்ல. தங்களுடைய சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளுக்கு ஏற்ப பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் முயற்சியில், ஒவ்வொரு மாநிலமும் செயல்பட விட்டுவிட வேண்டும்.''

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டேன்.

4. 1958 ஆம் ஆண்டு காமராசருடைய ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டத்தில் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவும்- அப்போது பஞ்சாயத்து போர்டு மெம்பர் மாத்திரம் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்ப்படுவார். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கவுமான நிலைமை இருந்தது- உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நிலைமை இருந்தது-அந்தக் காலக்கட்டத்தில் எதிர்க்கட்சியிலிருந்த அண்ணா அவர்கள், ஊராட்சி மன்றத் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், மறைமுகத்தேர்தல் காரணமாக வரக்கூடிய முறைகேடுகள் குறித்தும் விளக்கி இருக்கிறார்.

அடுத்து 1970ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதற்கட்டமாக இந்தச் சட்டம் திருத்தப்பட்டு ஊராட்சித் தலைவர்களுக்கு நேரிடையாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப் பின்பற்றி, அதற்குப் பிறகு 1978ஆம் ஆண்டு இரண்டாம் கட்டமாக திரு.எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கும் நேரிடைத் தேர்தலைக் கொண்டுவர சட்டத்திருத்தம் செய்யப்பட்டது.

64-வது திருத்த மசோதா, ஊராட்சி ஒன்றியத் தலைவர் நேரிடையாகத் தேர்தலைச் சந்திப்பதை மாற்றுகிறது. மறை முகத் தேர்தலைக் கொண்டுவர வழி வகுத்துள்ளது. இப்படிச் செய்வதால் மீண்டும் பல முறைகேடுகள் கிராமங்களிலும், ஒன்றியங்களிலும் நடக்க வழி வகுப்பதோடு, தொடர்ந்து தமிழ்நாட்டை ஆண்டு வந்த அரசுகளும், அதனை ஆண்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் தடுக்க முற்பட்ட முறைகேடு களுக்கு இது வாய்ப்பு அளித்துவிடும். இங்கேதான் கவனிக்க வேண்டும்- ஏற்கெனவே ஊராட்சி உறுப்பினர்கள் மாத்திரம் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த உறுப்பினர்களைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டு திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் நான் முதலமைச்சராக இருந்த போதும், காமராஜர் அவர்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர் களுக்கு நேரடித் தேர்தல் என்று வைத்திருந்ததை, மேலும் விரிவாக்கி, 1970-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் நேரடித் தேர்தல் என்று வைக்கப் பட்டது. பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நேரடித் தேர்தல், தலைவர்கள் தேர்தல், நகராட்சித் தலைவர் களுக்கும் நேரடித் தேர்தல் என்று கொண்டு வந்தார்.

ஆனால் மக்களுக்கு அளிக்கப்பட்ட அந்த உரிமை, மக்கள்தான் ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுப் பார்கள்; மக்கள்தான் நகராட்சி மன்றத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பார்கள்; மறைமுகத் தேர்தல்-இன்டைரக்ட்

எலக்ஷன்- கிடையாது என்று கொண்டு வரப்பட்ட அந்தத் தத்துவங்களைப் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தால் டெல்லியிலே முறியடிக்கப்பட இருந்த காரணத்தினாலேதான் அதை நான் பிரதமருக்கு முதலமைச்சர் என்கிற முறையிலே சுட்டிக்காட்டி அவைகளையெல்லாம் விலக்கிக் கொள்ள; அவைகளை யெல்லாம் மாற்றிக்கொள்ள முதலமைச்சர்களையெல்லாம் அழைத்துப் பேசுங்கள், ஷரத்து வாரியாகப் பேசலாம் என்று சொன்னதை அவர்கள் கேட்கவில்லை.

1. மேலும் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றத் தலைவர்களைக்கொண்டு அமையும் அமைப்பாக இருப்ப தனால். கிராம அளவிலே உள்ள ஊராட்சிகளுக்கும், வட்ட அளவிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு நல்ல தொடர்பு ஏற்பட தமிழகத்திலே உள்ள பழைய சட்டம் வழி செய்கிறது. ஏற்கெனவே இருப்பது ஊராட்சி மன்றத்தி னுடைய தலைவர்கள்தான் ஒன்றியத்திலே போய் கவுன்சிலர் களாக இருப்பார்கள். இது இப்பொழுதுள்ள சட்டம்.

டெல்லியிலே இந்தச் சட்டம் வந்திருக்குமேயானால், நாங்கள் எதிர்க்காமல் அது நிறைவேறியிருக்குமேயானால் என்னவாகும் என்றால், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தத் தகுதியின் காரணமாக ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்களாக இருக்க முடியாது. வேண்டுமானால் அதிலே பத்துப்பேர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. இப்படி ஊராட்சிமன்றத் தலைவர் களுடைய வாக்களிக்கும் உரிமையையே பறித்துக்கொள்கின்ற ஒரு சட்டத்திற்குப் பெயர், உரிமை வழங்கும் சட்டமா என் பதைத் தயவு செய்து இந்தச் சட்டத் திருத்தத்தை விமர்சிக்கின்ற கடுமையாக விமர்சிக்கின்ற நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே! முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகின்றபொழுது நான் விளக்கத்திற்காக மட்டுமே எழுந்து நிற்கின்றேன்; வாதத்திற்காகக்கூட அல்ல. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மீது அளவற்ற பற்றுக்கொண்டவர்கள் தான் நாம் அனைவரும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்

ஒரு மறைமுகத் தேர்தலை-உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உறுப்பினர்கள் மூலம் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்று வைத்திருந்த ஒன்றினைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறிது மாற்றி நேரடியாகவே தேர்ந்தெடுக்கலாம் என்று அவர்கள் ஒன்றைக் கொண்டு வரு கிறார்கள் என்று சொன்னால் பெருந்தலைவர் மீது அவர்கள் வெறுப்பு கொண்டு அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பது இல்லை. அனுபவத்தில் ஏற்பட்டு இருக்கிற அந்தக் காரியத்தை வைத்துக் கொண்டு, பெருந்தலைவர் போட்டிருந்த அடித்தளத்திலே ஒரு மாளிகையை அவர்கள் எழுப்பியிருக் கிறார்கள். அதைப் போலவே, இராஜீவ்காந்தி அவர்களும் எழுப்பியிருக்கலாம் அல்லவா? 30 விழுக்காடு பெண் களுக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே! பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இன்டைரக்ட் எலக்ஷன்-மறைமுகத் தேர்தலை அறிமுகப்படுத்தினார்கள். அண்ணா அவர்கள் நேரடித் தேர்தல் வேண்டுமென்று சொன்னார். அண்ணாவினுடைய எண்ணத்தை நான் முதலமைச்சராக இருக்கும்பொழுது சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினேன். அண்ணாவினுடைய எண்ணத்தை மேலும் பரவலாக, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது மறைமுகத் தேர்தல் யூனியனுக்கும் வேண்டாம், நகராட்சிக்கும் வேண்டாமென்று நேர்முகத் தேர்தலாகக் கொண்டு வந்தார்.

ஆக, மக்களுடைய உரிமைகள், மக்கள் வாக்களிக்கின்ற உரிமைகள், மக்களிடத்திலே அவர்களுடைய கையிலே அதி காரம் கொடுப்பது பரவலாக ஆக்கப்பட வேண்டுமேயல் லாமல், மேலும் மேலும் வளர்க்கப்பட வேண்டுமேயல்லாமல், அண்ணா அவர்கள் கொண்டு வர எண்ணி, அதை நான் செயல்படுத்தி, எம்.ஜி.ஆர். செயல்படுத்தி, நேரடியாகத்தான் யூனியன் தலைவர்கள் நகராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்று மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிக அதிகாரத்தை முடக்கிப்போட்டு ஊராட்சிமன்றத் தலைவர்க ளெல்லாம் ஒன்று கூடி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்க லாம்; நகராட்சியிலே இருக்கின்ற கவுன்சிலர்கள் எல்லாம் கூடி

நகர்மன்ற சேர்மனைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொன்னால், மக்களிடத்தில் தரப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடுகின்றன அல்லவா என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதை நம்முடைய இலக்கியச் செல்வர் வாதத்திற்காக இங்கே வைத்தாரே அல்லாமல் உண்மையை உணர்ந்திருப்பார் என்றே நான் திடமாக நம்புகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட்டது. ஏற்கெனவே ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே கவுன்சிலர்களாக அந்தப் பதவிப் பொறுப்பாலேயே அமர்கிற தகுதியைப் பெற்றிருந்தார்கள். இது மிக முக்கியம். ஊராட்சிமன்றத் தலைவர்கள் தங்களுடைய பதவியின் தகுதியாலேயே ஊராட்சி ஒன்றியத்திலே கவுன்சிலர்கள். ஆனால் இந்தச் சட்டப்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் அங்கே செல்ல முடியாது. ஒரு ஒன்றியத்திலே 30 அல்லது 40 ஊராட்சிமன்றத் தலைவர்கள் இருந்தால் அதிலே ஒரு நான்கைந்து பேரை இவர்கள் தேர்ந்தெடுத்து அங்கே வைத்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. பிறகு அங்கே யார் கவுன்சிலர்கள் என்றால் தனியாக அதற்கு ஒரு தேர்தல்; அதிலே வெற்றி பெறுபவர்கள் கவுன்சிலர்கள். அந்தக் கவுன்சிலர்கள்தான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனை- தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இப்படிப்பட்ட முரண்பாடுகளால் முறைகேடுகள் நிறைய விளையக்கூடும் என்ற காரணத்தினாலேதான் நாம் இந்தப் பகுதிகளையெல்லாம் எதிர்க்க நேரிட்டது. அவைகளைப் பற்றியெல்லாம் அவர்கள் ஆராய்ந்து இருப்பார்களேயானால், அழைத்துவைத்துப் பேசியிருப்பார்களேயானால், இங்கே சொன்னார்களே செலக்ட் கமிட்டி என்று, அதைப்போல ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு வரட்டும் என்கிற ஒரு பரந்த நோக்கம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு இருந்திருக்கு மானால் இவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டிருக்காது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

அடுத்து நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோர்களுக்கு இட ஒடுக்கீடு செய்வதை

வரவேற்கிறோம். எதிர்க்கவில்லை. கடிதத்திலே குறிப்பிட்டிருக் கிறேன். வரவேற்கிறோம் என்று. தமிழ்நாடு சட்டத்திலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலமும் முடிவு செய்ய வேண்டுமேயல்லாமல், அனைத்திந்திய அளவில் அதை நிர்ணயிப்பது சரியாகாது.

அடுத்து, தமிழ்நாடு அரசு; ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. மேலும் அந்த அமைப்புகளைக் கலைக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மீண்டும் ஆறு மாதங் களுக்குள்ளாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற கொள்கை யும் நமக்கு ஏற்புடைய கொள்கையே. மேற்கூறியவாறு அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்ட பெண்களுக்கு 30 சதவீதம் ஆதிதிராவிட மக்களுக்கு குறிப்பிட்ட இட ஒதுக்கீடு, அதைப் போலவே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற அந்தக் கருத்து, ஒரு மன்றம் கலைக்கப்பட்டு விடுமேயானால் ஆறு மாதங்களுக்குள்ளாக மறு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற அந்தக் கருத்து அத்தனையும் அன்றைக்கு நம்முடைய அரசால், இந்த அரசை நடத்துகிற கழகத்தால், ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களே யாகும்.

நான் மேலும் திரு. ராஜீவ் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். அந்தக் கடிதத்தில், 'இந்தச் சூழ்நிலையில் இந்த மசோதாவில் கண்டுள்ள விஷயங்களை ஒரு வழிகாட்டியாகக் கருதி அதன் அடிப்படையில் மாநிலங்கள் தங்களது உள்ளாட்சிச் சட்டங்களை சீரமைக்கலாம், மாற்றலாம் என்ற முறையிலே விட்டுவிடுவதே நல்லதாகும். அதற்கு மாறாக இந்த மசோதாவை சட்டமாக ஆக்க முயன்றால், ஒருமைப்பாடு இருக்கவேண்டிய இடத்தில் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படுகிற நிலை உருவாகிவிடும்'' என்றும் குறிப்பிட்டு இருந்தேன்.

மறுபடியும் சொன்னேன், 'இந்த யோசனை ஒருவேளை ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டால் மறுபடியும் முதலமைச்சர் களுடைய கூட்டத்தைக்கூட்டி, இந்த அரசியல் சட்டத்திருத்தங்

களைப் பற்றி விவாதிக்க, ஒரு வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள்'' என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் என்னுடைய கடிதத்திற்குப் பிரதமர் எந்த விதமான பதிலும் அளிக்கவில்லை. கடிதம் வந்து சேர்ந்தது என்றுகூட ஒரு பதில் எனக்கு வரவில்லை. கடிதத்தில் உள்ள கருத்தும் பொருட்படுத்தப்படவில்லை என்பது உங்களுக் கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். எனவே, மாநிலங்கள் அவையில் 13-10-1989 அன்று அந்த 64 வது சட்டத் திருத்த மசோதா தோற்கடிக்கப்பட்டது. அப்போதுகூட முரசொலி பத்திரிகையில், நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டேன். அதிலே ராஜீவ் காந்தி மசோதா தோற்கடிக்கப்பட வேண்டும்; ராஜீவ் காந்திக்கு தலைக்குனிவு ஏற்படவேண்டும் என்பதல்ல நமது நோக்கம். இந்த ஒருமுறை அந்த மாற்றம் அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிட நாடாளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைத்தாக வேண்டும். இப்போது மாநிலங்கள் அவையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு ஓரிரு வாக்குகள் குறைந்த காரணத்தால்தான் வரவிருந்த அபாயம் தவிர்க்கப்பட்டது என்றும் நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

எனவே, நாங்கள் அந்த மசோதாவில் எந்தெந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டோமோ அந்தக் கருத்துக்கள் மாத்திரம் போதுமானது என்ற அளவில் அரசியல் சட்டத்தை மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டுகிற வகையில் அவர்கள் திருத்தாமல், ஒரு வழிகாட்டி முறை என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மாநில முதலமைச்சர்களை எல்லாம் அழைத்துப் பேசி ஒரு முடிவை எடுத்திருப்பார்களேயானால் நாங்கள் அதை வரவேற்று இருப்போம். எனவே, எப்படியோ அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டு விட்டது. நாங்கள் அந்த மசோதாவில் எந்தெந்தக் கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் என்று சொன்னோமோ அவைகளை இங்கே திருத்தமாகக் கொண்டு வந்து உங்களிடம் ஆதரவைக் கேட்கிறோம். இப்போது வைக்கப்படுகிற வாதத்தில் என்ன சாராம்சம் என்றால், ராஜீவ் காந்தி சொன்னதைத்தானே நீ சொல்கிறாய் என்று. ஆமாம், அதை ஏன் மறுக்கிறீர்கள்? அவர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அதை ஏன் மறுக்கிறீர்கள்? ராஜீவ்காந்தி

சொன்னபோதே, எதை எதிர்த்தேனோ, அதை விட்டுவிட்டு எதை எதை ஆதரித்தேனோ அதைத்தான் இன்றைய தினம் இங்கே சட்டமாகக் கொண்டுவர சட்ட முன்வடிவாக உங்கள் முன்னால் வைத்திருக்கிறோம். ராஜீவ்காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட 64-வது மசோதா தோல்வி அடைந்து விட்டது என்றாலும், நாங்கள் இதைக் கொண்டுவருவதன் நோக்கத்தைக் குறிப்பிடுகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமான பொறுப்புகளும், அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மூலமாக மக்கள் வளர்ச்சிப் பணிகளிலும், நல்வாழ்வுப் பணிகளிலும் ஆக்கப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையிலே நாம் தெளிவாகவும், திண்ணமாகவும் இருக்கிறோம். இந்தக் கொள்கையை மேலும் நல்லமுறையில் செயலாக்க தற்போது கொண்டுவரப்படும் சட்டத்தில் பின்வரும் முக்கிய திருத்தங்கள் அடங்கி உள்ளன.

அதையும் சுருக்கமாகச் சொல்வது என்னுடைய கடமை.

1. தற்போது இருக்கும் சட்டத்தில் ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இந்தப் பதவிக் காலத்தில் உள்ள ஒரு வருட கால வரையறைக்குள் கூட்டவோ, அல்லது குறைக்கவோ அரசுக்கு இதுவரையில் அதிகாரம் இருக்கிறது. 5 ஆண்டு என்பதை 4 ஆண்டாகக் குறைக்கவும், அதை மேலும் 6 ஆண்டாக நீட்டிக்கவும் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த விதியை நீக்கிவிட்டு, கட்டாயமாக 5 வருடத்திற்கு ஒருமுறை மேற் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்ற திருத்தத்தைச் செய்ய முன் வந்திருக்கிறோம். அதுதான் உங்கள் முன்னிலையிலே இருக்கிற சட்ட முன்வடிவு.

2. தற்போதைய சட்டத்தில் ஊராட்சிகள் கலைக்கப் பட்டால் அது ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து கலைக்கப்பட்டு, உடனடியாகவோ அல்லது இன்னொரு குறிப்பிட்ட தேதியி லிருந்தோ, மீண்டும் கொண்டுவரப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், அவைகள் கலைக்கப் பட்டால் ஓர் ஆண்டு காலத்திற்குள் மீண்டும் கொண்டுவரப்பட

வேண்டும். இந்த ஓர் ஆண்டு காலத்தை மேலும் நீட்டிக்க அரசுக்கு ஏற்கெனவே அதிகாரம் இருக்கிறது. ஆனால் இப் போது மாற்றப்பட்டு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் பதவிக் காலம் முடியும் முன்பு கலைக்கப்பட்டால், கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற திருத்தம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

3. தற்போதைய சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பெண்களுக்காக ஒரு உறுப்பினர் பதவி மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதை மாற்றி ஒவ்வொரு ஊராட்சி யிலும், மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 30 சதவீதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்ய திருத்தம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

4. தற்போதைய சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்கள் தொகை அடிப்படையில் 3 உறுப்பினர்கள் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்யலாம். ஊராட்சி ஒன்றியங்களில் பெண்கள் அல்லது பட்டியல் ஜாதியினர் பழங்குடியினர் உறுப்பினர்களாக இல்லாமல் இருந்தால், அல்லது அவர்களுடைய எண்ணிக்கை மூன்றுக்குக் குறைவாக இருந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் 3 பெண்களும், 3 பட்டியல் ஜாதியினர், பழங்குடியினர் இருக்கும் வகையில், அவர்களை ஒத்து தெரிவு முறையில் கோ-ஆப்ட் முறையில் சேர்த்துக் கொள்ளலாம். இந்த விதிமுறைகளின்படி ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றி யங்களிலும், பட்டியல் ஜாதியினர். பழங்குடியினர் ஆகியோ ருக்கும், ஊராட்சி மன்றங்களிலே பெண்களுக்கும் தொடர்ந்து ஒதுக்கீடுகள் செய்யப்படும்.

5. ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அரசாலோ, அல்லது குடிநீர் வாரியம், மின்சார வாரியம் போன்ற அரசு நிறுவனங் களினாலோ மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப்பற்றி அவ்வப்போது ஆய்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. அரசு, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விதிக்கும் வரி முதலியவைகள், இந்த அமைப்புகளுக்கு அரசு

வழங்கும் மானியம் மற்றும் அவைகளினுடைய நிதிநிலை மைகள், இவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றை 5 ஆண்டுக்கு ஒருமுறை ஒரு நிபுணர் குழு மூலம் ஆராயப் படும் என்ற திருத்தமும் உங்கள் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து பெயர்களைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நண்பர் திருநாவுக்கரசு அவர்கள்கூடச் சொன்னார்கள். பெயர்களை வைப்பதற்காக இவ்வளவு அவசரப்பட்டு திருத்தம் கொண்டுவர வேண்டுமா என்று. பல பெரிய திருத்தங்களைக் கொண்டு வரும்போது, அதற்காகத் தனியாக ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டாம் என்பதற்காகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதே அவையிலேகூட கடந்த கால ஆட்சியில், உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்ற ஒரு சட்டமும், அதற்குப்பிறகு அதே ஆட்சியில் உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கலாம் என்று ஒரு சட்டமும் வந்ததை அமைச்சராக இருந்த நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் நன்றாக நினைவு கூர்வார்கள் என்றே நான் நம்புகிறேன். ஏதோ முதலமைச்சருடைய பெயரை வைத்துக்கொள்வதற்காக இவைகள் எல்லாம் நடைபெறுகிறதா என்று கேட்டார்கள். உயிரோடு இருப்பவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்று சட்டம் இருந்தபோதே, ஆலந்தூர் நகராட்சி மன்றக் கட்டிடத்திற்கு உயிரோடு இருக்கிற திரு. மோகனரங்கம் அவர்களுடைய பெயரைச் சூட்டியதை யாரும் மறந்து இருக்க முடியாது. அன்னை தெரசா அவர்களைப் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டே தெரசா பல்கலைக்கழகம் என்று பெயர் வைக்கப்பட்டது. அப்போது எல்லாம் உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்கக் கூடாது என்று சட்டம் இருந்தபோதும்கூட அவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

நான் என்னுடைய நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர் களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பெயரை வைத்துக்கொள்வதற்காக அல்ல. ஒன்றைக் கூறினால் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அது நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவருக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 1969-ல் அண்ணா மறைந்த பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற நேரத்தில், திருவள்ளூர் நகராட்சி மன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் பெருவாரியான இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழக நகராட்சி மன்றத்தலைவர் அங்கே பொறுப்பேற்றார். பொறுப் பேற்றவுடனே அவர்கள் ஒரு தீர்மானம் போட்டார்கள். என்ன தீர்மானம் என்றால் அதற்கு முன்பு இருந்த கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய பெயரால், திருவள்ளூர் நகராட்சி மன்றத்திற்கு, 'ஆளவந்தார் நகராட்சி மன்றக் கட்டிடம்' என்று பெயர் சூட்டப்பட்டு இருந்தது. அந்தப் பெயரை மாற்றி, 'அண்ணா நகராட்சி மன்றக் கட்டிடம்' என்று நகராட்சி மன்றத்திலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, அதற்கு அரசு ஒப்புதலுக்கு அனுப்பியிருந்தார்கள். நான் அந்தக் கோப்பிலே என்ன எழுதினேன் என்றால், அண்ணாவிற்கு எத்தனையோ இடங்களிலே பெயர்களை எங்கும் வைக்கலாம். ஆளவந்தார் அந்த ஊரில் தலைவராக இருந்தவர், நகராட்சித் தலைவராக இருந்தவர், அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தாலும்கூட, அந்தப் பெயரை மாற்றி, இந்தப் பெயரை வைக்கத் தேவையில்லை. இது அண்ணாவுக்கே இழுக்கு, எனவே, அந்தப் பெயரை மாற்றத் தேவையில்லை என்று சொல்லி அந்தப் பெயரே வைக்கப்பட்டது. எனவே இதி லிருந்து என்னை நீங்கள் உணர்ந்துகொள்ளலாம். என்னுடைய பெயரையோ, அமைச்சர்களுடைய பெயர்களையோ வைப்பதற் காகக் கொண்டுவரப்பட்டதல்ல இது. ஒவ்வொரு ஊரிலும்கூட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதாக இருந்தால் சில பேர் நிதி உதவி செய்ய முன்வருகிறார்கள். அப்படி நிதி உதவி செய்ய முன் வருகிறவர்கள் ஒரு ஊராட்சியில் தங்களுடைய பெயரை அல்லது தங்களுடைய தந்தையார் பெயரை வைத்தால் இரண்டு லட்சமோ அல்லது மூன்று லட்சமோ அந்தப் பள்ளிக்கூடத் திற்காகத் தருவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அங்குள்ள ஊராட்சி மன்றங்களில், நகராட்சி மன்றங்களில், அந்தப் பெயரை வைக்கமுடியாத காரணத்தால், உயிரோடு இருப்பவர் களுடைய பெயரை வைக்க சட்டம் இடம் தராத காரணத்தால்

அவைகளைப் புறக்கணிக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவ மனைக் கட்டிடங்கள் போன்றவைகளுக்கு நன்கொடையாகத் தர யாராவது முன் வருபவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகத் தான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்கூறி, இது தேர்தல் பிரச்சாரத்திற்காக அல்ல என்பதை நம்முடைய நண்பர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களுக்குச் சொல்லி-என்னதான் சொன்னாலும் வெளி யிலே போய் அவர் அதைத்தான் சொல்லப்போகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்-என்றாலும்கூட ராஜீவ்காந்தி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் அவர் கொண்டுவந்த மசோதாவில் எதை எதை இந்த அரசு ஏற்றுக்கொண்டதோ அதைத்தான் இன்றைக்குச் சட்ட முன்வடிவாக கொண்டு வந்து, சட்டமாக ஆக்குவதற்காக உங்களுடைய அனுமதியைக் கோரு கிறோம் என்பதை மாத்திரம் எடுத்துரைத்து இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.



# பெண்களுக்குச் சொத்துரிமை மசோதா

**உரை : 50** **நாள்: 06.05.1989**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! இந்த மாமன்றத்தினுடைய வரலாற்றில் புதியதொரு பொன்னேடு புரளுகிறது என்று நாமெல்லாம் மகிழத்தக்க அளவிற்கு பெண்களுக்குச் சொத்துரிமை என்ற தலைப்பு உள்ள சட்டம் இன்றைக்கு நிறை வேறுகின்றது.

இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அவையிலே இப்போது இருக்கிற எல்லா பெண்மணிகளும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த திருமதி பொன்னம்மாள் அவர்களும், மார்க்சிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த திருமதி பாப்பா உமாநாத் அவர்களும், கழக உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிற திருமதி காஞ்சனா கமலநாதன், திருமதி சற்குணம், திருமதி சாந்தகுமாரி ஆகிய இங்கே அமர்ந்திருக்கிற எல்லா பெண்களுமே ஆதரித்து, இந்தச் சட்டத்தைப் பற்றி இந்த அவையிலே உள்ள ஆடவர்கள் ஓரிருவருக்கு மாத்திரம் ஐயப்பாடு எழுந்து அதையும் போக்குகின்ற அளவிற்கு பெண்களே விளக்கங்களை வழங்கி இந்தச் சட்டம் நிறைவேறுகின்ற தறுவாயில் என்னுடைய கருத்துக்களையும் இங்கே கூறப்பட்ட கருத்துக்களோடு இணைத்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். இதுபோன்ற ஒரு சட்டம் இல்லாமலே கூட ஒரு சில இல்லங்களில் பெற்றோர்களுடைய இதயக் கனிவின் காரணமாக ஆண்கள், பெண்கள் இருவரும் சமமாக நடத்தப்படுகிற நிலைமைகளை நாம் உணர்கின்றோம். அது ஏதோ விதி விலக்காக நடக்கிற காரியங்கள் என்ற காரணத்தால் அதை ஒரு விதியாகவே ஆக்கிவிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டு இந்த அரசு அமைச்சரவையில் ஆழச் சிந்தித்து எடுத்த முடிவை இந்த அவையின் வாயிலாக இன்றைக்கு

நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. பெண்களைப் பற்றி கவிச் சக்கரவர்த்தி பாரதி எத்தனையோ அருமையான கவிதைகளைப் பாடியிருக்கிறார். அவருடைய வழித்தோன்றல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

*''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு*
*மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே*
*ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்*
*உள்ளடங்கும் ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு.''*

என்று அழுத்தந்திருத்தமாக கவிதை வடித்துக் காட்டியிருக் கிறார்கள். அதுமாத்திரமல்ல, மிகுந்த உருக்கத்தோடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய கவிதையில்-

*''பெண்கள் துயர் காண்பதற்கும் கண் இழந்தீரோ*
*கண் இழந்தீரோ உங்கள் கருத்து இழந்தீரோ.''*

என்று ஆடவரைப் பார்த்து வசைமாரியே பொழிந்தார்.

*''பெண்ணுக்கு ஒரு நீதி கண்டீர் பேதம் எனும் மதுவை உண்டீர்*
*கண்ணில் ஒன்றைப் பழுது செய்தால் காண்றுமிழாதோ?*

காண்றுமிழாதோ புவிதான் பழியாதோ?'' என்று மிக வேகமாக ஆடவர் இனத்தைப் பார்த்து பெண்கள் வர்க்கத் திற்காக வாதாடி இருக்கிறார். இத்தகைய கவிதைகளை பாரதியார், பாரதிதாசன் மற்றும் அவர்களுடைய வழித் தோன்றல்கள் இந்த அளவு பாடியிருந்தாலும்கூட நேற்றைய தினம் நடைபெற்ற பொன்விழாவில் நான் சுட்டிக்காட்டியதற் கொப்ப என்னுடைய வயது ஐந்தாக இருக்கும்போது, நம் முடைய பேராசிரியர் சற்றொப்ப ஏழு வயதாக இருக்கும்போது தமிழ்நாட்டில் இன்றைக்கு நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்தப் புரட்சிக்கு பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் அதன் தலைநகரான செங்கல்பட்டிலே வித்து ஊன்றப்பட்டிருக்கிறது. என்னுடைய கையில் இருக்கிற இந்தப் புத்தகம் கடந்த கால சுய மரியாதை இயக்க வரலாற்றை, நீதிக்கட்சி வரலாற்றை விளக்குகின்ற ஒரு ஆங்கிலப் புத்தகம்.

The First Provincial Self-Respect Conference commenced on 17 th February 1929 at Chingleput at Nair Mansion in Panagal Bagh.

The Hon. Dr. P.Subbarayan Chief Minister, opened the conference. Mr. W.P.A.Soundarapandian Nadar, M.L.C was the President Rao Bahadur M.K.Reddi, President of the Chingleput District, Board was the chairman of the Reception Committee. Mr. P.T.Rajan, M.L.C. unfurled the flag. The Hon. Mr.S.Muthiah Mudaliar opened the Agricultural Exhibition. Six to seven thousand people attended the Conference including the Hon. Diwan Bahadur M.Krishna Nair, Sir Mohd.Usman sahib Bahadur, the three Hon.Ministers, Mr.Raghavendra Rao, Ex.Minister of the Central Provinces, Mr.Nilagiri Sanjeevayya, M.L.C of Mysore, Mr. A.Ramasami Mudaliar, Mr.E.V.Ramasami Naicker and almost all prominent non-Brahmin M.L.C and a record number of delegates from all parts of the Presidency.

இது 1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டினுடைய செய்திச் சுருக்கத்தினுடைய முகப்பு. அந்த மாநாட்டுக்கு சென்னையிலே தியாகராயர் சதுக்கத்திலேயிருந்து ஊர்வலம் புறப்பட்டு 35 மைல் தூரம் அந்த ஊர்வலம் நடைபெற்றதாக இந்த நூலிலே குறிப்பிடப் பட்டு இருப்பது, ஒரு வரலாறு மாநாடுகளுக்கு 4 கல் தொலைவு, 5 கல் தொலைவு இப்போது எல்லாம் ஊர்வலம் செல்வது வழக்கம். ஆனால் சென்னையிலிருந்து செங்கற்பட்டு வரையில் ஒரு மாபெரும் ஊர்வலத்தை சற்றொப்ப 35 கல் தொலைவிற்கு அன்றைக்கே நடத்தி, 6 ஆயிரம் பேர்கள், 7 ஆயிரம் பேர்கள் அந்தக் காலத்திலே 1929-ஆம் ஆண்டிலே கூடி, அந்த மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், தந்தை பெரியார் அவர்களுடைய முயற்சியினால், அவர் களைப் போன்ற சுயமரியாதை இயக்க முன்னோடிகளினுடைய முயற்சியினால், நடத்தப்பட்ட அந்த மாநாட்டில் நான் இங்கே படிக்க இருக்கின்ற தீர்மானங்களை முன்மொழிந்தவர் திரு.சபாபதி முதலியார் Mr.Sabapathi Mudaliar. moved the following அதிலே முதல் தீர்மானம்.

The conference declares its conviction that women should be given the same right to property and inheritance as men.

இரண்டு This Conference urges that the age for marriage should be fixed at 18 for women and that infant and child marriages should be prohibited by legislation.

அடுத்து, This Conference is of opinion that the parties to marriage should be given free right to choose their partners, irrespective of caste, creed and race and that the present laws relating to marriage should be amended accordingly.

அடுத்து, This Conference is of opinion that women should have equal rights with men to enter into and practise any profession they choose.

அடுத்து, This Conference resolves that women should be employed in large numbers as teachers and that their services should be enlisted to the utmost possible extent, especially in the sphere of primary education."

இவைகள் எல்லாம் 1929ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள். 1929ஆம் ஆண்டிலே இப்படிப் புரட்சி கரமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, என்னுடைய ஐந்தாவது வயதிலே நிறைவேற்றப்பட்ட அந்த மாநாட்டின் தீர்மானங்களை 60 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, என்னுடைய 65-வது வயதிலே இந்த மாமன்றத்திலே சட்டங்களாக, திட்டங் களாகக் கொண்டுவருகின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக் கிறோம் என்றால், அது எனக்கு, என்னுடைய அமைச்சர் பெருமக்களுக்கு, இந்த அவைக்கு பெருமை சேர்க்கக்கூடிய ஒன்று என்றாலும்கூட, சற்றொப்ப 60 ஆண்டுக்காலம் எந்த அளவிற்கு நாம் தூக்கத்திலே இருந்து இருக்கிறோம் என்பதை யும் மறந்துவிடுவதற்கு இல்லை.

இந்த 60 ஆண்டுக் காலத்தில் நாட்டிலே ஏற்பட்டு இருக் கிற மறுமலர்ச்சி இயக்கத்தினுடைய தாக்கத்தை நாம் அனை வரும் உணர்ந்து இருக்கிறோம். சமுதாயத்திலே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற விழிப்பு உணர்வை நாம் அறியாதவர்கள் அல்ல. இத்தகைய விழிப்பு உணர்வுக்குப் பிறகும் கூட, இன்றைக்கு இப்படி ஒரு சட்டம் வரும்போது, இன்னமும் இந்தச் சட்டம் தேவையா, இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று எண்ணுகிறவர்கள் இல்லாமல் இல்லை.

நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட் டார்கள். இதை செலக்ட் கமிட்டிக்கு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி வைக்கலாமா என்றுகூட நாங்கள் எண்ணினோம்.

ஆனால் தமிழகத்திலே தாய்மார்களிடமிருந்து வந்த வர வேற்புக் கடிதங்கள், பாராட்டுக் கடிதங்கள் ஏன் இளைஞர்கள் மற்றும் வயதான ஆடவர்கள்கூட இதைப் போற்றி, பாராட்டி, எங்களிடத்திலே உரைத்த கருத்துக்கள், எழுதப்பட் டுள்ள கடிதங்கள், இவைகளை எல்லாம் பார்க்கும் போது, இது இப்போது வேண்டாம், ஒத்திவையுங்கள் என்று சொல்லவும், செலக்ட் கமிட்டிக்கு விட்டுவிடுங்கள் என்று கேட்கவும், என்னைச் சந்தித்தவர்களில் ஒருவர் இருவரைத் தவிர, வேறு யாரும் இல்லை. எனவே இது கட்சி சார்பற்ற முறையில் அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சட்டமாக இன்றைய தினம் இங்கே நிறைவேறுகிறது.

இதிலே சில குறைபாடுகள் இருப்பதாக இன்னமும் தெரிவிக்கப்பட்டது. அவைகளுக்கு எல்லாம் ஏற்ற பதிலை சட்ட அமைச்சர் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இன்னும் ஏதாவது இதற்குப் பிறகும் குறைபாடுகள் இருக்குமேயானால், அதனை காலப்போக்கில் நடைமுறைப்படுத்துகிற நேரத்திலே உணர்ந்து அதற்குத் தக்க பரிகாரம் காணவும் இந்த அரசு தயங்காது என்பதை நான் இந்த அவைக்கு உறுதியளித்து இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற நேரத்தில், இந்தச் சட்டம் நிறைவேறும்போது இந்த அறையிலே எல்லா உறுப்பினர்களும் இருந்து, இது நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால், நான் மிகுந்த மகிழ்ச்சி யடைந்திருப்பேன். முன் வரிசையிலே எதிர்க்கட்சியின் தலைவர்கள் எல்லாம் இல்லாமல், இப்போது இந்த அவையிலே மூன்றாவது கட்சியாக இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவர், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் இந்தத் தலைவர்களுடைய முன்னிலையிலே இது நிறைவேறுகிறது என்றாலும்கூட, நம்முடைய நண்பர் திரு.பாலசுப்பிரமணியம் நாங்கள் இல்லையா என்று கேட்கிறார்-தலைவர்களைத்தான் சொல்கிறேன். எனவே அவர்கள் எல்லாம் இருந்தால், இன்னும் இந்தச் சட்டத்திற்கு பெருமையை நாம் சேர்ப்பவர்களாக ஆவோம் என்ற மனக் குறை எனக்கு இருந்தாலும்கூட, அந்த மனக்குறையையும்

மாற்றுகின்ற அளவுக்கு இந்தச் சட்டம் நிறைவேறுவதிலே நான் மகிழ்ச்சிக்கொண்டு இதை அனைவரும் ஒரு மனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டம் நிறைவேறுகின்ற நேரத்திலே, இதற்கு அடிகோலிய பழம் பெரும் தலைவர்கள் அத்தனை பேருக்கும், இந்தத் தீர்மானங் களை செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டிலே அன்றைக்கு முன்மொழிந்த சபாபதி முதலியார் அவர்கள் இன்றைக்கு இல்லாமல் இருந்தாலும்கூட, அவர்களுடைய திக்கு நோக்கி தெண்டனிட்டு, வணக்கம் தெரிவித்து, அந்த சுயமரியாதை மாநாட்டிற்கு அடிகோலிய தந்தை பெரியார் அவர்கள் வாழ்க. அவருடைய வழித்தோன்றல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க வாழ்க என்று கூறி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.



# திரைப்படங்களுக்கான கேளிக்கை வரி

**உரை : 51** **நாள்: 01.11.1989**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே! இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைக் குறித்து எல்லா கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சில பொதுவான பிரச்சினைகளை இங்கே எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டில் சினிமாவே வாழ்க்கையாக ஆகிவிட்டது. அதை மாற்றிஅமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். சினிமாவை அறவே நீக்கிவிட முடியாது. ஆனால் அவர் கூறிய தத்துவம் 'சினிமாவே வாழ்க்கையாக ஆகிவிட்டது' என்பதை மாற்றுகிற முயற்சியில் இந்த அரசு நிச்சயமாக ஈடுபடும், ஒத்துழைக்கும். திரு.அல்போன்ஸ் போன்ற நண்பர்களும் அதை இந்த சட்ட மன்றத்திலே பேசிய அளவோடு நிறுத்தாமல் சினிமாவே வாழ்க்கையாக எப்படி எப்படி மாறிவிட்டது. எங்கெங்கே மாறிவிட்டது என்பதைத் தமிழ்நாட்டில் மாத்திரம் அல்ல, அலகாபாத் வரையிலே சென்று எண்ணிப்பார்த்து அவர் நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சினிமா தியேட்டர்களில் உள்ளபடியே வேதனைப்படக் கூடிய சம்பவமாக- ஒருநாள் ஒரு அதிகாரிகூட என்னிடத்திலே மிகுந்த வருத்தத்தோடு அதைக் குறிப்பிட்டார். எந்தெந்தக் காட்சியில் தணிக்கையிலே வெட்டப்படுகிறதோ, அவைகளைக்கூட தணிக்கை அதிகாரிகளுடைய கண்களை மறைத்து விட்டு, தொலைதூரத்திலே உள்ள திரை அரங்குகளிலே அப்படிப்பட்ட காட்சிகளை, தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளைக்கூட இணைத்து படத்தைக் காட்டுகிறார்கள் என்ற

குற்றச்சாட்டு இருக்கிறது. அதைவிட இன்னும் மோசமாக ஆபாசக் காட்சிகள், சொல்லக் கூச்சப்படுகிற காட்சிகளைக்கூட படத்தின் இடை இடையே ஒரு சில மணித்துளிகள் வந்து மின்னல் வேகத்தில் போய்விடுகிற நிலையில் தியேட்டர் காரர்கள் பணம் சம்பாதிப்பதற்காக காட்டுகிறார்கள் என்ற அந்தத் தகவல்களும் அரசுக்கு வராமல் இல்லை.

அதைப்போலவே புதிய படங்கள், நல்ல கதாநாயகர்கள் மக்களிடத்திலே பிரபலமான கதாநாயகர்கள் நடிக்கிற படங்கள் வெளிவருகிற நேரத்திலே எல்லாம்-இப்போது சில உறுப் பினர்கள் டிக்கெட் கட்டணத்தை ஏற்றிவிட்டீர்களே, நியாயமா? இது ஏழைகளுக்குச் செய்யப்படுகிற தீங்கு அல்லவா என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களே முதலில் பேசியதை ஓரளவு மறந்துவிட்டு பிறகு பேசும்போது 5 ரூபாய் டிக் கெட்டை 10 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று சொன்னார்கள். வாங்குகின்றவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் அதை விற்கின்றார்கள். 5 ரூபாய் டிக்கெட்டை 10 ரூபாய்க்கு விற்கப் படுகின்ற ஒரு சூழ்நிலையில் டிக்கெட் கட்டணம் ஓரளவு மிகக் குறைந்த சதவிகிதம் ஏற்றப்பட்டிருப்பதால் எந்த ஏழையும் எளியவர்களும் வருத்தப்படுவதாகத் தெரியவில்லை. இன்று உருவாக்கப்பட்டுள்ள இந்த மாற்றங்களின் காரணமாக கிராமப்புறங்களில் உள்ளவர்கள் எல்லாம் கூட இதற்கு முன்பு 5 ரூபாய், 10 ரூபாய் கொடுத்து நாங்கள் டிக்கெட்டைப் பெற வேண்டியிருந்தது. இன்றைக்கு 1 ரூபாய் 2 ரூபாய் என்று அந்த டிக்கெட்டுகள் நிச்சயப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் எங்களை யாரும் ஏமாற்ற முடியவில்லை என்கின்ற மகிழ்ச்சி யோடு இருப்பதாகத்தான் எனக்கு செய்திகள் வருகின்றன. இந்த மாற்றங்களை எல்லாம்கூட இந்த அரசே தன்னிச்சையாக செய்து விடவில்லை. 31-5-1989 அன்று ஒரு நாளும், பிறகு 9-6-1989 மற்றொரு நாளும் திரைப்படத் துறையிலே உள்ள பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுகின்ற திரையரங்கு உரிமையாளர்கள் அத்தனை பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை அவர்களுடைய சங்கச் சார்பில் அழைத்து தலைமைச் செயலகத்திலே நானும் தொடர்புடைய அமைச்சரும் மற்ற அதிகாரிகளும் அவர் களிடத்திலே நீண்ட நேரம் விவாதித்து அவர்கள் சொன்ன கருத்துக்களையும் அரசின் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து

இருவரும் ஏற்றுக்கொண்ட முடிவுகளைத்தான் பிறகு அறிவித்தோம். அதுதான் அவசரச் சட்டமாக வந்தது. அதுதான் இன்றைக்கு சட்ட முன்வடிவாக இந்த மன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அடிப்படை கேளிக்கை வரி, இரண்டாவதாக கேளிக்கை வரி மீதான மேல் வரி-சர்சார்ஜ் ஆன் என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், மூன்றாவதாக கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி-அடிஷனல் சர்சார்ஜ் ஆன் என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், நான்காவதாக காட்சிவரி-அதாவது ஷோ டாக்ஸ், ஐந்தாவது காட்சி வரி மீதான மேல் வரி-சர்சார்ஜ் ஆன் ஷோ டாக்ஸ், ஆறாவது காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி-அடிஷனல் சர்சார்ஜ் ஆன் ஷோ டாக்ஸ் என்று இப்படி 6 விதமான வரிகள் இருந்தன. இந்த ஆறு விதமான வரிகளையும் ஒரே வரியாக ஆக்கி 53 சதவிகிதம் என்று இருந்த அந்த வரியை 40 சதவிகிதம் ஆக இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்கப்பட்டபோது அரசு அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னது. நாங்கள் 40 சதவிகிதம் ஆக அதைக் குறைக்கிற காரணத்தால் அரசினுடைய வருமானம் கேளிக்கை வரி மூலமாக இதுவரையிலே கிடைத்து வந்த வருமானம் குறையக்கூடும். எனவே கட்டணத்தை சில விழுக்காடுகள் நீங்கள் ஏற்ற வேண்டும் என்று அரசு சொன்னவுடன் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு ஏற்றுவதற்கு சம்மதம் தந்தார்கள். நான் எந்த அளவிற்கு அவர்கள் இதிலே மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு கடிதத்தைப் படிப்பது நலம் என்று கருதுகிறேன். இங்கே அண்ணா தி.மு.க. வரிசையிலே சில உறுப்பினர்கள் கிராமப்புறங்களிலே உள்ள தியேட்டர்காரர்களுக்காக மெத்தவும் வருத்தப்பட்டு பேசினார்கள். அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு கடிதம் எழுதியிருப்பார்கள் தமிழ்நாடு பிலிம் எக்சிபிட்டர்ஸ் அசோசியேஷன் திரைப்படக் கொட்டகைகளின் சொந்தக்காரர்களுடைய சங்கத்தின் சார்பிலேதான் இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதுவும் அவர்களுடைய பொதுக்காரியதரிசியாக இருக்கின்ற டி.இராமானுஜம் அவர்கள்- அண்ணா தி.மு.க. நண்பர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். மறைந்த நம்முடைய முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர். எனக்கும்

வேண்டிய நண்பர், திரைஉலகத்தில் நீண்ட நெடு நாட்களாக இருப்பவர், பல திரையரங்குகளுக்குச் சொந்தக்காரர். இந்தத் திரைப்பட கொட்டகைகளுடைய உரிமையாளர்கள் சங்கத் திற்குத் தலைவராக இருப்பவர். அவர் எழுதியுள்ள கடிதத்தி லேயே, ''ஏற்கெனவே திரைப்பட உலகம் நலிந்துகொண்டு வருவதை நாங்கள் அறிந்து அதை எப்படியும் சீர்ப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் திரைப்படத்துறையை கலந்து தாங்கள் தக்க சமயத்தில் உதவி செய்ததினால், இந்தத் திரைப்பட உலகில் எல்லோரும் மகிழ்ந்திருக்கும் அளவிற்கு திரைப்பட உலகம் வளர்ந்து வருகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பவர்கள் செலுத்தி வந்த கம்பவுண்டிங் வரி இல்லாத இடங்களில் கார்ப்பரேஷன், ஸ்பெஷல் கிரேட் முனிசிபாலிடிகளில் இப்போதுள்ள 6 வித வரிகளுக்குப் பதிலாக ஒரே வரி, அந்த வரியையும்கூட 53 சதவிகிதத் திலிருந்து 40 சதவிகிதம் ஆக குறைத்து திரைப்பட உலகைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள் விநியோகஸ்தர்கள், உரிமை யாளர்கள் எல்லோரும் பயன் அடைந்து சிறந்த தரமான படங்களை நல்ல முறையிலே துணிவுகொண்டு எடுக்க இது வழி வகுக்கிறது. உதாரணமாக, திரையரங்குகளில் முன்பு 53 சதவிகிதம் இருக்கும்போது உள்ள வரிவிகிதத்தையும், இப்போது வரி குறைத்து 40 சதவிகிதம் அளவிலே உள்ள வரி விகிதத்தையும் பற்றி ஒருசில திரையரங்குகளின் வசூலைக் குறிப்பிட்டு இத்துடன் இணைத்துள்ளோம். இதனால் திரைப்பட உலகில் எல்லோரும் மகிழ்ச்சியுறுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு யாரும் குறைவில்லாமல் பெரிய அளவில் திரைப்பட உலகம் வளர இது திருப்பு முனையாக அமைந்தது. இதேமாதிரி 'கம்பவுண்டிங்' முறையிலே வரி செலுத்தும் இடங்களில் அரசு இப்போதுள்ள அதிகபட்சமான 34 சதவிகித வரியை 30 ஆகக் குறைத்தும், அனுமதிக் கட்டணத்தை அதிகப்படுத்தியும் சர்க்காரும் நஷ்டப்படாமல், பொதுமக்களும் கஷ்டப்படாமல் திரைப்படத் தொழில் லாபகரமாக வளர உங்களுடைய உத்தரவு நல்ல முறையில் அமைந்துள்ளது. உதவிக்குப் பெரிதும் நன்றி'' என்று திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக அதனுடைய

பொதுச்செயலாளர், தலைவர் ஆகியோர் எனக்குக் கடிதங்கள் எழுதி இருக்கின்றார்கள்.

நான் உங்களுக்கு ஒரு உதாரணத்தைச் சொல்லவேண்டுமேயானால், படத் தயாரிப்பாளர்கள், தியேட்டர்காரர்கள், அவர்களுக்கு முன்பெல்லாம் என்ன வருமானம் வந்தது இப்போது என்ன வருமானம் வருகிறது என்பதைப் பார்ப்பதற்கு முன்பு, பொதுவாக இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு இந்த மாற்றங்கள் அமலாக்கப்படுவதற்கு முன்பு, ஏப்ரல், மே, சூன் ஆகிய இந்த மாதங்களில் 1989ஆம் ஆண்டிலே 16.45 கோடி ரூபாயாக அரசுக்கு வருமானம் இருந்தது. சூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இந்த மூன்று மாதங்களில் அரசு வருமானம் 17 கோடியே 49 இலட்சம் என்கின்ற அளவிற்கு இந்த வருமானம் உயர்ந்திருக்கின்றது. அது மாத்திரமல்ல. நான் படங்களுக்கு உரையாடல் எழுதுபவன் மாத்திரமல்ல, படங்களையும் ஒரு காலத்திலே தயாரித்தவன் என்ற முறையில்-தம்பி திருநாவுக்கரசு இப்போதுதான் நுழைந்திருக்கிறார்- அதனுடைய கஷ்ட நஷ்டங்கள் தெரியும். ஆனால் அப்போது எல்லாம் இந்தப் படத்துறையில், தயாரிப்பாளர்களுக்கு எதுவும் மிச்சப்படாது. மிச்சப்படுவது எல்லாம் விநியோகஸ்தர்களுக்கு என்கின்ற அளவிலேதான் மிச்சப்படும் அல்லது சர்க்காருக்கு வரியாகப் போய்ச்சேரும்.

ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். மகாராணி தியேட்டர் சென்னையில் ஏற்கெனவே கிராஸ் கலெக்ஷன், மொத்தமாக வசூலாகிற தொகை 3,082 ரூபாய். அப்போது அதற்கு எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், நான் சொன்ன அந்தப் பல வரிகள் இருக்கிறதே, ஆறுவிதமான வரிகள், அதைக் கொடுத்தால், 1,555 ரூபாய் அதிலே வரியாகப் போய்விடும். மீதமுள்ள 1,527 ரூபாய்தான் நெட் கலெக்ஷன். அது தியேட்டர்காரர்களும், தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும், மூன்று பேரும் பங்குபோட்டுக்கொள்ளவேண்டிய கலெக்ஷன், ஆனால் இப்போது செய்யப்பட்டுள்ள மாறுதலின் காரணமாக, கிராஸ் கலெக்ஷன் மொத்த வசூல் 4,021 ரூபாய், அந்த தியேட்டரில், அதிலே என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் 1,609 ரூபாய்; 100 ரூபாய்தான் அதிகமாகிறது ஏறத்தாழ. ஆனால்

நெட் கலெக்ஷன் ஏற்கெனவே ரூ.1,527 ஆக இருந்ததற்குப் பதிலாக ரூ. 2,412 ஆக உயர்கிறது.

இன்னொரு தியேட்டரை எடுத்துக் கொள்வோமேயானால், அண்ணா சாலையில் உள்ள அலங்கார் தியேட்டர் முன்பு கிராஸ் கலெக்ஷன் 6,346 ரூபாய். அப்போது என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், அதற்கு 3,293 ரூபாய். நெட் கலெக்ஷன், தியேட்டர்காரரும், விநியோகஸ்தரும், தயாரிப்பாளரும் பகிர்ந்துகொள்ளவேண்டிய தொகை 3,053 ரூபாய். இப்போது இந்த மாற்றத்திற்குப் பிறகு கிராஸ் கலெக்ஷன் அந்தத் தியேட்டரில் 8,639 ரூபாய். வரி 3,456 ரூபாய். உயர்த்தப்பட்ட வரி, நெட் கலெக்ஷன் 5,183 ரூபாய். 3 ஆயிரம் ரூபாய் 5 ஆயிரம் ரூபாயாக உயர்கிற காரணத்தால் தயாரிப்பாளர் நஷ்டம் அடையவில்லை. தியேட்டர்காரர் நஷ்டம் அடையவில்லை. விநியோகஸ்தர் நஷ்டம் அடைய வில்லை. அதன் காரணமாக திரை உலகத்தில் இருக்கின்ற 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு இல்லை. அதையும் மறந்துவிடக்கூடாது.

சில நண்பர்கள் பேசும்போது சொன்னார்கள், தியேட்டர்களை எல்லாம் இன்றைக்கு இடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்குத் திரை உலகம் பாழ்பட்டு போய் விட்டது. திரைப்படத் தொழில் நசிந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிந்த நண்பருடைய பெயரைச் சொல்லவேண்டுமானால் காங்கிரஸ் இயக்கத்திலே நல்ல நண்பராக இருக்கின்ற திரு.உமாபதி அவர்கள் இந்த மாற்றம் வருவதற்கு முன்பாக என்னிடத்திலே பேசிக் கொண்டு இருந்தார், ''என்னுடைய தியேட்டரை விலை கூறிவிட்டேன். விற்கப் போகிறேன்'' என்று சொன்னார். இந்த மாற்றம் வந்த பிறகு என்னைச் சந்தித்து நான் அந்த முடிவை மாற்றிக்கொண்டு விட்டேன். இந்த முடிவின் காரணமாக தியேட்டர் நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எனவே விற்கப்போவது இல்லை, தொடர்ந்து நடத்துகிறேன் என்று சொன்னார். இத்தகைய மாற்றம் ஏற்படாவிட்டால் தமிழ் நாட்டில் பல திரைப்பட அரங்குகள் இடிக்கப்பட்டு இருக்கும், திரைப்படத் தொழிலாளர்கள் பல லட்சக்கணக்கானவர்கள் வாழ்வு இழந்து போயிருப்பார்கள். எனவேதான் இது ஏதோ

4,5 நடிகர்கள் 10,15 தயாரிப்பாளர்களுடைய நலத்தை முன் வைத்து செய்யப்பட்ட மாற்றங்கள் அல்ல. பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் சென்னையில் ஸ்டூடியோக்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஆனாலும் ஆங்காங்கே சிறிய சிறிய தியேட்டர்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஆனாலும் பல லட்சக்கணக்கானவர்களும் வாழ்வு வீணாகக்கூடாது என்பதற்காத்தான் இத்தகைய மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது நடைமுறைக்கு வந்து இருக்கின்றன.

இதிலே நீங்கள் சொல்லிய பல கருத்துக்களில் நகரை ஒட்டியிருக்கின்ற கிராமத்தில் இப்போது செய்யப்பட்டு இருக் கின்ற மாற்றத்தை, எதிர்த்து இங்கே அ.தி.மு.க வரிசையில் ஒரு நண்பர் இங்கே பேசினார், பேசும்போது நண்பர் எம்.ஜி.ஆர். படங்களை ஓடாமல் செய்வதற்காக இதைச் செய்கிறோம் என்று குறிப்பிட்டார். அது தவறு. கிராமப்புறங்களில் எம்.ஜி.ஆருடைய படங்கள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. யாருடைய படமாக இருந்தாலும் நல்லபடமாக இருந்தால் பழையபடங்களில்கூட நல்ல படமாக இருந்தால் அதை பார்க்க மக்கள் யாரும் தவறுவது இல்லை.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். வேலூர், காட்பாடி என்று எடுத்துக்கொண்டால் இது போன்ற ஒரு சலுகை காட் பாடிக்கு கிடைக்கிறது என்பதற்காகவே பட விநியோகஸ்தர்கள் வேலூரில் உள்ள நகர்ப்புறத்து தியேட்டர்களில் புதிய படங் களை வெளியிடாமல் காட்பாடி தியேட்டரில் வெளியிட்டு வரி ஏய்ப்பு செய்வதில் ஈடுபட்டார்கள். எனவேதான் அதைத் தடுப்பதற்காகத்தான் இதுபோன்ற ஒரு நிலையை அரசு மேற்கொள்ள நேரிட்டது.

நம்முடைய அம்மையார் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியி னுடைய உறுப்பினராக இருக்கின்ற திருமதி. பாப்பா உமாநாத் அவர்கள் இங்கே குறிப்பிட்டத்தைப் போல இன்னமும் பல தியேட்டர்களில் புதிய படங்கள் வருகிற நேரத்தில் இது போன்ற மோசடிகள் நடைபெறுகின்றன. அதை நேரிலே குழு உறுப்பினர்கள் சென்றபோது அவர்களும், நம்முடைய திரு.வல்லரசு போன்றவர்களும் மற்றவர்களும் மாவட்ட

ஆட்சித் தலைவரிடத்திலிருந்து நேரிலே கண்டு அறிந்ததாக, கேட்டு அறிந்ததாக எடுத்துச் சொன்னார்கள். அதையெல்லாம் கண்டுபிடித்து தக்க தண்டனை வழங்க இன்னும் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும் அரசை ஏமாற்ற, வரியை ஏமாற்ற சில தியேட்டர்காரர்கள், அவர்களுக்கு ஒத்துழைக்கக் கூடிய சில அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சென்னைக்கு அருகிலே ஒரு தியேட்டரில் கடந்த 2 ஆண்டு காலத்திலே நாங்கள் சென்று ஆராய்ந்ததில் கிட்டத் தட்ட 80 லட்ச ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே இப்படிப்பட்ட தியேட்டர்காரர்கள் நாட்டில் இருக்கிறார்கள்.

அதைப்போல ஒரு புதிய படம் வந்தால் அந்தப் படத்தை தன்னுடைய தியேட்டரில் வெளியிடும்போதே அதை வீடியோ செய்து அதை மக்களுக்கு விற்று அந்தப் படத்தினுடைய வசூலைக் கெடுக்கின்ற சில திரையரங்க உரிமையாளர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் அதிகமாக இந்தப் பகுதியிலே இல்லை. தென் மாவட்டங்களிலே அவர்கள் உண்டு. அவர்கள் யார் என்பது நம்முடைய திரு.ஆல்போன்ஸ் போன்றவர்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். அவர்கள் மீது எல்லாம் கடுமையாக நடவடிக்கை எடுக்கப் பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு அத்தகைய மோசடிகள் குறைந்து புதிய படங்கள் எல்லாம் நல்ல முறையில் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது. ஏதோ சினிமாவிற்காக இந்த அரசு வக்காலத்து வாங்கிக்கொண்டு இவைகளை யெல்லாம் செய்வதாக யாரும் எண்ணக்கூடாது.

அதைப்போலவே ஏழை எளிய மக்களுக்கு அதிகக் கட்டணத்தை உயர்த்தி விட்டதாகவும் யாரும் எண்ணக்கூடாது. இன்னும் கொஞ்சம் கட்டணத்தை அதிகமாக உயர்த்தினாலும் சினிமாவைப் பொறுத்தவரையில் அதைத் தருவதற்கு அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே இதிலே எந்தவித மான மறுப்பதற்கும், ஆட்சேபிப்பதற்கான கருத்துக்கள் இல்லை என்பதை எடுத்துக்காட்டி உள்ளாட்சி மன்றங்களுக்கு

அதிகத் தொகை இதிலிருந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே அரசுக்கு இந்த கேளிக்கை வரி மூலமாக 35 விழுக்காடும் உள்ளாட்சி மன்றங்களுக்கு 65 விழுக்காடும் என்று இருந்தது. இப்போது இந்தச் சட்டத்தின்படி அரசுக்கு 30, 35 விழுக்காடும் உள்ளாட்சி மன்றங்களுக்கு 65 விழுக்காடும் என்று இந்தச் சட்டத்திலே இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக உரிமைகளை, அதிக நிதியை ஒதுக்குவதற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு என்பதையும் தெரிவித்து இதை நீங்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

# உள்ளாட்சிகளில் நியமனங்கள்

**உரை : 52** **நாள்: 17.5.1999**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பஞ்சாயத்திற்கும் கட்டுப்படுவதாக இல்லை என்ற ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கின்றவர்களிடத்தில், என்னதான் நியாயமான கருத்துக்களைச் சொன்னாலும் எடுபடப்போவது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பஞ்சாயத்துத் தலைவர் உணர்ந்துபார்த்து தான் செய்த தவறை அவர் புரிந்துகொள்ள வேண்டுமென்று தம்பி திருநாவுக்கரசு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் உள்நோக்கம் இருப்பதாக ஒரு நாள் சொல்லப்பட்டு, நான் உடனடியாக அதற்குப் பதில் அளித்திருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், அதற்குப் பிறகு தொடர்ந்து பேசிய நம்முடைய மாண்புமிகு மரியாதைக் குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம்கூட அதைக் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவு ஜனநாயக அடிப்படையிலே ஒரு பொதுவான விவாதத்தை இங்கே உருவாக்கி இருக்க வேண்டுமேயல்லாமல், அரசியல் ரீதியாக விவாதத்தை உருவாக்கியது உண்மையிலே, உள்ளபடியே வருந்தத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஜனநாயக அடிப்படையிலே இந்தச் சட்டமுன் வடிவு எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்துச்சொன்னார்கள். அதே வழியை பின்பற்றித்தான் ஆளும் கட்சித் தரப்பில் ஆகட்டும் அல்லது எதிர்க்கட்சித் தரப்பில் ஆகட்டும், விவாதம் நடைபெற்று இருக்க வேண்டுமேயல்லாமல், இதிலே தேவையில்லாமல் அரசி யல் புகுந்துவிட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். அரசியல் புகுந்துவிட்ட காரணத்தால், நான் ஒன்றிரண்டு சான்றுகளைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. தமிழ் மாநில காங்கிரசுக்கும்,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலே இப்போது சில காரணங்களால் ஏற்பட்டிருக்கின்ற கருத்து மாறுபாடுகள், இன்றல்ல 5, 6 மாத காலமாகவே இருந்து வருகின்றன. அதற்கு மூலகர்த்தா மூப்பனார் அவர்கள் அல்ல, நானும் அல்ல. இடையிலே உள்ள சில பேர் இந்த நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக வெகு பிரயாசைப்பட்டு, பகீரதனைப் போலத் தவமிருந்து இந்த நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் ''எங்கிருந்தாலும் வாழ்க'' என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்போல நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பு நம்முடைய அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஒரு நாள் நம்முடைய அமைச்சர் வீராசாமி அவர்கள் என்னிடத்திலே ஒரு செய்தியைச் சொன்னார். ''கோயம்புத்தூரில் மேயரை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகக் கவுன்சிலர்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறார்களாம். ஒரு செய்தி வந்திருக்கிறது'' என்று சொன்னார். என்ன காரணம் என்று கேட்டேன். அவர் சொன்னார். கோயம்புத்தூர் மேயர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்தவர். எனக்கும் நீண்ட நாளைய நண்பர்தான். அவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மேயராக இருக்கிற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய பகுதிகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. எனவே அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்யப் போகிறார்கள் என்று சொன்னார். உடனடியாக நான், சி.டி.தண்டபாணி அவர்களுக்கு- அவர் மாநகரத்தினுடைய மாவட்டச் செயலாளர் என்ற காரணத்தால்- சி.டி. தண்டபாணி அன்றைக்கு இல்லை, அப்போது இங்கே இல்லை. கோவையிலே இருந்தார். உடனடியாகத் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு, இத்தகைய காரியங்களில் ஈடுபடக் கூடாது. நாமே ஒரு மேயரை அங்கே தேர்ந்தெடுத்து விட்டு, ஏதோ இருக்கின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காக, அரசியல் ரீதியாக ஒரு மாறுபாட்டை அங்கே காட்டக்கூடாது. வெளிநடப்புச் செய்யக்கூடாது என்று நான் சொன்னதாக, நான் ஆணையிட்டதாகச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அடுத்த

5 நிமிடங்களுக்கு எல்லாம், சி.டி. தண்டபாணி என்னைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, உங்களுடைய ஆணையைத் தெரிவித்துவிட்டோம் அவர்களும் வெளிநடப்புச் செய்வது இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இதே ஒரு நிலைமை தமிழ் மாநில காங்கிரசிலே இருந்து இருக்குமேயானால் இப்படி விவாதிக்கவேண்டிய அவசியமே வந்திருக்காது. நான் சொன்னேன். உடனே கட்டுப்பட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிற நேரத்திலே அதை, அந்தந்தக் கட்சியினுடைய தலைமை சரி செய்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, அப்படிச் சரி செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதுமாத்திர மல்ல, நிலைமை வளர்ந்து, வாஜ்பாய்க்கு, அந்த அரசுக்கு ஆதரவாக திராவிட முன்னேற்றக் கழகம் வாக்களித்தது, வாக்களித்ததற்கான காரணத்தை நாங்கள் சொல்வதற்கு முன்பு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக, வாக்களித்ததற்கான காரணத்தை திருவல்லிக்கேணியிலே கூட்டம் போட்டுச் சொல்லி, அதிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, அரசையோ அல்லது முதலமைச்சரைப் பற்றியோ எதுவும் பேசவில்லை என்று நம்முடைய அழகிரி அவர்கள் Sun TV பேட்டியிலே சொன்னால்கூட, அவரே சொன்னார், Sun TV பேட்டியிலே சொன்னார், Tape Recorder இருக்கிறது போட்டுப் பார்க்கலாம் என்று. நான் போட்டுப் பார்த்துதான் சொல்கிறேன். என்ன என்ன பேசப்பட்டது என்பதை அந்தப் பிரச்சினைக்குச் செல்ல விரும்பவில்லை.

அதற்குப் பிறகுகூட, இப்போது நடைபெற்றுக்கொண் டிருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களுடைய பல்வேறு இடைத் தேர்தல்கள் 400-க்கும் மேற்பட்ட இடைத்தேர்தல்களில், தலைவர் தேர்தல், உறுப்பினர் தேர்தல், இவைகளில் ஒரு பெரும் போட்டி வந்து, எல்லோரும் Nomination எல்லாம்கூடப் போடப் பட்ட ஒரு சூழ்நிலையில், நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாளர் திரு.சுதர்சனம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர் திரு.வீராசாமி அவர்களும் இரண்டு பேரும் சந்தித்து, கலந்து

பேசி ஒரு கருத்தை என்னிடத்திலே சொன்னபோது, நானும், பொதுச்செயலாளர், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், அதைப்பற்றிச் சிந்தித்து, ஏற்கெனவே நடைபெற்று வெற்றி பெற்ற இடங்களிலே உள்ள தமிழ் மாநில காங்கிரஸ் அப்படியே தொடர்ந்து இந்தத் தேர்தலிலும் போட்டியிடட்டும். அதைப்போலவே, தி.மு.க.-வும் போட்டியிடட்டும் என்ற அந்த ஒருமித்த கருத்துக்கு நாங்கள் இணங்கினோம் என்றால், உள்நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. எனவே இதே நிலை, உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் முடிகிற வரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தால் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு.சோ.பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, என்னுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள், ஒன்று கமுதி, இன்னொன்று முதுகுளத்தூர். கமுதி ஒன்றியத்தைத் தமிழ் மாநில காங்கிரஸ் எடுத்துக்கொண்டது. முதுகுளத்தூரை தி.மு.க.விற்கு என்று நாங்கள் ஒதுக்கினோம். ஆனால் தி.மு.க. கவுன்சிலர்கள் வெறும் 3 பேர்தான் வெற்றி பெற்றார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் காரர்கள் சுயேட்சையாகப் பல இடங்களில் போட்டி இட்டு 8 இடங்களில் வெற்றி பெற்றார்கள். அங்கே தமிழ் மாநில காங்கிரஸ்தான் வர வேண்டுமென்று போராடினார்கள். அதே நேரத்தில் நான் சொன்னேன். நம்முடைய ஒப்பந்தம் பிரகாரம் இதை தி.மு.க.விற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அங்கே தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு பெண், த.மா.கா.- வினுடைய முழு ஆதரவோடு இன்றுவரை தலைவியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழ் மாநில காங்கிரசும் பண்பாட்டோடு, ஏற் கெனவே பேசிக்கொண்டபடி நடந்துகொள்வதில் இதுவரையில் எந்தவிதமானக் குறைபாடும் வைத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் அந்தப் பண்பாடு தொடர வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டுக் கொள்கின்றேன். இது யாரையும் வேண்டுமென்றே பாதிக்கக் கூடிய ஒன்று அல்ல. இப்போது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியப் பிரமுகர்கூட என்னிடத்திலே பேசிக் கொண்டிருந்தார். நீங்கள் வேண்டுமென்றே, எங்களுடைய பஞ்சாயத்துகளிலே, ஒன்றியங்களிலே, மாவட்ட ஊராட்சித் தலைவர்களை எல்லாம் விலக்கிவிட்டால் என்ன செய்வது என்று சொன்னார். நான் சொன்னேன். நீங்கள் இதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். புதுச்சேரியில் - பாண்டிச்சேரியிலே திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுடைய ஆதரவிலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அரசு இப்படிச் செய்தால் நீங்கள் அங்கே செய்யமாட்டீர்களா, அந்தப் பயம் எங்களுக்கு இருக்காதா என்று அரசியல் ரீதியாகக்கூட அவர்களிடத்திலே நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே பயப்படத் தேவையில்லை, தீர்மானத்தை ஆதரியுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

G002386

894.8115
Tar

G014002

குறிப்புகள்

குறிப்புகள்

